
மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள்



TNSDA
11456

மக்கள் வெளியீடு

3

மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள்

பதிப்பாசிரியர்கள் மே. து. ராசுகுமார் – ரா. வசந்தா



சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்
பழங்காலத் தமிழர் வாணிகம் (சங்க காலம்)
களப்பிரர் ஆட்சியில் தமிழகம்

தொகுதி – 3

மக்கள் வெளியீடு

பதிப்பாசிரியர்கள்
மே.து. ராசு குமார் – ரா வசந்தா

மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள்

தொகுதி - 3



894.811/4

ராகு

விலை ரூ. 120/-

மக்கள் வெளியீடு 78
முதற்பதிப்பு ஆகஸ்டு 2003

கோப்பு
ராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ்
15 தானப்ப தெரு திருவல்லிக்கேணி சென்னை 600 005
தொலைபேசி 28447207

அச்சு
தேவா ஆப்செட் சென்னை 600 005

நூலமைப்பு
மக்கள் அச்சகம் சென்னை 600 002

மக்கள் வெளியீடு

49 உனிசு அலி சாகிப் தெரு எல்லிசு சாலை சென்னை 600 002
மின்அஞ்சல் makkalveliyeedu@yahoo.com
தொலைபேசி அலு. 28545532 இல் 28475561

உள்ளடக்கம்

தொகுதி - 3

பதிப்புரை 7

சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்

முன்னுரை 13

I. ***தொல்காப்பியத்தில் சில ஆய்வுரைகள்*** 15

1. தொல்காப்பியர் காலம் 15
2. தொல்காப்பியர் காலம் – வேங்கடம் 22
3. தொல்காப்பியர் காலம் – ஓரை 28
4. தொல்காப்பியர் காலம் – பாண்டியரின் தமிழ்ச் சங்கமும், வச்சிர நந்தியின் திரமிள சங்கமும் 38
5. தொல்காப்பியர் காலம் – *தொல்காப்பியமும்* நாட்டிய சாஸ்திரமும் 44
6. தொல்காப்பியர் காலம்: அர்த்த சாஸ்திரம் 50
7. இணைப்பு : எழினி – யவனிகா 52

II. **சங்க நூல்களில் தமிழர் வாழ்க்கை** 60

1. *தொல்காப்பியம்* ஐயர் யாத்தனர் காரணம் 60
2. வேந்தனும் வருணனும் 66
3. இலங்கைத் தீவில் தமிழ் நாட்டுத் தெய்வங்கள் 72
4. சங்க காலத் தமிழரின் கடல் செலவும் தரைச் செலவும் 81
5. *தொல்காப்பிய* ஆய்வுரை அறிவர் 84
6. நடுகல் என்னும் வீரர்கள் 89
7. பெரும்படை 96
8. வாள் மண்ணுதல் 97
9. கழுதை ஏர் உழுதல் 99

III. **சங்க காலத்து நகரங்கள்** 101

1. சங்க காலத்து காவிரிப்பூம்பட்டினம் 101
2. சங்க காலத்து மதுரை 120
3. இணைப்பு : ஆல் – நீர் 131

பழங்காலத் தமிழர் வாணிகம் (சங்க காலம்)

	முகவுரை	139
1.	சங்க கால மக்கள் வாழ்க்கை	141
2.	பண்ட மாற்று	146
3.	போக்குவரத்து சாதனங்கள்	154
4.	தமிழ் நாட்டு வாணிகர்	159
5.	பிற நாட்டு வாணிகர்	175
6.	பழங்காலத் துறைமுகப்பட்டினங்கள்	185
7.	தமிழகத்தின் மேற்குக்கரைத் துறைமுகங்கள்	205
8.	இலங்கைத் துறைமுகங்கள்	212
9.	விளைபொருளும் உற்பத்திப் பொருளும்	215

களப்பிரர் ஆட்சியில் தமிழகம்

	முகவுரை	245
	பதிப்புரை	247
1.	களப்பிரர் ஆட்சியில் தமிழகம்	251
	தோற்றுவாய்	251
	களப்பிரர் யார்?	253
	களப்பிரர் எப்போது வந்தனர்?	256
	சில களப்பிர அரசர்கள்	258
2.	களப்பிரர் காலத்து இரேணாட்டுச் சோழர்	265
3.	களப்பிரர் காலத்து இலங்கை அரசர்	273
4.	களப்பிரர் காலத்து இருக்குவேள் அரசர்	290
5.	களப்பிரரின் வீழ்ச்சி	294
6.	களப்பிரர் ஆட்சியில் சமயங்கள்	299
7.	களப்பிரர் காலத்தில் தமிழ் மொழி	315
8.	களப்பிரர் காலத்தில் நுண்கலைகள்	342
	இணைப்புகள்	347
	1. களப்பிரர் பற்றிய வாழ்த்துப் பாக்கள்	347
	2. வச்சிரநத்தியின் திரமிள சங்கம்	354
	3. *இறையனார் அகப்பொருள்*–வரலாற்று ஆய்வு	365
	4. நக்கீரர் காலம்	378

பதிப்புரை

மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள் நிரலில் இந்நூல் மூன்றாவதாகும்.

மயிலையாரின் ஆய்வுக் கட்டுரைகளையடுத்து, அவர்தம் நூல்களைத் திரட்டுகளாக வெளியிடும் பணியின் ஒரு பகுதியாக இத்தொகுப்பு அமைகின்றது. *மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள்* பதினொன்று அல்லது பன்னிரண்டு தொகுதிகளில் அமையும்.

மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுக் கடடுரைகள் ஆறு தொகுப்புகளாக ஏற்கெனவே வெளிவந்துவிட்டன. மயிலை யாரின் தனிக்கட்டுரைகள் யாவும் கிடைத்தவரை இத்தொகுப்பு களில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும், 2002இல் ஐந்து, ஆறாம் தொகுதிகள் வெளியான பின்னரும்கூட, பத்துக்கும் மேற்பட்ட வேறு கட்டுரைகள் குறித்த விவரங்கள் கிடைத் திருக்கின்றன. சில கட்டுரைகள் வெளியான இதழ்களின் விவரங்கள் கிடைத்திருந்தும் அவற்றின் படிகள் இன்னும் கைகளுக்கு வந்து சேரவில்லை. இவை யாவும் கிடைக்கப் பெற்றவுடன் ஆறாம் தொகுதியின் பகுதியாகச் சேர்க்குமாறு இவை வெளியிடப்பெறும்.

ஆனால், இதுபோன்ற நிலை மயிலையாரின் நூல்களுக்கு ஏற்பட வழியில்லை. மயிலையாரின் நூல்களின் பெயர்கள் அனைவருக்கும் தெரிந்திருப்பதாலும், நூல்களின் படிகள் பெரும் பாலும் கிடைத்திருப்பதாலும் இவற்றை முழுமையாகப் பதிப்பிப்பதில் சிக்கல்களோ, இடையூறுகளோ, தடைகளோ ஏற்பட வாய்ப்பில்லை.

மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள் மூன்றவாது தொகுதியில் *சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், பழங்காலத் தமிழர் வாணிகம் (சங்க காலம்), களப்பிரர் ஆட்சியில் தமிழகம்* ஆகிய மூன்று நூல்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழ்நாட்டு வரலாறு : சங்ககாலம் - அரசியல் (முதல் தொகுதி) நூலினையடுத்து, மயிலையாரின் *சேரன் செங்குட்டுவன், தொண்டைநாட்டு வரலாறு, கொங்கு நாட்டு வரலாறு* ஆகிய நூல்கள் கால நிரலின் அடிப்படையில் இரண்டாம் தொகுதியாக அமைக்கப் பெற்றன. எனவே, இவற்றையடுத்து கால நிரலின்

வகையால் மேற்குறித்த மூன்று நூல்களும் மூன்றாம் தொகுதியாக அமைகின்றன. இதனையடுத்து, பல்லவர் காலம் தொடர்பான மகேந்திரவர்மன், வாதாபி கொண்ட நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன் ஆகிய நூல்கள் நான்காம் தொகுதியாக அமையும்.

சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள் என்னும் பொருளில் 1962ஆம் ஆண்டு பிப்ரவரி 26, 27, 28 ஆகிய நாள்களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கீழைத் துறை சார்பில் அறக்கட்டளைச் சொற்பொழிவினை மயிலையார் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் 1970 மார்ச்சில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாகக் கொண்டு வரப்பட்டன. குறைவான விலையே கொண்ட பல்கலைக்கழக வெளியீடாக அமைந்திருந்தும், இந்நூல் பலருடைய பார்வைக்கும் முறையாகக் கிடைக்காமல் போய்விட்டது. தமிழகத்தில் உள்ள நூலகங்களில்கூட இந்நூல் பரவலாக இடம் பெறவில்லை. மயிலையாரின் எழுத்துக்களின் காப்புரிமை நீக்கப்படும்வரை, பெரும்பாலான ஆய்வாளர்கள்கூட, இந்நூலின் தலைப்பினைக் கேள்விப்பட்டிருந்தார்களேயன்றி, நூலினைக் கண்களால் பார்த்திருக்கவில்லை. இந்த நூல் மயிலையாரின் வாழ்நாளில் ஒரே ஒரு பதிப்புதான் வெளிவந்தது. இந்நூலில் பொருளடைவு எதுவும் தரப்படவில்லை.

பழங்காலத் தமிழர் வாணிகம் என்று மேல்அட்டையிலும் *பழங்காலத் தமிழர் வாணிகம் (சங்க காலம்)* என்று முன் தலைப்புப் பக்கத்திலும் பெயரிடப்பட்டிருந்த அடுத்த நூல் 1974 மார்ச்சில் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்தாரால் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது. அவர்தம் வாழ்நாளில் ஒரேயொரு பதிப்பு மட்டுமே வந்திருந்தாலும், அவரது மறைவுக்குப் பின்னரும் தொடர்ந்து இந்த நூல் மறு அச்சு செய்யப்பெற்று அங்காடியில் கிடைத்துக் கொண்டிருந்தது. நூல் இறுதியில் பெயர் அகராதியும் இடம்பெற்றிருந்தது.

களப்பிரர் ஆட்சியில் தமிழகம் 1976 செப்டம்பரில் மக்கள் வெளியீடு வழியாகவே வெளியிடப்பட்ட நூலாகும். மயிலையாரின் வாழ்நாளில் அவர் எழுதி வெளியான இறுதி நூல் இதுவாகவே இருக்கும். ஆயினும், அவர் மறைவுக்குப் பின்னர் அண்மைக் காலம் வரை இந்நூல் மறுஅச்சுப் பெறவில்லை. முதல் பதிப்பில் இந்நூலின் இறுதியில் பொருளடைவு இடம் பெற்றிருந்தது.

இந்த மூன்று நூல்களும் தமிழ் இலக்கியம், வரலாறு தொடர்பான பல ஆய்வுரைகளையும் நுணுக்கமான விவரங்களையும் உள்ளடக்கியிருக்கின்றன.

மயிலையாரின் பிற ஆய்வுகளையும் முடிவுகளையும் போன்றே இந்த நூல்களில் உள்ள பல கருத்துரைகள் தமிழ்

இலக்கியத்தைப் புரிந்து கொள்வதற்கும் தமிழக வரலாற்றினைக் கட்டமைப்பதற்கும் ஆழமான, அடிப்படையான சான்றுகளைத் தருகின்றன என்றே கூறலாம்.

தமிழ் இலக்கியங்களில் பயன்கொள்ளப்படும் ஒரு சில சொற்களைக் கொண்டு இலக்கிய, வரலாற்று ஆய்வுகளில் பல முடிவுகளை மேற்கொண்டு, தமது ஆய்வு முறைகளை அறிவியல் வகையிலானதாகக் காட்டிக்கொண்டிருந்த வையாபுரிப்பிள்ளை போன்றவர்களின் அடிப்படைப் பார்வையினையே கேள்விக் குள்ளாக்குவதில் மயிலையாரின் சமூக - பொருளாதார பண்பாட்டு நோக்கு பெரும் பங்கு பெற்றிருப்பதை சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள் நூலினில் காணலாம்.

ஓரை என்ற சொல்லைக் கிரேக்க மொழியிலிருந்து சமக்கிருதம் கடனாகப் பெற்று, பின்னர் சமக்கிருதத்திலிருந்து அது தமிழுக்கு வந்ததாகக் கூறப்படும் கருத்துரைகளை மயிலையார் நுணுகி ஆராய்கிறார். ஓரை என்ற சொல் கிரேக்க, சமக்கிருத மொழிகளில் கொண்டுள்ள பொருள் வேறு, தமிழில் கொண்டுள்ள பொருள் வேறு என்பதனை வலுவுடன் நிறுவியிருப்பது ஒரு காட்டாகக் கொள்ளத்தக்கது. இதோடு நில்லாமல், கூட்டு வாழ்க்கையமைப்பில் இளம் சிறுவர், சிறுமியரைத் தனித்துப் பிரித்துத் தங்க வைக்கப் பயன்பட்ட இடம் ஓரை என்று வழங்கப் பெற்றது என்பதையும் நிறுவுகிறார்.

களப்பிரர் ஆட்சி தொடர்பாக பல வகையான பார்வைகளைக் கொண்ட ஆய்வுகள் வெளிப்பட்ட காலத்தில் மயிலையாரின் களப்பிரர் ஆட்சியில் தமிழகம் வெளிவந்தது. இந்நூல் வெளியான பின்னர், களப்பிரர் குறித்த ஆய்வுகள் மேலும் பலவாறாக வளர்ந்திருக்கின்றன. களப்பிரர் ஆட்சி நிலவியதாகக் கொள்ளப்படும் காலம், எத்தகைய சமூக - பொருளாதாரக் கட்டமைப்பின் உருவாக்கத்தை வெளிப்படுத்துகின்றது என்ற அடிப்படையான – ஆழமான வினாவினை எழுப்பிக்கொண்டு, முனனர் வந்திருக்கின்ற ஆய்வு முடிவுகளையும் கணக்கில் கொண்டு மறு ஆய்வு செய்ய வேண்டிய இன்றியமை யாமையையும் புறக்கணித்துவிடக்கூடாது.

தமிழக வரலாறு குறித்த ஆய்வுகளை மேற்கொள்பவர்கள், இலக்கியச் சான்றுகளையோ, கல்வெட்டு போன்ற பிற சான்று களையோ பயன்படுத்தி முடிவுகளை மேற்கொள்ளும்போது, அடிப்படையில் தாங்கள் எடுத்துக்கொண்ட காலப் பகுதியின் சமூக - பொருளாதாரக் கட்டமைப்பினை வரையறுத்துக் கொள்ளத் தவறி விடுகிறார்கள். இதனால் ஆய்வு முடிவுகளில் முரண்களும் பிழைகளும் குழப்பங்களும் ஏற்பட்டுவிடுகின்றன. இதற்கான ஆய்வு முறைமைகள் இன்னும் உருப்பெறவில்லை என்பதும், இவ்வகையில் போதுமான ஆய்வு வழிகாட்டுதல்கள்

ஏற்படவில்லை என்பதும் நினைவிற் கொள்ளத்தக்கது. இது தொடர்பான ஆய்வு வழிமுறைகள் உருவாக்கப்படுதல் முதன்மைத் தேவையாகும்.

நமக்குக் கிடைத்திருக்கின்ற பண்டைத் தமிழ்ப் பாடல்களை இலக்கியங்களாகப் பார்ப்பதோடு நின்றுவிடாமல், வரலாற்றுத் தரவுகளாகவும் கூர்ந்து நோக்கும்போது, தமிழ்நாட்டின் சமூக - பொருளாதாரக் கட்டமைப்பினை வரையறுத்ததற்கான வாய்ப்புகள் கிடைக்கப்பெறும்.

இந்த இலக்கியச் சான்றுகளை நாம் மேலும் நுணுகி ஆய்தற்கான தூண்டுகோலினையும் ஊக்கத்தினையும் இத்தொகுப்புகள் வழங்கும் என்ற நம்பிக்கையே இவற்றை வெளியிடுதற்கான துணிவினைக் கொடுத்திருக்கின்றது.

கடந்த காலத்தின் அறிவுச் செல்வங்களை, அடுத்தடுத்த தலைமுறையினரும் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பிருக்க வேண்டும் என்ற அடிப்படையிலான இத்தகைய பதிப்பு முயற்சிகள் வேண்டிய வரவேற்பினைப் பெற்றிருக்கின்றன என்பது மகிழ்ச்சி தருகின்றது.

தமிழ்ப் பதிப்பு முயற்சிகளில் இன்னும் செம்மையான முறைமைகளைக் கைக்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டாக விளங்குகிறது *பழங்காலத் தமிழர் வாணிகம்* நூலின் பதிப்புகள். தம்மிடமுள்ள ஆசிரியர் படியில் தமது நூலின் பதிப்புக் குறைகளையும் அச்சுப் பிழைகளையும் குறித்து வைக்கின்ற வழக்கம் கொண்ட மயிலையாரின் படி நமக்கு கிடைக்கவில்லை. அப்படிக் கிடைத்திருப்பின் இந்நூலினை இன்னும் செப்பமாகக் கொடுத்திருக்க முடியுமோ என்ற எண்ணம் இந்த தொகுப்பு முயற்சிகளின்போது எமக்கு ஏற்படாமல் இல்லை.

இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள *சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள்* நூலினை நல்கிய ஆய்வறிஞர் பேரா. ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களுக்கு எமது நன்றியுரியதாகும். 'திரு. நா. வானமாமலை அவர்களுக்கு' என்று தம் கைப்பட எழுதி மயிலையார் அவர்கள் ஒப்பமிட்டு 30-07-1970 அன்று பேரா. நா.வா. அவர்களுக்கு வழங்கிய நூல் படி இது. பேரா. நா.வா. அவர்களிடமிருந்து இந்நூல் படியினைப் பெற்று நினைவாகப் போற்றி வந்தார் பேரா. ஆ. சிவசுப்பிரமணியன் அவர்கள். மக்கள் வெளியீட்டுக்காக வேண்டியபோது தயக்கமின்றித் தந்துதவினார்.


களப்பிரர் ஆட்சியில் தமிழகம் மக்கள் வெளியீடு வழியாகவே வந்த நூல் என்பதால் அப்போதைய பதிப்புரையும் இப்போது சேர்க்கப்பட்டுள்ளது.

எம் முயற்சிகளில் முழு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது நன்றியுரியதாகும்.

மே.து. ராசு குமார்

சங்க கால
தமிழக வரலாற்றில்
சில செய்திகள்

ஆசிரியர் :
மயிலை. சீனி. வேங்கடசாமி



அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்
1970

சங்க காலத்
தமிழக வரலாற்றில்
சில செய்திகள்

முன்னுரை

சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள் என்னும் இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையின் (ஓரியண்டல்) சார்பில் நான் நிகழ்த்திய மூன்று சொற்பொழிவுகளின் கருத்தாகும். 1962ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26, 27, 28ஆம் நாட்களில் இச்சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. முதல் நாள் 'தொல்காப்பியத்தில் சில ஆய்வுரைகள்' என்பது பற்றியும், இரண்டாம் நாள் 'சங்க நூல்களில் தமிழர் வாழ்க்கை' என்பது பற்றியும், மூன்றாம் நாள் 'சங்க காலத்துக் காவிரிப்பூம்பட்டினமும் மதுரைமா நகரமும்' என்பது பற்றியும் பேசப்பட்டன.

இச்சொற்பொழிவுகளைச் செய்யுமாறு என்னைப் பணித்த அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவுக்கும் துணை வேந்தருக்கும் எனது ஆழ்ந்த நன்றி உரியது. இதனை நூல் வடிவமாக அச்சிட்டு வெளியிடுவது பற்றியும் அவர்களுக்கு எனது நன்றியுரியதாகும்.

மயிலாப்பூர்
சென்னை - 4
15-1-1969

மயிலை சீனி. வேங்கடசாமி

I. தொல்காப்பியத்தில் சில ஆய்வுரைகள்

1. தொல்காப்பியர் காலம்

தொல்காப்பியம் இடைச்சங்க காலத்து நூல் என்று செவி வழிச் செய்தி கூறுகிறது. தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று மூன்று சங்கங்கள் பாண்டிய மன்னரால் பாண்டி நாட்டில் அமைக்கப்பட்டிருந்தன என்றும் அச்சங்கங்களில் இடைச்சங்க காலத்தின் இறுதியில் தொல்காப்பியம் தோன்றியது என்றும், இடைச்சங்க காலத்தின் இறுதியில் தோன்றிய தொல்காப்பியம் கடைச்சங்க காலத்திலும் இலக்கணமாக இருந்தது என்றும் கூறப்படுகிறது. இறையனார் அகப்பொருளின் முதல் சூத்திரத்தில் உரைப்பாயிரத்தில் இந்த முச்சங்கங்களின் செய்தி கூறப்படுகிறது. இச்செய்தியில் சங்கங்கள் இருந்த காலம் மிகமிக நீண்ட காலமாகக் கூறப்படுவதனால் இந்தச் செய்திகளைச் சிலர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். சங்கங்கள் நீண்ட காலம் இருந்ததாகக் கூறப்படுவதனாலே, அதன் காரணமாகச் சங்கங்கள் இருந்தனவா என்பதையே சிலர் ஐயுறுகிறார்கள். கற்பனைக் கதை என்று கருதுகிறார்கள். இதுபற்றி ஆராய்வோம்.

இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரம் முச்சங்கங்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறது:

"தலைசங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்கமிருந்தார், அகத்தியனாரும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் குன்றெறிந்த முருக வேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனுமென இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையும் என இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப. அவர்களைச்

சங்கம் இரீஇயினார் காய்சின வழுதி முதலாக் கடுங்கோவீறாக எண்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவர்க்கு நூல் அகத்தியம்.

"இனி இடைச் சங்கமிருந்தார் அகத்தியனாரும் தொல் காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும் மோசியும் வெள்ளூர்க் காப்பியனும் சிறுபாண்டரங்கனும் திரையன் மாறனும் துவரைக்கோனும் கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும் குருகும் வெண்டாளியும் வியாழமாலை யகவலுமென இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல் காப்பியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் பூதபுராணமு மென இவை என்ப. அவர் மூவாயிரத்து எழுநூற்றியாண்டு சங்கமிருந்தார் என்ப. அவரைச் சங்கம் இரீஇயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் ஐவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக்காலத்துப் போலும் பாண்டி நாட்டைக் கடல் கொண்டது.

"இனிக் கடைச் சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறு மேதாவியாரும் சேந்தம்பூதனாரும் அறிவுடையரனாரும் பெருங் குன்றூர்க் கிழாரும் இளந்திருமாறனும் மதுரையாசிரியர் நல்லத்துவனாரும் மருதனிளநாகனாரும் கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் என இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும் குறுந்தொகை நானூறும் நற்றிணை நானூறும் புறநானூறும் ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்தும் நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாடலும் கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் என்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தொண்ணூற்றைம்பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருக்க முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை என்ப."

இவ்வாறு கூறப்படுகிற செய்தியில் தலைச்சங்கம் 4440 ஆண்டு இருந்தது என்றும், இடைச்சங்கம் 3700 ஆண்டு இருந்தது என்றும், கடைச்சங்கம் 1850 ஆண்டு இருந்தது என்றும் கூறப்படுகிறது. நீண்ட கால எல்லை கூறப்படுவதனாலே மூன்று தமிழ்ச் சங்கங்கள்

இருந்தன என்பதே புனைகதை என்று சிலர் கருதுகிறார்கள். இதனை ஆராய்வோம்.

திரு. ஸ்ரீநிவாச ஐயங்கார் தாம் எழுதிய தமிழ் ஆய்வுரை (*Tamil Studies*) என்னும் நூலில் இதுபற்றி இவ்வாறு எழுதுகிறார். "இதில் கூறப்படும் கால எல்லையை நம்ப முடியாதபடியால் இது புனைகதை" என்று கூறி மறுக்கிறார். திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் தாம் எழுதிய தமிழ் மொழி தமிழ் இலக்கிய வரலாறு (*History of Tamil Language and Literature*, pp. 10, 11) என்னும் நூலிலே இதே காரணத்தைக் காட்டிச் சங்கம் என்பது கட்டுக் கதை என்று கூறுகிறார்.

"But the traditional view is that there existed three Tamil Sangams or Academies in which Tamil Literary works were 'heard' and assessed, the first academy lasting for 4440 years, the second for 3700 years and the third for 1850 years. Altogether these three Sangams lasted for 9990 years. Since scholars hold that the phase of the third Sangam was coeval with the beginning of the Christian Era, the first Sangam, according to these tradition, must have come into existence about B.C. 10,000! This tradition, is recorded in Iraiyanar Ahapporul, a work perhaps of the 13th century. Gods also are said to have participated in the deliberations of the first Sangam! we may leave such fables and seek for historical truth elsewhere."

தலைச்சங்கத்தை நடத்திய, பாண்டியர் 89 பேர் என்றும், அவர்கள் சங்கம் நடத்திய காலம் 4440 ஆண்டு என்றும் கூறப்படுகின்றன. அதாவது, அந்தப் பாண்டியர் ஒவ்வொருவரும் சராசரி ஏறக்குறைய 49 ஆண்டு அரசாண்டனர் என்பது தெரிகிறது.

இடைச்சங்கத்தை நடத்திய பாண்டியர் 59 பேர் என்றும், அவர்கள் 3700 ஆண்டு சங்கம் நடத்தினார்கள் என்றும் கூறப்படுகின்றனர். அதாவது, ஒவ்வொரு பாண்டியனும் சராசரி ஏறக்குறைய 62 ஆண்டு அரசாண்டான் என்பது தெரிகிறது.

கடைச்சங்கத்தை நடத்திய பாண்டியர் 49 பேர் என்றும் அவர்கள் 1850 ஆண்டு சங்கம் நடத்தினர் என்றும் கூறப்படுகின்றனர். அதாவது, ஒவ்வொரு பாண்டியனும் சராசரி 37 ஆண்டு அரசாண்டான் என்பது தெரிகிறது.

சரித்திர நூல் அறிஞர்கள், ஒரு அரசனுடைய ஆட்சிக் காலத்தைச் சராசரி 20 அல்லது 25 ஆண்டு என்று வரையறுத்துக் கணித்து வருகிறார்கள். இறையனார் அகப்பொருள் பாயிரக் கணக்குப்படி பார்த்தால், கடைச்சங்க காலப் பாண்டியரின் சராசரி ஆட்சியாண்டு 37 ஆண்டு ஆகவும், இடைச்சங்கப் பாண்டியரின் சராசரி ஆட்சியாண்டு 62 ஆண்டாகவும், தலைச் சங்கப் பாண்டியரின் சராசரி ஆட்சியாண்டு 50 ஆண்டாகவும்

அமைகின்றன. இந்த ஆண்டுகள், சரித்திர ஆராய்ச்சி முறைக்கு ஒவ்வாமல் அதிகப்படியாகக் காணப்படுகின்றன.

கால அளவு அதிகமாகக் கூறப்படுவதனாலேயே சங்கங்கள் இருந்தன என்பதை ஐயப்படவேண்டியது இல்லை. அதிகக் கால அளவு கூறுவது நமது நாட்டில் மட்டும் அன்று, வேறு நாடு களிலும் அரசர்களின் ஆட்சிக் காலத்தை அதிகப்படுத்திக்கூறும் வழக்கம் பண்டைக்காலத்தில் இருந்தது. சிறிய ஆசியா (Asia Minor) தேசத்திலே தைகிரிஸ் யூபிரெயிட்டிஸ் ஆறுகள் பாய்கிற இடத்திலே பழைய காலத்தில் பாபிலோனியா நாடு இருந்தது. அது பாரசீகக் குடாக்கடலில் மேற்படி தைகிரிஸ் யூபெரிடிஸ் ஆறுகள் கடலில் விழுகிற இடத்தில் இருந்தது. அந்த பாபி லோனியாவுக்கு வடக்கே அசிரியா நாடு இருந்தது. (பாபி லோனியாவுக்கு சுமேரியா என்பதும் பெயர். அசிரியாவுக்கு அக்காடு என்பதும் பெயர்.)

சுமேரியரும் அக்காடியரும் ஒருவரை ஒருவர் வென்று நெடுங்காலம் அரசாண்டார்கள். அந்த அரசர்களின் பட்டியல் இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது. களிமண் பலகைகளில் அவர்கள் எழுதி வைத்த கூனிபார்ம் (ஆப்பு வடிவ) எழுத்துச் சுவடிகளை (பூமியில் புதைந்து கிடந்தவை) மேல் நாட்டுப் புதைபொருள் ஆராய்ச்சிக்காரர்கள் அகழ்ந்தெடுத்து அச்சுவடி களைப் படித்தறிந்தார்கள். அச்சுவடிகளில் அந்த நாட்டை ஆண்ட அரசர் பரம்பரை கூறப்படுகிறது. அதிலே, வெள்ளப் பிரளயத்துக்கு முற்பட்ட எட்டு அரசர்களின் பெயர்கள் கூறப்படுகின்றன. எட்டு அரசர் 2,41,200 ஆண்டு அரசாண்டார்கள் என்று கூறப்படுகிறது. அதாவது, ஒவ்வொரு அரசனும் சராசரி 3150 ஆண்டு அரசாண்டான் என்று கூறப்படுகிறது! இதை எப்படி நம்புவது? அது போகட்டும். வெள்ளப் பிரளயத்துக்குப் பின் அரசாண்ட அரசர்களின் பட்டியல்கூடக் கிடை.த்திருக்கின்றது. அதன்படி 23 அரசர்கள் 24,510 ஆண்டு 3 மாதம் 3½ நாட்கள் அரசாண்டார்களாம்! (*French Excavation: Sumer and Akkad King's list. The first dynasty of Kish*) இதன்படி ஒவ்வொரு அரசனும் சராசரி 106½ ஆண்டு அரசாண்டான் என்று தெரிகிறது.

கால்டிய நாட்டு இன்னொரு அரசர் பரம்பரைப் பட்டியலும் கிடைத்திருக்கிறது. அதில் 12 அரசர்கள் 2310 ஆண்டு அரசாண்டனர் என்று கூறப்படுகின்றனர். அதாவது, ஒவ்வொரு அரசனுடைய சராசரி ஆட்சி ஆண்டு 192½ வருஷம் (*The first dynasty of Erich: GermanExcavation at Warka*).

இந்தப் பட்டியலில் சில தெய்வங்களின் பெயர்கள் அரசர் களின் பெயருடன் கூறப்பட்டுள்ளன. மதுரையில் பாண்டியர் அமைத்த தலைச்சங்கத்திலே திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும் குன்றம் எறிந்த முருகவேளும் நிதியின் கிழவனும்

முதலிய தெய்வங்களின் பெயர்கள் கூறப்படுவதுபோல கால்டிய நாட்டு அரசர் பரம்பரைப் பட்டியலிலும் சூரியதேவனுடைய மகனாக மெஸ்-கி-அக்-க-ஸெ-யிர் என்னும் தெய்வத்தின் பெயர் கூறப்படுகிறது. மேலும், ஆட்டிடையனாகிய லூகல்பண்ட என்னும் தெய்வத்தின் பெயரும் மீன்காரனாகிய தூமுஸி (Dumuzi) என்னும் தெய்வத்தின் பெயரும் கூறப்படுகின்றன.

இன்னொரு பட்டியலில் 4 அரசர்கள் 177 ஆண்டு அரசாண்ட செய்தி கூறப்படுகிறது. அதாவது, ஒவ்வொரு அரசனும் சராசரி 40 ஆண்டு அரசாண்டனர் என்று கூறப்படுகின்றனர் (*The first dynasty of Ur.* Excavation by Sir Leonard Woolly).

முதலில் கூறப்பட்ட பட்டியலைச் சரித்திர ஆராய்ச்சிக்காரர் ஒப்புக்கொள்ளவில்லை. ஏனென்றால், ஒவ்வொரு அரசனும் சராசரி 3150 ஆண்டு அரசாண்டான் என்று கூறப்படுகிற காரணத்தினால். ஆனால், மற்ற பட்டியலில் கூறப்படுகிற அரசர் களைச் சரித்திர காலத்து அரசர் என்று ஆராய்ச்சிக்காரர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பிரஞ்சு அகழ்வாளர் (French Excavation) பட்டியலில் கூறப்படுகிற ஒவ்வொரு அரசனும் 106½ ஆண்டு வீதம் 23 அரசர்கள் 24510 ஆண்டு அரசாண்டனர் என்பதைச் சரித்திரக்காரர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனி அகழ்வாளர் (German Excavation) பட்டியலில் காணப் படுகிற ஒவ்வொரு அரசனும் சராசரி 192½ ஆண்டு வீதம் 12 அரசர்கள் 2310 ஆண்டு ஆட்சி செய்தனர் என்னும் பட்டியலையும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சர் லியோனார்டு உல்லியின் 'ஊர்' நகர அகழ்வாராய்ச்சிப் பட்டியலில் கூறப்படுகிற ஒவ்வொரு அரசனும் 44 ஆண்டு வீதம் 4 அரசர்கள் 177 ஆண்டு அரசாண்டனர் என்பதையும் சரித்திர ஆராய்ச்சிக்காரர் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்றால், ஒவ்வொருவரும் நெடுங்காலம் அரசாண்டனர் என்பதை ஒப்புக்கொள்ளாமல், அதில் கூறப்படுகிற அரசர்கள் உண்மையில் வாழ்ந்திருந்து அந்நாட்டை அரசாண்டனர் என்பதை மட்டும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

சுமேரிய நாட்டு அரசர் பட்டியலில் அரசர்கள் நெடுங்காலம் அரசாண்டதாகக் கூறப்படுகிறது போலவே, தமிழ்ச் சங்கம் வைத்து நடத்திய பாண்டியர் ஒவ்வொருவரும் நெடுங்காலம் அரசாண்டனர் என்று கூறப்படுகிறது. ஆனால், சுமேரியப் பட்டியலில் கால அளவு மிக அதிகமாகவும் பாண்டியர் பட்டியலில் கால அளவு சற்றுக் குறைவாகவும் கூறப்படுகிறது. ஆனால் இரண்டும், சாஸ்திரீய ஆராய்ச்சி முறைக்கு அதிகப்பட்ட காலத்தைக் கூறுகின்றன. சுமேரிய அரசரின் சராசரி ஆட்சி ஆண்டுகள் 106½, 192½, 44 என்றும், பாண்டிய மன்னரின் சராசரி ஆட்சி ஆண்டு 50, 62, 37 என்றும் அறியப்படுகின்றன. சுமேரிய

அரசர்கள் சரித்திர புருஷர்கள் என்று மேல்நாட்டு வரலாற்றுப் பேராசிரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறபடியால், பாண்டிய அரசர்களும் சரித்திர காலப் புருஷர்கள் என்று ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவர்களே.

தலைச்சங்கத்தின் பட்டியலில் சிவபெருமான், திருமால், முருகன், குபேரன் முதலிய தெய்வங்களின் பெயர்கள் கூறப்படுகிற படியால் அந்தப் பட்டியலை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் இருக்கக்கூடும். ஆனால், இடைச்சங்க, கடைச்சங்கத்துப் பட்டியலில் அவ்விதமாகத் தெய்வங்களின் பெயர் காணப்படாத படியால் அவ்விரண்டு சங்கங்களையும் அச்சங்கங்களிலிருந்த பாண்டியர்களையும் சரித்திரப் புருஷர்கள் என்று ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆனால், அவற்றில் கூறப்பட்ட காலத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது இல்லை. சுமேரிய அரசர் பட்டியலை ஏற்றுக்கொள்ளும்போது பாண்டிய அரசர் பட்டியலை யும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். பாண்டியர் பட்டியலை ஏற்றுக்கொள்ளாவிட்டால் சுமேரியப் பட்டியலையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஆராய்ச்சி என்பது எல்லா நாட்டுக்கும் பொதுவானது. ஒரு நாட்டுக்கு ஒரு முறை, இன்னொரு நாட்டுக்கு வேறொரு முறை என்பது பொருந்தாது.

நான் சுமேரிய நாட்டு அரசர் பட்டியலையும் பாண்டியரின் முச்சங்கப் பட்டியலையும் ஒப்பிட்டுக் கூறுவதற்கு அடிப்படை யான சில காரணங்கள் உள்ளன. சுமேரியரும் திராவிடரும் ஒரு காலத்தில் ஒன்றாக ஒரே இடத்தில் வாழ்ந்தவர் என்று மேல்நாட்டுக் கீழ்நாட்டுச் சரித்திர அறிஞர்கள் கூறுகிறார்கள். திராவிடரும் சுமேரியரும் ஒரே இனத்தவர் என்று அவர்கள் எழுதியுள்ளார்கள். சுமேரியருக்கும் திராவிடருக்கும் (தமிழர்) முன் ஒரு காலத்தில் ஏதோ ஒரு வகையில் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது. இதற்குச் சான்றாகச் சுமேரிய நாட்டின் பழைய ஊர்ப் பெயர்கள் உள்ளன. சுமேரிய நாட்டின் முக்கியப் பட்டினத்துக்கு ஊர் என்று பெயர் இருந்தது. இன்னொரு நகரத்துக்கு எருதூர் என்ற பெயர் இருந்தது. மற்றொரு ஊருக்கு நிப்பூர் என்று பெயர் இருந்தது. ஊர், எருதூர், நிப்பூர் என்னும் பெயர்களில் ஊர் என்னும் திராவிடப் பெயர் அமைந்திருப்பது காண்க. ஊர் என்னும் சொல்லுக்குத் தமிழில் என்ன பொருள் உண்டோ அதே பொருள்தான் சுமேரிய மொழியிலும் ஊர் என்னும் சொல்லின் பொருளாக இருந்தது.

மேலும், சுமேரிய மொழியில் அமா, பீடு, ஆள் முதலிய சொற்கள் திராவிடச் (தமிழ்) சொற்களாகவே காணப்படுகின்றன. அமா என்னும் சுமேரிய வார்த்தைக்கு அம்மா என்பது–பொருள். பீடு என்னும் சுமேரியச் சொல்லுக்கு வீடு என்பது பொருள். ஆள் என்னும் சொல்லுக்கு ஓசை, யாழ் ஒலி, யாழ் என்னும் பொருள்கள்

உள்ளன. ஆள் என்னும் சுமேரியச் சொல் தமிழில் யாழ் என்று கூறப்படுகிறது. தமிழரின் பழைய யாழ் வடிவம் போலவே சுமேரியரின் பழைய யாழ் வடிவமும் இருந்தது. பிற்காலத்தில் சுமேரிய யாழின் பத்தருக்கு முன்பக்கத்தில் எருதுத் தலையில் உருவம் அமைக்கப்பட்டது. ஆனால் சுமேரிய, தமிழரின் இசைக் கருவிக்கு யாழ் (ஆள்) என்றே பெயர் இருந்தது கருதத்தக்கது.

இவ்வாறு திராவிடருக்கும் சுமேரியருக்கும் பழங்காலத்தில் தொடர்பு இருந்ததை யறிகிறோம். சுமேரிய அரசரின் பட்டியலிலும் சங்க காலப் பாண்டிய மன்னரின் பட்டியலிலும், கால அளவைப் பொறுத்த மட்டிலும், ஒரே மாதிரி அமைந்திருப்பதும் இங்குக் கருதத்தக்கன. சுமேரிய அரசரின் ஆட்சிக்காலம், நம்ப முடியாத அளவு கால எல்லை அதிகப்படியாகக் கூறியுள்ளது போலவே, தமிழ்ச் சங்கங்களில் கூறப்படுகிற பாண்டிய அரசர்களின் ஆட்சிக் கால எல்லையும் அதிகப்படியாகவே கூறப்படுகின்றன. இதிலும் இரண்டு நாட்டுக்கும் ஒரு பொருத்தம் காணப்படுகிறது.

நமது பாரத தேசத்தில் உள்ள பழைய கலிங்க நாடு இக்காலத்தில் ஒரிசா நாடு என்றும் ஒட்டர தேசம் என்றும் பெயர் பெற்றிருக்கிறது. (சோழன் இந்நாட்டை வென்றது பற்றி *கலிங்கத்துப் பரணி* என்னும் நூல் ஒன்று உண்டு.) ஒரிசா அல்லது ஒரியா மக்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள்; திராவிடப் பண்பாடுடையவர்கள். ஒரிசா நாட்டில் உள்ள பேர் பெற்ற பூரி ஜகனாதர் ஆலயத்தில், அந்நாட்டை அரசாண்ட பழைய மன்னர்களின் பட்டியல் எழுதி வைக்கப்பட்டுள்ளது. அப்பட்டியலில் அம்மன்னர்களுக்கு நீண்ட கால ஆட்சி கூறப்பட்டுள்ளது. அப்பட்டியலைக் கீழே தருகிறேன்:

1. சங்கரதேவர். ஆட்சிக் காலம் 400 ஆண்டு. கி.மு. 1807 முதல் 1407 வரையில் அரசாண்டார்.

2. மகேந்திரதேவர். ஆட்சிக் காலம் 215 ஆண்டு. கி.மு. 1037 முதல் 822 வரை அரசாண்டார்.

3. இஷ்டதேவர். ஆட்சிக் காலம் 134 ஆண்டு. கி.மு. 688 முதல் 538 வரை அரசாண்டார்.

4. பஜ்ரதேவர். ஆட்சிக் காலம் 117 ஆண்டு. கி.மு. 538 முதல் 421 வரை.

5. நரசிங்கதேவர். ஆட்சிக் காலம் 115 ஆண்டு. கி.மு. 426 முதல் 306 வரை.

6. மன்கிருஷ்ணதேவர். ஆட்சிக் காலம் 122 ஆண்டு. கி.மு. 306 முதல் 144 வரை.

7. போஜ்தேவர். ஆட்சிக் காலம் 127 ஆண்டு. கி.மு. 184 முதல் 57 வரை.

இவ்வரசர்கள் நெடுங்காலம் ஆட்சி செய்திருப்பதனாலே இவர்களைக் கற்பனைப் புருஷர் என்று சரித்திரக்காரர் ஒதுக்கி விடவில்லை. ஆனால், ஆட்சி ஆண்டை ஏற்றுக்கொள்ளவில்லை. காலக் கணிப்பில் பண்டையோர் ஏதோ ஒரு முறையைக் கையாண்டிருக்கின்றனர். அந்த முறையின் உண்மை நமக்கு இப்போது விளங்கவில்லை. இனி ஆராய்ச்சியில் வெளிப்படக் கூடும்.

இவற்றை எல்லாம் நான் இங்கு எடுத்துக்காட்டியதன் கருத்து என்னவென்றால், மூன்று சங்கங்கள் இருந்த கால எல்லை மிக அதிகமாகக் காணப்படுவதனால், அது காரணமாக முச்சங்கங்கள் இருந்தன என்பது பொய்க்கதை என்று கூறி அவற்றைத் தள்ளுவது கூடாது என்றும், இதைவிட அதிகக் கால எல்லையைக் கூறுகிற சுமேரிய அரசர் பட்டியலையும் கலிங்க நாட்டுப் பட்டியலையும் சரித்திரக்காரர் ஏற்றுக்கொண்டு சரித்திரம் எழுதியிருக்கிற படியால், பாண்டியர் பட்டியலையும் அவர் அமைத்த சங்கத்தையும் ஏற்றுக்கொண்டு அதில் கூறப்படும் நீண்ட கால வரையறையைத் தள்ளிவிடலாம் என்றும் காட்டுவதற்காகவே.

சங்கங்களின் காலம் மிக நீண்டதாகக் கூறப்படுவதால், அது காரணம் பற்றிச் சங்கங்கள் இல்லை என்று கருதிக்கொண்டு, ஆகவே தொல்காப்பியர் காலம் மிகப் பிற்காலம் என்று கூறுவது ஒவ்வாது. *இறையனார் அகப்பொருள்* உரைப்பாயிரம் கூறுவது போலத் *தொல்காப்பியம்* இடைச்சங்க காலத்தின் இறுதியில் தோன்றிய நூல் என்பதில் ஐயமில்லை.

கடைச்சங்க காலத்தில் 49 பாண்டியர் இருந்தனர் என்று கூறப்படுவதால், தலைமுறையொன்றுக்கு 20 ஆண்டு என்று சாதாரணமாகச் சரித்திர நூலோர் கணிக்கிற கணக்குப்படி பார்த்தால் 980 ஆண்டு கடைச்சங்கம் இருந்தது என்று கொள்ளலாம். கடைச் சங்கத்தின் இறுதிக் காலம் (கீழ்வரம்பு) கி.பி. 300 என்று வைத்துக் கொண்டால், கி.மு. 680இல் கடைச்சங்கம் தோன்றியிருக்கவேண்டும். *தொல்காப்பியம்* இடைச்சங்கத்தின் இறுதியில் தோன்றியது என்று கூறப்படுவதால், ஏறத்தாழ கி.மு. 800இல் *தொல்காப்பியம்* தோன்றியிருக்கலாம் என்று கருதலாம்.

2. தொல்காப்பியர் காலம் – வேங்கடம்

சிவராசபிள்ளையவர்கள், *தொல்காப்பியப்* பாயிரத்தில், தமிழகத்தின் வடவெல்லையாகக் கூறப்படுகிற வேங்கடத்தை ஆதாரமாகக் கொண்டு தொல்காப்பியர் காலத்தை ஆராய்கிறார் (*The Chronology of the Early Tamils*, University of Madras, 1932).

அவர் ஆங்கிலத்தில் எழுதிய *பழந்தமிழரசரின் கால அட்டவணை* என்னும் நூலிலே இது பற்றி எழுதுவதன் சுருக்கம் இது:

சோழ அரசரின் ஆறாவது பரம்பரையில் வந்த கரிகாற் சோழன் (இரண்டாமவன்) அருவா நாட்டை வென்றான். அவனுடைய தந்தை, பாட்டன் காலத்தில் வேங்கடமலை சோழ நாட்டின் எல்லையாக அமையவில்லை. கரிகாலன் இரண்டாமவன் காலத்தில் சோழ நாட்டின் வடக்கு எல்லை வேங்கடம் வரையில் இருந்தது. இந்த வேங்கடமலை எல்லை, தொல்காப்பியரின் காலத்தைத் துணிந்து கூறுவதற்கு உதவியாக இருக்கிறது. தொல்காப்பியருடன் கல்வி பயின்ற பனம்பாரனார் தாம் இயற்றிய *தொல்காப்பியப்* பாயிர உரையில் வேங்கட மலையைத் தமிழ் நாட்டின் வட எல்லை என்று கூறுகிறார். ஆகவே, சோழர் ஆட்சி வேங்கட எல்லை வரையில் பரவுவதற்கு முன்பு தொல்காப்பியர் தமது இலக்கண நூலை எழுதியிருக்க முடியாது என்று நியாயமாகத் தீர்மானிக்கலாம். புல்லி என்பவன் தலைமையில் கொள்ளைக் கூட்டத்தார் வாழ்ந்திருந்த காலத்தில் வேங்கடமலைப் பிரதேசத்தில் சோழரின் நாகரிக ஆட்சி இருந்திருக்க முடியாது. அருவா நாடு, அருவா வடதலை நாடுகளைச் சோழன் வென்று தமிழரை அங்குக் குடியேற்றிய பிறகுதான் வேங்கடம் சோழரின் வட எல்லையாகவும் தமிழகத்தின் வட எல்லையாகவும் இருந்ததாகக் கருதவேண்டும்.

அன்றியும் சிவராசபிள்ளை, *தொல்காப்பியம், புறநானூறுக்* குப் பின்னால் எழுதப்பட்ட நூல் என்றும் கூறுகிறார் (பக்கம் 259).

இவ்வாறு இவர் இரண்டு புதிய கருத்துக்களை வெளி யிட்டுள்ளார். 1. சோழன் கரிகாலன் காலத்துக்குப் பிறகு, வேங்கட மலை சோழரின் வடக்கு எல்லையாக அமைந்த பிறகு, *தொல் காப்பியம்* எழுதப்பட்டது. 2. *தொல்காப்பியம், புறநானூறு* பாடல்கள் பாடப்பட்ட காலத்துக்குப் பின்னர் எழுதப்பட்டது.

இவற்றைப் பற்றி இங்கு ஆராய்வோம் முதலில் வேங்கட எல்லையைப் பற்றிப் பார்ப்போம்.

அரசியல் எல்லைக்கும் (இராசாங்க எல்லை) மொழி எல்லைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை இலக்கண ஆசிரியர்கள் தாம் எந்த மொழிக்கு இலக்கணம் எழுதுகிறார் களோ அந்த மொழி வழங்குகிற எல்லையை மட்டும் கருதுவார் களேயல்லாமல், அரசியல் எல்லைகளைக் கருதமாட்டார்கள். இந்த உண்மைப்படித்தான் *தொல்காப்பியப்* பாயிரச் செய்யுள் தமிழகத்தின் (தமிழ் மக்கள் வாழ்ந்த இடத்தின்) எல்லையைக் கூறுகிறதே தவிர அரசர்களின் இராச்சியப் பரப்பு எல்லையைக் கூறவில்லை. இதையறியாமல் சிவராசபிள்ளை, கரிகாற் சோழன் வேங்கட மலையை எல்லையாகக் கொண்ட பிறகுதான் தமிழக வட எல்லை வேங்கடமாக அமைந்தது என்று கூறுவது தவறானது. அருவா, அருவா வடதலை நாடுகளைச் (தொண்டை மண்டலத்தை) சோழன் கரிகாலன் கொள்வதற்கு முன்பு

அந்நாடுகள் தமிழ் நாடாக இருக்கவில்லை என்று இவர் கருதுகிறாரா? அப்படியானால், அங்குத் தமிழைத் தவிர வேறு என்ன மொழி வழங்கியது என்று இவர் கருதுகிறார்? தொன்று தொட்டு அருவா, அருவா வடதலை நாடுகள் தமிழகத்தைச் சேர்ந்தவையாகவே இருந்து வந்தன. வடுகர் (தெலுங்கரும் கன்னடரும்) தமிழரை (அரவர், அருவர்) அதாவது அருவா நாட்டார் என்றும் தமிழ் மொழியை அரவ பாஷை (அருவா நாட்டார் பாஷை) என்றும் தொன்றுதொட்டு இன்று வரையும் கூறிவருகின்ற வழக்காறு, அருவா, அருவா வடதலை நாடுகள் தமிழகத்தின் பிரிக்க முடியாத பகுதியாக இருந்து வந்தன என்பதை அங்கை நெல்லிக் கனிபோல் விளக்குகின்றன.

வேங்கடமலை ஆதிகாலம் முதல் தமிழகத்தின் வட எல்லையாகவே இருந்து வந்திருக்கிறது. கரிகாற் சோழனுக்குப் பிறகுதான் அது தமிழகத்தின் வட எல்லையாக அமைந்தது என்று கூறுவது சற்றும் ஆதாரம் அற்ற கூற்றாகும். அரசாங்க எல்லைக்கும் மொழி எல்லைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

கரிகாலன் வேங்கடத்தையும் கடந்து ஆந்திர நாட்டையும் கலிங்க நாட்டையும் வென்று அரசாண்டான் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது, சோழன் ஆட்சி கலிங்கம் வரையில் சென்றதாலே, தமிழ் நாட்டின் எல்லை (தமிழ் மொழி வழங்கும் எல்லை) கலிங்கம் என்று யாரேனும் கூறுவரோ? கூறமாட்டார் அல்லவா? எனவே சிவராசபிள்ளை, சோழ இராச்சிய எல்லையுடன் தமிழகத்தின் மொழி எல்லையை இணைத்து அது காரணமாகத் தொல்காப்பியர் இரண்டாம் கரிகாலன் காலத்துக்குப் பிற்பட்டவர் என்று முடிவு கூறுவது சரித்திர ஆராய்ச்சிக்குச் சிறிதும் பொருந்தாது.

அருவா நாடும் அருவா வடதலை நாடும் (தொண்டை மண்டலம்) தமிழ்நாடு தோன்றிய காலம் முதல் தமிழகத்தின் பகுதியாகவே இருந்து வந்தன. அதன் வட எல்லையாகிய வேங்கடமும் தமிழகத்தின் வட எல்லையாகவே இருந்து வந்தது. அதனால்தான் பனம்பாரனாரின் பாயிரம் வேங்கடத்தை வடவெல்லையாகக் கூறிற்று. தமிழகத்தின் வட எல்லையாகிய வேங்கடத்துக்கும், அது பிற்காலத்தில் சோழன் கரிகாலன் ஆட்சி எல்லையாக அமைந்ததற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இது வேறு செயல், அது வேறு செயல். இதையறியாமல், சிவராசபிள்ளை இரண்டையும் பொருத்தி இணைத்துக் காட்டி, அது காரணமாகத் தொல்காப்பியர் காலத்தைக் கணிப்பது பிழையான பொருத்தமற்ற செய்லாகும். எனவே, தொல்காப்பியம் கரிகாலன் இரண்டாமவன் காலத்திற்குப் பின்னர் (அதாவது இவர் கருத்துப்படி கி.பி. 100க்குப் பின்னர்) இயற்றப்பட்டதென்பது, இவர் காட்டிய சான்றுப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கது அன்று.

இனி, *புறநானூற்றுச் செய்யுட்கள் இயற்றப்பட்ட காலத்துக்குப் பிறகு தொல்காப்பிய* இலக்கணம் எழுதப்பட்டது என்று சிவராசபிள்ளை கூறுவதும் பிழையான கருத்தாகும். நேர்மாறாகத் தொல்காப்பியர் காலத்துக்குச் / சில நூற்றாண்டு களுக்குப் பின்னர் *புறநானூற்றுச் செய்யுட்கள்* பாடப்பட்டன என்பதற்குப் *புறநானூற்றி*லேயே சான்றுகள் கிடைக்கின்றன. அச்சான்றுகளாவன:

சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அ ஐ ஔவெனும் மூன்றலங் கடையே

என்பது *தொல்.* எழுத்ததிகாரம், 29ஆம் சூத்திரம். அ, ஐ, ஔ என்னும் எழுத்துடன் சேர்ந்து சகர எழுத்து மொழிக்கு முதலில் வராது. மற்ற உயிரெழுத்துடன் சேர்ந்து வரும் என்பது இதன் கருத்து. இந்தத் *தொல்காப்பிய* இலக்கணத்துக்கு மாறாகப் *புறநானூற்றி*லும் வேறு சங்கச் செய்யுள்களிலும் சொற்கள் வந்துள்ளன.

இருங்கரை நின்ற உப்பொய் சகடம் (*குறுந்.* 165 : 3)
சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே (*புறம்* 202 : 2)
ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம் (*பெரும்பாண்.* 50)
நன்றாய்ந்த நீள்நிமிர் சடை (*புறம்* 166 : 1)
புறந்தாழ் புரிசடை (*புறம்* 251 : 7)
தில்லையன்ன புல்லென் சடையோன் (*புறம்* 252 : 2)
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி (*புறம்* 72 : 8)

யகர எழுத்தைப் பற்றித் *தொல்காப்பியம்* கூறுவது இது:

ஆவோ டல்லது யகரம் முதலாது

என்பது *தொல்.* எழுத்ததிகாரம் 32ஆம் சூத்திரம்.

யகர எழுத்து ஆகாரத்தோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும். மற்ற உயிரெழுத்துடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வராது என்பது இதன் கருத்து. இந்தச் சூத்திரத்துக்கு மாறாக யகரத்தையும் யூகாரத்தையும் முதலாகவுடைய சொற்கள் *புறநானூற்றுச் செய்யுள்*களிலும் வேறு சங்கச் செய்யுள்களிலும் காணப்படுகின்றன.

யவனர் தந்த வினைமாண் நன்கலம் (*அகம்* 149 : 9)
யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல் (*புறம்* 56 : 18)
யூபம் நட்ட வியன்களம் (*புறம்* 15 : 21)
எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண் (*புறம்* 224 : 8)
பிணை யூபம் எழுத்தாய (*மதுரைக்.* 27)

ஞகர எழுத்தைப்பற்றித் தொல்காப்பியர் கூறுவது இது:

ஆஎ ஔ எனும் மூவுயிர் ஞகாரத் துரிய

என்பது *தொல்.* எழுத்து 31ஆவது சூத்திரம். ஞகார எழுத்து ஞா, ஞெ, ஞொ என்னும் எழுத்துக்களை முதலாகவுடைய சொற் களில் வரும். ஏனை உயிரெழுத்துக்களுடன் சேர்ந்து வராது என்பது இச்சூத்திரத்தின் பொருள். இதற்கு மாறாகப் *புறநானூற்றில்* சொற்கள் வந்துள்ளன:

தெரிகோன் ஞமன்ன் போல (*புறம்* 6 : 9)
கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்றை (*பட்டினப்.* 140)
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய (*புறம்* 74 : 3)
வரிஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து (*புறம்* 93 : 12)

வியங்கோள் வினையைப்பற்றித் *தொல்காப்பியம்* கூறுவது:

முன்னிலை தன்மை யாயீ ரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோட் கிளவி

என்பது *தொல்.* சொல். 226ஆவது சூத்திரம். வியங்கோள் வினை, படர்க்கையில் மட்டும் வரும் என்பது இச்சூத்திரத்தின் கருத்து. இதற்கு மாறாகப் *புறநானூற்றில்* முன்னிலை இடத்தில் வியங் கோள் வினை வந்துள்ளது.

பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்
நாஅல் வேத நெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலீயரோ
(*புறம்* 2 : 17-20 முரஞ்சியூர் முடிநாகராயர்)

தண்டா ஈகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவும் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெருமநீ நிலமிசை யானே
(*புறம்* 6 : 26-29 காரிகிழார்)

எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே
(புறம் 9 : 8-11 நெட்டிமையார்)

இவ்வாறு, *புறநானூற்றுச்* செய்யுட்களில் சில சொற்கள் *தொல்காப்பிய* இலக்கணத்துக்கு மாறுபடக் காணப்படுகின்றன.

தொல்காப்பியர் தம் காலத்து இலக்கிய வழக்குக்கு ஏற்ப இலக்கணம் செய்தார். இலக்கணம் எழுதுவோர் இலக்கிய வழக்கைப் பின்பற்றி நூல் இயற்றுவது வழக்கம். இலக்கியத்தைப் பின்பற்றி இலக்கணம் எழுதுவது மரபு. அதன்படி தொல் காப்பியர் தமது காலத்து இலக்கிய வழக்கத்தைப் பின்பற்றி இலக்கணம் எழுதினார்.

தொல்காப்பிய இலக்கணம் எழுதிய பின், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு சில புதிய சொற்கள் தமிழில் வந்து கலந்தன. பேச்சு வழக்கிலுள்ள மொழிகளில் காலந்தோறும் புதியபுதிய சொற்கள் வந்து கலப்பது இயற்கை. இதைத் தடுக்க முடியாது. இந்த முறைப்படித் தொல்காப்பியர் காலத்தில் வழங்காத, அந்த இலக்கண முறைக்கு அமையாத, வேறு சில சொற்கள் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தமிழில் வந்து கலந்துவிட்டன. அந்தச் சொற்கள்தான் மேலே எடுத்துக்காட்டிய சகடம், சடை, யவனர், யூபம், ஞமலி, ஞமன் முதலியன. காலப்போக்கில் வியங்கோள்வினைச் சொற்களும் *தொல்காப்பிய* இலக்கணத்துக்கு மாறாக முன்னிலையிலும் வந்து வழங்கப் பட்டன. இவை எல்லாம் *தொல்காப்பியத்துக்குப்* பிற்காலத்திலே ஏற்பட்ட மாறுதல்கள். இவ்விதச் சொற்கள் தொல்காப்பியர் காலத்தில் வழங்கியிருந்தால் இவற்றிற்கு ஏற்பவே அவர் தமது இலக்கணத்தில் இணைத்துச் சூத்திரஞ் செய்திருப்பார். இச்சொற்களைச் சேர்க்காமையினாலே, *தொல்காப்பியம்*, இச்சொற்கள் தமிழில் வழங்குவதற்கு முன்னே எழுதப்பட்ட நூல் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகிறது.

ஆனால், சிவராசபிள்ளையவர்களோ இந்த உண்மைக்கு மாறாக வரலாற்றைத் தலைகீழாக மாற்றுகிறார். மாற்றிப் *புறநானூற்றுக்குப்* பிறகு *தொல்காப்பிய* நூல் இயற்றப்பட்டது என்று கூறுகிறார். இவர் கூற்றை அறிவுடையுலகம் ஏற்றுக் கொள்ளுமா?

வையாபுரிப்பிள்ளை, *தொல்காப்பியம்* கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வச்சிரநந்தி அமைத்த திரமிள சங்கத்தில் இயற்றப் பட்டிருக்கலாம் என்று கூறுகிறார் (Page 14, *History of Tamil Language and Literature*).

சங்கம், சட்டி முதலிய சகர எழுத்தை முதலாகவுடைய சொற்கள் வழங்காத காலத்திலிருந்த தொல்காப்பியர்,

> சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
> அஐ ஔவெனும் மூன்றலங் கடையே

என்று சூத்திரம் அமைத்த தொல்காப்பியர், 'திரமிள சங்கம்' என்னும் பெயருடன் அமைக்கப்பட்ட சங்கம் என்னும் சொல் வழங்கிய காலத்தில் இருந்தார் என்று வையாபுரியார் கூறுவது ஆராய்ச்சியா என்று கேட்கிறோம். (இதுபற்றிப் பிரிதோர் இடத்தில் விளக்கியுள்ளேம்.)

இவ்வாறு வையாபுரிப்பிள்ளையும் சிவராசபிள்ளையும் முன்பின் சிந்திக்காமல், வரலாற்று முறையைச் சிறிதும் எண்ணிப் பாராமல் 'வாய் புளித்ததா மாங்காய் புளித்ததா' என்பதுபோல மனம் போன்படி எல்லாம் எழுதிவிட்டால் அவை எல்லாம் ஆராய்ச்சியாய்விடுமா? படிக்கிறவர்களுக்கும் பகுத்தறிவும்

ஆராய்ச்சியறிவும் சிந்திக்கும் ஆற்றலும் உண்டு என்பதைச் சிறிதும் எண்ணாமல் கண்டபடி எழுதுவது அறிவுடைமையாகுமா?

மேலே காட்டிய சான்றுகளால், *தொல்காப்பியம்* பழமையான நூல் என்பதும், *புறநானூற்றில்* தொகுக்கப்பட்டுள்ள செய்யுட்கள் தொல்காப்பியத்துக்குப் பிற்பட்ட செய்யுட்கள் என்பதும் அங்கை நெல்லிக்கனி போல் விளங்குகின்றன.

3. தொல்காப்பியர் காலம் – ஓரை

மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவற் கில்லை

என்பது *தொல்காப்பியம்*, பொருளதிகாரம், களவியல் 45ஆம் சூத்திரம். இதற்கு உரை கூறுகிற இளம்பூரண அடிகள், ஓரை என்பதற்கு முகூர்த்தம் என்று பொருள் கூறுகிறார். நச்சினார்க்கினியர் இராசி என்று பொருள் கூறுகிறார். எனவே, ஓரை என்பதற்கு இராசி, முகூர்த்தம் என்னும் பொருள்கள் உண்டென்பது தெரிகின்றது. ஓரை என்னும் சொல்லுக்கு 'மகளிர் விளையாட்டு ஆயம்' என்னும் பொருளும் உண்டு. *குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு* முதலிய நூல்களிலே மகளிர் விளையாட்டுக் கூட்டத்துக்கு ஓரை என்னும் சொல் வழங்கப் பட்டுள்ளது. 'ஓரை ஆயம் கூறக்கேட்டும்', 'ஓரை மகளிர் அஞ்சியீர்ஞெண்டு கடலிற் பரிக்கும்' (*குறுந்.* 48 : 5, 401 : 3-4), 'விளையாட்டாயமோ டோரை யாடாது', 'ஓரை ஆயமொடு பந்து சிறிது எறியினும்' (*அகம்* 219 : 2), 'கோதை ஆயமொடு வண்டல் தைஇ, ஓரை ஆடினும் உயங்கும் நின்ஒளி' (*அகம்* 60 : 10-11), 'விடையாட்டாயமொடு ஓரை ஆடாது' (*நற்.* 68 : 1), 'தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து, ஓரையாயமும்' (*நற்றிணை* 143 : 2-3), 'ஓரை ஆயத்து ஒண்டொடி மகளிர்' (*புறம்* 176 : 1) என்று வருவன காண்க. எனவே, ஓரை என்னும் தமிழ்ச் சொல்லுக்கு மகளிர் விளையாட்டு ஆயம் என்றும், முகூர்த்தம் அல்லது இராசி என்றும் இரண்டு பொருள்கள் உள்ளன என்று அறிகிறோம்.

முகூர்த்தம் அல்லது இராசி என்னும் பொருள் உள்ள ஓரை என்னும் சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்த சொல் என்று சிலர் கருதுகிறார்கள். மகளிர் ஆயம் என்னும் பொருளுடைய ஓரை என்னுஞ் சொல் தமிழ்ச் சொல்லாக இருக்கும்போது முகூர்த்தம் என்னும் பொருள் உள்ள ஓரை என்னுஞ் சொல் கிரேக்க மொழியாக இருக்கவேண்டிய காரணம் என்ன? இராசி என்று பொருள் உள்ள *ஹோரா* என்னும் கிரேக்க மொழிச் சொல் தமிழில் வந்து ஓரை என்று வழங்குகிறது என்று கூறப்படுகிறது. இச்சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்த சொல்லா என்பது ஐயமாக இருக்கிறது.

11456

கிரேக்க மொழிச் சொற்கள் சில தமிழ் மொழியில் கலந்து வழங்குவது உண்மைதான். மத்திகை, சுருங்கை, கல்ம், கன்னல் முதலிய சொற்கள் கிரேக்க மொழியிலிருந்து தமிழ் மொழியில் வந்து வழங்குகிற சொற்கள். இச்சொற்கள் சங்க நூல்களிலேயே வழங்கப்படுகின்றன. மத்திகை என்பது குதிரை ஓட்டும் சம்மட்டி என்னும் பொருளுள்ள சொல். சுருங்கை என்பது தரையின் கீழே அமைக்கப்படும் சாக்கடை (கரந்து படை) என்னும் பொருள் உள்ளது. கலம் என்பது கப்பல் என்னும் பொருளுடைய சொல். *Kalon* என்பதற்குக் கிரேக்க மொழியில் 'மரவீடு' என்பது பொருள். இச்சொல்லைக் கப்பல் ஓட்டிகளான கிரேக்கர் கப்பல் என்னும் பொருளில் வழங்கினார்கள். கிரேக்கரிடமிருந்து தமிழர் இச்சொல்லையும் கடன் கொண்டனர். "யவனர் தந்த வினைமாண் நன்கலம், பொன்னொடு வந்து கறியொடு பெயரும்" என்று *அகநானூறும்* (149), "யவனர் நன்கலம் தந்த தண்கமழ்தேறல்" என்று *புறநானூறும்* (56) கூறுகின்றன. மண்பாத்திரம் என்னும் பொருள் உள்ள கலம் என்னும் சொல்லும் தமிழில் உண்டு. (இந்தக் கலம் என்னும் தமிழ்ச் சொல்லையும் கலம் என்னும் கிரேக்கச் சொல்லையும் வேறு பிரித்து அறியும் பொருட்டு மண், மரம் என்னும் அடைமொழி கொடுத்து மட்கலம், மரக்கலம் என்று பிற்காலத்தவர் வழங்கினார்கள்.) கன்னல் என்பது பொழுதை அளக்கும் கருவிக்குப் பெயர். *Khronos* என்னும் கிரேக்க மொழிச் சொல் கன்னல் என்று வழங்குகிறது என்பர். இவை தமிழில் வழங்கும் கிரேக்க மொழிச் சொற்கள்.

கி. பி. முதல் நூற்றாண்டிலேயே கிரேக்கராகிய யவனர் கடல் வழியாகக் கப்பலில் வந்து தமிழ் நாட்டுடன் வாணிகஞ் செய்யத் தொடங்கினார்கள். அந்த வாணிகம் நாளுக்கு நாள் அதிகப்பட்டது. கி.பி. 45ஆம் ஆண்டில், ஹிப்பலஸ் என்னும் பெயருள்ள கிரேக்க மாலுமி, தென்மேற்குப் பருவக்காற்றின் உதவியினால் சுருங்கிய காலத்தில் முசிறித் துறைமுகத்துக்கு வந்து போகலாம் என்பதைக் கண்டுபிடித்த பிறகு, யவன–தமிழர் வாணிகம் மேலும் அதிகமாகப் பெருகிற்று. கிரேக்கராகிய யவனக் கப்பலோட்டிகள் காவிரிப்பூம்பட்டினம், முசிறி முதலிய துறைமுகப்பட்டினங்களில் வந்து தங்கியிருந்ததையும் அவர்கள் தமிழருடன் வாணிகம் செய்ததையும் சங்க நூல்களிலிருந்து அறிகிறோம். மதுரை முதலிய ஊர்களிலும் யவன வீரர்கள் அரச ஊழியத்தில் அமர்ந்திருந்ததைச் சிலப்பதிகாரம் முதலிய நூல் களினால் அறிகிறோம்.

புதுச்சேரிக்கு அருகில் உள்ள அரிக்கமேடு என்னும் கடற்கறை யூரிலே மண்ணில் புதைந்து மறைந்து கிடந்த துறைமுகம் ஒன்றைச் சில ஆண்டுக்கு முன்னர் ஆர்க்கியாலஜி இலாகா கண்டு அகழ்ந்தெடுத்தது. அது கி.பி. முதல் நூற்றாண்டில்

யவனர் வந்து தங்கியிருந்து வாணிகம் செய்த துறைமுகம் என்று அங்குக் கிடைத்த பொருள்களினால் தெரியவந்தது. ('Arikamedu: An Indo-Roman Trading stations on the East Coast of India,' R.E.M. Wheeler, A. Ghosh and Krishna Deva, pp. 17-124, *Ancient India*, November 2, July 1946).

இவ்வாறு கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையில் நடைபெற்று வந்த கிரேக்க – தமிழ வாணிபம், மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னர் நடைபெறாமற் போயிற்று. கிரேக்கர் தமிழ் நாட்டுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்த காலத்திலேதான் மேலே கூறப்பட்ட கிரேக்க மொழிச் சொற்கள் தமிழ் மொழியில் கலந்தன. ஆனால், ஓரை என்னுஞ் சொல் கிரேக்க மொழியிலிருந்து வந்த சொல்தானா என்பதில் பலமான ஐயம் தோன்றுகிறது.

இதுபற்றி ஆராய்வதற்கு முன்னே, இச்சொல் கிரேக்கச் சொல்தான் என்று துணிந்துகொண்டு, அச்சொல்லை ஆண்டுள்ள *தொல்காப்பியம்* பிற்காலத்திலே எழுதப்பட்ட நூலாகும் என்று கூறுகிறவர்களின் கூற்றை ஆராய்ந்து பார்ப்போம்.

இராசி என்னும் பொருளுடைய ஓரை என்னுஞ் சொல் கிரேக்க மொழியிலிருந்து வடமொழியில் புகுந்து. பின்னர்த் தமிழ் மொழியில் நுழைந்தது என்றும், ஆகவே அச்சொல்லை வழங்கியுள்ள *தொல்காப்பிய* நூல் ஏறக்குறைய கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்றும் முதல்முதலாகக் கூறியவர் கே. என். சிவராச பிள்ளையவர்கள். இவர் தாம் ஆங்கிலத்தில் 1932ஆம் ஆண்டில் எழுதிய *பழந் தமிழரின் சரித்திர கால அட்டவணை* என்னும் நூலிலே,. பிற்சேர்க்கை பதினைந்திலே, 'தொல்காப்பியத்தின் காலம்' என்னும் தலைப்பில் இச்செய்தியைக் கூறுகிறார் (இவர் இதிலே கூறுகிற வேறு காரணங்களை வேறு இடத்திலே ஆராய்வோம். இங்கு ஓரை என்பதை மட்டும் ஆராய்வோம்). சிவராச பிள்ளையவர்கள் ஓரை என்னும் சொல் காரணமாகத் *தொல்காப்பியம்* கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட நூல் என்று எழுதுவதை இங்குக் காட்டுவோம். அவர் ஆங்கிலத்தில் எழுதியிருப்பதன் கருத்து இது:

"கீழ்க்கண்ட *தொல்காப்பியச்* சூத்திரம், *தொல்காப்பியத்தின்* காலத்தை உறுதியாக நிச்சயிக்க மிக உயர்ந்த சான்றாகும்.

மறைந்த வொழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த வொழுக்கம் கிழவோர்க் கில்லை (களவியல் 135)

இந்தச் சூத்திரத்தில் வருகிற ஓரை என்னுஞ் சொல் தனக்கென்று ஒரு வரலாற்றைக் கொண்டிருக்கிறது. இச்சொல், தொல் காப்பியம் எழுதப்பட்ட காலத்தினுடைய மேல்வரம்பை நிச்சயப் படுத்தத் துணைசெய்கிறது. ஓரை என்னுஞ் சொல் உண்மையில்

தமிழ்ச் சொல் அன்று. வடநாட்டு வானநூலோர் அதைக் கிரேக்கரிடமிருந்து கடனாகக் கொள்வதற்கு முன்பு அச்சொல் சமஸ்கிருத மொழியிலும் இல்லை. பிற்காலத்து இந்திய வானநூல் ஆராய்ச்சியானது கிரேக்க வானநூலின் உதவிபெற்று வளர்ந்தது என்று கோல்புரூக்கு (Colebrooke), விட்னி (Whitney), திபாட்டு (Thibaut), ஜகோபி (Jacobi), கீத்து (Keitte) முதலிய அறிஞர்கள் கூறுகிறார்கள். கயே என்னும் ஆசிரியர் (G.R. Kaye) தாம் எழுதிய *இந்திய வான சாஸ்திரம்* என்னும் நூலில் (*Memoirs of the Archaeological Survey of India*, No. 18) வேத காலத்திலும் அதன் பிற்காலத்திலும் கிறிஸ்து சகாப்தத்தின் முதல் நூற்றாண்டு வரையில், இந்திய நாட்டு வான சாஸ்திரம் வெளிநாட்டுச் சார்பு இல்லாமல் இருந்தது என்று தெளிவாக விளக்கியுள்ளார். பிறகு, அந்த வானசாஸ்திர வரலாற்று நூலிலே, மூன்றாவது வரிசை முறையில், கி.பி. 320 முதல் 650 வரையில் உள்ள குப்த அரசர் காலத்தில் இந்திய வான சாஸ்திரம், கிரேக்க நாட்டாரின் முறைப்படியும் போக்குப்படியும் ஆராயப்பட்டது என்று கூறுகிறார். கி.பி. 5ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்தவரான ஆரியபட்டரும், கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இருந்தவரான வராகமிகிரரும் கிரேக்க நாட்டு வான சாஸ்திர முறையை முதன்முதலாக ஏற்றுக்கொண்டவர்கள். இவர்கள் வான நூலைப் பற்றிய கிரேக்கச் சொற்கள் பலவற்றை ஏற்றுக்கொண்டார்கள்.

அச்சொற்களில் ஒன்று *ஹோரா* என்பது. சமஸ்கிருத பாஷையே இந்தச் சொல்லைக் குப்த அரசர் காலம் அல்லது ஏறக்குறைய கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்கு முன்பு ஏற்றிருக்கவில்லை என்றால், சமஸ்கிருதத்திலிருந்து இந்தச் சொல்லைப் பெற்றுக் கொண்ட தொல்காப்பியர் (இந்தச் சொல்லை அவர் நேரே கிரேக்க மொழியிலிருந்து எடுத்துக்கொண்டார் என்று சிலர் கருதக்கூடும் என எண்ணுகிறேன்) எப்படிப் பழைய காலத்தவராக இருக்க முடியும்?" (*The Chronology of the Early Tamils*, pp. 263-264)

இவ்வாறு சிவராச பிள்ளையவர்கள், *ஹோரா* என்ற கிரேக்க மொழிச் சொல் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் சமஸ்கிருத மொழியில் சென்று பிறகு அச்சொல் ஓரை என்று *தொல்காப்பியத்தில்* புகுந்தது என்றும், ஆகவே அச்சொல்லை வழங்குகிற தொல் காப்பியர், கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்தவர் என்றும் 1932ஆம் ஆண்டில் தமது நூலில் எழுதிவைத்தார்.

இவருக்குப் பிறகு வந்த எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள், சிவராசபிள்ளை கூறியதையே திரும்பக் கூறினார். ஆனால், இக்கருத்தை முதல்முதல் சிவராச பிள்ளை கூறினார் என்பதை வையாபுரிப்பிள்ளை கூறாமல், தாமே இக்கருத்தைக் கூறுபவர் போலக் கூறினார். 1956ஆம் ஆண்டில் வையாபுரிப்பிள்ளை யவர்கள் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட *தமிழ்மொழி தமிழ் இலக்கிய வரலாறு* என்னும் நூலிலே இவ்வாறு எழுதுகிறார்:

"அதனுடைய (தொல்காப்பியத்தினுடைய) ஆசிரியர் ஓரை என்னுஞ் சொல்லை (சமஸ்கிருதம் ஹோரா) ஆள்கிறார். ஓரை என்னும் கிரேக்க மொழிச் சொல்லை கி.பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில் சமஸ்கிருத மொழி வானசாஸ்திரிகள் கிரேக்க மொழியிலிருந்து கடனாகக் கொண்டனர்" (பக்கம் 14) என்றும் "தொல்காப்பியரின் காலத்தைப் பற்றிய விஷயம் விவாதத்துக்குரியது. ஆனால், அவர் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர் என்பதற்கு மிகப் பலமான ஆதாரங்கள் உள்ளன. இதுபற்றி முன்னமே விளக்கியுள்ளோம்" (பக்கம் 65) என்றும் எழுதுகிறார் (*History of Tamil Language and Literature*, pp. 14, 65).

ஓரை என்னுஞ் சொல் கிரேக்க மொழியிலிருந்து சமஸ்கிருத மொழியில் போனது ஏறக்குறைய கி.பி. 5ஆம் நூற்றாண்டில் என்று சான்று காட்டிச் சிவராச பிள்ளை கூறினார். அதே செய்தியைக் கூறும் வையாபுரிப்பிள்ளை சான்று காட்டாமலே ஓரை என்னுஞ் சொல் சமஸ்கிருதத்தில் சென்றது கி.பி. 4 அல்லது 5ஆம் நூற்றாண்டில் என்று கூறுகிறார். ஆனால், ஓரை என்னுஞ் சொல் கிரேக்க மொழியிலிருந்து, முதலில் சமஸ்கிருதத்தில் சென்று பிறகு, சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் நுழைந்தது என்று இருவரும் மாறுபாடு இல்லாமல் கூறுகிறார்கள். இவ்வாறு கூறுவதில்தான் இவர்கள் உண்மை காணும் நோக்கத்துடன் ஆராயவில்லை என்பதும் சார்பு பற்றிப் பக்கஞ் சார்ந்து பேசுகிறார்கள் என்பதும் விளங்குகின்றன. கண்ணை மூடிக்கொண்டு மூடபக்தி காரணமாகச் சமஸ்கிருதத்திற்குத் தொன்மை ஏற்றிக் கூறுவதும், உண்மையை மறைத்து வேண்டுமென்றே தமிழ் நூலைப் பிற்காலத்திற்குத் தள்ளிக் கூறுவதும் இவர்களுடைய நோக்கம் என்பது நன்கு விளங்குகின்றது. இதனை விளக்குவோம். இவர்கள் கருதுவது போல, ஓரை என்னுஞ் சொல் கிரேக்க மொழியிலிருந்து தமிழில் வந்ததாகவே வைத்துக்கொள்வோம். கிரேக்கருக்கும் தமிழருக்கும் வாணிகத் தொடர்பினால் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்த காலத்தில் கிரேக்க மொழிகள் தமிழிலும், தமிழ் மொழிகள் கிரேக்கத்திலும் புகுந்திருக்கும் என்பது உண்மையே. மேலே காட்டிய மத்திகை, சுருங்கை, கலம், கன்னல் போன்ற கிரேக்க மொழிச் சொற்கள் தமிழில் கலந்தது போலவே ஓரை என்னும் சொல்லும் (இது கிரேக்க மொழியிலிருந்து தமிழில் வந்ததாக இருந்தால்) தமிழர் – யவனர் வாணிபத் தொடர்பிருந்த கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்குள் தமிழில் கலந்திருக்க வேண்டும் (கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு கிரேக்கரின் வாணிபத் தொடர்பு தமிழ்நாட்டில் நின்று விட்டது). வாணிபத் தொடர்பு இருந்த அக்காலத்திலேதான் அரிசி முதலிய தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியில் சென்றிருக்க

வேண்டும் (அரிசிக்குக் கிரேக்க மொழியில் *ஓரிஜா* (oryza) என்பது பெயர்). இதுதான் இயற்கை. இந்த இயற்கையான, நேரடியான சந்தர்ப்பத்தில் ஓரை என்னுஞ் சொல் தமிழில் கலந்து வழங்காமல், வாணிகத் தொடர்பு அற்றுப்போன பிறகும் சில நூற்றாண்டு வரையில் காத்திருந்து, அச்சொல் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் சமஸ்கிருதத்தில் நுழைந்த பிறகு அதிலிருந்து அச்சொல்லைத் தமிழ் மொழி கடன் வாங்கிற்று என்று ஒருவர் கூறுவாரானால், அவரை ஆராய்ச்சிக்குத் தகுதியுள்ளவர் என்று ஏற்றுக் கொள்ளலாமா? அவர் கூறுவது ஆராய்ச்சியாகுமா?

ஒரு மொழியிலிருந்து ஒரு சொல்லைக் கொள்ள வேண்டுமானால், அது அயல்நாட்டு மொழியாக இருந்தாலும், அச்சொல் சமஸ்கிருத மொழியில் சென்ற பிறகுதான், சமஸ்கிருதத்திலிருந்து மற்ற மொழிக்குக் கொள்ள வேண்டும் என்று மூடத்தனமான ஒரு கொள்கை, சமஸ்கிருதத்தில் மூடபக்தியுள்ள, ஆராய்ச்சியற்ற சில பண்டிதர்களின் கொள்கையாக இக் காலத்திலும் இருந்து வருகிறது. சமஸ்கிருத மொழியைப் பற்றி இருந்து வருகிற சில மூடக்கொள்கைகளில் இதுவும் ஒன்று. இத்தகைய மூடக் கொள்கை, ஆராய்ச்சி இல்லாத சமஸ்கிருத பண்டிதரிடத்தில் இருப்பது பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால், பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் இடத்தில் அமர்ந்து கொண்டு ஆராய்ச்சி செய்கிறேன் என்று நூல் எழுதுகிறவர்கள், சிறிதும் ஆராய்ந்து பாராமல் இவ்வாறு எழுதுவது அறிவுடைமையல்ல. இது ஆராய்ச்சியாகாது.

சமஸ்கிருதத்தில் இச்சொல் வருவதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே தமிழருக்கும் கிரேக்கருக்கும் நேரடியான நெருங்கிய தொடர்பு இருந்த காலத்தில் ஓரை என்னுஞ் சொல் (அது கிரேக்கச் சொல்லாக இருந்தால்) தமிழில் கலவாமல் இருந்தது என்றும், பிறகு அச்சொல் சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு வடமொழியில் சென்ற பிறகு தமிழில் எடுத்துக் கொள்ளப்பட்டது என்றும் இந்த ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுவதை சமஸ்கிருத மூடாபிமானம் என்று ஒதுக்கித் தள்ளுவதைத் தவிர, அறிவுடையவர் யார்தான் ஏற்றுக் கொள்வர்?

ஓரை என்னுஞ் சொல் கிரேக்க மொழியிலிருந்து தமிழில் வந்திருந்தால் அச்சொல் ஏறத்தாழ கி.பி. முதல் நூற்றாண்டிலேயே தமிழில் கலந்திருக்க வேண்டும். அச்சொல்லை ஆள்கிற *தொல்காப்பியமும்* கி.பி. முதல் நூற்றாண்டிலே தோன்றியிருக்க வேண்டும் என்று இவர்கள் கூறியிருந்தால் அதை ஒருவாறு ஏற்றுக்கொள்ள இயலும். அப்படியில்லாமல் 'ஓரை'யைக் கூறுகிற *தொல்காப்பியம்* கி.பி. 5ஆம் நூற்றாண்டிலோ அல்லது 6ஆம் நூற்றாண்டிலோ தோன்றியது என்று பொருத்தமற்ற செய்தியைக் கூறும் இவர்கள் ஆராய்ச்சியை என்னென்பது?

ஓரை என்னுஞ் சொல் கிரேக்க மொழியிலிருந்து சமஸ்கிருத மொழியில் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் சென்றிருக்கலாம். அதுபற்றி நமக்கு இங்கு ஆராய்ச்சி இல்லை. தமிழிலே அச்சொல் எந்தக் காலத்தில் வந்திருக்கக்கூடும் என்று ஆராய்ந்தால், நிச்சயமாக கி.பி. முதல் நூற்றாண்டிலே வந்திருக்க வேண்டும் என்று சரித்திரச் சான்று கொண்டு உறுதியாகத் துணியலாம். ஆகவே, சிவராச பிள்ளையும் வையாபுரிப்பிள்ளையும் சார்பு பற்றி நடுநிலை தவறிக் கூறுகிற இந்தக் கருத்து ஏற்கத்தக்கது அன்று எனத் தள்ளுக.

இப்படி சொல்லுவதனாலே ஓரை என்னும் சொல்லை ஆள்கிற தொல்காப்பியம் கி.பி. முதல் அல்லது இரண்டாவது நூற்றாண்டில் (கிரேக்க – தமிழ் வாணிபத் தொடர்பு இருந்த காலத்தில்) இயற்றப்பட்ட நூல் என்று நான் கூறுவதாகக் கருத வேண்டாம். ஏனென்றால், முதலிலேயே நான் சொன்னது போல, ஓரை என்னுஞ் சொல் கிரேக்க மொழிச் சொல்தானா என்பதில் பலமான ஐயம் இருக்கிறது. ஓரை அல்லது ஹோரா என்னும் சொல் கிரேக்க மொழியில் வழங்கி வரலாம். அச்சொல்லைக் கிரேக்க (யவன) மொழியிலிருந்து சமஸ்கிருத மொழிக்காரர் கடன் வாங்கியும் இருக்கலாம். ஆனால், தமிழில் வழங்கும் ஓரை என்னுஞ் சொல் கிரேக்க மொழிச் சொல்தானா என்பதில் ஐயம் இருக்கிறது. இச்சொல் வேறு மொழியிலிருந்து தமிழில் வந்து கலந்ததாக இருந்தால் சுமேரிய மொழியிலிருந்து வந்திருக்க வேண்டும். இதனை விளக்குவோம்.

ஓரையென்னுஞ் சொல் இராசி என்னும் பொருளுள்ள தமிழ்ச் சொல்லாகவே இருக்கலாம். இச்சொல்லைக் கிரேக்கர்கள் தமிழிலிருந்து கடன் பெற்றிருக்கலாம். அரிசி என்னும் சொல்லை ஒரிஜா என்று கிரேக்கர் வழங்கியதுபோல ஓரை என்னும் தமிழ்ச் சொல்லை ஹோரோ என்று வழங்கியிருக்கலாம் அல்லது ஆதிகாலத்தில் கிரேக்க நாட்டில் வசித்திருந்த திராவிட இனத் தவரிடமிருந்து கிரேக்கர் இச்சொல்லைப் பெற்றிருக்கக்கூடும். மிகப் பழைய காலத்தில், பழைய திராவிட இனத்தவர் கிரேக்க தேசத்திலும் அதை அடுத்த கிரீட் முதலிய தீவுகளிலும் வாழ்ந்திருந்தார்கள் என்றும், பிற்காலத்தில் ஆரியராகிய கிரேக்கர் வந்து அந்த நாட்டில் குடியேறித் தங்கினார்கள் என்றும் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். கிரேக்க நாட்டில் வந்து தங்கிய ஆரியராகிய கிரேக்கர்கள், அவர்கள் வருவதற்கு முன்பே அந்நாட்டில் வாழ்ந்திருந்த பூர்வீகத் திராவிடரிடமிருந்து ஓரை யென்னுஞ் சொல்லைப் பெற்றிருக்கக்கூடும். மேலும், ஐரோப்பா கண்டத்தில் இப்போதும் இருக்கிற ஜிப்ஸிஸ் என்னும் நாடோடி மக்கள் பேசுகிற மொழியில் திராவிட மொழிச் சொற்களும் காணப்படுகின்றன என்று மொழி நூல் ஆராய்ச்சிக்காரர்கள்

கூறுவது இங்குக் கருதத்தக்கது. அவர்களிடத்திலிருந்து கிரேக்கர் இச்சொல்லைப் பெற்றிருக்கலாம்.

ஓரை என்னுஞ் சொல் தமிழ்ச் சொல்லாக இல்லாமல் வேறு மொழியிலிருந்து வந்த சொல்லாக இருந்தால், அது சுமேரிய மொழியிலிருந்து வந்திருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. இப்போது ஈராக் என்று கூறப்படுகிற தேசம் மெசபொடோமியா என்றும் கூறப்படுகிறது. இங்கு யூபெரிடிஸ், தைகிரிஸ் என்னும் பெயருள்ள இரண்டு ஆறுகளுக்கு இடையிலே மிகப் பழைய காலத்திலே பாபிலோனியா என்றும் அசிரியா என்றும் பெயருள்ள தேசம் இருந்தது. பாபிலோனியராகிய அசிரியர், அக்காலத்தில் நாகரிகம் படைத்த மக்களாக இருந்தார்கள். அவர்கள் திராவிடர்களோடு தொடர்புடையவர்கள் எனத் தெரிகின்றனர். ஏனென்றால், அவர்களின் ஊர்ப் பெயர்கள் ஊர் என்னும் திராவிடச் சொல்லாகவே இருக்கிறது. அவர்களுடைய பழைய நகரங்கள் ஊர் என்றும், நிப்பூர் என்றும் எருதூர் என்றும் பெயர் பெற்றிருந்தன. அன்றியும் அம்மா, வீடு, யாழ் (பாட்டு, இசைக்கருவி) முதலிய திராவிட மொழிச் சொற்கள் பாபிலோனிய மொழியில் காணப்படுகின்றன.

புராதன காலத்தில், திராவிடர் மத்தியதரைக் கடல் பக்கத்திலிருந்து இந்தியா தேசத்திற்கு வந்தார்கள் என்றும், இந்தியாவுக்கு வருவதற்கு முன்னே அவர்கள் இடைவழியில் பாபிலோனியா, பாரசீகம் முதலிய நாடுகளில் தங்கினார்கள் என்றும் சரித்திர ஆசிரியர்கள் (மேல் நாட்டவரும் கீழ் நாட்ட வரும் ஆகிய சரித்திர ஆசிரியர்கள்) கூறுகிறார்கள். அது ஒருபுறமிருக்க, தமிழ்நாட்டிலிருந்து பழங்காலத்தில் திராவிட ராகிய தமிழர், சுமேரியா முதலிய நாடுகளுடன் கடல் மூலமாகக் கப்பலில் சென்று வாணிகம் செய்து வந்தனர் என்றும் வேறு சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இவ்வாறு திராவிடர் களுக்கும் பாபிலோனியருக்கும் பழைய காலத்தில் தொடர்பு இருந்தது என்பது தெரிகிறது. அந்தக் காலத்தில் ஓரை என்னுஞ் சொல் பாபிலோனிய மொழியிலிருந்து தமிழில் கலந்திருக்கக் கூடும். அது மிகப் பழைய காலமாகும்.

பாபிலோனியர் ஆதிகாலத்தில் வானசாஸ்திரத்தை வளர்த்த பழங்காலத்து மக்கள் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். பாபிலோனிய குருமார்கள் வான சாஸ்திரத்தில் தேர்ந்தவர்கள். அவர்களிடத்திலிருந்துதான் அக்காலத்தில் வாழ்ந்திருந்த எகிப்தியர் முதலிய மக்கள் வான சாஸ்திரத்தைக் கற்றுக் கொண்டார்கள் என்று ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுகிறார்கள். காலத்தை அறுபது என்னும் எண்ணினால் அளந்தவர் பாபிலோனியரே. இப்போது உலகம் முழுவதும் வழங்குகிற 60 வினாடி ஒரு நிமிஷம், 60 நிமிஷம் ஒரு மணி நேரம் என்னும் காலக்

கணிதம் பாபிலோனியரிடமிருந்து ஏனைய மக்கள் கற்றுக் கொண்டவை என்று ஆராய்ச்சி அறிஞர்கள் எல்லோரும் கூறுகிறார்கள். ஏன்? நமது தமிழ் நாட்டிலும், பாரத நாட்டிலும் முற்காலத்தில் வழங்கிவந்த 60 நாழிகை ஒரு நாள் என்னும் காலக் கணக்கும் பாபிலோனியரிடமிருந்து கற்றுக்கொண்டதே. அல்லும் பகலும் அறுபது நாழிகை என்னும் பழமொழியும் நமது நாட்டில் வழங்குகிறது. 60 என்னும் எண்ணினால் காலத்தை ஆதிகாலத்தில் அளந்தவர் பாபிலோனியரே. பன்னிரண்டு இராசி களையும் கண்டுபிடித்த ஆதிகாலத்து மக்களும் பாபிலோனியர் என்று சரித்திரம் அறிந்தவர் கூறுகின்றனர்.

இவ்வாறு இராசிகளைக் கண்டுபிடித்துக் காலத்தை வரையறுத்த பாபிலோனிய (சுமேரிய) மொழியிலிருந்து ஓரை என்னுஞ் சொல்லைத் தமிழர் பெற்றிருக்கக்கூடும். அதுபோலவே, கிரேக்கரும் சுமேரியரிடமிருந்து *ஹோரா* என்னுஞ் சொல்லைப் பெற்றிருக்கலாம்.

கி.பி. 5ஆம் நூற்றாண்டில் கிரேக்க மொழியிலிருந்து *ஹோரா* என்னுஞ் சொல்லை சமஸ்கிருத மொழி ஏற்றுக்கொண்ட பிறகு, சமஸ்கிருதத்திலிருந்து அச்சொல்லைத் தமிழ் மொழி ஏற்றுக் கொண்டது என்று வையாபுரியாரும் சிவராசரும் கூறுவது வரலாற்று உண்மைக்கு மாறுபட்டதாகும். இது சமஸ்கிருத மூடபக்தியுள்ளவரின் பொருளற்ற கூற்றாகும்.

'மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்' என்னும் சூத்திரத்தில் வருகிற ஓரை என்பதற்கு, நச்சினார்க்கினியரும் இளம்பூரண அடிகளும் ஆகிய பிற்காலத்து உரையாசிரியர்கள் இராசி அல்லது முகூர்த்தம் என்று பொருள் கூறுவது பொருத்தமன்று என்றும், ஓரை என்பதற்கு விளையாட்டு என்பதே செம்பொருள் ஆகும் என்றும் பேராசிரியர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் *அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துச் சஞ்சிகையில்* (ஆறாந் தொகுதி 142, 143ஆம் பக்கங்களில்) 'தொல்காப்பிய ஆராய்ச்சி' என்னுந் தலைப்பில் எழுதியுள்ளது ஈண்டு கருதத்தக்கது. அவர் எழுதியிருப்பதை ஈண்டுத் தருகின்றேன்:

> "மறைந்த வொழுக்கத் தோரையு நாளும்
> துறந்த வொழுக்கங் கிழவோற் கில்லை

இதன் பொருள்: மறைந்த வொழுக்கத்து – களவொழுக்கத்திலே, ஓரையும் நாளும் துறந்த ஒழுக்கம் – தனக்கியல்பான விளையாட்டு களையும் நாள் வேலைகளையும் துறந்து அனவரதம் காதலிலேயே அழுந்திக் கிடக்கும் வழக்கம், கிழவோற்கில்லை – தலைவன் மாட்டுக் காணப்படுவதொன்றன்று.

"எனவே களவில் தலைவிக்குத் தன் காதலன்றிப் பிறிதெதிலும் உளங்கொள்ளாமல் முழுதும் தன்னைக் காதலுக்கே கொடுத்துப் பிறவெல்லாவற்றையும் மறந்தொழுகுதலியல்பா மென்பதும்

தலைவன் அவ்வாறன்றித் தன் தகுதிக்கேற்ற விளையாட்டுகளை ஒழித்துவிடாமல் ஆடியும் நாள்தோறும் தனக்குரிய தொழி லாற்றியும் வருவதுடன் ஏற்றபெற்றியால் காலமிடங் கருதிக் காதலின்பத்தையும் துய்ப்பானாவான் என்பதும், உலகியல் கருதி இச்சூத்திரம் கூறுகின்றது.

"ஓரை - விளையாட்டென்பது, சங்க இலக்கியம் முழுதும் அச்சொல்லுக்கு அப்பொருளாட்சி யுண்மையால் விளங்கும். ஓரைக்கு இராசி அல்லது முகூர்த்தம் எனும் பொருளுண்மைக்குத் தொல்காப்பியத்திலேனும் சங்க இலக்கியம் எதனிலேனும் சான்று காணுதலரிது. மிகவகன்ற பிற்காலப் புலவர் சிலர் முகூர்த்தம் (அதாவது ஒரு நாளினுள் நன்மை தீமைகளுக்குரியதாகப் பிரித்துக் கொள்ளப்படும் உட்பிரிவு) என்ற பொருளில் இச்சொல்லைப் பிரயோகிக்கலானார். அக்கொள்கைக்கே சான்றில்லாத சங்க இலக்கியத்தில் 'ஓரை' யென்னும் தனித் தமிழ்ச் சொல்லுக்கு அக்காலத் திலக்கியங்களால் அதற்குரிய பொருளாகக் காணப்பெறும் விளையாட்டையே அச்சொல் குறிப்பதாகக் கொள்ளுவதே முறையாகும். அதைவிட்டுப் பிற்கால ஆசிரியர் கொள்கையான இராசி அல்லது முகூர்த்தம் எனும் பொருளை இத்தமிழ்ச் சொல்லுக்கு ஏற்றுவதே தவறாகும். அதற்குமேல் அச்சொல்லைக் கொண்டு தொல்காப்பியம் அடையப் பிற்காலத்து நூலென்று வாதிப்பது அறிவுக்கும் ஆராய்ச்சி யறத்திற்கும் பொருந்தாது."

இவ்வாறு தமிழில் எழுதிய பாரதியார் அவர்கள் இச் செய்தியையே ஆங்கிலக் கட்டுரையிலும் எழுதியுள்ளார்கள் (*Journal of the Annamalai University*, Vol. VII, p. 138).

இச்சூத்திரத்திற்குப் பேராசிரியர் பாரதியாரவர்கள் கூறும் பொருளே சாலச் சிறந்தது. ஓரை என்பதற்கு 'விளையாட்டு' என்னும் பொருளே அமைதியுடைத்து. எனவே, பிற்காலத்து உரையாசிரியர் கூறும் பிற்காலத்துப் பொருளாகிய இராசி அல்லது முகூர்த்தம் என்பது ஏற்கத் தக்கதன்று.

மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற் கில்லை

என்னும் *தொல்காப்பியச்* சூத்திரத்தில் வரும் ஓரை என்னுஞ் சொல்லுக்கு முகூர்த்தம் அல்லது இராசி என்பது பொருள் அல்ல என்பதும், திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் கூறுகிற 'விளையாட்டு' என்னும் பொருளே பொருத்தமானது என்பதும் தெற்றென விளங்குகின்றன. இச்சொல்லுக்கு மிகப் பிற்காலத்தில் முகூர்த்தம் அல்லது இராசி என்னும் பொருள் ஏற்பட்ட தென்பதும், அந்தப் பிற்காலத்துப் பொருளைப் பிற்காலத்து உரை ஆசிரியர் அதனுடன் பொருத்திக் கூறுவது ஏற்கத்தக்கதல்ல

என்பதும் தெரிகின்றன. ஆகவே, ஓரை என்னுஞ் சொல்லைக் கிரேக்க (யவன) மொழிச் சொல் என்று கொள்வது முடியாது.

ஓரை என்பது முகூர்த்தம் அல்லது இராசி என்னும் பொருளுள்ள அயல் மொழிச் சொல்லாக இருந்தால், அப் பொருளில் இச்சொல் இச்சூத்திரத்தில் வழங்கப்பட்டு இருக்குமானால் இச்சொல் கிரேக்க மொழியிலிருந்து வராமல் பாபிலோனிய மொழியிலிருந்து தமிழில் வந்திருக்க வேண்டும். இதற்குக் காரணங்களை மேலே கூறினோம்.

எனவே, ஐயப்பாடுள்ள ஓரை என்னுஞ் சொல்லை ஆதாரமாகக் கொண்டு தொல்காப்பியர் காலத்தை ஆராய்வது தவறாகும். அப்படி ஆராய்ந்தால், வழுக்கு நிலத்தில் நடப்பவர் சறுக்கி விழுவது திண்ணமாதல் போல, பிழையான முடிவையேயடையப் பெறுவர். ஆகவே, வையாபுரியாரும் சிவராச பிள்ளையும் ஓரை என்னும் சொல்லைக் கொண்டு தொல்காப்பியர் காலத்தை ஆராய்ந்த முடிவு தவறுடைத்தாகும்.

4. தொல்காப்பியர் காலம்

பாண்டியரின் தமிழ்ச் சங்கமும் வச்சிரநந்தியின் திரமிள சங்கமும்

இடைச்சங்க காலத்திலும் கடைச்சங்க காலத்திலும் *தொல்காப்பியம்* இலக்கண நூலாக இருந்தது என்பதைப் பழைய தமிழ் இலக்கியங்களிலிருந்து அறிகிறோம். *தொல்காப்பியம்* கி.மு. 8ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட நூல் அன்று என்பதை முன்னரே விளக்கினோம். ஆனால் சிலர், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் *தொல்காப்பியம்* இயற்றப்பட்டிருத்தல் கூடும் என்று கூறுகின்றனர். அவர்கள் கூற்றைத் தக்க சான்றுகாட்டி மேலே மறுத்துள்ளோம்.

கி.பி. 470இல் வச்சிரநந்தி என்னும் ஜைன முனிவர் மதுரையில் ஒரு 'திரமிள சங்கத்தை' அமைத்ததைச் சுட்டிக்காட்டி அந்தச் சங்கத்தில் *தொல்காப்பிய* நூல் இயற்றப்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றனர். இது பற்றி இங்கு ஆராய்வோம்.

திகம்பர தரிசனம் என்னும் ஜைன சமய நூலிலே அதை எழுதிய தேவசேனர் என்பவர். பூஜ்யபாதரின் சீடராகிய வச்சிரநந்தி விக்கிரம ஆண்டு 525இல் (கி.பி. 470இல்) தென் மதுரையிலே திராவிட சங்கத்தை நிறுவினார் என்று கூறுகிறார் (*Journal of Bombay Branch of Royal Asiatic Society*, Vol. XVII, p. 74).

ஸ்ரீ பூஜ்ஜ பாதஸீஸோ தாவிட ஸங்கஸ்ஸ காரகோ

விஷ்டோ

நாமேன வஜ்ஜநந்தீ பாஹு ணவேதீ மஹாஸத்தோ

பம்சஸயே சவீஸே விக்ரமார்யஸ்ஸ மரண பத்தஸ்ஸ
தக்கிண மஹுராஜாதோ தாவிட ஸங்கோ மஹாமஹோ

இந்தச் செய்தியைக் கொண்டு திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள், "வச்சிர நந்தியின் பேர்போன சங்கம் கி.பி. 470இல் அமைக்கப்பட்டது. தொல்காப்பியம் அந்தச் சங்கத்தில் வெளிவந்த நூலாக இருக்கலாம்" என்றும்,

"தமிழ் மொழி தமிழ் இலக்கிய வரலாற்றில் முதல் தரமான முக்கிய நிகழ்ச்சி கி.பி. 470இல் நிகழ்ந்தது. வச்சிரநந்தியின் மேற்பார்வையில் மதுரையில் ஒரு திரமிள சங்கம் அமைக்கப் பட்டதுதான் அந்த நிகழ்ச்சி....முற்காலப் பாண்டியரைப் பற்றிய சாசனங்களில் சின்னமனூர் சிறிய செப்பேட்டுச் சாசனத்தில் மட்டும் (கி.பி. 10ஆம் நூற்றாண்டு), தலையாலங்கானத்துப் போர்வென்ற நெடுஞ்செழியனுக்குப் பிறகு வந்த ஒரு பாண்டியன் நிறுவிய மதுரைத் தமிழ்ச் சங்கம் குறிப்பிடப்படுகிறது. இது வச்சிரநந்தியின் சங்கத்தைக் குறிப்பிடுவதாக இருக்கலாம்" என்றும் தாம் ஆங்கிலத்தில் எழுதிய *தமிழ் மொழி தமிழ் இலக்கிய வரலாறு* என்னும் நூலில் 14ஆம் பக்கத்திலும் 58, 59ஆம் பக்கங்களிலும் எழுதுகிறார். மேலும் அந்நூல் 61ஆம் பக்கத்தில்,

"வச்சிரநந்தி சங்கத்தைப் பற்றிச் சரியான சாதனங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், அச்சங்கத்தை நிறுவிய வுடனே ஒழுக்க நூல்களும் இலக்கண நூல்களும் வெளிவந் திருப்பது அச்சங்கத்தின் பெரிய செயலைக் காட்டுகிறது" என்றும் எழுதுகிறார்.

முற்காலத்தில் பாண்டிய மன்னர் அமைத்துத் தமிழாராய்ச்சி செய்த தமிழ்ச் சங்கத்தையும் பிற்காலத்தில் வச்சிரநந்தி அமைத்த ஜைன மதப் பிரசாரச் சங்கத்தையும் ஒன்றாகப் பொருத்திக் காட்டுகிறார் வையாபுரிப் பிள்ளை. பொருத்திக் காட்டுவதுடன் அல்லாமல் தொல்காப்பியர், வச்சிரநந்தி காலத்தில் (கி.பி. 470க்குப் பிறகு) *தொல்காப்பிய* இலக்கணத்தை எழுதினார் என்றும் கூறுகிறார். இது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடி போடுகிற கதையாக இருக்கிறது.

பாண்டியர் அமைத்த தமிழ்ச் சங்கம் வேறு; வச்சிரநந்தி அமைத்த தமிழ்ச் சங்கம் (திராவிட சங்கம்) வேறு. பாண்டியர் அமைத்தது தமிழ் இலக்கிய இலக்கண ஆராய்ச்சிச் சங்கம். வச்சிரநந்தி அமைத்தது ஜைன சமயப் பிரசாரச் சங்கம். இதை யறியாமல், வையாபுரிப்பிள்ளை இரண்டு வெவ்வேறு சங்கங் களையும் ஒன்றாக இணைத்துப் பிணைத்துக் குழப்பியிருக்கிறார். சாதாரண அறிவுள்ளவரும் இதனை எளிதில் அறிந்துகொள்ள முடியும். ஆனால், வையாபுரிப் பிள்ளையவர்கள் ஏனோ இவ்வாறு குழப்புகிறார்.

தமிழர் வரலாறு என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதிய திரு. பி.தி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் வச்சிரநந்தியின் திராவிட சங்கம் வேறு, பாண்டியரின் தமிழ்ச் சங்கம் வேறு என்று தெளிவாகக் கூறுகிறார். "தமிழ்ச் சங்கம் என்று நாம் அறிந்திருக்கிற சங்கம் அன்று இது என்பதைக் குறித்துக்கொள்ள வேண்டும். இது (வச்சிரநந்தியின் சங்கம்) தமிழ்நாட்டு ஜைனர்கள் தம்முடைய மத தர்மத்தைத் தமது மாணாக்கர்களுக்குக் கற்பிப்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்" (*History of the Tamils*, Madras, 1927) என்று அவர் எழுதுகிறார்.

இவ்வாறு 1927இல் திரு. பி.தி. சீனிவாச அய்யங்கார் எழுதியிருப்பதையும் பாராமல், எஸ். வையாபுரிப் பிள்ளை யவர்கள் 1956இல் பாண்டியரின் பழைய சங்கமும் பிற்காலத்து வச்சிரநந்தியின் சங்கமும் ஒன்று என்று கூறுகிறார். 'மதுரை', 'சங்கம்' என்னும் இரண்டு சொற்களின் பெயர் ஒற்றுமையைக் கொண்டு இரண்டு சங்கங்களும் ஒன்று என்று கூறுவது அறிவுடைமையாகாது.

சங்கம் என்றால், கூட்டம், குழு, கழகம் என்பது பொருள். பௌத்த பிக்ஷுக்களின் கூட்டத்துக்கும் சங்கம் என்பது பெயர். பௌத்தர்கள் மும்மணியைக் (*திரி சரணத்தைக்*) கூறுகின்ற

புத்தம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

என்பதில் பௌத்த முனிவர்களின் கூட்டம் சங்கம் என்று கூறப்படுவது காண்க. இதுபோன்று, ஜைன முனிவர்களின் கூட்டத்துக்கும் சங்கம் என்பது பெயர். வச்சிரநந்தி முனிவர், ஏன் திராவிட சங்கம் என்னும் ஜைன முனிவர் சங்கத்தை அமைத்தார் என்பதைக் கூறுவோம்.

சமண (ஜைன) சமயத் துறவிகளின் சங்கம் ஆதி காலத்தில் ஒரே சங்கமாக இருந்தது. அதற்கு மூலசங்கம் என்பது பெயர். பிற்காலத்தில் ஜைன முனிவர் சங்கம் பெரிதாக வளர்ந்துவிட்டது. பெரிதாக வளர்ந்துபோன ஜைன முனிவர் சங்கத்தை நான்கு பிரிவாகப் பிரித்து நந்திகணம், சேனகணம், சிம்மகணம்,தேவகணம் என்று பெயரிட்டார்கள். ஒவ்வொரு கணத்திலும் கச்சை என்றும் அன்வயம் என்றும் உட்பிரிவுகள் இருந்தன. இச்செய்தி ஜைன சமய நூல்களில் கூறப்படுகின்றது.

இந்த நான்கு பிரிவுகளில் நந்திகணம் பேர் பெற்றது. நந்திகணத்தில் நாளடைவில் ஜைன முனிவர்கள் தொகை அதிகமாகிவிட்டது. ஆகவே வச்சிரநந்தி முனிவர், கி.பி. 470இல் நந்திகணத்தை (நந்தி சங்கத்தை) இரண்டாகப் பிரித்து இரண்டாவது பிரிவுக்குத் திரமிள சங்கம் (தமிழ் நாட்டுச் சங்கம்,

தமிழ் ஜைனர் சங்கம்) என்று பெயர் கொடுத்தார். நந்தி சங்கத்திலிருந்து திரமிள (திராவிட) சங்கம் ஏற்பட்டது என்பதை மைசூர் நாட்டுச் சாசனம் ஒன்று கூறுகிறது.

ஸ்ரீமத் திரமிள ஸங்கேஸ்மிம் நந்தி ஸங்கேஸதி அருங்களா அன்வயோ பாதி நிஸ்ஸேஷ ஸாஸ்த்ர வாராஸி பாரகைஹி

(*Epigraphia Carnatica*, Vol. V, Hassan Tq 131, Arisikera Tq.)

'நந்தி சங்கத்தோடு கூடிய திரமிள சங்கத்து அருங்கலான் வய பிரிவு' என்பது இதன் பொருள்.

இந்தத் திராவிட ஜைன முனிவர் சங்கத்தின் கொண்ட குண்டான்வயம் என்னும் பிரிவில் புஸ்தக கச்சை என்னும் உட்பிரிவைச் சேர்ந்த முனி பட்டாரகர் என்னும் ஜைன முனி வரைக் கர்நாடக நாட்டுச் சாசனம் ஒன்று கூறுகிறது (*Medieval Jainism*, Bhaskar Anand Saletore, p. 61).

திரமிள சங்கத்து அருங்கலான்வயப் பிரிவைச் சேர்ந்த சாந்தி முனி என்பவரை இன்னொரு சாசனம் கூறுகிறது (*Medieval Jainism*, p. 66).

திரமிள சங்கத்து அருங்கலான்வயத்து ஸ்ரீபால திரைவித்யர் என்னும் முனிவரை மற்றொரு சாசனம் கூறுகிறது (*Epigraphia Carnatika*, V, Hn. 119, p. 35).

திராவிட சங்கத்துத் தவுளகணத்து இருங்கலான் வயப் பிரிவை சேர்ந்த குணசேன பாண்டிதரை இன்னொரு சாசனம் கூறுகிறது (*Epigraphia Carnatika* IX, Cg. 35, 37, pp. 173-174)

இதிலிருந்து பாண்டியர் தமிழை வளர்ப்பதற்கு மதுரையில் ஏற்படுத்திய தமிழ்ச் சங்கம் வேறு என்பதும், வச்சிரநந்தி ஜைன சமயத்தை வளர்ப்பதற்காக மதுரையில் நிறுவிய நந்தி சங்கத்தின் பிரிவாகிய திரமிள சங்கம் வேறு என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறதல்லவா? இது சாதாரண அறிவுடையவருக்கும் நன்கு விளங்குகிறது. இதை உணராமல் மொழி வளர்ச்சிக்காக ஏற்பட்ட பாண்டியரின் தமிழ்ச் சங்கத்தையும் சமய வளர்ச்சிக்காக வச்சிரநந்தி அமைத்த திரமிள ஜைன சங்கத்தையும் ஒன்றாக இணைத்துக் கூறுவது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுகிறது போன்ற செயலாகும்.

பாண்டியர் அமைத்த தமிழ்ச் சங்கத்து நூல்களிலே காதல் வாழ்க்கைச் செய்திகளும் போர்ச் செய்திகளும் உலகியல் செய்திகளும் கூறப்படுவது யாவரும் அறிந்ததே. வச்சிரநந்தி யமைத்த் திராவிட சங்கமாகிய ஜைன மத சங்கத்தில், ஜைன முனிவர்கள் காதலைப் பற்றியும் போரைப் பற்றியும் லௌகிக விஷயங்களைப் பற்றியும் ஆராய்ந்தார்கள் என்று கூறுவது எவ்வளவு பேதைமை! அன்றியும் சீத்தலைச் சாத்தனார், கபிலர்,

பரணர், மாமூலனார், அரிசில்கிழார், நத்தத்தனார், வெள்ளி வீதியார், இடைக்காடனார், ஓரம்போகியார், மாங்குடிமருதனார் முதலிய ஜைனரல்லாத புலவர்கள் ஜைன முனிவர்களின் மதச் சங்கத்தில் இருந்தார்கள் என்று கூறுவது எவ்வளவு பேதைமை.

வச்சிரநந்தி அமைத்த திராவிட ஜைன சங்கத்தில் தொல் காப்பியர் *தொல்காப்பிய* இலக்கணத்தை இயற்றினார் என்று கூறுவது ஆராயாமல் கூறும் வெற்றுரையாகும். என்னை? சகர எழுத்தை முதலாகவுடைய சொற்கள் தமிழில் வழங்குவது இல்லை என்று *தொல்காப்பிய* இலக்கணச் சூத்திரம் கூறுகிறது.

கத நபம வெனுமா வைந்தெழுத்தும்
எல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே
(28 எழுத்ததிகாரம்)

சகரக் கிளவியு மவற்றோ ரற்றே
அ ஐ ஔவெனு மூன்றலங் கடையே (29 எழுத்ததிகாரம்)

சங்கம், சங்கு, சமம், சகடம், சந்து, சலம், சண்பு முதலிய சகர எழுத்தை முதலாகவுடைய சொற்கள் தமிழில் வழங்குவதில்லை என்று இந்தச் சூத்திரம் கூறுகிறது. ஆகவே, இச்சொற்கள் வழங்காத காலத்தில் *தொல்காப்பியம்* இயற்றப்பட்டது என்பது விளங்குகின்றது. இவ்வாறிருக்க, திரமிள சங்கம் என்னும் பெயருடைய ஒரு சங்கத்தில் தொல்காப்பியர் இருந்தார், அவர் அச்சங்கத்தில் நூல் இயற்றினார் என்பது எவ்வளவு அறியாமை. 'திரமிள சங்கம்' என்னும் சகர எழுத்தை முதலாகவுடைய ஒரு சங்கத்தில் தொல்காப்பியர் அங்கத்தினராக இருந்திருந்தால், அவர் சகரத்தை முதலாகவுடைய சொற்கள் தமிழில் வழங்கா என்று இலக்கணம் எழுதியிருப்பாரா?

பாண்டியரின் தமிழ்ச் சங்கத்துக்கும் சங்கம் என்று பெயர் இருக்கிறதே என்று சிலர் கேட்கக்கூடும். பாண்டியரின் தமிழ்ச் சங்கத்துக்கு ஆதியில் ஏற்பட்ட பெயர் தமிழ்க் கழகம் என்பது. தமிழ்ச் சங்கம் என்னும் வழக்குப் பிற்காலத்தில் ஏற்பட்டது என அறிக.

சின்னமனூர்ச் சிறிய செப்பேட்டுச் சாசனம் பாண்டியன் நிறுவிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் பற்றிக் கூறுகிறதென்றும், அத்தமிழ்ச் சங்கம் வச்சிரநந்தி மதுரையில் நிறுவிய தமிழ்ச் சங்கமாக இருக்கக்கூடும் என்றும் வையாபுரிப்பிள்ளை எழுது கிறார். இதுவும் வாசகரை மயக்குகிற ஒரு செய்தியாகும். சின்னமனூர்ச் சிறிய செப்பேட்டுச் சாசனத்தின் வாசகம் இது:. "மஹாபாரதந் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்பது.

இந்தச் சாசனத்தில் மதுரையில் சங்கம் வைத்ததும் பாரதத்தைத் தமிழில் எழுதுவித்ததும் பாண்டிய மன்னர் செய்த

தாகக் கூறுகிறதேயல்லாமல் வச்சிரநந்தி செய்ததாகக் கூறவில்லை. இவ்வாறு ஒன்றை வேறொன்றாகத் திரித்துக் கூறுவதும் மயங்கக் கூறுவதும் உண்மையாகாது; ஆராய்ச்சியும் ஆகாது.

வச்சிரநந்தி ஆசாரியர் அமைத்த திராவிட சங்கமும் பாண்டிய மன்னர் அமைத்த தமிழ்ச் சங்கமும் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு காரணம் பற்றி அமைக்கப்பட்ட சங்கங்கள் என்றும் இரண்டுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்றும் திரு. பி.தி. சீனிவாச அய்யங்கார் அவர்கள் எழுதியதை முன்னமே காட்டினேன். திரு. எம்.எஸ். இராமசாமி அய்யங்கார் அவர்கள் தாம் ஆங்கிலத்தில் எழுதிய *தென் இந்திய ஜைன சமய ஆய்வுரைகள்* என்னும் நூலிலேயும் வச்சிரநந்தியின் சங்கத்தைப் பற்றிக் கூறுகிறார்.

"தென்னாட்டில் குடியேறிய திகம்பர ஜைன முனிவர்கள் தங்களுடைய ஜைன சமயத்தைப் பரப்பும் நோக்கத்தோடு இந்தச் சங்கத்தை ஏற்படுத்தினார்கள் என்பதை அறிகிறோம்" என்று அவர் எழுதுகிறார் (*Studies in South Indian Jainism*, Madras, 1922, p. 52).

மதுரை, சங்கம் என்னும் இரண்டு சொற்களின் ஒற்றுமையை மட்டும் வைத்துக்கொண்டு, பாண்டியரின் தமிழ்ச் சங்கத்தையும் வச்சிரநந்தியின் திராவிட சங்கத்தையும் ஒன்றாக இணைத்துப் பொருத்திக் கூறுவதும் வச்சிரநந்தியின் சங்கத்தில் தொல் காப்பியனார் தமது *தொல்காப்பிய* இலக்கண நூலை இயற்றி வெளிப்படுத்தினார் என்றும், ஆகவே அவர் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவர் என்றும் கற்பித்துக் கூறுவதும் ஆகிய எல்லாம் மாறுபடக் கூறல், மயங்கக் கூறல், திரித்துக் கூறல் ஆகும் என்று அறிதல் வேண்டும். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. அது என்னவென்றால், வச்சிரநந்தி திராவிட சங்கத்தை ஏற்படுத்தியது கி.பி. 470இல் ஆகும். அந்தக் காலத்தில் பாண்டி நாட்டைக் களப்பிர அரசர் ஆண்டனர். பாண்டியர் ஏற்படுத்திய தமிழ்ச் சங்கம் கி.பி. 300க்கு முன்பு மறைந்து போயிற்று என்பதை ஆராய்ச்சிக்காரர் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

பொருத்தமற்றதைப் பொருத்திக் கூறுவதும், திரித்துக் கூறுவதும் உண்மையாராய்ச்சியாகாது. நுனிப்புல்லை மேய்வது போல மேற்போக்காகப் பாராமல், ஆழ்ந்து சிந்தித்து உண்மை காண்பதே ஆராய்ச்சியாகும். நடுநின்று உண்மையைக் காண்பதே செம்மையான ஆராய்ச்சியாகும். மேற்பார்வைக்கு மெய்போலத் தோன்றுகிற பொய்மொழிகள் உண்மையாராய்ச்சியாகா.

> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு.

5. தொல்காப்பியர் காலம் – *தொல்காப்பியமும்* நாட்டிய சாஸ்திரமும்

தொல்காப்பியர் காலத்தை ஆராய்கின்ற சமஸ்கிருத மொழிப் பக்தர்கள் சிலர், தகுந்த சான்றுகளையும் ஆதாரங் களையும் காட்டாமல், சமஸ்கிருதப் பண்டிதர்களுக்குப் பரம் பரையாக இருந்துவருகிற மூடநம்பிக்கையை மட்டும் ஆதார மாகக் கொண்டு, தொல்காப்பியர் காலத்தைக் கணிக்கிறார்கள். பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாக இருக்கிற சமஸ்கிருத பக்தர்களுங்கூட சமஸ்கிருத மொழியைப் பற்றிய வரையில், பழைய பண்டிதர்களின் மூடநம்பிக்கையைத்தான் பின்பற்று கிறார்கள். சமஸ்கிருத பாஷைதான் பாரதநாட்டின் ஆதி பாஷை என்றும் அதிலிருந்துதான் தமிழ் உட்பட மற்றப் பாஷைகள் சொற்களையும் கருத்துக்களையும் கடனாகப் பெற்றன என்றும் இவர்கள் கண்மூடித்தனமாகக் கூறுகிறார்கள். வடநாட்டுப் பாஷைகளைப் பொறுத்தவரையில் இக்கருத்து உண்மையாக இருக்கக்கூடும். ஆனால், மிகப் பழைமையான தமிழ் மொழியைப் பொறுத்த வரையில் இக்கருத்து மிகமிகத் தவறானது. தமிழ் மொழி சமஸ்கிருத பாஷையைவிட மிகப் பழைமையானது என்பதை உலக அறிஞர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டிருக் கிறார்கள். சமஸ்கிருதம் புதிதாக உண்டாக்கப்பட்ட பாஷை என்பதை அதன் பெயரே தெரிவிக்கின்றது. (*சமம்* – நன்றாக, *கிருதம்* – செய்யப்பட்டது.) செம்மை செய்யப்பட்ட மொழி அல்லது புதிதாக அமைக்கப்பட்ட மொழி என்பது இதன் பொருளாகும். (வேத கால மொழியாகிய ஆரிய மொழியையும் பிற்காலத்தில் உண்டான சமஸ்கிருத மொழியையும் இணைக்கக் கூடாது.)

பிற்காலத்திலே, தமிழ் முதலிய திராவிட மொழிகள் சமஸ்கிருதச் சொற்களைக் கடனாகப் பெற்றுக்கொண்டது போலவே, சமஸ்கிருத பாஷையும் தமிழ் முதலிய திராவிட மொழிச் சொற்களை ஏராளமாகக் கடன் வாங்கியிருக்கிறது. தமிழ் முதலிய திராவிட மொழியிலிருந்து சமஸ்கிருத பாஷை பல நூற்றுக்கணக்கான சொற்களைக் கடன் பெற்றிருக்கிற உண்மையைச் சமஸ்கிருத பக்தர்கள் சொல்லுவதில்லை. ஆனால், நடுவுநிலையுள்ள நல்லவர்கள் சிலர் இந்த உண்மையை ஒப்புக்கொண்டு எழுதியிருக்கிறார்கள். சமஸ்கிருதத்திலுள்ள *பூர்வ மீமாம்ஸை* சூத்திரங்களுக்கு உரை எழுதிய சபர சுவாமியும் குமரிலபட்டரும் தம்முடைய உரைகளில் நீர், மீன், குயில், தாமரை முதலான தமிழ்ச் சொற்களைச் சமஸ்கிருத பாஷை கடன் வாங்கியிருப்பதைத் தெளிவாகக் கூறியுள்ளனர். சமஸ்கிருத பாஷையைக் கற்றவர்களாக ஜர்மனி, பிரான்ஸ் முதலிய மேல்

நாட்டு அறிஞர்களும், திராவிட பாஷைச் சொற்கள் பலவற்றைச் சமஸ்கிருத மொழி கடனாகப் பெற்றிருக்கிறதை எடுத்துக் காட்டியுள்ளனர். *கன்னட மொழி அகராதி* எழுதிய டாக்டர் கெட்டில் என்னும் ஐரோப்பியர், திராவிட மொழிகளிலிருந்து சமஸ்கிருதத்தில் சென்று வழங்குகின்ற நூற்றைம்பதுக்கு மேற்பட்ட சொற்களை அந்நூலின் முகவுரையில் எடுத்துக் காட்டியுள்ளார். *சமஸ்கிருத பாஷை* என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதிய பர்ரோ அவர்கள் (*The Sanskrit Language*, pp. 373-388). 'சமஸ்கிருத பாஷையில் வேறு மொழிச் சொற்கள்' என்னும் அதிகாரத்தில், சமஸ்கிருத மொழியில் கலந்துள்ள திராவிட மொழிச் சொற்களின் பெரிய பட்டியலைக் கொடுத்திருக்கிறார். பர்ரோவும் எமுனோவும் சேர்ந்து அண்மையில் வெளியிட்ட *திராவிட மொழி அகராதியிலே* (*A Dravidian Etymological Dictionary*, 1961) பல நூற்றுக்கணக்கான திராவிட பாஷைச் சொற்கள் சமஸ்கிருத மொழியிலே கலந்திருப்பதை எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

ஆனால், இந்த உண்மைகளை எல்லாம் சமஸ்கிருத மொழியில் மூட பக்தி கொண்டவர்கள் கருதுவதில்லை. தங்களுடைய வரட்டு மூட நம்பிக்கையைத் திருப்பித்திருப்பிக் கூறிவருகிறார்கள். எல்லோரையும் எக்காலத்திலும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது என்பதை அறிந்திருந்தும், பழைய மூடத்தனத்தையே இக்காலத்திலும் ஆதாரமாகக் காட்டி வருகிறார்கள்.

வடமொழி நாட்டிய சாஸ்திரத்திலிருந்து சில கருத்துக்களைத் தொல்காப்பியர் எடுத்துக்கொண்டிருக்கிறார் என்று அவர்களில் சிலர் கூறுகிறார்கள். இதற்கு ஆதாரம் என்ன காட்டுகிறார்கள் என்றால், வடமொழி நாட்டிய சாஸ்திரத்தில் தொல்காப்பியர் கூறுகிற கருத்துக்கள் காணப்படுகின்றன என்பதுதான்! *தொல்காப்பியத்தில்* கூறப்படுகிற கருத்துக்கள் வடமொழி நாட்டிய சாஸ்திரத்திலே காணப்படுவதால், அவை *தொல்காப்பியத்திலிருந்து* எடுக்கப்பட்டவை என்று கூறலாமல்லவா? ஆனால், இவர்கள் அப்படிக் கூறுவதில்லை. சமஸ்கிருதத்திலிருந்துதான் கருத்துக்கள் மற்ற மொழிகளில் சென்றிருக்க வேண்டும் என்னும் மூட நம்பிக்கைதான் இவர்களுக்கு ஆதாரம்.

திரு. பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி தாம் எழுதிய *வடமொழி வரலாறு* என்னும் நூலில் 536ஆம் பக்கத்தில் இவ்வாறு எழுதுகிறார்: "த்ருச்ய காவ்யத்திற்கு ரூபகம் எனவும் பெயர் உண்டு. அதனைப் பற்றி விரிவாய்க் கூறும் பழைய நூல் நாட்டிய சாஸ்திரம் ஆகும். அந்நூல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னர் உள்ளது எனக் கொள்ளத்தக்க சான்று இல்லை எனக் கீத்

(A. Keith) கூறினார். ஆனால் கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னதான தமிழ்த் தொல்காப்பியத்திலுள்ள மெய்ப்பாட்டியற் சூத்திரங்கள் பல, நாட்டிய சாஸ்திரத்திலிருந்து மொழிபெயர்க்கப் பட்டனவாகத் தோன்றுகின்றது (*Tolkappiyam : Collatikaram*, English Commentary by P.S. Subramanya Sastri, pp. XXVI and XXVII). ஆகலின் நாட்டிய சாஸ்திரம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னதாய் இருத்தல் வேண்டும்" (*வடமொழி நூல் வரலாறு*, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு, ப. 536).

மேலும், இதே செய்தியை மேற்படி நூலின் இன்னொரு இடத்திலும் எழுதுகிறார்.

"தமிழிலக்கணமாகிய தொல்காப்பியத்தின் மெய்ப்பாட்டியலில் ஏழு சூத்திரங்கள் நாட்டிய சாஸ்திரப் பகுதியின் மொழி பெயர்ப்பாக இருத்தலாலும், தொல்காப்பியம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட நூலன்றாகலானும், நாட்டிய சாஸ்திரம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னது எனக் கொள்ளத்தகும்" (பக். 662-63). இவருடைய ஆராய்ச்சியின் போக்கு எப்படியிருக்கிறது பாருங்கள்! *தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் சூத்திரங்கள், வடமொழி நாட்டிய சாஸ்திரத்தில் இருப்பதனாலே, தொல்காப்பியம் நாட்டிய சாஸ்திரத்துக்குப் பிற்பட்ட நூலாம்! தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் சூத்திரங்கள் நாட்டிய சாஸ்திரத்தில் காணப்படுகிறபடியினாலே, நாட்டிய சாஸ்திரம் தொல்காப்பியத்திற்குப் பிற்பட்ட நூல் என்று கூறலாம் அல்லவா?* ஆனால், சுப்பிரமணிய சாஸ்திரி அப்படிக் கூறவில்லை. ஏனென்றால், சமஸ்கிருதத்திலிருந்துதான் மற்றப் பாஷைகள் கடன் கொண்டிருக்கவேண்டும் என்பது சமஸ்கிருத பண்டிதர் களின் அழுத்தமான மூடநம்பிக்கையல்லவா? ஆகவேதான், சுப்பிரமணிய சாஸ்திரி *நாட்டிய சாஸ்திரத்திலிருந்து தொல் காப்பிய மெய்ப்பாட்டியல் சூத்திரங்கள் எடுக்கப்பட்டன* என்று சரியான சான்று காட்டாமல் தைரியமாக எழுதிவிட்டார்.

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களும், இந்தச் சமஸ்கிருத மூடபக்தி ஒன்றை மட்டும் ஆதாரமாகக்கொண்டு, சுப்பிரமணிய சாஸ்திரி கூறிய அதே கருத்தைத் தமது நூலிலும் எழுதிவிட்டார். இவர், தாம் ஆங்கிலத்தில் எழுதிய *தமிழ்மொழி தமிழ் இலக்கிய வரலாறு* என்னும் நூலிலே 14, 71ஆம் பக்கங் களில், *வடமொழி நாட்டிய சாஸ்திரத்திலிருந்து தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் சூத்திரக் கருத்துக்களை எடுத்துக்கொண்டார்* என்று எழுதியிருக்கிறார்.

சுப்பிரமணிய சாஸ்திரி, *பரத நாட்டிய சாஸ்திரம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நூலென்றும், ஆகவே தொல் காப்பியம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட* நூலென்றும் எழுதியுள்ளார். கீத் முதலிய சமஸ்கிருத ஆராய்ச்சி

யாளர்கள், பரதநாட்டிய சாஸ்திரம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்டது அன்று என்று எழுதினார்கள். அதாவது, *பரத நாட்டிய சாஸ்திரம்* கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட நூல் என்று கூறினார்கள். வடமொழியறிந்த ஆராய்ச்சி யாளர்களில் பெரும்பாலோர், *பரத நாட்டிய சாஸ்திரம்* கி.பி. 4ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல் என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். வையாபுரிப் பிள்ளையும் *பரத நாட்டிய சாஸ்திரம்* கி.பி. 4ஆம் நூற்றாண்டு நூல் என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார் ஆனால், சமஸ்கிருத பக்தியும் சமஸ்கிருதத் திலிருந்துதான் மற்ற மொழிகளில் கருத்துக்கள் எடுக்கப்பட வேண்டும் என்னும் 'பண்டித' மனப்பான்மையும் கொண்டவரான படியினால், *தொல்காப்பியம்* கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார் (*History of Tamil Language and Literature*).

இவர்களின் கூற்றை ஆராய்வோம்.

முதலில் சுப்பிரமணிய சாஸ்திரி கூறுவதை ஆராய்வோம். கீத் ஆசிரியர் *பரத நாட்டிய சாஸ்திரம்* கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட நூல் என்று கூறினார். வடமொழி அறிஞர்கள் பெரும் பாலோரும் *பரத நாட்டிய சாஸ்திரம்* கி.பி. 4ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். வையாபுரிப் பிள்ளையும், அந்நூல் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தென்பதைத்தான் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால், சாஸ்திரி, கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கு முன்பு *பரத சாஸ்திரம்* எழுதப்பட்டது என்று தகுந்த சான்று காட்டாமல் கூறுகிறார். மேலும், *தொல்காப்பிய* மெய்ப்பாட்டியல் சூத்திரக் கருத்துக்கள் *பரத நாட்டிய சாஸ்திரத்தில்* காணப்படுவதால், கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட *தொல்காப்பியத்துக்கு* முன்பு *பரத சாஸ்திரம்* எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார். இது ஒரு சான்றாகுமா? இவர் கூறுவதையே மாற்றிக் கூறலாமல்லவா? *தொல்காப்பிய* மெய்ப்பாட்டியல் சூத்திரங்கள் *பரத சாஸ்திரத்தில்* காணப்படுவதனாலேயே, *பரத சாஸ்திரம் தொல்காப்பியத்திற்கு*, பிற்பட்ட நூல் என்று கூறுவது பொருந்தும் அல்லவா? ஆனால் இப்படி எல்லாம் மனம் போனபடிக் கூறுவது ஆராய்ச்சியாகுமா? *பரத நாட்டிய சாஸ்திரம்* கி.பி. 4ஆம் நூற்றாண்டு நூல் என்று பலரும் கருதுவதனால் சாஸ்திரி வெறும் யூகமாகக் கூறுவதை உண்மை என்று ஏற்றுக்கொள்ள முடியாது. கி.பி. 4ஆம் நூற்றாண்டு நூலாகிய *பரத சாஸ்திரத்திலிருந்து*, அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட நூலாகிய *தொல்காப்பியம்* கருத்துக்களை எடுத்திருக்க முடியாது. அதற்கு மாறாக, பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட *தொல்காப்பியத்* திலிருந்து பிற்காலத்து (கி.பி. 4ஆம் நூற்றாண்டு) நூலாகிய *பரத*

நாட்டிய சாஸ்திரம் சில கருத்துக்களை (மெய்ப்பாட்டுச் சூத்திரங்களை) எடுத்திருக்கக்கூடும் என்பது பொருத்தமானது.

இனி, வையாபுரியார் கூற்றை ஆராய்வோம். இவர் பரத நாட்டிய சாஸ்திரம் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டு, தொல்காப்பியத்தில் மெய்ப் பாட்டியல் சூத்திரங்கள் பரத நாட்டிய சாஸ்திரச் சூத்திரங் களுடன் பொருந்தியிருப்பதனால், தொல்காப்பிய மெய்ப் பாட்டியல் சூத்திரங்கள் பரத நாட்டிய சாஸ்திரத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆகவே, தொல்காப்பியம் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார். ஏன், அப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்குக் காரணமோ சான்றோ காட்டவில்லை.

கடைச்சங்க காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலம் என்பதும், எட்டுத்தொகையில் தொகுக்கப்பட்டுள்ள செய்யுட்கள் எல்லாம் அப்புலவர்களால் அக்காலத்தில் பாடப் பட்டவை என்பதும் எல்லோரும் அறிந்ததே. கடைச்சங்க காலப் புலவர்களுக்கு இலக்கணமாக இருந்தது தொல்காப்பியம் என்பதும் எல்லோருக்கும் உடன்பாடே. வையாபுரியார் கூறுவது போல, தொல்காப்பியம் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டிருந்தால், அது எப்படி கடைச்சங்கப் புலவருக்கு இலக்கண மாக இருந்திருக்கக்கூடும்? ஆகவே, வையாபுரியார் கூற்று ஏற்கத்தக்கதன்று. தொல்காப்பியம் கடைச்சங்க காலத்துக்கு முன்பு எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது. கடைச்சங்க காலத்திற்கு முன்பு இரண்டாம் சங்கத்தில் தொல்காப்பியம் எழுதப்பட்டது என்றுதான் பழைய வரலாறு கூறுகின்றது.

மேலும், கடைச்சங்க நூல்களில், தொல்காப்பிய இலக்கணத்துக்கு மாறுபட்ட சொற்களும் காணப்படுகின்றன (சங்கு, சட்டி, யூபம், யவனர் முதலியன). வழக்கத்தில் உள்ளதும் பழைய இலக்கணத்துக்கு மாறுபட்டதுமான சொற்களை அப்புலவர்கள் தங்கள் செய்யுட்களில் வழங்கியிருக்கிறார்கள். அப்படி வழங்கவேண்டுமானால், தொல்காப்பிய இலக்கணம் எழுதப்பட்ட நெடுங்காலத்துக்குப் பிறகுதான் அப்புதிய சொற்கள் வழக்கத்தில் வந்திருக்கவேண்டும். அதிலும் பழங்காலத்தில் இலக்கண வரம்புக்கு மாறுபட்ட சொற்கள் புதிதாக வந்து வழங்குவதற்கு நெடுங்காலம் சென்றிருக்க வேண்டும். என்வே, தொல்காப்பியம் எழுதப்பட்ட பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு தான் அவ்விலக்கணத்துக்கு முரண்பட்ட புதிய சொற்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆகையால், கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தொல்காப்பியம் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்பது தெரிகின்றது. எனவே,

இதனாலும் வையாபுரியார் கூறும் கூற்று ஏற்கத்தக்கதன்று என்பது நன்கு விளங்குகின்றது.

பரத நாட்டியம் என்பது தமிழ் நாட்டுக்கே உரிய கலையாகும். அன்று முதல் இன்றளவும் பரதநாட்டியம் தமிழ் நாட்டில் பேரும் புகழும் பெற்று நின்று நிலவுகிறது. (அண்மைக் காலத்தில்தான் வட இந்தியரும் மேல் நாட்டு ஐரோப்பியரும் இக்கலையைப் பயிலத் தொடங்கியுள்ளனர்.) இயல், இசை, நாடகம் என்னும் மூன்று கலைகளை ஆராய்ந்தவர் தமிழ்ச் சங்கத்தார். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் முத்தமிழ் தொன்று தொட்டுப் பேர் போனது. நாடகத்துக்கு முக்கியமான சுவைகள், மெய்ப்பாடுகள் முதலியவற்றை நாடகத் தமிழ்ப் புலவர்கள் ஆராய்ந்தனர். இசைக் கலையையும் நாடகக் கலையையும் வளர்ப்பதற்கென்றே பாணர் என்னும் ஒரு தனிப்பிரிவினர் தமிழ் நாட்டில் இருந்தனர். பரத நாட்டியக்கலைக்கென்றே இன்றும் இசை வேளாளர் தமிழ்நாட்டில் இருக்கின்றனர் அன்றோ? நாடகத் தமிழ்ப் புலவர்கள் ஆராய்ந்த மெய்ப்பாடுகளைத்தான் தொல்காப்பியர் தமது *தொல்காப்பிய* இலக்கணத்தில் கூறினார். இந்த வரலாற்று வரன்முறையை அறியாதவர்கள் வடமொழிப் பரதநாட்டிய சாத்திரத்திலிருந்து தொல்காப்பியர் கருத்துக்களை எடுத்துக்கொண்டார் என்று கூறுவது எவ்வளவு பேதைமை! இது நகைப்புக்கிடமாகவல்லவா இருக்கிறது!

பாரத நாட்டு மொழிகளில் எழுதப்பட்டிருந்த பல சாஸ்திரக் கருத்துக்களைப் பிற்காலத்தவர் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்து வைத்துக்கொண்டதைப் போலவே, தமிழ் நாட்டில் வழங்கிய பரத நாட்டியக்கலை நூலைப் *பரத நாட்டிய சாஸ்திரம்* என்னும் பெயருடன் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்துக் கொண்டனர். பிறகு, அந்த மொழிபெயர்ப்பு நூலை முதல் நூல் என்று கூறுகின்றனர். உதாரணமாக ஒன்று காட்டுவோம். நாடக மேடையில் அமைக்கப்படுகிற திரைக்கு எழினி என்பது பெயர். இந்த எழினி ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்து வரல் எழினி என்று மூன்று வகைப்படும். இந்தத் தமிழ் எழினியைச் சமஸ்கிருத நாடக நூலோர் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், எழினியைச் சரியாக உச்சரிக்கத் தெரியாமல், *எவினி, எவனி* என்று கூறிக் கடைசியில் *யவனிகா* என்று அமைத்துக்கொண்டனர். இவ்வாறு, எழினி என்னும் தமிழ்ச் சொல் *யவனிகா* என்றாயிற்று என்பதை அறியாமல், அது யவன என்னும் சொல்லிலிருந்து தோன்றிற்று என்று கூறுகிறார்கள். இது பற்றி 'எழினி - யவனிகா' என்னும் இணைப்பு காண்க.

எனவே, வையாபுரியாரும் சுப்பிரமணிய சாஸ்திரியாரும் வடமொழிப் பற்றுச் சார்புகொண்டு, யூகமாகக் கூறும், சான்று இல்லாதவையும் அறிவுக்குப் பொருந்தாதவையுமான கூற்றுகள், வெறும் வெற்றுரைகள் எனத் தள்ளுக.

6. தொல்காப்பியர் காலம் – அர்த்த சாஸ்திரம்

தொல்காப்பியச் செய்யுளியலின் இறுதியிலே முப்பத்திரண்டு தந்திர உத்திகள் கூறப்படுகின்றன. 'ஒத்தகாட்சி உத்திவகை விரிப்பின்' எனத் தொடங்கும் நூற்பாவிலே அவ்வுத்திகள் கூறப் படுகின்றன. இந்த முப்பத்திரண்டு உத்திகள், வடமொழியிலே கௌடல்யர் எழுதிய அர்த்த சாஸ்திரத்தின் இறுதியிலும் கூறப்படுகின்றன. சில ஆராய்ச்சிக்காரர்கள் இதைச் சுட்டிக் காட்டி, கௌடல்யரின் அர்த்த சாஸ்திரத்திலிருந்து முப்பத் திரண்டு உத்திகளையும் தொல்காப்பியர் எடுத்துக்கொண்டார் என்று கூறித் தொல்காப்பியம், அர்த்த சாஸ்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் எழுதப்பட்டது என்று கூறுகின்றனர்.

வித்தியாரத்தினம் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி தாம் எழுதிய சமஸ்கிருதத்துக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு பற்றிய ஆய்வுரை என்னும் ஆங்கில நூலிலே இதைக் கூறுகிறார். தொல்காப்பியச் செய்யுளியலில் கூறப்படுகிற தந்திர உத்திகள் பல, கௌடல்யருடைய அர்த்த சாஸ்திரத்திலும் கூறப்பட்டுள்ளன என்று அவர் எழுதியுள்ளார் (*An Enquiry in to the Relationship of Sanskrit and Tamil*, University of Travancore, 1946, p.56).

இந்த உத்திகளை எந்த நூலிலிருந்து எந்த நூல் எடுத்துக் கொண்டது என்பதை இவர் சொல்லவில்லை. ஆனால், இவர் எழுதியதின் முன்பின் தொடர்பை நோக்கும்போது, அர்த்த சாஸ்திரத்திலிருந்து தொல்காப்பியம் எடுத்துக்கொண்டது என்னும் கருத்துத் தொனிக்கும்படி எழுதியுள்ளார்.

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையும், தொல்காப்பியம் பிற் காலத்து நூல் என்று தாம் வழக்கம்போல் கூறுகிற ஆதாரமற்ற ஆதாரங்களில் இதையும் ஒன்றாகக் கூறியுள்ளார். "கௌடல்யரின் அர்த்த சாஸ்திரம் தொல்காப்பியத்துக்கு விஷயம் கொடுத் திருக்கிறது. அதாவது, இரண்டு நூல்களின் இறுதியிலும் கூறப்படுகிற முப்பத்திரண்டு உத்திகள். ஆனால், கௌடல்யரின் காலம் விவாதத்துக்கு உரியதாகையால் இதைப்பற்றிக் கூறாமல் விட்டுவிடலாம்" என்று அவர் எழுதுகிறார் (*History of Tamil Language and Literature*, p. 14).

தாமே சந்தேகப்படுகிற ஒரு சான்றை இவர் ஏன் கூற வேண்டும்? அர்த்த சாத்திரத்தின் காலம் விவாதத்துக்குரியது, ஆகவே அந்தச் சான்றைக் காட்டவேண்டுவதில்லை என்று கூறுகிறவர், அர்த்த சாஸ்திரத்திலிருந்து தொல்காப்பியம் 32 உத்திகளை எடுத்துக்கொண்டது என்று ஏன் கூறவேண்டும்? இது இவருடைய தாழ்வுமனப்பான்மையைக் காட்டுகிறதன்றோ? சமஸ்கிருதத்திலிருந்துதான் தமிழில் நூல் எழுத விஷயம்

எடுக்கவேண்டும் என்னும் சமஸ்கிருத மூடபக்தி இவரை இப்படியெல்லாம் எழுதச் செய்தது போலும்.

இவ்வாறு சிலர் கூறுவதுபோல, கௌடல்யரின் *அர்த்த சாஸ்திரத்துக்கும் தொல்காப்பியத்துக்கும்* ஏதேனும் சம்பந்தம் உண்டா என்பதை ஆராய்வோம். *அர்த்த சாஸ்திரத்தை* எழுதிய கௌடல்யர், அசோகச் சக்கரவர்த்தியின் பாட்டனாகிய சந்திர குப்த மௌரியன் காலத்தில் இருந்தவர் என்றும், அவ்வரசனுக்கு அமைச்சராக இருந்தவர் என்றுங் கூறப்படுகிறார். அவர் எழுதிய *அர்த்த சாஸ்திரத்தில்* அவருக்குப் பின்னால் வந்த சில ஆசிரியர்கள் பல விஷயங்களை அதில் சேர்த்து எழுதிவைத்தனர் என்றுங் கூறப்படுகிறது. அதாவது, கௌடல்யர் தொடங்கி எழுதிவைத்த *அர்த்த சாஸ்திரத்தில்*, அவர் எழுதாத பல விஷயங்களை அவருக்குப் பிற்காலத்தில் இருந்தவர்கள் அவ்வக்காலங்களில் புதியபுதிய கருத்துக்களையும் எழுதி அதனுடன் சேர்த்து விட்டனர் என்று கூறப்படுகிறது. எனவே, கௌடல்யரின் *அர்த்த சாஸ்திரத்தில்* இடைச் செருகல்கள் ஏற்பட்டு, கௌடல்யர் எழுதிய கருத்து மட்டும் இல்லாமல் வேறு பலருடைய கருத்துக் களும் பிற்காலங்களில் நுழைக்கப்பட்டன என்று தெரிகிறது.

அர்த்த சாஸ்திரத்தை எழுதியவர் விஷ்ணு குப்தர் என்னும் பிராமணர் என்றுங் கூறப்படுகிறது. இவர் தென்னாட்டுப் பிராமணர் என்றுங் கூறப்படுகிறார். தென்னாட்டுப் பிராமண ராகிய விஷ்ணு குப்தர் *தொல்காப்பியத்தை*. அறிந்தவராகவும் இருக்கலாம். அவர், *அர்த்த சாஸ்திரத்தில்* சில புதிய விஷயங்களை இடைச்செருகலாகப் புகுத்திச் சேர்த்ததில் தொல்காப்பியரின் 32 உத்திகளையும் *அர்த்த சாஸ்திரத்தில்* புகுத்தியிருக்கலாம். அல்லது, *தொல்காப்பியத்தை* அறிந்த வேறு யாரோ, அந்த உத்திகளை *அர்த்த சாஸ்திரத்தில்* புகுத்தி எழுதியிருக்கலாம். இவ்வாறு இடைச் செருகல்களைக் கொண்டிருக்கிற *அர்த்த சாஸ்திரத்தி* லிருந்து தொல்காப்பியர் 32 உத்திகளை எடுத்தார் என்று கூறுவதும், ஆகவே, *தொல்காப்பியம் அர்த்த சாஸ்திரத்துக்குப்* பிற்பட்ட நூல் என்று கூறுவதும் ஆதாரமற்ற, ஏற்கக் கூடாத, சந்தேகத்துக்கு இடமான சான்று அல்லவா?

அர்த்த சாஸ்திரத்தின் காலத்தைப் பற்றி உறுதியாகக் கூறமுடியவில்லை. இந்திய ஆராய்ச்சிக்காரர்கள் சிலர் அது கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது என்கிறார்கள். மேல்நாட்டு ஆராய்ச்சிக்காரர்கள் அது கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்கிறார்கள். *சமஸ்கிருத இலக்கியச் சரித்திரம்* எழுதிய கீத் (A.B. Keith) என்பவரும், ஜர்மனி பாஷையில் *இந்திய இலக்கிய வரலாறு* எழுதிய வின்டர்னிட்ஸ் (Winternitz) என்பவரும் *அர்த்த சாஸ்திரம்* கிருஸ்துவுக்குப் பிறகு

மூன்றாம். நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பர். இவ்வாறு வேறுபட்ட காலங்கள் அதற்குக் கூறப்படுகின்றன.

சிலர் கருதுவது போல *அர்த்த சாஸ்திரம்* கி.மு. 3ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்று கொண்டாலும் அதில் இடையிடையே அந்தந்தக் காலத்தில் இடைச் செருகல்கள் புகுத்தப்பட்டிருப்பதால், இதை ஒரு ஆதாரமாகக் கொள்வது கூடாது. பாண்டிய நாட்டு முத்துக்களையும் சேர நாட்டு மிளகையும் முத்தையும், மதுரைச் சேலைகளையும் கூறுகிற *அர்த்த சாஸ்திரம்*, தொல்காப்பியரின் 32 உத்திகளையும் கூறியதில் என்ன ஆச்சரியம் உண்டு? தமிழ்நாட்டுப் பரதநாட்டியக் கலை வடமொழியில் *பரத சாஸ்திரத்தில்* இடம்பெற்றது போலவும், தமிழ் இலக்கியக் கருத்துக்கள் பல வடமொழி இலக்கியங்களில் இடம்பெற்றிருப்பது போலவும், *தொல்காப்பியத்தின்* 32 உத்திகளும் *அர்த்த சாஸ்திரத்தில்* இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், இங்கிருந்து அங்குச் சென்றது என்று கூறாமல் அங்கிருந்து இங்கு வந்தது என்று கூறுவதுதான் தமிழ்நாட்டுப் பிராமணருக்கும் அவரைப் பின்பற்றும் வையாபுரியார்களுக்கும் பரம்பரை வழக்கமாய்ப் போய்விட்டது. மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா. எனவே, இதை ஆதாரமற்ற செய்தி என விடுக.

7. இணைப்பு

எழினி – *யவனிகா*

திரைச் சீலைக்குத் தமிழில் எழினி என்றும் சமஸ்கிருத மொழியில் *யவனிகா* என்றும் பெயர். திரைச்சீலை என்னும் பொருள் உடைய *யவனிகா* என்னும் சமஸ்கிருதச் சொல், யவன என்னும் சொல்லிலிருந்து தோன்றியது என்று கருதப்படுகிறது. யவன நாட்டிலிருந்து திரைச்சீலை நமது நாட்டுக்கு வந்தது என்றும், ஆகவே யவன நாட்டுத் திரைச்சீலைக்குச் சமஸ்கிருதக் காரர் *யவனிகா* என்று பெயர் கொடுத்தார்கள் என்றும் கூறப்படுகிறது. இது உண்மை போலவும் தோன்றுகிறது.

கிரேக்க நாட்டின் ஒரு பகுதிக்குப் பண்டைக் காலத்தில் அயோனியா என்று பெயர் இருந்தது. அயோனிய தேசத்துக் கிரேக்கர், அயோனியர் என்று அழைக்கப்பட்டனர். அயோனியராகிய கிரேக்கர், தமிழிலும் சமஸ்கிருதத்திலும் யவனர் என்று கூறப்பட்டனர். யவனர் பண்டைக் காலத்தில் பேர்போன மாலுமிகளாக இருந்தனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, கி.மு. முதல் நூற்றாண்டிலே யவனருடைய கப்பல் வாணிகம் பாரத நாட்டிலும் தமிழ் நாட்டிலும் இலங்கைத் தீவிலும் நடைபெற்று வந்தது. ஆகவே, தமிழரும் சமஸ்கிருதக் காரரும் கிரேக்கரை யவனர் என்னும் பெயரினால் அறிந்திருந்

தார்கள். யவனர் தமது நாட்டிலிருந்து கொண்டுவந்து நமது நாட்டில் இறக்குமதி செய்த பொருள்களில் திரைச்சீலையும் ஒன்றாக இருக்கலாம் என்றும் ஆகவே யவன நாட்டிலிருந்து வந்த திரைச்சீலைக்கு சமஸ்கிருத மொழியில் *யவனிகா* என்று பெயர் ஏற்பட்டது என்றும் கருதுவது மிகப் பொருத்தம்போலத் தோன்றுகிறது.

ஆனால், ஆய்ந்தோய்ந்து பார்த்தால் இவ்வாறு கருதுவது தவறு என்றும், *யவனிகா* என்னும் சமஸ்கிருதச் சொல் எழினி என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபு என்றும் தெரிகிறது. தமிழிலிருந்து பல சொற்களைச் சமஸ்கிருத மொழி கடனாகப் பெற்றுக்கொண்டிருப்பதில் எழினி என்னும் சொல்லும் ஒன்றாகும். இவ்வாறு கூறுவது சிலருக்குப் புதுமையாகவும் வியப்பாகவும் தோன்றும். இந்தக் கட்டுரையில் இதனைத் தெளிவாக விளக்கிக் கூறுவோம்.

திரைச்சீலை என்னும் பொருள் உடைய எழினி என்னும் சொல் *சிலப்பதிகாரம்*, *மணிமேகலை*, *பெருங்கதை* முதலிய பழைய தமிழ் நூல்களிலே வழங்கப்பட்டுள்ளது. காவிரிப்பூம் பட்டினத்திலே நிகழ்ந்த இந்திர விழாவின் இறுதி நாளிலே கடலில் நீராடுவதற்குக் கடற்கரைக்குச் சென்ற அரசு குமரர்களும் செல்வப் பிரபுக்களும் மணற்பரப்பிலே எழினிகளால் அமைந்த விடுதி களில் தங்கியிருந்தனர் என்று *சிலப்பதிகாரம்* கூறுகிறது.

அரசிளங் குமரரும் உரிமைச் சுற்றமும்
பரத குமரரும் பல்வேறு ஆயமும்
ஆடுகள மகளிரும் பாடுகள மகளிரும்
தோடுகொள் மருங்கில் சூழ்தரல் எழினியும்

என்று *சிலம்பு* (கடலாடு காதை 155 -158) கூறுகிறது.

கோவலனும் மாதவியும் கடல் நீராடக் கடற்கரைக்குச் சென்றவர் மணற்பரப்பிலே புன்னைமர நிழலிலே ஓவியம் எழுதப்பட்ட திரைகளினால் அமைக்கப்பட்ட விடுதியிலே தங்கி யிருந்தனர் என்று *சிலப்பதிகாரம்* கூறுகிறது.

கடற்புலவு கடிந்த மற்பூந் தாழைச்
சிறைசெய் வேலி அகவையின் ஆய்கோர்
புன்னை நீழல் புதுமணற் பரப்பில்
ஓவிய எழினி சூழவுடன் போக்கி
விதானித்துப் படுத்த எண்கால் அமளிமிசை

கோவலனும் மாதவியும் இருந்தனர் என்று *சிலம்பு* (கடலாடு காதை 166-170) கூறுவது காண்க. (ஓவிய எழினி – சித்திரப் பணி எழுதின திரை: அரும்பதவுரை.)

சங்க காலத்திலே நாடக மேடைகளில் எழினியாகிய திரைகள் மூன்று விதமாக அமைக்கப்பட்டிருந்தன. அந்தத்

திரைகள் ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என்று பெயர் பெற்று இருந்தன என்று *சிலப்பதிகாரம்* கூறுகிறது.

தோற்றிய அரங்கில் தொழுதனர் ஏத்தப்
பூதரை எழுதி மேனிலை வைத்துத்
தூண்நிழல் புறப்பட மாண்விளக் கெடுத்தாங்கு
ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்
கரந்துவரல் எழினியும் புரிந்துடன் வகுத்தாங்கு
ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து
மாலைத் தாமம் வளைவுடன் நாற்றி
விருந்துபடக் கிடந்த அருந்தொழில் அரங்கம்

என்று கூறுவது காண்க (அரங்கேற்று காதை 106-113).

இதில் கூறப்பட்ட 'ஒருமுக எழினியும், பொருமுக எழினியும், கரந்துவரல் எழினியும் புரிந்துடன் வகுத்தாங்கு" என்னும் அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் இவ்வாறு உரை எழுதுகிறார்:

"இடத்தூண் நிலையிடத்தே உருவுதிரையாக ஒருமுக எழினியும் இரண்டு வலத்தூணிடத்தும் உருவுதிரையாகப் பொருமுக எழினியும் மேற்கட்டுத் திரையாகக் கரந்துவரல் எழினியும் செயற்பாட்டாலே வகுத்து என்க. மேற்கட்டுத் திரையாய் நிற்பது ஆகாய சாரிகளாய்த் தோன்றுவார்க்கெனக் கொள்க. என்னை? 'அரிதரங்கிற் செய்தெழினி மூன்றமைத்துச் சித்திரத்தாற் பூதரையும் எய்த எழுதி இயற்று' என்றார் பரத சேனாபதியாரும்."

இதனாலே, தமிழர் தமது அரங்க மேடைகளிலே மூன்று வகையான எழினிகளை அமைத்தனர் என்பது தெரிகின்றது.

காவிரிப்பூம்பட்டினத்தில் உபவனம் என்னும் பூந் தோட்டத்திலே புத்தர் பெருமானுக்கு அமைக்கப்பட்ட பளிக்கறை (கண்ணாடி) மண்டபம் இருந்தது. அந்தக் கண்ணாடி மண்டபத்திலே, மணிமேகலை என்பவள் உதயகுமரன் என்னும் சோழ அரசகுமரன் தன்னைப் பின்தொடர்ந்து வருவதை அறிந்து, ஒளிந்துகொண்டனள். ஆனால், அரசகுமரன் அவள் பளிக்கறை மண்டபத்திற்குள் இருப்பதைப் பார்த்தான். பார்த்த அவன், அவள் அதற்குள் இருக்கும் இருப்பைக் கண்டு, 'கண்ணாடியால் அமைக்கப்பட்ட பொருமுக எழினிக்குள்ளே இருந்து இலக்குமி, பாவைக்கூத்து ஆடுவது போல ஓவியன் எழுதியமைத்த பதுமையோ' என்று தனக்குள் எண்ணி வியந்தான் என்று *மணிமேகலை* என்னும் காவியம் கூறுகிறது.

இளங்கோன் கண்ட இளம்பொற் பூங்கொடி
விளங்கொளி மேனி விண்ணவர் வியப்பப்
பொருமுகப் பளிங்கின் எழினி வீழ்த்துத்
திருவின் செய்யோள் ஆடிய பாவையின்
... ...

... ...

ஓவியன் உள்ளத்து உன்னியது வியப்போன்
காவியங் கண்ணி யாகுதல் தெளிந்து

என்று *மணிமேகலை* (ஐந்தாவது காதை 1-8) கூறுகிறது.

வாசவதத்தை என்னும் அரசகுமாரி தான் கற்ற இசைக் கலையை அரங்கேற்றியபோது அவள், எழினியால் அமைந்த மண்டபத்திலே இருந்து இசை அரங்கேற்றினாள் என்று பெருங் கதை என்னும் காவியம் கூறுகிறது. அந்த எழினி மண்டபத்தைக் "கண்டங்குத்திய மண்டப எழினி" என்று கூறுகிறது. பல நிறமுள்ள திரைச் சீலைகளினால் கண்டக்கோல் நிறுத்தி மண்டபமாக அமைந்த அரங்கம் என்பது இதன் பொருள். மேலும்,

எதிர்முகம் வாங்கி எழினி மறைஇப்
பதுமா நங்கையும் பையெனப் புகுந்து

என்றும்,

கஞ்சிகை எழினியில் கரந்து நிற்போரும்

என்றும் பெருங்கதை என்னும் காவியம் கூறுகிறது. இவற்றால், திரை என்னும் பொருள் உடைய எழினி என்னும் சொல் தமிழ் மொழியில் வழங்கி வந்தது என்பது தெரிகின்றது.

இந்த எழினி என்னும் சொல்லைத்தான் சமஸ்கிருத மொழி கடனாகப் பெற்றுக்கொண்டு. இதனை *யவனிகா* என்று திரித்து வழங்கியது. சமஸ்கிருத மொழியில் ழகர எழுத்து இல்லாத படியால், சமஸ்கிருதக்காரர் எழினியில் உள்ள ழகரத்தை உச்சரிக்க முடியாமல், ழகரத்தை வகரமாக்கி உச்சரித்தார்கள். அதாவது, எழினியை *எவினி* என்று உச்சரித்தார்கள். பிறகு, *எவினி யவனியாகி*, அதன் பின்னர் *யவனி யவனிகா* ஆயிற்று.

இப்படிச் சொன்னால் சமஸ்கிருதக்காரர்கள் ஒப்புக்கொள் வார்களா? சமஸ்கிருதத்திலிருந்துதான் மற்றப் பாஷைகள் சொற் களைக் கடன் வாங்கின, சமஸ்கிருதம் மற்றப் பாஷைகளிலிருந்து கடன் வாங்கவில்லை என்று நம்புகிற, சொல்லுகிற சமஸ்கிருதப் பண்டிதர்கள் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இருக்கிறார்கள். அவர்கள், எழினி என்னும் தமிழ்ச் சொல்லைச் சமஸ்கிருத மொழி கடனாகப் பெற்றுக்கொண்டு *யவனிகா* என்று வழங்குகிறது என்று சொன்னால், இதை ஏற்றுக்கொள்வார்களா? ஏற்க மாட்டார்கள். ஆனால், சமஸ்கிருத மொழியிலிருந்தே இதற்குச் சான்று காட்டினால், அறிவாளிகள் ஏற்றுக்கொள்வார்கள் அல்லவா? ஆகவே, சமஸ்கிருதத்திலிருந்தே இதற்குச் சான்று காட்டுவேன்.

சான்று காட்டுவதற்கு முன்னர் இன்னொரு செய்தியையும் தெளிவுபடுத்த வேண்டும். அதென்னவென்றால், கிரேக்கக் கப்பல்

வாணிகர் திரைச்சீலைகளை நமது நாட்டில் கொண்டு வந்து இறக்குமதி செய்தார்களா என்பதுதான். யவனக் கப்பலோட்டிகள் வாணிகப் பொருள்களாகக் கொண்டு வந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களும் ஏற்றுமதி செய்து கொண்டு போன பொருள்களும் இன்னின்னவை என்பதைக் கிரேக்கர்கள் எழுதி வைத்திருக்கிற பழைய நூல்களிலிருந்து நாம் அறிகிறோம். கிரேக்கர் நமது தேசத்தில் இறக்குமதி செய்த பொருள்களில் திரைச்சீலை கூறப்படவில்லை. யவன நாட்டிலிருந்து திரைச்சீலைகள் நமது தேசத்துக்கு வந்திருக்கவும் முடியாது. ஏனென்றால், அந்தக் காலத்தில் பருத்தித் துணிகளுக்குப் பெயர் பெற்றிருந்தது பாரத தேசமும் தமிழ் நாடுந்தான். துணிகளிலே சித்திரங்களை எழுதி 'சித்திரப்படாம்' உண்டாக்கியதும் நமது நாடுதான். யவன தேசம் அந்தக் காலத்தில் பருத்தித் துணிகளுக்குப் பெயர் பெறவில்லை. யவன நாட்டிலிருந்து துணிகள் ஏற்றுமதியாகவில்லை. எனவே, பருத்தித் துணிகளினால் செய்யப்படும் எழினி (திரைகள்) யவன நாட்டிலிருந்து நமது நாட்டுக்கு இறக்குமதி ஆகியிருக்க முடியாது. பருத்தித் துணிக்குப் பேர் பெற்றிருந்த பாரத தேசம், அத்தொழில் வளம்பெறாத யவன நாட்டிலிருந்து திரைச்சீலைகளை இறக்குமதி செய்தது என்றும், யவனர்களால் இறக்குமதியான திரைச்சீலைக்கு *யவனிகா* என்று பெயர் வந்தது என்றும் கூறுவது பொருத்த மற்றதும் தவறானதும் ஆகும். அது சிறிதும் பொருந்தாது.

மேலும், ஆதிகாலத்திலே கிரேக்கர் தமது நாடக அரங்க மேடைகளிலே திரைச்சீலைகளை அமைக்கும் பழக்கம் உடையவர் அல்லர் என்றும், மிகப் பிற்காலத்திலேதான் அவர்கள் நாடக மேடைகளில் திரைச்சீலைகளை அமைக்கும் வழக்கத்தைக் கற்றனர் என்றும் கூறப்படுகிறது. நாடக மேடையில் திரை அமைக்கும் பழக்கம் இல்லாத யவன நாட்டிலிருந்து திரைச்சீலை பாரத தேசத்தில் இறக்குமதியாயிற்று என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? யவனர் தமது நாடக மேடையில் திரைகளை ஆதியில் அமைத்திருந்தாலுங்கூட அங்கிருந்து திரைச்சீலை நமது நாட்டுக்கு இறக்குமதி ஆகியிருக்க முடியாது. ஏனென்றால், சித்திரம் எழுதிய எழினிகள் நமது நாட்டிலேயே இருந்தன. ஆகவே, யவனிகா என்னும் சொல் யவன என்னும் சொல்லிலிருந்து உண்டானது அன்று என்பது தெரிகிறது.

எழினி என்னும் தமிழ்ச் சொல் சமஸ்கிருதத்தில் *யவனிகா* என்றாயிற்று என்பதற்குச் சான்று காட்டுவதற்கு முன்னர் இன்னொன்றையும் இங்குக் கூறவேண்டும். எழினி என்னும் சொல், திரைச்சீலைக்குப் பெயராக வழங்கியதும் அல்லாமல், தமிழ் நாட்டிலே மனிதருக்கும் பெயராக அமைந்திருந்தது. எழினி என்னும் பெயருள்ள சிற்றரசர் பரம்பரை ஒன்று தமிழ் நாட்டில்

இருந்தது. எழினி அரசர்களைப் பற்றிச் சங்க நூல்களிலே காண்கிறோம். 'அதிகமான் எழினி' என்னும் அரசன் தகடூர்க் கோட்டை முற்றுகையின்போது போரிலே உயிர் இழந்தான். அவனை அரிசில் கிழார் என்னும் புலவர்,

வையகம் புகழ்ந்த வயங்குவினை ஒள்வாள்
பொய்யா எழினி பொருதுகளம் சேர

என்று (*புறம்* 230) பாடுகிறார்.

"வெம்போர் நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி" என்பவனை ஔவையார் கூறுகிறார் (*குறுந்தொகை* 80). "மதியோர் வெண்குடை யதியர் கோமான், நெடும்பூண் எழினி" என்பவனை அவரே பாடுகிறார் (*புறம்* 392). "சில்பரிக் குதிரைப் பல்வேல் எழினி"யைத் தாயங்கண்ணனார் என்னும் புலவர் பாடுகிறார் (*அகம்* 105). "போர்வல் யானைப் பொலம்பூண் எழினி"யை நக்கீரர் (*அகம்* 36) கூறுகிறார். பெருஞ்சித்திரனாரும் (*புறம்* 158), மாங்குடி மருதனாரும் (*புறம்* 396), மாமூலனாரும் (*அகம்* 197) எழினி என்னும் பெயருள்ள அரசனைப் பாடியுள்ளனர். எனவே, எழினி என்னும் பெயருள்ள அரச குடும்பம் ஒன்று இருந்தது என்பதும் அந்தக் குடும்பத்து அரசரைப் பல புலவர்கள் பாடியுள்ளனர் என்பதும் தெரிகின்றன.

எழினி பரம்பரையைச் சேர்ந்த அரசர்கள் பிற்காலத்திலும் இருந்தார்கள். அந்தப் பரம்பரையைச் சேர்ந்த அரசன் ஒருவன் தொண்டை மண்டலத்துப் போளூருக்கு அடுத்த திருமலை என்னும் ஊரிலே குன்றின் மேலேயுள்ள சிகாமணி நாதர் கோவிலில் இயக்கன் இயக்கியர் திருமேனியைப் புதுப்பித்தான் என்று ஒரு சாசனம் கூறுகிறது. இந்தச் சாசனம் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பகுதிச் சாசனம், இந்த அரசனை எழினி என்று கூறுகிறது. சமஸ்கிருதப் பகுதிச் சாசனம் எழினியை *யவனிகா* என்று கூறுகிறது! அதாவது, தமிழ் எழினி, சமஸ்கிருதத்தில் *யவனிகா* என்று அமையும் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகிறது!! இந்தச் சாசனத்தைக் கீழே தருகிறேன்.

"ஸ்வஸ்தி ஸ்ரீ சேர வம்சத்து அதிகமான் எழினி செய்த தர்மயக்ஷரையும் யக்ஷியாரையும் எழுந்தருளுவித்து எறிமணியும் இட்டு கடப்பேரிக்குக் காலும் கண்டு குடுத்தான்" (இது தமிழ்ப் பகுதிச் சாசனம்).

"*ஸ்ரீமத் கேரள பூப்ரிதா யவனிகா நாமனா சுதர்ம்மாத்மனா துண்டீரவ்வய மண்டலார்ஹ ஸுகிரெள யக்ஷேஸ்வரெள கல்பிதெள*" (இது சமஸ்கிருதப் பகுதிச் சாசனம் – 'Inscription at Tirumalai near Polur', *Epigraphia Indica*, Vol. VI).

இந்தச் சாசனத்திலே தமிழ்ப் பகுதியில் வருகிற எழினி என்னுஞ் சொல் சமஸ்கிருதப் பகுதியில் *யவனிகா* என்று கூறப்பட்டிருப்பது காண்க. இந்தச் சாசனத்தைப் பதிப்பித்த Dr. E. Hultzsch (ஹுல்ஷ்) அவர்கள் "திரை என்னும் பொருள் உடைய எழினி என்னும் தமிழ்ச் சொல்லின் சரியான சமஸ்கிருதச் சொல் *யவனிகா* என்பது" என்று விளக்கம் எழுதியிருக்கிறார். *Yavanika* is the Sanskrit equivalent of the Tamil *Elini*, a curtain என்று அவர் எழுதியிருக்கிறார் (*E.I.*, Vol. VI, p. 331).

எழினி என்னுஞ் சொல் *யவனிகா* என்றாயிற்று என்பதற்கு நல்லதோர் சான்றினைச் சாசனத்திலிருந்தே காட்டினேன். எனவே, இதனை இனி ஒருவரும் மறுக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். *யவன* என்னுஞ் சொல்லிலிருந்து *யவனிகா* என்னும் சொல் சமஸ்கிருதத்தில் உண்டாயிற்று என்று கூறுவது, மேற்போக்காகப் பார்ப்பவர்க்கு உண்மை போலத் தோன்றினாலும், ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் உண்மையில் எழினி என்னும் சொல்லே *யவனிகா* என்றாயிற்று என்பது பட்டப்பகல் வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது.

> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்றும்,

> எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்றும் *திருக்குறள்* கூறுவது எவ்வளவு உண்மையாக இருக்கிறது.

சமஸ்கிருதத்திலிருந்து தமிழ் மொழி பல சொற்களைக் கடனாகக் கொண்டிருக்கிறது போலவே, சமஸ்கிருத மொழியும் தமிழ் மொழியிலிருந்து பல சொற்களைக் கடன் வாங்கி இருக்கிறது. எடுத்துக்காட்டாகச் சில சொற்களைக் கூறுவோம்:

நீர், அனல், யாடு (ஆடு), கான் (கானகம்), களம், தாமரை, தண்டு, பல்லி, புன்னை, மயில், மல்லிகை, மை, மகள், மாலை, மீன் என்னும் தமிழ்ச் சொற்கள் சமஸ்கிருதத்தில் சென்று முறையே *நீர, அனல, எட, கானன, கல, தாமரஸ, தண்ட, பல்லீ, புன்னாக, மயூர, மல்லிகா, மஷி, மஹிளா, மாலா, மீனா* என்று வழங்குகின்றன. இவை போன்று இன்னும் நூற்றுக்கணக்கான சொற்களைத் தமிழிலிருந்தும் வேறு திராவிட மொழிகளிலிருந்தும் சமஸ்கிருத பாஷை கடன் வாங்கியிருக்கிறது. சமஸ்கிருத மொழி தமிழிலிருந்து கடன் வாங்கிய சொற்களில் *யவனிகா* என்பதும் ஒன்று என்றும் எழினி என்னும் சொல் *யவனிகா* என்று ஆயிற்று என்றும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டன.

முடிவுரை

தொல்காப்பிய இலக்கணத்தின் காலத்தை இதுகாறும் ஆராய்ந்தோம் *தொல்காப்பியக்* காலத்தை ஆராய்ந்தவரின் ஆராய்ச்சியையும் ஆராய்ந்தோம். உண்மை காணுவதை நோக்கமாகக் கொள்ளாமல், *தொல்காப்பிய* நூலுக்குப் பழைமை காட்டக்கூடாது என்று சிலர் முதலிலேயே முடிவு செய்து கொண்டு அந்த முடிவுக்கு ஏற்பப் பொருந்தாத காரணங்களைப் பொருத்திக்காட்டி அது பிற்காலத்து நூல் என்று எழுதியுள்ளவை களை ஆராய்ந்து அந்தக் காரணங்கள் பொருத்தமற்றப் போலிக் காரணங்கள் என்பதை எடுத்துக் காட்டினோம். மெய் போலத் தோன்றுகிற பொய்யாதாரங்களைத் தெளிவுபடுத்தினோம். அவர்கள் கூறிய சான்றுகளும் ஆதாரங்களும் உரை கல்லுக்கு நிற்காதவை, ஏற்கத் தகாதவை என்பதை விளக்கினோம்.

தொல்காப்பியத்துக்குப் பழைமை கற்பிக்கவேண்டுமென்பது எமது கருத்து அன்று என்பதை வாசகர் உணரவேண்டும். *தொல்காப்பியத்தின்* சரியான காலத்தை – அது பழைய கால மானாலும் பிற்காலமானாலும் – ஆதாரத்தோடு அறியவேண்டும் என்பதே எம்முடைய உண்மையான விருப்பம். அந்த முடிவுடன் எமக்குத் தெரிந்த ஆதாரங்களைக் காட்டித் *தொல்காப்பியத்தின்* காலத்தை வரையறுத்துள்ளோம்.

இந்த ஆராய்ச்சியில், ஏனைய *தொல்காப்பியக்* கால ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சி அதிக இடம்பெற்று இருக்கிறது. 'வேந்தன் - வருணன்', 'ஐயர் யாத்தனர் கரணம்', பாண்டியரின் தமிழ்ச் சங்கமும் வச்சிரநந்தியின் திரமிள சங்கமும்', 'ஓரை', 'அர்த்தசாத்திரம்', 'நாட்டிய சாஸ்திரம்' முதலிய தலைப்புகளில் சில ஆராய்ச்சிக்காரர்களின் ஆராய்ச்சிகள் ஆராய்ந்து விளக்கப்பட்டன.

கடைசியாக, தொடக்கத்தில் நாம் ஆராய்ந்த கட்டுரையில் கூறியபடி தொல்காப்பியர் காலம் கி.மு. 8ஆம் நூற்றாண்டு அல்லது கி.மு. 9ஆம் நூற்றாண்டாக இருக்கவேண்டும் என்று எமது முடிவைக் கூறியுள்ளோம். இதுவே எமது உறுதியான முடிவு. இதை ஏற்கவோ தள்ளவோ வாசகர்களுக்கு உரிமையுண்டு. ஆனால், எந்த முடிவை ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும் அதற்குச் சரியான தெளிவான சான்றுகளும் காரணங்களும் இருக்கவேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

II. சங்க நூல்களில் தமிழர் வாழ்க்கை

1. *தொல்காப்பியம்* : ஐயர் யாத்தனர் கரணம்

ஆதிகாலத்தில் ஆணும் பெண்ணும் தாமாகவே ஒருவரை யொருவர் விரும்பி ஒன்று சேர்ந்து வாழ்ந்து குடும்பத்தை நடத்தினார்கள். அக்காலத்தில் திருமணச் சடங்கு செய்யும் முறை இல்லை. வயது வந்த ஆணும் பெண்ணும் தமக்குள்ளே மனம் ஒன்றுபட்டு வாழ்க்கையை நடத்தினார்கள். இந்த வழக்கம் உலகத்திலே எல்லா நாட்டிலும் எல்லா மக்களிடையிலும் நிகழ்ந்த முதல் நிகழ்ச்சி. பிறகு இவ்வித வாழ்க்கையிலே பொய்யும் வழுவும் ஏற்பட்டுச் சமூக வாழ்க்கையில் துன்பங்கள் உண்டாயின. அத்துன்பங்கள் உண்டாகாதபடி சமூகத் தலைவர்கள் அக்காலத்தில் கரணத்தைக் சுற்பித்தார்கள். அதாவது மணமகனும் மணமகளும் பலர் அறியத் திருமணஞ் செய்துகொண்டு வாழ வேண்டும் என்று திருமணச் சடங்கை அமைத்தார்கள். இது ஆதிகாலத்தில் உலகத்திலே எல்லா நாட்டிலும் ஏற்பட்ட நிகழ்ச்சி. இவ்வாறே தமிழ் நாட்டிலும் ஆதிகாலத்தில் கரணம் (திருமணம்) செய்யும் முறை ஏற்பட்டது. மிகப் பழைய காலத்து இலக்கண நூலாகிய *தொல்காப்பியத்திலும்* இச்செய்தி கூறப்படுகிறது.

தமிழ் நாட்டிலேயும் பழங்காலத்தில் ஆணும் பெண்ணும் தமக்குள் ஒருவரையொருவர் காதலித்துக் கணவன் மனைவியாக இருந்து இல்லற வாழ்க்கை நடத்தினார்கள் என்றும், இவ்வாறு நிகழ்ந்தபோது நெடுங்காலத்துக்குப் பிறகு மக்களில் சிலரிடையே பொய்யும் வழுவும் உண்டாகிச் சமூக வாழ்க்கையில் ஒழுங்கீனமும் துன்பமும் குழப்பமும் ஏற்பட்டன என்றும், அவ்வொழுங் கீனத்தைத் தடுத்துச் சமூக வாழ்க்கையில் அமைதியையும் ஒழுங்கையும் ஏற்படுத்துவதற்காக ஐயர், கணவன் மனைவியாக வாழவிரும்பும் ஆணும் பெண்ணும் பலர் அறியத் திருமணம் செய்யவேண்டும் என்று கரணத்தை (திருமணச் சடங்கை) அமைத்தார்கள் என்றும் *தொல்காப்பியம்* கூறுகிறது.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப

என்பது *தொல்காப்பியம்*, பொருளதிகாரம், கற்பியல் சூத்திரம்.

இந்தச் சூத்திரத்திலே "ஐயர், யாத்தனர் கரணம் என்ப" என்று கூறப்படுகிறது. இதில் கூறப்படும் ஐயர் என்பவர் யார் என்பதை இங்கு ஆராய்வோம். ஐயர் என்றால் ரிஷிகள், ஆரியப் பார்ப்பனர், பிராமணர் என்று இக்காலத்தில் சிலர் உரை எழுதியுள்ளனர். அதாவது, தமிழருக்குக் கரணம் (திருமணம்) செய்யக் கற்பித்தவர் ஆரியப் பார்ப்பனர் என்றும், கற்பு ஒழுக்கத்தைத் தமிழுக்கு ஆரியப் பார்ப்பனர் கற்பித்தனர் என்றும் உரை எழுதியுள்ளனர். இவ்வாறு உரை எழுதினவர்கள் எல்லோரும் பார்ப்பனர் என்பது அறியத்தக்கது.

பண்டைக் காலத்திலே ஆரியருக்கு முன்பே, நாகரிகமாக வாழ்ந்த தமிழ் மக்கள் திருமணம் செய்துகொண்டு வாழத் தெரியாமலே இருந்தார்களா? அவர்களுக்கு ஆரியப் பார்ப்பனர் வந்து திருமணம் செய்யும் முறையைக் கற்பித்தார்களா? பார்ப்பனர் சிலர் இவ்வாறு உரை எழுதியிருப்பது ஏற்றுக்கொள்ளத் தக்க உண்மையா என்பதை ஆராய்ந்தறிய வேண்டும்.

இந்தத் *தொல்காப்பியச்* சூத்திரத்துக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் என்னும் பிராமணர் இவ்வாறு உரை எழுதுகிறார்: "ஆதி ஊழி கழிந்த முறையே அக்காலத்து அந்தந் தொடங்கி இரண்டாம் ஊழி முதலாகப் பொய்யும் வழுவுஞ் சிறந்து தோன்றிய பிற்காலத்தே இருடிகள் மேலோர் கரணமும் கீழோர் கரணமும் வேறுபடக் காட்டினார் என்று கூறுவர் என்றவாறு. ஈண்டு 'என்ப' என்றது முதலாசிரியரையன்று, வடநூலோரைக் கருதியது." பிற்காலத்தில் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்று கருதப்படுகிற நச்சினார்க்கினியர் ஆகிய பிராமணர், இவ்வாறு 'ஐயர்' என்பதற்கு இருடிகள் என்று பொருள் எழுதினார். அதாவது, ஆரிய முனிவர் என்று கூறினார்.

இனி, மு. இராகவையங்கார் அவர்கள் ஐயர் என்பதற்கு ஆரியர், அதாவது ஆரியப் பிராமணர் என்று பொருள் எழுதியுள்ளார்.

மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்
கீழோர்க் காகிய காலமும் உண்டே

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப.

என்னும் *தொல்காப்பியச்* சூத்திரங்களுக்கு இவர் இவ்வாறு விளக்கம் கூறுகிறார்:

"ஆரியராகிய அந்தணர் அரசர் வணிகர் மூவர்க்கும் இருடிகள் ஒருகாலத்தே விதித்துப் போந்த சடங்கொடு கூடிய கற்பு முறையைத் தம் புராதன முறையொன்றில் நின்றொழுகிவந்த தமிழ் நாட்டார்க்கும் ஐயர் விதிக்கும்படி நேர்ந்த காலமு முண்டென்றும், அங்ஙனம் விதிக்க நேர்ந்ததன் காரணம் – பொய்,

வழு முதலிய குற்றங்களின்றி நடைபெற்று வந்த புராதன ஒழுக்கமாகிய தமிழர் மணத்தில், பிற்காலத்தே அவை புகுந்து அதன் பழஞ்சிறப்பைக் கெடுத்தமையால் அந்த மணம் ஒழுங்காக நிகழ்தற்பொருட்டேயாம் என்றும் ஆசிரியர் கருதினாராதல் மேற் சூத்திரங்களால் உய்த்துணரப்படும்... முன்னியல்களிற் களவுக் கூட்டத்துக்குரியர் என்று கூறப்பட்ட தமிழர்க்கு ஆரியரது கரண விதியைக் கூறியதன் காரணமென்னை? என்ற ஆசங்கையை நீங்குதற்கே இச்சூத்திரங்கள் கற்பியலின் தொடக்கத்தே ஆசிரியராற் கூறப்பட்டன என்று உணர்க" (*தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி*).

இனி, பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி எழுதுவதைப் பார்ப்போம். "அது (கற்பு முறை) ஆரியர்களால் ஆரியர் அல்லாதவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது" என்று எழுதுகிறார் ("It (Karpu System) was introduced by Aryas to those other than they" – *An Enquiry into the Relationship of Sanskrit and Tamil*).

மேலும், இவர் தாம் எழுதிய *தொல்காப்பிய* ஆங்கில உரையில் இவ்வாறு எழுதுகிறார்:

> பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப

காதலர் தவறாக நடக்கத் தொடங்கிய பிறகும் பெண்கள் தகுதியற்றவர் என்று கருதப்பட்ட பிறகும் ஆரியரால் கரணம் ஏற்பட்டது என்பர்."

"குறிப்பு: 1. ஐயர் என்னும் சொல் ஆரியர் என்னும் சொல்லின் தற்பவமாகும். ஆரியர் என்னுஞ் சொல் பொதுவாகப் பிராமணர், க்ஷத்திரியர், வைசியரைக் குறிக்குமானாலும் இச்சொல் பிராமணரையே குறிக்கும். ஏனென்றால், வட இந்தியாவிலிருந்து பிராமணர் மட்டுந்தான் தெற்கே வந்தனர் என்று கூறப்படு கின்றனர்."

"They say that Karanam was introduced by Aryas after the lovers began to prove false and ladies were considered unworthy."

"Note: Aiyer is the tadbhava of Arya. Though Arya generally refers to Brahman, Kshatriya and Vaisiya, yet it may refer here only to Brahmin since Brahman alone is said to have gone south from north India" (*Tolkappiyam : Porul Athikaram*, Kuppusami Sastri Research Institute, Mylopore, Madras, 1949, p. 92).

தமிழ் நாட்டிலே இருந்துவரும் தெலுங்கராகிய சரித்திரப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி (தமக்குத் தமிழ் தெரியாது என்று சொல்லிக்கொண்டே தமிழ் இலக்கிய காலங்களைப் பற்றித் தவறாக எழுதிக்கொண்டிருப்பவர்) இந்த "ஐயர் யாத்தனர் கரணம்" என்பதற்குத் தமது கருத்தையும் எழுதியுள்ளார். "தமிழ் நாட்டிலே திருமணத்தை மதச்சடங்காக நிறுவினவர் ஆரியர்

என்று தொல்காப்பியம் திட்டவட்டமாகச் சொல்லுகிறது" என்று இவர் உண்மையைக் கண்டவர் போல எழுதிவிட்டார். மேலும், எட்டு வகையான திருமணம் ஆரியருடையதென்றும் அதனைத் தொல்காப்பியம் கூறுகிறதென்றும் எழுதுகிறார் (*A Hittory of South India*, Second Edition 1958, Oxford University Press).

இவ்வாறு நச்சினார்க்கினியரும் மு. இராகவையங்காரும் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியும் நீலகண்ட சாஸ்திரியும் ஆகிய பார்ப்பனர்கள் ஐயர் என்னும் சொல்லுக்கு ஆரியப் பார்ப்பனர் என்று முன்பின் ஆராயாமலும் அச்சமில்லாமலும் எழுதி விட்டார்கள்.

ஐயர் என்னும் சொல்லுக்கு ஆரியப் பார்ப்பனர் என்று பொருள் உண்டா?

ஐயர் என்னும் சொல் பார்ப்பனருக்குச் சாதிப் பெயராக எக்காலத்தில் ஏற்பட்டது?

சங்க காலத்தில் இச்சொல் எந்தப் பொருளில் வழங்கப் பட்டது?

இந்தப் பார்ப்பனர்கள் இந்தச் சூத்திரத்திற்கு எழுதிய பொருள் செம்பொருள்தானா? இது ஏற்கத் தகுந்ததுதானா? இவற்றை இங்கு ஆராய்ந்து உண்மை காண்போம்.

ஐயர் என்னும் சொல் தமிழ் நாட்டில் பிராமணருக்குச் சாதிப் பெயரைச் சுட்டுஞ் சொல்லாக இப்போது வழங்கப்படுகிறது. இச்சொல் பிராமணருக்குச் சார்த்தி வழங்குவது மிகச் சமீப காலத்து வழக்கம். விஜயநகர அரசர் காலந்தொடங்கி (கி.பி. 15ஆம் நூற்றாண்டு தொடங்கி) இச்சொல் இவர்களுக்கு வழங்கப்படு கிறது. அதற்கு முன்பு ஐயர் என்னும் சொல் பிராமணரைச் சார்த்தி வழங்கப்படவில்லை. பழைய கல்வெட்டெழுத்துச் சாசனங்களிலும் பிராமணருக்கு ஐயர் என்னும் பெயர் கூறப்படவில்லை. சங்க காலத்திலும் ஐயர் என்னும் சொல் பிராமணருக்கு வழங்கவில்லை.

ஐ. ஐயன், ஐயர் என்னும் சொற்கள் சங்க இலக்கியங்களில் அண்ணன், தகப்பன், பெரியவன் என்னும் பொருளில் பொதுவாகவும், அரசன், அரசர் குலத்தைச் சார்ந்தவன் என்னும் பொருளில் சிறப்பாகவும் வழங்கிவந்துள்ளன. ஐய, அய என்னும் சொல் தமிழ், சிங்களம், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகளிலும் மாகதி (பாலி), அர்த்தமாகதி முதலிய பிராகிருத (பாகத) மொழிகளிலும் வழங்கப்பட்ட பழைய சொல். இச்சொல் பிற்காலத்தில், சமஸ்கிருத மொழியில் எடுத்துக்கொள்ளப்பட்டு ஆர்ய என்று வழங்கப்பட்டது. சமஸ்கிருதத்திலும் ஆரிய (ஐய) என்னும் சொல், அரசர். உயர்நிலையில் உள்ளவர் முதலியவர் களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

ஐயர், ஐயங்கார் முதலிய சொற்கள் மிகமிகப் பிற்காலத்திலே தான் பிராமண சாதியைக் குறிக்கும் சொல்லாகத் தமிழ் நாட்டில் வழங்கப்பட்டன.

ஐயர் என்னும் சொல்லுக்கு இக்காலத்துப் பொருள் வேறு, முற்காலத்துப் பொருள் வேறு. பழங்காலத்தில் வழங்கிய ஐயர் என்னும் சொல்லுக்கு இக்காலத்துப் பொருளையும், பிற்காலத்தில் வழங்கும் ஐயர் என்னும் சொல்லுக்கு முற்காலத்துப் பொருளையும் மாற்றி வழங்குவது அறியாமையாகும். தவறும் ஆகும். அவ்வாறு செய்வது மொழியின் வரலாறு அறியாதவரின் பிழைபட்ட செயலாகும். மிகப் பழைய நூலாகிய தொல் காப்பியத்தில் கூறப்படுகிற ஐயர் என்னும் சொல்லுக்கு, மிகப் பிற்காலத்துப் பொருளாகிய பிராமணர் என்னும் பொருளைப் பொருத்திப் பொருள் கூறுவது, வரலாறு அறியாதவரின் தவறான செயலாகும்.

ஐயர் என்னும் சொல் சிறப்பாக அரசர் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர் எனக் கூறினேன். உதாரணமாக 'ஐயன் ஆரிதன்' என்பதாகும். கடைச் சங்க காலத்துக்குப் பிற்காலத்திலே, *புறப்பொருள் வெண்பா மாலை* என்னும் நூலை எழுதியவர் ஐயன் ஆரிதனார். இவர் சேர அரசர் மரபைச் சேர்ந்தவர். அரச மரபைச் சேர்ந்தவர் என்பதைக் குறிப்பதற்காகவே 'ஐயன்' என்னும் அடைமொழியுடன் இவர் கூறப்படுகிறார்.

ஓங்கிய சிறப்பி னுலகமுழு தாண்ட
வாங்குவிற் றடக்கை வானவர் மருமான்
ஐய னாரிதன் அகலிடத் தவர்க்கு
மையறு புறப்பொருள் வழாலின்று விளங்க
வெண்பா மாலை யெனப்பெயர் நிறீஇப்
பண்புற மொழிந்தனன் பான்மையிற் றெரிந்தே

என்னும் சிறப்புப் பாயிரத்தினால் இதனை அறியலாம்.

ஸ்தாணுரவி என்னும் சேர அரசன் வழங்கிய கோட்டயம் செப்பேட்டுச் சாசனத்திலே, அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் 'ஐயன் அடிகள்' என்று கூறப்படுகின்றனர் (*Travancore Archaeological Series*, Vol. II, p. 61).

ஐயடிகள் காடவர்கோன் என்பவர் சைவ நாயன்மார்களில் ஒருவர். காடவர்கோன் என்பது இவர் பல்லவ அரசர் குலத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கிறது. அடிகள் என்பது உயர்வுச் சிறப்பைக் காட்டுகிறது. ஐ என்பது ஐயன் என்பதைக் குறிக்கிறது. ஆகவே, ஐயடிகள் காடவர்கோன், அரச பரம்பரையைச் சேர்ந்தவர் என்பது தெரிகின்றது. இதனால் அரச குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஐயன் என்னும் சிறப்புப் பெயர் வழங்கியது அறியலாம்.

தமிழ் நாட்டுக்கு அருகிலிருக்கும் சிங்களத் தீவாகிய இலங்கைத் தீவிலேயும் பண்டைக் காலத்தில் அரசாண்ட அரச

குலத்தவர் அய (ஐயன்) என்று பெயர் வழங்கப்பட்டனர். இலங்கையில் கலனிப் பகுதியை அரசாண்ட மன்னனின் தம்பி உத்தியன் என்பவன் ஐயன் என்று கூறப்படுகிறான் (மகாவம்சம் XXII, V. 15; *Epigraphia Zeylonica*, Vol. III, p. 82).

இலங்கையிலே ராஜகல என்றும் ராஸஹெல என்றும் கூறப்படுகிற இடத்திலே மலைக்குகைகளிலே கி.மு. 2ஆம் நூற்றாண்டிலே பௌத்தப் பிக்குகள் இருந்தார்கள். அந்தப் பிக்குகளுக்குச் சத்தாதிஸ்ஸன் என்னும் அரசனுடைய பிள்ளைகள் இருவர் தானம் வழங்கினார்கள். அந்தச் செய்தியை அவ்விடத்திலுள்ள சாசன எழுத்துக் கூறுகிறது. இந்தச் சாசனத்திலே, தானம் அளித்த அரச குமாரர்கள் 'மஹா அய' என்றும் 'நிஸ்ஸ அய' என்றும் கூறப்படுகின்றனர். மஹா அய என்பது (பெரிய ஐயன்) மூத்த அரச குமாரன் என்றும் பொருள் உள்ளது. (இந்த மஹா அய என்பவன் முடி சூடிய பிறகு லாஞ்ச திஸ்ஸன் என்னும் பெயருடன் கி.மு. 119 முதல் 110 வரையில் அரசாண்டான்.) திஸ்ஸ அய என்பது திஸ்ஸ ஐயன் (திஸ்ஸன் என்னும் பெயருள்ள அரச குமாரன்) என்னும் பொருள் உள்ளது.

இலங்கையரசர் குடும்பத்தைச் சேர்ந்தவர் அய (ஐயன்) என்று சிறப்புப் பெயர் வழங்கப்பட்டதற்கு இன்னும் பல சான்றுகள் சாசனங்களிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் காட்டலாம். விரிவஞ்சி நிறுத்துகிறேன்.

இதனால், தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் ஐயன், அய என்று கூறப்பட்டனர் என்பதை அறிகிறோம். எனவே, *தொல்காப்பியச்* சூத்திரத்தில் கூறப்பட்ட ஐயர் என்னும் சொல்லுக்குப் பொருள் அரசர் என்பது தெளிவாக விளங்குகிறது. சமுதாயத்திலே ஒரு புதிய வழக்கத்தை ஏற்படுத்துவது அரசர்களாலும், அவர் ஆணை பெற்ற அவர் மரபினராலும்தான் இயலும். எனவே, 'ஐயர் யாத்தனர் கரணம்' என்பதற்கு அரசர்கள் திருமணச் சடங்கை ஏற்படுத்தினார்கள் என்பது பொருள். இதுவே சரியான நேரான செம்பொருளாகும். இளம்பூரண அடிகள் என்னும் பழைய உரையாசிரியரும் இக்கருத்தையே கூறுகிறார் (இவர் பிராமணர் அல்லர்). அவர் கூறும் உரை வருமாறு:

> "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப

என்றது கரணமாகியவாறு உணர்த்துதல் நுதலிற்று

பொய் கூறலும் வழூஉப்பட வொழுகலும் தோன்றிய பின்னர் முனைவர் கரணத்தைக் கட்டினார் என்று சொல்வர் என்றவாறு.

இரண்டுந் தோன்றுவது இரண்டாம் ஊழியின் கண்ணாதலின் முதலூழியிற் கரணமின்றியே இல் வாழ்க்கை நடந்ததென்பதூஉம் இவை தோன்றிய பின்னர்க் கரணந் தோன்றிய தென்பதூஉம்

கூறியவாராயிற்று. பொய்யாவது செய்ததனை மறைத்தல். வழுவாவது செய்ததன்கண் முடிய நில்லாது தப்பி ஒழுகுதல். கரணத்தொடு முடிந்த காலையின் அவையிரண்டும் நிகழாவா மாதலாற் கரணம் வேண்டுவதாயிற்று."

இதில் இளம்பூரண அடிகள் ஐயர் என்பதற்கு முனைவர் என்று பொருள் கூறுவது காண்க. முனைவர் என்பது முதன்மையானவர், மக்கள் சமூகத்தின் தலைவர் என்று பொருள் உள்ள சொல்லாகும்.

எனவே, 'ஐயர் யாத்தனர் கரணம்' என்பதற்கு, அரசர்கள் கரணத்தை (திருமணச் சடங்கை) ஏற்படுத்தினார்கள் என்பது பொருள். எனவே, ஆரியப் பார்ப்பனர் திருமண முறையை அமைத்தார்கள் என்று இக்காலத்துப் பார்ப்பனர்கள் எழுதியுள்ள உரை, போலியுரை என்று விடுக.

தமிழ் மொழி குறைந்தது மூவாயிரம் ஆண்டு பழமையுடைய மிகப் பழைய மொழி. ஆகவே, இம்மொழிச் சொற்கள் பல, வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு பொருளில் வழங்கப்பட்டன. அந்த மரபை அறிந்து பொருள் கொள்ள வேண்டுமேயல்லாமல் மரபு அறியாமல் கண்டதை எழுதிக் குழப்புவது அறிவுடைமையாகாது, ஆராய்ச்சி ஆகாது.

தொல்காப்பியத்தில் கூறப்படுகிற ஐயர் என்னும் பழைய சொல்லுக்குப் பார்ப்பனர், ரிஷிகள் என்னும் பிற்காலத்துப் பொருளைப் பொருத்திக் கூறிப் பார்ப்பனர் தமிழ் நாட்டில் திருமண முறையை ஏற்படுத்தினார்கள் என்று சரித்திரத்துக்கு மாறுபட்ட கருத்தைச் சொல்லி அதனால் *தொல்காப்பியம்* ஆரியர் தமிழகத்துக்கு வந்த பிறகு எழுதப்பட்ட நூல் என்று இக்காலத்துப் பார்ப்பனர் சிலர் எழுதியிருப்பது பிழைபட்ட பொய்க்கூற்று என்பது இதனால் தெளிவுறுத்தப்பட்டது.

ஐயர் என்பது அரசர் என்னும் பொருளுள்ள பழைய சொல் என்பதும், தமிழ்ச் சமூகத்தில் பொய்யும் வழுவும் தோன்றியபோது, தமிழ்நாட்டு ஐயர் (அரசர்), கரண (திருமண) முறையை ஏற்படுத்தினார்கள் என்பதும் தக்க சான்றுகளுடன் நிறுவப்பட்டன.

2. வேந்தனும் வருணனும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்

என்று *தொல்காப்பியம்* (பொருள். அகத்திணையியல், நூற்பா 5) கூறுகிறது. இதில் கூறப்பட்ட வேந்தன், வருணன் என்னும் தெய்வங்கள் எவை? அத்தெய்வங்களின் வரலாறு என்ன? சிலர் கருதுவது போல அத்தெய்வங்கள் ஆரியத் தெய்வங்கள்தானா என்பதை ஆராய்வோம்.

தீம்புனல் உலகமாகிய மருத நிலத்தின் தெய்வம் வேந்தன் என்றும், பெருமணல் உலகமாகிய நெய்தல் நிலத்தின் தெய்வம் வருணன் என்றும் தொல்காப்பியம் கூறுகிறது. எனவே, தொல்காப்பியர் காலத்தில் இந்த இரண்டு தெய்வங்களும் தமிழர்களால் வணங்கப்பட்டனர் என்பது தெரிகின்றது. பிற்காலத்திலே இந்த இரண்டு தெய்வங்களும் மறக்கப்பட்டு மறைந்து போயின.

வேந்தன் – இந்திரன்

தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள், மிகமிகப் பிற்காலத்தில் இருந்தவர்கள். இவ்வுரையாசிரியர்களில் இளம்பூரணர் முற்பட்டவர். நச்சினார்க்கினியர் முதலிய ஏனையோர் பின்னும் பிற்காலத்தவர். பிற்காலத்து உரையாசிரியர் களாகிய இவர்கள் வேந்தன் என்பதற்கு இந்திரன் என்று பொருள் எழுதியிருக்கிறார்கள். எனவே, இவர்கள் தொல்காப்பிய வேந்தனை, இந்திரன் என்று கூறுகின்றனர். அதாவது, திராவிடருடைய வேந்தன் என்னும் தெய்வம், ஆரியருடைய இந்திரன் என்று கூறப்படுகிறான். திராவிட – ஆரியக் கலாசாரக் கலப்பு ஏற்பட்ட பிற்காலத்தில் ஆரிய இந்திரன், திராவிட வேந்தன் என்னும் தெய்வத்துடன் இணைக்கப்பட்டான். இது, தொல்காப்பியர் காலத்துக்கு மிகமிகப் பிற்காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சி. ஆகையினால்தான், மிகமிகப் பிற்காலத்தவரான உரையாசிரியர்கள் வேந்தன் என்பதற்கு இந்திரன் என்று பொருள் கூறினார்கள்.

திராவிட – ஆரியக் கலாசாரக் கலப்பு கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் (அசோகச் சக்கரவர்த்தி காலத்தில்) தொடங்கிற்று என்று கருதலாம். ஆரியக் கலாசாரக் கலப்பு ஏற்படாத மிகப் பழைய காலத்தில், திராவிடராகிய தமிழர் வணங்கிய மருதநிலக் கடவுளாகிய வேந்தன் என்னும் தெய்வம், பல நூற்றாண்டு களுக்குப் பிறகு ஏற்பட்ட திராவிட – ஆரியக் கலாசாரக் கலப்பின் காரணமாக ஆரியரின் இந்திரனோடு இணைக்கப்பட்டு, இந்திரன் என்னும் பெயரினால் வழங்கப்பட்டது. பிறகு, பையப்பைய பழைய வேந்தன் என்னுந் தெய்வம் மறக்கப்பட்டு அந்த இடத்தில் புதிய இந்திரன் வழிபடப்பட்டான். சங்க காலத்துக்குப் பிறகு, சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர், இந்திரனும் மறக்கப்பட்டு மறைந்து போனான்.

வேந்தன் என்னுஞ் சொல், வேந்து, வேந்தமை என்னும் சொல்லடியாகத் தோன்றி அரசர்களின் தெய்வம் என்னும் பொருளில் வழிபடப்பட்டது என்று கருதலாம். ஆரிய சம்பந்தப்பட்ட இத்தெய்வம் அரசர்களின் தெய்வமாக இருந்தது போலும். தீம்புனல் உலகமாகிய மருத நிலத்திலே, அதாவது

ஆற்றங்கரைகளிலும் ஏரிக்கரைகளிலும் மக்களுடைய நாகரிகம் தோன்றி வளர்ந்தது என்று சரித்திரங் கூறுகிறது. ஏனென்றால், ஆற்றங்கரையும் ஏரிக்கரையுமாகிய நீர் வளமுள்ள மருத நிலத்திலேதான் உணவுப் பொருள்கள் பயிராயின. உணவு முட்டுப்பாடின்றிக் கிடைத்த இவ்விடங்களிலே மக்களின் நாகரிகம் தோன்றி வளர்ந்ததைச் சரித்திரக்காரர்கள் எல்லோருங் கூறுகிறார்கள். இது உலகத்திலே எல்லா நாடுகளிலும் நிகழ்ந்த நிகழ்ச்சி. இந்த முறைப்படித்தான் தமிழ் நாட்டிலும் மருத நிலங்களில் உணவுப் பொருள்கள் அதிகமாக விளைந்தன.

உணவு உற்பத்தி இருந்தாலும் அமைதியும் ஒழுங்கும் மக்களிடத்தில் நிலைபெற்றால்தான் மனித சமூகம் நாகரிகமாக வாழ முடியும். மக்கள் சமூகத்திலே அமைதியையும் ஒழுங்கையும் உண்டாக்கினவர், ஆதி காலத்தில் பெரும்பாலும் அரசர்தான். ஆகவே, தமிழ் நாட்டு அரசர்கள் வேந்தன்மையை (ஆட்சி முறையை) நடத்தினார்கள். வேந்தன்மைக்குத் தெய்வம் வேந்தன். இந்த வேந்தனாகிய தெய்வத்தைத்தான் பழந்தமிழகத்தின் மருத நில மக்கள் தெய்வமாக வணங்கினார்கள். அதனால்தான், தொல்காப்பியர் மக்களிடத்தில் இருந்த இந்தத் தெய்வ வழிபாட்டைத் தம்முடைய *தொல்காப்பியத்தில்* கூறினார்.

தொல்காப்பியர் காலத்துக்கு மிகப் பிற்பட்ட காலத்தில், பல நூற்றாண்டுக்குப் பிறகு, திராவிட – ஆரியக் கலாசாரக் கலப்பு (இணைப்பு) ஏற்பட்டது. இந்தக் கலாசாரக் கலப்பு முக்கியமாகத் தெய்வ வழிபாட்டிலே ஏற்பட்டது. திராவிடத் தெய்வ வழிபாட்டை ஆரியரும் ஆரியத் தெய்வ வழிபாட்டைத் திராவிடரும் பையப்பைய ஏற்றுக்கொண்டனர். திராவிடருடைய தெய்வங்களாகிய சிவன், மாயோன் முதலிய தெய்வங்களுடன் ஆரியருடைய உருத்திரனும் விஷ்ணுவும் இணைக்கப்பட்டது போல, வேந்தன் என்னும் திராவிட தெய்வத்துடன் இந்திரன் என்னும் ஆரியத் தெய்வம் இணைக்கப்பட்டது. இவ்விதத் திராவிட – ஆரியக் கலாசாரக் கலப்பு ஏறத்தாழ கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் சந்திரகுப்த மௌரியனும் அவன் பேரனான அசோகச் சக்கரவர்த்தியும் அரசாண்ட காலத்தில் தொடங்கி யிருக்கக்கூடும். இவ்வாறு வேந்தன் என்னும் தெய்வத்துடன் இந்திரன் என்னும் தெய்வம் இணைக்கப்பட்டு வழிபடப்பட்டது. பின்னர் சில நூற்றாண்டுக்குப் பிறகு இரு தெய்வங்களும் மறக்கப்பட்டு மறைந்து போயின.

வேந்தன் தெய்வம் இந்திரனாக்கப்பட்டது மூன்று ஆரிய மதத்தினரின் தொடர்பினால் என்பது தெரிகிறது. பௌத்தர், ஜைனர், வைதீகர் ஆகிய மூன்று ஆரிய மதத்தாரின் தொடர் பினால் தமிழரின் வேந்தன், இந்திரனாக்கப்பட்டான். பௌத்த, ஜைன மதங்களின் சிறு தெய்வங்களில் இந்திரனுக்கு

முதன்மையான இடம் உண்டு. அது போலவே வேதத்தை முதன்மையாகக் கொண்ட வைதிக மதத்தாருக்கும் இந்திர வழிபாடு உண்டு. ஆனால், வைதிக மதத்தார் இந்திரனை யாகஞ் செய்து வழிபட்டனர். பௌத்த ஜைன மதத்தார் தங்களுடைய இந்திரனை யாகத்தினால் வழிபடவில்லை. மூன்று ஆரிய மதத்தாருக்கும் உடன்பாடான இந்திரன், தமிழரின் வேந்தன் என்னும் தெய்வத்துடன் இணைக்கப்பட்டுத் தமிழரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால், தமிழர் ஏற்றுக்கொண்டு வழிபட்ட இந்திரன் பௌத்த இந்திரனாகத் தெரிகிறான். கடைச்சங்க காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் ஆண்டுதோறும் இருபத் தெட்டு நாட்கள் நடைபெற்ற இந்திர விழாவிலே, இந்திரன் யாகஞ் செய்து பூசிக்கப்படவில்லை. திருவிழாச் செய்து பூசிக்கப்பட்டான். அந்த இந்திர விழாவில் பௌத்தருடைய ஆதிக்கம் அதிகமாக இருந்தது. இந்திர விழாவை, ஒரு ஆண்டு சோழ அரசன் நிறுத்தினபடியினாலே, பௌத்தத் தெய்வமாகிய மணிமேகலா தெய்வம் சினம்கொண்டு அந்நகரத்தை அழித்தது என்று *மணிமேகலை* என்னும் பௌத்த நூல் கூறுகிறது. எனவே, தமிழ் நாட்டில் தமிழர் பிற்காலத்தில் வழிபட்ட இந்திரன் வைதீக மதத்து ஆரிய இந்திரன் அல்லன் என்பது தெரிகிறது.

பௌத்த மதத்தில் இந்திரனுக்கு முக்கிய இடம் உண்டு. இந்திரன் பௌத்த மதத்தையும் பௌத்த தருமத்தையும் உலகத்தில் நிலைநிறுத்துகிறான் என்பது பௌத்தக் கொள்கை. மணிமேகலை முதலிய சிறு தெய்வங்களை உலகத்திலே ஒவ்வொரு இடத்தில் அமர்த்திப் பௌத்த மதத்தை அவன் காத்து வருகிறான் என்று பௌத்த மத நூல்கள் கூறுகின்றன. பௌத்தம், ஜைனம், வைதீகம் என்னும் மூன்று ஆரிய மதங்களுக்கும் உடன்பாடாகிய இந்திரன், பிற்காலத்தில் தமிழ் நாட்டில் வேந்தன் என்னும் தெய்வத்துடன் இணைக்கப்பட்டு வழிபடப்பட்டான் என்பதும், ஆனால் அவன் பௌத்த மத இந்திரனாகக் கருதப்பட்டான் என்பதும் தெரிகின்றன. பிற்காலத்தில் இந்திரனும் வேந்தனும் ஒரே தெய்வமாகக் கற்பிக்கப்பட்ட போதிலும், ஆரியக் கலப்பு ஏற்படுவதற்கு முன்னர் தமிழர் வணங்கிய மருத நிலக் கடவுள் வேந்தன் என்று பெயர் பெற்றிருந்தது என்பதும் *தொல்காப்பியத்திலிருந்து* தெரிகிறது.

திராவிட வருணனும் ஆரிய வருணனும்

இனி. வருணனைப் பற்றி யாராய்வோம். வருணன், பெரு மணல் உலகமாகிய நெய்தல் நில மக்கள் வணங்கிய தெய்வம் என்று *தொல்காப்பியம்* கூறுகிறது. *தொல்காப்பியம்* கூறுகிற வருணன் இக்காலத்தில் பலரும் தவறாகக் கருதுவது போல, வைதீக ஆரியர் வழிபட்ட வருணன் அல்லன். *தொல்காப்பியம்*

கூறுகிற வருணனை வைதீக மதத்தாரின் வேதத்தில் கூறப்படுகிற வருணன் என்று கருதுவது பெரும் பிழையாகும். தமிழர் வணங்கிய வருணன் ஆரியக் கடவுள் அல்லன். ஆரிய வேதத்தில் கூறப்படுகிற வருணன். திராவிடக் கடவுளாகிய வருணனே. ஆய்த்தோய்ந்து பாராமல் மேற்போக்காகப் பார்க்கிறவர்களுக்கு வருணன் ஆரியத் தெய்வம் என்று தோன்றினாலும் ஆதிகாலத்தில் அது ஆரியத் தெய்வம் அன்று. ஆரியர் அயல் நாட்டிலிருந்து இந்தியா தேசமாகிய பாரத தேசத்தில் புகுந்தபோது வட இந்தியாவில் வாழ்ந்திருந்த திராவிடருடன் கலக்க வேண்டியவ ரானார்கள். அக்காலத்து வடநாட்டுத் திராவிடருக்கும் புதிதாக வந்த வேத கால ஆரியருக்கும் அந்தத் தொடக்கக் காலத்திலே கலாசாரக் கலப்பு ஏற்பட்டது. அவ்வாறு ஏற்பட்ட கலப்பினாலே, வடநாட்டில் வாழ்ந்திருந்த திராவிடரின் தெய்வமாகிய வருணனை ஆரியர் தங்களுடைய தெய்வமாக ஏற்றுக் கொண்டனர். ஏற்றுக்கொண்டு அத்தெய்வத்தைப் பற்றி இருக்கு வேதத்தில் பாடி வைத்தார்கள்.

அக்காலத்தில் வட இந்தியாவில் வாழ்ந்து வந்த திராவிட இனத்தாருக்கு அசுரர் என்று பெயர் இருந்தது. அசுரர்களில் ஒரு பிரிவினர் நாகர் என்பவர். நாகர் ஆதிகாலத்தில் தமிழ்நாட்டிலும் இருந்ததைச் சங்க நூல்களிலிருந்து அறிகிறோம். அசுரரும் அவரில் ஒரு பிரிவினரான நாகரும் வருணன் என்னும் தெய்வத்தை வழிபட்டனர். வருணன் முக்கியமாகக் கடல் தெய்வமாகக் கருதப்பட்டான். திராவிடர் அக்காலத்தில் பெரிய கடல் வாணிகராக இருந்தனர். அவர்கள் வருணனை முக்கியமாக வணங்கினார்கள். வேத காலத்து ஆரியர் வடஇந்தியாவில் நுழைந்தபோது அவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஏற்பட்ட கலாசாரத் தொடர்பினால், ஆரியர், திராவிட வருணனைத் தம் தெய்வமாக ஏற்றுக்கொண்டனர். ஆனால், வருணன் வணக்கம் ஆதியில் ஆரியர்களுக்குரியதன்று. இவை எல்லாம் ஆராய்ச்சி யாளர்கள் கூறுகிற செய்திகள்.

எனவே, திராவிடராகிய தமிழர் ஆதிகாலத்தில் வருணனைக் கடல் தெய்வமாக வழிபட்டது வியப்பன்று. தமிழர் வணங்கிய திராவிட இனத்துக் கடவுளாகிய வருணனைத்தான் தொல் காப்பியர் தமது இலக்கணத்தில் கூறினார். மேலும், கடற்கரையில் வாழ்ந்த நெய்தல் நிலத்துத் தமிழர், வருணனை வணங்கியதாகக் கூறுகிறார். அந்த வருண வணக்கமும் திராவிட முறைப்படி செய்யப்பட்டது.

சினைச்சுறவின் கோடு நட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினான்

என்று *பட்டினப்பாலையில்* (அடி 86-87) கடல் தெய்வமாகிய வருணன் வணக்கம் கூறப்பட்டிருக்கிறது. நச்சினார்க்கினியரும்

இதை நன்கு விளக்கிக் கூறுகிறார்: "இனி நெய்தல் நிலத்தில் நுளையர்க்கு வலைவளந்தப்பின் அம்மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக் கோட்டுப் பரவுக் கடன் கொடுத்தலின் ஆண்டு வருணன் வெளிப்படும் என்றார்" (தொல். பொருள். அகத்திணை 5ஆம் சூத்திர உரை).

ஒரு வகைச் சுறா மீனின் வாய்ப்புறத்தில் நீண்ட கோடு (கொம்பு) உண்டு. அது நான்கு அடி நீளம் வரையில் நீண்டு வளர்வதும் உண்டு. தட்டையாக நீண்டு வளர்ந்துள்ள சுறாமீன் கோட்டில் இரு புறங்களிலும் முள்ளுகள் உண்டு. இந்தச் சுறாமீன் கோட்டை நட்டுத் தமிழ்நாட்டு நெய்தல் நில மக்கள் வருணனை வணங்கினார்கள். ஆரியர் தங்கள் வருணனை இவ்விதமாக வணங்கவில்லை. வருணனை முதலில் போற்றிப் பாடிய ஆரியர் பிறகு அத்தெய்வத்தை இகழ்ந்து பாடியதாகவும் தெரிகிறது.

தமிழ்நாட்டுக் கப்பல் வாணிகரும் வருணனை வணங்கினார்கள். தமிழ்நாட்டு வாணிகன் ஒருவன் இலங்கைத் தீவின் தென்கோடியில் இருந்த தேவநுவர என்னும் ஊரில் (காலி என்னும் ஊரில்) கடல் தெய்வமாகிய வருணனுக்கு ஒரு கோவில் கட்டினான் என்று இலங்கை நூல்கள் கூறுகின்றன.

எனவே, *தொல்காப்பியம்* கூறுகிற தமிழரின் வருணன், ஆரியர் வணங்கிய வருணனைக் கடனாகப் பெற்ற தெய்வம் அன்று. ஆதிகாலத்தில் இருந்து திராவிட இனத்தார் வழிபட்டு வந்த வருணனைத் தமிழர் வணங்கினார்கள். அத்தெய்வத்தைத் தான் தொல்காப்பியர் கூறினார். இவற்றையெல்லாம் ஆராயாமல், ஆரிய வேதத்தில் வருணன் கூறப்படுகிறபடியால், அந்த வருணனைத் தமிழர் ஏற்றுக்கொண்டு வணங்கினார்கள் என்று கூறுவதும், வருணனைக் கூறுகிற *தொல்காப்பியம்*, ஆரிய – திராவிடக் கலப்பு ஏற்பட்ட பிற்காலத்தில் எழுதப்பட்ட நூல் என்று கூறுவதும் ஆழ்ந்து பாராமல் மேற்போக்காகக் கூறுகிற போலியாராய்ச்சியாகும். எனவே, இந்திரன், வருணன் என்னும் தெய்வங்களைக் கூறுகிற *தொல்காப்பியம்* பிற்காலத்து நூல் என்று சிலர் கூறுவது ஏற்கத்தக்க தன்று.

வருணன் வணக்கம் தமிழ்நாட்டில் மறைந்து போனதற்குக் காரணம் பௌத்த மதம். பௌத்த மதத்தின் கடற் காவல் தெய்வமாக மணிமேகலா தெய்வம் கூறப்படுகிறது. *சிலப்பதிகாரம்*, *மணிமேகலை*க் காவியம் முதலிய தமிழ் நூல்களும் *புத்த ஜாதகம்* முதலிய பௌத்த மத நூல்களும் மணிமேகலா தெய்வத்தைக் கூறுகின்றன. பௌத்த மதம் தமிழ் நாட்டுக்கு வந்தபோது, தமிழரின் கடல் தெய்வமாகிய வருணன் இடத்தை மணிமேகலா தெய்வம் பிடித்துக்கொண்டது. ஆகவே, வருணன் பையப்பைய நாளடைவில் மறக்கப்பட்டு மறைந்து போனான். பின்னர் மணிமேகலா தெய்வமும் மறக்கப்பட்டு மறைந்து போயிற்று.

இதுகாறுங் கூறியவற்றால், இந்திரன் வருணன் வழிபாட்டைக் கூறுகிற தொல்காப்பியம் ஆரிய – திராவிடர் கலாசாரக் கலப்பு ஏற்பட்ட பிற்காலத்தில் எழுதப்பட்ட நூல் என்று சிலர் தவறாகக் கூறுவது பொருந்தாது, ஏற்கத்தக்கதன்று என்பது விளக்கப் பட்டது. மேற்பார்வைக்கு மெய்போலத் தோன்றுகிற இப்பொய்க் கூற்றைத் தவறான, உண்மைக்கு மாறுபட்ட பொய்ச் செய்தி என விலக்கித் தள்ளுக.

3. இலங்கைத் தீவில் தமிழ் நாட்டுத் தெய்வங்கள்

தமிழ் நாட்டுக்கு மிக நெருக்கமாக உள்ளது இலங்கைத் தீவு. சங்க காலத்திலே தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்தது. அக்காலத்திலே தமிழர் இலங்கையில் சென்று தங்கினார்கள்; தங்களுடைய தெய்வ வணக்கத்தையும் இலங்கையில் நிறுவினார்கள். பௌத்த மதம் இலங்கைக்கு வருவதற்கு முன்னமே சங்க காலத் தமிழர் தமது தெய்வ வழிபாட்டினை இலங்கையில் நிறுவினர். பௌத்த மதம் இலங்கைக்கு முதன்முதலாக வந்தது கி.மு. மூன்றாம் நூற்றாண்டில், தேவனாம்பிரியதிஸ்ஸன் என்னும் அரசன் காலத்தி லாகும். அக்காலத்தில் பாரத நாட்டை அரசாண்ட அசோகச் சக்கரவர்த்தி, மகேந்திரன், சங்கமித்திரை என்னும் பிக்கு, பிக்குணிகளைக் கொண்டு பௌத்த மதத்தை இலங்கையில் பிரசாரம் செய்வித்தார். பௌத்த மதம் இலங்கைக்கு வருவதற்கு முன்பே தமிழருடைய தெய்வ வழிபாடு அங்குச் சென்று நிலை பெற்றிருந்தது.

மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே

என்பது தொல்காப்பியச் (அகத்திணையியல் 5ஆம்) சூத்திரம்.

முல்லை நிலத்தில் திருமால் வணக்கமும், குறிஞ்சி நிலத்தில் முருகன் வணக்கமும், மருத நிலத்தில் இந்திரன் வணக்கமும், நெய்தல் நிலத்தில் வருணன் வணக்கமும் தமிழ் நாட்டில் அக்காலத்திலே நிகழ்ந்தன. இந்தத் தெய்வங்களின் வழிபாடு அக்காலத்திலே இலங்கையிலும் பரவி, அக்காலத்தில் அங்கிருந்த இயக்கர், நாகர், வேடர் முதலியவர்களால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. பிறகு, கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலே பௌத்த மதம் இலங்கைக்கு வந்து அது அரசாங்க மதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, மெல்லமெல்ல இலங்கை முழுவதும் பரவிற்று.

பௌத்தம் இலங்கையில் அரசாங்க மதமாக ஏற்றுக்கொள்ளப் பட்டுச் செல்வாக்கடைந்தபோது, அங்கு முன்பு இருந்து வந்த தமிழர் தெய்வ வழிபாடு பின்னிலையடைந்தது. பின்னிலை யடைந்ததே தவிர மறைந்து அழிந்துவிடவில்லை. பௌத்த மதத்தைச் சார்ந்த சிங்களவர் இன்றுங்கூட மாயோன், சேயோன் முதலிய தமிழ்த் தெய்வங்களை வழிபடுகின்றனர். இதனைச் சற்று விளக்கிக் கூறுவோம்.

முருகன், திருமால், வருணன், இந்திரன் என்னும் பழைய தெய்வங்களைத் தமிழர் வழிபட்டனர். இத்தெய்வங்களில் முருகன், திருமால், வருணன் என்னும் மூன்று தெய்வங்கள் இலங்கையில் முற்காலத்திலும் பிற்காலத்திலும் வழிபடப் பட்டனர். இந்திரன் வணக்கம் இலங்கையில் நடைபெறவில்லை. மற்ற மூன்று தெய்வங்கள் இலங்கையில் தொன்று தொட்டு, அங்குப் பௌத்த மதம் வருவதற்கு முன்னரேயே வழிபடப் பட்டனர். இத்தெய்வங்களில் வருணன் வணக்கம் பிற்காலத்தில் தமிழ் நாட்டில் மறைந்துவிட்டது போலவே, இலங்கையிலும் மறைந்துவிட்டது. ஆனால், முருகன் வணக்கமும் திருமால் வணக்கமும் தமிழ் நாட்டில் இன்றும் நிகழ்ந்து வருகிறது போலவே இலங்கையிலும் தொன்று தொட்டு இன்றும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இலங்கையில் வாழ்கிற தமிழர்களால் முருகனும் திருமாலும் வழிபடப்படுகின்றனர் என்பது மட்டும் அல்ல; தமிழரல்லாத பௌத்தராகிய சிங்கள மக்களாலும் முருகனும் திருமாலும் தொன்று தொட்டு இன்றுகாறும் வழிபடப்படுகின்றனர். முருகன் சிங்களவர்களால் ஸ்கந்தன் என்றும் கந்தன் என்றும் வழிபடப்படுகிறார். திருமால், விஷ்ணு என்றும் மாவிஸ் உன்னானே என்றும் சிங்களவர்களால் வழிபடப்படுகிறார். இவற்றை விளக்கிக் கூறுவோம்.

ஸ்கந்தன் (முருகன்)

ஸ்கந்தனாகிய முருகனை (இலங்கைத் தமிழர் வழிபடுவது மட்டுமல்லாமல்) சிங்களவரும், இலங்கைக் காட்டில் வாழும் வேடர்களும் வழிபடுகின்றனர். ஸ்கந்தனைக் கெலெதெவியோ (கல்தெய்வம்; *கல்*–மலை, *தெவியோ* – தெய்வம்) என்றும் கலை இயக்க (*கலை* – மலை, *இயக்க* – சிறுதெய்வம்) என்றும் கூறுகிறார்கள். கந்தன், கடலுக்கப்பாலிருந்து (இந்தியாவிலிருந்து) இலங்கைக்கு வந்ததாகவும் கூறுகிறார்கள். இதனால், கந்தன் வழிபாடு தமிழ் நாட்டிலிருந்து கடல்கடந்து இலங்கைக்குச் சென்றது என்பது வலியுறுகின்றது.

இலங்கையில் கந்தனுடைய முக்கியக் கோவில் கதிர் காமத்தில் இருக்கிறது. இலங்கையில் தென்கிழக்கே மாணிக்க கங்கை ஆற்றின் கரையிலே கதிர்காமம் அல்லது கதரகாமம்

என்னும் இடம் இன்றும் பேர் பெற்றிருக்கிறது. இங்குக் கந்தனுக்கும் வள்ளிக்கும் கோவில்கள் உள்ளன. ஆண்டுதோறும் திருவிழா நடக்கிறது. கதிர்காமக் கோவிலுக்கு அறுபதாயிரம் ஏக்கர் நிலம் உண்டு. இந்தக் கோவிலைச் சேர்ந்த காடுகளில், இலங்கை வேடர்களில் ஒரு இனத்தவராகிய கோவில் வனமை வேடர் என்பவர் வசித்து வந்தார்கள். இந்த வேடர்களின் முன்னோர், வள்ளியம்மையைக் குழந்தை உருவத்துடன் ஒரு வயலில் கண்டெடுத்து வளர்த்ததாகவும், வள்ளி வயதடைந்த பிறகு கந்தன் அவளை மணம் செய்துகொண்டதாகவும் இவ்வேடர்கள் கூறுகிறார்கள். இப்போது இவ்வேடர்கள் இங்கு இல்லை. கி.பி. 1886இல் இவ்வேடர்களின் சந்ததியார் இங்குச் சிலர் இருந்த தாகவும் அவர்களும் மிகவும் வறுமையுற்றிருந்தனர் என்றும் ஒருவர் கூறுகிறார் (*The Veddas*, C.G. Seligmann and Brenda Z. Seligmann, 1911, p. 156).

கதிர்காமத் தெய்வம் (கந்தன்), வயலைக் காத்துக் கொண்டிருந்த வள்ளியின் முன்பு பசி தாகத்தினால் இளைத்த பண்டாரம்போல வந்ததாகவும், அப்போது அங்கு வந்த யானைக்கு அஞ்சிய வள்ளி அப்பண்டாரத்தினிடம் அடைக்கலம் புகுந்ததாகவும், பிறகு பண்டாரமாகிய கந்தன் வள்ளியை மணம் செய்ததாகவும் கூறுகின்றனர். இது தமிழ் நாட்டில் கூறுப்படுகிற முருகன் கதையோடு மிகவும் பொருந்தியுள்ளது. கதிர்காமக் கோவிலுக்கு 4 மைல் தூரத்தில் ஒரு பாறைக் கல்லில் யானை யினுடைய கால் அடையாளம் காணப்படுகிறது. அது வள்ளியைத் துரத்திவந்த யானையின் காலடி அடையாளம் என்று கூறப் படுகிறது.

கதிர்காம முருகனைப் பற்றி ஒரு கதை வழங்குகிறது. கதிர்காமத்துக்கு அருகில் ஒரு குன்றின்மேல் ஆதியில் முருகன் எழுந்தருளி இருந்ததாகவும், அவ்வழியாகச் செல்லும் தமிழர் களை முருகன் விளித்துத் தன்னைக் கீழே கொண்டுபோய் விடும்படி பலமுறை கேட்டுக்கொண்டதாகவும், ஆனால் அத்தமிழர்கள் அதற்கு உடன்படாமல் மறுத்துவிட்டார்கள் என்றும் கூறப்படுகின்றது. பிறகு முருகன், அவ்வழியாகச் சென்ற சிங்களவரை விளித்துத் தன்னைக் கொண்டுபோய்க் கீழே விடும்படி கேட்டுக்கொள்ள அதற்கு அவர்கள் உடன்பட்டுக் குன்றின்மேல் இருந்த முருகனைக் கீழே கொண்டுவந்து விட்டனர் என்றும் கூறப்படுகிறது. இந்தக் கதையிலிருந்து ஒரு உண்மை புலனாகிறது. குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகன் மலைமேல் எழுந்தருளி இருக்கவேண்டியவன். ஆகவே, அவனைக் குன்றிலிருந்து கீழே கொண்டுவரத் தமிழர்கள் மறுத்துவிட்டனர். ஆனால், தமிழர் மரபு அறியாத சிங்களவர் முருகனைக் குன்றிலிருந்து கீழே கொண்டுவந்துவிட்டார்கள். பிறகு, முருகன்

இருந்த அந்த இடத்தில் சிங்களவர் ஒரு பௌத்தத் தகோபாவைக் (தாது கர்ப்பத்தை) கட்டிவிட்டனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கி.மு. முதல் நூற்றாண்டில் இருந்த துட்டகமுனு என்னும் சிங்கள அரசன், தன் பகைவனாகிய ஏலேலனைப் போரில் வெல்வதற்குக் கதிர்காமத் தெய்வத்தின் அருளைப் பெற்றான் என்றும் அதற்காக அவன் கதிர்காமக் கோவிலுக்குத் தானங்களைக் கொடுத்தான் என்றும் *மகாவம்சம்* என்னும் நூலில் கூறப்படுகிறான். கதிர்காமத்தில் மட்டுமல்ல; இலங்கையின் ஊவா மாகாணம், வடமத்திய மாகாணம், வடமேற்கு மாகாணம், கண்டி முதலிய இடங்களிலும் கலெதெவியோ (Gale Deviyo) என்னும் மலைத் தெய்வமாகிய கந்தன் வழிபடப்படுகிறான். ஆண்டுதோறும் வேடர் (சிங்கள வருங்கூட) மலையுச்சிகளில் உள்ள பாறைகளில் கந்தனுக்கு வெறியாடுகிறார்கள். இது, தமிழ் நாட்டில் சங்க காலத்தில் நடந்து வந்த வேலன் வெறியாடலை நினைவுறுத்துகிறது குருநாக்கல் காட்டில் உள்ள ரிட்டிகலா, ரணகிரியா முதலிய மலைகளில் கந்தன் வணக்கம் இன்றும் சிங்களவர்களால் நடைபெறுகிறது. இலங்கைக் காடுகளில் வாழும் வேடர்கள் வணங்கும் பல தெய்வங்களில் ஸ்கந்தனாகிய கல் யக்கனும் (மலை இயக்கன்) ஒன்று.

கண்டியில் ஆண்டுதோறும் நடைபெறும் *பிரஹா* என்னும் உற்சவத்தில் ஸ்கந்தனுக்கு முதலிடம் தரப்பட்டிருந்தது. இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்த முதலிடம் புத்தருடைய பல் ஊர்வலத்துக்குத் தரப்பட்டது. ஆனால், பண்டைக்காலம் போலவே இன்றும் இலங்கையில் பௌத்தர்களால் முருகன் (ஸ்கந்தன்) வணக்கம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

திருமால்

இலங்கையில் திருமால் வணக்கமும் மிகப் பழைய காலத்திலிருந்து நிகழ்ந்து வருகிறது. திருமால், இலங்கைத் தீவில் விஷ்ணு என்னும் பெயருடன் வழிபடப்படுகிறார். சிங்கள மொழியில் திருமாலாகிய விஷ்ணுவை மாவிஸ் உன்னானெ என்று கூறுவர். இது மஹாவிஷ்ணு என்பதன் சிதைவாக இருக்கலாம். இலங்கையிலே கதிர்காமத் தெய்வம் என்றும் கலெதெய்யோ என்றும் கூறப்படுகிற ஸ்கந்தனுக்குத் தனியாகக் கோவில்கள் உண்டு. கந்தனை பௌத்தக் கோவிலுக்குள் வைத்துப் பூசிப்பது இல்லை. ஆனால், விஷ்ணுவைப் பௌத்தக் கோயில்களிலும் வைத்துப் பூசிக்கிறார்கள். கருட வாகனம் உடையவராக, சங்கு சக்கரம் ஏந்தியவராகத் திருமாலைச் சிங்களவர் இன்றும் வழிபடுகிறார்கள்.

இலங்கையில் தம்புல்ல என்னும் ஊர் உண்டு. இது கண்டியிலிருந்து 18 மைல் தூரத்திலுள்ள மாத்தளை என்னும் ஊரிலிருந்து

வடக்கே 28 மைல் தூரத்தில் இருக்கிறது. இவ்வூருக்கு அருகிலே பாறைக்கல்லால் அமைந்த மலையொன்று உண்டு. 500 அடி. உயரமுள்ள இந்த மலை மேலே இயற்கையாக அமைந்த ஐந்து குகைக்கோவில்கள் இருக்கின்றன. இக்குகைக் கோவில்களில் புத்தர் பெருமானுடைய உருவங்கள் வழிபடப்படுகின்றன.

இக்குகைகளில் முதலாவது குகை பெரியது. இதில் புத்தர் பெருமான் பள்ளிகொண்டிருப்பது போன்ற உருவம் கற்பாறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் நீளம் 42 அடி. இவ்வுருவத்தின் தலைப்பக்கத்தில் விஷ்ணுவின் (திருமால்) உருவம் நின்ற கோலமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இது மரத்தினால் செய்யப்பட்ட உருவம். இந்த விஷ்ணுவின் பெயரினாலே இந்தக் குகை தேவராஜவிகாரை என்று பெயர் பெற்றிருக்கிறது. தேவராஜன் என்பது விஷ்ணுவின் பெயர்.

இதற்கு அடுத்த இரண்டாவது குகையிலும் புத்தர் உருவமும் வேறு சில பௌத்தத் தெய்வங்களின் உருவங்களும் காணப்படு கின்றன. பாறையில் வர்ணத்தினால் எழுதப்பட்ட தெய்வ உருவங்களும் காணப்படுகின்றன. வர்ணத் திருவுருவங்களில் விஷ்ணுவின் திருவுருவமும் ஒன்றாக அமைந்திருக்கிறது.

இந்தக் குகைக் கோவில்கள் கி.மு. 104இல் இலங்கையை யாண்ட வலகம்பாகு (வடகெமுனு) என்னும் அரசன் காலத்தில் ஏற்பட்டவை.

கந்தன் இலங்கைத் தீவின் தெற்குத் திசைக்கும், விஷ்ணு மேற்குத் திசைக்கும் காவல் தெய்வங்கள் என்று கூறப்படுகின்றனர். மேற்குத் திசையின் காவல் தெய்வமாகிய விஷ்ணுவே, பிற் காலத்தில், விபீஷணனை மேற்குத் திசையில் காவல் தெய்வமாக அமைத்தார் என்றும் கூறுகிறார்கள்.

இலங்கை முழுவதுக்கும் காவல் தெய்வமாகப் புத்தர் இந்திரனை ஏற்படுத்தினார் என்றும், அக்கடமையை ஏற்றுக் கொண்ட இந்திரன், பிற்காலத்தில், தன் தம்பியாகிய விஷ்ணுவை இலங்கையின் காவல் தெய்வமாக அமைத்தான் என்றும் *மகாவம்சம்* என்னும் நூல் கூறுகிறது.

வருணன்

தமிழ் நாட்டில் நெய்தல் நில மக்கள் வணங்கிய தெய்வம் வருணன். கடல் கடந்து கப்பல் வாணிகம் செய்த பண்டைக் காலத்துத் தமிழ் வியாபாரிகளும் வருணனை வழிபட்டனர். *தொல்காப்பியர்* காலத்திலும் அவர் காலத்துக்குப் பிற்பட்ட காலத்திலும் வருணன் வணக்கம் தமிழ் நாட்டில் இருந்து வந்தது. 'வருணன் மேய பெருமணல் உலகம்' என்று *தொல்காப்பியச்* சூத்திரம் கூறுவதிலிருந்து, கடற்கரையோரத்தில் வாழ்ந்த மக்களும் மாலுமிகளும் வருணனை வழிபட்டனர் என்பது

அறியப்படுகிறது. சங்க இலக்கியங்களிலே வருணனைப் பற்றி அதிகமாகக் காணப்படவில்லை. வருணனைப்பற்றிச் சிலப்பதி காரத்தில் இரண்டு குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றிலும் வருணன் என்று நேரே பெயர் கூறப்படாமல் 'கடல் தெய்வம்' என்று கூறப்படுகிறது. அவை:

கரியமலர் நெடுங்கண் காரிகைமுன் கடற்றெய்வங்
காட்டிக்காட்டி
அரியசூள் பொய்த்தார் அறனிலரென்று ஏழையம் யாங்கு
அறிகோம் ஐய (*சிலம்பு*, கானல்வரி 5)
பூக்கமழ் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடல் தெய்வத்தின் மலரடி வணங்குதும்
(*சிலம்பு*, கானல்வரி 51)

சிலப்பதிகாரத்தின் முதல் இரண்டடிகளுக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், நெய்தற்றிணையைக் கூறுமிடத்தில் "கடற்றெய்வங் காட்டிக்காட்டி, என்பதனால் வருணனும்... கூறினார்" என்று எழுதுவது காண்க.

சங்க இலக்கியங்களிலே வருணனைப்பற்றி அதிகமாகக் காணப்படாததன் காரணம் என்னவென்றால் கடல் தெய்வமாகிய பழைய வருணனுக்குப் பதிலாக மற்றொரு கடல் தெய்வம் புதிதாகப் புகுத்தப்பட்டதுதான். புதிதாகப் புகுத்தப்பட்ட கடல் தெய்வத்தின் பெயர் மணிமேகலை என்பது.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலே அசோகச் சக்கரவர்த்தி காலத்திலே பௌத்த சமயம் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் பரவிற்று (மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் எழுதிய *பௌத்தமும் தமிழும்* என்னும் நூலில் காண்க). பௌத்த மதம் பரவியபோது பௌத்த மதச் சிறு தெய்வங்களின் வழிபாடும் பரவிற்று. அவ்வாறு பரவிய பௌத்தச் சிறு தெய்வ வழிபாட்டில் ஒன்று மணிமேகலை வணக்கம். மணிமேகலை வணக்கம் புகுத்தப்பட்ட பிறகு வருணன் வணக்கம் மெல்ல மறைந்து விட்டது.

கடல் தெய்வமாகிய மணிமேகலையைப் பற்றிப் பௌத்த மத நூலில் ஒரு கதை உண்டு. சக்கன் (சக்கரன்) ஆகிய இந்திரன், கடலில் கப்பல் யாத்திரை செய்கிறவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால், ஆபத்துக்குட்பட்டவர் நல்லவராக இருப்பார் களானால், அவரைத் துன்பத்திலிருந்து காப்பாற்றுவதற்காக மணிமேகலா தெய்வத்தைக் கடற்காவல் தெய்வமாக ஏற்படுத்தி னான் என்பது அக்கதை. கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டு வரைப் பௌத்த மதம் தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தபடியால், பௌத்த மதத் தெய்வமாகிய மணிமேகலை வழிபாடும் தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றது.

பெறவே, பழைய கடல் தெய்வமாகிய வருணன் வணக்கம் பையப்பைய மறைந்துவிட்டது. மணிமேகலைத் தெய்வ வழிபாடு எவ்வளவு ஆழமாகப் பரவியிருந்தது என்பதைச் சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் நூல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். மணிமேகலை என்னும் தெய்வத்தின் பெயரைத் தனக்குப் பெயராகக் கொண்ட மணிமேகலை என்னும் பெண்ணின் வரலாறுதான் மணிமேகலை காவியம்.

புத்த ஜாதகக் கதைகளிலே, மணிமேகலா தெய்வம் கப்பல் யாத்திரிகருக்கு உதவி செய்து அவர்களைத் துன்பத்திலிருந்து காத்த செய்திகள் கூறப்படுகின்றன.

பௌத்த மதம் இலங்கையில் பரவுவதற்கு முன்னே, வருணன் வணக்கமும் இலங்கையில் (தமிழ் நாட்டிலிருந்து போய்) இருந்தது. முருகன், திருமால் வணக்கம் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு ஆதி காலத்தில் சென்று அங்கு வழிபடப்பட்டது போலவே, வருணன் வணக்கமும் தமிழ் நாட்டிலிருந்து சென்று இலங்கையில் வழிபடப்பட்டது. (வருணனை ஆதி காலத்தில் ஆரியரும் வழிபட்டனர். வடமொழி வேதங்களில் வருணன் வணக்கம் கூறப்படுகிறது. வடஇந்தியாவில் வாழ்ந்திருந்த திராவிட சமூகத்தினர் வருணனை வழிபட்டனர் என்றும் அவர்களிடமிருந்து ஆரியர் வருணன் வணக்கத்தை ஏற்றுக்கொண்டு வழிபட்டனர் என்றும் ஆராய்ச்சிக்காரர் கூறுகின்றனர். திராவிடராகிய தமிழரும் வருணனை வணங்கினர். இது பற்றிய ஆராய்ச்சி இங்கு வேண்டுவது இல்லை.) தமிழ்நாட்டில் பௌத்த மதம் அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் பரவியது போலவே, தமிழ் நாட்டுக்கு அடுத்துள்ள இலங்கைத் தீவிலும் பௌத்த மதம் அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் பரவியது. பௌத்த மதத்துடன் மணிமேகலை வழிபாடு இலங்கையில் புகுந்த பிறகு இலங்கையில் வழிபடப்பட்டிருந்த வருணன் வணக்கம் பையப்பைய மறைந்துவிட்டது. ஆனாலும், இலங்கையின் தென்கோடியில் இருந்த துறைமுகப்பட்டினமாகிய தொண்டரபட்டினத்தில் நெடுங்காலமாக வழிபடப்பட்டிருந்த வருணன் வணக்கம் பிற்காலத்திலுங்கூட மிகப் புகழ்பெற்று விளங்கியது. இச்செய்தி பலருக்கு வியப்பாக இருக்கக்கூடும்.

இலங்கையில் பழைமையான துறைமுகப்பட்டினங்களில் தொண்டரபட்டினமும் ஒன்று. இது இலங்கையின் தென் கோடியில் இப்போது சிறு கிராமமாக இருக்கிறது. தேவ நுவர (தேவ நகரம்) என்னும் சிங்களப் பெயர் தேவுந்தர என்று திரிந்து வழங்கிற்று. தேவுந்தர என்னும் பெயரை இலங்கையை ஆண்ட ஆங்கிலேயர் தொண்ட்ர என்று மாற்றிவிட்டார்கள். எனவே, தேவ நுவர என்னும் சொல்லின் ஆங்கிலச் சிதைவு தொண்ட்ர என்பது.

தேவ நுவர இலங்கையின் பழைய பேர் போன துறைமுகப் பட்டினம். இது இலங்கையின் தென்கோடியில் இருந்தது. (இப்போது இலங்கையில் உலகப் புகழ்பெற்று விளங்குகின்ற கொளும்பு துறைமுகப்பட்டினம் மிகச் சமீப காலத்தில் ஏற்பட்டது.) தேவ நுவரப் பட்டினத்திலே மிகப் பழைய காலத்திலிருந்து வருணனுக்குக் கோவில் இருந்து வந்தது. அந்த வருணன் கோவில் உலகப் புகழ்பெற்றுச் சிறப்புற்றிருந்தது. கடலிலே கப்பல் யாத்திரை செய்தவர்களுக்கு இந்தக் கோவிலின் கோபுரங்களும் கட்டிடங்களும் ஒரு பெரிய நகரம் போலத் தெரிந்தனவாம். இந்த வருணனைச் சிங்கள மக்களும் தமிழரும் வழிபட்டனர். சிங்கள அரசர்கள் இக்கோவிலைப் போற்றி மானியம் அளித்துப் பாதுகாத்தார்கள். ஆண்டுதோறும் அந்தக் கோவிலிலே வருணனுக்குத் திருவிழா நடந்தது. அந்தத் திருவிழாவில் வருணனுக்கு உரிய முத்துக்குடை ஊர்வலமாகக் கொண்டு போகப்பட்டது.

இலங்கைத் தீவிலே தேவ நுவரப் பட்டினத்தில் இருந்த வருணன் கோவிலைப் பற்றிய வியப்பான செய்தி என்னவென்றால், அந்தக் கோவிலை அங்கே முதன்முதலாக அமைத்தவன் கப்பல் வாணிகனாகிய தமிழ் நாட்டுத் தமிழன் என்பதே. இச்செய்தியை இலங்கைச் சரித்திர நூல்கள் கூறுகின்றன. இன்னொரு முக்கியமான செய்தி என்னவென்றால் அந்த வருணன் கோவிலில் பூசை முதலிய வழிபாடுகளைச் செய்தவர்களும் தமிழர்களே!

வருணனைச் சிங்களவர் உபுல்வன் என்று கூறினர். உதகபால வருணன் என்னும் சொல் சிதைந்து சிங்கள மொழியில் உபுல்வன் என்று ஆயிற்று என்பர். உதகபாலன் என்றால் நீரை ஆட்சி செய்கிறவன் என்பது பொருள். அதாவது நீர்க் கடவுள். சிங்கள இலக்கண முறைப்படி உதகபால என்பது உதபால என்றாகிப் பின்னர் உபுல என்றாயிற்று என்பர். வருணன் என்பது வணன் என்றாகிப் பின்னர் வணன் என்பது வன் என்றாயிற்று என்பர். எனவே, உதகபால வருணன் என்னும் சொல் சிதைந்து சிங்கள மொழியில் உபுல்வன் என்றாயிற்று.

தேவ நுவரவிலிருந்த வருணனைப் பிற்காலத்திலே கி.பி. 15ஆம் நூற்றாண்டில் விஷ்ணு (திருமால்) ஆக மாற்றிவிட்டனர். வருணனை விஷ்ணுவாக மாற்றியவர்கள் தமிழர்களே. கி.பி. 14ஆம் நூற்றாண்டில் மாலிக்காபூர் என்னும் முகமதியன் தில்லியிலிருந்து தென்னாட்டுக்கு வந்து கோவில்களைக் கொள்ளையடித்து நாசப்படுத்தினான் என்னும் செய்தி சரித்திரம் கூறும் உண்மை. அக்காலத்திலே, தமிழ்நாட்டிலே இருந்த சில வைணவப் பிராமணர்கள் தங்கள் குடும்பத்தோடு இலங்கைக்குச் சென்று அடைக்கலம் புகுந்தனர். அவர்களைச் சிங்கள அரசன் ஆதரித்து தேவ நுவர வருணன் கோவிலில் பரிசாரக வேலை செய்யும்படி

அமர்த்தினான். அந்த வைணவப் பிராமணர்கள் நாளடைவில் பையப்பைய வருணனை விஷ்ணுவாக மாற்றிவிட்டார்கள். ஆயினும், கி.பி. 17ஆம் நூற்றாண்டு வரையில் உபுல்வன் கோயில் (வருணன் கோயில்) என்றே பெயர் பெற்றிருந்தது.

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் இலங்கையைப் போர்ச்சுகீசுக் காரர் பிடித்து ஆட்சி செய்தனர். போர்ச்சுகீசியர் மத வெறியர். போர்ச்சுகீசியச் சேனைத் தலைவன் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் பேர் பெற்ற உபுல்வன் கோயிலைக் (வருணன் கோயிலை) கொள்ளையடித்து இடித்துத் தகர்த்தழித்துப் போட்டான். போர்ச்சுகீசியர் இலங்கையில் இருந்த புகழ்பெற்ற கோயில்கள் பலவற்றை அழித்தனர். அவ்வாறு அழிக்கப்பட்ட முக்கியமான கோயில்களில் உபுல்வன் (வருணன்) கோயிலும் ஒன்று.

இலங்கைப் பழம்பொருள் ஆராய்ச்சி இலாகாவைச் (ஆர்க்கியாலஜி இலாகா) சேர்ந்த டாக்டர் பரணவிதான என்பவர் மறைந்து போன உபுல்வன் (வருணன்) கோயிலைப் பற்றிச் சிறந்த ஆராய்ச்சி நூல் எழுதியிருக்கிறார் ('The Shrine of Upulvan at Devundara', *Memoirs of the Archaeological Survey of Ceylon*, Vol. VI, 1953). அந்நூலில் அவர், வைதிகப் பிராமணர் வட இந்தியாவிலிருந்து வருணன் வணக்கத்தை இலங்கையில் புகுத்தியிருக்கவேண்டும் என்று கூறியுள்ளார். ஆனால், அவர் *தொல்காப்பியம்* போன்ற தமிழ் இலக்கண நூல்களைப் படித்திருப்பாரானால், பண்டைத் தமிழர் தமிழ் நாட்டில் வருணன் வணக்கம் நிகழ்த்தியிருந்தார்கள் என்பதை அறிந்திருப் பாரானால், இந்தத் தவறான முடிவுக்கு வந்திருக்கமாட்டார். தமிழ் நாட்டில் வருணன் வணக்கம் பண்டைக் காலத்தில் இருந்தது என்பதை அவர் அறியாதபடியால், தமிழ் நாட்டிலிருந்து வருணன் வணக்கம் இலங்கையில் புகுந்தது என்பதை அறியாமல், வட நாட்டிலிருந்து வைதிக மதத்தவரால் வருணன் வணக்கம் இலங்கையில் புகுத்தப்பட்டது என்று எழுதியுள்ளார். பக்கத்து நாட்டுச் சரித்திரம் அறியாததால் ஏற்பட்ட தவறு இது.

தமிழ் நாட்டிலிருந்து முருகன் (கந்தன்), திருமால் (விஷ்ணு), வருணன் (உபுல்வன்) என்னும் தெய்வ வணக்கம் தமிழ் நாட்டை அடுத்துள்ள இலங்கைத் தீவிலே கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பே புகுத்தப்பட்டு அங்கு இத்தெய்வ வழிபாடுகள் நடை பெற்று வந்தன என்பதை இதனால் அறிகிறோம். இலங்கையில் பௌத்த மதம் பரவின கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழ் நாட்டுத் தெய்வங்கள் அங்குச் சிங்களவர்களிடம் முதன்மை பெறவில்லை. ஆனால், தமிழரின் தெய்வங்கள் இலங்கையிலும் சிங்களவர்களால் சிறு தெய்வங்களாகப் போற்றப்பட்டு வருகின்றன. இந்தத் தெய்வ வணக்கம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கைக்குச் சென்றிருக்க வேண்டும்.

4. சங்க காலத் தமிழரின் கடல் செலவும் தரைச் செலவும்

சங்க காலத்திலே தமிழர் அயல்நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தனர். அவர்கள் மரக்கலம் ஏறிக் கடல் கடந்து அயல் நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தார்கள். அவர்கள் கடல் கடந்து அக்கரை நாடுகளுக்குச் செல்லும்போது தம்முடன் தம்முடைய பெண்டிரை அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை. இதனைத் தொல்காப்பியரும் கூறுகின்றார்.

முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை
(தொல். அகத்திணை 37)

இதற்கு இளம்பூரண அடிகள் கூறும் உரை இது:

"இதுவும் பொருள்வயிற் பிரிவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று. இதன் பொருள்: (ஈண்டு அதிகரிக்கப் பட்ட பிரிவு, காலிற் பிரிவும் கலத்தில் பிரிவும் என இரு வகைப்படும். அவற்றுள்) கலத்திற் பிரிவு தலைமகளுடன் இல்லை. எனவே, காலிற்பிரிவு தலைமகளை உடன்கொண்டு பிரியவும் பெறும் என்றவாறாம்."

இதனால், கடல் கடந்த நாடுகளுக்குச் செல்லும்போது பெண் மகளிரைத் தம்முடன் அழைத்துச் செல்வது தமிழரின் வழக்கம் அன்று என்பதும், காலில் செல்லும்போது (தரை வழியாக அயல்நாடுகளுக்குப் போகும்போது) பெண்டிரை அழைத்துச் செல்லுவதும் உண்டு என்பதும் அறிகிறோம்.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்துக்கு நேர் பொருள் கொள்ளாமல், சுற்றி வளைத்துப் பொருத்தமல்லா உரை கூறுகின்றார். முந்நீர் என்பதற்குக் கடல் என்று நேர் பொருள் கொள்ளாமல் 'மூன்று தன்மை' என்று பொருள் கூறுகிறார். இவர் கூறும் உரை இது:

"இதன் பொருள்: ஓதலும் தூதும் பொருளுமாகிய மூன்று நீர்மையாற் செல்லும் செலவு தலைவியோடு கூடச் சேறலின்று... இனி இச்சூத்திரத்திற்குப் 'பொருள் வயிற் பிரிவின்கட் கலத்திற் பிரிவு தலைவியுடன் சேறலில்லை; எனவே, காலிற் பிரிவு தலைவியுடன் சேறல் உண்டு' என்னும் பொருள் கூறுவார்க்குச் சான்றோர் செய்த புலனெறி வழக்கம் இன்மை உணர்க."

இதில், நச்சினார்க்கினியர், இளம்பூரணர் கருத்தை மறுக்கிறார். தரை வழியாக அயல்நாடுகளுக்குச் செல்லும்போது பெண்டிரையும் உடன்கொண்டு செல்லும் வழக்கம் உண்டு என்று இளம்பூரணர் கூறியதை இவர் மறுக்கிறார். அதாவது, கடல் வழியாக அயல்நாடுகளுக்குச் செல்லும் தமிழன் தன்னுடன் மனைவியை அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை. அன்றியும்

தரை வழியாக அயல்நாடுகளுக்குச் செல்லும் தமிழனும் தன்னுடன் மனைவியை அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை என்று கூறுகிறார்.

இவ்வுரையாசிரியர்கள் இதில் மாறுபடக் கூறுகின்றார்கள். எனவே, இளம்பூரணர் உரை சரியா, நச்சினார்க்கினியர் உரை சரியா என்பதை ஆராய்வோம். இதற்கு, *எபிகிறாபி* என்னும் சாசன எழுத்துச் சான்றும், *ஆர்க்கியாலஜி* என்னும் பழம்பொருள் ஆராய்ச்சிச் சான்றும் உதவி புரிகின்றன.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலே (அதாவது கடைச்சங்க காலத்திலேயே) தமிழ் நாட்டிலிருந்து தமிழ் வாணிகர் (சாத்துக் கூட்டத்தினர்) கலிங்க தேசத்துக்குச் சென்று வாணிகம் புரிந்ததையும், அவர்கள் நாளடைவில் அங்குச் செல்வாக்குப் பெற்றுக் கலிங்க நாட்டின் ஆட்சிக்கு ஆபத்தாக விளங்கினார்கள் என்பதையும், அந்த ஆபத்தை அறிந்த அக்காலத்தில் கலிங்க நாட்டை அரசாண்ட காரவேலன் என்னும் அரசன் அத்தமிழ் வாணிகச் சாத்தை அழித்து ஒடுக்கினான் என்பதையும் கலிங்க நாட்டிலுள்ள ஹத்திகும்பா குகைச் சாசனம் கூறுகின்றது. இந்த ஹத்திகும்பா குகைச் சாசனத்தை எழுதியவன் காரவேலன் என்னும் அரசனே. இவன் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கலிங்க தேசத்தையரசாண்டான். இவன் தன்னுடைய பதினோராவது ஆட்சி ஆண்டில் (கி.மு. 165இல்) தமிழ் நாட்டு வாணிகச் சாத்தை அழித்தான். அந்தத் தமிழ வாணிகச் சாத்தினர், அவர்கள் அழிக்கப்படுவதற்கு முன்பு 113 ஆண்டுகளாகக் கலிங்க நாட்டில் தங்கி வாணிகம் புரிந்து வந்தனர். எனவே (கி.மு. 165 + 113 = 278), கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே அத்தமிழ் வாணிகச் சாத்துக் குழு, கலிங்க நாட்டிற் சென்று வாணிகம் செய்யத் தொடங்கிற்று என்பது தெரிகின்றது.


நூற்றுப்பதின்மூன்று ஆண்டுகளாகக் கலிங்க நாட்டிலேயே தங்கி வாணிகம் புரிந்த தமிழர்கள், தங்களுடன் மனைவி மக்களையும் அழைத்துக்கொண்டு போய் இருப்பார்களல்லவா? மனைவி மக்களுடன் வாழாமலா அவர்கள் பரம்பரைபரம்பரையாக அத்தனை ஆண்டுக்காலம் அங்கே தங்கியிருப்பார்கள்? எனவே, தரை வழியாக அயல் நாடுகளுக்குச் சென்றபோது, கடைச் சங்க காலத் தமிழன் தன்னுடன் மனைவியையும் அழைத்துச் சென்றான் என்பது இதனால் பெறப்படுகின்றது.

இதற்கு இன்னொரு சான்றும் கிடைத்திருக்கின்றது. ஆந்திர தேசத்திலே பண்டைக் காலத்தில் புகழ்பெற்றிருந்த அமராவதி நகரத்திலே தமிழ் வணிகர்கள் இருந்தார்கள். அவர்கள் குடும்பத்தோடு அங்குத் தங்கி இருந்தார்கள். அவர்களில் இருவர், பேர்பெற்ற அமராவதி பௌத்த ஸ்தூபிக்குத் திருப்பணிக் கைங்கரியம் செய்திருக்கிறார்கள். இச்செய்தி அங்குக் கிடைத்த சாசன எழுத்துக் கல் எழுத்துக்களினால் தெரிகின்றது.

(பேர்பெற்ற அமராவதி பௌத்தத்தூபி ஏறத்தாழ கி.மு. 200இல் தொடங்கப்பெற்று கி.பி. 150 அல்லது 200இல் முடிக்கப்பட்டது என்பர். இந்தக் காலம் கடைச்சங்க காலமாக அமைவது ஈண்டுக் கருதத்தக்கது. பிற்காலத்தில், இந்த அமராவதி ஸ்தூபி சிதைந்து அழிந்த பிறகு, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இது கண்டுபிடிக்கப்பட்டுச் சிதையுண்ட கற்களும் சிற்பங்களும் சேகரிக்கப்பட்டுச் சென்னை மாநகரப் பொருட்காட்சி சாலையில் சில கற்களும், இங்கிலாந்தில் லண்டன் மாநகரத்துப் பொருட் காட்சிசாலையில் சில கற்களும் கொண்டு போய் வைக்கப் பட்டுள்ளன.)

அமராவதி பௌத்த ஸ்தூபிக் கட்டடத்திலிருந்து கிடைத்த தூண்கல் ஒன்றில், தமிழன் கண்ணனும் அவன் தம்பி இளங்கண்ணனும் அவன் தங்கை நாகை (நாகம்மாள்) என்பவளும் சேர்ந்து அந்தத் தூண் திருப்பணியைச் செய்ததாக எழுதப்பட்டுள்ளது. இந்தச் சாசனக் கல்லின் அளவு 2 அடி 8 அங்குல அகலமும், 3 அடி 6 அங்குல உயரமும் உள்ளது. இதில் எழுதப்பட்டுள்ள எழுத்து பழைய பிராமி எழுத்தாகவும் பாஷை பாலி பாஷையாகவும் உள்ளன. இந்தச் சாசனத்தின் வாசகம் இது ('Notes on the Amaravati Stupa' by J. Burgess, *Archaeological Survey of South India*, 1882, No. 80, p. 20):

தமிளா கணஸ பாதுணம் கலகணஸ நாகாய ச(தா)ன
மஹாசே தியபாத மூலே உதம்பதோ.



'தமிழக் கண்ணனும் அவன் தம்பி இளங்கண்ணனும் தங்கை நாகையும் இந்த மகா சைத்தியத்திற்கு அமைத்த உதம்பதக்கல்' என்பது இச்சாசனத்தின் பொருள். இத்தமிழன், சகோதர சகோதரிகளுடனும் மனைவி மக்களுடனும் தரை வழியாக அயல்நாடு சென்று வாழ்ந்து வந்த செய்தி பெறப்படுவது காண்க.

உதம்பதம் என்பது தூண்கல் என்று பொருள்படும். இதில் கூறப்படுகிற கண்ணனும் அவன் தம்பி இளங்கண்ணனும் தமிழ் நாட்டிலிருந்து சென்று அமராவதி நகரத்தில் தங்கியவர்கள் என்பது தமிழ்க் கண்ணன் என்பதிலிருந்து தெரிகின்றது. கடைச்சங்க காலத்தில் அண்ணன் தம்பியர் ஒரே பெயருடன் வழங்கப்பட்டது போலவே (சான்றாக, குமணன் – இளங்குமணன், பெருஞ்சேரலிரும்பொறை – இளஞ்சேரலிரும்பொறை, தத்தன் – இளந்தத்தன், விச்சிக்கோ – இளவிச்சிக்கோ, வெளிமான் –

இளவெளிமான் முதலியன) இவர்களும் கண்ணன் – இளங் கண்ணன் என்று கூறப்பட்டிருப்பது நோக்குக. (சுலண என்பது சுல்ல கண்ணன், அதாவது இளங்கண்ணன் என்பது பொருள்.)

பாலி மொழியில் பிராமி எழுத்தில் எழுதப்பட்ட இந்தச் சாசனம் அமராவதி பௌத்தச் சயித்தியம் (பௌத்த ஸ்தூபம்) கட்டப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது. அமராவதி பௌத்தச் சயித்தியம் கட்டப்பட்ட காலம் கி.மு. 200 முதல் கி.பி. 200 வரையில் உள்ள காலம் என்று கூறுகிறார்கள். அதாவது, நேர் கடைச்சங்க காலம். எனவே, கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட சாசனம் இது. பௌத்த மதத்தாரின் 'தெய்வ பாஷை'யாக அக்காலத்தில் பாலி பாஷை இருந்தபடியால் இச்சாசனம் பாலி மொழியில் எழுதப்பட்டிருக்கிறது.


இந்தச் சாசனம், தமிழ் நாட்டிலிருந்து தரை வழியாக அயல்நாட்டுக்குக் குடும்பத்தோடு சென்று வாணிகம் செய்தனர் தமிழர் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல விளக்குகின்றது. சங்க காலத்தில் தமிழர் தரை வழியாகப் பெண்டிரையும் அழைத்துக்கொண்டு அயல்நாடுகளுக்குச் சென்றனர் என்னும் செய்தியை, கலிங்க நாட்டுக் காரவேல அரசரின் ஹத்திகும்பா சாசனமும் அமராவதி பௌத்த சயித்தியக் கல்வெட்டெழுத்துச் சாசனமும் சற்றும் ஐயத்துக்கிடமில்லாமல் உறுதிப்படுத்துகின்றன.

எனவே, 'முந்நீர் வழக்கம் மகடூவோ டில்லை' என்னும் தொல்காப்பியர் சூத்திரத்துக்கு உரை எழுதிய இளம்பூரண அடிகள், "காலில் (தரை வழியாக அயல் நாடுகளுக்குச் செல்வது) பிரிவு தலைமகளை உடன்கொண்டு பிரியவும் பெறும்" என்று கூறியுள்ளது சரியானதென்பதும், நச்சினார்க்கினியர் கூறும் பொருள் சரியானதன்று என்பதும் இந்தப் பழம்பொருள் சாசனச் சான்றுகளினால் அறியப்படுகின்றன.

5. தொல்காப்பிய ஆய்வுரை – அறிவர்

தொல்காப்பியத்தில் அறிவர் என்போர் கூறப்படுகின்றனர். அறிவர் என்பவர் யார்? அவர்கள் இல்வாழ்வோரா, துறவியரா? அறிவர் என்பவர் முழுதுணர்ந்தவர் என்று பொருள் கூறுகிறார் நச்சினார்க்கினியர். அதாவது, இல்லற வாழ்க்கையைத் துறந்து தவம் செய்யும் முனிவர் என்று கூறுகிறார். இளம்பூரணர், அறிவர் என்பவர் இல்லற வாழ்க்கையில் இருக்கும் கணிவன் என்று பொருள் கூறுகிறார்.

"அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" எனத் தொடங்கும் தொல். பொருள். புறத்திணையியல் 16ஆம் சூத்திரத்தில் அறிவன் கூறப்படுகிறான்.



மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயம்

என்று தொல்காப்பியர் அறிவனைக் கூறுகிறார்.

"காமம் வெகுளி மயக்கம் இல்லாத ஒழுகலாற்றினை இறப்பும் நிகழ்வும் எதிர்வுமென்னும் மூவகைக் காலத்திலும் வழங்கும் நெறியான் அமைந்த முழுதுணர்வுடையோன் பக்கமும்" என்று இதற்கு நச்சினார்க்கினியர் உரை கூறுகிறார். அதாவது, முன் கூறியதுபோலவே, அறிவனைத் துறவி என்று கூறுகிறார்.

இளம்பூரண அடிகள் உரை இது: "குற்றமற்ற செயலை யுடைய மழையும் பனியும் வெயிலுமாகிய மூவகைக் காலத்தினையும் நெறியினாற் பொறுத்த அறிவன்.

"இறந்த காலம் முதலாகிய மூன்று காலத்தினையும் நெறியினால் தோற்றிய அறிவன் பக்கம் என்றாலாவெனில், அது முழுதுணர்ந்தோர்க்கல்லது புலப்படாமையின் அது பொருளன் றென்க. பன்னிருபடலத்துள்

பனியும் வெயிலுங் கூதிரும் யாவும்
துனியில் கொள்கையொடு நோன்மை யெய்திய
தனிவற் றறிந்த கணிவன் முல்லை

எனவும் ஓதலின் மேலதே பொருளாகக் கொள்க.

"அறிவன் என்றது கணிவனை. மூவகைக் காலமும் நெறியினாலாற்றுதலாவது 'பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளும் தூமமும் மீன்வீழ்வும் கோள்நிலையும் பிறவும் பார்த்துப் பயன் கூறல். ஆதலான் மூவகைக் காலமும் 'நெறியின் ஆற்றிய அறிவன்' என்றார். உதாரணம்:

புரிவின்றி யாக்கைபோற் போற்றுவ போற்றிப்
பரிவின்றிப் பட்டாங் கறியத் – திரிவின்றி
விண்ணில் வுலகம் விளைவிக்கும் விளைவெல்லாங்
கண்ணி யுரைப்பான் கணி"

இவ்வாறு இளம்பூரண அடிகள் அறிவன் என்பதற்குக் கணிவன் என்று பொருள் கூறுகிறார்.

ஆகவே, நச்சினார்க்கினியர் கருத்துப்படி அறிவன் என்பவன் துறவுபூண்டு தவஞ்செய்து இறப்பு எதிர்வு நிகழ்வு என்னும் முக்கால நிகழ்ச்சிகளையும் அறியும் முழுதுணர்வுடையவன் என்று கொள்ளவேண்டியிருக்கிறது.

இளம்பூரணர் கருத்துப்படி, அறிவன் என்பவன் மழையும் பனியும் வெயிலுமாகிய மூவகைக் காலத்தினையும் வானத்தில் நிகழும் கோள்களின் நிலையினையும் அறிந்து பயன் கூறும் கணிவன் என்று கருதவேண்டியிருக்கிறது. மாறுபட்ட இவ் விரண்டு கருத்துகளில் எது உண்மை என்பதை ஆராய்வோம்.

வேறு சில தொல்காப்பியச் சூத்திரங்களும் அறிவரைக் கூறுகின்றன. அவை:

சொல்லிய கிளவி அறிவர்க்கு முரிய
(தொல். பொருள். கற்பியல் 13)

இடித்துவரை நிறுத்தலும் அவரது ஆகும்
கிழவனும் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்
(தொல். பொருள். கற்பியல் 14)

(இதில், அவர் என்றது அறிவரை யுணர்த்திற்று.)

தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி யிளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் விருந்தினர்
யாத்த சிறப்பின் வாயில்க ளென்ப
(தொல். பொருள். கற்பியல் 52)

பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்த்தே
(தொல். பொருள். செய்யுள் 189)

பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற வறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த வறுவரொடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்
(தொல். பொருள். செய்யுள் 182)

இச்சூத்திரங்களை நோக்கும்போது அறிவன், அறிவர் என்பவர் துறவிகளாகிய முனிவர் அல்லர் என்பதும், இல்லற வாழ்க்கையில் இருக்கும் கணிவர் என்பதும், கணவன் மனைவி யருக்குள் ஊடல் முதலிய நிகழ்ந்தால் அவர்களுக்கு அறிவுரை கூறி இல்லற நெறியில் நிறுத்தினவர் என்பதும் தெரிகின்றன. எனவே, அறிவர் என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறும் துறவிகளாகிய முனிவர் என்னும் பொருள் தவறு என்பதும் இளம்பூரண அடிகள் கூறுகிற கணிவர் என்பதே சரியான பொருள் என்பதும் தெரிகின்றன. அறிவர் முகூர்த்தம் கணித்துத் திருமண நாளைக் கூறினர் என்பதைக் கலித்தொகை (குறிஞ்சிக்கலி 39ஆம் பாட்டு) கூறுகிறது.

நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக
வேய்புரை மென்றொட் பசலையு மம்பலும்
மாயப் புணர்ச்சியு மெல்லா முடனீங்கச்
சேயுயர் வெற்பனும் வந்தனன்

என்பது அச்செய்யுட் பகுதி. இதில் மணமகன் சான்றவரையும் அறிவனையும் முன்னிறுத்தித் திருமணத்துக்கு வந்தான் என்று கூறப்படுகிறது. வந்த அறிவன் முகுர்த்த நாளை நன்கறிந்தவன் என்று கூறப்படுகிறபடியால், அறிவன், கணிவன் என்பதில் ஐயமில்லை.

அகநானூறு 98ஆம் செய்யுளில் அறிவர் கூறப்படுகிறார். தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது என்னும் துறையுடைய குறிஞ்சித்திணைச் செய்யுளில் இவர் கூறப்படுகிறார்:

அறிவர் உறுவிய அல்லல்கண் டருளி
வெறிகமழ் நெடுவேள் நல்குவ னெனினே
செறிதொடி யுற்ற செல்லலும் பிறிதெனக்
கான்கெழு நாடன் கேட்பின்
யானுயிர் வாழ்தல் அதனினு மரிதே

குறுந்தொகை 277ஆம் செய்யுளிலும் அறிவர் கூறப்படுகிறார்.

ஆசில் தெருவின் ஆசில் வியன்கடை
செந்நெல் அமலை வெண்மை வெள்ளிழுது
ஓரிற் பிச்சை ஆர மாந்தி
அற்சிரை வெய்ய வெப்பத் தெண்ணீர்
சேமச் செப்பிற் பெறீஇயரோ நீயே
மின்னிடை நடுங்குங் கடைப்பெயல் வாடை
எக்கால் வருவர் என்றி
அக்கால் வருவரெங் காத லோரே

தலைமகன் பிரிந்தவழி அவன் குறித்த பருவ வரவு தோழி அறிவரைக் கண்டு வினாவியதைக் கூறுகிறது இச்செய்யுள். கார் காலத்தின் இறுதியில் திரும்பி வருவதாகச் சொல்லித் தலைவியை விட்டுப் பிரிந்து சென்றான் தலைமகன். அவன் சொன்ன கார்காலத்தின் இறுதியை அறிவதற்காகத் தோழி அறிவனைக் கண்டு கேட்கிறாள். இச்செய்யுளில் அறிவன் என்னும் சொல் ஆளப்படவில்லை. செய்யுள் அடிக்குறிப்பிலிருந்து அறிவன் என்பது தெரிகிறது அறிவன் நன்கு மதிக்கப்பட்டவன் என்பதும் வீடுதோறும் பிச்சை ஏற்று உண்ணாமல் ஒரே வீட்டில் உணவு கொண்டான் (ஓரிற்பிச்சை ஆர மாந்தி) என்பதும், அவன் வைத்திருந்த சேமச்செப்பில் வெந்நீர் அருந்தினான் என்பதும் காலத்தைக் கணித்துக் கூறினான் என்பதும் அறியப்படுகின்றன. ஆனால், இவன் துறவியல்லன்; இல்லறத்தானே.

பிற்காலத்து நூலாகிய புறப்பொருள் வெண்பாமாலையில் அரசமுல்லை, அரசவாகை, பார்ப்பன முல்லை, பார்ப்பன வாகை கூறப்படுவதுபோலவே கணிவன் முல்லை, அறிவன் வாகை

கூறப்படுகின்றன. இதில் கணிவனும் அறிவனும் ஒருவரே என்பது தெரிகின்றது.

(முல்லை என்பது இயல்பால் பெற்ற வென்றி; வாகை என்பது முயற்சியால் பெற்ற வென்றி என்பர்.)

புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண் படலம் ஒம்படையில் அறிவன் கூறப்படுகிறான்.

இன்னது செய்த லியல்பென விறைவன்
முன்னின் றறிவன் மொழிதொடர்ந் தன்று

என்பது அச்செய்யுள்.

ஆகவே, இளம்பூரண உரையாசிரியர் கூறுவது போல, கணிவனும் அறிவனும் ஒருவரே என்பதும் அவர்கள் வானநூலை அறிந்து முகூர்த்தம் முதலிய காலங்களைக் கூறினார்கள் என்பதும் தெரிகின்றன. நச்சினார்க்கினியர் கூறுவதுபோன்று அறிவர் துறவு பூண்ட முனிவர் அல்லர். அறிவர் என்பவர் பிற்காலத்தில் கணிவர் என்று பெயர்பெற்றனர். பண்டைக் காலத்தில் தமிழ் நாடாக இருந்து இப்போது மலையாள மொழி பேசும் நாடாக மாறிப்போன மலையாள தேசத்தில் கணியர் (கணிவர்) இன்றும் இருக்கிறார்கள்.

பழைய தமிழ்நாட்டுச் சொல்லாட்சியையும் பழைய திராவிடப் பழக்கவழக்கங்கள் சிலவற்றையும் அழியாமல் பாது காத்து வருகிறது குட நாடாகிய துளு நாடு. திராவிட இனத்தைச் சேர்ந்தவராகிய துளுவர் சமூகத்திலே பழைய அறிவர் இன்றும் இருந்து வருகின்றனர். இப்போது அவர்கள் அறுவர் என்று பெயர் கூறப்படுகின்றனர். சங்க காலத்தில் தமிழ் நாட்டிலே அறிவர் என்னும் பெயருடன் இருந்தவர்தான் இப்போது துளு நாட்டிலுள்ள அறுவர் என்பவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. திராவிட இனத்தவராகிய துளுவருக்குத் திருமணம் செய்து வைக்கிற புரோகிதராகத் துளு நாட்டு 'அறுவர்' இன்றும் இருந்து வருகின்றனர். இதனாலும் தமிழ் நாட்டுக்கும் மற்றத் திராவிட நாட்டுக்கும் பண்டைக் காலத்தில் இருந்த ஒருமைப்பாட்டை அறிகிறோம். அறிவர் என்னும் பெயர் பெற்ற கணியர் என்னும் வானநூல் அறிஞர் தமிழ் நாட்டிலும் ஏனைய திராவிட நாடுகளிலும் பண்டைக் காலத்தில் இருந்தனர் என்று தெரிகின்றனர். இதனால், பண்டைத் தமிழகத்தில் அறிவர் என்னும் இனத்தார் இருந்தனர் என்பதும் அவர்கள் பிற்காலத்தில் கணிவர் என்று பெயர் பெற்றிருந்தனர் என்பதும் அறியப்படுகின்றன.

6. நடுகல் என்னும் வீரக்கல்

சங்க காலத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கையில் முதலிடம் பெற்றிருந்தவை வீரமும் காதலுமே. அக்காலத்து மக்கள் காதலையும் வீரத்தையும் போற்றினார்கள். ஆகவே, அக்காலத்துப் புலவர்கள், காதல் துறையைக் கூறுகின்ற அகப்பொருட் செய்யுட்களையும் போர்வீரருடைய வீரத்தைக் கூறும் புறப்பொருட் செய்யுட்களையும் அதிகமாகப் பாடினார்கள். சங்க காலத்திலே முதன்மையான இலக்கியங்கள் இவை இரண்டுமே. பிற்காலத்திலே பக்திப் பாடல்கள் (சமயத் துறைச் செய்யுட்கள்) முதலிடம் பெற்றது போல, சங்க காலத்தில் சமயத் துறைச் செய்யுட்கள் முதலிடம் பெறவில்லை.

வீரத்தைப் போற்றிய சங்க காலத் தமிழர், போர்க்களத்திலே புறங்கொடாமல் போர் செய்து வெற்றிபெற்ற வீரனைப் போற்றினார்கள். வீரன் போர்க்களத்தில் உயிர் நீத்தால், அவன் வீரத்தைப் போற்றுவதற்காகவும் அவனை நினைவுகூர்வதற்காகவும் நடுகல் என்னும் வீரக்கல் நட்டு வாழ்த்தினார்கள்.

அக்காலத்துத் தமிழர், ஒவ்வொரு வகைப் போருக்கும் வெவ்வேறு பெயர் கொடுத்திருந்தனர். பகையரசன் நாட்டிற் சென்று அந்நாட்டு ஆனிரைகளைக் கவர்ந்துகொண்டு வருவதற்கு வெட்சிப் போர் என்றும், ஆனிரைகளை மீட்பதற்காகச் செய்யும் போருக்குக் கரந்தைப் போர் என்றும், நாட்டைப் பிடிப்பதற்காகவோ அல்லது வேறு காரணத்துக்காகவோ ஒரு அரசன் மற்றொரு அரசன் மேல் படையெடுத்துச் சென்று செய்யும் போருக்கு வஞ்சிப் போர் என்றும், படையெடுத்து வந்தவனுடன் எதிர்த்துச் செய்யும் போருக்குத் தும்பைப் போர் என்றும், கோட்டை மதிலை வளைத்துக்கொண்டு முற்றுகையிடும் போருக்கு உழிஞைப் போர் என்றும் கோட்டை மதிலுக்குள்ளிருந்து முற்றுகையிட்டவனுடன் செய்யும் போருக்கு நொச்சிப் போர் என்றும் பெயரிட்டிருந்தார்கள்.

எந்தப் போராக இருந்தாலும் போர்க்களத்தில் நின்று பகைவரை ஓட்டியவனின் வீரத்தைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். அவ்விறல் வீரன் போர்க்களத்தில் போர் செய்து உயிர்விட்டால், அவனது வீரத்தைப் போற்றி அவனை நினைவு கூர்தற்கு அவன் பெயரால் நடுகல் என்னும் வீரக்கல்லை நட்டார்கள். அக்காலத்து மக்களின் பழக்க வழக்கங்களைக் கூறுகிற தொல்காப்பியர், அக்காலத்தில் இருந்த நடுகல் நடும் வழக்கத்தையும் தமது நூலில் கூறினார். "வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்" எனத் தொடங்கும் சூத்திரத்தின் இறுதியில்.

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மரபிற் கல்லொடு புணர
(தொல். புறத்திணையியல்)

என்று கூறினார்.

போரில் புறங்கொடாமல் வீரப்போர் செய்து களத்தில் வீழ்ந்த வீரனுக்கு நடுகல் நடும்போது, அதற்குரிய கல்லைத் தேடித் தெரிந்தெடுத்தலும், அக்கல்லைக் கொண்டுவருதலும், அக்கல்லில் இறந்தவன் பெயரையும் அவன் இறந்த விதத்தையும் எழுதி நீராட்டுதலும், அக்கல்லை நடுதலும், அவ்வீரனுடைய புகழை வாழ்த்திப் போற்றலும் என்னும் நிகழ்ச்சிகள் நடந்தன. (சீர்தகு சிறப்பில் பெரும்படை என்பது, போரில் புறங்கொடாமல் இறந்த வீரன் அரசனாக இருந்தால் அவனுக்கு நடுகல் நட்டு அதன் மேல் பெரும்படையாகக் கோவில் அமைப்பது. இதுபற்றித் தனியே கூறுவோம்.)

தொல்காப்பியருக்குப் பிறகு, பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலே இயற்றப்பட்ட *சிலப்பதிகாரமும்* நடுகல்லைப் பற்றித் தொல்காப்பியர் கூறியதையே கூறுகின்றது. "காட்சி கால்கோல் நீர்ப்படை நடுகல், வாழ்த்து" என்று *சிலப்பதிகாரப்* பதிகம் (வரி 84, 85) கூறுகின்றது. அதற்கேற்பவே காட்சிக் காதை, கால்கோட் காதை, நீர்ப்படைக் காதை, நடுகற் காதை, வாழ்த்துக் காதை என்று ஐந்து காதை களையும் கூறுகின்றது. வீரருக்கு நடுகல் அமைத்தது போலவே, வீரபத்தினியாகிய கண்ணகிக்கும் வீரக்கல் அமைத்து அவரைப் போற்றியதைச் *சிலப்பதிகாரத்தினால்* அறிகிறோம்.

நடுகல் நடும் வழக்கம் தமிழ் நாட்டில் நெடுங்காலமாக இருந்து வந்தது. அண்மைக்காலம் வரையில், கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரையில், அதாவது பிற்காலச் சோழர் ஆட்சியின் இறுதிக்காலம் வரையில் வீரக்கல் அமைக்கும் வழக்கம் இருந்து வந்தது.

திருவள்ளுவர் தமது *திருக்குறளிலே* நடுகல்லைப் பற்றிக் கூறுகிறார்:

என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர் என்ஐ
முன்நின்று கல்நின் றவர் (படைச்செருக்கு)

வீரக்கல் நட்டுப் போரில் உயிர்விட்ட வீரனை நினைவுகூரும் வழக்கம் தொல்காப்பியர் காலந்தொட்டு ஏறத்தாழ கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரையில் இருந்தது என்று கூறினோம். சங்க இலக் கியங்களிலே நடுகல்லைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

பல்லா தழீஇய கல்லா வல்வில்
உழைக்குரற் கூகை யழைப்ப வாட்டி

நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபிற் சூட்ட
நிரையிவண் தந்து நடுகல் லாகிய
வென்வேல் விடலை (புறம் 261 : 11-16 ஆவூர் மூலங்கிழார்)

சிலையே றட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக்கு இவர்ந்த ததர்கொடி யதிரல்
நெடுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டுஞ்
சுரன் (அகம் 289 : 1-4 இளங்கீரனார்)

கடுமான் என்னும் வீரன் போரில் இறந்தபோது அவனுக்கு நடுகல் நட்டதைக் கோனாட்டு முகையலூர்ச் சிறுகருத்தும்பியார் பாடியது இது:

ஊர்நனி யிறந்த பார்முதிர் பரந்தலை
ஓங்குநிலை வேங்கை ஒள்ளிணர் நறுவீப்
போந்தையந் தோட்டின் புனைந்தனர் தொடுத்துப்
பல்லான் கோவலர் படலை சூட்டக்
கல்லா யினையே கடுமான் தோன்றல் (புறம் 265 : 1-5)

அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் சிற்றரசன் போர்க் களத்தில் உயிர்நீத்தபோது அவனுக்கு நடுகல் நட்டு மயிற்பீலியால் அலங்கரித்து மதுபானத்தைப் படைத்தனர். அப்போது ஔவையார் பாடிய செய்யுள் இது:

நடுகல் பீலி சூட்டி நார்அரி
சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ
கோடுயர் பிறங்குமலை கெழீஇய
நாடுடன் கொடுப்பவுங் கொள்ளா தோனே
(புறம் 232 : 3-6)

நடுகல்லில், இறந்த வீரனுடைய பெயரும் அவன் போரில் இறந்த காரணமும் எழுதப்படுவது வழக்கம். இதை 'எழுத்துடை நடுகல்' என்று கூறுகிறார் சித்தலைச்சாத்தனார் (அகம் 53 : 11).

நடுகல்லுக்கு மயிற்பீலி சூட்டித் துடியை (பம்பை) ஒலித்துப் போர் வீரர்களுக்கு உணவைவிட உகந்ததாகிய மதுபானத்தைப் படைத்து ஆட்டுக்குட்டியைப் பலிகொடுத்து இறந்த வீரனைப் போற்றினார்கள் என்று அம்மூவனார் என்னும் புலவர் கூறுகிறார்.

நுழைநுதி நெடுவேல் குறும்படை மழவர்
முனையாத் துந்து முரம்பின் வீழ்த்த
வில்லோர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரம் (அகம் 35 : 4-10)

பண்டைக் காலத்து நடுகற்கள் நமக்குக் கிடைக்காமற் போனாலும் பிற்காலத்து நடுகற்கள் சில கிடைத்துள்ளன. எபிகிறாபி என்னும் சாசன எழுத்து இலாகாவும் ஆர்க்கியாலஜி என்னும் பழம் பொருள் ஆராய்ச்சி இலாகாவும் சில நடுகற்களைக் கண்டுபிடித்துள்ளன. நடுகற்களில் எழுத்துக்கள் சுருக்கமாகவே எழுதப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றைக் காட்டுவோம்.

இப்போது ஆந்திர தேசத்துடன் இணைந்துபோனதும், தமிழ் நாட்டின் பகுதியாக இருந்ததுமான சித்தூர் மாவட்டத்துப் புங்கனூர் தாலுகா காப்பள்ளெ கிராமத்தில் உள்ள தமிழ் எழுத்துச் சாசனம். கி.பி. 9ஆம் நூற்றாண்டு. வைதம்ப குலத்துப் பள்ளொ (பல்லவ?) அரசனான சாதெ அரசன் ஆட்சியில், கோணக்கி என்பவன் படையுடன் வந்து தொறு (ஆனிரை) கொண்டு போனதையும், அவ்வமயம் முத்துக்கூரு உடையான் வைதம்ப சூலத்து சுவப்ப்ராசா மகன் போரிகடேசரே என்பவன் சாதே அரசனுக்கு உதவியாகத் தொறு மீட்டுக் கொடுத்ததையும், மீட்ட பிறகு அப்போரில் இறந்ததையும் கூறுகிறது இந்த நடுகல் சாசனம் (*Epi. Report* 165 of 1933-34).

வடஆர்க்காடு மாவட்டம் செங்கம் தாலுகா வேலூரில் உள்ள நடுகல் சாசனம். இந்தச் சாசனக் கல்லில், வில்லும் அம்புங்கொண்டு போர் செய்கிற ஒரு வீரனுடைய புடைப்புச் சிற்பமும் இருக்கிறது. விசய நரசிம்மவர்மனுடைய இரண்டாவது ஆண்டில் எழுதப்பட்டது இச்சாசனம். வாணசேகரன் அதியரசர் சேவகனாகிய மீக்கொன்றை நாட்டு மேல்வேளூர் அதிபர் பரயம் ஆளியார் என்பவர், தமது ஊர்த் தொறுவைப் பகைவர் கொண்டுபோனபோது, போர் செய்து தொறுவை மீட்டார். ஆனால், அப்போரில் உயிர் துறந்தார். அவருடைய வீரத்தைப் பாராட்டி நடப்பட்டது இந்த நடுகல் (*Epi. Rep.* 69 of 1933-34).

வட ஆர்க்காடு மாவட்டம் செங்கம் தாலுகா வேலூரில் உள்ள நடுகல் சாசனம் சுந்தர சோழன் II உடைய 16ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. மீகொன்றை நாட்டைச் சேர்ந்த வேலூரை வாணகோவரையர் என்னும் சிற்றரசர் ஆண்டபோது, அவ்வூர்த் தொறுவைப் பகைவர் கொண்டுபோக, வாணகோவரையரின் சேவகராகிய (போர் வீரனாகிய) பொங்கள தொண்டைமான் மகன் வேம்படி என்பவர் பகைவருடன் போர் செய்து தொறு மீட்டார். ஆனால், போரில் உயிர் விட்டார் என்று இக்கல்வெட்டுச் செய்தி கூறுகிறது (*Epi. Rep.* 67 of 1933-34).

வட ஆர்க்காடு மாவட்டம் செந்தாட்டூரில் உள்ள நடுகல் சக ஆண்டு 832 (கி.பி. 910) செந்தாட்டூரில் பகைவர் வந்து தொறுக் கவர்ந்து சென்றபோது, இகல் மறைமங்கலத்து மாவலிவாண ராயரான குடிபரிதாண்டிக்காமனார் அத்தொறுவை மீட்டுப் போரில் இறந்தார் என்பதை இந்நடுகற் சாசனம் கூறுகிறது.

வடஆர்க்காடு மாவட்டம் வேலூர் தாலுகா ஆம்பூர் காங்கரெட்டித் தெருவில் உள்ள இரண்டு வீரகற்கள். (ஆம்பூரின் பழைய பெயர் ஆமையூர் என்று இச்சாசனங்களிலிருந்து தெரிகின்றது.) கோவிசைய நிருபதுங்க வர்மர் என்னும் அரசன் காலத்தில் நிகழ்ந்த கரந்தைப் போரைக் கூறுகின்றன இவ்வீரக் கற்சாசனங்கள். இச்சாசனங்களின் வாசகம் இவை:

"ஸ்ரீ கோவிசைய நிருபதொங்க விக்கிரம பருமர்க்கு யாண்டு இருபதாவது, படுவூர் கோட்டத்து மேல் அடையாறு நாட்டு ஆமையூர் மேல் நுளம்பன் படை வந்து தொறு கொள்ள பிருதிகங்கரையர் சேவகர் பெருணகரக் கொண்டக் காவிதி அகளங்கத்துவராயர் மகன் சண்ணன் தளரா வீழ்ந்துபட்டான்."

(காவிதி என்பது சேனைத் தலைவருக்கு அரசரால் அளிக்கப்படும் பட்டம்.)

"கோவிசைய நிருபதொங்க விக்கிரமபருமர்க்கு யாண்டு இருபத்தாறாவது, படுவூர்க் கோட்டத்துமேல் அடையாறு நாட்டு ஆமையூர் மேல் நுளம்பன் படைவந்து தொறு கொள்ள பிருதிகங்கரையர் சேவகர் அகளங்கத்துவரையர் மருகன் மசிழு...னி வேடன் கலியராமன் பட்டான்" ('Two Tamil Inscriptions at Ambur', E. Hultzsch, *Epigraphia Indica*, Vol. IV, p. 189-190; *Ep. Rep.* 1896, p. 2).

மேற்படி மாவட்டம் முக்குத்தூரில் உள்ள மற்றொரு நடுகல் சாசனம்: "கோவிசெய நரசிங்க பருமற்கு யாண்டு மூன்றாவது வின்றுநாட்டு வடகரை ஆளுந் தகடூர் நாடர் வலிமதுர சேவகர் பாக்கத்துக்குடி அதிமத்தார் முருகன் முக்குட்டூர்த் தொறு சன்மதுரரு கொள்ளத் தொறு மீட்டுப்பட்டார்" ('Kil Muthugur Inscriptions', *Epigraphia Indica*, Vol. IV, p. 360).

வடஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் தாலுகா குளிதிக்கி கிராமத்தில் ஆற்றுக்கு அருகில் உள்ள சாசனம். இது விஜய நந்திவர்மன் என்னும் பல்லவ அரசனின் 52ஆவது ஆண்டில் எழுதப்பட்டது.

"ஸ்ரீ கோவிசெய நந்திச்சுர பருமற்கு யாண்டு ஐம்பத் திரண்டாவது, பெருமானடிகள் மேல் பல்லவரையன் படைவந்து பெண்குழிக்கோட்டை அழித்த ஞான்று வாணவரையர் மாமாடி திரிக எனத் திரிந்து பட்டார் கற்காட்டூர் உடைய கங்கதியரையர் கன்னாடு பெருங்கங்கர்" ('Kulidikki Inscription of Vijaya Nandisvara Varman', *Epigraphia Indica*, Vol. XXII, 1933-34, pp. 110-115).

தென் ஆர்க்காடு மாவட்டம் திண்டிவனம் தாலுகா ஓலக்கூர் சாவடிக்கு அருகில் நடப்பட்டுள்ள நடுகல். இக்கல்லில், வீரன் ஒருவன் கையில் வாளை ஏந்திச் செல்வதுபோல புடைப்புச் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. முற்காலத்தில் இவ்வூரில் யானைகளைக் கொண்டு கொந்தளிப்பு உண்டாக்கி ஊரை அழித்தபோது,

இவ்வூர் மாதிரன் என்பவன் எதிர்த்துப் போராடி இறந்ததை இக்கல்லெழுத்துக் கூறுகிறது. இதன் வாசகம்:

"கம்பப்பெருமாள் ஆனையாடின கொந்தளத்து இவ் வூரழிந்த நாட்பட்டான் இவ்வூர் தொதுபத்தி மாதிரன். ஸ்வஸ்தி ஸ்ரீ" (*SII*, Vol. XII, No. 112).

சேர நாட்டில் ஆரம்பொழி என்னும் ஊரில் இருந்த வீரக்கல். இவ்வீரக்கல்லை, *மனோன்மணீயம்* ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் கண்டுபிடித்து அதைக் கொண்டுவந்து திருவனந்தபுரம் காட்சிசாலையில் வைத்தார். இதன் ஒரு பக்கத்தில் ஒரு வீரன் இடது கையில் வில்லையும் வலது கையில் கட்டாரியையும் பிடித்துக்கொண்டு நிற்பது போல, புடைப்புச் சிற்பம் இருக்கிறது. பின்புறத்தில் கீழ்க்கண்ட சாசனம் வட்டெழுத்தில் எழுதப் பட்டிருக்கிறது.

"ஸ்ரீ கோமாறஞ்சடையற் கிருபத்தேழாமாண்டு சேரமானார் படைவிழுஞுத்து புறத்து விட்டுழக்க கரைக்காட்டை அழிப்பான் வர பெருமானடிகளன்பு மிக்குள இரணகீர்த்தியு அமர்க்கழிஉம் உள்ளீட்டினொற்றைச் சேவர் கோட்டை யழியாமைக் காத் தெறிந்து பலரும் பட்ட இடத்து இரணகீர்த்தி உள்வீட்டுச் சேவகன் கொழுவூர்க் கூற்றத்துப் பெருவூர்த் தாதம் பெருந்திணை ஆத்திரத்தாற் பலரோடுங் குத்திப்பட்டான்..." ('Travandram Museum Stone Inscription of Maranjadaiya', *Travancore Archaeological Series*, Vol. I, pp. 153-159; 'Ranakirti Tatam : A South Indian Warrior of the Eighth Century', *Kerala Society Papers*, Vol. I, 1928-30, p. 146).

போர்க்களத்தில் வீரங்காட்டியவர்களுக்கு மட்டுந்தான் வீரக்கல் நடப்பட்டது என்று கருதவேண்டா. புலிகளுடன் போராடி உயிர்விட்ட வீரர்களுக்கும் நடுகற்கள் அமைக்கப் பட்டன. பண்டைக் காலத்துத் தமிழர் வீரச்செயலைப் போற்றும் பண்பினர் ஆகையால், எத்தகைய வீரர்களுக்கும் நடுகற்கள் நட்டுச் சிறப்புச் செய்தார்கள். புலியுடன் போராடுவது, மனிதருடன் போர் செய்வதைவிட அதிக வீரமான செயல். இக்காலத்தில் யானைகளின் மேல் அமர்ந்து, பல பாதுகாப்பான சூழ்நிலைகளு டன் தூரத்தில் இருந்துகொண்டு துப்பாக்கியினால் சுட்டுப் புலிகளைக் கொல்லும் வேட்டையன்று பண்டைக் காலத்துப் புலி வேட்டை. நேருக்கு நேர் புலியுடன் நின்று போரிட வேண்டும். அவ்வாறு புலிகளுடன் போராடி உயிர்விட்ட வீரர்களுக்கும் நடுகல் நட்டுப் பாராட்ட வேண்டியதுதானே. ஆகவே, வீரத்தைப் போற்றிப் பாராட்டிய அக்காலத் தமிழர் அவர்களுக்கும் நடுகல் நட்டனர். அவ்வீரக் கற்கள் சிலவற்றைக் காட்டுவோம்.

வடஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் தாலுகா கீழ்முத்துக்கூர். (இவ்வூரின் பழைய பெயர் முக்குத்தூர்.) இங்குள்ள ஒரு நடுகல்லில் ஒரு வீரன் தனித்து நின்று கட்டாரியினால் ஒரு

புலியைக் குத்திக் கொல்வது போன்று புடைப்புச் சிற்பம் காணப்படுகிறது. இதிலுள்ள சாசன வாசகம் இது:

"ஸ்ரீ மதுரை கொண்ட கோப்பர கேசரிவன்மற்கு யாண்டு முப்பத்து இரண்டாவது, வடகரை முக்குத்தூர் குமாரனடி புழலப்பன் புலி குத்தின கரைநாடு" ('The Tamil Inscriptions at Kil-Muthugur', *Epigraphia Indica*, Vol. IV, pp. 177-179).

கோவிலூர் சிவன் கோவிலில் உள்ள நடுகல் சாசனம் ஒன்று, புலி வேட்டையில் வில்லி ஒருவர் புலியுடன் பொருது உயிர் விட்டதைக் கூறுகிறது (348 of 1921).

தமிழ் நாடாக இருந்து இப்போது ஆந்திர தேசத்துடன் இணைந்துபோன சித்தூர் மாவட்டத்துப் புங்கனூர் தாலுகா எடுரு என்னும் ஊரில் உள்ள சிவன் கோவிலுக்கு அப்பால் சிறிது தூரத்தில் ஒரு வயலில் உள்ள புலிராயி என்னும் புலிக்கல். தமிழ்ச் சாசனம். குலோத்துங்க சோழனுடைய 39ஆவது ஆண்டில் எழுதப்பட்டது. ஜயங்கொண்ட சோழமண்டலத்து பெரும் பாணப்பாடி புலி நாட்டு இடையூர் ஆன சென்பியன் ஸ்ரீகர நல்லூரில் இருந்த வில்லி அபிமான முத்தரையன் மகன் மாச்சன் என்பவன் ஒரு புலி யுடன் பொருது அதனைக் குத்திக் கொன்று தானும் இறந்தான் என்னும் செய்தியை இவ்வீரக்கல் சாசனம் கூறுகிறது (205 of 1931-32).

வீரபல்லி அரசனான குமாரபல்லி அரசன் சாலிவாகன சகாப்தம் 1289இல் (கி.பி. 1367இல்) எழுதிய வீரக்கல் சாசனம். இவர் 150 புலிகளைக் கொன்றதாக இச்சாசனம் கூறுகின்றது.

"ஸ்வஸ்திஸ்ரீ, சகாப்தம் ஆயிரத்து இருநூற்று எண்பத் தொன்பதின்மேல் செல்லா நின்ற பிலவங்க சம்பவத்சரத்து விருஷப ஞாயற்று பூர்வபக்ஷத்து பிரதமையும் சனிக்கிழமையும் பெற்ற ரோஹிணி. நாம் தியாக சமுத்திரப்பட்டை அயோத்யாபுர வாரத்சர ஆபீரராய மாநமர்த்தன் அவிராய மானமர்த்தன் இராயகண்ட பேருண்ட பங்களராய பங்கள சக்கரவர்த்தி சுரியக்கார மகாமகேஸ்வர மத்யம தேசாதிபதி வீரஸ்ரீ வீரபல்லி அரசர் குமாரபல்லி அரசர் நான் இந்நாள் வரைக்கும் கொன்ற புலி நூற்றைம்பது" (*SII*, Vol. VIII, No. 471, p. 249).

உதாரணத்துக்காகச் சில நடுகற்களை மட்டும் இங்குக் காட்டினோம். இதுபோன்று நூற்றுக்கணக்கான வீரக்கற்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அவைகளை எல்லாம் கூறினால் தனி நூலாகும் என்று அஞ்சிக் கூறாமல் விட்டனம்.

தமிழ்நாட்டுக்கு வடக்கேயுள்ள வடுக தேசமாகிய கன்னட நாட்டிலும் வீரக்கற்களாகிய நடுகல் நடும் வழக்கம் பண்டைக் காலத்தில் இருந்தது. கன்னட நாட்டு வீரக்கற்களைப் பற்றி இங்கு எழுதினால் இடங்கொள்ளும் என்றஞ்சி அவற்றை இங்கு எழுதாது விடுகிறேன்.

7. பெரும்படை

இனி, *தொல்காப்பியச்* சூத்திரத்தில் பெரும்படை என்று கூறப்பட்டிருப்பதைப் பற்றி ஆராய்வோம்.

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூவகையில் கல்லொடு புணர

என்பது *தொல்காப்பியப்* புறத்திணையியல் 3ஆம் சூத்திரப் பகுதி.

இதில் "சீர்த்தகு மரபில் பெரும்படை" என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறும் உரை பொருந்தாது. இளம்பூரணர் கூறும் உரை சரியானது. இதற்கு இளம்பூரணர் கூறும் உரை இது:

"சீர்த்தகு மரபின் பெரும்படை - மிகவும் தக்க மரபினை யுடைய; பெரும்படை, அஃதாவது, நாட்டிய கல்லிற்குக் கோட்டஞ் செய்தல், அஃது இற்கொண்டு புகுதலென உரைத்த துறை."

இவ்வுரையிலும் முழு விளக்கம் தரப்படவில்லை. நாட்டிய கல்லிற்குக் கோட்டம் (கோவில்) அமைத்தல் என்று பொதுவாகச் சொல்லியிருக்கிறார். பெரும்படை என்பது, அரசர்கள் போர்க் களத்தில் உயிர்நீத்தால் அவர்களுக்கு நடுகல் நட்டு அக்கல்லுக்கு மேல் கோவில் (கோட்டம்) கட்டடம் அமைத்தல் என்பது பொருள். சாதாரண போர் வீரர்களுக்குக் கோட்டம் இல்லாத வெறும் நடு கல்லும், அரசர்களுக்குப் பெரும்படை என்னும் கோட்டமும் அமைக்கும் வழக்கத்தை இது அறிவிக்கிறது. பெரும்படை என்பதற்குச் சாசனங்களில் பள்ளிப்படை என்று பெயர் வழங்கப்பட்டுள்ளது.

போர்க்களத்தில் இறந்த அரசருக்குப் பெரும்படையாகிய பள்ளிப்படை அமைக்கும் வழக்கம் உண்டென்று *தொல் காப்பியச்* சூத்திரம் கூறுவதற்கு ஏற்பவே, சாசனச் சான்றும் கிடைக்கின்றது. அது வருமாறு:

"ஸ்ரீ கோவிராஜகேசரிபன்மரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு 29ஆவது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துப் பெருபாணப்பாடி தூநாட்டு மேற்பாடியாகிய ராஜாஸ்ரயபுரத்து நகரத்தோம் ஆற்றூர்த் துஞ்சினதேவர்க்குப் பள்ளிப்படையாக உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் எங்கள் நகரத்தில் எடுப்பித் தருளின திரு அருஞ்சிகை ஈஸ்வரத்து மகாதேவர் கோயில்" (*SII*, Vol. III, Part I, Nos. 15, 16, 17).

இந்தச் சாசனத்தில் கூறப்படுவது என்னவென்றால்: அருஞ்சிகை என்னும் பெயருள்ள ராஜராஜ சோழன் (முதலாவன்) இவ்வூரில் பகைவரோடு போராடுகையில் போர்க்களமாக இருந்த ஆற்றங்கரையில் மாண்டு போனான். அதன் காரணமாக ஆற்றூர்த்

துஞ்சிய தேவர் என்று அவனுக்குப் பெயர் உண்டாயிற்று. அவன் இறந்த இடத்தில் நடுகல்லுக்குப் பதிலாகப் பள்ளிப்படையாகக் (பெரும்படை) கோவில் கட்டப்பட்டது என்பதாம்.

சித்தூர் மாவட்டத்தில் உள்ள தொண்டமா நாட்டில், முதலாம் ஆதித்த சோழனுக்குப் பள்ளிப்படை (கோட்டம்) அமைக்கப்பட்டிருந்தது என்று ஆர்க்கியாலஜி இலாகா அறிக்கை கூறுகிறது (*Annual Report of the Archaeological Dept. South Circle*, Madras, Part II, 1915-16).

எனவே, நடுகல் என்னும் வீரக்கல் சாதாரண வீரர்களின் பொருட்டும், பெரும்படை என்பது பெரிய அரசர்களின் பொருட்டும் அமைக்கப்பட்டன என்பது தெரிகின்றது.

8. வாள் மண்ணுதல்

தொல்காப்பியம் புறத்திணையியலில் "குடையும் வாளும் நாள் கோள் அன்றி" எனத் தொடங்குகிற சூத்திரத்தில் "வென்ற வாளின் மண்ணு" என்று ஒரு துறை கூறப்படுகிறது. இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் "இருபெரு வேந்தருள் ஒருவன் ஒருவனை வென்றுழி அங்ஙனம் வென்ற கொற்றவாளினைக் கொற்றவை மேல் நிறுத்தி நீராட்டுதல்" என்று எழுதுகிறார். வாள்மண்ணுதலுக்கு வாண்மங்கலம் என்றும் பெயர் கூறுவர். வாள்மண்ணுதலாகிய வாண் மங்கலத்துக்குச் சாசனச் சான்று கிடைத்திருக்கிறது. இந்தச் சாசனம் இராஷ்டிரகூட அரசன் கன்னர தேவன் (மூன்றாம் கிருஷ்ணன்) என்னும் அரசன் காலத்தில் கி.பி. 949-50ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. மைசூர் நாட்டில் மைசூர் மாவட்டத்தில் மந்தியா தாலுகாவில் ஆதகூர் என்னும் ஊரில் இந்தச் சாசனம் இருக்கிறது.

கங்கவாடி தொண்ணூற்றாறாயிரம் நாட்டை அரசாண்டவ னாகிய பூதுகன் என்னும் சிற்றரசன், கன்னர தேவனுக்குக் கீழ்ப்பட்டவன். பூதுகனிடத்தில் மணலேரன் என்னும் ஒரு சேனைத் தலைவன் இருந்தான். அக்காலத்தில் கன்னர தேவனாகிய இராஷ்டிரகூட அரசனுக்கும் இராஜாதித்தியன் என்னும் சோழனுக்கும் போர் நடந்தது. இந்தப் போரிலே கன்னரதேவன் பக்கத்தில் பூதுகனும் அவனுடைய சேனைத் தலைவனாகிய மணலேரனும் போர்க்களஞ் சென்று போர் செய்தார்கள். சோழன் வெற்றிபெறும் நிலையில் இருந்தான். அப்போது பூதுகனின் சேனைத் தலைவனான மணலேரன் கள்ளத்தனமாகப் போர் செய்து சோழனைக் கொன்றுவிட்டான். ஆகவே, வெற்றி கன்னர தேவனுக்காயிற்று. இந்த வெற்றிக்காக மகிழ்ச்சியடைந்த கன்னரதேவன் பூதுகனுக்குப் பல ஊர்களைத் தானமாகக் கொடுத்துச் சிறப்புச் செய்தான். பூதுகன், இப்போரின் வெற்றிக்குக்

காரணமாயிருந்த தன்னுடைய வீரனாகிய மணலேரனுக்கு ஆதுகூர் பன்னிரண்டையும் பெள்வொள நாட்டில் காதியூரையும் தானமாகக் கொடுத்தான். இச்செய்தியைக் கூறுகிற இச்சாசனம் 'வாள்கழுவிக் கொடுத்தான்' என்று கூறுகிறது. இந்தக் கன்னடச் சாசனத்தின் இப்பகுதி வாசகம் இது ('Atakur Inscriptions of Krishna III and Bituka II (AD 949-50)'; *Epigraphia Indica*, Vol. VI, 1900-01):

20. *ஸ்வஸ்திஸ்ரீ எறியப்பன மகம் ராசமல்லனம் பூதுகம் காதிகொந்து தொம்பத்தறு ஸாஸிரமும் ஆளுத்திரெ கன்னர தேவம் சோழனம் காதுவந்து பூதகம் ராஜாதித்தயம் பிஸுகெயெ கள்ளனாகி ஸுரிகிறிது*
21. *காதிகொந்து பனவஸெ பன்னிர்ச் சாஸிரமும் பெள்வொள மூநூறும் புரிகெரெ மூனூறும் கிஸுகாடெழ்பதும் பாகெநா டெழ்பத்துவம் பூதுகங்கே கன்னரதேவம் மெச்சு கொட்டம். பூதுகனும் மணலேரம்*
22. *தன்ன முந்தே றிந்திரிதுதர்க்கெ மெச்சி ஆதுகூர்ப்*
23. *பன்னெரடும் பெள்வொளத காதியூருமம் பாள்*
24. *கச்சுகொட்டம், மங்கள மஹாஸ்ரீ.*

இச்சாசனத்தின் இறுதியில் பாள் கச்சு கொட்டம் என்று எழுதப்பட்டுள்ளது. இதன் பொருள்: பாள், பாளு – வாள்; கச்சு, கர்ச்சு, கழ்ச்சு – கழுவு; பாள் கச்சு கொட்டம் – வாள் கழுவிக் கொடுத்தான். இது பற்றி டி.ஏ. கோபிநாதராயர் அவர்களும் எழுதியுள்ளார் ('A Note on the Word Balgalchchu', *Indian Antiquary*, Vol. XL, 1911; 'Balgalchchu Gottam', *Epigraphia Indica*, Vol. VI, p. 35).

வெற்றிவாளை, வெற்றிக்கடவுளாகிய கொற்றவை (துர்க்கை) மேல் இரத்தக்கறை போகக் கழுவும் வழக்கம் இன்னொரு சாசனத்திலும் கூறப்படுகின்றது. சேர நாட்டில் இரவி வேந்தன் (வீரரவி கேரளவர்மன் திருவடி) என்னும் அரசன் காலத்தில் இச்சாசனம் எழுதப்பட்டது. இது இப்போது வாள்விச்ச கோட்டம் என்று பெயருள்ள ஊரில் உள்ள பகவதி (கொற்றவை) கோவிலில் இருக்கிறது. வாள்விச்சகோட்டம் என்று தவறாக வழங்கப்படுகிற இப்பெயரின் சரியான பெயர் வாள் வைத்த கோட்டம் என்பது. இந்தச் சாசனம் செய்யுளாக எழுதப் பட்டிருக்கிறது ('Three Records of Valvichcha Kottam', *Travancore Archaeological Series*, Vol. VI, Part I, No. 125).

ஆதி யெழு நூற்றுடன் தொண்ணூற்றையா மாண்டி
லற்பசியேழ் முற்றசமி யவிட்டம் வெள்ளி
மாதிசைசேரின்னாளி லிரவி வேந்தன் மனமகிழப்
பகவதி வாள் வைத்த கோட்டத்
தோதிலுறு மிறைவி யிருப்பதற்கு மேன்மையுறும்
முகமண்டபமா மதற்கு நாப்பண்

மூதறிவா லொருகலின் மண்டபமுஞ் செய்வித்தான்
முல்லைமங்கலன் திருவிக்கிரமன் தானே.

9. கழுதை ஏர் உழுதல்

ஒரு அரசன் பகையரசனுடைய கோட்டையை அழித்து ஏரில் கழுதையைப் பூட்டி ஏர் உழும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தது. இவ்வழக்கத்தைப் பற்றித் தொல்காப்பியர் கூறியதாகத் தெரியவில்லை. ஆனால், "தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்கு" என்று தொடங்கும் பொருளதிகாரம், புறத்திணையியல் சூத்திரத்தில் வருகிற 'மன்னெயில் அழித்த மண்ணுமங்கலமும்' என்னும் அடிக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் கழுதை ஏர் உழுதலைக் கூறுகிறார்.

"மன்னெயில் அழித்த மண்ணு மங்கலமும் - மற்றரசன் வாழ்ந்த மதிலையழித்துக் கழுதையேரான் உழுது வெள்ளை வரகுங்கொள்ளும் வித்தி மங்கல மல்லாதன செய்தவன் மங்கலமாக நீராடுமங்கலமும்" என்பது அவர் கூறும் உரை.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி தன் பகைவருடைய அரண்களை வென்று இடித்துத் தகர்த்துக் கழுதைகளைப் பூட்டிய ஏரினால் உழுதான் என்று புறநானூற்றுச் செய்யுள் கூறுகின்றது.

கடுந்தேர் குழித்த ளெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய்தனை யவர் நனந்தலை நல்லெயில்

(புறம் 15, பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமியை நெட்டிமையார் பாடியது.)

அதியமான் மகன் பொருட்டெழினி, பகைவருடைய கோட்டையை அழித்துக் குருதி ஈரத்தோடு இருந்த அந்த இடத்தைக் கழுதைகள் பூட்டிய ஏரினால் உழுது வரகும் கொள்ளும் விதைத்தான் என்று இன்னொரு செய்யுள் கூறுகிறது.

உருகெழு மன்னர் ஆரெயில் கடந்த
நிணம்படு குருதிப் பெரும்பாட் டீரத்து
அணங்குடை மரபின் இருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்
வைகல் உழவ

(புறம் 392, அதிகமான் மகன் பொருட்டெழினியை ஔவையார் பாடியது.)

சேரன் செங்குட்டுவனும் பகைவரை வென்று கழுதை ஏர் உழுத செய்தியை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கூறுகிறார்.

வடதிசை மன்னர் மன்னெயில் முருக்கி
கவடி வித்திய கழுதையோர் உழவன்
குடவர் கோமான் வந்தான்
(சிலம்பு, நீர்ப்படைக் காதை 225-227)

இவ்வாறு சங்க இலக்கியங்களில், வென்ற அரசர் பகை யரசரின் கோட்டைகளை அழித்துக் கழுதையினால் ஏர் உழுத செய்தி கூறப்படுகின்றன. இதே வழக்கம் வடநாட்டிலும் இருந்திருக்கிறது. காரவேலன் என்னும் கலிங்க நாட்டு அரசன் (கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இருந்தவன்) ஹத்திகும்பா குகைக் கோவிலில் பிராகிருத மொழியில் எழுதி வைத்திருக்கிற சாசனத்தில் இச்செய்தியைக் கூறியுள்ளான் (ஹத்திகும்பா என்னும் இடம் ஒரிசா நாட்டிலே பூரி மாவட்டத்தில் உள்ள புவனேசுவரம் என்னும் ஊருக்கு மூன்று மைல் தூரத்தில் இருக்கிறது). இவ்வரசனுடைய பல செய்திகளைக் கூறுகிற இந்தச் சாசனம், காரவேலன் பிதுண்ட நகரத்தை அழித்துக் கழுதை பூட்டிய ஏரினால் உழுத செய்தியையும் கூறுகிறது. அந்தச் சாசனத்தின் 11ஆவது வரியிலே, "*ச ஆவ ராஜ நிவேஸிதம் பீதுண்டம் கதபநம் கலேன காஸயதி*" என்று எழுதப்பட்டிருக்கிறது. அதாவது, ஆவ அரசன் அமைத்த பிதுண்டம் என்னும் கோட்டையைக் கழுதை ஏரினால் உழுதான் என்பது பொருள் ('The Hatigumpa Inscriptions of Karavela', *Epigraphia Indica*, Vol. XX, pp. 71-89).

ஹரிபத்ரீ என்பவர் எழுதிய *ஆவஸ்யக விருத்தி* என்னும் நூலிலும், ஹேமசந்திரர் எழுதிய *வீரசரித்திரத்திலும்* இச்செய்தி கூறப்பட்டிருக்கிறதாம். கோணிகன் என்னும் அரசன் வைசாலி நாட்டரசனை வென்று அவனுடைய கோட்டையை இடித்துத் தகர்த்துக் கழுதைகள் பூட்டிய ஏரினால் உழுதான் என்று அந்த நூல்கள் கூறுகின்றன என்பர். இதனால், அரசர் கழுதையினால் ஏர் உழுத வழக்கம் தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல் கலிங்க தேசம், வைசாலி முதலிய வடநாடுகளிலும் இருந்தது என்பது தெரிகின்றது.

இதுகாறுங் கூறப்பட்டதிலிருந்து, *தொல்காப்பியப்* பொரு ளதிகாரத்தில் கூறப்பட்ட செய்திகள் அக்காலத்தில் மக்களிடத்தி லிருந்த பழக்க வழக்கங்களைத்தான் விளக்குகின்றன என்பது தெரிகின்றது. அந்தப் பழக்க வழக்கங்கள் பிற்காலத்திலும் நெடுங்காலம் வரையில் நடைமுறையில் இருந்தன என்பதும் சாசனச் சான்றுகளால் அறியப்படுகின்றன.

III. சங்க காலத்து நகரங்கள்

1. சங்க காலத்துக் காவிரிப்பூம்பட்டினம்

கடைச்சங்க காலத்தில் சோழ நாட்டின் தலைநகரம் உறையூராகவும் அதன் முக்கியத் துறைமுகப்பட்டினம் காவிரிப் பூம்பட்டினமாகவும் இருந்தன. காவிரிப்பூம்பட்டினத்தின் நகர அமைப்பு கி.பி. முதல் நூற்றாண்டிலும் இரண்டாம் நூற்றாண் டிலும் எவ்வாறு இருந்தது என்பதை இங்கு ஆராய்வோம்.

காவிரிப்பூம்பட்டினத்துக்குப் புகார் என்றும் பூம்புகார் என்றும் பெயர்கள் உள்ளன. காகந்தி என்றும் சம்பாபதி என்றும் வேறு பெயர்களும் உண்டு. பாலி மொழியில் எழுதப்பட்ட மிகப் பழமையான *புத்த ஜாதகக்* கதைகளிலே அகித்தி ஜாதகத்தில் இந்தப் பட்டினம் டமிள நாட்டுக் கவீரபட்டணம் என்று கூறப்படுகிறது (டமிள நாடு – தமிழ்நாடு). போதிசத்துவராகிய புத்தர் தமது பழம் பிறப்பிலே அகித்தி முனிவராகப் பிறந்து காவிரிப்பூம்பட்டினத்திலே ஒரு தோட்டத்திலே தங்கித் தவஞ் செய்திருந்தார் என்று அதில் கூறப்படுகிறார். கி.மு. முதல் நூற்றாண்டிலே இலங்கையை அரசாண்ட கமுனு (துட்டகமுனு) என்னும் அரசனுடைய மனைவி, அவளுடைய முற்பிறப்பிலே காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு கப்பல் தலைவனுடைய குடும்பத்தில் பிறந்திருந்தாள் என்று கூறப்படுகிறாள். இலங்கை நாட்டிலே வழங்குகிற *இரசவாகினி* என்னும் நூலிலே, காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்த பௌத்தப் பள்ளிகள் கூறப்படுகின்றன. பெரிப்ளஸ் என்னும் கிரேக்க நூலாசிரியர் காவிரிப் பூம்பட்டினத்தைக் 'கமரா' என்று கூறுகிறார். டாலமி என்னும் யவனர் இப்பட்டினத்தை 'கபேரிஸ் எம்போரியன்' என்று எழுதியிருக்கிறார்.

இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்பு, காவிரிப்பூம் பட்டினம் உலகப் புகழ்பெற்ற துறைமுகப்பட்டினமாக விளங்கிற்று. கீழ் நாடுகளிலிருந்தும் மேல் நாடுகளிலிருந்தும் வந்த அயல் நாட்டுக் கப்பல் வாணிகர் சந்திக்கும் இடமாக இப்பட்டினம் இருந்தது. அவர்களில் குறிப்பிடத்தக்கவர் யவனர் எனப்படும் கிரேக்கர் ஆவர். புகார் நகரத்துக் கப்பல் வாணிகர் இங்கிருந்து கப்பல்களில் பண்டங்களை ஏற்றிக்கொண்டு ஈழம் (இலங்கை), சாவகம் (ஜாவா முதலிய கிழக்கிந்தியத் தீவுகள்),

காழகம் (பர்மா தேசம்), கடாரம் (மலாய தேசம்) முதலிய நாடுகளில் சென்று வாணிகம் புரிந்தனர்.

சீர்காழிக்குத் தென்கிழக்கே ஒன்பது மைல் தூரத்தில் காவிரி ஆறு கடலில் கலக்கிற புகர் முகத்திலே பேர்போன காவிரிப் பூம்பட்டினம் இருந்தது. அப்பட்டினம் இப்போது சிறு கிராமமாகக் காட்சியளிக்கிறது.

கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் காவிரிப்பூம் பட்டினம் எவ்வாறு இருந்தது என்பதைச் சங்க காலத்து நூல் களில் இருந்து ஆராய்வோம்.

கீழ்க்கடல் என்றும் குணகடல் என்றும் தொடுகடல் என்றும் அக்காலத்தில் பெயர் பெற்றிருந்த இப்போதைய வங்காளக் குடாக்கடலில், காவிரி ஆறு கடலில் கலக்கிற புகர் முகத்தில், காவிரி ஆற்றுக்கு வடகரையில் புகார்ப்பட்டினம் அமைந் திருந்தது. காவிரி ஆற்றின் புகர் முகத்தில் அமைந்திருந்தபடியால், இப்பட்டினத்துக்குப் புகார்ப்பட்டினம் என்றும் புகார் என்றும் பூம்புகார் என்றும் பெயர்கள் அமைந்தன.

இந்த நகரத்தின் சுற்றளவு நான்கு காதம் என்று கூறப்படுகிறது.


> பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென்
> கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்
> காத நான்கும் கடுங்குர லெடுப்பிப்
> பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்

என்று *சிலப்பதிகாரம்* (5ஆம் காதை 131-134) கூறுவதிலிருந்து இப்பட்டினம் நான்கு காத சுற்றளவிலிருந்தது என்பது பெறப் படுகின்றது.

("காத நான்கும் - ஊர் சூழ்ந்த நாற்காத வட்டகையும்" என்பது அரும்பதவுரையாசிரியர் உரை. "காத நான்கும் என முற்றும்மை கொடுத்தலானே ஊர் நாற்காத வட்டகை என்பது உணர்க" – அடியார்க்கு நல்லார் உரை.)

காதம் என்பது ஏறக்குறைய பத்து மைல். புகார் நகரம் நாற்காத வட்டகையாக இருந்தது என்பதனாலே அது நாற்பது மைல் சுற்றளவுள்ளது என்பது பெறப்படுகிறது. இப்பட்டினம் நீண்ட சதுரமாக அமைந்திருந்தது என்பதைச் *சிலப்பதிகாரம்* 5ஆவது காதையிலிருந்து குறிப்பாக அறிகிறோம். கிழக்கு மேற்காக நீண்டும், வடக்குத் தெற்காக அகன்றும் இப்பட்டினம் அமைந்திருந்தது.

மணல் பரந்த கடற்கரை, நெய்தலங்கானல் என்று பெயர் பெற்றிருந்தது. நெய்தலங்கானலுக்கு மேற்கே காவிரிப்பூம் பட்டினம் இருந்தது. இப்பட்டினம் மருவூர்ப்பாக்கம், பட்டினப் பாக்கம் என்று இரண்டு கூறாக இருந்தது. மருவூர்ப்பாக்கத் துக்கும் பட்டினப்பாக்கத்துக்கும் இடை நடுவே ஒரு பெரிய


தெற்கு
கிழக்கு
மேற்கு
வடக்கு
5
40
30
7
8
9
2
1

தோட்டம் இருந்தது. இந்தத் தோட்டத்தில் பகல் வேளையில் பண்டங்கள் விற்கப்பட்டன. ஆகவே, இந்த இடம் நாளங்காடி என்று பெயர் பெற்றிருந்தது.

இனி, இப்பட்டினத்தின் ஒவ்வொரு பகுதியையும் தனித் தனியே பார்ப்போம்.

நெய்தலங்கானல்

இது கடற்கரையைச் சார்ந்த மணல் பரந்த இடம். நெய்தலங்கானலில் சோமகுண்டம், சூரியகுண்டம் என்னும் இரண்டு குளங்களும் காமவேள் கோவிலும் இருந்தன. இந்தக் குளங்களில் நீராடிக் காமவேளை வழிபடும் மங்கையர் இம்மையில் கணவனைப் பெற்று இன்பந்துய்த்துப் பின்னர் மறுமையில் போகபூமியில் போய்ப் பிறப்பார்கள் என்று அக்காலத்துப் புகார்ப்பட்டினத்து மக்கள் நம்பினார்கள்.

> கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றில்
> மடலவிழ் நெய்தலங் கானல் தடமுள
> சோமகுண்டம் சூரிய குண்டம் துறைமூழ்கிக்
> காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு
> தாமின் புறுவர் உலகத்துத் தையலார்
> போகஞ்செய் பூமியிலும் போய்ப்பிறப்பர்

என்று *சிலம்பு* (9ஆம் காதை 57-62) கூறுகிறது.

நெய்தலங்கானலில் இருந்த சோமகுண்டம், சூரியகுண்டங் களை, 'இருகாமத்து இணை ஏரி' என்று *பட்டினப் பாலை* கூறுகிறது. உரையாசிரியர் நச்சினார்க்கினியர் இதை இவ்வாறு விளக்குகிறார்: "இம்மையிலும் மறுமையிலும் உண்டாகிய காமவின்பத்தினைக் கொடுத்தற்குரிய இணைந்த ஏரிகள். இனி, வளகாமரேரி, வணிகாமரேரி என்றும் சங்கிராம காமம் வணிக்கிராமகாமம் என்றும் உரைப்ப."

காவிரிப்பூம்பட்டினத்தில் ஆண்டுதோறும் இருபத்தெட்டு நாட்கள் நிகழ்ந்த இந்திர விழாவின் இறுதியில் நகர மக்கள் இந்த நெய்தலங்கானலுக்கு வந்து எழினிகளால் அமைத்த கூடாரங் களில் தங்கிக் கடலில் நீராடிச் செல்வது வழக்கம் என்று *சிலம்பு*, கடலாடு காதையினால் அறிகிறோம்.

மருவூர்ப்பாக்கம்

கடற்கரையாகிய நெய்தலங்கானலை அடுத்துப் புகார்ப் பட்டினத்தின் ஒரு பகுதியாகிய மருவூர்ப்பாக்கம் இருந்தது. மருவூர்ப்பாக்கத்தின் தெற்கே, காவிரிக்கரையில், துறைமுகமும் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்களை வைக்கும் பண்டக சாலையும் இருந்தன.

மருவூர்ப்பாக்கத்தில் மீன் பிடிக்கும் பரதவர், கப்ப லோட்டிகள், உப்பு வாணிகர், தச்சர், கருமார், கன்னார், பொற் கொல்லர், பாணர், கூலவாணிகர் முதலியோர் குடியிருந்தனர். அக்காலத்தில் தமிழச் சமூகம் சிறுகுடி என்றும் பெருங்குடி என்றும் இரு பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இப்பிரிவு, நகரங்களிலே சிறப்பாக இருந்தது. சிறுகுடி என்பது செல்வந்தர் அல்லாத சாதாரண மக்களும் தொழிலாளரும் அடங்கிய பிரிவு. மருவூர்ப்பாக்கத்தில் வசித்தவர் சிறுகுடி மக்களாகிய தொழி லாளரும் சாதாரண மக்களுமாவர்.

மருவூர்ப்பாக்கத்தில் வசித்திருந்தவர்களைச் சிலப்பதிகாரம் இவ்வாறு கூறுகிறது:

பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் மைந்நிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த வூன்மலி இருக்கையும்
கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்
மரங்கொல்தச் சருங் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலந் தருநரும்
துன்ன காரரும் தோலின் றுன்னரும்
கிழியினுங் கிடையினுந் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்
குழலினும் யாழினுங் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபில் பெரும்பா ணிருக்கையும்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரோடு
மறுவின்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்
(இந்திர விழவூரெடுத்த காதை 22-39)

இதனால் மருவூர்ப்பாக்கத்தில் தொழிலாளர் முதலிய சிறுகுடி மக்கள் இருந்தனர் என்பது தெரிகின்றது. மருவூர்ப் பாக்கத்திலேதான் சோழ மன்னனுடைய படை வீரர்களும் இருந்தார்கள். இதனை, 'மருவூர் மருங்கின் மறங்கொள் வீரர்' என்று சிலம்பு 5ஆம் காதை 76ஆம் அடியினால் அறிகிறோம்.

அன்றியும் வெளிநாடுகளில் இருந்து கப்பல் ஓட்டிக் கொண்டு புகார்த் துறைமுகத்துக்கு வந்த மாலுமிகள் – யவனர் முதலியோர், மருவூர்ப்பாக்கத்தின் தென்பகுதியில் துறை முகத்துக்கு அருகில் தங்கியிருந்தனர் என்பதும் தெரிகிறது. இதனை,

கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்தினி துறையும் இலங்குநீர் வரைப்பும்

என்றும் (*சிலம்பு*, இந்திரவிழவூர். 9 - 12)

மொழிபெயர் தேஎத்தோர் ஒழியா விளக்கமும்

என்றும் (*சிலம்பு*, கடலாடு. 143ஆம் அடி) கூறுவதிலிருந்து அறிகிறோம். இதனையே,

மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்

என்று *பட்டினப்பாலை* (216-218) கூறுகின்றது.

பட்டினப்பாக்கம்

மருவூர்ப்பாக்கத்துக்கு மேற்கே பட்டினப்பாக்கம் இருந்தது. காவிரிப்பூம்பட்டினத்தின் முக்கியப் பகுதி இதுவே. இப்பட்டினப் பாக்கத்தைச் சூழ்ந்து நாற்புறமும் நன்னீர் அகழி இருந்தது. பட்டினப்பாக்கத்தின் தெற்கே காவிரி ஆறும், மற்ற மூன்று பக்கங்களிலும் அகழியாகிய கிடங்கும் இருந்தன. அகழிக்கு உட்புறத்தில் கோட்டை மதிலும், சோழ மன்னனுடைய அரண்மனையும், நகர மக்கள் வாழ்ந்த வீதிகளும், அரண்மனைக்கு எதிரிலே இரண்டு பக்கத்திலும் தருநிலை, வச்சிரநிலை என்னும் இரண்டு கோட்டங்களும் இருந்தன. இதனை *மணிமேகலை* (5ஆம் காதை 109-118 அடிகள்) நன்கு விளக்குகின்றது.

புலவரை யிறந்த புகாரெனும் பூங்கொடி
பன்மலர் சிறந்த நன்னீர் அகழிப்
புள்ளொலி சிறந்த தெள்ளரிச் சிலம்படி
ஞாயில் இஞ்சி நகைமணி மேகலை
வாயின் மருங்கியன்ற வான்பணைத் தோளி
தருநிலை வச்சிரம் எனவிரு கோட்டம்
எதிரெதிர் ஓங்கிய கதிரிள வனமுலை
ஆர்புனை வேந்தர்குப் பேரள வியற்றி
யூழி யெண்ணி நீடுநின் றோங்கிய
ஒருபெருங் கோயிற் றிருமுக வாட்டி

என்னும் அடிகளினால் இதனை அறிகிறோம்.

இதனால், சோழ மன்னனுடைய அரண்மனை உயரமான பெரிய கட்டடமாகவும், அதற்கு எதிரிலே இரண்டு பக்கங்களிலும் இருந்த தருநிலை, வச்சிரநிலை என்னும் கோட்டங்கள்

அரண்மனையைவிடச் சிறிய கட்டடங்களாகவும் இருந்தன என்பது தெரிகின்றது. (சங்க காலத்திலே கோவில் கட்டடங்கள் அரண்மனைகளைவிடச் சிறியவாக இருந்தன. பிற்காலத்திலே தான் கோவில் கட்டடங்கள் உயரமாக அமைக்கப்பட்டன.)

பூம்புகார் நகரத்தின் கோட்டை வாயில் உயரமாகவும், மேற்புறம் மகர உருவம் உள்ள சிற்பம் அமைந்ததாகவும் இருந்தது என்று பரணர் என்னும் புலவர் (அகம் 181ஆம் செய்யுள்) கூறுகிறார்.

மகர நெற்றி வான்றோய் புரிசைச்
சிகரந் தோன்றாச் சேணுயர் நல்லில்
புகாஅர் நன்னாடு

என்பது அச்செய்யுள் வாசகம்.

நகர மக்களின் போக்குவரத்துக் குரியதாக இருந்த இந்தக் கோட்டை வாயிலை, 'மலைதலைக் கொண்ட பேர்யாறு போலும் உலக இடைகழி' என்று சிலப்பதிகாரம் (நாடுகாண். 26-27) கூறுகிறது. கோட்டை வாயிலின் கதவிலே சோழ மன்னனுடைய அடையாளமாகிய புலியின் உருவம் பொறிக்கப்பட்டிருந்ததைப் பட்டினப்பாலை கூறுகிறது.

புலிப் பொறிப் போர்க் கதவிற்
திருத் துஞ்சும் திண்காப்பு

என்று கூறுகிறது.

பட்டினப்பாக்கத்திலே, சோழ மன்னனுடைய அரண்மனை, காவிரி ஆற்றின் வடகரையிலே இருந்தது. அரண்மனையைச் சார்ந்து இராசவீதியும் பெருநிலக்கிழார், பெருங்குடி வாணிகர் தெருக்களும் பீடிகைத் தெருக்களும் அமைச்சர், படைவீரர், மறையோர் முதலியவர் வாழ்ந்திருந்த தெருக்களும் இருந்தன. பட்டினப்பாக்கத்திலே பெருங்குடி மக்களான செல்வந்தர் வாழ்ந்தனர் (மருவூர்ப்பாக்கத்தில் சிறுகுடி மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதை முன்னமே கூறினோம்). கணிகையரில் சிறுதனக் கணிகையர் மருவூர்ப் பாக்கத்திலும் பெருந்தனக்கணிகையர் பட்டினப்பாக்கத்திலும் இருந்தனர். சிறுகுடியினராகிய போர் வீரர் மருவூர்ப்பாக்கத்திலும் படைத்தலைவராகிய பெருங்குடி மக்கள் பட்டினப்பாக்கத்திலும் வாழ்ந்திருந்தார்கள். இதனை,

கோவியன் வீதியும் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாட மறுகும் மறையோர் இருக்கையும்
வீழ்குடி யுழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதரும் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையும்

திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொ
டணிவளை போழுநர் அகன்பெரு வீதியும்
சூதர் மாகதர் வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர்
காவற் கணிகையர் ஆடற் கூத்தியர்
பூவிலை மடந்தையர் ஏவற் சிலதியர்
பயிறொழிற் குயிலுவர் பன்முறைக் கருவியர்
பகைவே ழம்பரொடு வகைதெரி யிருக்கையும்
கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
நெடுந்தேர் ஊருநர் கடுங்கண் மறவர்
இருந்துபுறஞ் சுற்றிய பெரும்பா யிருக்கையும்
பீடுகெழு சிறப்பிற் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பிற் பட்டினப் பாக்கம்

என்று *சிலம்பு* (இந்திரவிழவூர். 40-58) கூறுகிறது.

பட்டினப்பாக்கத்திலே பல சமயத்தாருக்கும் கோவில்கள் இருந்தன. திருமால் கோவிலாகிய மணிவண்ணப் பெருமாள் கோவிலும், சிவபெருமான் கோவிலாகிய ஊர்க்கோட்டமும், முருகனுடைய வேற்கோட்டமும், பௌத்தர்களின் இந்திர விகாரைகளும், ஜைனரின் சினகரமும், இந்திரன் கோட்டங்களும் ஏனைய கோவில்களும் இருந்தன.

பிறவா யாக்கைப் பெரியோன் கோவிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோவிலும்
வாள்வளை மேனி வாலியோன் கோவிலும்
நீல மேனி நெடியோன் கோவிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோவிலும்
(*சிலம்பு*, இந்திரவிழவூர், 169-173)

அமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்
புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பகல்வாயில்
உச்சிக் கிழான்கோட்டம் ஊர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம்பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தக் கோட்டம் நிலாக்கோட்டம்
(*சிலம்பு*, கனாத்திறம். 9 - 13)

என்று புகார்ப்பட்டினத்திலிருந்த கோவில்களைச் *சிலப்பதிகாரம்* கூறுகிறது.

(அமரர் தருக்கோட்டம் – தருநிலை; கற்பக மரம் நிற்கும் கோவில். வெள்ளையானைக் கோட்டம் – ஐராவதம் நிற்கும் கோவில். புகர் வெள்ளை நாகர் கோட்டம் – அழகிய பலராமர் கோவில். உச்சிக்கிழான் கோட்டம் – சூரியன் கோவில். ஊர்க் கோட்டம் – கயிலாயநாதனாகிய சிவபெருமான் கோவில். வேற்

கோட்டம் – முருகன் கோவில். வச்சிரக் கோட்டம் – வச்சிராயுதம் இருக்கின்ற கோவில். புறம்பணையான் கோட்டம் – மாசாத்தன் கோவில். நிக்கந்தன்கோட்டம் – அருகப் பெருமான் கோவில். நிலாக்கோட்டம் – சந்திரன் கோவில்)

இந்தக் கோவில்கள் அந்தந்தச் சமயத்தாரால் வழிபடப் பட்டன. ஆனால், எல்லாச் சமயத்தாரும் வழிபட்டது இந்திரன் கோவில்கள். புகார்ப்பட்டினத்தில் இந்திரனுக்கு மூன்று கோவில்கள் இருந்தன. அவை வச்சிரக்கோட்டம், தருநிலைக் கோட்டம், ஐராவதக் கோட்டம் என்பன. வச்சிரம் (இடி) இந்திரனுடைய ஆயுதம். தரு (கற்பக மரம்) இந்திரலோகத்தில் உள்ள இந்திரனுக்குரிய மரம். இது நினைத்த பொருள்களைத் தரும் தெய்வத் தன்மையுடையது. ஐராவதம் இந்திரனுடைய வாகனம். இது வெள்ளை யானை. இந்த மூன்று கோட்டங்களும் சோழன் அரண்மனைக்கு அருகிலே இருந்தன. காவிரிப்பூம் பட்டினத்தில் ஆண்டுதோறும் இந்திரவிழா 28 நாட்கள் நடை பெற்றது. இது சோழ மன்னனுடைய அரசாங்கத் திருவிழா வாகவும் சோழ நாட்டின் தேசியத் திருவிழாவாகவும் இருந்தது. நகர மக்கள்,

வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி
வால்வெண் களிற்றரசு வயங்கிய கோட்டத்துக்
கால்கோள் விழவின் கடைநிலை சாற்றித்
தங்கிய கொள்கைத் தருநிலைக் கோட்டத்து
மங்கல நெடுங்கொடி வானுற எடுத்து
(சிலம்பு, இந்திரவிழவூர். 140-147)

ஐம்பெருங் குழுவும் எண்பேர் ஆயமும்
அரச குமரரும் பரத குமரரும்
கவர்பரிப் புரவியர் களிற்றின் றொகுதியர்
இவர்பரித் தேரினர் இயைந்தொருங் கீண்டி
அரசுமேம் படூஇய வகனிலை மருங்கில்
உரைசால் மன்னவன் கொற்றங் கொள்கென
மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்
ஆயிரத் தோரெட் டரசுதலைக் கொண்ட
தண்ணருங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணக மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீர் ஆட்டி
(சிலம்பு, இந்திரவிழவூர். 157-168)

இந்திரவிழா கொண்டாடினார்கள்.

நாளங்காடி

காவிரிப்பூம்பட்டினம், மருவூர்ப்பாக்கம் என்றும் பட்டினப் பாக்கம் என்றும் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்று அறிந்தோம். இரண்டு பாக்கங்களும் ஒன்றையொன்று நெருங்கி யிராமல் விலகியிருந்தன. இரண்டு பாக்கத்துக்கும் இடைநடுவிலே தோட்டம் ஒன்று இருந்தது. அந்தத் தோட்டத்திலே நாள்தோறும் சந்தை கூடினபடியினாலே அதற்கு நாளங்காடி என்று பெயர் கூறப்பட்டது.

இருபெரு வேந்தர் முனையிடம் போல
இருபாற் பகுதியின் இடைநில மாகிய
கடைகால் யாத்த மிடைமரச் சோலைக்
கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்
நடுக்கின்றி நிலைஇய நாளங்காடி

என்று இந்த இடத்தைச் *சிலம்பு* (இந்திரவிழவூர். 59-63) கூறுகின்றது.

("பெரிய வேந்தர் இருவர் போர் குறித்து வந்துவிட்ட பாசறையிருப்புக்கு நடுப்பட்ட நிலம் போர்க்களமானாற்போல முற்கூறிய மருவூர்ப்பாக்கமும் பட்டினப்பாக்கமுமென இரண்டு கூறுபட்ட ஊர்க்கு நடுப்பட்ட பொதுநிலமாகிய நாளங்காடி; அஃது எத்தன்மைத்தாகிய நாளாங்காடியெனின், நிரைபடச் செறிந்த சோலையின் மரங்களிற் கால்களே தூணாகக் கட்டப் பட்ட கடைகளையுடைய கொடுப்போர் கொள்வோரோதை இடையறாது நிலைபெற்ற நாளங்காடியென்க" – அடியார்க்கு நல்லார் உரை)

பட்டினப்பாக்கத்திலிருந்து மருவூர்ப்பாக்கத்துக்குச் சென்ற பெரிய சாலை, இந்த நாளங்காடியின் ஊடே அமைந்திருந்தது. நாளங்காடியின் நடுவிடத்திலே நான்கு தெருக்கள் கூடுகின்ற நாற்சந்தியிலே சதுக்கப்பூதத்தின் கோவில் இருந்தது. சதுக்கப் பூதம், காவிரிப்பூம்பட்டினத்தின் காவல்தெய்வம். (மதுரைமா நகரத்தின் காவல் தெய்வம் மதுராபதி தெய்வமாக இருந்தது போல.)

மக்கள் சமூகத்தின் அமைப்பையும் ஒழுங்கையும் அமைதி யையும் கெடுக்கும் தீயொழுக்கம் உள்ளவரைத் தண்டித்துச் சமூகத்தின் அமைப்பைக் காத்து வந்தது இப்பூதம்.

தவமறைந்து ஒழுகும் தன்மை யிலாளர்
அவமறைந்து ஒழுகும் அலவற் பெண்டிர்
அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்

காத நான்குங் கடுங்குர லெடுப்பிப்
பூதம் புடைத்துணும் பூத சதுக்கம்

என்று *சிலம்பு* (இந்திரவிழவு. 128-134) கூறுகின்றது.

இந்தக் காவற்பூதம், இந்திரனுடைய ஆணைப்படி சோழ மன்னனுக்கு உதவியாக நகரத்தைக் காவல் செய்ததாம். இதனை,

வெற்றிவேன் மன்னற்கு உற்றதை ஒழிக்கெனத்
தேவர் கோமான் ஏவலிற் போந்த
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை

என்று *சிலம்பு* (இந்திரவிழவு. 65-67) கூறுவது காண்க.

மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்
பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்

ஏனைய நகர மக்களும் சதுக்கபூதம் என்னும் தெய்வத்தைப் பயபக்தியுடன் வழிபட்டார்கள்.

நாளங்காடிக்கு வடக்கே உவவனம் என்னும் பௌத்தப் பள்ளி ஆராமம் இருந்தது. அந்த ஆராம உவவனத்திலே கண்ணாடியால் அமைந்த பளிக்கறை மண்டபமும் அதனுள் புத்த பாத பீடிகையும் இருந்தன என்று *மணிமேகலையினால்* அறிகிறோம் (*மணி.*3 : 62-66, 4 : 87-88, 5 : 95-97).

துறைமுகம்

காவிரிப்பூம்பட்டினத்தின் மருவூர்ப்பாக்கத்துக்குத் தெற்கே, காவிரி ஆறு கடலில் கலக்கிற புகர்முகத்திலே பூம்புகார்த் துறைமுகம் இருந்தது. அந்தத் துறைமுகம் ஆழமும் அகலமும் உடையதாக, மரக்கலங்கள் பாய்களைச் சுருட்டாமலே உள்ளே வந்து தங்குவதற்கு ஏற்றதாக இருந்தது.

கூம்பொடு
மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம் தகாஅர்
இடைப்புலப் பெருவழிச் சொரியும்
கடற்பஃ றாரத்த நாடுகிழ வோயே

என்று (*புறம்* 30) உறையூர் முதுகண்ணனார் என்னும் புலவர் சோழன் நலங்கிள்ளியின் புகார்த் துறைமுகத்தைப் பாடுகிறார்.

('பாய் களையாது பரந்தோண்டாது' என்றதனால், துறை நன்மை கூறியவாறாம் – பழைய உரை.)

இந்தத் துறைமுகத்தில் வந்து தங்கிய நாவாய்கள் (கப்பல்), கம்பங்களில் கட்டப்பட்ட யானைகள் அசைந்துகொண்டிருப்பது போல, துறைமுகத்தில் அசைந்துகொண்டிருந்தன என்று கடியலூர் உருத்திரன் கண்ணனார் கூறுகிறார்.

வெளில் இளக்கும் களிறு போலத்
தீம்புகார்த் திரை முன்றுறைத்
தூங்கு நாவாய்த் துவன் றிருக்கை
மிசைக் கூம்பின் அசைக் கொடியும்

என்று அப்புலவர் *பட்டினப்பாலையில்* (172-175 அடி) கூறுகிறார்.

மருவூர்ப்பாக்கத்துக்குத் தெற்கே புகார்த் துறைமுகம் இருந்தது என்று கூறினோம்.

மருவூர்ப்பாக்கத்தின் தெற்கே ஆற்றங்கரையிலே, துறை முகத்தின் அருகிலே பண்டகசாலை இருந்தது. இங்கு, ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடற் றுகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு
(*பட்டினப்பாலை* 185-193)

என்று *பட்டினப்பாலை* கூறுகிறது.

ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்களுக்குச் சோழ மன்ன னுடைய புலி அடையாளம் பொறிக்கப்பட்டுச் சுங்கம் பெறப் பட்டது. இதை,

நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி

என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் (*பட்டினப்பாலை* 129-135) கூறுகிறார்.

துறைமுகத்துக்கு அருகிலே வெள்ளிடைமன்றம் என்னும் கோவில் இருந்தது. அம்மன்றத்துத் தெய்வம், துறைமுகத்துப் பண்டகசாலையில் இருந்த பொருள்களை ஒருவரும் களவு செய்யாதபடி காத்து வந்ததாம்.

வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த வெண்ணுப் பல்பொதிக்

கடைமுக வாயிலுங் கருந்தாழ்க் காவலும்
உடையோர் காவலும் ஓரீஇய வாகிக்
கட்போர் உளரெனிற் கடுப்பத் தலையேற்றிக்
கொட்பி னல்லது கொடுத்த லீயா
துள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றம்

என்று இந்த மன்றத்தைச் *சிலப்பதிகாரம்* (இந்திரவிழவூர். 111-117) கூறுகிறது.

துறைமுகத்துக்கு அருகிலே கலங்கரை விளக்கம் அமைந்திருந்தது. வெளிநாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் இராக்காலத்தில் கடலிலே திசைமாறிப் போகாமல் துறைமுகத்தைக் காட்டுவதற்கு இந்தக் கலங்கரை விளக்கம் உதவியாக இருந்தது. இதை 'இலங்கு நீர் வரைப்பில் கலங்கரை விளக்கம்' என்று *சிலம்பு* (கடலாடு காதை 141) கூறுகிறது.

('கலங்கரை விளக்கம்' என்பதற்குத் "திக்குக் குறி காட்டிக் கலத்தை அழைக்கிற விளக்கம்" என்று அரும்பத உரையாசிரியர் விளக்கம் கூறுகிறார். "பாடை வேறுபட்ட தேயத்து நிலை யறியாது ஓடுங்கலங்களை அழைத்தற்கு இட்ட விளக்கு" என்று அடியார்க்கு நல்லார் உரை எழுதுகிறார்.)

கடைச்சங்க காலத்திலே, தொண்டை நாட்டின் கடற்கரைத் துறைமுகப்பட்டினம் ஒன்றிலே இருந்த 'உரவுநீரழுவத்து ஓடுகலம் கரையும்' விளக்குக்கூண்டைக் கூறுகிறார் கடியலூர் உருத்திரங் கண்ணனார், *பெரும்பாணாற்றுப்படை*யில்.

வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறை

(*பெரும்பாணாற்றுப்படை* 346-351)

(இதற்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய உரை: "ஆகாயத்தே திரிகின்ற தேவருலகுக்கு முட்டுக்காலாக ஊன்றி வைத்த ஒரு பற்றுக்கோடு போல விண்ணைத் தீண்டும்படி யோங்கின மாடம். தன்னிடத்துச் சாத்திய ஏணியால் ஏறுதற்கரிய தலையினையுடைய மாடம். கற்றை முதலியவற்றால் வேயாது சாந்திட்ட மாடத்தை, இராக்காலத்தே கொளுத்தின விளங்கு கின்ற விளக்கு, உலாவுகின்ற கடற்பரப்பிலே வந்து, நாம் சேரும் துறையன்றென்று நெகிழ்ந்து வேறோர் துறைக்கண் ஓடுங்கலங் களை இது நந்துறை என்றழைக்கின்ற துறை.")

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த கலங்கரை விளக்கமும் இது போன்று அமைந்த செங்கற் கட்டடமாக இருந்திருக்க வேண்டு ம்.*

இதனால், கலங்கரை விளக்கக் கட்டடம் செங்கல்லினால் அமைக்கப்பட்டுச் சாந்து பூசப்பெற்ற காரைக் கட்டடம் என்பது தெரிகிறது. எகிப்து நாட்டிலே, நீல நதி, மத்திய தரைக் கடலில் கலக்கிற இடத்திலே அமைந்திருந்த அலெக்சாந்திரியத் துறை முகத்தில் அமைந்திருந்த கலங்கரை விளக்கம் இங்கு நினைவுறத் தக்கது.

சுடுகாடு

பிறப்பும் இறப்பும் எல்லா ஊர்களிலும் எக்காலத்திலும் நிகழ்கிற நிகழ்ச்சி. இறந்தவர்களைப் புதைக்கவும் கொளுத்தவும் ஒவ்வொரு ஊரிலும் சுடுகாடு உண்டு. காவிரிப்பூம்பட்டினத்தின் சுடுகாடு நகரத்துக்கு வடக்குப் பக்கத்தில் அமைந்திருந்தது. சுடுகாட்டின் அருகிலே காடமர் செல்வியாகிய கொற்றவையின் கோயில் இருந்தது. மேலும் சுடுகாட்டிலே, வாகை மரத்தின் அடியில் வாகை மன்றமும், விளாமரத்தின் அடியில் வெள்ளில் மன்றமும், இலந்தை மரம் இருந்த இரத்தி மன்றமும், வன்னிமரம் இருந்த வன்னி மன்றமும் வெளியான இடத்தில் இருந்த வெள்ளிடை மன்றமும்** என ஐந்து மன்றங்கள் இருந்தன.

சம்பாபதி கோவில்

சுடுகாட்டுக்கு அருகில் சம்பாபதி கோவில் இருந்தது. இந்தக் கோவிலுக்குக் குஞ்சரக் குடிகை (குச்சரக் குடிகை) என்றும் பெயர்

---

* சோழன் கரிகாற் பெருவளத்தானின் காவிரிப்பூம்பட்டினத்தைப் *பட்டினப்பாலையில்* பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனாரே அச்சோழனின் உறவினனாகிய தொண்டைமான் இளந்திரையன் மீது *பெரும்பாணாற்றுப்படையைப்* பாடினார். தொண்டை நாட்டுத் துறைமுகத்திலிருந்த கலங்கரை விளக்கத்தின் அமைப்பைக் கூறியது போல காவிரிப்பூம்பட்டினத்தின் கலங்கரை விளக்கின் அமைப்பை இவர் *பட்டினப்பாலையில்* கூறவில்லை. ஆயினும் *பெரும்பாணாற்றுப்படையில்* கூறப்பட்ட கலங்கரை விளக்கின் அமைப்பைப் போன்றே பூம்பூகார்ப்பட்டினத்தின் கலங்கரை விளக்கம் அமைத்திருக்க வேண்டும் என்று கருதலாம்.

** சுடுகாட்டில் இருந்த வெள்ளிடை மன்றத்தையும் துறைமுகத்துப் பண்டகசாலைக்கு அருகில் இருந்த வெள்ளிடை மன்றத்தையும் ஒன்று எனக் கருதுவது கூடாது. இது வேறு அது வேறு. சுடுகாட்டில் இருந்த

பிணத்தின் மாக்கள் நிணம்படு குழிசியில்
விருந்தாட் டயரும் வெள்ளிடை மன்றம்

வேறு பண்டகசாலைக்கு அருகில் இருந்த பண்டங்களைக் களவாடு வோரை வெளிப்படுத்திய 'உள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றம்' வேறு. இதனை *மணிமேகலை* சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை 53, 83, 85, 87, 89, 91 அடிகளால் அறியலாம்.

உண்டு. இங்குச் சம்பாபதித் தெய்வம் வழிபடப்பட்டது. சம்பாபதிக்குக் கன்னி, குமரி, முதியாள் என்று பல பெயர்கள் உண்டு.

சுடுகாட்டுக்குத் தென்புறத்துச் சுவருக்குத் தென்புறத்தில் (நாளங்காடிக்கு வடக்குப்புறத்தில்) இருந்த உவவனம் என்னும் பௌத்த ஆராமத்துக்கும் சம்பாபதி கோவிலுக்கும் ஒரு வழி இருந்தது. உவவன ஆராமத்தின் மேற்குப் பக்கத்தில் கோட்டைச் சுவரைச் சார்ந்து சிறுவாயில் இருந்தது. அந்த வாயில் வழியாக மேற்குப் பக்கம் சென்றால் சம்பாபதி கோவிலையடையலாம். உவவனத்துக்குச் சென்ற சுதமதி என்பவள், உவவனத்திலிருந்து இந்த வாயில் வழியாகச் சக்கரவாளக் கோட்டமாகிய சம்பாபதிக் கோவிலுக்கு வந்தாள் என்று மணிமேகலை கூறுகிறதிலிருந்து இதனையறியலாம்.

பெருந்தெரு ஒழித்துப் பெருவனஞ் சூழ்ந்த
திருந்தெயில் குடபால் சிறுபுழைபோகி
மிக்க மாதவர் விரும்பினர் உறையும்
சக்கர வாளக் கோட்டம் புக்காற்
கங்குல் கழியினும் கடுநவை எய்தாது

என்றும் (சக்கரவாளக் கோட்டம் 21-25),

பூம்பொழில்
திருந்தெயிற் குடபால் சிறுபுழை போகி
மிக்கமா தெய்வம் வியந்தெடுத் துரைத்த
சக்கர வாளக் கோட்டத் தாங்கட்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்
உலக வறவியின் ஒருபுடை யிருத்தலும்

என்றும் மணிமேகலை (துயிலெழுப்பிய காதை 88-93) கூறுவது காண்க.

சம்பாபதி கோவிலுக்குச் சுடுகாட்டுக் கோட்டம் என்றும் சக்கரவாளக் கோட்டம் என்றும் வேறு பெயர்கள் உண்டு. சுடுகாட்டுக்குப் பக்கத்தில் இருந்தபடியால் சுடுகாட்டுக் கோட்டம் என்று பெயர் வந்தது.

இடுபிணக் கோட்டத்து எயிற்புற மாதலிற்
சுடுகாட்டுக் கோட்ட மென்றலது உரையார்

என்று மணிமேகலை (சக்கரவாளக் கோட்டம் 203-204) கூறுகிறது.

சம்பாபதி கோவிலின் கோபுர வாயிலின் மேலே சக்கர வாளத்தின் சிற்ப உருவம் அமைக்கப்பட்டிருந்தபடியால், இந்தக் கோவிலுக்குச் சக்கரவாளக் கோட்டம் என்று பெயர் வந்தது

என்று மணிமேகலை சக்கரவாளக் கோட்ட முரைத்த காதை கூறுகிறது.*

குஞ்சரக் குடிகை என்னும் சம்பாபதிக் கோவிலிலே இரண்டு செங்கற்றூண்களிலே கந்திற்பாவை (கந்து – தூண், பாவை – பதுமை) என்னும் இரண்டு தெய்வங்களின் உருவங்கள் அமைந் திருந்தன. கந்திற்பாவைகளில் ஒன்றுக்குத் துவதிகன் என்றும் மற்றொன்றுக்கு ஓவியச்சேனன் (சித்திரச்சேனன்) என்றும் பெயர். இந்தத் தெய்வப் பாவைகள் கடந்த கால நிகழ்ச்சிகளையும் எதிர் கால நிகழ்ச்சிகளையும் நகர மக்களுக்குத் தெரிவித்ததாக நம்பப்பட்டது.

சம்பாபதித் தெய்வத்தின் திருவுருவம் ஒன்று, இப்போதைய காவிரிப்பூம்பட்டினத்தின் திருச்சாய்க்காட்டுக் கோவிலில் இருக்கிறது. இந்த உருவம், பிற்காலத்துச் சோழ அரசர் நாட்களில் பஞ்ச லோகத்தினால் செய்யப்பட்ட உருவம்.

சம்பாபதிக் கோவிலைச் சார்ந்து உலகவறவி என்னும் அம்பலம் இருந்தது. இங்குக் குருடர், செவிடர், முடவர், ஆதரவு இல்லாதவர் முதலியவர்களுக்குப் பௌத்த மதத்தார் உடை, உணவு, உறையுள் கொடுத்துப் போற்றினார்கள் என்று மணிமேகலை நூல் கூறுகிறது.

ஐந்து மன்றங்கள்

காவிரிப்பூம்பட்டினத்தில் ஐந்து மன்றங்கள் இருந்தன. இந்த மன்றங்கள் இப்பட்டினத்தின் சுடுகாட்டில் இருந்த ஐந்து மன்றங்களின் வேறானவை. அவை வேறு இவை வேறு. ஐந்து மன்றங்களின் பெயர் வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதசதுக்கம், பாவை மன்றம் என்பன. இந்த ஐந்து மன்றங்களிலும் ஐந்து பூதங்கள் (தெய்வங்கள்) இருந்து, மக்களின் ஒழுக்கம், ஒழுங்கு, நீதி, நியாயம் முதலியவைகளைக் காத்து வந்தன என்று நம்பப்பட்டது.

வெள்ளிடை மன்றம் துறைமுகத்துக்கு அருகில் இருந்த தென்பதை முன்னமே கூறினோம்.

இலஞ்சி மன்றம் இப்பட்டினத்தில் எங்கு இருந்ததென்பது தெரியவில்லை. இந்த மன்றத்தின் அருகில் இலஞ்சி (தடாகம்) இருந்தது. அதில் நீராடின தொழு நோயாளர் முதலியோர் நோய் நீங்கப் பெற்றனர் என்று கூறப்படுகிறது.

---

* சக்கரவாளம் என்பது பௌத்த சமயத்தாரின் 'பிரமாண்டம்'. சக்கரவாளத்தின் விவரத்தை மணிமேகலை சக்கரவாளக் கோட்ட முரைத்த காதை 176–183 அடிகளிலும், 192–202 அடிகளிலும் காண்க. பௌத்த நாடாகிய இலங்கைத் தீவிலே பொலநறுவை என்னும் புலத்தி நகரத்திலே ஒரு பாறைக் கல்லிலே சக்கரவாளத்தின் உருவப்படம் வரையப்பட்டிருக்கிறதென்று இலங்கை ஆர்க்கியாலஜி அறிக்கையொன்று கூறுகிறது.

நெடுங்கல் மன்றம் இருந்த இடமும் தெரியவில்லை. மயக்க மடைந்தோர், நஞ்சுண்டோர், பேய்பிடித்தோர், பாம்பினால் கடியுண்டோர் முதலியவர்களின் நோய்களை இந்த மன்றத்தி லிருந்த தெய்வம் நீக்கியருளிற்று என்று நம்பப்பட்டது.

சதுக்கப்பூதம் என்றும் பூதசதுக்கம் என்றும் பெயர் பெற்ற இடம் மருவூர்ப்பாக்கத்துக்கும் பட்டினப்பாக்கத்துக்கும் நடுவிலே, நாளங்காடியின் மத்தியில் இருந்தது என்று முன்னமே அறிந் தோம். கூடாவொழுக்கமுள்ள துறவிகள், அபலைப் பெண்டிர், பிறர் மனை நயப்போர், பொய்க்கரி கூறுவோர் முதலியவர்களைத் தண்டித்துச் சமுதாயத்தின் ஒழுங்குமுறையை இப்பூதம் காத்து வந்ததாக நம்பப்பட்டது.

பாவை மன்றமும் எங்கிருந்தது என்பது தெரியவில்லை. இது நீதிமன்றத்தின் அருகில் இருந்திருக்கவேண்டும். அரசன் கொடுங் கோலாட்சியினால் தீங்கு செய்தபோதும், நீதிமன்றத்தில் அநீதி நிகழ்ந்தபோதும் இம்மன்றத்தில் இருந்த பாவை கண்ணீர் வடித்து அழுது அநீதிகளை உலகத்துக்குத் தெரிவித்ததாக நம்பப்பட்டது.

பூஞ்சோலைகள்: காவிரிப்பூம்பட்டினத்தில் ஐந்து பூஞ்சோலைகள் இருந்தன. அவை இலவந்திகை, உய்யானம், உவவனம், சம்பாபதிவனம், கவேரவனம் என்பன. இலவந்திகைச் சோலையும், உய்யானமும் சோழ அரசனுடைய அரண் மனையைச் சேர்ந்தவை. இவைகளில் பொதுமக்கள் போவது இல்லை. காவிரிக் கரையில் அரண்மனையைச் சார்ந்து இவை இருந்தன.

கலையி லாளன் காமர் வேனிலொடு
மலய மாருதம் மன்னவற் கிறுக்கும்
பன்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந்தி கையின் எயிற்புறம் (*சிலம்பு*, நாடுகாண். 28-31)

என்றும்,

பன்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந் திகையின் எயிற்புறம் போகின்
உலக மன்னவன் உழையோர் ஆங்குளர்
(*மணிமேகலை*, மலர்வனம். 44-46)

என்றும் இலவந்திகைச் சோலை கூறப்படுகிறது. உய்யானம் என்னும் பூஞ்சோலை எங்கிருந்தது என்பதும் தெரியவில்லை.

மண்ணவர் விழையார் வானவர் அல்லது
பாடுவண் டிமிரா பன்மரம் யாவையும்
வாடா மாமலர் மாலைகள் தூக்கலிற்
கைபெய் பாசத்துப் பூதம் காக்குமென்று
உய்யா னத்திடை உயர்ந்தோர் செல்லார்
(*மணிமேகலை*, மலர்வனம். 48-51)

என்று உய்யானத்தைப் பற்றி அறிகிறோம். உய்யானத்தில் இருந்த பூதம் (தெய்வம்), பூதசதுக்கத்தில் இருந்த பூதம் (தெய்வம்) அன்று. அது வேறு இது வேறு.

உவவனம்: நாளங்காடியின் வடக்குப் பக்கத்தில் சுடுகாட்டு மதிலுக்குத் தெற்கே இது இருந்தது என்று முன்னமே கூறப்பட்டது. இது பௌத்த முனிவர்களின் ஆராமம். பௌத்த பிக்ஷுக்கள் தங்கியிருந்த விகாரை இங்கு இருந்தது. அன்றியும் புத்தருடைய பாதபீடிகை இருந்த பளிக்கறை (கண்ணாடி மண்டபம்) மண்டபம் இங்கு இருந்தது. இந்த உவவனத்தின் மேற்குப் பக்கத்தில் நகரத்து மதில் பக்கமாக இருந்த வாயில் வழியாகச் சென்றால் சம்பாபதி கோவிலுக்குப் போகலாம்.

உவவனத்தின் இயற்கை வனப்பை *மணிமேகலை*, மலர்வனம் புக்க காதை 159-163 அடிகளில் காண்க. இங்கிருந்த புத்தருடைய பாத பீடிகையைப் பற்றிய செய்தியை, *மணிமேகலை*, மலர்வனம் புக்க காதை 61-67 அடிகளில் காண்க.

சம்பாதிவனமும் கவேர வனமும் காவிரிப்பூம்பட்டினத்தில் எந்த இடங்களில் இருந்தன என்பது தெரியவில்லை.

> வெங்கதிர் வெம்மையின் விரிசிறை இழந்த
> சம்பாதி யிருந்த சம்பாதி வனமும்
> தவாநீர்க் காவிரிப் பாவைதன் தாதை
> கவேரனாங் கிருந்த கவேர வனமும்
> மூப்புடை முதுமைய தாக்கணங் குடைய

என்று *மணிமேகலை* (மலர்வனம். 53-57) கூறுகிறது.

புத்தருடைய பழம்பிறப்புகளைக் கூறுகிற *புத்த ஜாதகத்தில்*, அகித்தி ஜாதகத்திலே போதிசத்துவர், அகித்தி முனிவராகப் பிறந்து டமிள (தமிழ்) நாட்டுக் கவீரபட்டினத்தில் ஒரு சோலையில் தங்கியிருந்ததாகக் கூறப்படுவது இங்கு நினைவு கொள்ளத்தக்கது (கவீரபட்டினம் – காவிரிப்பூம்பட்டினம்).

சிறைக்கோட்டம்: இதுவும் நகரத்தில் எந்த இடத்தில் இருந்தது என்பது தெரியவில்லை. (நகரத்துக்கு வெளியே இருந்திருக்க வேண்டும்.) குற்றவாளிகளைச் சிறையில் அடைத்து வைத்த இடம் சிறைக்கோட்டம்.

காவிரி வாயில்: பட்டினப்பாக்கத்துக் கோட்டையின் மேற்குப்புறத்தில் இருந்த வாயில் இது. இவ்வாயிலிலிருந்து உறையூருக்குச் செல்லும் பெருவழி காவிரிக்கரை வழியாக அமைந்திருந்தது. இவ்வாயிலுக்குப் பக்கத்தில், கோட்டைச் சுவருக்கு வெளியே காவிரி ஆற்றில் 'திருமுகத்துறை' இருந்தது. இத்துறையில் மக்கள் நீராடினார்கள். இந்தக் காவிரி வாயிலை, "தாழ்பொழிலுடுத்த தண்பதப் பெருவழிக் காவிரிவாயில்" என்று *சிலப்பதிகாரமும்* (நாடுகாண். 32, 33) 'காவிரி வாயில்' என்று *மணிமேகலையும்* (சிறை செய். 43) கூறுகின்றன.

காவிரிப்பூம்பட்டினம் கடலில் முழ்கியதாகக் கூறப்படுகிறது. மணிமேகலை என்னும் கடற்தெய்வத்தின் சாபத்தினால் இப் பட்டினம் கடலில் முழுகியதாக *மணிமேகலை* கூறுகிறது. காவிரிப்பூம்பட்டினம் வெள்ளப்பெருக்கினால் மூழ்கியிருக்கக் கூடும். ஆனால், பட்டினம் முழுவதும் வெள்ளத்தில் முழ்கி அழிந்து போயிற்று என்பது காவியப் புலவனின் கற்பனையே யாகும். ஏனென்றால், கடைச்சங்க காலத்துக்குப் பிறகும் (கி.பி. 200க்குப் பிறகும்) காவிரிப்பூம்பட்டினம் பேர் போன துறை முகமாக இருந்தது. கி.பி. 9ஆம் ஆல்லது 10ஆம் நூற்றாண்டில் இருந்த பட்டினத்துப் பிள்ளையார் காவிரிப்பூம்பட்டினத்தில் பெரிய கப்பல் வாணிகராக இருந்தார் என்று அறிகிறோம். ஆகவே, கடைச்சங்க காலத்திலே பூம்புகார்ப்பட்டினம் கடல் கொள்ளப்பட்டது என்று கருதுவது தவறு. மருவூர்ப்பாக்கம் மிகப் பிற்காலத்தில் கடலில் முழுகியிருக்கக்கூடும்.

தமிழ்நாட்டின் கிழக்குக் கரையூர்கள் சில, கடல் நீரோட்டத்தின் காரணமாக அழிந்தும் சிதைந்தும் போயின. அவ்வப்போது புயல் காற்றினால் வெள்ளச் சேதமும் நேரிட்டன. இப்போது சிறு தீவாக உள்ள இராமேசுவரம் 400 ஆண்டுகளுக்கு முன்பு இராமநாதபுரத்துடன் இணைந்திருந்தது. பாண்டி நாட்டில் இருந்த பேர்போன கொற்கைத் துறைமுகம், பிற் காலத்தில் உள்நாட்டுப் பட்டினமாக மாறிவிட்டது. அங்கிருந்து கடல் ஐந்து மைல் அகன்று போய்விட்டதால், கொற்கைத் துறைமுகம் பிற்காலத்தில் உள்நாட்டுப் பட்டினமாகிவிட்டது. இவ்வாறு பல மாறுபாடுகள் கடற்கரையோரங்களில் நிகழ்ந்து வந்தது உண்மையே.

ஆனால், கடைச்சங்க காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் வெள்ளப் பெருக்கினால் அழிந்துவிட்டது என்பது உண்மை யன்று; அது காவியப்புலவரின் கற்பனையே. ஆனால், அடிக்கடி உண்டாகிற வெள்ளப் பெருக்கினால் காவிரிப்பூம்பட்டினம் துன்புற்றதுபோல, *மணிமேகலை* காலத்திலும் காவிரிப்பூம் பட்டினம் வெள்ளப் பெருக்கினால் துன்புற்றிருக்கலாம். அவ்வெள்ளப் பெருக்கினால் அதிகச் சேதமும் ஏற்பட்டிருக்கலாம். காவிரிப்பூம்பட்டினத்தின் ஒரு பகுதி கடலில் மறைந்தது பிற்காலத்திலாகும். பிற்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தின் கிழக்குப் பகுதி கடலில் மறைந்தது உண்மையே. பிற்காலத்தில் நிகழ்ந்த இதை *மணிமேகலை* காலத்தில் நிகழ்ந்ததாகக் கருதுவது தவறு.

காவிரிப்பூம்பட்டினத்துக்குக் காகந்தி என்றும் ஒரு பெயர் உண்டு என்று கூறினோம். திருவேங்கடத்துக்கு அருகில் கிழக்குக் கரையிலே காகந்தி என்று ஒரு நாடு இருந்தது. அது பிற்காலத்திலே கடலில் முழ்கிப்போயிற்று. அதைக் கடல் கொண்ட காகந்தி

என்று சாசனங்கள் கூறுகின்றன. அப்பகுதியைத் தெலுகு சோடர் (தெலுங்குச் சோழர்) என்பவர் அரசாண்டிருந்ததும் அங்கும் ஒரு காகந்தி இருந்ததும் ஆராய்ச்சிக்கு உரியன. அந்தக் காகந்தி பவத்திரிக் கோட்டத்தில் இருந்தது. பவத்திரிக் கோட்டத்தின் ஒரு பகுதி கடலில் முழுகி இப்போது பழவேற்காட்டு ஏரி என்று பெயர் பெற்றிருக்கிறது.

2. சங்க காலத்து மதுரை

கடைச்சங்க காலத்தின் இறுதியிலே கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில், மதுரை மாநகரம் எவ்வாறு அமைந்திருந்தது என்பது பற்றிச் சங்க இலக்கியங்களைக் கொண்டு ஆராய்வோம். மதுரை, பாண்டி நாட்டின் தலைநகரம். அதற்குக் கூடல் என்றும் நான்மாடக் கூடல் என்றும் பெயர்கள் உண்டு. கண்ணபிரான் பிறந்த வடமதுரையிலிருந்து பிரித்து அறிவதற்காக இதனைத் தென்மதுரை என்றும் தக்கிண மதுரை என்றும் கூறுவர்.

(தலைச்சங்க காலத்தில் பாண்டிய நாட்டின் தலைநகரமாக இருந்ததும் ஒரு மதுரையே. அந்த மதுரை மாநகரம் கடல் கொண்டுவிட்டது. நமது ஆராய்ச்சிக்குரிய இந்த மதுரை மாநகரம் கடைச்சங்க காலத்தில் இருந்த மதுரை மாநகரமாகும். அது இப்போதைய மதுரை அன்று.)

கடைச்சங்க காலத்து மதுரை மாநகரம் வைகையாற்றின் தென்கரையிலே இருந்தது. மதுரைக்கு மேற்கே பேர்போன திருப்பரங்குன்றமும், திருப்பரங்குன்றத்துக்குக் கிழக்கே மதுரை நகரமும் இருந்தன. இதனை, 'மாடமலி மறுகிற் கூடற்குடவயிற்... குன்றம்' என்று *திருமுருகாற்றுப்படை* (71-77) அடிகள்) கூறுவதிலிருந்து அறியலாம்.

தாயங்கண்ணனார் என்னும் புலவரும், மதுரைக்கு மேற்கே திருப்பரங்குன்றம் இருந்ததைக் கூறுகிறார்.

> கொடி நுடங்கு மறுகிற் கூடற் குடாஅது
> பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய
> ஓடியா விழவின் நெடியோன் குன்றம்
> (*அகம்* 149ஆம் செய்யுள்)

என்று கூறுகிறார்.

மதுரை மாநகரத்தின் தரையமைப்பு, தாமரைப் பூவைப் போல அமைந்திருந்தது. தாமரைப்பூ, நந்தியாவட்டப்பூ, சுவஸ்திகம் முதலியவற்றின் உருவ அமைப்புபோல நகரங்களை அமைப்பது பழைய காலத்து வழக்கம் என்பதைச் சிற்ப சாஸ்திர நூல்களிலிருந்து அறிகிறோம். அந்தப் பழைய வழக்கப்படியே பாண்டிய அரசருடைய மதுரை மாநகரம் தாமரைப் பூவைப்போல அமைந்திருந்தது. இதைப் *பரிபாடல்* செய்யுள் கூறுகிறது:

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீருர் பூவின்
இதழகத் தனைய தெருவம் இதழகத்து
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்,
தாதுண்
பறவை யனையர் பரிசில் மாக்கள்

என்பது அந்தச் செய்யுள்.

மாயோனாகிய திருமாலின் உந்தியில் தோன்றிய தாமரைப் பூவைப்போல வட்ட வடிவமாக மதுரை மாநகரம் அமைந் திருந்தது. தாமரைப் பூவின் இதழ்களைப்போல நகரத்தின் தெருவுகள் அமைந்திருந்தன. தாமரை இதழ்களின் நடுவே இருக்கிற 'பொகுட்டு'ப் போல பாண்டிய மன்னனுடைய அரண் மனை அமைந்திருந்தது. தாமரைப் பூவிலுள்ள தாதுக் களைப்போல மதுரை மாநகரத்து மக்கள் இருந்தனர். தாமரை மலரின் தேனைக் குடித்து மகிழும் தேனீக்களைப்போல, பரிசு பெற்று வாழும் புலவரும் கலைவாணரும் இருந்தனர் என்பது இந்தப் பாட்டின் கருத்து.

[மகத நாட்டின் தலைநகரமாகிய இராசகிருகம் என்னும் நகரமும் மதுரையைப் போலவே தாமரைப் பூவின் அமைப்பாக இருந்ததாம். மகத நாட்டை யரசாண்ட உதயணனுடைய தலை நகரமான இராசகிருகம் தாமரைப் பூவின் உருவம்போல அமைந் திருந்தது என்று பெருங்கதை என்னும் காவியம் கூறுகின்றது.

போகச் சேரி புறவிதழ் ஆக

பெருங்கடி யாளர் அருங்கடிச் சேரி
புறவிதழ் மருங்கிற் புல்லிதழ் ஆக


பல்விலை வாணிகர் நல்விலைச் சேரி
புல்லிதழ் பொருந்திய நல்லிதழ் ஆக

தந்தொழில் திரியாத் தரும நெஞ்சின்
அந்தண் சேரி அகவிதழ் ஆக

கற்றுப் பொருள்தெரிந்த கண்போற் காட்சி
அருமதி யமைச்சர் திருமதிற் சேரி
மாசில் பைந்தாது சுமந்த மத்தகத்
தாசில் பன்மலர் அல்லி யாக

வாயில் அணிந்த வான்கெழு முற்றத்துக்
கோயில் கொட்டை யாகத் தாமரைப்
பூவொடு பொலியும் பொலிவிற் றாகி

இன்பங் கலந்த இராச கிரியம்



என்று பெருங்கதை (மகத காண்டம்) இராசகிரியம் புக்கது கூறுகின்றது.]

வட்டவடிமான நகரங்கள் பல பண்டைக் காலத்தில் அமைந்திருந்தன. வட்டவடிவமாக இருந்த காரணத்தினாலேயே அவையெல்லாம் தாமரைப் பூவைப்போல இருந்தன என்று

கருதக்கூடாது. சோழனுடைய உறந்தையும் (உறையூர்), தொண்டமானுடைய கச்சியும் (காஞ்சிபுரம்) வட்டவடிவமான கோட்டைக்குள்ளே அமைந்திருந்தன.

ஆனால், அக்கோட்டைக்குள்ளே, இருந்த தெருவுகள் தாமரைப்பூவின் இதழ்களைப் போல அமைந்திருக்கவில்லை.

மதுரை மாநகரத்தின் கோட்டையின் அமைப்பும் வீதிகளின் அமைப்பும் அரண்மனையின் அமைப்பும் தாமரைப் பூவைப் போல அமைந்திருந்தன. தாமரைப் பூவின் நடுவில் உள்ள 'கொட்டை' (பொகுட்டு) போலப் பாண்டியனுடைய அரண்மனை, நகரத்தின் நடுவிலே இருந்தது. பொகுட்டைச் சூழ்ந்துள்ள தாமரைப் பூவின் இதழ்களைப்போல நகரத்தின் வீதிகள் அமைந் திருந்தன. தாமரைப்பூ வட்ட வடிவமாக இருப்பதுபோன்று நகரத்தின் கோட்டை மதில்களும் வட்ட வடிவமாக இருந்தன. தாமரை மலர் தண்ணீரில் இருப்பதுபோல, மதுரை மாநகரமும் அகழிக்கு நடுவில் இருந்தது.

இந்த மதுரை மாநகரத்தின் சுற்றளவு எத்தனை காதம் என்பது தெரியவில்லை. காவிரிப்பூம்பட்டினத்தைப் போல நான்கு காத வட்டகையாக இருந்திருக்கக்கூடுமோ?

அகழி: மதுரை மாநகரத்தின் கோட்டை மதிலுக்கு வெளிப் புறத்தில் ஆழமான அகழி, மதிலைச் சூழ்ந்திருந்தது. இது ஆழமும் நீர் நிறைந்ததுமாக இருந்தது. இந்த அகழியை 'மண்ணுற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கு' என்று மதுரைக் காஞ்சியும் (அடி 351), 'குண்டு நீர் வரைப்பில் கூடல்' என்று புறநானூறும் (செய்யுள் 347) கூறுகின்றன. கோட்டைச்சுவரின் வடக்குப் பக்கத்தில் வைகை யாறு, மதில் ஓரமாகப் பாய்ந்துகொண்டிருந்தது. கோட்டையைச் சூழ்ந்திருந்த அகழியும் வைகையாற்றுடன் இணைந்திருந்தது. அகழியிலும் ஆற்றிலும் எப்போதும் நீர் நிறைந்து இருந்தது. இதனை,

> வந்து மதுரை மதில்பொரூஉம் வான்மலர்த்தாஅய்
> அந்தண் புனல்வையை யாறெனக் கேட்டு

என்று பரிபாடலும் (12ஆம் பாடல் 9-10 அடி)

> வையைதன்
> நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லால் நேராதார்
> போர்முற் றொன்றறியாத புரிசைசூழ் புனலூரன்

என்று கலித்தொகையும் (67ஆம் பாடல்) கூறுவதிலிருந்து அறியலாம்.

மதுரை மாநகரத்துக்கு ஆலவாய் என்றும் பெயர் உண்டு. நீர் நிலைக்கு நடுவே இருந்தபடியால் ஆலவாய் என்னும் பெயர் ஏற்பட்டது. ஆல், ஆலம் என்னும் சொல்லுக்கு நீர்நிலை என்பது

பொருள். இச்சொல் தமிழில் மட்டுமல்லாமல் மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளுவம் முதலிய திராவிட இனமொழி களில் பண்டைக் காலத்தில் வழங்கிவந்ததை அறிகிறோம். இதுபற்றிய என்னுடைய விரிவான கட்டுரையைக் (*கலைக்கதிர்*, செப்டம்பர் 1960 'ஆல் -நீர்') காண்க.

[பிற்காலத்தில், ஆலவாய் என்பதன் உண்மைப் பொருளை யறியாத புராணிகர், பகைவரால் ஏவப்பட்ட பாம்பு ஒன்று மதுரையை அழிக்க வந்து நஞ்சைக் கக்கியது என்றும் அதனால் ஆலவாய் என்னும் பெயர் ஏற்பட்டது என்றும் பொருந்தாக் கதையைக் கற்பித்தார்கள்.]

காவற்காடு: நீரரணாகிய அகழிக்கு வெளியே நகரத்தைச் சூழ்ந்து காவற்காடு அமைந்திருந்தது. காவற்காட்டுக்கு மிளை என்பது பெயர். மிளைக்காடு முட்புதர்களும் மரங்களும் அடர்ந்து பகைவர் உள்ளே வரமுடியாதபடி இருந்தது. 'மிளையும் கிடங்கும்', (*சிலம்பு*, அடைக்கல. 207) என்றும், 'கருமிளையுடுத்த அகழி' (*சிலம்பு*, புறஞ்சேரி. 183) என்றும்.

இளைசூழ் மிளையொடு வளைவுடன் கிடந்த
இலங்குநீர் பரப்பின் வலம்புணர் அகழி

என்றும் *சிலம்பு* (ஊர்காண். 62-63) கூறுகிறது.

(இளை – அரண்காவல். மிளை – அதனைச் சூழ்ந்த காவற்காடு: அரும்புதவுரை.)

கோட்டைச்சுவர்: அகழிக்கு உட்புறத்தில் நகரத்தைச் சூழ்ந்து கோட்டைச்சுவர் அமைந்திருந்தது.

உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின்
அமைவரணாம் என்றுரைக்கும் நூல்

என்று *திருக்குறள்* மதிலரணைப் பற்றிக் கூறுவதுபோல, இந்த மதில்கள் உயரமும் அகலமும் திண்மையும் கிட்டுதற்கு அருமையு முடையதாக இருந்தன. இந்தக் கோட்டைச்சுவர்கள் புறமதில் என்றும் அகமதில் என்றும் இரண்டாக அமைந்திருந்தன. சுவரின் மேலே, பகைவரைத் தாக்குவதற்காகப் பலவகையான போர்க் கருவிகள் வைக்கப்பட்டிருந்தன. 'விண்ணுற ஓங்கிய பல்படைப் புரிசை' என்று *மதுரைக்காஞ்சி* (352ஆம் அடி) கூறுகிறது. புறமதின் மேல் வைக்கப்பட்டிருந்த போர்க்கருவிகள் என்னென்ன என்பதைச் *சிலப்பதிகாரம்* கூறுகிறது:

மிளையுங் கிடங்கும் வளைவிற் பொறியும்
கருவிற லூகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் உலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்

கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவும் சீப்பும் முழுவிறற் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலும் சிறந்த நாட்கொடி நுடங்கும்
வாயில்

என்று கூறுகிறது (அடைக்கலக் காதை 207-216).

நகரத்துக்குள்ளே செல்வதற்கு நான்கு வாயில்கள் இருந்தன. அவ்வாயில்களில் வடக்குப்புற வாயில் வையையாற்றினால் அடைபட்டிருந்தது. ஆகவே, கிழக்கு மேற்கு தெற்குப்புறத்து வாயில்கள் மட்டும் போக்குவரத்துக்கு உரியனவாக இருந்தன.

கோவலனுடன் மதுரைக்குச் சென்ற கண்ணகியார், கிழக்கு வாயிலில் நுழைந்து கோவலனை இழந்த பிறகு மேற்கு வாயிலின் வழியே வெளிப்போந்தார்.

கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென
(*சிலம்பு*, கட்டுரை. 182-183)

மதுரை மாநகரத்தின் கோட்டை வாயிலின் மேலே பந்தும் பாவையும் தொங்கவிடப்பட்டிருந்தன என்று *திருமுருகாற்றுப் படை* கூறுகிறது.

செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர் தேய்த்த போரரு வாயில் (*திருமுருகு*. 67-69)

"போரை வென்று விரும்பிக் கட்டின சேய்நிலத்தே சென்று யர்ந்த நெடிய கொடிக்கருகே, நூலால் வரிந்துபுனையப் பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்மையின் தூங்கியேவிடும் படி, பொருவாரை இல்லையாக்குகையினாலே எக்காலமும் போர்த் தொழிலரிதாகிய வாயில். பகைவரை மகளிராக்கி அவர் கொண்டு விளையாடுதற்குத் தூக்கின பந்தும் பாவையும்" என்பது நச்சினார்க்கினியர் உரை.

[சேர மன்னனுடைய வஞ்சி மாநகரத்துக் கோட்டை வாயிலிலும், மதுரைக் கோட்டையிலிருந்ததுபோல எந்திரப் பொறிகள் அமைக்கப்பட்டிருந்ததுடன், சிலம்பும் தழையும் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன என்று *பதிற்றுப்பத்து* 6ஆம் பத்து 3ஆம் செய்யுள் கூறுகிறது.

தொல்புகழ் மூதூர்ச் செல்குவை யாயிற்
செம்பொறிச் சிலம்பொடு அணிதழை தூங்கும்

எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்
கோள்வல் முதலைய குண்டுகண் அகழி
வானுற ஓங்கிய வளைந்துசெய் புரிசை (5-9)

"சிலம்பும் தழையும் புரிசைக்கண் தங்கின வென்றது ஈண்டுப் பொருவீருளீரேல் நுங்காலிற் கழலினையும் அரையிற் போர்க்குரிய உடையினையு மொழித்து இச்சிலம்பினையும் தழையினையும் அணிமினென அவரைப் பெண்பாலாக இகழ்ந்தவாறென்க. இனி, அவற்றை அம்மதிலில் வாழும் வெற்றி மடந்தைக்கு அணியென் பாருமுளர்" – பழயவுரை.]

மதுரை மாநகரத்தின் கோட்டைவாயிலை யவன வீரர்கள் காவல் புரிந்தனர்.

கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்க்கு அயிரா துபுக்கு
(சிலம்பு, ஊர்காண். 66-67)

அரண்மனை: நகரத்தின் நடுமையத்தில் பாண்டிய மன்னனுடைய அரண்மனை, தாமரைப்பூவின் நடுவில் உள்ள 'கொட்டை' அல்லது 'பொகுட்டு'ப்போல அமைந்திருந்தது. இதனை, 'அரும் பொகுட்டனைய அண்ணல் கோவில்' என்று பரிபாடற் செய்யுள் கூறுகிறது.

வீதிகள்: அரண்மனையிலிருந்து வீதிகள் எட்டுத் திசைகளிலும் அமைந்திருந்தன. அரண்மனையைச் சுற்றிலும் வீதிகள் அமைந்திருந்தன. வீதிகளின் அமைப்பு தாமரைப் பூவின் இதழ்களைப் போல அமைந்திருந்தது. கோட்டைவாயிலின் கிழக்குப் பக்கத்திலிருந்து மேற்குப் பக்கமாகச் சென்ற வீதி அரண்மனைப் பக்கமாக அமைந்திருந்தது. அது போலவே தெற்கிலிருந்து வடக்குப் புறமாகச் சென்ற வீதியும் அரண்மனைப் பக்கமாகச் சென்றது. வடக்குப் பக்கத்தில் மதிலுக்கப்பால் வைகையாறு இருந்தபடியால், அவ்வீதி வடக்கு வாயிலோடு நின்றுவிட்டது.

புறமதிலுக்கும் அகமதிலுக்கும் இடையில் இருந்த வீதிகள் புறஞ்சேரி என்று பெயர் பெற்றிருந்தன. அங்குப் பெரும்பாலும் ஆயர்குல மக்கள் வாழ்ந்திருந்தனர்.

வயிரம், மரகதம், முத்து, மாணிக்கம், பவழம் முதலிய நவமணிகள் விற்கும் வீதியும், வெள்ளி, பொன் நகைகள் விற்கும் வீதியும், அறுவை (ஆடை), கூலம் (தானியம்) முதலியவை விற்கும் வீதிகளும் பலவகை மக்கள் வாழ்ந்த வீதிகளும் இருந்தன. நாளங்காடியும் அல்லங்காடியும் இருந்ததை மதுரைக்காஞ்சி கூறுகின்றது (அடி 430, 544). 'வையங் காவலர் மகிழ்தரு வீதியும்' (ஊர்காண். 145), 'எண்ணெண் கலையோர் இருபெரு வீதியும்' (ஊர்காண். 167), 'அரசுவிழை திருவின் அங்காடி வீதியும் (ஊர்காண். 179), 'நறுமடி செறிந்த அறுவை வீதியும்' (ஊர்காண். 207), 'கூலங் குவித்த கூல வீதியும்' (ஊர்காண். 211),

பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்
அந்தியும் சதுக்கமும் ஆவண வீதியும்
மன்றமும் கவலையும் மறுகும் (*சிலம்பு*, ஊர்காண். 211-214)

அமைந்திருந்தன.

சுருங்கை: வீடுகளிலிருந்து வெளிப்படும் கழிவு நீர் நகரத்துக்கு வெளியே போய் அகழியில் விழும்படி சுருங்கைகள் அமைந்திருந்தன. வீடுகளிலிருந்து வெளிப்படும் கழிவுநீர் சேக்கடை வழியாகத் தெருக்களில் அமைந்திருந்த சுருங்கைகளில் சென்று விழுந்தது. அந்தச் சுருங்கை நீர் பெரிய சுருங்கைகளில் கலந்தது. பெரிய சுருங்கைகளிலிருந்து நகரத்துக் கழிவு நீர் மதிலைச் சூழ்ந்திருந்த அகழியில் விழுந்தது. அகழியில் கழிவு நீர் விழும் இடம் யானையின் தும்பிக்கை போல அமைந்திருந்தது.

நெடுமால் சுருங்கை நடுவழிப் போந்து
கடுமா களிறணத்துக் கைவிடு நீர்போலும்
நெடுநீர் மலிபுனல் நீண்மாடக் கூடல்
கடிமதில் பெய்யும் பொழுது

என்று *பரிபாடல்* (20 : 104-07) கூறுகிறது.

"நெடிய பெரிய சுருங்கை நடுவாகிய வழியைப் போந்து பெருந்தன்மை மிக்க புனலைக் கடிமதில் சொரியும்பொழுது, அப்புனல் கடுமாவாகிய களிறுகள் கையை எடுத்துவிடும் நீர் போலும்" என்பது பரிமேலழகர் உரை.

நகரத்தில் சேக்கடை நீர் செல்லும் சுருங்கை, வெளியே தெரியாதபடி மேற்புறம் மூடி மறைக்கப்பட்டிருந்தது. 'சுருங்கை வீதி' (*சிலம்பு*, ஊர்காண். 65) என்பதற்கு, 'மறைத்துப் படுத்த வீதி வாய்த்தலை' என்று அரும்பதவுரையாசிரியரும், 'சுருங்கை – கரந்து படை' என்று அடியார்க்குநல்லாரும் உரை எழுதுவது காண்க. சுருங்கைகள் வீதிகளின் ஓரங்களில் அமையாமல், நடுவில் அமைந்திருந்தன போலும்.

கரந்துபடை என்னும் பொருளுள்ள சுருங்கை என்பது கிரேக்க மொழிச் சொல்.

கோவில்கள்: ஐயை என்னும் கொற்றவைக்கு மதுரை மாநகரத்திலே கோவில் இருந்தது (*சிலம்பு*, கட்டுரை. 107-109, 125 : 181)

மதுரை மாநகரத்தின் காவல் தெய்வமாகிய மதுராபதிக்கும் ஒரு கோயில் இருந்தது (*சிலம்பு*, அழற்படு. 156, கட்டுரை 1-13). மதுராபதிக்கு மதுரைமா தெய்வம் என்றும் பெயர் உண்டு (*சிலம்பு*, கட்டுரை. 177).

சிவபெருமான், திருமால், பலதேவன், முருகன் முதலிய தெய்வங்களுக்கும் மதுரையில் கோவில்கள் இருந்தன. ஜைன பௌத்தப் பள்ளிகளும் இருந்தன.

நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்ந்தோன் நியமமும்
மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்
அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்

என்று *சிலம்பு* (ஊர்காண். 7-11) கூறுகின்றது.

சிவபெருமான் கோவிலில் வெள்ளியம்பலம் இருந்தது.

அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில்
வெள்ளியம் பலத்து நள்ளிருட் கிடந்தேன்

என்று *சிலம்பு* (பதிகம் 39-41) கூறுகிறது.

இந்த வெள்ளியம்பலத்திலே பெருவழுதி என்னும் பாண்டியன் துஞ்சினான் என்றும், ஆனதுபற்றி அப்பாண்டியன் 'வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி' என்று பெயர் பெற்றான் என்றும் *புறநானூறு* (58ஆம் செய்யுள்) கூறுகிறது.

திண்கதிர் மதாணி யொண்குறு மாக்களை
யோம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
தாழு மவரு மோராங்கு விளங்கக்
காமர் கவினிய, பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்
சிறந்துபுறங் காக்குங் கடவுட் பள்ளியும்

என்று *மதுரைக்காஞ்சி* (461-467) மதுரையில் பௌத்தப் பள்ளி இருந்ததைக் கூறுகின்றது. சமணப் பள்ளி (ஜைனப் பள்ளி) இருந்ததையும் கூறுகின்றது:

வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப்
பூவும் புகையும் சாவகர் பழிச்சச்
சென்ற காலமும் வருஉம் அமயமும்
இன்றிவட் டோன்றிய ஒழுக்கமொடு நன்குணர்ந்து
வானமு நிலனுந் தாமுழு துணரும்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
யான்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்
கல்பொளிந் தன்ன இட்டுவாய்க் கரண்டைப்
பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்
கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து
நோக்குவிசை தவிர்ப்ப மேக்குயர்ந் தோங்கி
யிறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும்

(*மதுரைக்காஞ்சி* 475-487)

என்று மதுரைக்காஞ்சி கூறுகின்றது.

சிந்தாதேவி கோவில் என்னும் கலைமகள் கோவிலும் மதுரையில் இருந்தது. இது பௌத்தப் பள்ளியைச் சார்ந்து இருந்தது.

இருங்கலை நியமத்து தேவி சிந்தாவிளக்கு

என்றும்,

சிந்தாதேவி செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கு நாமிசைப் பாவை

என்றும் மணிமேகலை (பாத்திர மரபு. 10-11, 17-18) கூறுகின்றது.

ஆபுத்திரன் என்பவன்,
தக்கிண மதுரை தான்சென் றெய்தி
சிந்தா விளக்கின் செழுங்கலை நியமம்

சேர்ந்தான் என்று மணிமேகலை (13 ஆபுத்திரன் திறம். 105-106) கூறுகின்றது.

உய்யானம்: உய்யானம் என்னும் பூஞ்சோலை ஒன்று இருந்தது. இது அரசனுக்கு உரிய பூங்கா. அரண்மனையைச் சார்ந்து இருந்தது.

பெருந்துறை: வையை ஆற்றைக் கடந்து மதுரை மாநகரத்துக்குப் போக ஆற்றில் பாலம் அமைந்திருக்கவில்லை. ஆற்றைக் கடக்க ஓடங்கள் இருந்தன. இந்த ஓடங்களின் முன்புறத்தில் யானை முகம், குதிரை முகம், சிங்க முகங்களின் உருவங்கள் அமைந்திருந்தன. ஓடங்களில் ஏறி ஒரு கரையிலிருந்து மற்றொரு கரைக்கு மக்கள் சென்றனர்.

பரிமுக வம்பியும் கரிமுக வம்பியும்
அரிமுக வம்பியும் அருந்துறை இயக்கும்
பெருந்துறை

என்று சிலம்பு (புறஞ்சேரி. 176-78) கூறுகிறது.

புறஞ்சேரி: கோட்டை மதிலுக்கும் காவற் காட்டுக்கும் வெளியே புறஞ்சேரி இருந்தது. புறஞ்சேரியில் தவசிகள் மட்டும் தங்கியிருந்தார்கள்.

அறம்புரி மாந்தர் அன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர்

என்று சிலம்பு (புறஞ்சேரி. 195-196) கூறுகிறது.

மதுரை நகரம் எரிந்ததா?

மதுரை மாநகரத்தைக் கண்ணகியார் எரியூட்டி அழித்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. பலரும் அப்படித்தான் கருதுகிறார்கள். நகர் அல்லது நகரம் என்பதற்குப் பட்டணம் என்றும் அரண்மனை என்றும் இரண்டு பொருள்கள் உள்ளன.

நகரம் எரியுண்டது, அரண்மனை எரியுண்டது என்று இரு பொருளும் பொருந்தும்படி இளங்கோவடிகள் கூறுகிறார். ஆனால் ஆழ்ந்து சிந்தித்தால், அரண்மனை மட்டும் எரிந்தது, நகரம் எரியவில்லை என்பதும் தெரிகின்றது. *சிலப்பதிகாரம்* சரித்திர நிகழ்ச்சியை மட்டும் கூறுகிற நூல் அன்று. நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் கூறுகிற காவியம் என்பதை மறத்தல் ஆகாது. காவியப் புலவனும் நாடகப் புலவனும், தமது காவியமும் நாடகமும் சுவையுடையனவாக அமையவேண்டுமானால், சில செய்திகளைப் புனைந்துரைக்க வேண்டும். நிகழ்ந்ததை நிகழ்ந்த படியே கூறினால் காவியம் சுவைபடாது. இந்த முறையில் *சிலப்பதி காரக்* காவியத்தை இளங்கோவடிகள் இயற்றியிருக்கிறார். ஆராய்ச்சியாளர் புனைந்துரைகளையும் உண்மை நிகழ்ச்சி களையும் பிரித்து அறியவேண்டும்.

உண்மையில் நகரம் முழுவதும் எரியவில்லை என்பதும் பாண்டிய மன்னனின் அரண்மனை மட்டும் எரியுண்டது என்பதும் *சிலப்பதிகாரத்தில்* காணப்படுகிற சில குறிப்புக்களைக் கொண்டு அறியலாம். காவியப் புலவன் தனது காவியத்தில் இன்றியமையாமல் கூறவேண்டியிருக்கிற கற்பனைகளையும், உண்மை நிகழ்ச்சி என்று உட்கொண்டு சிலர் 'ஆராய்ச்சி' செய்து இடர்ப்படுகிறார்கள். உண்மை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட *சிலப்பதிகாரத்தில்* கற்பனைச் செய்திகளும் கலந்திருக்கின்றன என்பதை ஆராய்ச்சியாளர் அறிய வேண்டும். வியப்புச் சுவை (மருட்கைச் சுவை) ஏற்படுவதற்காக மதுரை மாநகரமே அழிந்தது என்று *சிலப்பதிகாரத்தில்* கற்பனை யாகக் கூறப்பட்ட போதிலும் உண்மையில் எரிக்கப்பட்டது அரண்மனை மட்டுமே. அக்காலத்து அரண்மனைக் கட்டடங்கள் செங்கல்லினாலும் மரங்களினாலும் அமைக்கப்பட்டன. ஆகவே, விரைவில் தீப்பிடித்து எரியக் கூடியதாக இருந்தன. எனவே, நகரம் எரிந்தது என்று *சிலப்பதிகாரம்* கூறுவதன் கருத்து அரண்மனை எரிந்தது என்பதாம்.

ஆல் – நீர்

ஆல் என்னும் சொல் பல பொருளுடைய ஒரு சொல். ஆலமரம், ஆல் என்னும் அசைச் சொல், அலர்ந்த பூ, தண்ணீர், நஞ்சு (விஷம்) என்னும் பொருள்கள் இச்சொல்லுக்கு உண்டு. இந்தக் கட்டுரையிலே, தண்ணீர் என்னும் பொருள் உள்ள ஆல் என்னும் சொல்லைப்பற்றி ஆராய்வோம். ஆல் என்பதுடன் அம் விகுதியைச் சேர்த்து ஆலம் என்றும் இச்சொல்லை வழங்குவ துண்டு. தண்ணீர் என்னும் பொருள் உள்ள ஆல், ஆலம் என்னும் சொற்கள் தமிழ் மொழிக்கு மட்டும் உரியது அன்று. இந்தப் பழமையான சொல் கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய திராவிட இன மொழிகளுக்கெல்லாம் பொதுவானது. ஆல் என்னும் சொல்லிலிருந்து தோன்றிய வேறு சில சொற்கள் திராவிட இன மொழிகளில் வழங்கிவருகின்றன. ஆனால், ஆல் என்னும் வேர்ச் (அடி) சொல் மறைந்துவிட்டது. மறைந்துவிட்டது என்பதைவிட மறக்கப்பட்டது என்பதே சாலப் பொருந்தும். மறதி என்னும் நிலத்திலே ஆழத்தில் ஆழ்ந்து அமிழ்ந்து கிடக்கிற இச்சொல்லை அகழ்ந்து எடுத்து ஆராய்ந்து பார்ப்போம்.

இச்சொல்லைத் தமிழ் நிகண்டு நூல்களில் காண்கிறோம்.

பூவும் நீரும் ஒருமரப் பெயரும்
ஆழ்கடல் விடமும் ஆலமாகும் (பிங்கல நிகண்டு)

ஆலமே வடவிரக்கம்
அடுநஞ்சொடு அலர்பூ நீராம் (சூடாமணி நிகண்டு)

ஆலமும் விடமும் அலர்ந்த பூவும்
மழையும் நீரும் மழுவும் ஆலும்

என்றும்,

ஆலசைச் சொல்லும் புனலும் ஆலும்
ஆமென் பதுவும் அல்லவென் பதுவும்

என்றும் பொதிகை நிகண்டு பேசுகிறது. இவ்வாறே ஏனைய நிகண்டுகளும் கூறுகின்றன. எனவே, ஆல் அல்லது ஆலம் என்னும் சொல்லுக்குத் தண்ணீர் என்னும் பொருள் உண்டென்பதைத் திட்டமாக அறிகிறோம். சில சமயங்களில் மேகத்திலிருந்து நீர்த்துளிகள் கட்டிக்கட்டியாக நிலத்தில் விழுவது உண்டு. இந்த நீர்க்கட்டிகளை ஆலங்கட்டி என்று

தமிழில் கூறுகிறோம் (ஆல், ஆலம் – நீர், ஆலங்கட்டி – நீர்க்கட்டி). கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளில் ஆலங்கட்டியை *ஆலி* என்று கூறுகிறார்கள். தமிழர் ஆலங்கட்டி என்றும், தெலுங்கரும் கன்னடத்தாரும் *ஆலிகல்* என்றும், மலையாளத்தார் *ஆலிப்பழம்* என்றும் கூறுகிறார்கள். ஆலங்கட்டியைத் தமிழில் ஆலி என்றும் கூறுவது உண்டு.

துளிபெய லாலி உறைதுளி யாகும்
ஆலி யாலங் கட்டி யாகும்

என்பன *சேந்தன் திவாகரம்.*

துளியும் நீர்கொள் ஆலங் கட்டியும்
மழையும் ஆலி யெனவகுத் தனரே

என்பது *பிங்கல நிகண்டு.*

ஆலியே யாலங் கட்டித் துளி
காற்றோ டமுத நீராம்

என்பது *அரும்பொருள் விளக்க நிகண்டு.*

நன்றே காதலர் சென்ற வாறே
யாலித் தண்மழை தலைஇய
வாலிய மலர்ந்த முல்லையு முடைத்தே

என்பது *ஐங்குறுநூறு* (முல்லை, புறவணிபத்து 7). இவற்றிலிருந்து, ஆல் என்னும் சொல்லிலிருந்து *ஆலி* என்னும் சொல் தோன்றித் திராவிட இன மொழிகளில் வழங்கிவருவதைக் காண்கிறோம்.

இக்காலத்தில் விஞ்ஞான முறைப்படி தண்ணீரை உறையச் செய்து அந்தக் கட்டிகளுக்கு *ஐஸ்* என்று பெயர் கொடுத்துக் கடைகளில் விற்கிறார்கள். இந்த நீர்க்கட்டியைப் பனிக்கட்டி என்று தமிழில் பெயர் வழங்குகிறோம். தூய தமிழ்ச் சொற்களைப் பயின்று வருகிற நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டியார்கள் பனிக்கட்டியைக் குளிர்ச்சிக்கட்டி என்று கூறுவர். பனிக்கட்டி என்றும் குளிர்ச்சிக்கட்டி என்றும் கூறுவதைவிட, நீர்க்கட்டி என்னும் பொருளுடைய ஆலிக்கட்டி என்று கூறுவது மிகப் பொருத்தமாயிருக்கும் அல்லவா?

ஆல் (நீர்) என்னும் சொல்லிலிருந்து இடப்பெயர்கள் சில தோன்றியுள்ளன. ஆலந்துறை (ஆலந்துறைக் கட்டளை), ஆலம் பாக்கம் என்னும் ஊர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ளன. இப்பெயர்கள் ஆலமரத்துடன் தொடர்புடைய பெயர்கள் என்று நினைக்கும்படி இருக்கிறது இக்காலத்தில். ஏனென்றால், ஆல் அல்லது ஆலம் என்பதற்கு ஆலமரம் என்னும் பொருள்தான் நமது மனத்திலே தோன்றுகிறது. ஆனால், நீர் நிலையை யடுத்துள்ள ஊர்களின் பெயர்கள் இவை என்பதை

மறந்துவிட்டோம். சற்றுக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால் ஆலந்துறையும் ஆலம்பாக்கமும் நீர் நிலைகளுக்கு அருகில் அமைந்த ஊர்களின் பெயர்கள் என்பது நன்கு விளங்கும் (ஆலந்துறை நீர்த் துறைக்கு அருகில் உள்ள ஊர். ஆலம்பட்டி நீர் நிலைக்கு அருகில் உள்ள பட்டி – கிராமம்).

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆலங்குளம், ஆலங்கிணறு என்னும் ஊர்ப் பெயர்கள் ஆலமரத்துடன் தொடர்புடையவை என்று மேலோட்டமாகப் பார்ப்பவருக்குத் தோன்றும். ஆனால், சற்று ஆழ்ந்து யோசித்து, ஆலம் என்பதற்கு நீர் என்னும் பொருள் உண்டு என்பதை நினைவுபடுத்திக்கொண்டு பார்ப்போமானால் ஆலங்குளமும் ஆலங்கிணறும் நீரின் (ஆலம் – நீர்) தொடர்புடைய பெயர்கள் என்பது நன்கு விளங்கும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஆலந்தாங்கல் என்னும் ஊர் உண்மையில் நீரின் தொடர்புடைய பெயரே (ஆலம் – நீர், தாங்கல் – சிறு ஏரி). நீர்த்தாங்கலுக்கு அருகில் உள்ள ஊர் ஆலந்தாங்கல் என்று பெயர் பெற்றது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆலாடு, ஆலம்பாறை, ஆலஞ்சேரி என்னும் ஊர்களும், இராமநாதபுரத்தில் உள்ள ஆலடிநத்தமும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆலம் பாடியும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆலம்பாடியும், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஆலவேலியும் ஆலமரத்துடன் தொடர்புடைய பெயர்கள் அல்ல; ஆலத்தின் (நீரின்) தொடர்புடைய பெயர்கள் என்று தோன்றுகின்றன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஆலம்பொழிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆலங்காடும் (திருவாலங் காடு) உண்மையில் ஆலமரத்தின் தொடர்பாகப் பிறந்த பெயர்களே; ஆலின் (நீரின்) தொடர்புடைய பெயர்கள் அல்ல. ஏனென்றால், அப்பெயர்களில் உள்ள பொழில், காடு என்னும் சொற்களே அவை ஆலமரத்தின் தொடர்புடையவை என்பதை வலியுறுத்துகின்றன.

சென்னை மாநகரத்தில் வன்னியர் தேனாம்பேட்டைக்கும் தியாகராயநகருக்கும் இடையேயுள்ள மலைச்சாலையின் மேற்குப் பக்கத்தில் ஆலமந்தாள் கோவில் என்று ஒரு சிறு கோவில் உண்டு. ஆலமந்தாள் என்பது ஆலமர்ந்தாள் என்பதன் திரிபு. இக் கோவிலின் அருகில் ஒரு ஆலமரமும் இருக்கிறது. ஆலமரத்துக்கு அருகிலே இருப்பதனாலே இந்தக் காளிக் கோவிலுக்கு ஆலமர்ந்தாள் கோவில் என்னும் பெயர் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று பலரைப் போலவே நானும் கருதிக்கொண்டிருந்தேன். ஆல் என்பதற்கு நீர் என்னும் பொருளும் உண்டு என்று அப்பொழுது எனக்குத் தெரியாது. ஆல் என்றால் நீர் என்பதை அறிந்த பிறகு இக்கோயிற் பெயரின் உண்மைக் காரணம் தெரிகின்றது.

ஆலமர்ந்தாள் கோவிலுக்கு அருகில் இப்போது நீர் கிடையாது. ஆனால், இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஆலமர்ந் தாள் கோவிலுக்குப் பின்புறத்திலே மிகப் பெரிய நீர்நிலை இருந்தது. அந்த நீர்நிலைக்கு மயிலாப்பூர் ஏரி என்பது பெயர். அந்த ஏரியின் கரைமேலே ஆலமர்ந்தாள் கோவில் இருந்தது. அந்த ஏரியின் கரை மேலே இக்கட்டுரையாளர் அக்காலத்தில் பலமுறை நடந்திருக்கிறார். இப்போது மயிலாப்பூர் ஏரி முழுவதும் மறைந்து போய், தியாகராயநகர் என்று பெயர் பெற்றுத் தெருக்களும் வீதிகளும் வீடுகளும் கடைகளும் நிறைந்து பஸ் வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் ஓடிக்கொண்டு, மக்கள் வாழும் நகர மாகக் காட்சியளிக்கிறது. இவ்வாறு தியாகராயநகராக மாறிப் போன மயிலாப்பூர் ஏரியின் கரையிலேதான் ஆலமர்ந்தாள் என்னும் பெயருள்ள காளிகோவில் இருந்தது. இன்றும் இருக்கிறது. ஆலமர்ந்தாள் என்னும் பெயரின் காரணம் இப் போது எனக்கு நன்கு புலனாகிறது. அதாவது, மயிலாப்பூர் ஏரியின் நீர்க்கரையில் (ஆல் – நீர்) அமர்ந்தாள் (கோவில் கொண்டவள்) என்பது ஐயமின்றி விளங்குகிறது.

பழைய வரலாறு அறியாதவர், 'ஆலமர்ந்தாள் கோவிலுக்கு அருகில் இப்போது ஒரு சொட்டு நீரும் இல்லையே, ஆலமரந் தானே இருக்கிறது, ஆகையால் ஆலமரத்தின் கீழ் அமர்ந்தவள் என்னும் காரணப்பெயரையுடையது ஆலமர்ந்தாள் கோவில் என்பது' என்று சொல்லக்கூடும். பழைய வரலாறு அறியாதவர் களுக்கு இது உண்மையாகவும் தோன்றும். என்னுடைய வாழ்க்கையிலே நான் கண்ணாரக் கண்ட மயிலாப்பூர் ஏரி, மயிலாப்பூரைச் சேர்ந்த நிலபுலங்களுக்கு நீர் பாய்ச்சிய மயிலாப்பூர் ஏரி, என் வாழ்க்கைக் காலத்திலேயே மாடமாளிகைகள் நிறைந்து மக்கள் வாழும் நகரமாக மாறிப்போனதைக் கண்டேன். ஆகவே, மயிலாப்பூர் ஏரிக்கரையில் அமர்ந்த காளிக்கு ஆலமர்ந்தாள் (நீர்க்கரையில் அமர்ந்தவள்) என்று பழந்தமிழர் பெயரிட்டது மிகப் பொருத்தமென்றே தோன்றுகிறது.

மலையாள நாட்டில் ஆல்வாய் என்றும் ஆலப்புழை என்றும் பெயருள்ள ஊர்கள் உள்ளன. இப்பெயர்கள் ஆல் (நீர்) உடன் தொடர்புடைய பெயர்கள் என்று டாக்டர் கே.எம். ஜார்ஜ் அவர்கள் கூறுவது ஏற்கத்தக்கது. மேலும் அவர், கேரளோற்பத்தி என்னும் நூலிலிருந்து குன்னின்னும் ஆலுக்கும் அதிபதி என்னும் தொடரை எடுத்து உதாரணங் காட்டுகிறார். 'குன்றுக்கும் நீருக்கும் தலைவன்' என்பது இத்தொடரின் பொருள். எனவே ஆல்வாய், ஆலப்புழை என்னும் ஊர்ப் பெயர்கள், ஆல் (நீர்) தொடர்புடைய பெயர்கள் என்று அவர் கூறுவது பொருத்தமேயாகும்.

மலையாள நாட்டில் ஒரு ஆல்வாய் என்னும் ஊர் இருப்பது போலவே, தமிழ் நாட்டிலும் ஆலவாய் என்னும் ஓர் ஊர் உண்டு.

ஆலவாய் என்பது மதுரையின் பழைய பெயர். ஆலவாயில் (மதுரையில்) கோயில் கொண்டவராகிய சிவபெருமானுக்கு ஆலவாய் அண்ணல், ஆலவாயான், ஆலவாய் அரன் என்னும் பெயர்கள் தேவாரம் முதலிய நூல்களில் கூறப்படுகின்றன. மதுரை மாநகரத்துக்கு ஆலவாய் என்று ஏன் பெயர் வந்தது? நீர் சூழ்ந்த இடத்திலே இருந்தபடியினாலே ஆலவாய் என்று பெயர் உண்டாயிற்று.

மதுரை மாநகரம் தாமரைப் பூப்போல வட்டவடிவமாக அக்காலத்தில் அமைந்திருந்தது. அந்த நகரத்தைச் சூழ்ந்து அகழி நீர் இருந்தது. அதன் வடக்குப் பக்கத்திலே வைகையாறும், மற்றப் பக்கங்களில் அகழி நீரும் அமைந்து நீரின் நடுவிலே அமைந்திருந்த படியால் ஆலவாய் (நீரை இடமாக உள்ளது) என்னும் காரணப் பெயர் ஏற்பட்டது. ஆகவே, ஆலவாய் என்பது தூய தமிழ்ச் சொல் என்பது தெளிவாகிறது.

இதன் உண்மையை அறியாத பிற்காலத்துப் புராணிகர் ஆலம் (விஷம்) என்னும் சொல்லிலிருந்து ஆலவாய் என்னும் பெயர் தோன்றியது என்றும், பாம்பு ஆலத்தைக் (விஷத்தை) கக்கியபடியால் இந்நகரத்துக்கு இப்பெயர் வந்தது என்றும் பொருத்தமற்ற போலிக் கதையைக் கட்டிவிட்டனர். ஆல், ஆலம் என்னும் தமிழ்ச் சொல்லுக்கு நீர் என்னும் பொருள் உண்டு என்பதை அவர்கள் அறியாமல் இவ்வாறு பொருந்தாத போலிக் கதைகளைக் கூறியுள்ளனர்.

மரங்களுக்கு நீர் பாய்ச்ச அமைக்கப்படும் பாத்திக்கு ஆலவால என்று கன்னட மொழியில் பெயர் கூறுகிறார்கள். நீர் பாய்ச்ச அமைக்கும் பாத்திக்கு ஆலாலம் என்னும் பெயர் தமிழில் உண்டு என்பதை அ. குமாரசுவாமிப் புலவர் இயற்றிய இலக்கியச் சொல் அகராதியில் காணலாம். எனவே, ஆலவால, ஆலாலம் என்னும் பெயர்கள், ஆல் (நீர்) என்னும் சொல்லடியாகப் பிறந்த சொற்கள் என்பதில் ஐயமில்லை.

ஆலாஸ்ய என்னும் சொல் ஒன்று உண்டு. இதற்குப் பொருள் முதலை என்பது. இச்சொல் இப்பொருளில் கன்னட மொழியில் வழங்குகிறது. ஆனால், இது சமஸ்கிருதச் சொல் என்று கூறப்படுகிறது. இச்சொல் சமஸ்கிருதமாக இருக்குமானால், இது திராவிட மொழியிலிருந்து சமஸ்கிருதத்திற்குச் சென்ற சொல்லாக இருக்கவேண்டும். ஏனென்றால், நீர் என்னும் பொருள் உள்ள ஆல், ஆலம் என்னும் திராவிடச் சொல்லை அடிப்படையாகக் கொண்டிருப்பதாலும், நீரில் வாழும் முதலையைக் குறிக்க இச்சொல் வழங்கப்படுவதாலும் என்க.


வடமொழியில் மதுரை மாநகரை ஆலாஸ்யம் என்பர். இதுவும் ஆலவாய் என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்து தோன்றிய தாதல் வேண்டும்.

நீர் என்னும் பொருள் உள்ள ஆல் என்னும் சொல்லை ஆராய்ந்ததன் பலனாக ஒரு பழைய தமிழ்ச் சொல்லின் உண்மை விளங்குகிறது. அச்சொல் ஆறு என்பது. பாலாறு, பெண்ணை யாறு, காவிரியாறு, பொருநையாறு, வைகையாறு முதலிய தமிழ் நாட்டு ஆறுகளுக்குப் பழந்தமிழர் ஆறு என்று பெயரிட்டிருக் கின்றனர். திராவிட இனத்தாராகிய மலையாளிகளும் கன்னடத் தாரும் ஆறு என்று பெயர் கூறுவது இல்லை. மலையாளிகள் ஆற்றைப் புழ (புழை) என்று கூறுகின்றனர். கன்னட நாட்டார் ஆற்றைப் பழங்கன்னடத்தில் (ஹளைகன்னடம்) பொளெ என்றும், புதுக்கன்னடத்தில் (ஹொச கன்னடத்தில்) ஹொளெ என்றும் கூறுகின்றனர். புழ, பொளெ, ஹொளெ என்னும் சொற்கள் புழை என்னும் சொல்லின் திரிபுகள். தெலுங்கர் ஆற்றை நதி என்று வடமொழிப் பெயரினால் அழைக்கிறார்கள். ஆனால், தமிழன் மட்டும் ஆறு என்று பெயரிட்டான். ஏன் இப் பெயரிட்டான்?

ஆல் என்றால் நீர் என்பதைக் கண்டோம். ஆலிலிருந்து (நீரிலிருந்து) தோன்றியது ஆறு. ஆல் அறுத்துக்கொண்டு பாய்ந்த இடம் ஆல் அறு என்று கூறப்பட்டது போலும். ஆலறு என்னும் சொல் பிற்காலத்தில் ஆறு என்று திரிந்து வழங்கியது போலும். நீர், தாழ்ந்த இடத்தை நோக்கி ஓடும் இயல்புள்ளது. ஆகவே, ஆல் (நீர்) அறுத்துச் சென்ற வழி ஆலறு என்று வழங்கப்பட்டது என்பதில் என்ன தடை? பிறகு, ஆலறு என்னுஞ் சொல் ஆறு என்று மருவியதில் என்ன ஐயம்? ஆறு என்னுஞ் சொல் இடுகுறிப் பெயர் என்று கருதி வந்தது தவறு என்பதும், அது ஆல் (நீர்) என்னும் சொல்லடியாகப் பிறந்த காரணப் பெயர் என்பதும் தெளி வாகிறது.

பழங்காலத் தமிழர் வாணிகம்

மயிலை சீனி.வேங்கடசாமி



பழங்காலத் தமிழர் வாணிகம்

(சங்க காலம்)

முகவுரை

சங்க காலத் தமிழர் வாணிகம் என்னும் இந்தப் புத்தகம் கடைச்சங்க காலத்தில் (அதாவது கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையில்) தமிழர் நடத்திய வாணிகத்தைப் பற்றிக் கூறுகிறது. அந்தக் காலத்துப் பழந்தமிழர், பாரத தேசத்தின் வடக்கே கங்கைக்கரை (பாடலிபுரம்) முதலாகக் கிழக்குக் கரை மேற்குக்கரை நாடுகளில் நடத்திய வாணிகத்தைப் பற்றியும் தமிழகத்துக்கப்பால் கிழக்கே இலங்கை, சாவகநாடு (கிழக்கிந்தியத் தீவுகள்), மலேயா, பர்மா முதலான கடல் கடந்த நாடுகளோடு செய்த வாணிகத்தைப் பற்றியும், மேற்கே அரபுநாடு, அலக்சாந்திரியம் (எகிப்து), உரோம் சாம்ராச்சியம் (யவன தேசம்) ஆகிய நாடுகளுடனும் செய்த வாணிகத்தைப் பற்றியும் கூறுகிறது. அந்தப் பழங்காலத்து வாணிகச் செய்திகளைச் சங்க காலத்து நூல்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது. மற்றும் தாலமி, பிளைனி முதலான யவன ஆசிரியர் எழுதின குறிப்புகளி லிருந்தும் *செங்கடல் வாணிகம்* என்னும் நூலிலிருந்தும், புதைபொருள் ஆய்வுகளிலிருந்தும் கிடைத்த செய்திகளி லிருந்தும் கிடைக்கும் சான்றுகளைக் கொண்டும் எழுதப்பட்டது.

அந்தப் பழங்கால வாணிகத்துக்கும் இக்காலத்து விஞ்ஞான உலக வாணிகத்துக்கும் பெருத்த வேறுபாடுகள் உள்ளன. ஆனால், அந்தப் பழங்காலத்தவர், அக்காலத்து இடம், பொருள், ஏவல் களுக்கும் சூழ்நிலைகளுக்கும் தக்கபடித் தரை வாணிகத்தையும் கடல் வாணிகத்தையும் நடத்தினார்கள். அவர்கள் கூட்டாகச் சேர்ந்து 'சாத்து' அமைத்துப் பெரிய வாணிகத்தை நடத்தினார்கள். தரை வாணிகஞ் செய்த வாணிகத் தலைவர் மாசாத்துவர் என்று பெயர் பெற்றனர். கடல் வாணிகத் தலைவர் மாநாய்கர் (மாநாவிகர்) என்று பெயர் கூறப்பட்டனர். அக்காலத் தமிழகத்திலே பல மாசாத்துவர்களும் பல மாநாய்கர்களும் இருந்தார்கள்.

சங்க காலத்துத் தமிழரசர்கள் தங்களுடைய நாடுகளில் வணிகர்க்கு ஊக்கமளித்து வாணிகத்தை வளர்த்தார்கள். அவர்கள் தங்களுடைய நாடுகளில் வாணிகக் கப்பல்கள் வந்து போகவும் ஏற்றமதி இறக்குமதி செய்யவும் துறைமுகப்பட்டினங்களை அமைத்தார்கள். இராக்காலத்தில் கடலில் வருகிற கப்பல்கள்

திசை தப்பிப் போகாமலும், துறைமுகத்தைக் காட்டவும் கலங்கரை விளக்குகளை அமைத்தார்கள். துறைமுகங்களில் உள்ள வாணிகப் பொருள்கள் களவு போகாதபடி காவல் வைத்தனர். வாணிகஞ் செய்து பெரும் பொருள் ஈட்டின வணிகப் பெருமக்களுக்கு 'எட்டி' என்னும் சிறப்புப் பெயரும், 'எட்டிப்பூ' என்னும் பொற் பதக்கத்தையும் அளித்துச் சிறப்பினைச் செய்தார்கள். தரை வாணிகமும் கடல் வாணிகமும் பெருகவே, அவற்றைச் சார்ந்து பயிர்த் தொழில் வளர்ச்சியும் கைத்தொழில் வளர்ச்சியும் பெருகிப் பொருள் உற்பத்தி அதிகப்பட்டது. பொருள்களின் உற்பத்தியினாலும் வாணிகத்தினாலும் பொருளாதாரம் உயர்ந்து நாடு செழித்து மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தார்கள். நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கும் நாகரிக வாழ்க்கைக்கும் வாணிகம் முக்கியக் காரணமாக இருந்தது.

நாட்டின் சரித்திரம் அந்நாட்டை அரசாண்ட அரசர்களுடைய வரலாறு மட்டும் அன்று. அந்நாட்டில் வாழ்ந்த குடிமக்களின் வாழ்க்கை வரலாறும் சேர்ந்ததே சரித்திரமாகும். சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கை வரலாற்றில் ஒரு பகுதி வாணிகத்தைச் சார்ந்தது. அக்காலத்து வாணிகத்தைக் கூறுகிற இந்நூல் பழந்தமிழர் வரலாற்றின் ஒரு கூறாகும். தமிழரின் பழைய வரலாற்றை அறிய விரும்புவோர்க்கு இப்புத்தகம் நல்லதோர் துணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

என்னை இந்த நூலை எழுத ஊக்குவித்தும் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டும் உதவிய நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிலையத்தாருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மயிலாப்பூர்–சென்னை
06-04-1974

மயிலை சீனி. வேங்கடசாமி

1. சங்க கால மக்கள் வாழ்க்கை

சங்க காலத்து வாணிகத்தைப் பற்றிப் பேசும்போது அக்காலத்து மக்களின் வாழ்க்கை நிலை எப்படி இருந்தது என்பதையும் அறியவேண்டும். சங்க காலம் என்பது கடைச்சங்க காலம். அது கி.பி. 250க்கு முற்பட்ட காலம். இக்காலத்துத் தமிழர் வாழ்க்கைக்கும் அக்காலத்துத் தமிழர் வாழ்க்கைக்கும் அதிக வேறுபாடு உண்டு. இப்போதுள்ள நாகரிகம் அக்காலத்தில் இல்லை. அக்காலத்தில் எல்லா நாடுகளிலும் மனித வாழ்க்கையும் நாகரிகமும், மட்டமாகவும் தாழ்ந்த நிலையிலும் இருந்தன. வாழ்ந்த இடத்துக்கும் சூழ்நிலைக்கும் தக்கபடி அவர்களுடைய நாகரிகமும் வாழ்க்கையும் உயர்ந்தும் தாழ்ந்தும் இருந்தன. அவர்கள் வாழ்ந்த இடங்களும் சூழ்நிலைகளும் ஒரே மாதிரி இல்லாமல் வெவ்வேறு வகையாக இருந்தபடியால் அவர் களுடைய வாழ்க்கை வெவ்வேறு விதமாகத் துன்பமாக அல்லது எளிதாக இருந்தது.

அந்தக் காலத்தில் மனிதர் எந்தெந்த இடங்களில் எவ்வெப்படி வாழ்த்தார்கள் என்பதை அறிவதற்குச் சங்க இலக்கியங்கள் மிகவும் பயன்படுகின்றன. நிலத்தினுடைய இயற்கையமைப்புக்குத் தக்கபடி அக்காலத்து மக்கள் வாழ்க்கை ஐந்து விதமாக அமைந்திருந்தது. குறிஞ்சி நிலம், முல்லை நிலம், மருத நிலம், நெய்தல் நிலம், பாலை நிலம் என்னும் நிலப் பிரிவுப்படி அவர்களுடைய வாழ்க்கையும் ஐந்து வகையாக இருந்தது.

மலையும் குன்றுகளும் உள்ள இடங்கள் குறிஞ்சி நிலம் என்று பெயர் பெற்றன. மேற்குத் தொடர்ச்சி மலைகளும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் தமிழ் நாட்டில் அமைந்துள்ளன. மலைகளின் மேலும் மலைச்சாரல்களிலும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். மலைகளுக்குக் கீழே இருந்த காடுகளும், காடு சார்ந்த இடங்களும் முல்லை நிலம் என்று பெயர் பெற்றன. இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை, மலைகளில் வாழ்ந்தவர்களின் வாழ்க்கையைவிட வேறுவிதமாக இருந்தது. ஆறுகள் பாய்கிறதும் அல்லது ஏரி குளங்கள் உள்ளதுமான சமவெளிகள் மருதம் என்று பெயர் பெற்றன. இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை, மற்றவர் களுடைய வாழ்க்கையைவிட மேலானதாக இருந்தது. கடற்கரை யோரமாக இருந்த நிலங்கள் நெய்தல் நிலம் என்று பெயர்

பெற்றன. சங்க காலத்தில் மிக நீண்ட கடற்கரை தமிழகத்துக்கு இருந்தது. அக்காலத்தில், மேற்குக் கடற்கரையையடுத்திருந்த சேர நாடும் (இப்போதைய மலையாள நாடு) துளு நாடும் (இப்போதைய தென் கன்னட வட கன்னட மாவட்டங்கள்) தமிழ்நாடாக இருந்த படியால், பழந்தமிழகத்துக்கு மிக நீண்ட கடற்கரை இருந்தது. கடற்கரையான நெய்தல் நிலத்தில் வசித்தவர் வாழ்க்கை துன்ப கரமான வாழ்க்கை. அவர்கள் நாள்தோறும் கடலில் வெகுதூரம் சென்று மீன் பிடித்து வந்து வாழ்க்கையை நடத்தினார்கள்.

இந்த நால்வகையான இயற்கை நிலம் அல்லாத வறண்ட பிரதேசம் பாலை நிலம் என்று பெயர் பெற்றது. இங்கு இயற்கை யாக மக்கள் வாழவில்லை. யாரேனும் இங்கு வசித்தார்கள் என்றால் அவர்களுடைய வாழ்க்கை மிருக வாழ்க்கை போல இருந்தது. இவ்வாறு இயற்கையாக அமைந்த வெவ்வேறு சூழ்நிலைகளில் வசித்த அக்காலத்துத் தமிழ் மக்களுடைய வாழ்க்கை வெவ்வேறு வகையாக இருந்தன. அவர்களுடைய தொழிலும் உணவும் உடையும் பண்பாடும் வெவ்வேறு விதமாக இருந்தன. அவற்றைச் சுருக்கமாகக் கூறுவோம்.

குறிஞ்சி நில மக்கள் வாழ்க்கை

மலைகளும் குன்றுகளும் அவற்றைச் சார்ந்த இடங்களும் குறிஞ்சி நிலம் என்று கூறினோம். இங்கு இருந்த ஊர்களுக்குக் குறிஞ்சி என்றும் சிறுகுடி என்றும் பெயர். இங்கு வாழ்ந்த மக்கள் குறவர் என்றும் குன்றவர் என்றும் இறவுளர் என்றும் அழைக்கப்பட்டார்கள். இறவுளர் என்பவர் இக்காலத்தில் இருளர் என்று கூறப்படுகின்றனர். இங்குச் சுனை நீர் உண்டு. மலையருவிகளும் உண்டு. பொதுவாக அருவிகள் வேனில் காலத்தில் வறண்டுவிடும். எக்காலமும் ஓடிக்கொண்டிருக்கிற அருவிகள் மிகச் சிலவே. மலைப் பாறைகளுக்கிடையே செடி கொடி மரங்கள் உண்டு. குறிஞ்சிச் செடிகளும் காந்தன் செடிகளும் குறிப்பிடத்தக்கவை. மூங்கிற் புதர்கள் உண்டு. வேங்கை, திமிசு, தேக்கு, சந்தனம், அகில், கடம்பு, கருங்காலி முதலான மரங்கள் வளர்ந்தன. பறவைகளில் மயிலும் கிளியும் குறிப்பிடத்தக்கவை. புலி, யானை, சிறுத்தைப் புலி, கரடி, காட்டுப்பன்றி, குரங்கு முதலான மிருகங்கள் இருந்தன.

மலைகளிலும் மலைச்சாரல்களிலும் ஐவன நெல்லையும் தினை என்னும் அரிசியையும் பயிர் செய்தார்கள். மரம் செடி கொடிகளை வெட்டி அப்புறப்படுத்தி வேர்களைக் கிளறிக் கொத்தி நிலத்தைப் பயன்படுத்தினார்கள். பண்படுத்திய நிலத்தை ஏரினால் உழாமல் மண்வெட்டியால் கொத்திக் கிளறி ஐவன நெல்லையும் தினையையும் பயிர் செய்தார்கள். இவை வானம் பார்த்த பயிர்கள். பெரும்பாலும் மழையை எதிர்பார்த்துப் பயிரிடப்பட்டவை.

மலையுச்சியிலுள்ள பாறைகளில் மலைத்தேன் கிடைத்தது. வள்ளிக் கிழங்கு பயிராயிற்று. பலா மரங்களிலே பலாப் பழங்கள் கிடைத்தன. யானைகளையும் காட்டுப் பன்றிகளையும் வேட்டை யாடினார்கள். தேனை மூங்கிற் குழாய்களில் ஊற்றிப் பதப்படுத்தி ஒருவகை மதுவை உண்டாக்கினார்கள். தினையரிசியிலிருந்தும் மதுபானம் உண்டாக்கினார்கள். மிகத் தாழ்வான சிறிய குடில் களைக் கட்டி அதன் மேல் தினைத்தாளையும் ஐவன நெல்லின் தாளையும் கூரையாக வேய்ந்த குடில்களில் வசித்தார்கள். இவர்களுடைய வாழ்க்கை கடின வாழ்க்கையாக இருந்தது. இவர்களுடைய உணவு உற்பத்தி போதுமானவையன்று. பற்றாக் குறையாகவே இருந்தது. மலைத்தேன், யானைத் தந்தம், புலித் தோல், அகில் கட்டை, சந்தனக் கட்டை ஆகியவற்றை விற்றார்கள். இவர்களுடைய வாணிகம் பண்டமாற்றாக இருந்தது. இவர்களுடைய இயற்கைச் சூழ்நிலை நாகரிகம் பெறுவதற்கு ஏற்றதாக இல்லை.

முல்லை நிலத்து மக்கள் வாழ்க்கை

மலைகளின் அடிவாரத்தில் உள்ளது முல்லை நிலம். சிறு குன்றுகளும் காடுகளும் காட்டாறுகளும் இங்கே இருந்தன. முல்லைக் கொடிகளும் கொன்றை (சரக்கொன்றை), குருந்து முதலான மரங்களும் இங்கு உண்டு. கானக்கோழி, மயில், முயல், மான் முதலானவை இங்கு இருந்தன. இங்கு வாழ்ந்த மக்கள் இடையர், எயினர் (எயினர்-வேடர்). இடையர் பசுக்களையும் ஆடு களையும் காடுகளிலும் புற்றரைகளிலும் ஓட்டி மேய்த்தார்கள். வரகு, கேழ்வரகு ஆகிய தானியங்களைப் பயிரிட்டார்கள். அவரை, துவரை போன்றவைகளையும் பயிரிட்டார்கள். குளங்களிலிருந்து நீர்பாய்ச்சினார்கள். இவை வானம் பார்த்த பயிர்கள். மழையை எதிர்பார்த்தே பயிர் செய்தார்கள். வரகு, கேழ்வரகு இவற்றை உணவாக உண்டார்கள். பால், தயிர், நெய்களையும் உணவாக உண்டார்கள்.

இவர்கள் தங்கள் வீடுகளைக் குடில்களாகக் கட்டிக் கொண்டிருந்தார்கள். வரகுத்தாள், கேழ்வரகுத் தாள்களைக் கூரையாக வேய்ந்தார்கள். இவர்களுடைய வீடுகள், குறிஞ்சி மக்களின் வீடுகளைவிட உயரமாகவும் நன்றாகவும் இருந்தன. பால், தயிர், மோர், நெய் இவைகளை விற்றார்கள். இவற்றைப் பெரும்பாலும் பண்டமாற்றாகவே விற்றார்கள். முல்லை நிலத்து மக்கள் வாழ்க்கை, குறிஞ்சி நிலத்து மக்கள் வாழ்க்கையைவிடச் சற்று உயர்ந்திருந்தது. இவர்கள் அவர்களைவிட நன்றாகவும் நாகரிகமாகவும் வாழ்ந்தார்கள்.

மருத நிலத்து மக்கள் வாழ்க்கை

ஏரிகள் அல்லது ஆறுகளைச் சார்ந்திருந்தது மருத நிலம். நிலவளமும் நீர்வளமும் உள்ள மருத நிலத்தில் மண்வளம் மிக்க

வயல்களில் நெல்லைப் பயிரிட்டார்கள். எருதுகளையும் எருமைகளையும் பூட்டிய ஏர்களினால் நிலத்தை உழுது, பண்படுத்தி எருவிட்டு விதை விதைத்து நீர்பாய்ச்சி நெல்லை விளைத்தார்கள். கரும்பையும் பயிரிட்டார்கள் (காய்கறி முதலான உணவுப் பொருள்களையும் பயிரிட்டார்கள்). நெல்லைப் பயிரிட்டு உணவுக்கு முட்டுப்பாடில்லாமல் வாழ்ந்தபடியினால் மருத நிலத்து மக்கள் வாழ்க்கை மற்ற நிலத்து மக்கள் வாழ்க்கையைவிடப் பலமடங்கு உயர்ந்திருந்தது. வாழ்க்கையில் அதிகம் கவலைப்படாமல் இருந்த இவர்களுக்கு ஓய்வும் கிடைத்தது. ஆகவே, இவர்கள் நாகரிகமும் பண்பாடும் பெற்று வாழ வாய்ப்பிருந்தது.

உலகத்திலே எல்லாத் தேசங்களிலும் மக்கள் நாகரிகம் பெற்ற இடம் ஆற்றங்கரைகளிலும் ஏரிக்கரைகளிலுந்தான் என்று வரலாறு கூறுகிறது. இது உண்மையே. தமிழ் நாட்டிலும் மக்கள் நாகரிகம் பெற்று வளர்ந்த இடம் ஆற்றங்கரைகளும் ஏரிக்கரைகளுமே. ஆகவே, மருத நிலத்திலேதான் தமிழருடைய நாகரிகமும் பண்பாடும் வளம் பெற்று வளர்ந்தன. கைத்தொழில்களும் கல்வியும் கலைகளும் வாணிகமும் செல்வமும் அரசியலும் அமைதியான வாழ்க்கையும் மருத நிலங்களிலே செம்மையாகச் செழித்து வளர்ந்தன. மருத நிலத்து மக்கள் கட்டடங்களையும் மாளிகைகளையும் அரண்மனைகளையும் அமைத்துக்கொண்டு நாகரிகமாகவும் நன்றாகவும் வாழ்ந்தார்கள்.

நெய்தல் நிலத்து மக்கள் வாழ்க்கை

கடலைச் சார்ந்த நிலம் நெய்தல் நிலம் என்று கூறினோம். கடற்கரைக் குப்பங்களிலும் பாக்கங்களிலும் வசித்த நெய்தல் நிலத்து மக்கள் பரதவர் என்றும் பட்டினவர் என்றும் பெயர் பெற்றனர். மணல் நிலம் ஆகையினால் இங்கே நெல், கேழ்வரகு முதலான தானியங்கள் விளையவில்லை. ஆகவே, நெய்தல் நிலத்து மக்கள் கட்டுமரங்களிலும் படகுகளிலும் கடலில் வெகுதூரம் போய் வலைவீசி மீன் பிடித்துவந்து விற்று வாழ்ந்தார்கள். கடலில் சுறா, இறால், திருக்கை முதலான மீன் வகைகள் கிடைத்தன. அவற்றைப் பிடித்து வந்து அயல் ஊர்களில் விற்று (பண்டமாற்று செய்து), தானியங்களைப் பெற்று வாழ்ந்தார்கள். விற்று மிகுந்த மீன்களை உப்பிட்டுப் பதப்படுத்தி உலர்த்திக் கருவாடு செய்து விற்றார்கள்.

சில இடங்களில் கடற்கரையோரங்களில் உப்பளங்கள் இருந்தன. அந்த அளங்களில் கடல்நீரைப் பாய்ச்சி உப்பு உண்டாக்கினார்கள். உப்பை நெல்லுக்கு மாற்றினார்கள்.

நெய்தல் நிலத்து மக்கள் வாழ்க்கை கடினமான வாழ்க்கையே. குறிஞ்சி நில மக்கள் வாழ்க்கை ஒரு வகையில் கடினமானது என்றால் நெய்தல் நிலத்து மக்கள் வாழ்க்கை வேறு வகையில் கடினமானது.

கடற்கரையோரங்களில் சில இடங்களிலே துறைமுகங்கள் இருந்தன. துறைமுகங்களிலே வாணிகக் கப்பல்கள் வந்து இறக்குமதி ஏற்றுமதி செய்தபடியால் துறைமுகப்பட்டினங்களில் வாணிகமும் செல்வமும் பெருகின. ஆகவே, துறைமுகப் பட்டினங்கள் நாகரிகமும் செல்வமும் பெற்று விளங்கின.

பாலை நிலத்தில் மக்கள் வாழவில்லை என்று கூறினோம். வாழ்வதற்கு எந்த விதத்திலும் வாய்ப்பில்லாத பாலை நிலத்தில் மக்கள் வாழவில்லை. வாழ்ந்தவர்களும் மனிதராக வாழவில்லை, மாக்களைப் போல வாழ்ந்தார்கள்.

இவ்வாறு வெவ்வேறு இயற்கையான சூழ்நிலைகள் அமைந்த இடங்களில் வசித்த அக்காலத்துத் தமிழர் வெவ்வேறு வகையான வாழ்க்கையை வாழ்ந்தார்கள். விரைவான போக்குவரத்துச் சாதனங்களும் தந்தி தபால் வசதிகளும், மற்றும் இக்காலத்து வசதிகள் பலவும் அக்காலத்தில் இல்லாதபடியால் கல்வி, பொருளாதாரம், நாகரிகம் முதலியவை வளர்ச்சியடைய இயலாமற் போயின. இக்காலத்தில் மிக எளிய மக்கள் பெறுகிற வசதியைக்கூடச் செல்வம் பெற்றவர் பெற முடியாத சூழ்நிலை அக்காலத்தில் இருந்தது. இத்தகைய சூழ்நிலை தமிழருக்கு மட்டுமல்ல, உலகத்தில் எல்லா நாட்டிலும் இப்படிப்பட்ட நிலைதான் இருந்தது.

அந்தக் காலத்தில் தமிழருடைய நாகரிகம் மருத நிலத்திலும் துறைமுகப்பட்டினங்களிலும் வளர்ந்தது என்று கூறினோம். ஆம், பட்டணங்களிலும் பட்டினங்களிலும்தான் அக்காலத்துத் தமிழரின் நாகரிகம், பண்பாடு, கலைகள் எல்லாம் வளர்ந்தன.

தமிழரின் வாணிகம் அக்காலத்தில் எவ்வாறு நடந்தது என்பதைப் பார்ப்போம். இக்காலத்தில் சிறு விலையுள்ள பொருளுக்கும் அதிக விலையுள்ள பொருளுக்கும் காசு பயன்படுகிறது. ஆனால், காசு (நாணயம்) ஆதிகாலத்தில் ஏற்படவில்லை. ஆதிகாலத்தில் பண்டமாற்று – ஒரு பொருளைக் கொடுத்து அதற்கு ஈடாக மற்றொரு பொருளைப் பெறுவது நடந்தது. பிறகு பையப்பைய நாணயம் (காசு) வழங்கத் தலைப்பட்டது. நமது ஆராய்ச்சிக்குரிய சங்க காலத்துத் தமிழகத்திலே பண்டமாற்றும் நாணயச் செலாவணியும் நடைபெற்றன.

2. பண்ட மாற்று

சங்க காலத்திலே வாழ்ந்த தமிழர் அன்றாடத் தேவையான அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி முதலான பொருள்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்று செய்துகொண்டார்கள். பண்டமாற்று என்பது ஒரு பொருளைக் கொடுத்து அதற்கு ஈடாக இன்னொரு பொருளைக் கொள்வது. அதிக விலையுள்ள பொருள்களை மட்டும் காசு கொடுத்து வாங்கினார்கள். பெரிய பட்டினங்களிலும் நகரங்களிலும் காசு கொடுத்தும் பொருளை வாங்கும் முறை இருந்தபோதிலும், ஊர்களிலும் கிராமங்களிலும் பொதுவாகப் பண்டமாற்று முறையே வழக்கத்தில் இருந்தது. தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் உலகத்திலே எல்லா நாடுகளிலும் பழங்காலத்தில் பண்டமாற்று தான் நடந்து வந்தது. மற்ற நாடுகளில் இருந்தது போலவே தமிழகத்திலும் பழங்காலத்தில் பண்டமாற்று முறை இருந்தது. சங்க நூல்களிலிருந்து இதை அறிகிறோம்.

இடையன் பாலைக் கொடுத்து அதற்கு ஈடாகத் தானியத்தை மாற்றிக்கொண்டதை முதுகூர்த்தனார் கூறுகிறார். 'பாலொடு வந்து கூழொடு பெயரும் யாடுடை இடைமகள்' என்று (குறு. 221. 3-4) அவர் கூறுகிறார். (கூழ் என்பது அரிசி, கேழ்வரகு, வரகு, தினை முதலான தானியங்கள்.)

ஆயர் மகளிர் தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுத்து நெய் காய்ச்சினார்கள். தயிரையும் மோரையும் மாற்றித் தானியத்தைப் பெற்று உணவு சமைத்து உண்டதைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறுகிறார்.

நள்ளிருள் விடியல் புள்ளெழப் போகிப்
புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
ஆம்பி வான்முகை யன்ன கூம்புமுகிழ்
உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ
நாள்மோர் மாறும் நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வரும் காதிற் பணைத்தோள்
குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்
அளைவிலை உணவில் கிளையுடன் அருந்தி

என்று (பெரும்பாண். 155-163) அவர் கூறுகிறார்.

(நுரை - வெண்ணெய்; அளை-மோர்; மாறும்-பண்டமாற்று செய்யும்; கிளையுடன் - சுற்றத்தாரை; அருத்தி - உண்பித்து)

ஆனால், இடைச்சியர் நெய்யைப் பண்டமாற்றுச் செய்யாமல் காசுக்கு விற்று அக்காசுகளைச் சேமித்து வைத்தார்கள். குறிப்பிட்ட தொகை காசு சேர்ந்தபோது அக்காசைக் கொடுத்துப் பசுவையும் எருமையையும் விலைக்கு வாங்கினார்கள் என்று இந்தப் புலவரே கூறுகிறார்.

நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
மடிவாய்க் கோவலர் (பெரும்பாண். 164-166)

(விலைக்கு அட்டி - விலைக்காக அளந்து; பசும்பொன் கொள்ளாள் - நெய் விலையாகவுள்ள காசைப் பெறாமல் அவர்களிடத்திலேயே சேமித்து வைத்து; நல்லான் - பசு; நாகு - பெண் எருமை)

வேடன் தான் வேட்டையாடிக் கொண்டுவந்த மான் இறைச்சியை உழவனிடத்தில் கொடுத்து அதற்கு ஈடாக நெல்லை மாற்றிக்கொண்டதைக் கோவூர்கிழார் கூறுகிறார். இடைச்சியரும் உழவனுக்குத் தயிரைக் கொடுத்து நெல்லைப் பெற்றுக் கொண்டனர் என்று இப்புலவரே கூறுகிறார்.

கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான்தசை சொரிந்த வட்டியும், ஆய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பும் நிறைய
ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கோள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப உவந்தனர் பெயரும்
தென்னம் பொருப்பன் நன்னாடு (புறம் 33 : 1-8)

(வட்டி - பனையோலையால் முடைந்த சிறு கூடை, தசும்பு, பானை; குளக்கீழ் விளைந்த - ஏரிக்கரையின் கீழே விளைந்த; முகந்தனர் கொடுப்ப - அளந்து கொடுக்க)

பாணர் உள்நாட்டு நீர்நிலைகளில் (ஆறு, ஏரி, குளங்களில்) வலை வீசியும் தூண்டில் இட்டும் மீன் பிடித்தார்கள். அவர்கள் பிடித்த மீன்களைப் பாண்மகளிர் ஊரில் கொண்டுபோய்ப் பயற்றுக்கும் தானியத்துக்கும் மாற்றினார்கள் என்று ஓரம் போகியார் கூறுகிறார்.

முள் எயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
அரிகால் பெரும்பயறு நிறைக்கும்
(ஐங்குறு. மருதம், புலவிப்பத்து 47)

(பாண்மகள் - பாணர் பெண்; கெடிறு - கெளுத்தி மீன்; மனையோள் - குடியானவன் மனைவி)

வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள்
யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும்
(ஐங்குறு. மருதம், புலவிப்பத்து 48)

(வராஅல்-வரால் மீன்; ஆண்டுகழி வெண்ணெல் - ஒரு ஆண்டு பழமையான நெல்)

அஞ்சில் ஓதி அசைநடைப் பாண்மகள்
சின்மீன் சொரிந்து பன்னெற் பெரூஉம்
(ஐங்குறு. மருதம், புலவிப்பத்து 49)

கடற்கரையைச் சார்ந்த உப்பளங்களில் நெய்தல் நில மக்கள் உப்பு விளைத்தார்கள். உப்பு வாணிகர் மாட்டு வண்டிகளிலே நெல்லைக் கொண்டு வந்து கொடுத்து உப்பை மாற்றிக்கொண்டு போனார்கள் என்று நற்றிணைச் செய்யுள் கூறுகிறது.

தந்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து
பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி

நெய்தல் நிலத்து முதுமகள் ஒருத்தி தன் உப்பளத்தில் விளைந்த உப்பை மாற்றி நெல் கொண்டுவரச் சென்றாள் என்று கல்லாடனார் கூறுகிறார்.

யாயும்
உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்பு விளை கழனிச் சென்றனள் (குறுந். 269 : 4-6)

(ஆய் - அன்னை, தாய்; தரீஇய-கொண்டுவர)

ஊர்த் தெருவுகளில் உப்பு விற்ற உமணப் பெண், உப்பை நெல்லுக்கு மாற்றினதை அம்மூவனார் கூறுகிறார்.

கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரிவிலை மாறு கூறலின் (அகம் 140 : 5-8)

(சேரி - தெரு; விலைமாறு - பண்டமாற்று)

நெல்லும் உப்பும் நேரே ஊரீர்
கொள்ளிரோவெனச் சேரிதொறும் நுவலும்
(அகம் 390 : 8-9)

உப்பை நெல்லுக்கு மாற்றிய உப்பு வாணிகர் தமக்குக் கிடைத்த நெல்லைச் சிறு படகுகளில் ஏற்றிக்கொண்டு கழிகளில் ஓட்டிச் சென்றதைக் கடியலூர் உருத்திரன் கண்ணனார் கூறுகிறார்.

குறும்பல் லூர்நெடுஞ் சோணாட்டு
வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி

என்று (*பட்டினப்பாலை* 28-30) அவர் கூறுகிறார். உப்பை நெல்லுக்கு மாற்றியதை உலோச்சனார் கூறுகிறார்.

உமணர் தந்த உப்பு நொடை நெல் (*நற்றிணை* 254 : 6)

கடற்கரையோரத்திலே நெய்தல் நிலத்தில் வசித்த பரதவர் கடலிலே சென்று சுறா, இறால் முதலான மீன்களைப் பிடித்து வந்தார்கள். அவர்கள் கொண்டு வந்த மீனைப் பரதவ மகளிர் எளிதில் தானியத்துக்கு மாற்றினார்கள் என்று குன்றியனார் கூறுகிறார்: 'இனிது பெறு பெருமீன் எளிதினிற் மாறி' (*நற்றிணை* 239 : 3). பரதவர் மகளிர் கடல் மீனை நெல்லுக்கு மாற்றியதை நக்கீரரும் கூறுகிறார்: 'பசு மீன் நொடுத்த வெண்ணெல் மாஅத், தயிர்மிதி மிதவை யார்த்துவம்' (*அகம்* 340 : 14-15). 'உப்பு நொடை நெல்வின் மூரல் வெண்சோறு' என்று குடவாயில் கீரத்தனார் கூறுகிறார் (*அகம்* 60 : 4).

பரதவ மகளிர் கடல்மீனைத் திருவிழா நடக்கிற ஊர்களில் கொண்டுபோய் எளிதில் விற்றதைச் சித்தலைச் சாத்தனார் கூறுகிறார்.

திமிலோன் தந்தக டுங்கண் வயமீன்
தழையணி அல்குல் செல்வத் தங்கையர்
விழவயர் மறுகின் விலையெனப் பகரும்
கானலஞ் சிறுகுடி (*அகம்* 320 : 2-5)

மீனை நெல்லுக்கு மாற்றினார்கள்; பண்ட மாற்றினால் கிடைத்த நெல்லை அம்பியில் ஏற்றிக்கொண்டு கழிகளின் வழியே வந்ததைப் பரணர் கூறுகிறார்.

மீன் நொடுத்து நெல் குவைஇ
மிசை அம்பியின் மனைமறுக் குந்து (*புறம்* 343 : 1-2)

உழவர் மகளிர் தெருக்களில் பூ விற்றதைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ கூறுகிறார்.

துகிலிகை யன்ன துய்த்தலைப் பாதிரி
வாலிதழ் அலரி வண்டுபட ஏந்திப்
புதுமலர் தெருவுதொறும் நுவலும்
நொதுமலாட்டி (*நற்றிணை* 118 : 8 - 11)

(துகிலிகை - ஓவியர் வண்ணங்களைத் தொட்டு எழுதும் கோல் (Brush); பாதிரி - பாதிரிப்பூ; அலரி - அலரிப்பூ)

பெண் ஒருத்தி மலர் விற்றதைப் பாண்டியன் மாறன் வழுதி தம்முடைய செய்யுளில் கூறுகிறார்.

துய்த்தலை இதழபைங் குருக்கத்தியொடு
பித்திகை விரவுமலர் கொள்ளீரோ என
வண்டு சூழ் வட்டியள் திரிதரும்
தண்டலை யுழவர் தனிமடமகள் (நற்றிணை 97 : 6-9)

பூ விற்ற பெண்களும் பூவை நெல்லுக்குப் பண்டமாற்றுச் செய்தனர் என்பது சொல்லாமலே விளங்குகிறது.

வேடர்கள் ஒன்றுகூடிக் காட்டில் வேட்டையாடிக் கொன்ற யானையின் தந்தங்களை மதுபானக் கடையில் கொண்டு போய்க் கொடுத்து மதுபானம் அருந்தினதை மாமூலனார் கூறுகிறார்.

வரிமாண் நோன்ஞாண் வன்சிலைக் கொளீஇ
அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கொடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயரும்
(அகம் 61 : 8 -10)

(நறவு - மது; நெல்லின் நாண்மகிழ் - நெல்லரிசியினால் உண்டாக்கப்பட்ட மது)

வேடர் தேனையும் கிழங்கையும் கொண்டு வந்து மதுபானக் கடையில் மாற்றி அதற்கு மாறாக வறுத்த மீன் இறைச்சியையும் மதுவையும் வாங்கி உண்டதையும், உழவர் கரும்பையும் அவலையும் கொண்டுவந்து கொடுத்து அதற்கு மாறாக வறுத்த மான் இறைச்சியையும் மதுவையும் பெற்று உண்டு மகிழ்ந் ததையும் முடத்தாமக் கண்ணியார் கூறுகிறார்.

தேனெய்யொடு கிழங்கு மாறியோர்
மீனெய்யொடு நறவு மறுகவும்
தீங்கரும்பொடு அவல் வகுத்தோர்
மான்குறையொடு மது மறுகவும்.
(பொருநர் ஆற்றுப்படை 214-217)

(தேன்நெய் - தேன்; மாறியோர் - மாற்றினவர்கள்; மீன்நெய் - வறுத்த மீன்; நறவு - மது, கள்; மான்குறை - மான் இறைச்சி)

கொற்கைக் குடாக்கடலின் கரையோரங்களில் வாழ்ந்த பரதவர், கொற்கைக் கடலில் மீன்பிடித்தபோது அதனுடன் முத்துச் சிப்பிகளும் கிடைத்தன. அந்தச் சிப்பிகளை அவர்கள் கள்ளுக் கடையில் மாற்றிக் கள் குடித்ததைப் பேராலவாயர் கூறுகிறார்.

பன்மீன் கொள்பவர் முகந்த சிப்பி
நாரரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும்
பேரிசைக் கொற்கை (அகம் 296 : 8-10)

(இப்பி - முத்துச் சிப்பி)

குறிப்பு: பாண்டி நாட்டிலிருந்த பேர் போன கொற்கைக் குடாக் கடல் பிற்காலத்தில் மணல் தூர்ந்து மறைந்து போய் விட்டது.)

எயினர் மது அருந்துவதற்காக மது விற்கும் இடத்துக்கு வந்து எந்தப் பொருளும் இல்லாதபடியால், 'காட்டில் வேட்டையாடி யானைத் தந்தங்களைக் கொண்டு வந்து கொடுப்போம். அதற்கு ஈடாக இப்போது கள்ளைக் கடனாகக் கொடு' என்று கேட்டதை மருதன் இளநாகனார் கூறுகிறார்.

அரிகிளர் பணைத்தோள் வயிறணி திதலை
அரிய லாட்டியர் அல்குமனை வரைப்பின்
மகிழ்நொடை பெறாஅர் ஆகி நனைகவுள்
கான யானை வெண்கோடு சுட்டி
மன்றாடு புதல்வன் புன்றலை நீவும்
அருமுனைப் பாக்கம்
(அகம் 245 : 8-13)

கொல்லி மலைமேல் வாழ்ந்த சிறுகுடி மக்கள், தம் சுற்றம் பசித்திருப்பதனால், தங்களிடமிருந்த யானைத் தந்தங்களைத் தானியத்துக்கு மாற்றிச் சோறு சமைத்து உண்டனர் என்று கபிலர் கூறுகிறார்.

காந்தளஞ் சிலம்பில் சிறுகுடி பசித்தெனக்
கடுங்கண் வேழத்துக் கோடு கொடுத்துண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரை
(குறுந்தொகை 100 : 3-5)

(சிலம்பு - மலை; வேழத்துக் கோடு - யானைத் தந்தம்; ஓரி - ஓரி என்னும் தலைவன்)

காசு (நாணயம்)

இவற்றிலிருந்து சங்க காலத்தில் பண்ட மாற்று வாணிகம் நடந்ததை அறிகிறோம். ஆனால், பண்டமாற்று வாணிகம் நடந்த அந்தக் காலத்தில் காசு வழங்கப்படவில்லை என்று கருதுவது கூடாது. அதே காலத்தில், செம்பு, வெள்ளி, பொன் காசுகளும் வழங்கி வந்தன. அந்தக் காசுகள் விலையுயர்ந்த பொருள்களை வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டன. பண்டமாற்று நடந்ததைச் சங்க நூல்களிலிருந்து தெரிந்துகொள்வது போலவே, காசுகள் வழங்கி வந்ததையும் சங்கச் செய்யுட்களிலிருந்து அறிகிறோம். அந்தக் காசுகள் நெல்லிக் காயின் வடிவம் போல உருண்டு சிறிது தட்டையாக இருந்தன என்று அறிகிறோம். இதனை மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் கூறுகிறார். பாலை நிலத்து வழியிலே இருந்த நெல்லி மரங்களிலிருந்து உதிர்ந்துள்ள நெல்லிக்காய்கள், பொற்காசுகள் உதிர்ந்து கிடப்பனபோலக் காணப்பட்டன என்று அவர் கூறுகிறார்.

புல்லிலை நெல்லிப் புகரில் பசுங்காய்
கல்லதர் மருங்கில் கடுவளி உதிர்ப்பப்
பொலஞ்செய் காசிற் பொற்பத்தாஅம் அத்தம்
(அகம் 363 : 6-8)

(புகர்இல் - துளை இல்லாத, கெட்டியான; கடுவளி - பெருங்காற்று; பொலம் செய் காசு - பொன்னால் செய்த காசு)

உகா மரத்தின் பழம்போல மஞ்சள் நிறமாகப் பொற்காசுகள் இருந்ததைக் காவன் முல்லைப் பூதனார் கூறுகிறார்.

குயில்கண் அன்ன குரூஉக் காய்முற்றி
மணிக்கா சன்ன மானிற இருங்கனி
உகாஅ மென்சினை உதிர்வன கழியும்
வேனில் வெஞ்சுரம் (அகம் 293 : 6-9)

(குரூஉ-குரு, நிறம்; காசு அன்ன - காசு போன்ற; உகா - உகா மரம்; சினை - கிளை)

பொற்காசுகளை மாலையாகச் செய்து மகளிர் அரையைச் சுற்றி (மேகலை போல) அணிந்துகொண்டதைக் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் கூறுகிறார்.

ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த
பொலஞ்செய் பல்காசு அணிந்த அல்குல் (புறம் 353 : 1-2)

காசுகளை மாலையாகச் செய்து அரையில் அணிந்திருந்த பெண் ஒருத்தியை மதுரைப் போத்தனார் கூறுகிறார்.

அம்மா மேனி ஐதமை நுசுப்பில்
பல்காசு நிரைத்த கோடேந் தல்குல்
மெல்லியல் குறுமகள். (அகம் 75 : 18-20)

(ஐது - அழகிய; நுசுப்பு - இடுப்பு, இடை; குறுமகள் - இளம்பெண்)

காசுமாலை அணிந்த இன்னொரு பெண்ணை ஓதலாந்தை யார் கூறுகிறார்.

பொலம்பசும் பாண்டிற் காசுநிறை அல்குல்
இலங்குவளை மென்றோள்
(ஐங்குறு. பாலை, செலவழுங்குவித்த பத்து 10)

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார்க்கு 40 நூறாயிரம் பொன் (நான்கு இலட்சம்) அவன் பரிசாகக் கொடுத்தான் என்று கூறப்படுகிறது (பதிற்றுப் பத்து, நான்காம் பத்து, பதிகம்). இங்குப் பொன் என்பது பொற்காசு என்று தோன்றுகிறது. ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் மேல் 6ஆம் பத்துப் பாடிய காக்கைப் பாடினியார் நச்செள்ளை யார்க்கு அவ்வரசன், நகை செய்து அணிவதற்காக ஒன்பது காப்பொன்னையும் நூறாயிரம் காணமும் (காணம் - அக்காலத்தில்

வழங்கின பொற்காசு) கொடுத்தான். செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடிய கபிலருக்குப் பரிசாக அவ்வரசன் நூறாயிரம் காணம் வழங்கினான் என்று ஏழாம் பத்துப் பதிகம் கூறுகிறது. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை அரிசில் கிழாருக்கு ஒன்பது நூறாயிரம் காணம் பரிசாகக் கொடுத்தான் என்பதைப் பதிற்றுப்பத்து 8ஆம் பத்துப் பதிகத்தினால் அறிகிறோம். இளஞ்சேரல் இரும்பொறை தன்னைப் பாடிய பெருங்குன்றூர்கிழார்க்கு முப்பத்திராயிரம் காணம் பரிசாகக் கொடுத்தான் என்பதை 9ஆம் பத்துப் பாயிரத்தினால் அறிகிறோம்.

பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்க்குச் சோழன் கரிகாலன் நூறாயிரங்காணம் ½ பரிசு வழங்கினான். இவ்வாறு, காணம் என்னும் பொற்காசு அக்காலத்தில் வழங்கி வந்ததை அறிகிறோம். செங்கம் என்னும் ஊரில் (தொண்டை நாடு), ஈயக் காசுகள் வழங்கி வந்ததை அங்கிருந்து கிடைத்த பழங் காசுகளிலிருந்து அறிகிறோம். அந்த ஈயக் காசுகளில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதனால் அவை கடைச்சங்க காலத்தில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பு வழங்கி வந்தவை என்பது தெரிகிறது. அந்தக் காசில் உள்ள எழுத்துக்கள் தேய்ந்து உருத் தெரியாமல் மழுங்கிப் போனமையால் அவ்வெழுத்துக்களின் வாசகத்தை அறிய முடியவில்லை. அந்தச் சான்றுகள் எல்லாம் அக்காலத்தில் காசு வழங்கி வந்தது என்பதைச் சந்தேகம் இல்லாமல் தெரிவிக்கின்றன.

இந்தக் காசுகள் அல்லாமல், அக்காலத்தில் கடல் கடந்த கப்பல் வாணிகத்தின் மூலமாக உரோம (யவன) தேசத்து நாணயங்கள் தமிழ்நாட்டில் வழங்கி வந்தன. அக்காசுகள் சமீப காலத்தில் ஏராளமாகப் புதையல்களிலிருந்து கிடைத்துள்ளன. அந்தக் காசுகளைப் பற்றிப் பின்னர்க் கூறுவோம்.

3. போக்குவரத்துச் சாதனங்கள்

வாணிகப் பொருள்கள் எல்லாம் ஒரே இடத்தில் உற்பத்தியாவதில்லை. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பொருள்கள் உற்பத்தியானபடியால், அப்பொருள்களை யெல்லாம் ஓரிடத்தில் கொண்டுவந்து சேர்ப்பதற்கு வாணிகர் கால்நடைகளையும் வண்டிகளையும் பயன்படுத்தினார்கள். ஆனால், இக்காலத்தில் உள்ள உந்து வண்டிகள், ரெயில் வண்டிகள், வான ஊர்திகள் போன்ற விரைவான போக்குவரத்துச் சாதனங்கள் இருப்பது போல அக்காலத்தில் இல்லை. ஆகவே அவர்கள் எருது, கழுதை, வண்டி, படகு, பாய்க் கப்பல்களைப் பயன்படுத்தினார்கள். எருமைக் கடாவை ஏர் உழுவதற்குப் பயன்படுத்தினார்கள். எருமைகளைப் பொதி சுமக்கவும் வண்டியிழுக்கவும் பயன்படுத்தவில்லை. பொதி சுமக்கவும் வண்டியிழுக்கவும் எருதுகள் பயன்பட்டன. எருதுக்கு அடுத்தபடியாகக் கழுதை பொதி சுமக்கப் பயன்பட்டது. கழுதைகள் வண்டி யிழுக்கப் பயன்படவில்லை.

சிந்து, பாரசீகம், அரபி நாடுகளிலிருந்து குதிரைகள் அக்காலத்தில் கொண்டுவரப்பட்டன. அவை கடல் வழியாகக் கப்பல்களில் கொண்டுவரப்பட்டன. குதிரைகளை அரசர் போர் செய்யப் பயன்படுத்தினார்கள். நால்வகைப் படைகளில் குதிரைப் படையும் ஒன்று. தேர்ப் படையில் தேர்களை (போர் வண்டிகளை) இழுக்கவும் குதிரைகள் பயன்பட்டன. குதிரை வண்டிகளை அரசரும் செல்வரும் பயன்படுத்தினார்கள். ஆனால், அக் காலத்தில் தமிழர் குதிரைகளைப் பொதி சுமக்கவும் வாணிகப் பொருள்களை ஏற்றிக்கொண்டு போகிற வண்டிகளை இழுக்கவும் ஏர் உழவும் பயன்படுத்தவில்லை.

அத்திரி

கோவேறு கழுதைகள் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டன. கோவேறு கழுதைகளுக்கு அத்திரி என்று பெயர் வழங்கப்பட்டது. நாகரிகமுள்ள செல்வ நம்பிகள் அக்காலத்தில் கோவேறு கழுதைகளை ஊர்தியாகப் பயன்படுத்தினார்கள். ஆனால், பொதி சுமக்கவும் சரக்கு வண்டிகளை இழுக்கவும் அவற்றைப் பயன்படுத்தவில்லை. ஊர்தியாக மட்டும் பயன்படுத்தி

னார்கள். அத்திரிக்கு இராச வாகனம் என்று பெயர் வழங்கப் பட்டது.

பாண்டி நாட்டுக் கொற்கைக் கடலுக்கு அருகில் பரதவர் ஊருக்கு ஒருவன் அத்திரி பூட்டின வண்டியில் சென்றான் என்று சேந்தன் கண்ணனார் கூறுகிறார்.

கொடுநுகம் நுழைந்த கணைக்கால் அத்திரி
வடிமணி நெடுந்தேர் பூண (அகம் 350 : 6-7)

அத்திரியை ஒருவன் ஊர்ந்து சென்றதை நக்கீரர் கூறுகிறார்.

கழிச்சுறா வெறிந்த புட்டாள் அத்திரி
நெடுநீர் இருங்கழி பரிமெலிந் தசைஇ (அகம் 120 : 10-11)

கடற்கழி வழியாக ஒருத்தன் அத்திரி ஊர்ந்து வந்ததை உலோச்சனார் கூறுகிறார்.

கழிச்சோறு ஆடிய கணைக்கால் அத்திரி
குளம்பிலும் சேயிறா ஒடுங்கின
கோதையும் எல்லாம் ஊதை வெண் மணலே
(நற்றிணை 278 : 7-9)

மதுரையில் வைகையாற்றில் நடந்த நீராட்டு விழாவிலே சிலர் அத்திரியூர்ந்து வந்தார்கள் என்று பரிபாடல் (10ஆம் பாடல் அடி 17) கூறுகிறது.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த செல்வக் குடி மகனாகிய கோவலன் கடலாடுவதற்குக் கடற்கரைக்குச் சென்றபோது அவன் அத்திரி ஊர்ந்து சென்றான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது (கடலாடு காதை, அடி 119). சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார், "அத்திரி - கோவேறு கழுதை, அஃதாவது குதிரையில் ஒரு சாதி" என்று உரை எழுதியுள்ளார். பழைய அரும்பத உரையாசிரியர், 'இராச வாகனமாகிய அத்திரி' என்று உரை எழுதியுள்ளார்; ஆகவே, அத்திரி அக்காலத்தில் உயர்தர ஊர்தியாகக் கருதப்பட்டது என்று தெரிகிறது.

குதிரை

குதிரை வெளிநாடுகளிலிருந்து வந்ததையும், அவை போர்க் களங்களில் பயன்படுத்தப்பட்டன என்பதையும் கூறினோம். அவை வண்டியிழுக்கவும் பயன்பட்டன. குதிரை வண்டிகள் தேர் என்று கூறப்பட்டன. குதிரை வண்டிகளைச் சங்க நூல்கள் கூறுகின்றன. சிறுபாணாற்றுப்படை குதிரை வண்டியைக் கூறுகிறது (சிறுபாண். 251-261). புலவர் உலோச்சனார் ஒருவர் குதிரை வண்டியில் வந்ததைக் கூறுகிறார் (அகம் 400 : 9-16). அளக்கர்ஞாழார் மகனார் மள்ளனார் தம்முடைய செய்யுள்களில் குதிரை வண்டிகளைக் கூறுகிறார் (அகம் 244 : 12-13, 344 : 7-11, 314 :

8-10). மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் தம்முடைய செய்யுளில் குதிரை வண்டியைக் கூறுகிறார் (அகம் 334 : 11-15). மருதன் இளநாகனாரும் நான்கு குதிரை பூட்டிய வண்டியைக் கூறுகிறார் (அகம் 104:3). மாங்குடி மருதனாரும் (குறுந். 173 : 1-3) புல்லாளங்கண்ணியாரும் (அகம் 154 : 11-13) மருங்கூர்கிழார் பெருங்கண்ணனாரும் (அகம் 80 : 8-13) அரிசில் கிழாரும் (புறம் 146 : 11) இடைக்காடனாரும் (அகம் 194 : 17-91) குதிரை வண்டிகளைத் தம்முடைய செய்யுட்களில் குறிப்பிடுகிறார்கள். ஆனால், அக்குதிரை வண்டிகள் வாணிகப் பொருள்களை ஏற்றிச்செல்லும் சரக்கு வண்டிகளாகப் பயன்படுத்தப்படவில்லை.

மாடும் மாட்டு வண்டியும்

வாணிகப் பொருள்களைக் கொண்டு போவதற்கு எருதுகள் பயன்பட்டன. மாட்டு வண்டிகளில் வாணிகப் பண்டங்களை ஏற்றிக்கொண்டு போனார்கள். வாணிகர் பலர் ஒன்றாகச் சேர்ந்து பொருள்களை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போனார்கள். இதற்கு வாணிகச் சாத்து என்பது பெயர். அவர்கள் தங்களோடு வில் வீரர்களையும் அழைத்துக்கொண்டு சென்றார்கள். ஏனென்றால், காட்டு வழிப்பறிக் கொள்ளைக்காரர் வந்து பொருள்களைக் கொள்ளையடிப்பதும் உண்டு. கொள்ளைக்காரர்களை அடித்து ஓட்டுவதற்காக வாணிகச் சாத்தினர் வீரர்களையும் தம்முடைய சாத்துடன் அழைத்துச் சென்றார்கள்.

கழுதை

வாணிகர், வாணிகப் பொருள்களை ஊர்ஊராகக் கொண்டு செல்வதற்குக் கழுதைகளைப் பயன்படுத்தினார்கள். பாறைகளும் குன்றுகளும் உள்ள நாடுகளுக்குச் செல்லக் கழுதைகள் முக்கியமாகப் பயன்பட்டன. கழுதைகளின் முதுகுகளின் மேல் சரக்குப் பொதிகளை ஏற்றிக்கொண்டு வாணிகச் சாத்து (வணிகக் கூட்டம்) ஒன்றுசேர்ந்து போயிற்று. எல்லைப் புறங்களில் வழிபறிக் கொள்ளைக்காரர் வழிபறித்துக் கொள்ளையிடுவதும் உண்டு. அவர்களை அடித்து ஓட்டுவதற்கு வாணிகச் சாத்தர் வில் வீரர்களையும் வாள் வீரர்களையும் துணையாக அழைத்துச் சென்றார்கள். வாணிகப் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர் அவர்கள் நாள் நிமித்தம் பார்த்து நல்ல வேளையில் புறப்பட்டனர். வழிபறிக் கொள்ளைக்காரர் இவ்வீரர்களையும் கொன்று பொருள்களைக் கொள்ளையடிப்பதும் உண்டு.

விளரி பரந்த கன்னெடு மருங்கின்
விளரூன் தின்ற வீங்குசிலை மறவர்
மைபடு திண்டோள் மலிர ஆட்டிப்

பொறைமலி கழுதை நெடுநிரை தழீஇய
திருந்துவாள் வயவர் அருந்தலை துமித்த
படுபுலாக் கமழும் ஞாட்பு
(அகம் 89 : 9-14 மாங்குடி மருதனார்)

(பொறைமலி - பாரம் நிறைந்த; நெடுநிறை - நீண்ட வரிசை)

நெடுஞ்செவிக் கழுதை குறுங்கால் ஏற்றை
புறநிறைப் பண்டத்துப் பொறை
(அகம் 343 : 12-13 மருதனிளநாகனார்)

(ஏற்றை - ஆண் கழுதை)

பலாப்பழம் அளவாகச் சிறுசிறு பொதிகளாகக் கட்டப் பட்ட மிளகு மூட்டைகளைக் கழுதைகளின் மேல் ஏற்றிக் கொண்டு வணிகச் சாத்தர் ஊர்ப் பயணஞ்சென்றனர். இடை வழியில் சுங்கச் சாவடிகளில் சுங்கஞ் செலுத்தினார்கள். சுங்கச் சாவடிகளில் வில் வீரர்கள் காவல் இருந்தனர்.

தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியல்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து
அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட் டியவு
(பெரும்பாண். 77-82 கடியலூர் உருத்திரங்கண்ணனார்)

(மிரியல் - மிளகு)

கிழக்குப் பக்கத்து நெய்தல் நிலத்தைச் சார்ந்த கடற்கரைப் பக்கங்களில் உண்டான உப்பை, மூட்டைகளாகக் கட்டிக் கழுதைகளின் மேல் ஏற்றிக்கொண்டு மேற்கேயுள்ள ஊர்களுக்கு வணிகர் சென்றனர்.

அணங்குடை முந்நீர் பரந்த செறுவின்
உணங்குதிறம் பெயர்த்த வெண்கல் அமிழ்தம்
குடபுல மருங்கின் உய்ம்மார் புள்ளோர்த்துப்
படையமைத் தெழுந்த பெருஞ்செ யாடவர்
நிரைபரப் பொறைய நரைப்புறக் கழுதைக்
குறைக்குளம் புதைத்த கற்பிறழ் இயவு
(அகம் 207 : 1-6 சேத்தம்பூதனார்)

(வெண்கல் அமிழ்தம் - உப்பு; உய்ம்மார் - கொண்டுபோக; புள் ஓர்த்து - நிமித்தம் பார்த்து)

வணிகச் சாத்தரை வென்று கொள்ளைக்காரர் வழிபறித்ததைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறுகிறார்.

சாத்தெறிந்து
அதர்கூட்டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடுவில் ஆடவர்
(அகம் 167 : 7-9)


பாண்டி நாட்டவராகிய மருதன் இளநாகனாரும் இதைக் கூறுகிறார்.

மழைபெயல் மறந்த கழைத்திரங் கியவில்
செல்சாத் தெறியும் பண்பில் வாழ்க்கை
வல்வில் இளையர் (அகம் 245 : 5-7)

(கழை - மூங்கில்; சாத்து - வணிகர் கூட்டம்; இளையர் - வீரர்)

சங்க காலத்து வாணிபம் தரை வழியாகவும் கடல் வழியாகவும் நடந்தது. தரை வழியாக வாணிகம் செய்த பெருவாணிகருக்கு மாசாத்துவன் என்பது பெயர். அக்காலத்தில் சாலைகள் அதிகமாக இல்லை. சாலைகளிலும் எல்லைப் புறங்களில் கொள்ளைக்காரர் இருந்தார்கள். கடல் வழியாக நடந்த வாணிகம் தரை வாணிகத்தைவிடச் சற்று அதிகமாகவும் நன்றாகவும் நடந்தது. கடல் வாணிகத்தை நடத்தின பெரிய வாணிகருக்கு மாநாய்கன் (மாநாவிகன், மா + நாவிகன்) என்பது பெயர். கடற் பிரயாணத்திலும் காற்று, புயல்களினால் கப்பல்களுக்குச் சேதம் உண்டாயின. கடற் கொள்ளைக்காரர் அதிகம் இல்லை. கடல் வாணிகம் இரண்டு விதமாக நடந்தது. கரைவழி ஓரமாகவே கப்பல்களை ஓட்டி நடத்தின வாணிகம் ஒன்று. கரைவழி ஓரமாகச் செல்லாமல்(பயன்படுத்தவில்லை. பொதி சுமக்கவும் வண்டியிழுக்கவும்) நடுக்கடலில் கப்பல் களைச் செலுத்திக் கடல் கடந்த நாடுகளுக்குப் போய்ச் செய்த வாணிகம் இன்னொன்று.

தரைவழி வாணிகமாக இருந்தாலும், கடல்வழி வாணிகமாக இருந்தாலும், இக்காலத்து வசதிகளைப் போல, அக்காலத்தில் வசதிகள் இல்லை. ஆனாலும், அந்தக் கடினமான சூழ்நிலை களிலும் தரை வாணிகமும் கடல் வாணிகமும் நடந்தன. தமிழ்நாட்டு வாணிகர் அயல்நாடுகளுக்குச் சென்று வாணிகஞ் செய்தார்கள். மேற்கே இத்தாலி, கிரேக்கதேசம் (யவன நாடு) முதல் கிழக்கே சாவக நாடு (கிழக்கத்தியத் தீவுகள்), பர்மா, மலாயா வரையிலும் தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே கங்கைக் கரைப் பிரதேசம் வரையிலும் அக்காலத்துத் தமிழர் வாணிகம் நடந்தது.



4. தமிழ் நாட்டு வாணிகர்

தமிழ்நாட்டின் மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருந்த படியால் தமிழர் இயற்கையாகவே கடற்பிரயாணஞ் செய்வதிலும் கப்பல் வாணிகம் செய்வதிலும் தொன்றுதொட்டு ஈடுபட்டிருந் தார்கள். மேலும், கடற்கரையாகிய நெய்தல் நிலங்களில் வாழ்ந்தவர்கள் நாள்தோறும் கடலில் சென்று மீன் பிடித்துவந்து வாழ்க்கையை நடத்தினார்கள். ஆகையால், கடலில் போய் வருவது தமிழர்களுக்குப் பழங்காலம் முதல் இயற்கையான தொழிலாக இருந்தது. கடலில் நெடுந்தூரம் கப்பலில் போகவும் வரவும் பழங்காலத்திலேயே பழகினார்கள். கரிகால் சோழனுடைய முன்னோரான ஒரு சோழன் கடற்காற்றின் உதவியினால் கடலில் நாவாய் ஓட்டினான்.

நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!

என்று புறநானூற்றுச் செய்யுள் (66) கூறுகிறது. பழைய காலத்துப் பாண்டியன் ஒருவன் தன் அடி அலம்பக் கடலில் நின்றான் என்றும், கடலில் தன் வேலை எறிந்து அதை அடக்கினான் என்றும் கூறப்படுகிறான். இதன் கருத்து என்னவென்றால், அவன் கடலை அடக்கிக் கடலில் நாவாய் செலுத்திக் கடற் பிரயாணத்தை எளிதாக்கினான் என்பது. இவற்றிலிருந்து கடலில் பிரயாணம் செய்வதைத் தமிழர் ஆதிகாலத்திலிருந்து நடத்தி னார்கள் என்பது தெரிகின்றது. கடலில் கப்பலோட்டுவது அக்காலத் தமிழருக்குக் கைவந்த செயலாயிற்று. அவர்கள் கடல் கடந்துபோய் வாணிகம் செய்தார்கள்.

கடலில் சென்று வாணிகஞ் செய்ததுபோலவே தரை வழியாகவும் பல நாடுகளுக்குப் போய் வாணிகம் செய்தார்கள். தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல் தரைவழியாக வட இந்திய நகரங்களுக்கும் போய் வாணிகஞ் செய்தார்கள். பெரிய வாணிகம் செய்தவர்களுக்குப் பெருங்குடி வாணிகர் என்பது பெயர். அயல் நாடுகளுக்கு வாணிகஞ் செய்யச் சென்றவர் ஒன்று சேர்ந்து கூட்டமாகச் சென்றார்கள். வணிகக் கூட்டத்துக்கு வணிகச்சாத்து என்பது பெயர்.

தரை வாணிகம்

அயல் நாடுகளுக்குத் தரை வழியாகச் சென்று வாணிகஞ் செய்த சாத்தர் கழுதைகள், எருதுகள், வண்டிகள் ஆகியவற்றில் வாணிகப் பொருள்களை ஏற்றிக்கொண்டு கூட்டமாகச் சென்றார்கள். அவர்கள் போகிற வழிகளில், மனித வாசம் இல்லாத பாலை நிலங்களில் வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் வந்து கொள்ளையடித்தார்கள். அவர்களை அடித்து ஓட்டுவதற்காக வாணிகச் சாத்தர் தங்களோடு வில்வீரர்களையும் அழைத்துக் கொண்டு போனார்கள். தமிழ்நாட்டில் மட்டும் அன்று; இந்திய தேசம் முழுவதுமே அக்காலத்தில் வழிப்பறிக் கொள்ளை செய்த வேடர்கள் இருந்தார்கள். ஆகையினாலே, வாணிகச் சாத்தர் அயல் நாடுகளுக்கு வாணிகஞ் செய்யப் போகும்போது கூட்டமாகச் சேர்ந்து போனதுமல்லாமல் தங்களோடு படைவீரர்களையும் அழைத்துக்கொண்டு போனார்கள். வாணிகர் சாத்தை வேடர்கள் கொள்ளையடித்ததைச் சங்க நூல்கள் கூறுகின்றன. மருதன் இளநாகனார், பாலை நிலத்தின் வழியே சென்ற வாணிகச் சாத்தைக் கொள்ளையிட்ட வேடரைக் கூறுகிறார்.

மழைபெயல் மறந்த கழைதிரங்கு இயவில்
செல்சாத்து எறியும் பண்பில் வாழ்க்கை
வல்வில் இளையர் (அகம் 245 : 5-7)

கடியலூர் உருத்திரங் கண்ணனாரும், வழிப்பறிக் கொள்ளை யிட்ட வில் வேடரைக் கூறுகிறார்.

சாத்தெறிந்து
அதர்கூட் டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடுவில் ஆடவர் (அகம் 167 : 7-9)

பலாப்பழம் அளவாகக் கட்டின மிரியல் (மிளகு) மூட்டைகளைக் கழுதைகளின் முதுகின்மேல் ஏற்றிக்கொண்டு வாணிகச் சாத்தர் தங்களுடைய வில் வீரர்களோடு சென்றனர். ஆங்காங்கே வழியில் இருந்த சுங்கச் சாவடிகளில் அரசனுடைய அலுவலர்கள் அவர்களிடமிருந்து சுங்கம் வாங்கினார்கள். இதைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறுகிறார்.

சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக்
கருவி லோச்சிய கண்ணகன் எறுழ்த்தோள்
கடம்பமர் நெடுவேள் அன்ன மீளி
உடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்
தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழம் கடுப்ப மிரியல்
புணர்ப் பொறைதாங்கிய வடுவாழ் நோன் புறத்து
அணர்ச் செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்

உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட்டியவு
(பெரும்பாண். 73-82)

வாணிகச்சாத்துடன் பாலை நிலத்து மறவர் செய்த போரை மாங்குடி மருதனார் கூறுகிறார்.

களரி பரந்த கல்நெடு மருங்கில்
விளரூன் தின்ற வீங்குசிலை மறவர்
மைபடு திண்டோள் மலிர ஆட்டிப்
பொறைமலி கழுதை நெடுநிரை தழீஇய
திருந்துவான் வயவர் அருந்தலை துமித்த
படுபுலாக் கமழும் ஞாட்பு (அகம் 89 : 9-14)

வேறு நாடுகளுடன் வாணிகம் செய்த வாணிகச் சாத்துக்கு அக்காலத்தில் அப்படிப்பட்ட துன்பங்கள் இருந்தன. அவர் களுடைய பொருளுக்கும் உயிருக்கும் ஆபத்து இருந்தது. அந்த ஆபத்துக்களையும் கருதாமல் அவர்கள் வாணிகம் செய்தார்கள். சாத்துக்களின் தலைவனான வாணிகனுக்கு மாசாத்துவான் என்று பெயர் வழங்கிற்று. காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த மாசாத்துவர் களில் கோவலனுடைய தந்தையாகிய மாசாத்துவானும் ஒருவன். அவன் சோழ அரசனுக்கு அடுத்த நிலையில் பெருங்குடி மக்களில் முதல் குடிமகனாக இருந்தான். அவனைச் சிலப்பதிகாரம் இவ்வாறு கூறுகிறது.

பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த
ஒருதனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க் காற்றும் மாசாத்துவா னென்பான்
இருநிதிக் கிழவன்மகன் ஈரெட்டாண் டகவையான்
(சிலம்பு, மங்கல வாழ்த்து)

கடல் வாணிகம்

கடல் வாணிகத்தையும் அக்காலத் தமிழர் வளர்த்தார்கள். மரக்கலங்களாகிய நாவாய்களில் உள்நாட்டுச் சரக்குகளை ஏற்றிக் கொண்டு போய் அயல்நாடுகளில் விற்று, அந்நாடுகளிலிருந்து வேறு பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்தார்கள். தங்கள் நாவாய்களை அவர்கள் கடலில் கரையோரமாகச் செலுத்திக் கொண்டுபோய் கரையோரமாக இருந்த ஊர்களில் தங்கிப் பொருள்களை இறக்குமதி ஏற்றுமதி செய்தார்கள். ஆனால், தமிழ்நாட்டுக்குக் கிழக்கே வெகு தூரத்தில், ஆயிரம் மைலுக்கப்பால் இருந்த சாவகம் (கிழக்கிந்தியத் தீவுகள்), காழகம் (பர்மா), கடாரம் முதலான கடல் கடந்த நாடுகளுக்குச் சென்ற போது நடுக்கடலில் நாவாய் ஓட்டிச் சென்றார்கள். தொல் காப்பியர் காலத்துக்கு கி.மு. 8ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழர்

கடல் வாணிகம் செய்து கொண்டிருந்தார்கள். அக்காலத்துத் தமிழர், கடலில் பிரயாணஞ் செய்யும்போது தங்களுடன் மகளிரை அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்ற கொள்கையைக் கொண்டிருந்தார்கள். தொல்காப்பியர் தம்முடைய இலக்கணத்திலும் அவ்வழக்கத்தைக் கூறியுள்ளார்.

முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை

என்று அவர் பொருளதிகாரம், அகத்திணை இயலில் கூறியுள்ளார். (முந்நீர் - கடல்; வழக்கம் - வழங்குவது, போவது; மகடூ - மகளிர்.) கடலில் பிரயாணம் செய்யக்கூடாது என்னும் கொள்கை நெடுங் காலமாகத் தமிழரிடத்தில் இருந்தது. அண்மைக் காலம்வரையில் இருந்த அந்த வழக்கம் சமீப காலத்தில்தான் மாறிப் போயிற்று. ஆகவே, சங்க காலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழ் மகளிர் கடலில் கப்பற்பிரயாணம் செய்யவில்லை.

பழங்காலத் தமிழர் வருணன் என்னும் கடல் தெய்வத்தை வழிபட்டார்கள். இதையும் தொல்காப்பியரே கூறுகிறார்.

வருணன் மேய பெருமணல் உலகம்

நெய்தல் நிலம் எனச் சொல்லப்படும் என்று அவர் கூறியுள்ளார் (பொருளதிகாரம் அகத்திணையியல்). பழங்காலத்துப் பாண்டியன் ஒருவன் முந்நீர்த் திருவிழாவைக் கடல் தெய்வத்துக்குச் செய்தான். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியனுக்கு முன்பு இருந்த அந்தப் பாண்டியன் நெடியோன் என்று கூறப்படுகிறான். முதுகுடுமிப் பெருவழுதியை வாழ்த்திய நெட்டிமையார் அவனை இவ்வாறு வாழ்த்துகிறார்:

எங்கோ வாழிய குடுமி! தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே (புறம் 9 : 8 -11)

பழமையாக நடந்து வந்த வருண வழிபாடு கி.மு. முதல் நூற்றாண்டிலேயே மறைந்துவிட்டது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் பௌத்த மதம் தமிழகத்துக்கு வந்தது. அந்த மதம் கி.மு. இரண்டாம், முதலாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் பரவிச் செல்வாக்குப் பெற்றது. அப்போது அம்மதத்தின் சிறு தெய்வமாகிய மணிமேகலா தெய்வம் வருணனுக்குப் பதிலாக வணங்கப்பட்டது. கடல் தெய்வமாகிய மணிமேகலா தெய்வம், கடலில் பிரயாணம் செய்கிற நல்லவருக்குக் கடலில் துன்பம் நேரிட்டால் அது அவர்களுக்கு உதவி செய்து காப்பாற்றுகிறது என்னும் நம்பிக்கை பௌத்த மதத்தில் இருந்தது. பௌத்தம் தமிழகத்தில் பரவிய போது, தமிழ்நாட்டு வணிகர் மணிமேகலா தெய்வத்தையும் கடல்

தெய்வமாக ஏற்றுக்கொண்டு வழிபட்டார்கள். இதைச் சிலப்பதிகாரம், மணிமேகலை என்னுங் காவியங்களிலிருந்து அறிகிறோம். நாவாயில் கடல் வாணிகம் செய்தவர் நாவிகர் என்று பெயர் பெற்றனர். கடல் வாணிகம் செய்த பெரிய நாவிகர் மாநாவிகர் என்று பெயர் பெற்றனர். மாநாவிகர் என்னும் பெயர் மருவி மாநாய்கர் என்று வழங்கப்பட்டது (நாவாய் - மரக்கலம்.) நாவாய்களில் வாணிகம் செய்தவன் நாவிகன்; நாவிகன் என்பது நாய்கன் என்று மருவிற்று. சிலப்பதிகாரக் காவியத் தலைவியாகிய கண்ணகி காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த ஒரு மாநாய்க்கனுடைய மகள். கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்த அந்த மாநாய்கனையும் அவன் மகளான கண்ணகியையும் சிலப்பதிகாரம் இவ்வாறு கூறுகிறது:

நாகநீள் நகரொடு நாகநாட தனொடு
போகநீள் புகழ்மன்னும் புகார்நகர் அதுதன்னில்
மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னாள் ஈராறாண் டகவையாள்
(சிலம்பு, மங்கல வாழ்த்து)

கரையோர வாணிகம்

கொற்கை, தொண்டி, பூம்புகார், சோபட்டினம் முதலான தமிழ்நாட்டுத் துறைமுகப்பட்டினங்களிலிருந்து நாவாய்களில் புறப்பட்டுச் சென்ற தமிழ் வாணிகர் கிழக்குக் கடல் ஓரமாகவே நாவாய்களைச் செலுத்தி நெல்லூர், கலிங்கப்பட்டினம், தம்ரலிப்தி (வங்காள தேசத் துறைமுகப்பட்டினம்) முதலான பட்டினங்களுக்குச் சென்றனர். பிறகு, கங்கையாறு கடலில் கலக்கிற புகர் முகத்தின் ஊடே கங்கையாற்றில் நுழைந்து கங்கைக்கரையில் இருந்த பாடலிபுரம், காசி (வாரணாசி) முதலான ஊர்களில் வாணிகஞ் செய்து திரும்பினார்கள். 'கங்கை வங்கம் போக்குவர் கொல்லோ' என்று நற்றிணை (189: 5) கூறுகிறது. கங்கைக் கரையில் பாடலிபுரத்தில் தமிழர் வாணிகஞ் செய்தபோது, கி.மு. 4ஆம் நூற்றாண்டில் மகத நாட்டையர சாண்ட நந்த அரசர் தங்களுடைய, தலைநகரமான பாடலி புரத்தில் கங்கையாற்றின் கீழே பெருஞ் செல்வத்தைப் புதைத்து வைத்திருந்ததைப் பற்றி அறிந்தனர். தமிழக வாணிகரின் மூலமாக நந்த அரசரின் செல்வப் புதையலைத் தமிழ் நாட்டவர் அக் காலத்தில் அறிந்திருந்தார்கள். மாமூலனார் என்னும் சங்கப் புலவர் தம்முடைய செய்யுளில் நந்தருடைய நிதியைக் கூறுகிறார்.

பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ (அகம் 265 : 4-6)

நந்த அரசரின் செல்வப் புதையலைப் பற்றிய இந்தச் செய்தியை இந்தச் செய்யுளில் இருந்து அறிகிறோம். வடநாட்டுப் பழைய நூல்களில் இந்தச் செய்தி கூறப்படவில்லை.

தமிழ் வாணிகர் கலிங்க நாட்டிலே போய் வாணிகஞ் செய்தார்கள். அந்த வாணிகச் சாத்து கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.மு. 150 வரையில் நூற்றைம்பது ஆண்டுகள் அங்குத் தங்கி வாணிகம் செய்தது. அவர்களுடைய வாணிகம் நாளுக்கு நாள் பெருகிச் செல்வாக்கும் பலமும் அடைந்தது. அக்காலத்தில் கலிங்க தேசத்தை யரசாண்ட காரவேலன் என்னும் அரசன் தமிழ் வாணிகரால் தன்னுடைய ஆட்சிக்கே ஆபத்து உண்டாகும் என்று அஞ்சி அந்த வாணிகச் சாத்தை அழித்து விட்டான். அந்தச் செய்தியை அவ்வரசன் எழுதியுள்ள ஹத்தி கும்பாக் குகைக் கல்வெட்டெழுத்துச் சாசனத்திலிருந்து அறி கிறோம். கலிங்க தேசத்தில் வாணிகஞ் செய்த தமிழர் கலிங்க நாட்டுப் பொருள்களைத் தமிழகத்துக்கும் தமிழகத்துப் பொருள்களைக் கலிங்க நாட்டுக்கும் கொண்டுபோய் விற்றார்கள். கலிங்க நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட முக்கியமான பொருள் பருத்தித் துணி. பெருவாரியாகக் கலிங்கத் துணி தமிழ்நாட்டில் இறக்குமதியாயிற்று. கலிங்கத்திலிருந்து வந்தபடியால் அத்துணி கலிங்கத் துணி என்று சிறப்பாகப் பெயர் பெற்றது. பிறகு காலப்போக்கில் கலிங்கம் என்னும் சொல் வழங்கப்பட்டிருக்கிறது. கலிங்க நாட்டிலிருந்து அக்காலத்தில் தமிழ்நாட்டுக்கு வந்த இன்னொரு பொருள் 'சந்தனக் கல் வடவர் தந்த வான் கேழ் வட்டம்'.

ஆந்திர நாட்டிலே பேர் போன அமராவதி நகரத்திலே (தான்ய கடகம்) சங்க காலத்திலே தமிழ் வாணிகர் சென்று வாணிகஞ் செய்தனர். அங்கிருந்த அமராவதி பௌத்தத்தூபி கி.மு. 200இல் தொடங்கி கி.பி. 200 வரையில் கட்டப்பட்டது. அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்குப் பலர் பல வகையில் உதவி செய்தார்கள். அப்போது அங்கு வாணிகஞ் செய்துகொண்டிருந்த தமிழ் வாணிகரும் அக்கட்டிடம் கட்டுவதற்கு உதவி செய்தனர். தமிள (தமிழ) கண்ணன் என்னும் வாணிகனும் அவனுடைய தம்பியாகிய இளங்கண்ணனும் அவர்களுடைய தங்கையாகிய நாகையும் அமராவதித் தூபி கட்டுவதற்குக் கைங்கரியம் செய்துள்ளனர். இந்தச் செய்தி அங்கிருந்து கிடைத்த ஒரு கல் சாசனத்தினால் தெரிகிறது. 3½ அடி உயரமும் 2 அடி 8 அங்குல அகலமும் உள்ள ஒரு கல்லில் பிராமி எழுத்தினால் எழுதப்பட்ட ஒரு சாசனம் இதைக் கூறுகிறது. இப்போது அந்தக் கல் இங்கிலாந்து தேசத்துக்குக் கொண்டு போகப்பட்டு அங்கு இலண்டன் மாநகரத்துக் காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக் கிறது. அதனாலும், கலிங்க நாட்டில் தமிழர் வாணிகஞ் செய்த

செய்தி அறியப்படுகிறது ('Notes on the Amaravati Stupa' by J. Bargees, 18/2, *Archaeological Survey of South India*, No. 80, p. 20).

தமிழ் வாணிகச் சாத்து (வாணிகக் குழு) கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இலங்கைக்குச் சென்று அக்காலத்துத் தலை நகரமாக இருந்த அநுராதபுரத்தில் வாணிகஞ் செய்ததை அங்குள்ள ஒரு பிராமி எழுத்துக் கல்வெட்டுச் சாசனம் கூறுகிறது. வாணிகச் சாத்தினுடைய மாளிகை இற்றைக்கு 2,200 ஆண்டு களுக்கு முன்பு கட்டப்பட்டிருந்தது. பிற்காலத்தில் மறைந்து போன அந்த மாளிகை பல நூற்றாண்டுகளாக மண்மூடி மறைந்து கிடந்தது. அண்மைக் காலத்தில், மழை நீரினால் அந்த மண்மேடு கரைந்து அங்குக் கல்லில் எழுதப்பட்ட பிராமி எழுத்துக்கள் வெளிப்பட்டன. கற்பாறையோடு சார்ந்திருந்த அந்த மாளிகையில் அக்காலத்தில் தமிழக நாவாய்த் தலைவன் அமர்ந்திருந்த இடத்திலும் மற்ற வாணிகத் தலைவர்கள் அமர்ந்திருந்த இடங் களிலும், அவர்களுடைய பெயர்கள் கல்லில் பொறிக்கப் பட்டுள்ளன. இவற்றிலிருந்து கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலே தமிழ் வாணிகர் அநுராதபுரத்தில் பெரிய வாணிக நிலையம் அமைத்திருந்தது தெரிகிறது ('Tamil House holder's Terrace Anuradhapura' by S. Paranavatana, *Annual Bibliography of Indian Archaeology*, Vol. xiii. 1938, pp. 13-14; *Journal of Ceylon Branch of the Royal Asiatic Society*, Colombo, Vol. xxxv, 1942, pp. 54-56; *Inscriptions of Ceylon*, Vol. i, 1970, No. 94a, p. 7).

கி.மு. இரண்டு, ஒன்றாம் நூற்றாண்டுகளில் இலங்கையில் வேறு சில தமிழ் வாணிகர் இருந்ததை அக்காலத்துப் பிராமிய எழுத்துச் சாசனங்கள் கூறுகின்றன (*Inscriptions of Ceylon*, Vol. 1, 1970, Edited S. P aranavatana. Nos. 19, 357 (20), p. 28; No. 430, p. 37).

தமிழ்நாட்டு வாணிகர் இலங்கைக்குச் சென்று வாணிகஞ் செய்ததைச் சங்க இலக்கியங்கள் கூறவில்லை. தமிழ வாணிகர் இருவர் இலங்கையைக் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அரசாண்டதை இலங்கை நூல்கள் கூறுகின்றன. சேனன், குட்டகன் என்னும் இரண்டு தமிழ் வணிகர் அக்காலத்தில் இலங்கையை அரசாண்ட சூரதிஸ்ஸன் என்னும் சிங்கள அரசனை வென்று புத்த சகாப்தம் 306 முதல் 328 வரையில் (கி.மு. 177 முதல் 155 வரையில்) இருபத்திரண்டு ஆண்டு நீதியாக அரசாண்டார்கள் என்று மகாவம்சமும் (XXX : 10-11) தீபவம்சமும் (XVIII : 47f) கூறுகின்றன. இவ்விருவரும் அஸ்ஸநாவிகர் (அஸ்ஸம் - அஸ்வம், குதிரை), குதிரை வணிகர் என்று கூறப்பட்டுள்ளனர்.

நடுக்கடல் வாணிகம்

தமிழகத்துக்குக் கிழக்கே வெகு தூரத்தில் வங்காளக்குடாக் கடலுக்கு அப்பால் பசிபிக் மகா சமுத்திரத்தில் பெருந்தீவுகளின்

கூட்டம் இருக்கிறது. அந்தத் தீவுகளுக்கு இக்காலத்தில் கிழக்கிந்தியத் தீவுகள் என்றும் இந்தோனேஷியத் தீவுகள் என்றும் பெயர். சங்க காலத்திலே இந்தத் தீவுகளைத் தமிழர், சாவகம் என்றும் சாவகநாடு என்றும் கூறினார்கள். சாவக நாட்டோடு அக்காலத் தமிழர் கடல் வழியாக வாணிகஞ் செய்தனர். தமிழ் நாட்டிலிருந்து ஆயிரம் மைல்களுக்கப்பால் உள்ள சாவகத் தீவுகளுக்கு வங்காளக்குடாக் கடலைக் கடந்து நடுக்கடலிலே கப்பலோட்டிச் சென்றார்கள்.



பழந்தமிழர் வாணிகக் கடல் வழிகள்

சாவக நாடு (கிழக்கிந்தியத் தீவுகள்) என்பது பெரிதும் சிறிதுமான ஆயிரக்கணக்கான தீவுகளின் கூட்டமாகும். இத் தீவுகளில் முக்கியமானது சாவா தீவு (ஜாவா). இதை வட நாட்டார் யவதிபம் என்று கூறினார்கள். சீன நாட்டார் இதை யெ தியவோ (Ye Tiao) என்று பெயர் கூறினார்கள். இது செழிப்பும் நிலவளமும் நீர்வளமும் உள்ளது. சாவா தீவுக்கு அடுத்து சுமாத்ரா, கலிமந்தன் (போர்னியோ), ஸுலவெஸி (செலிபீஸ், மின்டனாயோ, ஹல்மஹீரா) முதலான தீவுகளும் கணக்கற்ற சிறுசிறு தீவுகளும் சேர்ந்ததே தமிழர் கூறிய சாவக நாடு. சாவக நாட்டுக்கு அப்பால் வடக்கே சீன தேசம் இருந்தது. சீன தேசத்துக்கும் இந்தியாவுக்கும் இடை நடுவிலே கடலில் இருந்த சாவக நாடு (கிழக்கிந்தியத் தீவுகள்) அக்காலத்தில் உலகப் புகழ் பெற்ற வாணிக மத்திய இடமாக இருந்தது. அக்காலத்தில் உலகத்திலே வேறு எங்கும் கிடைக்காத வாசனைச் சரக்குகள் அங்கேதான் கிடைத்தன. ஆகவே, சாவகத்தின் வாசனைப் பொருள்களை வாங்குவதற்குச் சீனர் தங்கள் தேசத்துப் பொருள்களை எடுத்துக்கொண்டு கப்பல்களில் அங்கே வந்தார்கள். அக்காலத்தில் சீன தேசத்தின் முக்கியமான பொருள் பட்டு. பட்டுத்துணி அக்காலத்தில் சீன நாட்டில் மட்டும் உண்டாயிற்று. சீனர் பட்டுத்துணிகளையும் பீங்கான் பாத்திரங் களையும் எடுத்துக்கொண்டு சாவகத்துக்கு வந்தார்கள்.

தமிழ்நாட்டிலிருந்தும் வட இந்தியாவிலிருந்தும் வாணிகர் கப்பல்களில் சாவகம் சென்றார்கள். சாவக நாட்டில் சாவா தீவின் மேற்குப் பகுதியான சுந்தா தீவிலும் அதற்கு அடுத்த சுமாத்ரா தீவிலும் மிளகு உற்பத்தியாயிற்று. ஆனால் இந்த மிளகு, தமிழகத்துக்குச் சேர நாட்டில் உண்டான மிளகு போன்று அவ்வளவு சிறந்ததல்ல. ஆனாலும், சாவகத்து மிளகு தமிழகத்தின் கிழக்குக் கரை நாடுகளுக்குக் கொண்டு வரப்பட்டது. ஏனென்றால், பேர் போன சேர நாட்டு மிளகை, யவனர் கப்பலில் ஏற்றிக்கொண்டு போய் உரோமபுரி முதலான மேல் நாடுகளில் விற்றார்கள். ஆகவே, சேர நாட்டு மிளகு போதுமான அளவு தமிழகத்துக்குக் கிடைக்கவில்லை. பற்றாக்குறையை ஈடு செய்யச் சாவக நாட்டு மிளகு தமிழகத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

சுமாத்ரா, ஜாவா தீவுகளிலும், தைமர் (Timor) தீவிலும் சந்தன மரங்கள் விளைந்தன. அந்தச் சந்தனக் கட்டைகள் வெண்ணிற மாகவும் மணமுள்ளவையாகவும் இருந்தன. தமிழ்நாட்டிலே பொதிகை மலை, சைய மலைகளில் (மேற்குத் தொடர்ச்சி மலை) சந்தன மரம் விளைந்தது. ஆனால், இந்தச் சந்தன மரத்தைவிட சாவக நாட்டுச் சந்தன மரக்கட்டைகள் மணத்திலும் தரத்திலும் உயர்ந்தவை. அந்தச் சந்தன மரம் மருத்துவத்துக்குப் பயன்பட்ட படியால் சீனர் அதை வாங்கிக்கொண்டு போனார்கள். இலவங்கம் (கிராம்பு) ஒரு வகை மரத்தின் பூ. இது, ஹல்மஹீரா தீவுக்கு மேற்கே கடலில் உள்ள ஐந்து சிறிய தீவுகளில் விளைந்தது. பான்ட கடலில் ஸெராங் தீவுக்குத் தெற்கேயுள்ள ஆறு சிறு தீவுகளிலே சாதிக்காய் விளைந்தது. சுமாத்ரா தீவில் கற்பூர வகைகள் உண்டாயின. கற்பூரம் என்பது ஒரு வகையான மரத்தின் பிசின். பளிதத்தை அக்காலத்துத் தமிழர் வெற்றிலையோடு சேர்த்து அருந்தினார்கள். வெற்றிலையோடு அருந்திய கற்பூரம் பச்சைக் கற்பூரம் என்று பெயர் கூறப்பட்டது. அதற்குப் பளிதம் என்றும் பெயர் உண்டு. பௌத்தப் பிக்குகளும் மற்றவர்களும் உணவு உண்ட பிறகு தாம்பூலத்துடன் பளிதம் சேர்த்து அருந்தினார்கள் என்பதை மணிமேகலை நூலினால் அறிகிறோம்.

போனகம் எய்திப் பொழுதினிற் கொண்டபின்
பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து
(மணி. 28 : 242-243)

பளிதத்தில் (கற்பூரத்தில்) பலவகையுண்டு. 'பல பளிதம்' என்று 10ஆம் பரிபாடல் (அடி 82) கூறுகிறது. ஒருவகைப் பளிதத்தைச் சந்தனத்துடன் கலந்து உடம்பில் பூசினார்கள். கடல்களும் தீவுகளும் கலந்த சாவக நாட்டிலே பவழம் (துகிர்) உண்டாயிற்று. பவழம் (பவளம் - துகிர்) என்பது பவழப் பூச்சியால் உண்டாகும் பவழப் புற்று. கடலில் பவழப் பூச்சியால் உண்டாகும் பவழம்

அக்காலத்தில் சாவக நாட்டிலிருந்து கிடைத்தது. (மத்தியத்தரைக் கடலில் உண்டான பவழத்தை யவனர் கொண்டுவந்து விற்றனர்.)

தமிழகத்துக் கப்பல் வணிகர் சாவக நாட்டுக்குக் கடல் கடந்து போய் அங்கு உண்டான வாசப் பொருள்களையும் பவழத்தையும் சீனத்திலிருந்து அங்குக் கொண்டு வரப்பட்ட பட்டுத்துகிலையும் கொண்டுவந்து பழந்தமிழ் நாட்டில் விற்றார்கள்.

அக்காலத்தில் சீனர் தமிழ்நாட்டுக்கு வரவில்லை. அவர்கள் சாவகத்தோடு நின்றுவிட்டார்கள். அவர்கள் சாவகத்துக்குக் கொண்டுவந்த பட்டுக்களை, அங்குச் சென்ற தமிழக வாணிகர் வாங்கிக்கொண்டு வந்து இங்கு விற்றார்கள். தமிழர் பட்டுத் துணியை 'நூலாக்கலிங்கம்' என்று கூறியதைச் சங்க இலக்கியங் களில் காணலாம்.

சாவக நாட்டிலிருந்து கிடைத்த வாசப் பொருள்களைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. வாசப் பொருள்களை விற்றவர் வாசவர் என்று பெயர் கூறப்பட்டனர். வாசப் பொருள்கள் ஐந்து என்றும் அவை பஞ்ச வாசம் என்றும் கூறப்பட்டன. பஞ்ச வாசம்,

தக்கோலம் தீம்பூத் தகைசால் இலவங்கம்
கற்பூரம் சாதியோ டைந்து

என இவை.

தமிழ் நாட்டிலிருந்து சாவக நாட்டுக்குச் சென்ற கப்பல்கள் முதலில் இலங்கைத் தீவின் வடகோடியில் இருந்த (இப்போதைய யாழ்ப்பாணம்) மணிபல்லவம் என்னும் சம்புகொல பட்டினத்துக்குச் சென்று தங்கின. இது கப்பல்கள் தங்குவதற்கு நல்ல துறைமுகமாக இருந்தது. ஆனால், இங்கு ஏற்றுமதி இறக்குமதி நடைபெறவில்லை. மணிபல்லவம் (சம்புகொல பட்டினம்) அக்காலத்தில் மனிதர் வாழாத இடமாக இருந்தது; அங்குச் சென்று தங்கின கப்பல்கள் அங்கிருந்து கடற்பிரயாணத்துக்கு வேண்டிய குடிநீரை எடுத்துக்கொண்டு போயின. பிறகு அங்கிருந்து புறப்பட்டு நேரே நெடுந்தூரத்திலுள்ள கிழக்கிந்தியத் தீவுகளான சாவக நாட்டுக்குச் சென்றன. இடைவழியில் நாகர் மலைத் தீவுகள் இருந்தன. நாகர்மலைத் தீவுகள் பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 10, 11, 12ஆம் நூற்றாண்டுகளில்) மாநக்வரம் என்று பெயர் பெற்றிருந்தன. இக்காலத்தில் இத் தீவுகள் நக்கவாரித் (நிக்கோபர்) தீவுகள் என்று கூறப்படுகின்றன. அக்காலத்தில் அத்தீவுகளில் நாகர் இனத்தைச் சேர்ந்த காட்டுமிராண்டிகள் வசித்திருந்தார்கள். அவர்கள் ஆடையில் லாமல் மிருகங்களைப் போல வாழ்ந்தபடியால் நக்கசாரணர் என்று கூறப்பட்டனர். நாகர்மலைத் தீவுகளில் கப்பற் பிரயாணிகள் சென்றால், அவர்களை நக்கசாரணர் கொன்று விடுவர். அவர்கள் மனிதரைக் கொன்று தின்றதாகவும்

கூறப்படுகின்றனர். ஆகையால், அந்தப் பக்கமாகச் செல்லுகிற கப்பல்கள் அத்தீவுக்குப் போவதில்லை.

சாதுவன் என்னும் வாணிகன் நாகர்மலைத் தீவில் சென்று உயிரிழக்காமல் திரும்பி வந்ததை மணிமேகலை காவியம் கூறுகிறது. சாதுவன் என்னும் வாணிகன் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து சாவக நாட்டுக்குப் போய் வாணிகஞ் செய்வதற்காகக் கப்பலில் புறப்பட்டுச் சென்றான். கப்பல் நாகர்மலைத் தீவுக் கருகில் சென்றபோது புயற் காற்றடித்துக் கடலில் மூழ்கிவிட்டது. மாலுமிகள் கடலில் மூழ்கிப் போனார்கள். சாதுவன் மரக்கட்டையொன்றைப் பற்றிக்கொண்டு அருகிலிருந்த நாகர்மலைத் தீவுக்கு நீந்தி நல்லகாலமாகக் கரையையடைந்தான். ஆனால், இளைப்புங் களைப்பும் அடைந்து சோர்ந்திருந்த அவன் கடற்கரை மணலிலேயே உறங்கிவிட்டான். அயலான் ஒருவன் உறங்குவதைக் கண்ட நக்கசாரணர் சிலர் வந்து அவனைக் கொல்லத் தொடங்கினார்கள். விழித்துக்கொண்ட சாதுவன், அவர்களுடைய மொழியை அறிந்தவனாகையால், தன்னைக் கொல்லவேண்டாமென்றும் கப்பல் மூழ்கிப்போனதால் தான் அவ்விடம் வந்ததாகவும் கூறினான். தங்களுடைய மொழியில் பேசினபடியால் அவர்கள் அவனைக் கொல்லாமல் தங்களுடைய தலைவனிடம் அழைத்துக்கொண்டு போனார்கள். சாதுவன் சில காலம் நக்கசாரணரோடு தங்கியிருந்தான். பிறகு, சந்திரத்தன் என்னும் காவிரிப்பூம்பட்டினத்து வாணிகன், சாவக நாட்டுக்குப் போய் வாணிகஞ் செய்துவிட்டுத் தன்னுடைய கப்பலில் திரும்பி வருகிறவன் நாகர்மலைத் தீவின் பக்கமாக வந்தபோது, நக்க சாரணர் அவனுடைய கப்பலைத் தங்கள் தீவுக்கு அழைத்து அவனுடைய கப்பலில் சாதுவனை ஏற்றிக் காவிரிப்பூம்பட்டினத்துக்கு அனுப்பினார்கள். இந்தச் செய்தியை மணிமேகலைக் காவியம் (ஆதிரை பிச்சையிட்ட காதை) கூறுகிறது.

பாண்டிய நாட்டு வாணிகரும் சாவகத் தீவுக்குக் கப்பலோட்டிச் சென்று வாணிகஞ் செய்தனர். பாண்டி நாட்டிலிருந்த தமிழர் சாவக நாட்டுக்குச் சென்று வாணிகஞ் செய்து திரும்பியதையும் மணிமேகலைக் காவியம் கூறுகிறது.

மாநீர் வங்கம் வந்தோர் மணங்கிச்
சாவக நன்னாட்டுத் தண்பெயல் மறுத்தலின்
ஊனுயிர் மடிந்தது உரவோய் என்றலும்
....
அங்கந் நாட்டுப் புகுவதென் கருத்தென
வங்க மாக்களொடு மகிழ்வுடன் ஏறிக்
கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்
மாலிதை மணிபல் லவத்திடை வீழ்த்துத்
தங்கிய தொருநாள் (பாத்திர மரபு கூறிய காதை 73-82)

தமிழகத்திலிருந்து சாவக நாடு நெடுந்தூரத்திலிருந்தும் தமிழ் வாணிகர் அந்நாட்டுக்குக் கப்பலில் சென்று வாணிகஞ் செய்தனர். காரணம் என்னவென்றால், அக்காலத்தில் வேறெங்கும் கிடைக்காத வாணிகப் பொருள்கள் சாவக நாட்டில்தான் கிடைத்தன.

கடலில் போகிற மரக்கலங்கள் காற்றின் வேகத்தினால் திசை தப்பி ஓடுவதும் உண்டு. கப்பலோட்டும் பரதவர் அப்போது அவைகளை அடக்கிச் செலுத்தினார்கள்.

முரசு கடிப்படைய அருந்துறை போகிப்
பெருங்கடல் நீந்திய மரம்வலி யுறுக்கும்
பண்ணிய வினைவர் போல (பதிற்று. 8ஆம் பத்து 6)

கடலில் செல்லும் கப்பல்கள் சில புயலில் அகப்பட்டு, சமயத்தில் நீரில் முழுகுவதும் உண்டு. கடலில் முழுகும் கப்பல், இருள் சூழும்போது மலை மறைவதுபோலக் காணப்பட்டது என்று புலவர் கொல்லன் அழிசி கூறுகிறார் (குறுந். 240 : 5-7).

கடுங்காற்றினால் தாக்குண்ட திண்மையான கயிறுகளையும் அறுத்து, பாய்மரத்தை ஒடித்து, நாவாயை அடித்துச் சென்று, பாறைக் கல்லில் மோதி, நீர்ச் சுழியில், அகப்பட்ட நாவாயை மாங்குடி மருதனார் கூறுகிறார்.

பன்மீன் வழங்கும் வளைமேய் பரப்பின்
விலங்குபிணி நோன்கயிறு அரீஇதை புடையூக்
கூம்பு முதல் முருங்க எற்றிக் காய்ந்துடன்
கடுங்காற்று எடுப்பக் கல்பொருது உரைஇ
நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் (மதுரைக்காஞ்சி 375-379)

சாதுவன் என்னும் வாணிகன் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து சாவக நாட்டுக்குக் கப்பலில் பிரயாணஞ் செய்தபோது, அவனுடைய கப்பல் நாகர்மலைத் தீவுக்கு அருகில் காற்றினால் சாய்ந்து முழுகிப் போனதையும் அவன் ஒரு மரத்தைப் பற்றிக் கொண்டு தீவில் கரையேறியதையும் மணிமேகலை கூறுகிறது.

நளியிரு முந்நீர் வளிகலன் வவ்வ
ஒடிமரம் பற்றி யூர்திரை யுதைப்ப
நக்கசாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சார்ந்தவர் பான்மையன் ஆயினன் (மணி. 16 : 13-16)

மணிபல்லவத் துறைமுகத்திலிருந்து காவிரிப்பூம்பட்டினத்துக்குக் கப்பலில் வந்துகொண்டிருந்த கம்பளச் செட்டி என்பவனுடைய மரக்கலம் இரவில் கரையையடைகிற சமயத்தில் கவிழ்ந்தது என்பதை மணிமேகலை கூறுகிறது.

துறைபிறக் கொழியக்
கலங்கொண்டு பெயர்ந்த அன்றே காரிருள்

இலங்குநீர் அடைகரை யக்கலங் கெட்டது
(மணி. 25 : 189-191)

இவ்வாறு நடுக்கடலில் காற்றினாலும் மழையினாலும் புயலினாலும் இடுக்கண்களும் துன்பங்களும் நேர்ந்தும் அவை களையும் பொருட்படுத்தாமல் வாணிகர் நாவாய்களைக் கடலில் ஓட்டிச் சென்றனர். இயற்கையாக ஏற்படுகிற இந்தத் துன்பங்கள் அல்லாமல், கப்பல் வாணிகருக்குக் கடற் கொள்ளைக்காரராலும் துன்பங்கள் நேரிட்டன. ஆனால், கடற் கொள்ளைக்காரர் கிழக்குக் கடலில் அக்காலத்தில் இல்லை. மேற்குக் கடலிலே (அரபிக்கடல்) கப்பற் கொள்ளைக்காரர் இருந்ததை அக்காலத்தில் சேர நாட்டுத் துறைமுகத்துக்கு வந்து சென்ற யவனர் எழுதியுள்ளனர். துளு நாட்டின் ஏழில் மலைக்கு நேரே, கடலில் இருந்த ஒரு கடல் துருத்தியில் (சிறு தீவு) கடற்குறும்பர் தங்கியிருந்து வாணிகத்தின் பொருட்டு அவ்வழியாக வருகிற கப்பல்களைக் கொள்ளையடித்தனர் என்றும், ஆகவே அவ்வழியாகக் கப்பல்கள் போவது ஆபத்து என்றும் பிளைனி என்னும் யவனர் எழுதியுள்ளார்.

ஆனால், அக்காலத்தில் சேர நாட்டையரசாண்ட இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் அந்தக் கடற் குறும்பரை வென்று அடக்கினான். கடற் குறும்பர் அழிந்த பிறகு யவனக் கப்பல்கள் சேர நாட்டுத் துறைமுகங்களுக்கு வந்து போயின.

கடல் துருத்தியில் இருந்த கடற்குறும்பர் அத்தீவில் கடம்ப மரம் ஒன்றை வளர்த்து வந்தனர். அவர்கள் அத்தீவிலிருந்து கொண்டு அவ்வழியாக வாணிகத்தின் பொருட்டு வந்த யவனக் கப்பல்களை முசிறித் துறைமுகத்துக்கு வராதபடி தடுத்தனர். ஆகவே, அவர்களை அழிக்க இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன்னுடைய மக்கள் நால்வரில் ஒருவனான சேரன் செங்குட்டுவனைக் கப்பல் படையின் தலைவனாக அமைத்து அனுப்பினான். செங்குட்டுவன் கடலில் சென்று கடற்குருத்திக் குறும்பரை வென்று அவர்கள் வளர்த்த கடம்ப மரத்தை வெட்டி அதன் அடி மரத்தினால் முரசு செய்தான். இவ்வாறு கடற்குறும்பர் அழிக்கப்பட்ட பிறகு யவனக் கப்பல்கள் சேர நாட்டுத் துறைமுகப்பட்டினங்களுக்கு வந்தன. நெடுஞ்சேரலாதன் கடம்பரை அழித்த செய்தியைப் பதிற்றுப்பத்து, இரண்டாம் பத்து, ஐந்தாம் பத்துக்களினால் அறிகிறோம்.

பவர்மொசிந்து ஓம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுதல் தும்பிய ஏஎய்
வென்றெறி முழங்குபணை செய்தவெல் போர்
நாரரி நறவின் ஆரமார்பின்
போரடு தானைச் சேரலாத (2ஆம் பத்து 1 : 12-16)

இதில் இவன் கடம்பரை நேரில் சென்று அடக்காமல் தன் மகனை ஏவினான் என்பது கூறப்படுகிறது. ஏவப்பட்டவன் இவனுடைய மகனான செங்குட்டுவன்.

இருமுந்நீர்த் துருத்தியுள்
முரணியோர்த் தலைச் சென்று
கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின முன்பின்
நெடுஞ்சேரலாதன் வாழ்க அவன் கண்ணி
(2ஆம் பத்து 10 : 2-5)

செங்குட்டுவன் கடல் துருத்திக் குறும்பரை வென்றபடியால் அவன் 'கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்' என்று பெயர் பெற்றான். இவனைப் பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்தைப் பாடிய பரணர்,

தானை மன்னர்
இனியா ருளரோ நின்முன்னு மில்லை
மழைகொளக் குறையாது புனல்புக நிறையாது
விலங்குவரி கடவும் துளங்கிருங் கமஞ்சூல்
வயங்குமணி இமைப்பின் வேலிடுபு
முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்திசி னோரே
(5ஆம் பத்து 5 : 17-22)

என்று கூறுகிறார்.

தன் தந்தையின் ஏவலின்படி செங்குட்டுவன் கடற் குறும்பரை வென்று அடக்கினான் என்பது இவற்றிலிருந்து தெரிகிறது.

குறிப்பு: கடல் தீவில் கடம்ப மரத்தைக் காவல் மரமாகக் கொண்டிருந்த குறும்பரும் பிற்காலத்தில் சரித்திரப் புகழ் பெற்ற வனவாசிக் கதம்பரும் ஒருவரே என்று சிலர் கருதுவர். அப்படிக் கருதுவது தவறு. கடல் தீவில் இருந்த கொள்ளைக் குறும்பர் கடம்ப மரத்தை வளர்த்ததும், வனவாசிக் கடம்பர் கடம்ப மரத்தை வளர்த்ததும் காரணமாக இருவரும் ஒருவரே என்று கூறுவது தவறு. கடல் கொள்ளைக்காரருக்குக் கடம்பர் என்னும் பெயர் இருந்ததில்லை. வனவாசிக் கதம்பர் கடல் கொள்ளைக் காரராக இருந்ததும் இல்லை. நெடுஞ்சேரலாதனும் சேரன் செங்குட்டுவனும் வென்ற கடல் குறும்பர் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இருந்தவர். வனவாசிக் கதம்பர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் இருந்தவர். இருவரையும் ஒன்றாகப் பிணைப்பது தவறு. சில வரலாற்று அறிஞர்கள் கூறுவதுபோல கடம்பர் என்று பெயர் இருந்ததில்லை. கதம்பர் என்றுதான் சாசனங்கள் கூறுகின்றன.

கடலில் நாவாயோட்டும் தொழில் செய்பவருக்கு மீகாமர் என்பது பெயர். கப்பலோட்டும் தொழில் செய்தவர் பரதர் என்றும் பரதவர் என்றும் பெயர் பெற்றனர். அவர்கள் துறைமுகப்

பட்டினங்களில் குடியிருந்தார்கள். கப்பல்கள் துறைமுகத்தை யடைந்தவுடன் கப்பல்களில் தொழில் செய்யும் மாலுமிகள் கள்ளையுண்டனர். அவர்களுக்காகத் துறைமுகங்களில் கள் விற்கப் பட்டது.

வேறுபன் னாட்டுக் கால்தர வந்த
பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறைக்
களிமடைக் கள்ளின் சாடி (நற்றிணை 295 : 5-8)

துறைமுகங்களில் விற்கப்பட்ட கள்ளைக் குடித்து மாலுமி கள் மகிழ்ச்சியாக இருந்ததை மணிமேகலை கூறுகிறது.

முழங்குநீர் முன்றுறைக் கலம்புனர் கம்மியர்
துழந்தடு கள்ளின் தோப்பியுண் டயர்ந்து
பழஞ்செருக் குற்ற அனந்தர்ப் பாணி (மணி. 7 : 70-72)

நாவாய்க் கப்பல்கள் துறைமுகத்தையடைந்தபோது அதை மக்கள் மகிழ்ச்சியோடு எதிர்கொண்டழைத்தனர் என்று பரிபாடல் கூறுகிறது.

தாம் வேண்டும் பட்டினம் எய்திக் கரைசேரும்
ஏமுறு நாவாய் வரவெதிர் கொள்வார் போல்
(பரிபாடல் 10 : 38-39)

நாவாயில் கப்பலோட்டுந் தொழில் செய்த ஓர் இளையவன் தன் புது மனைவியைப் பிரிந்து கப்பலில் தொழில் செய்யச் சென்றான். அவனுடைய மனைவி அவன் எத்தனை காலங் கழித்துத் திரும்பி வருவானோ என்று மனக்கவலையடைந்தாள். அப்போது அவளுடைய தோழி அவளுக்கு ஆறுதல் கூறினாள் என்று மருதன் இளநாகனார் கூறுகிறார்.

உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ
இரவம் எல்லையும் அசைவின் றாகி
விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்டக்
கோடுயர் திணிமணல் அகன்றுறை நீகான்
மாட வொள்ளெரி மருங்கறிந் தொய்ய
ஆஅவினைப் பிரிந்த காதலர் நாள்பல
கழியா மையே யழிபடர் அகல,
வருவர் (அகம் 255 : 1-8)

(நீகான் - மீகாமன்)

எட்டிப் பட்டம்

வாணிகத் துறையில் இவ்வளவு துன்பங்கள் இருந்தும் அக்காலத்துத் தமிழ் வாணிகர், வாணிகத் தொழிலை அயல்

நாடுகளோடு தரை வழியாகவும் கடல் வழியாகவும் சென்று நடத்திப் பொருள் ஈட்டினார்கள். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது தமிழர் வாக்கு. சேர, சோழ, பாண்டியராகிய தமிழரசர் வாணிகரை ஊக்கினார்கள். வாணிகத்தில் பெருஞ் செல்வத்தை ஈட்டின மாசாத்துவர்களுக்கும் மாநாய்கர்களுக்கும் (மாநாவிகர்) எட்டிப் பட்டமும் எட்டிப் பூவும் அளித்துச் சிறப்புச் செய்தார்கள். எட்டிப்பூ என்பது பொன்னால் செய்யப்பட்ட தங்கப் பதக்கம் போன்ற அணி. பெரும் பொருள் ஈட்டிய வாணிகச் செல்வர்களுக்கு எட்டிப் பட்டம் அளிக்கும்போது இப்பொற்பூவையும் அரசர் அளித்தனர். எட்டிப் பட்டம் பெற்ற வாணிகரைப் பழந்தமிழர் நூல்கள் கூறுகின்றன.

காவிரிபூம்பட்டினத்தில் இருந்த சாயலன் என்னும் வாணிகன் எட்டிப் பட்டம் பெற்றிருந்ததைச் *சிலப்பதிகாரம்* கூறுகிறது.

> எட்டி சாயலன் இருந்தோன் தனது
> பட்டினி நோன்பிகள் பலர்புகு மனையில்
>
> (அடைக்கலக் காதை 163-164)

குறிப்பு: எட்டி சாயலன் என்போன் ஒரு வாணிகன். எட்டி, பட்டப் பெயர் என்று பழைய அரும்பத உரையாசிரியர் எழுதுகிறார்.

எட்டிப் பட்டம் பெற்றிருந்த ஒரு வாணிகனை *மணிமேகலைக் காவியங்* கூறுகிறது (நாலாம் காதை, வரி 58, 64). காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த தருமதத்தன் என்னும் வாணிகன் பாண்டி நாட்டு மதுரைக்குப் போய் அங்கு வாணிகஞ்செய்து பெரும்பொருளைச் சேர்த்தான். பாண்டிய அரசன் அவனுக்கு எட்டிப் பட்டமும் எட்டிப்பூவும் அளித்துச் சிறப்புச் செய்தான் என்று *மணிமேகலையே* கூறுகிறது. தருமதத்தன்,

> வாணிக மரபின் வருபொருள் ஈட்டி
> நீள்நிதிச் செல்வனாய் நீணில வேந்தனில்
> எட்டிப் பூப்பெற்று இருமுப்பதிற் றியாண்டு
> ஒட்டிய செல்வத்து உயர்ந்தோன் ஆயினான்.
>
> (*மணி.* 22 : 111-114)

5. பிற நாட்டு வாணிகர்

பழங்காலத்துத் தமிழர் தரை வழியாகவும் கடல் வழியாகவும் பாரத நாடு முழுவதும் சென்று வாணிகம் செய்தார்கள். உஞ்சை (உச்சயினி), கலிங்கப்பட்டினம், காசி (வாரணாசி), பாடலி (பாடலிபுரம்) முதலான இடங்களிலும் கடல் கடந்த நாடுகளாகிய காழகம் (பர்மா தேசம்), அருமணவன் (Ramanna), தக்கோலம் (Takkola), கிடாரம் (கடாரம்), சாவகம் (கிழக்கிந்தியத் தீவுகள்) முதலான இடங்களுக்கும் சென்று வாணிகஞ் செய்ததை முன்னமே கூறினோம்.

தமிழ் வாணிகர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இலங்கைக்குச் சென்று அங்கே அநுராதபுரத்தில் தங்கி வாணிபம் செய்திருந்தனர் என்பது, சமீப காலத்தில் அந்நகரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பிராமி எழுத்துக் கல்வெட்டினால் அறியப்படு கிறது என்பதையும் கூறினோம்.

தமிழக வாணிகர் அயல் நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தது போலவே அயல்நாட்டு வாணிகரும் தமிழகத்துக்கு வந்து வாணிகஞ் செய்தார்கள். அக்காலத்தில் வாணிகத்தில் உலகப் புகழ்பெற்ற காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்திலே அயல் நாடுகளிலிருந்து கப்பலோட்டி வந்த வேறு பாஷைகளைப் பேசின மக்கள் தங்கியிருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

பயனற வறியா யவனர் இருக்கையும்
சுலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்
(சிலம்பு 5 : 10-12)

மொழிபெயர் தேஎத்தோர் ஒழியா விளக்கம்
(சிலம்பு 6 : 143)

மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்
(பட்டினப்பாலை 216-218)

அரபு வாணிகர்

தமிழ் நாட்டுக்கு வடமேற்கிலிருந்து வந்த அராபிய வாணிகர் சேர நாட்டின் முசிறித் துறைமுகத்துக்கு வந்து வாணிகஞ்

செய்தார்கள். முசிறியில் அவர்கள் வாணிகஞ் செய்த இடத்துக்குப் பந்தர் என்று பெயரிட்டிருந்தார்கள். பந்தர் என்றால் அரபு மொழியில் கடைவீதி என்பது பொருள். முசிறித் துறைமுகத்துப் பந்தரில் முத்துக்களும் விலையுயர்ந்த நகைகளும் விற்கப்பட்டன. பதிற்றுப்பத்து 6ஆம் பத்தில் (செய்யுள் 5) "நன்கல வெறுக்கைத் துஞ்சும் பந்தர்" என்றும், 7ஆம் பத்து 7ஆம் செய்யுளில், "பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்" என்றும், 8ஆம் பத்து 4ஆம் செய்யுளில் "பந்தர்ப் பயந்த பலர் புகழ் முத்தம்" என்றும் பந்தர் அங்காடி கூறப்படுகிறது. அரபியர் தமிழ்நாட்டோடு வாணிகத் தொடர்பு கொண்டிருந்தபடியால் அரிசி என்னுந் தமிழ்ச் சொல் அரபு மொழியில் சென்று ஓருஜ் என்று வழங்குகிறது. அராபியர், அக்காலத்தில் தமிழ்நாடாக இருந்த சேர நாட்டிலிருந்து மூங்கிலைக் கொண்டுபோய் அரபி நாட்டில் வளர்த்தார்கள். அராபியர், தமிழ் நாட்டுப் பொருள்களை, முக்கியமாகச் சேர நாட்டு மிளகைக் கொண்டுபோய் செங்கடல் துறைமுகங்களிலும் எகிப்து நாட்டில் நீலநதி, கடலில் கலக்கும் இடத்திலிருந்த அலக்சாந்திரியத் துறைமுகப்பட்டினத்திலும் விற்றார்கள். அங்கிருந்த பொருள்களைக் கொண்டுவந்து தமிழ்நாட்டில் விற்றார்கள். அக்காலத்தில் அராபியர் கிழக்கிந்தியத் தீவுகளுக்குச் சென்று வாணிகம் செய்யவில்லை. தமிழர் கிழக்கிந்தியத் தீவுகளுக்குப் போய் அங்கிருந்து கொண்டுவந்த பொருள்களை இங்கிருந்து போய் அராபியர் வாங்கிக் கொண்டுபோய் வெளிநாடுகளில் விற்றார்கள். தூரக் கிழக்கு நாடுகளில் உண்டான பொருள்களை மேற்கு நாடுகள் வாங்கிக்கொண்டு போவதற்குத் தமிழ்நாடு அக்காலத்தில் மத்திய வாணிக இடமாக அமைந்திருந்தது.

யவன வாணிகர்

கிரேக்க நாட்டாரும் உரோம் நாட்டாரும் அக்காலத்தில் யவனர் என்று சிறப்புப் பெயர் பெற்றிருந்தார்கள். உரோம் சாம்ராச்சிய காலத்தில், கி.மு. முதலாம் நூற்றாண்டில், எகிப்து தேசத்தை உரோமர் கைப்பற்றிக்கொண்டார்கள். அக்காலத்தில் எகிப்து நாட்டில் மத்திய தரைக்கடல் ஓரத்திலிருந்த அலக் சாந்திரியத் துறைமுகப்பட்டினம், ஆசியா – ஐரோப்பாக் கண்டங்களின் மத்தியத் துறைமுகப்பட்டினமாக இருந்தது. அலக்சாந்திரியத் துறைமுகப்பட்டினத்தில் உலகத்தின் பல பாகங்களிலிருந்து பல நாட்டு வாணிகர் வந்தனர். ரோமாபுரியி லிருந்து யவன வாணிகர் அங்கு வந்து தங்கி வாணிகஞ் செய்தார்கள். உரோமர் எகிப்து நாட்டைக் கைப்பற்றின பிறகு அவர்கள் அரபியரின் வாணிகத்தையும் கைப்பற்றினார்கள். அரபியர் வாணிகஞ் செய்திருந்த செங்கடல் துறைமுகப் பட்டினங்களைக் கைப்பற்றி அரபியரின் வாணிக ஆதிக்கத்தை

ஒழித்தார்கள். செங்கடல் வாணிகத்தைக் கைப்பற்றின யவனர், செங்கடலைக் கடந்து வந்து ஆப்பிரிக்கா கண்டத்தின் கிழக்குக் கரைப் பட்டினங்களிலும், பாரசீகக் குடாக் கடலிலும் கப்பலில் சென்று வாணிகஞ் செய்தார்கள். யவனர் செங்கடலுக்கு இட்ட பெயர் எரித்தரைக்கடல் (Maris Erythraei) என்பது. *எரித்ரை* என்னும் கிரேக்க மொழிச் சொல்லுக்குச் செங்கடல் என்பது பொருள். பாரசீகக் குடாக் கடலில் வந்து வாணிகஞ் செய்தபோது அந்தக் குடாக்கடலுக்கும் எரித்ரைக் கடல் என்று பெயரிட்டனர். அக்காலத்தில் அவர்கள் நடுக்கடலில் கப்பல் பிரயாணஞ் செய்யாமல் கரையோரமாகவே பிரயாணஞ் செய்தார்கள். சில காலஞ்சென்ற பிறகு யவனர் பாரசீகக் கடலிலிருந்து சிந்து, கச்சு, குஜராத்தி நாடுகளுக்குக் கடல் வழியே வந்து வாணிகஞ் செய்தார்கள். பிறகு, இந்தியாவில் மேற்குக் கரைத் துறைமுகங்களுக்கும் சேர நாட்டு முசிறிப் பட்டினத்துக்கும் வந்தார்கள். அவர்கள் அரபிக் கடலுக்கு வந்து வாணிகஞ் செய்தபோது அரபிக்கடலுக்கும் எரித்ரைக் கடல் (செங்கடல்) என்றே பெயர் கூறினார்கள். பிறகு குமரிக்கடல், வங்காளக் குடாக்கடல் ஆகிய கடல்களுக்கு வந்து தமிழகத்தின் கிழக்குக் கரையிலும் வாணிகஞ் செய்தார்கள். அவர்கள், குமரிக் கடலுக்கும் வங்காளக் குடாக்கடலுக்கும் எரித்ரைக் கடல் (செங்கடல்) என்றே பெயரிட்டழைத்தார்கள்.

யவனர் அக்காலத்தில் நடுக்கடலில் பிரயாணஞ் செய்யாமல் கடற்கரை ஓரமாகவே பிரயாணம் செய்தபடியால், அவர்கள் முசிறி முதலான தமிழ்நாட்டுத் துறைமுகங்களுக்கு வந்து போகப் பல மாதங்கள் சென்றன. அவர்கள் அரபிக் கடலின் ஊடே நடுக்கடலில் பருவக்காற்றின் உதவியினால் பிரயாணஞ் செய்ய அக்காலத்தில் அறியவில்லை. ஆனால், பருவக்காற்றின் உதவியினால் வெகு விரைவில் நடுக்கடலினூடே பிரயாணஞ் செய்யத் தமிழரும் அராபியரும் அறிந்திருந்தார்கள். பருவக்காற்றின் உதவியை அறியாத காரணத்தினால் யவனர் முசிறித் துறைமுகப் பட்டினத்துக்குக் கரையோரமாக வந்துபோக நெடுங்காலஞ் சென்றது. கடைசியாகக் கி.பி. முதல் நூற்றாண்டில் ஹிப்பலஸ் என்னும் பெயர் கொண்ட கிரேக்க மாலுமி, பருவக்காற்றின் உதவியினால் முசிறித் துறைமுகத்துக்கு நேரே நடுக்கடல் வழியாக விரைவில் பிரயாணம் செய்யும் இரகசியத்தைக் கண்டுபிடித்தான். அது முதல் யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேர நாட்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்து சென்றன. அந்தப் பருவக் காற்றுக்கு யவனர், அதைக் கண்டுபிடித்தவன் பெயராகிய ஹிப்பலஸ் என்னும் பெயரையே சூட்டினார்கள். ஹிப்பலஸ் பருவக்காற்று கண்டுபிடிக்கப்பட்ட பிறகு யவனக் கப்பல்கள் நேராகத் தமிழ்நாட்டுத் துறைமுகப்பட்டினங்களுக்கு வந்தன.

அதனால் யவனக் கப்பல் வாணிகம் பெருகிற்று. இந்தக் கடல் வாணிகம் கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையில் நடந்தது. கி.மு. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் உரோம் சாம்ராச்சியத்தை யரசாண்ட அகஸ்தஸ் சீஸர் அரசன், யவன – தமிழர் வாணிகத்தை விரிவுபடுத்தினான். உரோமபுரி அரசர்களின் உருவ முத்திரை இடப்பட்ட பழைய நாணயப் புதையல்கள் தமிழ்நாட்டில் சில இடங்களில் சமீப காலத்தில் பூமியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டன. அந்தப் பழங்காசுகள் சங்க காலத்தில் நடந்த தமிழர் – யவனர் வாணிகத் தொடர்புக்குச் சான்று பகர்கின்றன. அக்காலத்தில் நடந்த தமிழர் – யவனர் வாணிகத் தொடர்பைப் பற்றி பிளைனி, தாலமி முதலான யவனர்கள் எழுதிய நூல்களிலிருந்து அறிகிறோம். ஒரு யவனர் கிரேக்க மொழியில் எழுதிய *செங்கடல் வாணிகம்* என்று பெயருள்ள ஒரு நூல் உண்டு *(Periplus of the Erythraei)*. அதை எழுதியவர் பெயர் தெரியவில்லை. அந்நூலில் தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் யவன வாணிகர் செய்த வாணிகத்தைப் பற்றிக் கூறப்படுகிறது. உரோம் சாம்ராச்சியத்தை யாண்ட அகஸ்தஸ் சக்கரவர்த்திக்கு மதுரையிலிருந்து ஒரு பாண்டியன் தூதுவரை யனுப்பினான்.

வாணிகத்தின் பொருட்டு வந்த யவனர் துறைமுகங்களுக்கு அருகில் தங்கியிருந்தார்கள். ஏற்றுமதி இறக்குமதி முடிந்தவுடன் அவர்கள் திரும்பிப் போய்விட்டார்கள். யவனர் சிலர் தமிழ்நாட்டிலே தங்கித் தொழில் செய்தார்கள். அவர்கள் தச்சுத் தொழிலில் தேர்ந்தவர்கள், 'யவனத் தச்சர்' என்று *மணிமேகலை* (19 : 108) கூறுகிறது. புதுச்சேரிக்குத் தெற்கே (அரிக்கமேடு என்னும் இடத்தில்) இருந்த யவனப் பண்டகசாலையில் யவனத் தொழிலாளிகள் சிலர் கண்ணாடி மணிகளைச் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள் என்று அங்கு நடந்த அகழ் வாராய்ச்சியினால் தெரிகிறது.

பாண்டி நாட்டின் தலைநகரான மதுரை அக்காலத்தில் கோட்டை மதிலுக்குள் இருந்தது. கோட்டை வாயில்களில் யவன வீரர்கள் காவல் இருந்தனர். கோவலன் மதுரைக்குச் சென்றபோது கோட்டை வாயிலை யவன வீரர்கள் காவல் காத்திருந்தனர் என்று *சிலப்பதிகாரம்* கூறுகிறது.

> கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
> அடல்வாள் யவனர்க்கு அயிராது புக்கு
> (*சிலம்பு*, ஊர்காண். 66-67)

பாண்டியனுடைய பாசறையில் யவன வீரர்கள் இருந்ததை முல்லைப்பாட்டு கூறுகிறது. முழங்கால் வரையில் குறுகிய பாவாடை போன்ற ஆடை (வட்டுடை) அணிந்து உடம்பில்

மெய்ப்பை (சட்டை) அணிந்து குதிரையோட்டும் மத்திகையைக் (சம்மட்டியை) கையில் வைத்திருந்தனர்.

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை.
மெய்ப்பை புக்கு வெருவருந் தோற்றத்து
வலிபுணரி யாக்கை வன்கண் யவனர்

என்று முல்லைப்பாட்டு (அடி 59-61) கூறுகிறது.

யவன – தமிழர் வணிகத் தொடர்பின் காரணமாகச் சில கிரேக்க மொழிச் சொற்கள் தமிழில் கலந்துவிட்டன. மத்திகை, சுருங்கை, கலம், கன்னல் முதலான கிரேக்க மொழிச் சொற்கள் தமிழில் கலந்துவிட்டன. சங்கச் செய்யுட்களிலே இந்தச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

மத்திகை என்பது குதிரை ஓட்டும் சம்மட்டி. இச்சொல் முல்லைப்பாட்டு 59ஆம் அடியில் பயிலப்பட்டுள்ளது.

சுருங்கை என்பது கிரேக்க மொழிச் சொல். சுரங்கம் என்றும் கூறப்படும். இது தரைக்குள் அமைக்கப்படுவது. 'சுருங்கை நெடுவழி' (பரிபாடல் 20 : 104), 'சுருங்கை வீதி' (சிலம்பு 14 : 65) "சுருங்கை - கரந்துறை ஒழுகுநீர் புகுகையை ஒருத்தருமறியாதபடி மறைத்துப் படுத்த வீதி" என்று அரும்பதவுரையாசிரியர் கூறுகிறார்.

கலம் என்னுஞ் சொல் கிரேக்கம், தமிழ் என்னும் இரண்டு மொழிகளுக்கும் உரிய சொல். கிரேக்க மொழியில் (Kalom) கலம் என்னும் சொல்லுக்கு மரவீடு என்பது பொருள். இந்தச் சொல்லை யவனர் கப்பல்களுக்கும் பெயராக வழங்கினார்கள். யவனர் வாணிகத்தின் பொருட்டுத் தமிழ் நாட்டுக்கு வந்தபோது இச்சொல்லைத் தமிழர் அறிந்தனர். அறிந்து செய்யுட்களிலும் பயன்படுத்தினார்கள். "யவனர் தந்த வினைமான் நன்கலம்" (அகம் 149), "யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்" (புறம் 56). தமிழிலும் கலம் என்னுஞ் சொல் உண்டு. இத்தமிழ்ச் சொல்லுக்குப் பானை, சட்டி என்பது பொருள். ஒரே ஒசையுள்ளதாக இந்தச் சொல் இருந்தபடியால் தமிழர் அடைமொழி கொடுத்து இச்சொல்லை வெவ்வேறு பொருளில் பயன்படுத்தினார்கள். கிரேக்கச் சொல்லை மரக்கலம் என்றும் தமிழ்ச் சொல்லை மட்கலம் என்றும் கூறினார்கள்.

கன்னல் என்னுஞ் சொல்லும் கிரேக்க மொழியிலிருந்து தமிழில் கொள்ளப்பட்ட சொல். காலத்தையளக்குங் கருவிக்குக் கன்னல் என்று பெயர். மேலுங் கீழுமாக இரண்டு பாத்திரங்களை ஒன்றாக அமைத்து அதன் நடுவில் இருந்த சிறுதுளை வழியாக மேல் பாத்திரத்திலிருந்து நீர் கீழ்ப் பாத்திரத்தில் சொட்டுச் சொட்டாக விழும்படியமைப்பார்கள். விழுந்த நீரின் அளவைக் கொண்டு காலத்தையறிந்தார்கள். கன்னல் என்னும் இந்தக் கருவி யவன நாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்தது.

பொழுதளந்து அறியும் பொய்யா மாக்கள்
குறுநீர்க் கன்னல் இனைத்தென் றிசைப்ப
(முல்லைப்பாட்டு 55-58)

தமிழ் இலக்கியங்களில் பயிலப்படுகிற ஓரை என்னுஞ் சொல் கிரேக்க மொழிச் சொல் என்று சிலர் கூறுவர். அவர் கூற்று தவறு. தொல்காப்பியத்திலும் சங்கச் செய்யுட்களிலும் ஓரை என்னும் சொல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இது தமிழ்ச் சொல். கிரேக்க மொழிச் சொல் அன்று. கிரேக்க மொழியில் வானநூல் சம்பந்தமாக ஹோரா என்னும் சொல் உண்டு. அது தமிழில் 'ஓரை' என்று வழங்கியதாகச் சிலர் கருதுகின்றனர். முகூர்த்தம் என்னும் பொருளில் ஓரை என்னும் சொல் தமிழில் வழங்கவில்லை. தமிழில் வழங்கும் (ஓரை மகளிர்) ஓரை என்னும் சொல் கிரேக்க மொழிச் சொல் அன்று. தமிழ் இலக்கியங்களில் பயிலப்படுகிற ஓரை என்னுஞ் சொல் கிரேக்க ஹோரா என்பதன் திரிபு என்று கருதுவது உண்மையறியாதார் கூற்று. இது பற்றி விரிவாக அறிய விரும்புவோர், இந்நூலாசிரியர் எழுதிய சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள் என்னும் நூலில் 20-34ஆம் பக்கங்களில் காண்க.*

அரிசி என்னும் தமிழ்ச் சொல் கிரேக்க, இலத்தீன் மொழிகளில், ஒரிஜா (Oyza) என்று வழங்கப்படுகிறது. இச்சொல்லை யவனர் தமிழிலிருந்து எடுத்துக்கொண்டனர். யவன வாணிகர், தமிழ்நாட்டு ஊர்களான சோபட்டினத்தைச் சோ பட்மா என்றும் காவிரியைக் கபிரிஸ் என்றும் முசிறியை முசிரிஸ் என்றும் கருவூரைக் கரோரா என்றும் மதுரையை மதோரா என்றும் ஆய்நாட்டை ஆயோய் என்றும் கூறினார்கள்

அந்தக் காலத்தில் எல்லா நாடுகளிலும் எண்ணெய் விளக்கு உபயோகிக்கப்பட்டது. மண்ணால் செய்த அகல் விளக்கையும் இரும்பினால் செய்த விளக்கையும் (இரும்பு செய் விளக்கு – நெடுநல்வாடை 42) தமிழர் உபயோகித்தார்கள். யவன நாட்டிலிருந்து வந்த அன்னப் பறவையின் உருவமாக அமைக்கப்பட்ட 'ஓதிம' விளக்கையும் பெண் வடிவமாக அமைத்த 'பாவை' விளக்கையும் தமிழர் உபயோகித்தார்கள். இவ்விளக்கைச் செல்வர் வாங்கி உபயோகித்தார்கள்.

யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேந் தையகல் நிறைய நெய் சொரிந்து
பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிர்எரி

என்றும் (நெடுநல்வாடை 101–103), "பாவை விளக்கின் பரூஉச் சுடர் அவிழ" என்றும் (முல்லைப்பாட்டு 85) பாவை விளக்கு கூறப்படுகிறது. சிலப்பதிகாரமும் (5 : 154) மணிமேகலையும் (1 : 45)

* இந்தத் தொகுப்பில் பக். 28-38 பார்க்க. (ப-ர்)

பாவை விளக்கைக் கூறுகின்றன. 'யவனர் ஓதிம விளக்கை'ப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது (வரி 316-317).

யவன வாணிகர் பொற்காசுகளையும் வெள்ளிக்காசுகளையும் கொடுத்துத் தமிழ்நாட்டுப் பண்டங்களை வாங்கிக் கொண்டு போனார்கள். யவனக் காசுகள் தமிழ்நாட்டிலே பல இடங்களில் கிடைக்கின்றன. அந்தப் பழங்காசுகள் தற்செயலாகப் பூமியிலிருந்து அண்மைக் காலத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

பழைய தமிழ்நாடான சேர நாட்டிலே திருவனந்தபுரத்துக்கு வடக்கே 150 மைல் தூரத்தில் உள்ள பூஞ்சாரிலும் திருச்சூருக்கு வடமேற்கே 22 மைல் தூரத்திலுள்ள எய்யலிலும் 1945ஆம் ஆண்டில் உரோம தேசத்துப் பழங்காசுகள் கிடைத்தன. கொங்கு நாட்டில் கரூர், காட்டன்கன்னி, குளத்துப்பாளையம், பென்னார், பொள்ளாச்சி, வெள்ளலூர் முதலான இடங்களிலும் பாண்டிய நாட்டில் மதுரை, கலியம்புத்தூர், கரிவலம் வந்த நல்லூரிலும், புதுக்கோட்டையைச் சேர்ந்த கருக்காக்குறிச்சியிலும், தஞ்சாவூர், மகாபலிபுரம் முதலான ஊர்களிலும் யவன நாணயங்கள் (உரோமாபுரிப் பழங்காசுகள்) கிடைத்துள்ளன. இக்காசுகள் அக்காலத்தில் நடந்த தமிழ – யவன வாணிகத்துக்குச் சான்றாக இருக்கின்றன.

சாவகம்

தமிழகத்துக்குக் கிழக்கே நெடுந்தூரத்தில் ஆயிரம் மைலுக்கப்பால் கிழக்கிந்தியத் தீவுகள் உள்ளன. அந்தத் தீவுக் கூட்டத்தில் மிகப் பெரியவையும் சிறியவையும் மிக நுண்மையுமான தீவுகள் ஆயிரத்துக்கு மேற்பட்டவையுள்ளன. சங்க காலத் தமிழர் அக்காலத்தில் அந்தத் தீவுகளுக்குக் கடல் கடந்துபோய் வாணிகஞ் செய்தார்கள். அவர்கள் அந்தத் தீவுகளுக்குச் சாவக நாடு என்று பெயரிட்டிருந்தார்கள். மணிமேகலைக் காவியம் சாவக நாட்டைக் கூறுகிறது. அந்தத் தீவுகளிலே சில தீவுகளில் மட்டும் நாகரிகம் அடைந்த மக்கள் அக்காலத்தில் இருந்தனர். பெரும்பான்மையான தீவுகளில் இருந்தவர் அக்காலத்தில் நாகரிகம் பெறாதவர்களாக இருந்தார்கள். நாகரிகம் பெற்றிருந்த தீவுகளில் முக்கியமானது சாவகத் தீவு. இந்தத் தீவின் பெயரைத் தான் அக்காலத் தமிழர் அங்கிருந்த எல்லாத் தீவுகளுக்கும் பொதுப்பெயராகக் கூறினார்கள். சாவகத் தீவில்தான் தமிழர் முக்கியமாக வாணிகம் செய்தார்கள். சாவகத் தீவை யரசாண்ட அரசர்கள் வாணிகத்துக்கு ஆதரவு கொடுத்தார்கள்.

இதைச் சூழ்ந்திருந்த மற்றத் தீவுகளில் உற்பத்தியான பொருள்கள் எல்லாம் சாவகத் தீவுக்குக் கொண்டுவரப்பட்டு விற்கப்பட்டன. தமிழ்நாட்டிலிருந்து சென்ற தமிழ் வாணிகரும் வட இந்தியாவிலிருந்து சென்ற இந்திய வாணிகரும் சின

நாட்டிலிருந்து சென்ற சீன வாணிகரும் சாவகத் தீவுடன் வாணிகஞ் செய்தார்கள். அக்காலத்தில் சாவகம், சீன நாட்டுக்கும் இந்தியத் தேசத்துக்கும் இடையே மத்திய வாணிக நிலையமாக இருந்தது.

இந்தத் தீவுகளில் எரிமலைகள் அவ்வப்போது நெருப்பையும் சாம்பலையும் கக்கின. இந்தச் சாம்பல் அந்தப் பூமிக்கு வளத்தையும் செழிப்பையும் தந்தது. அக்காலத்தில் மற்ற நாடுகளில் கிடைக்காத பொருள்கள் (இலவங்கம், சாதிக்காய், குங்குமப்பூ, பளித வகை (கர்ப்பூர வகை) முதலான வாசப் பொருள்கள்) அங்கு உண்டாயின.

சாவா தீவின் வடக்கே அதையடுத்து 'மதுரா' என்னும் சிறு தீவு இருக்கிறது. பாண்டி நாட்டு மதுரையிலிருந்து போய்க் குடியேறின அக்காலத்துத் தமிழர் தங்கியிருந்த இடமாகையால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று. சாவாத் தீவில் மலைகளிலிருந்து தோன்றி வடக்கே ஓடிக் கடலில் விழுகிற ஆறுகளில் ஒன்றின் பெயர் ஸோலோ என்பது. ஸோலோ ஆறு மதுரா தீவுக்கு அருகில் கடலில் விழுகிறது. இந்த ஆற்றின் கரையில் சில ஆண்டுகளுக்கு முன்பு, மிகப் பழைய மனிதனுடைய எலும்புக்கூடு அகழ்ந் தெடுக்கப்பட்டது. அது 35,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதனின் எலும்பு என்று கூறுகிறார்கள். இந்த எலும்புக்கூடு எடுக்கப்பட்ட இடத்துக்கு அருகிலேயே இன்னொரு எலும்புக் கூடு கண்டுபிடிக்கப்பட்டது. அது முன்னைய எலும்புக்கூட்டை விட மிகப் பழமையானது என்று கூறப்படுகிறது. அந்த எலும்புக் கூட்டுக்கு 'ஜாவா மனிதன்' என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

தமிழர், சாவகம் என்று பெயரிட்ட இந்தத் தீவை வட நாட்டார் யவதீவம் என்று பெயரிட்டிருந்தார்கள். அக்காலத்துச் சீனர் இந்தத் தீவை 'யெ தியவோ' என்று பெயரிட்டழைத்தார்கள். 'யவதீபம்' என்பதைத்தான் சீனர் 'யெ தியவோ' என்று கூறினார்கள். சீன நாட்டார் யவதீவுடன் (சாவா தீவுடன்) இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, கிருஸ்து சகாப்தத்தின் தொடக்கத்தி லேயே வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.

சங்க காலத்துத் தமிழர் அக்காலத்திலேயே சாவகத் தீவுடன் நெருங்கிய வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். சாவகத் தீவை அவர்கள் ஆபுத்திர நாடு என்றும் கூறினார்கள் என்பதை மணிமேகலைக் காவியத்திலிருந்து அறிகிறோம். ஜாவா தீவின் தலைநகரம் நாகபுரம் என்றும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சாவகத்தை யரசாண்ட அரசன் பூமிசந்திரனுடைய மகனான புண்ணியரசன் என்றும் இந்த அரசர் பரம்பரை இந்திய அரசர் பரம்பரை என்றும் மணிமேகலை கூறுகிறது.

நாக புரமிது நன்னகர் ஆள்வோன்
பூமிசந்திரன் மகன் புண்ணிய ராசன் (மணி. 24 : 179-180)

நாகபுரத்து அரண்மனையைச் சார்ந்த சோலையில் தரும சாரணர் என்னும் பௌத்த சமயத் துறவி இருந்தார் (மணி 25:2). காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த மணிமேகலை (கோவலன் – மாதவியின் மகள்) பௌத்த மதத்தைச் சார்ந்த பிக்குணியான பிறகு, அப்பட்டினத்திலிருந்து சாவகத் தீவின் தலைநகரமான நாகபுரத்துக்குப் போய் அங்கிருந்த தருமசாரணரை வணங்கி அங்குச் சில நாள் தங்கியிருந்தாள். அவள் புண்ணியரசனைக் கண்டு பிறகு திரும்பி வந்தாள் என்று மணிமேகலைக் காவியம் கூறுகிறது (மாதவி மகளான மணிமேகலை சாவகத்துக்குப் போனதும் அங்கிருந்து திரும்பி வந்ததும் ஆகாயத்தின் வழியாக என்று மணிமேகலைக் காவியம் கூறுகிறது (மணிமேகலை 25ஆம் காதை). மணிமேகலை சாவகத்துக்குப் போனது கடல் வழியாகக் கப்பலிலேதான். ஆனால், அவள் ஆகாய வழியாகப் பறந்து சென்றாள் என்று காவியங் கூறுகின்றது. (ஏன் அப்படிக் கூறுகின்றது என்பதை விளக்கி இந்நூலாசிரியர் எழுதியுள்ள 'மணிமேகலையின் விண்வழிச் செலவு' என்னும் கட்டுரையில் காண்க. கட்டுரைப் பொழில் மணிவிழாமலர், சுரந்தைத் தமிழ்ச் சங்கம், 1973, பக். 176-182.)

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சாவகத் தீவை யரசாண்ட புண்ணியராசன், அக்காலத்தில் சோழ நாட்டுக் காவிரிப்பூம் பட்டினத்தையும் அதனைச் சூழ்ந்த நெய்தலங் கானலையும் அரசாண்ட நெடுமுடிக்கிள்ளியிடம் (இவனுக்கு கிள்ளிவளவன் என்றும் வடிவேற்கிள்ளி என்றும் பெயர் உண்டு) தூது அனுப்பினான். அந்தத் தூது வாணிகத் தொடர்பான தூதாக இருக்கக்கூடும். சாவகத்திலிருந்து பூம்புகாருக்குக் கப்பலில் வந்த தூதர் சோழனைக் கண்டனர். பிறகு, அந்நகரத்தில் பௌத்த விகாரையின் தலைவராக இருந்த அறவண அடிகளையும் கண்டு, திரும்பிச் சென்றார்கள். இதனை மணிமேகலைக் காவியமே கூறுகிறது.

கிள்ளி வளவனோடு செழுதகை வேண்டிக்
கள்ளவிழ் தாரோய்! கலாத்தொடும் போகிக்
காவிரிப் படப்பை நன்னகர் புக்கேன்
மாதவன் அறவணன் இவள்பிறப் புணர்ந்தாங்கு
ஓதினன் என்றியா னன்றே யுரைத்தேன் (மணி. 25 : 14-19)

இவ்வாறு, சோழ அரசனுக்கும் சாவக அரசனுக்கும் நல்லுறவும் நட்பும் இருந்தபடியால் இரு நாடுகளுக்கும் வாணிகம் செவ்வையாக நடந்து வந்தது.

குறிப்பு: பிற்காலத்தில், இரு நாடுகளுக்கும் நிகழ்ந்த அரசியல் போர்களைப் பற்றி இங்குக் கூறவில்லை. இங்கு இப்போது நாம் எழுதுவது சங்க காலத்து வாணிகத்தைப் பற்றி மட்டுமே.


சோழ நாட்டிலிருந்தும் பாண்டி நாட்டிலிருந்தும் அக்காலத் தமிழ் வாணிகர் சாவக நாட்டுக்குச் சென்று வாணிகஞ் செய்தது போலவே, சாவகத் தீவிலிருந்த சாவக வாணிகரும் தமிழ்நாட்டுக்கு வந்து வாணிகம் செய்தனர் என்பதில் ஐயமில்லை. பல நாட்டுக் கப்பல் வாணிகர், அக்காலத்தில் உலகப் புகழ் பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினத்திலே வந்து தங்கியிருந்ததைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன (*பட்டினப்பாலை* 216-218; *சிலப்பதிகாரம்*, இந்திரவிழா. 9-12, கடலாடுகாதை 130-131). அங்கு வந்திருந்த அயல்நாட்டு வாணிகரில் சாவகத் தீவிலிருந்து வந்தவர்களும் இருந்தனர் என்று கருதலாம்.

அக்காலத்தில் சாவகத் தீவின் வாணிகர் கப்பல்களிலும் குறும்படகுகளிலும் பல கடல்களைக் கடந்து சென்றார்கள். பசிபிக் மகாசமுத்திரத்தில் வாழ்ந்த அவர்கள் வங்காளக் குடாக் கடலைக் கடந்து தமிழ்நாட்டுத் துறைமுகங்களுக்கு வந்தனர். பிறகு, குமரிக் கடலைக் கடந்து ஆப்பிரிக்காக் கண்டத்தின் கிழக்கே கடல் நடுவிலிருந்த மடகாஸ்கர் தீவுக்கும் சென்றார்கள். மடகாஸ்கர் தீவு அக்காலத்தில் மனிதர் இல்லாத வெறுந்தீவாக இருந்தது. அந்தத் தீவில் சாவகத்து வாணிகர் கப்பலில் வந்து தங்கித் தங்கள் நாட்டுப் பொருள்களை விற்றார்கள். அத்தீவுக்கு மேற்கிலிருந்து ஆப்பிரிக்க மக்களும், வடக்கே இருந்து அரபியர்களும் வந்து அவர்களுடைய பொருள்களை வாங்கிக் கொண்டு போனார்கள். இவ்வாறு, மடகாஸ்கர் தீவை மையமாகக் கொண்டு சாவக வாணிகர் வாணிகஞ் செய்தார்கள். அவர்களில் பலர் அந்தத் தீவிலேயே நிலையாகத் தங்கிவிட்டனர். பிற்காலத்தில் ஆப்பிரிக்காக் கண்டத்தின் கிழக்குக் கரையிலிருந்து ஆப்பிரிக்க மக்களும் மடகாஸ்கர் தீவுக்கு வந்து அத்தீவின் வடக்கில் குடியேறினார்கள். அவர்கள் சாவகர் பேசின மடகாசி மொழியையே பேசக் கற்றுக்கொண்டு அந்த மொழியையே பேசினார்கள். இப்போதும் மடகாஸ்கர் தீவில் பேசப்படுகிற மொழி மலகாசி மொழியே. மடகாஸ்கர் தீவு இப்போது மடகாசிக் குடியரசு நாடு என்று பெயர் பெற்றிருக்கின்றது.

சங்க காலத்திலே தமிழ்நாட்டோடு வாணிகஞ் செய்த வேற்று நாட்டார் அராபியர், யவனர், சாவகர் என்று தெரிகின்றனர். அக்காலத்தில் சீன வாணிகர் தமிழகத்துக்கு (இந்தியாவுக்கு) வந்து வாணிகஞ் செய்யவில்லை. வட இந்தியாவில் கங்கை நதிப் பிரதேசத்திலிருந்தும் கலிங்க நாட்டிலிருந்தும் கப்பல் வாணிகர் தமிழகத்துக்கு வந்து வாணிகஞ் செய்தார்கள்.

6. பழங்காலத் துறைமுகப் பட்டினங்கள்

கடல் வழியாகக் கப்பல்களில் வாணிகம் நடைபெற்றது. தரை வாணிகத்தைவிடக் கடல்வழி வாணிகம் அதிகமாக நடந்தது. தரை வாணிகத்தைவிடக் கடல் வாணிகம் அதிகச் செலவில்லா மலும் விரைவாகவும் இருந்தபடியால் கப்பல் வாணிகம் சிறப்பாக நடந்தது. கடல் வாணிகத்துக்குக் கப்பல்கள் தேவை. கப்பல் கட்டும் தொழில்கள் ஒவ்வொரு நாட்டிலும் நடந்தன. கப்பல் களைக் கடலில் ஓட்டிக்கொண்டு போய்ப் பொருள்களை இறக்குமதி ஏற்றுமதி செய்வதற்கு அந்தந்த நாடுகளில் துறைமுகங்கள்



தேவை. ஆகவே, ஒவ்வொரு நாட்டிலும் துறைமுகப்பட்டினங்கள் ஏற்பட்டிருந்தன. பெரும்பாலும் துறைமுகப்பட்டினங்கள்,

ஆறுகள் கடலில் சேர்கின்ற புகர் முகங்களில் இருந்தன; ஆற்று முகத்துவாரங்கள் இல்லாத துறைமுகப்பட்டினங்களும் சில இருந்தன. ஒவ்வொரு பெரிய துறைமுகங்களிலும் கலங்கரை விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன. துறைமுகங்களில் ஏற்றுமதி இறக்குமதியாகும் பொருள்களுக்குச் சுங்கம் வாங்கப்பட்டது. அந்தச் சுங்கப் பணம் அந்தந்த நாட்டையாளும் அரசர்களுக் குரியது.

வட இந்தியாவில் கங்கையாறு முக்கியமான பெரிய ஆறு. அது கடலில் சேர்கிற இடத்தில் கப்பல்கள் உள்நாட்டில் நுழைந்து காசி (வாரணாசி), பாடலிபுரம் முதலான துறை முகங்களுக்குப் போயின. அக்காலத்திலே பாரத தேசத்திலே இருந்த துறைமுகப்பட்டினங்களைக் கூறுவோம். பாரத நாட்டின் கிழக்குக் கரையில் (தமிழ்நாட்டுக்கு வடக்கே) இருந்த பேர்போன துறைமுகங்கள் தமிலிப்தியும் கலிங்கப்பட்டினமும் ஆகும். தமிலிப்தி என்பது அக்காலத்தில் உலகப் புகழ்பெற்ற பெரிய துறைமுகம். அது கங்கையாறு கடலில் கலக்கிற இடத்தில் வங்காள தேசத்தில் இருந்தது. அதற்குத் தெற்கே கலிங்க தேசத்தில் கலிங்கப்பட்டினத்தில் ஒரு துறைமுகப்பட்டினம் இருந்தது. இந்தத் துறைமுகப்பட்டினங்களுக்கு இடையே வேறு சில துறைமுகப்பட்டினங்களும் அக்காலத்தில் இருந்திருக்கக்கூடும். அவற்றைப் பற்றி இப்போது நமக்குத் தெரியவில்லை.

அக்காலத்துத் தமிழகத்தின் துறைமுகப்பட்டினங்களைக் கூறுவோம்.

கிழக்குக்கரைத் துறைமுகங்கள்

தமிழகத்தின் கிழக்குக் கரையிலிருந்த பழங்காலத் துறைமுகப் பட்டினங்களைக் கூறுவோம். இவை குணகடலில் (வங்காளக் குடாக் கடலில்) இருந்தவை. அந்தத் துறைமுகப்பட்டினங்கள் பிற்காலத்தில் மறைந்துபோய் விட்டன. (வேறு புதிய துறைமுகங்கள் ஏற்பட்டுள்ளன.) பழைய துறைமுகப்பட்டினங்களைப் பற்றிப் பழங்கால இலக்கிய நூல்களிலிருந்து அறிகிறோம். தமிழ்நாட்டின் கிழக்குக் கரைத் துறைமுகங்கள் கொல்லத் துறை, எயிற்பட்டினம் (சோபட்டினம்), அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, மருங்கை, கொற்கை என்பவை. தமிழ்நாட்டுக்கு அருகிலுள்ள இலங்கைத் தீவுடன் அக்காலத்தில் தமிழர் வாணிகம் செய்தபடியால் அங்கிருந்த முக்கியத் துறைமுகப்பட்டினங் களையும் இங்குக் கூறுவோம்: அவை மணிபல்லவம் (ஜம்பு கொலப்பட்டினம்), திருக்கேதீச்சரம் என்பவை.

தமிழகத்தின் தெற்கே கன்னியாகுமரியில் குமரித் துறைமுகம் இருந்தது. இந்தத் துறைமுகங்களை விளக்கிக் கூறுவோம்.

கொல்லத்துறை

கொல்லத்துறை என்னும் துறைமுகப்பட்டினம் வட பெண்ணையாற்றின் தென்கரையில் அந்த ஆறு கடலில் கலக்கிற முகத்துவாரத்தில் இருந்தது. இதற்கு மேற்கே நெல்லூர் வட பெண்ணையாற்றின் கரைமேல் இருக்கிறது. இக்காலத்தில் இவை ஆந்திர தேசத்தைச் சேர்ந்து இருக்கின்றன. ஆனால், பழங் காலத்தில் கடைச்சங்க காலத்திலேயும் இவை தமிழ்நாடாக இருந்தன. அக்காலத்தில் இது தொண்டை நாட்டுத் துறைமுகப் பட்டினமாக இருந்தது. கொல்லத்துறை, நெல்லூர், பெண்ணை யாறு என்னும் பெயர்களே தமிழ்ப் பெயர்களாக இருந்தன. கொல்லத்துறை பழந்தமிழ் நாட்டின் வடகோடியில் கிழக்குக் கரையில் இருந்தது. கொல்லத்துறை என்னும் பெயர் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் கண்டகோபால பட்டினம் என்று பெயர் மாற்றப் பட்டது. ஆனாலும், அதன் பழைய பெயர் மறைந்துவிடவில்லை. கொல்லத்துறையான கண்டகோபாலபட்டினம் என்று அது கல்வெட்டுச் சாசனங்களில் கூறப்படுகின்றது.

தமிழ்நாட்டின் வடஎல்லை வேங்கடமலை (திருப்பதி மலை) என்று பழந்தமிழ் நூல்கள் கூறினாலும் அதன் சரியான வட எல்லை வடபெண்ணையாறே. ஆற்றைக் கூறாமல் மலையை எல்லையாகக் கூறியதன் காரணம் அது மலை என்பதற்காகவே. பழந்தமிழ் நாட்டின் வடஎல்லை வடபெண்ணையாற்றின் தென்கரையாக இருந்தது. தொண்டை நாட்டின் (அருவா நாட்டின்) இருபத்து நான்கு கோட்டங்களில் வடகோடிக் கோட்டமாக இருந்த பையூர் இளங்கோட்டம் வடபெண்ணை யாற்றின் தென்கரையில் இருந்தது என்பது கல்வெட்டெழுத்துச் சாசனங்களில் அறியப்படுகின்றது. பழந்தமிழ் நாட்டின் வட எல்லைக்கும் பழைய ஆந்திர நாட்டின் தென் எல்லைக்கும் வரம்பாக வடபெண்ணையாறு அமைந்து இருந்தது. வட பெண்ணையாற்றின் முகத்துவாரத்தில் தென்கரை மேல் இருந்த கொல்லத்துறை அக்காலத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த துறைமுகப்பட்டினமாக இருந்தது.

கொல்லத்துறை துறைமுகத்தைப் பற்றிச் சங்கச் செய்யுட் களில் கூறப்படவில்லை. எல்லாத் துறைகளையும் கூறுவது அச்செய்யுட்கள் இயற்றப்பட்டதன் நோக்கமும் அன்று. தற்செய லாகத் தமிழகத்தின் சில துறைமுகப்பட்டினங்களை அச்செய்யுட்களில் சில கூறுகின்றன. அச்செய்யுட்கள் கூறாத வேறு சில துறைமுகப்பட்டினங்களும் இருந்தன. உதாரணமாக எயிற் பட்டினமாகிய சோபட்டினத்துக்கும் (இப்போதைய மரக்காணம்) காவிரிப்பூம்பட்டினத்துக்கும் இடையில் ஒரு துறைமுகமும் யவனரின் பண்டகசாலையும் இருந்தன. சோபட்டினத்தையும் காவிரிப்பூம்பட்டினத்தையும் கூறுகிற

சங்கச் செய்யுட்கள் இந்தத் துறைமுகத்தைக் கூறவில்லை. ஆனால், *பெரிப்ளூஸ்* என்னும் கிரேக்க நூலில் இந்தத் துறைமுகம் கூறப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தை அந்நூல் போதவுக்கே (Podauke) என்று கூறுகிறது. புதுச்சேரிக்குத் தெற்கேயுள்ள அரிக்கமேடு என்னும் மண்மேட்டை 1945இல் தொல்பொருள் ஆய்வாளர் அகழ்ந்து பார்த்தபோது அங்கு கி.பி. முதல் நூற்றாண்டில் செய்யப்பட்ட பொருள்களும் யவனர்களின் (கிரேக்க ரோமர்) அக்காலத்துப் பொருள்களும் கிடைத்தன. அந்த இடம் அக்காலத்தில் துறைமுகமாகவும் பண்டகசாலையாகவும் இருந்தது என்பது வெளியாயிற்று. *பெரிப்ளூஸ்* நூல் கூறுகிற 'போதவுகே' துறைமுகம் இதுதான் என்பதும் இப்போது அறியப்படுகிறது. ஆகவே, சங்கச் செய்யுட்களில் கூறப்படாத வேறு சில துறைமுகப்பட்டினங்களும் இருந்தன என்பதும் அவற்றில் கொல்லத்துறையும் ஒன்று என்பதும் தெரிகின்றது.

கொல்லத்துறை கடைச்சங்க காலத்தில் சிறந்த துறைமுகப் பட்டினமாக இருந்தது. அங்குக் கடல் வாணிகமும் நடைபெற்றது. யவனர் கப்பல்களில் வந்து அங்கு வாணிகம் செய்தார்கள். அதற்குச் சான்றாக, அத்துறைக்கு மேற்கேயுள்ள பழைய பட்டினமாகிய நெல்லூரில் கிடைத்த உரோம் தேசத்துப் பழங்காசுகள் கிடைத்துள்ளன. உரோம் தேசத்துப் பழங்காசுகள் அடங்கிய ஒரு பானைப் புதையல் அங்கிருந்து கண்டெடுக்கப் பட்டது. கொல்லத்துறைத் துறைமுகத்துக்கு அருகிலேயுள்ள நெல்லூரில் கிடைத்த இந்தப் புதையல் அக்காலத்தில் யவன வாணிகர் இங்கு வந்து வாணிகஞ் செய்ததைத் தெரிவிக்கிறது ('Hoard of Roman Coins in a Pot. Latest record of Coin of Antonius Piu (S.A.D. 161)', *Asiatic Researches*, II, 1970, pp. 331-32).

தொல் பொருள் ஆய்வாளர் அரிக்கமேட்டை அகழ்ந்து பார்த்துக் கண்டுபிடித்ததுபோல, கொல்லத்துறையான இவ் விடத்தையும் அகழ்ந்து பார்த்தால் இங்கும் பழைய பொருள்கள் கிடைக்கக்கூடும். கிடைக்கும் பொருள்களிலிருந்து வரலாற்றுச் செய்திகளை அறிய இயலும். இதுவரையில் இங்கு அகழ் வாராய்ச்சி நடக்கவில்லை. தொல்பொருள் ஆய்வாளர் இனி யேனும் இந்த இடத்தை அகழ்ந்து ஆராயவேண்டும்.

எயிற்பட்டினம் (சோபட்டினம்)

சங்க காலத்திலே தொண்டை நாட்டில் முக்கியத் துறைமுகப் பட்டினமாக இருந்தது எயிற்பட்டினம். இதற்குச் சோபட்டினம் என்றும் பெயர் இருந்தது. எயில் என்றாலும் சோ என்றாலும் மதில் என்பது பொருள். இந்தத் துறைமுகப் பட்டினத்தைச் சூழ்ந்து மதில் இருந்தபடியால் இப்பெயர் பெற்றது. இது பிற்காலத்தில் மரக்காணம் என்று பெயர் பெற்றது. *பெரிப்ளூஸ்*

என்னும் கிரேக்க மொழி நூல் இந்தப் பட்டினத்தைச் 'சோபட்மா' என்று கூறுகிறது. சோபட்மா என்பது சோபட்டினம் என்பதன் மரூஉ.

இடைகழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் தாம் பாடிய *சிறுபாணாற்றுப்படையில்* இந்தப் பட்டினத்தைக் குறிப்பிடு கிறார். "மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய, பனிநீர்ப் படுவிற் பட்டினம்" (*சிறுபாண்.* 152-153) என்று கூறுகிறார்.

ஓங்கு நிலை யொட்டகம் துயில் மடிந்தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமா விறகு

என்று (*சிறுபாண்.* 154-155) இவர் கூறியபடியால் விரைமரம் (அகில் கட்டை) இங்கு இறக்குமதியான பொருள்களில் ஒன்று எனத் தெரிகிறது. இந்த விரை மரம், கடலில் இருந்து வந்தது என்று கூறுகின்றபடியால் இது சாவக நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டது என்பது தெரிகிறது. அகிற்கட்டை, சந்தனக்கட்டை முதலான பொருள்கள் அக்காலத்தில் சாவக நாட்டிலிருந்து வந்தன. முடிச்சு உள்ள அகில் மரக்கட்டை, படுத்துத் தூங்கும் ஒட்டகம் போன்ற உருவமாக இருந்தது என்று கூறுகிறார்.

வாலுளைப் புரவியொடு வடவளம் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாடமோங்கிய மணல்மலி மறுகின்
பரதர் மலிந்த பல்வேறு தெருவின் (*பெரும்பாண்.* 320- 23)

என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடுகிறார். இதனால், இத்துறைமுகப்பட்டினத்தில் நாவாய்களில் வந்து இறங்கின பொருள்களில் குதிரைகளும் வட இந்தியப் பொருள்களும் இருந்தன என்று கூறுகிறார். வடவளம் (வடநாட்டுப் பொருள்கள்) இன்னவை என்று இவர் கூறவில்லை. பரதர் (கப்பலோட்டிகள்) மலிந்த தெருக்கள் இங்கு இருந்தன என்று கூறுகிறபடியால் கப்பல் வாணிபம் இங்குச் சிறப்பாக நடந்தமை தெரிகிறது. இங்கிருந்த கலங்கரை விளக்கைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் சிறப்பாகக் கூறுகிறார். (பட்டினப் பாலையில் காவிரிப்பூம்பட்டினத்தைப் பாடினவரும் இவரே.) கடலில் ஓடுகிற கப்பல்கள் இராக் காலத்தில் துறைமுகம் உள்ள இடத்தையறிந்து கரை சேர்வதற்காகக் கலங்கரை விளக்குகள் துறைமுகங்களில் அமைப்பது வழக்கம் (கலம் – மரக்கலம், நாவாய்; கரை – அழைக்கிற, கூவுகிற; விளக்கம் – விளக்கு நிலையம்). எயிற் பட்டினத் துறைமுகத்திலிருந்த கலங்கரை விளக்கை இவர் இவ்வாறு கூறுகிறார்.

வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய வேற்றருஞ் சென்னி

விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவின் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரைநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறை (பெரும்பாண். 346-350)

கலங்கரை விளக்கு நிலையம் உயரமான கட்டடமாக (வானம் ஊன்றிய மதலை போல) இருந்தது. அது சாந்து (சுண்ணம்) பூசப்பட்டு தள வரிசையுள்ளதாக (வேயா மாடமாக) இருந்தது. அதன் உச்சியில் இராக் காலத்தில் தீயிட்டு எரித்தார்கள். உச்சியில் ஏறி விளக்கு ஏற்றுவதற்கு (தீ ஏற்றுவதற்கு) ஏணிப்படிகள் இருந்தன. இவ்வாறு கலங்கரை விளக்கின் அமைப்புக் கூறப்படுகின்றது.

காவிரிப்பூம்பட்டினத்தின் துறைமுகத்திலும் அக்காலத்தில் கலங்கரை விளக்கு நிலையம் கட்டப்பட்டிருந்ததை இளங்கோ வடிகள் சிலப்பதிகாரத்தில் கூறுகிறார். "இலங்கு நீர் வரைப்பில் கலங்கரை விளக்கம்" (கடலாடு காதை 141). இதற்குப் பழைய அரும்பத உரையாசிரியர் பொருள் கூறுவது இது: "கலங்கரை விளக்கம் - திக்குக் குறிகாட்டிக் கலத்தை (நாவாய்களை) அழைக்கிற விளக்கம்." இன்னொரு உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார், 'நிலையறியாத ஓடுங்கலங்களை அழைத்தற்கு இட்ட விளக்கு" என்று உரை எழுதியுள்ளார்.

துறைமுகங்கள்தோறும் கலங்கரை விளக்கங்கள் கட்டப் பட்டிருந்தன. அவை உயரமாக மணல் மேட்டின் மேல் கட்டப் பட்டிருந்தன. மீகாமர் கலங்கரை விளக்கின் உதவியினால் மரக் கலங்களை இராக்காலத்தில் துறைமுகங்களுக்கு ஓட்டினார்கள். கலங்கரை விளக்குக்கு மாடவெள்ளொரி என்ற பெயரை மருதன் இளநாகனார் கூறுகிறார்.

உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ
இரவும் எல்லையும் அசைவின் றாகி
விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்டக்
கோடுயர் திணிமணல் அகன்றுறை நீகான்
மாட வெள்ளொரி மருங்கறிந்து ஓய்யா
(அகம் 255 : 1-6)

இதனால் எயிற்பட்டினம் முதலான துறைமுகங்களில் கலங்கரை விளக்குகள் இருந்தமை தெரிகிறது. எயிற்பட்டினத் துறைமுகத்தைப்பற்றி வேறு ஒன்றும் தெரியவில்லை.

அரிக்கமேடு (போதவுகே)

எயிற்பட்டினத்துக்குத் (மரக்காணத்துக்கு) தெற்கே ஒரு துறைமுகம் சங்க காலத்தில் இருந்தது. அது இப்போதைய

புதுச்சேரிக்குத் தெற்கே இரண்டு மைல் தூரத்தில் இருந்தது. அதன் பெயர் இன்னதென்று தெரியவில்லை. சங்கச் செய்யுட்களிலும் அத்துறைமுகத்தைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இப்போது அந்த இடம் அரிக்கமேடு என்று கூறப்படுகிறது. அது கி.பி. முதல் நூற்றாண்டில் தமிழகத்துக்கு வந்து வாணிகம் செய்த யவனருடைய பண்டகசாலையாக இருக்கவேண்டும் என்று சமீப காலத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியினால் தெரிகிறது. *பெரிப்ளூஸ்* என்னும் கிரேக்க நூல், தமிழ்நாட்டின் கிழக்குக் கரையில் காமராவுக்கு (காவிரிப்பூம்பட்டினத்துக்கு) வடக்கே 60 மைல் தூரத்தில் போதவுகே (Podauke) என்னும் பட்டினத்தைக் குறிக்கிறது. அந்தப் போதவுகே இந்த அரிக்கமேடாக இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. உரோம் சாம்ராச்சியத்தை ஆட்சி செய்த அகுஸ்தஸ் (கி.மு. 23க்கும் கி.பி. 14க்கும் இடையில் அரசாண்டவன்) காலத்தில் தமிழ்நாட்டுக்கும் ரோமாபுரிக்கும் கடல் வாணிகம் விரிவாக்கப்பட்டது. அக்காலத்தில் அரிக்கமேடு, யவன வாணிகரின் பண்டகசாலையாக அமைந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. சங்க காலத்தின் இறுதியில் கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் சிறப்பாக இருந்த இந்தத் துறைமுகம் பிற்காலத்தில் மண்மூடி மறைந்து போயிற்று. சமீப காலத்தில் 1945இல் இந்த இடம் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் அகழ்ந்தெடுக்கப்பட்டு ஆராயப்பட்டது. இங்கே கிடைத்த பல பொருள்களிலிருந்து இந்த இடம் கி.பி. முதல் நூற்றாண்டில் யவனருடைய பண்டகசாலையாக இருந்ததென்பது தெரிகிறது.

கி.பி. 45க்கும் 50க்கும் இடைப்பட்ட காலத்தில் செய்யப்பட்டு, மத்தியதரைக் கடல் நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பாண்டங்களும், அம்போரெ என்னும் மது (ஒயின்) வைக்கும் சாடிகளும் இங்குக் கண்டெடுக்கப்பட்டன. இவை உடைந்து கிடந்தன. அக்காலத்து அரசர், யவனர் கொண்டுவந்த மது பானத்தை யருந்தினார்கள் என்பது நக்கீரர் பாட்டினால் தெரிகிறது. பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனை அவர் இவ்வாறு வாழ்த்துகிறார்:

> யவனர் நன்கலம் தந்ததண் கமழ்தேறல்
> பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
> ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
> ஆங்கினி தொழுகுமதி ஓங்குவாள் மாற (*புறம்* 56 : 18-21)

நக்கீரர், யவனர் கொண்டுவந்த 'தண் கமழ் தேறலை'க் கூறுவதற்கு ஏற்பவே யவனருடைய மதுச்சாடிகள் அரிக்கமேட்டு அகழ்வாராய்ச்சியில் அகப்பட்டுள்ளன.

சிவப்புக் களிமண்ணால் செய்யப்பட்ட யவன விளக்கின் உடைந்த துண்டுகளும் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டன.

சங்க இலக்கியங்களிலே யவன விளக்குகள் கூறப்படுகின்றன. யவன விளக்கை நக்கீரர் கூறுகிறார்.

> யவனர் இயற்றிய வினைமாண் பாவை
> கையேந் தையகல் நிறைய நெய் சொரிந்து
> பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிர்ஒளி
> (நெடுநல்வாடை. 101-103)

என்று பாவை விளக்கைக் கூறுகிறார்.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் 'யவனர் ஓதிம விளக்'கைக் கூறுகிறார். ஓதிம விளக்கு என்பது அன்னப்பறவையின் உருவம் போன்றது. மீன்குத்திப் பறவை வேள்வித் துணிகள் மேல் அமர்ந்திருப்பது 'யவனருடைய ஓதிம விளக்கு' போல இருந்தது என்று உருத்திரங்கண்ணனார் கூறுகின்றார் (பெரும்பாணாற்றுப் படை 311-318). ஆனால், அரிக்கமேட்டு அகழ்வாராய்ச்சியில் கிடைத்த யவனர் விளக்குத்துண்டு யவனருடைய பாவை விளக்கும் அன்று; ஓதிம விளக்கும் அன்று. அது சாதாரணமான கை விளக்கின் உடைந்த பகுதி. இந்த விளக்கு கி.பி. முதல் நூற்றாண்டில் செய்யப்பட்டது.

அரிக்கமேடு துறைமுகப் பண்டகசாலை கி.பி. முதல் நூற்றாண்டில் இருந்தது என்பதற்கு மற்றொரு சான்று அங்குக் கிடைத்த மட்பாண்ட ஓட்டில் எழுதியுள்ள பிராமி எழுத்துகள். தமிழ்நாட்டில் செய்யப்பட்ட அக்காலத்து மட்பாண்டங்களின் உடைந்த ஓடுகள் அங்குக் கிடைத்தன. அவ்வோடுகளில் சிலவற்றின் மேல் பிராமி எழுத்து எழுதப்பட்டுள்ளன. பிராமி எழுத்துக்கள் கடைச்சங்க காலத்தில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரையில் வழங்கிவந்தன. அரிக்கமேட்டில் கிடைத்த பானையோடுகளில் பிராமி எழுத்து எழுதப்பட்டிருப்பதனால் அவை கி.பி. முதல் நூற்றாண்டில் செய்யப்பட்ட பானைகள் என்பது தெரிகின்றது. இவ்வாறு, அரிக்கமேடு கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து துறைமுகப் பண்டக சாலை என்பதற்குச் சான்றுகள் காணப்படுகின்றன. இது பற்றி விரிவாக அறிய விரும்புவோர், ஏன்ஷியன்ட் இந்தியா என்னும் வெளியீட்டின் இரண்டாவது எண்ணில் (பக்கம் 17 முதல் 124) கண்டு கொள்க ('Arikamedu: An Indo-Roman Trading-station on the east coast of India', *Ancient India*, Number 2, July 1946, pp. 17-124).

காவிரிப்பூம்பட்டினம்

சங்க காலத்திலே சோழ நாட்டில் காவிரியாறு கடலில் கலக்கிற புகார்முகத்தில் இருந்த காவிரிப்பூம்பட்டினம் அக் காலத்திலே உலகப் புகழ் பெற்றிருந்தது. காவிரிப்பூம் பட்டினத்துக்குப் புகார் என்னும் பெயர் உண்டு. பழைய பௌத்த

மத நூல்களில் இது கவீரபட்டனம் என்று பெயர் கூறப்படுகிறது. காகந்தி என்றும் இதற்கு ஒரு பழைய பெயர் உண்டு. கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் உரோமபுரியிலிருந்து யவன வணிகர் இங்கு வந்து வாணிகம் செய்தார்கள். தூரக் கிழக்கிலிருந்தும் (சாவக நாட்டிலிருந்தும்) வட இந்தியாவிலிருந்தும் கப்பல் வாணிகர் இங்கு வந்து வாணிகம் செய்தார்கள். சோழ நாட்டுக் கப்பல் வாணிகர் இந்தத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு சாவக நாடு, காழகம், கங்கைத் துறைமுகம் முதலான இடங்களுக்குச் சென்று வாணிகம் செய்தார்கள். *பெரிப்ளூஸ்* என்னும் கிரேக்க நூலில் இந்தத் துறைமுகம் கமரா என்று கூறப்படுகிறது. கமரா என்பது காவிரிப்பூம்பட்டினம் என்பதன் சுருக்கமாகும். தாலமி என்னும் கிரேக்க யவனர் இத்துறைமுகத்தைச் சபரிஸ் துறைமுகம் என்று கூறுகின்றார். சபரிஸ் என்பது காவிரி என்பதன் திரிபு.

சோழ நாட்டின் முக்கியமான துறைமுகப்பட்டினமாகையால் காவிரிப்பூம்பட்டினத்தில் சோழ இளவரசர்கள் வாழ்ந்திருந்தார்கள். கரிகாற் சோழனுக்குப் பிறகு இருந்த கிள்ளிவளவன் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தான். இவன் காலத்தில் இப்பட்டினத்தில் *சிலப்பதிகாரம்*, *மணிமேகலை* என்னும் காவியங்களின் தலைவர்களான கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை ஆகியோர் வாழ்ந்திருந்தார்கள். பேர்போன பௌத்த மதத் தலைவராகிய அறவண அடிகளும் அக்காலத்தில் இப்பட்டினத்தில் இருந்தார்.

காவிரி ஆறு கடலில் கலக்கிற புகர் முகத்தில் அவ்வாற்றின் வடகரை மேல் காவிரிப்பூம்பட்டினம் அமைந்திருந்தது. இப்பட்டினம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்று இரண்டு கூறாகப் பிரிந்திருந்தது. இரண்டு பிரிவுக்கும் இடை நடுவில் நாளங்காடி என்னும் தோட்டம் இருந்தது. கடற்கரை யோரமாகக் காவிரி ஆற்றின் கரைமேல் கலங்கரை விளக்கம் அமைந்திருந்தது. கலங்கரை விளக்குக்கு அருகில் கப்பல்கள் வந்து தங்கிய துறைமுகம் இருந்தது. இங்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டன. ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களுக்குச் சோழ அரசனுடைய அலுவலர்கள் சுங்கம் வாங்கினார்கள். சுங்கம் வாங்கினதற்கு அடையாளமாக அப்பொருள்களின் மேலே சோழ அரசனுடைய புலி முத்திரையைப் பொறித்தார்கள். இதைப் *பட்டினப்பாலை* கூறுகிறது.

நல் இறைவன் பொருள் காக்கும்
தொல்லிசைத் தொழில் மாக்கள்
.....
வைகல் தொறும் அசைவின்றி
உல்கு செயக்குறை படாது
.....
நீரினின்றும் நிலத்தேற்றவும்

நிலத்தினின்று நீர்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலி பொறித்துப் புறம் போக்கி
மதிநிறைந்த மலி பண்டம்
(உல்கு - சுங்கவரி) (பட்டினப்பாலை 120-136)

காவிரியாற்றின் முகத்துவாரம் ஆழமாகவும் அகலமாகவும் பல கப்பல்கள் தங்குவதற்கு ஏற்றதாகவும் இருந்தது. வாணிகக் கப்பல்கள் பாய்களைச் சுருட்டாமலும் பாரத்தைக் கழிக்காமலும் நேரே ஆற்றினுள் புகுந்து துறைமுகத்தையடைந்தன.

கூம்பொடு
மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம், தகாஅர்
இடைப்புலப் பெருவழிச் சொரியுங்
கடற்பல தாரத்த நாடுகிழ வோயே (புறம் 30)

என்று உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சோழன் நலங்கிள்ளியைப் புகழ்கிறார். துறைமுகத்தில் வந்து தங்கிய நாவாய்கள் (கப்பல்கள்), யானைப்பந்தியில் நிற்கும் யானைகள் அசைந்து கொண்டு நிற்பனபோல, அசைந்துகொண்டிருந்தன. பாய் மரத்தின் மேலே கொடிகள் பறந்தன.

வெளில் இளங்கும் களிறு போலத்
தீம்புகார்த் திரை முன்துறைத்
தூங்கு நாவாய் துவன்றி ருக்கை
மிசைக் கூம்பின் நசைக் கொடி (பட்டினப்பாலை 172-175)

துறைமுகத்தையடுத்த மருவூர்ப்பாக்கத்தில் அயல்நாடுகளிலிருந்து கப்பல் ஓட்டி வந்த மாலுமிகளும், கப்பலோட்டிகளும் கடற்கரைப் பக்கத்தில் தங்கியிருந்தார்கள். அவர்கள் வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்தபடியால் வெவ்வேறு மொழிகளைப் பேசினார்கள். அவர்களில் யவனரும் (கிரேக்கர்) இருந்தார்கள்.

மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம் (பட்டினப்பாலை 216-218)

என்று பட்டினப்பாலை கூறுகின்றது.

கலந்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்தினி துறையும் இலங்குநீர் வரைப்பு (5 : 11-12)

என்று சிலப்பதிகாரமுங் கூறுகின்றது. (கலம் - மரக்கலம்; புலம் பெயர் மாக்கள் - அயல் நாடுகளிலிருந்து வந்த கப்பலோட்டிகள்.)

கலந்தரு திருவிற் புலம் பெயர் மாக்கள்
வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பு
(சிலம்பு 6 : 130-131)

(கலம் - மரக்கலம், நாவாய்; புலம் பெயர் மக்கள் - வெளி நாட்டிலிருந்து வந்த கப்பலோட்டிகள்; வாலுகம் - மணல்.)

இவர்களை மணிமேகலை, "பரந்தொருங் கீண்டிய பாடை மாக்கள்" என்று கூறுகின்றது (1: 16). அவர்கள் தங்கியிருந்த வீடுகளில் இரவு முழுவதும் விளக்கு எரிந்தது. "மொழி பெயர் தேஎத்தோர் ஓழியா விளக்கம்" (சிலம்பு 6 : 143). (ஓழியாவிளக்கு - விடிவிளக்கு.) வெளிநாட்டுக் கப்பலோட்டிகளோடு யவனர்களும் (கிரேக்கர், ரோமர்) தங்கியிருந்தார்கள்.

கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும் (சிலம்பு 5 : 9-10)

இப்படிப்பட்ட சிறந்த பட்டினத்தில் தமிழ்நாட்டுக் கப்பல் வாணிகர் பலர் இருந்தார்கள். பல கப்பல்களையுடைய பெரிய கடல் வாணிகருக்கு மாநாவிகர் என்று பெயர் கூறப்பட்டது (நாவிகர் - கப்பலையுடையவர்; நாவாய் – கப்பல்). மாநாவிகர் என்னும் சொல் திரிந்து மாநாய்கர் என்று வழங்கப்பட்டது. கண்ணகியின் தந்தை ஒரு மாநாவிகன் (மாநாய்கன்). கோவலனுடைய தந்தை ஒரு பெரிய மாசாத்துவன் (சாத்து – வாணிகச் சாத்து, வாணிகக்குழு; தரை வாணிகக் குழுவுக்குச் சாத்து என்பது பெயர். சாத்து வாணிகன் ஆகையால் மாசாத்துவன் எனப் பட்டான்).

அந்தக் காலத்திலே காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் வந்து இறங்கின பொருள்களைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறுகிறார். இந்தப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து கடல் வழியாகக் கப்பல்களில் வந்தவை.

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தெறிகடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு
(பட்டினப்பாலை 185-193)

இவற்றை ஆராய்வோம். பரிப்புரவிகள் (குதிரைகள்) கடல் வழியாகக் கப்பல்களில் வந்து இறங்கின. குதிரை தமிழ் நாட்டுக்கோ அல்லது பாரத நாட்டுக்கோ உரிய விலங்கு அன்று.

அவை பாரசீகம், சிந்து தேசம் முதலான நாடுகளிலிருந்து கப்பல் வழியாகக் கொண்டு வரப்பட்டவை. அக்காலத்து அரசர்கள் நான்கு வகையான படைகளை வைத்திருந்தார்கள். அப்படை களில் குதிரைப் படையும் ஒன்று. தேர்ப்படைக்கும் குதிரை தேவைப்பட்டது. ஆகவே, வெளிநாடுகளிலிருந்து குதிரைகள் கடல் வழியாகக் கொண்டுவரப்பட்டன. காவிரிப்பூம் பட்டினத்தில் குதிரைகளும் இறக்குமதியாயின என்பது இதனால் தெரிகின்றது. தமிழ் வாணிகர் குதிரைகளை இலங்கைக்குக் கொண்டுபோய் விற்றார்கள். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் சேனன், குட்டகன் என்னும் இரண்டு தமிழர் இலங்கையரசனை வென்று இருபத்திரண்டு ஆண்டு இலங்கையை யரசாண்டார்கள் என்றும் அவர்கள் அஸ்ஸ (அசுவ - அசுவம் - குதிரை) வாணிகனின் மக்கள் என்றும் *மகாவம்சம்* என்னும் சிங்கள நாட்டு வரலாற்று நூல் கூறுகின்றது. சூரதிஸ்ஸன் என்னும் சிங்கள அரசன் இலங்கையை அரசாண்ட காலத்திலே சேனன், குட்டகன் என்னும் பெயருள்ள இரண்டு தமிழர் சூரதிஸ்ஸனை வென்று அரசாட்சியைக் கைப்பற்றி அனுராதபுரத்திலிருந்து நீதியோடு இருபத்தி இரண்டு ஆண்டுகள் அரசாண்டார்கள். இவர்கள் அஸ்ஸ (அசுவ) நாவிகனின் மக்கள் என்று *மகாவம்சம்* (XXI: 10-11) கூறுகிறது. இவர்கள் கி.மு. 177 முதல் 155 வரையில் இலங்கையை அரசாண்டார்கள்.

காலின் வந்த கருங்கறி மூடையும் என்பது காற்றின் உதவியினால் கப்பல்களில் கடல் வழியாகக் கொண்டுவரப்பட்ட கறி (மிளகு) மூட்டை. அக்காலத்தில் சிறந்த மிளகு சேர நாட்டு மலைச் சரிவுகளில்தான் உண்டாயிற்று. அதற்கு அடுத்தபடியாகச் சாவக நாட்டில் (ஜாவா, சுமத்ரா தீவுகளில்) மிளகு உண்டாயிற்று. ஆனால், சாவக நாட்டு மிளகு சேர நாட்டு மிளகைப் போல அவ்வளவு சிறந்ததன்று. சேர நாட்டு மிளகை யவனர்கள் பெரிய நாவாய்களில் வந்து பெருவாரியாக வாங்கிக்கொண்டு போன படியால் அது பற்றாக்குறைப் பொருளாக இருந்தது. ஆகவே, கிழக்குக் கரைப் பக்கத்திலிருந்த சோழ நாட்டு வாணிகர் சாவக நாட்டிலிருந்து மிளகைக் கொண்டுவந்து விற்றார்கள். இந்த மிளகைத்தான் 'காலின் வந்த கருங்கறி மூடை' என்று கூறப்பட்டது. (கால் - காற்று, காலின் வந்த - காற்றின் உதவியினால் கப்பலில் வந்த.)

வடமலைப் பிறந்த மணியும் பொன்னும் என்பன இமயமலைப் பக்கத்தில் கிடைத்த மணியும் பொன்னும். இவை வட இந்தியாவிலிருந்து கங்கையாற்றின் முகத்துவாரத்தின் வழியாகக் கடலில் வந்தவை.

குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும் என்பன மேற்குத் தொடர்ச்சி மலைகளில் (சைய மலைகள்) உண்டான சந்தனக்

கட்டை, அகிற் கட்டையாகும். இவை தெய்வங்களுக்கும் மகளிர் கூந்தலை உலர்த்துவதற்கும் அக்காலத்தில் பெரிதும் உபயோகப் பட்டவை. சந்தனம் சாந்தாக அரைக்கப்பட்டு உடம்பில் பூசப்பட்டது. இவை மேற்குத் தொடர்ச்சி மலைகளில் கிடைத்தன. (இவையல்லாமல் ஆரமும் அகிலும் சாவக நாட்டிலிருந்தும் கொண்டுவரப்பட்டன.)

தென் கடல் முத்து என்பது பாண்டி நாட்டுக் கடல்களில் (கொற்கை, குமரி முதலான இடங்களில்) உண்டான முத்து. பாண்டி நாட்டுக் கொற்கை முத்து உலகப் புகழ் பெற்றது.

குணகடல் துகிர் என்பது கிழக்குக் கடலில் உண்டான பவழம் (துகிர்-பவழம்; குணகடல் - கிழக்குக் கடல்). சாவக நாட்டில், பசிபிக் மாக்கடல்களில் பவழப் பூச்சிகளால் உண்டான பவழங்கள் அந்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன. (இவை யல்லாமல் மத்திய தரைக் கடலில் உண்டான பவழங்களை யவன வாணிகரும் மேற்கிலிருந்து கொண்டு வந்தனர்.)

கங்கைவாரி என்பது வடக்கே கங்கையாற்றங்கரை மேலிருந்த பாடலிபுரம், வாரணாசி (காசி) முதலான ஊர்களி லிருந்து கொண்டுவரப்பட்ட பொருள்கள். அப்பொருள்களின் பெயர் கூறப்படவில்லை. காவிரிப் பயன் என்பது காவிரியாறு பாய்கிற சோழ நாட்டுப் பொருள்கள். இவை உள்நாட்டுப் பொருள்கள். இவற்றின் பெயர் கூறப்படவில்லை. இவை ஏற்றுமதிக்காக இத்துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

ஈழத்து உணவு என்பது இலங்கையில் உண்டான உணவுப் பொருள்கள் (ஈழம் - இலங்கை). அந்த உணவுப் பொருள்களின் பெயரும் தெரியவில்லை.

காழகத்து ஆக்கம் என்பது காழகத்துப் (பர்மா தேசம்) பொருள்கள். இவற்றின் பெயரும் கூறப்படவில்லை. அரியவும் பெரியவும் என்பது தமிழ் நாட்டில் கிடைத்தற்கு அருமை யானவையும் விலையுயர்ந்தவையும் ஆன பொருள்கள்.

இவ்வாறு பல அயல்நாட்டுப் பொருள்கள் காவிரித் துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டன என்பதைப் பழைய நூல்கள் கூறுகின்றன.

> மலைப்பஃ றாரமும் கடற்பஃ றாரமும்
> வளம்தலை மயங்கிய துளங்குகல இருக்கை

என்று *சிலம்பு* (6 : 153 - 154) கூறுகிறது (தாரம் - பண்டங்கள்). மலையில் உண்டாகும் பொருள்களும் கடலில் உண்டாகும் பொருள்களும் இத்துறைமுகத்தில் இறக்குமதியாயின.

இவ்வாறு வாணிகப் புகழ் பெற்றிருந்த காவிரிப்பூம் பட்டினம், கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புயற் காற்றடித்து வெள்ளப் பெருக்கெடுத்து நீரில் முழுகிவிட்டதை

மணிமேகலை கூறுகிறது. ஆனால், இப்பட்டினம் அடியோடு முழுகிவிடவில்லை. வெள்ளம் வடிந்த பிறகு மீண்டும் இப் பட்டினம் நெடுங்காலம் பேர் பெற்றிருந்தது. கி.பி. 10ஆம் நூற்றாண்டில் இருந்த பட்டினத்து அடிகள் (பட்டினத்துப் பிள்ளையார்) காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தவர். அவர் துறவியாவதற்கு முன்பு இப்பட்டினத்தில் பேர்போன கப்பல் வாணிகனாக (மாநாய்கனாக) இருந்தார். பிற்காலச் சோழர் காலத்திலும் காவிரிப்பூம்பட்டினம் பேர் பெற்றிருந்தது. பிறகு இப்பெரிய பேர்போன பட்டினம் சிறப்புக் குன்றிச் சிறிதுசிறிதாகப் பெருமை குறைந்து இப்போது குக்கிராமமாக இருக்கிறது. இங்கு அண்மையில் தொல்பொருள் துறை ஆய்வாளர் நிலத்தை யகழ்ந்து பார்த்தபோது பல பழம்பொருள்கள் கிடைத்தன. அவை இப்பட்டினத்தின் பழங்காலச் சிறப்புக்குச் சான்றாக இருக் கின்றன.

தொண்டித் துறைமுகம்

சங்க காலத்திலே கிழக்குக் கரையிலும் மேற்குக் கரையிலும் இரண்டு தொண்டிப் பட்டினங்கள் இருந்தன. இரண்டும் துறைமுகப்பட்டினங்கள். ஒரு தொண்டி சேர நாட்டில் மேற்குக் கடற்கரையில் இருந்தது; மற்றொரு தொண்டி பாண்டி நாட்டில் கிழக்குக் கரையிலிருந்த பாண்டி நாட்டுத் தொண்டியாகும். கடைச்சங்க காலத்துப் புலவரான அம்மூவனார் *ஐங்குறுநூற்றில்* நெய்தற்றிணையில் தொண்டிப் பத்து என்னும் தலைப்பில் பத்துச் செய்யுட்களைப் பாடியுள்ளார்; அது சேர நாட்டுத் தொண்டி. அந்தப் புலவரே *அகநானூறு* பத்தாம் செய்யுளில் பாண்டி நாட்டுத் தொண்டியைப் பாடியுள்ளார். இந்தத் தொண்டியை இவர் இவ்வாறு கூறுகிறார்:

கொண்ட லொடு
குரூஉத் திரைப் புணரி யுடைதரும் எக்கர்ப்
பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்
மோட்டு மணல் அடைகரைக் கோட்டுமீன் கொண்டி
மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளங்கெழு தொண்டி (*அகம்* 10 : 8-13)

கிழக்குக் கடலிலிருந்து வீசுகிற கடற்காற்றுக்குக் கொண்டல் காற்று என்பது பெயர். இந்தத் தொண்டி கிழக்குக் கடற்கரை யிலிருந்தது என்பதைக் கொண்டல் காற்று வீசுகிற தொண்டி என்று கூறுவதிலிருந்து அறிகிறோம். இந்தத் தொண்டி பாண்டி நாட்டில் இப்போதைய இராமநாதபுர மாவட்டத்தில் இருந்தது என்று தோன்றுகிறது.

இந்தத் தொண்டித் துறைமுகத்தைச் *சிலப்பதிகார*க் காவியமும் கூறுகின்றது. கடல் கடந்த நாடுகளிலிருந்து அகிற் கட்டை,

சந்தனக் கட்டை, பட்டுத் துணி, சாதிக்காய், இலவங்கம், குங்குமப்பூ, கருப்பூரம் முதலான வாசனைப் பொருள்களை ஏற்றி வந்த நாவாய்கள் கொண்டல் காற்றின் உதவியினால் தொண்டித் துறைமுகத்துக்கு வந்ததையும் இறக்குமதியான அந்தப் பொருள் களைத் தொண்டியிலிருந்து பாண்டியனின் தலைநகரான மதுரைக்கு அனுப்பப்பட்டதையும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

ஓங்கிரும் பரப்பின்
வங்க ஈட்டத்துத் தொண்டியோர் இட்ட
அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்
தொகு கருப்பூரமும் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்
வெங்கண் நெடுவேள் வில்விழாக் காணும்
பங்குனி முயக்கத்துப் பனியரசு

(ஊர்காண் காதை 106-112)

இங்குக் குறிப்பிடப்பட்ட பொருள்கள் எல்லாம் கிழக்குக் கடலுக்கப்பால் கீழ்க்கோடி நாடுகளிலிருந்து வந்தவை. இந்தக் காலத்தில் இந்தோனேஷியா என்றும் கிழக்கிந்தியத் தீவுகள் என்றும் கூறப்படுகின்ற தீவுகள் அந்தக் காலத்தில் சாவக நாடு என்று கூறப்பட்டன. இங்குக் கூறப்பட்ட பொருள்கள் எல்லாம் அந்தக் காலத்தில் சாவக நாட்டுக்கேயுரியவை. இப்பொருள்கள் அந்தக் காலத்தில் வேறு எங்கும் கிடைக்காதவை. கீழ்க்கடல் தீவுகளிலிருந்து கொண்டு வரப்பட்டுத் தொண்டித் துறைமுகத்தில் இறக்குமதியான பொருள்கள் அகில், துகில், ஆரம், வாசம், கருப்பூரம் முதலானவை என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இவற்றை விளக்கிக் கூறுவோம்.

அகில்

இது ஒரு வகை மரத்தின் கட்டை. நெருப்பில் இட்டுப் புகைக்கப்படுவது. புகை மணமாக இருக்கும். கோவில்களில் தெய்வங்களுக்கு நறுமணம் புகைக்கவும், மகளிர் கூந்தலுக்குப் புகைத்து மணமேற்றவும் மற்றும் சிலவற்றுக்கும் உபயோகிக்கப் பட்டது. அகில் மரங்கள் தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையிலும் இருந்தன. ஆனால், சாவக நாட்டு அகில் தரத்தில் உயர்ந்தது, பேர் போனது. கிழக்குக் கோடி நாடுகளிலிருந்து வந்த காரகில் சிறந்தது என்பதைச் சிலப்பதிகாரம் "குண திசை மருங்கில் காரகில்" என்று (சிலம்பு 4 : 36) கூறுகின்றது.

துகில்

துகில் என்பது இங்குப் பட்டுத் துணிகளைக் குறிக்கிறது. சங்க காலத்தில் பட்டுத் துணிகள் சீன நாட்டில் மட்டும் கிடைத்தன.

அக்காலத்தில் பட்டு வேறு எங்கும் கிடைக்கவில்லை. சீன நாட்டு வாணிகர் பட்டு முதலான பொருள்களைக் கப்பலில் ஏற்றிக் கொண்டு வந்து சாவக நாட்டில் (கிழக்கிந்தியத் தீவுகளில்) விற்றார்கள். அக்காலத்தில் சீனர் தமிழ்நாட்டுக்கு வரவில்லை. சாவக நாட்டோடு நின்றுவிட்டார்கள். அவர்கள் சாவக நாட்டுக்குக் கொண்டுவந்த பட்டுகளைத் தமிழ்நாட்டு வாணிகர் அங்கிருந்து கொண்டுவந்து தமிழ்நாட்டில் விற்றார்கள். தமிழ் நாட்டிலிருந்து பட்டுத் துணியை மேல்நாட்டு வாணிகர் வாங்கிக்கொண்டு போய் மேற்கு நாடுகளில் விற்றார்கள்.

ஆரம்

ஆரம் என்பது சந்தனம். சந்தன மரம் தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும் (சய்ய மலை) உண்டாயிற்று. ஆனால், இந்தச் சந்தனத்தைவிட சாவக நாட்டுச் சந்தனம் தரத்திலும் மணத்திலும் உயர்ந்தது. அது வெண்ணிறமாக இருந்தது. அகிற் கட்டையைப் போலவே சந்தனக் கட்டையும் சாவக நாட்டிலிருந்து அக்காலத்தில் இங்கு இறக்குமதியாயிற்று.

வாசம்

வாசம் என்பது வாசனைப் பொருள்கள். அவை கிராம்பு (இலவங்கம்), குங்குமப்பூ, தக்கோலம், சாதிக்காய் முதலியவை. இந்த வாசப் பொருள்கள் அக்காலத்தில் சாவக நாட்டில் மட்டும் உண்டாயின; வேறெங்கும் இவை அக்காலத்தில் கிடைக்க வில்லை.

கருப்பூரம்

கருப்பூரம் என்பது சாவக நாட்டில் சில இடங்களில் உண்டான ஒரு வகை மரத்தின் பிசின். கருப்பூரத்தில் பல வகையுண்டு. ஆகையினால், இது 'தொடு கருப்பூரம்' என்று கூறப்பட்டது. கருப்பூர வகைக்குப் பனிதம் என்றும் பெயர் உண்டு. ஒரு வகைப் பனிதம் தாம்பூலத்துடன் அருந்தப்பட்டது. அது மணமுள்ளது, விலையுயர்ந்தது.

கிழக்குக் கடற்கோடியில் கடல் கடந்த சாவக நாட்டுத் தீவுகளில் உண்டான இந்தப் பொருள்கள் தொண்டித் துறை முகத்தில் இறக்குமதியானதைச் *சிலப்பதிகாரம்* கூறுவதிலிருந்து அறிகிறோம். தொண்டித் துறைமுகத்தைப் பற்றி நாம் அறிவது இவ்வளவுதான்.

'தொண்டியோர்' என்பதற்கு அடியார்க்கு நல்லார் என்னும் உரையாசிரியர் தம்முடைய உரையில் 'சோழ குலத்தோர்' என்று உரை எழுதுகிறார். இது தவறு என்று தோன்றுகின்றது. தொண்டி இவர் காலத்தில் சோழர் ஆட்சிக்குக் கீழடங்கியிருக்கக்கூடும்.

ஆனால், சிலப்பதிகாரக் காலத்தில் தொண்டி, கூடல் (மதுரை) அரசனாகிய பாண்டியனுக்குக் கீழடங்கியிருந்தது. தொண்டியில் பாண்டிய குலத்து அரசன் ஒருவன் இருந்தான் என்று தோன்று கிறது. பாண்டி நாட்டின் முக்கியத் துறைமுகமாகிய கொற்கையில் பாண்டிய குலத்து இளவரசன் இருந்தது போலவே, தொண்டித் துறைமுகப்பட்டினத்திலும் ஒரு பாண்டிய இளவரசன் இருந்திருக்கக் கூடும்.

தொண்டித் துறைமுகப்பட்டினம் பிற்காலத்தில் சிறப்புக் குன்றி இக்காலத்தில் குக்கிராமமாக இருக்கிறது.

மருங்கூர்ப்பட்டினம்

மருங்கூர்ப்பட்டினம் மருங்கை என்றும் கூறப்பட்டது. இது பாண்டி நாட்டின் கிழக்குக் கரையிலிருந்த துறைமுகம். பாண்டி நாட்டுப் புலவரான நக்கீரர், காயல்களும் (உப்பங்கழிகள்) தோட்டங்களும் உள்ள மருங்கூர்ப் பட்டினத்தின் கடைத்தெரு செல்வம் கொழித்திருந்தது என்று கூறுகின்றார்.

விழுநிதி துஞ்சும் நீறுபெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து
எல்லுமிழ் ஆணவம் (அகம் 227 : 19-21)

அங்காடியில் குவித்து வைத்திருந்த இறால்களைக் கவர்ந்து கொண்டு போய்க் காக்கைகள் துறைமுகத்தில் நிற்கும் கப்பல்களின் பாய்மரக் கம்பத்தில் அமர்ந்து தின்றன என்றும் அவர் கூறுகிறார்.

அகலங் காடி யசைநிழல் குவித்த
பச்சிறாக் கவர்ந்த பசுங்கண் காக்கை
தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேக்கும்
மருங்கூர்ப் பட்டினம் (நற்றிணை 258 : 7-10)


மருங்கூர்ப்பட்டினத்துக்கு மேற்கே அதைச் சார்ந்து ஊணூர் என்னும் ஊர் இருந்தது. ஊணூர் மதில் அரண் உடையதாக இருந்தது.

கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர்
விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினம்
(அகம் 227 : 18-20)

ஊணூரைச் சூழ்ந்து நெல் வயல்கள் இருந்தன. "முழங்குகடல் ஓதம் காலைக் கொட்கும், பழம்பல் நெல்லின் ஊணூர்" என்று மருதன் இளநாகனார் (அகம் 220) கூறுகிறார்.

சோழ நாட்டிலிருந்த பேர்போன காவிரிப்பூம்பட்டினத்தின் துறைமுகப் பகுதி மருவூர்ப்பாக்கம் என்றும் நகர்ப் பகுதி

பட்டினப்பாக்கம் என்றும் இரு கூறாகப் பிரிந்திருந்தது போல இவ்வூரும் மருங்கூர்ப்பட்டினம், ஊணூர் என்று இரு கூறாகப் பிரிந்திருந்தது. காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டினப்பாக்கம் மதிலையும் அகழியையும் கொண்டிருந்தது போல ஊணூரும் மதில் சூழ்ந்திருந்தது.



மருங்கூரும் ஊணூரும் சேர்ந்து நெல்லூர் அல்லது சாலியூர் என்று பெயர் பெற்றிருந்தது என்பதை மதுரைக்காஞ்சியினால் அறிகிறோம். தாலமி என்னும் கிரேக்கர் கூறுகிற சாலூர் (Salour) என்பது இந்தச் சாலியூர் ஆகும். மதுரைக்காஞ்சி இந்த நெல்லூரின் துறைமுகத்தைக் கூறுகிறது. தொடுவானம் பொருந்திய அச்சந்தருகின்ற பெரிய கடலிலே (அக்கரைத் தீவுகளி லிருந்து) அலைகளைக் கிழித்துக்கொண்டு காற்றின் உதவியினால் இக்கரையை யடைவதற்குப் பாய்களை விரித்துக்கொண்டு வந்த பெரிய நாவாய்கள் இந்தத் துறைமுகத்திலே கூட்டமாக வந்து தங்கின. நாவாய்களிலிருந்து பண்டங்களை இறக்குமதி செய்த போது முரசு முழங்கிற்று. கப்பல்கள் துறைமுகத்தில் தங்கியிருந்த காட்சியானது, வெள்ளத்தை முற்றுகை செய்யும் மலைபோலத் தோன்றிற்று. இப்படிப்பட்ட வாணிக வளமுள்ள சாலியூரைக் (நெல்லூரை) கொண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் என்று பொருளுள்ள செய்யுளைக் கூறுகின்றது மதுரைக்காஞ்சி.

வான் இயைந்த இருமுந்நீர்ப்
பேஎ நிலைஇய இரும் பௌவத்துக்
கொடும் புணரி விலங்கு போழக்
கடுங் காலொடு கரை சேர

நெடுங் கொடிமிசை இதை எடுத்து
இன்னிசைய முரசம் முழங்கப்
பொன் மலிந்த விழுப் பண்டம்
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய்
மழை முற்றிய மலை புரையத்
துறை முற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடற் குண்டகழிச்
சீர் சான்ற உயர் நெல்லின்
ஊர் கொண்ட உயர் கொற்றவ (75-88)

பாண்டிய நாட்டுக் கடற்கரை வளத்தையும் வாணிகத்தையும் மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியில் கூறுகிறார்.

கடலில் உண்டான முத்துக்களும், சங்குகளை அறுத்து உண்டாக்கின வளைகளும், கப்பல் வாணிகர் கொண்டுவந்த நவதானியங்களும், மீன்களை உப்பிட்டுப் பதப்படுத்திய உப்புக் கண்டங்களும் (கருவாடு) ஆகியவற்றை நாவாய்களில் ஏற்றிக் கொண்டு போய் அயல் நாடுகளில் விற்று அங்கிருந்து குதிரை முதலான பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்ததைக் கூறுகிறார்.

முழங்கு கடல் தந்த விளங்குகதிர் முத்தம்
அரம் போழ்ந் தறுத்த கண்ணேர் இலங்குவளை
பரதர் தந்த பல்வேறு கூலம்
இருங்கழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கட் டுணியல்
விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கலம் உய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியோ டனைத்தும்
வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப (315-324)

கொற்கை

மருங்கூர்ப் பட்டினத்துக்குத் தெற்கே கொற்கைக் குடாக் கடலும் அதன் மேற்குக் கரையில் கொற்கைப்பட்டினமும் இருந்தன. கொற்கையை *பெரிப்ளூஸ்* என்னும் கிரேக்க நூல் கொல்கிஸ் (Kolkius) என்று கூறுகின்றது. தாலமியும் இதைக் கூறுகிறார். கொற்கைக் குடாக் கடல் அக்காலத்தில் நிலத்தின் உள்ளே ஐந்து மைல் ஊடுருவியிருந்தது. இங்கு முத்துச் சிப்பிகளும் சங்கு வளைகளும் உண்டாயின. கொற்கை முத்து உலகப் புகழ்பெற்றது. கொற்கைக் குடாக் கடலில் அக்காலத்தில் தாமிரபரணி ஆறு சென்று விழுந்தது. அந்த ஆற்றின் கரைமேல் கடற்கரைப் பக்கத்தில் பேர்போன கொற்கைப்பட்டினம்

இருந்தது. இங்கு பாண்டிய இளவரசன் இருந்தான். கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு கொற்கைக் குடாக் கடல் மண் தூர்த்துடைய மறைந்துபோய் இப்போது நிலமாக மாறிவிட்டது. கொற்கைக் குடாக் கடல் நிலமாக மாறிப் போனதற்குக் காரணம், தாமிரபரணி ஆறு அடித்துக்கொண்டு வந்த மணலும் கடல் அலை அடித்துக்கொண்டு வந்த மணலும் ஆக இரண்டு புறத்திலும் மணல் தூர்ந்தபடியினால்தான். மணல் தூர்ந்தது வெகு காலமாக நடந்துகொண்டு வந்து கடைசியில் கடலே மறைந்து போயிற்று. கொற்கைப்பட்டினம் இருந்த இடம் இப்போது கடற்கரைக்கு மேற்கே மூன்று மைல் தூரத்தில் மாறமங்கலம் என்னும் பெயர் பெற்றிருக்கின்றது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொற்கையிலிருந்த பாண்டிய இளவரசன் வெற்றிவேற்செழியன்.

கொற்கைப்பட்டினம் துறைமுகப்பட்டினமாக இருந்தது மல்லாமல், அங்கு முத்துக்களும் சங்குகளும் விற்கப்பட்டன. கொற்கைக் கடலில் முத்துச் சிப்பிகளும் சங்குகளும் உண்டான படியால் இங்கு முத்துகளும் சங்குகளும் கிடைத்தன.

குமரி

இது பாண்டிய நாட்டின் தெற்கே குமரிக் கடலில் இருந்தது. கன்னியாகுமரி என்றுங் கூறப்படும். இது துறைமுகப் பட்டினமாகவும் புண்ணியத் தீர்த்தமாகவும் இருந்தது. இந்தத் துறைமுகத்தைத் தாலமி, பெரிப்ளூஸ் என்னும் கிரேக்கர்கள் குறிப்பிட்டுள்ளனர். கொமரா, கொமராய், கொமரியா என்று அவர்கள் குமரியைக் கூறியுள்ளனர். இத்துறைமுகத்தைக் 'குமரியம் பெருந்துறை' என்று மணிமேகலை கூறுகின்றது. பாண்டியனைக் 'கொற்கைக் கொண்கன் குமரித் துறைவன்' என்று சிலம்பு கூறுகின்றது. பிற்காலத்தில் இராமேசுவரம் புண்ணிய தீர்த்தமாகக் கருதப்படுவதற்கு முன்பு குமரித் துறை புண்ணியத் தீர்த்தமாகக் கருதப்பட்டு, கங்கையில் நீராடினவர் குமரிக்கு வந்து நீராடிச் சென்றார்கள். பிற்காலத்தில் இந்தத் துறைமுகத்துக்கு வணிகக் கப்பல்கள் வருவது நின்று போயிற்று. கொற்கைத் துறைமுகத்துக்கு அப்பால் கொமரா என்னும் ஊர் இருந்ததென்றும், அங்குக் கோட்டைகள் அமைந்திருந்தன வென்றும், அங்கு ஒரு கப்பல் தொழிற்சாலையிருந்ததென்றும் பெரிபுளூஸ் என்னும் கிரேக்க மொழி நூல் கூறுகின்றது.

7. தமிழகத்தின் மேற்குக்கரைத் துறைமுகங்கள்

பாரத தேசத்தின் மேற்குக் கரையில் இருந்த பழைய காலத்துத் துறைமுகப்பட்டினங்களைக் கூறுவோம். அவை குடகடலின் (அரபிக் கடலின்) கரையில் இருந்தன. அக்காலத்தில் வடக்கே இருந்த பேர்போன துறைமுகம் மின்னகரம் என்பது. மின்னகரம் சிந்துநதி கடலில் சேரும் புகர்முகத்தில் இருந்தது. அதற்குத் தெற்கே புரோச் (Broach) என்னும் பாரிகச்சத் துறைமுகமும், சோபாரா 'சூரத்துத்' துறைமுகமும் இருந்தன. இந்தத் துறைமுகங்களில் அராபிய, யவன வாணிகர்கள் மேற்கிலிருந்து வந்து வாணிகம் செய்தார்கள். இந்தத் துறைமுகங்கள் அக்காலத்தில் அப்பகுதிகளை யரசாண்ட சதகர்ணி (சாதவாகன) அரசர்களுக்குரியவை. இந்தத் துறைமுகங்களைக் கைப்பற்றச் சாகர் என்னும் அரசர்கள் சதகர்ணி அரசர்களோடு அடிக்கடி போர் செய்துகொண்டிருந்தார்கள். இத்துறைமுகங்கள் சில காலம் சதகர்ணிகளுக்கும் சில காலம் சாகர்களுக்கும் உரியதாக இருந்தன. கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் இவ்விதமாக இந்தத் துறைமுகப்பட்டினங்கள் இருவர் ஆட்சியிலும் மாறிக் கொண்டிருந்தன.

அக்காலத் தமிழகம், மேற்குக் கரையில் துளு நாட்டையும் (தென் கன்னட, வட கன்னட மாவட்டங்கள்) தன்னகத்தே கொண்டிருந்தது. தமிழகத்தின் மேற்குக் கரையில் வடகோடியி லிருந்த அக்காலத்துத் துறைமுகப்பட்டினம் மங்களூர். மங்களூர் இப்போதும் சிறிய துறைமுகமாக இருக்கின்றது. ஆனால், சங்க காலத்தில் அது பெரிய பேர்போன துறைமுகமாக இருந்தது. துளு நாட்டை அக்காலத்தில் நன்னன் என்னும் பெயருள்ள வேள் அரசர்கள் அரசாண்டார்கள். மங்களூருக்குத் தெற்கே இருந்த துறைமுகப்பட்டினம் நறவு. இதுவும் துளு நாட்டைச் சேர்ந் திருந்தது.

நறவுக்குத் தெற்கே தொண்டி, பரக்கை, நீல்கண்ட முதலான துறைமுகங்கள் இருந்தன. இவை சேர நாட்டைச் சேர்ந்த துறைமுகங்கள். இத்துறைமுகங்களைப் பற்றிக் கூறுவோம்.

மங்களூர்

சங்க காலத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்தது துளு நாடு. துளு நாட்டை நன்னன் என்னும் பெயருள்ள அரசர் பரம்பரை யரசாண்டு வந்தது. துளு நாட்டின் முக்கியத் துறைமுகமாக இருந்தது மங்களூர். நேத்திராவதி ஆறு கடலில் கலக்கிற இடத்தில் மங்களூர் இருந்தது. இப்போதும் மங்களூர் சிறு துறைமுகப்பட்டினமாக இருக்கிறது. மங்களூரில் இருந்த மங்கலாதேவி கோவில் பேர் போனது. சிலப்பதிகாரம் மங்கலாதேவி கோவிலைக் கூறுகின்றது.

மங்களூர் துறைமுகத்தில் யவன வாணிகர் வந்து வாணிகம் செய்தார்கள். தாலமி என்னும் யவனர் இந்தத் துறைமுகப் பட்டினத்தை மகனூர் என்று கூறியுள்ளார். மங்களூரைத்தான் இவர் இப்படிக் கூறியுள்ளார். பிளைனி என்னும் யவனர் இதை 'நைத்ரியஸ்' (Nitrias) என்று கூறியுள்ளார். நைத்திரியஸ் என்பது நேத்திராவதியாறு. நேத்திராவதி ஆற்று முகத்துவாரத்தில் இருக்கிறபடியால் இதை நைத்ரியஸ் என்று கூறினார் போலும். மேலும், இவர் இந்த இடத்தில் கடற்கொள்ளைக்காரர் இருந்தனர் என்றும் கூறுகின்றார். மங்களூருக்கு மேற்கே கடலில் ஒரு சிறு தீவில் குறும்பர்கள் இருந்தனர். அவர்கள் வாணிகத்துக்காக வெளிநாடுகளிலிருந்து வரும் கப்பல்களைக் கொள்ளை யடித்தனர். அதனால், சேர நாட்டுத் துறைமுகப்பட்டினங்களுக்கு யவனக் கப்பல்கள் வருவது தடைப்பட்டது. அப்போது, இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் இளைய மகனான செங்குட்டுவன் தலைமையில் கடற் படையை யனுப்பிக் கடற் கொள்ளைக் குறும்பரை யடக்கினான். இச்செய்திகளைப் பதிற்றுப் பத்து இரண்டாம் பத்து, ஐந்தாம் பத்துகளால் அறிகின்றோம்.

நறவு

துளு நாட்டிலே மங்களூர்த் துறைமுகத்துக்குத் தெற்கே நறவு என்னும் துறைமுகப்பட்டினம் இருந்தது. இதுவும் துளு நாட்டைச் சேர்ந்தது. துளு நாட்டு நன்னன் ஆட்சியில் இது இருந்தது. நறவு என்னும் சொல்லுக்கு கள், மது என்னும் பொருளும் உண்டு. ஆகையால் நறவு என்னும் பெயர் உள்ள இந்தப் பட்டினத்தைத் தமிழ்ப் புலவர் 'துவ்வா நறவு' (உண்ணப்படாத நறவு) என்று கூறினார். சேர மன்னர் துளு நாட்டு ஆட்சியைக் கைக்கொண்டபோது, ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் (சேரன் செங்குட்டுவனுடைய மாற்றாந்தாயின் மகன்) இந்த நறவுத் துறைமுகப்பட்டினத்தில் இருந்தான் என்று பதிற்றுப்பத்து (6ஆம் பத்து 10ஆம் செய்யுள்) கூறுகின்றது. யவன நாட்டுக் கப்பல் வாணிகர் இங்கு வந்து வாணிகம் செய்தார்கள். அவர்கள் நறவை 'நவ்ரா' என்று கூறினார்கள்.

தொண்டி

இது மேற்குக் கடற்கரையில் சேர நாட்டில் இருந்த தொண்டி (பாண்டி நாட்டில், கிழக்குக் கடற்கரையிலும் ஒரு தொண்டி இருந்தது). *ஐங்குறுநூற்றில்* நெய்தற் பத்தைப் பாடிய அம்மூவனார் தொண்டிப்பத்து என்னும் தலைப்பில் பத்துச் செய்யுட்களைப் பாடியுள்ளார். இவர் பாடிய தொண்டி இந்தச் சேர நாட்டுத் தொண்டியாகும். இந்தத் தொண்டிப் பட்டினம் கொங்கு நாட்டை யரசாண்ட பொறையர்களின் ஆட்சியி லிருந்ததாகத் தெரிகின்றது. பொறையர் சேர அரசர்களின் இளைய வழியினர். கொங்கு நாட்டையரசாண்ட அவர்களுக்கு உள் நாடாகிய கொங்கு நாட்டில் துறைமுகப்பட்டினம் இல்லாதபடியால், சேர நாட்டுத் துறைமுகப்பட்டினமாகிய தொண்டியை வைத்திருந்தனர் என்று தோன்றுகிறது. சேரன் செங்குட்டுவனுடைய தம்பியாகிய (மாற்றாந்தாயின் மகன்) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், வடக்கே தண்டாரணியத்தி லிருந்து கொண்டுவந்த வருடையப் பசுக்களைத் தொண்டிக்குக் கொண்டுவந்து தானங் கொடுத்தான்.

தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டியுட் டந்து கொடுப்பித்து (6ஆம் பத்து, பதிகம்)

சங்க காலத்திலிருந்த பொய்கையார் என்னும் புலவர் இந்தத் தொண்டியில் வாழ்ந்தவர் (*புறம்* 48). தொண்டித் துறைமுகத்தில் அக்காலத்தில் யவன வாணிகர் வந்து வாணிகம் செய்தனர். தாலமி (Ptolemy) என்னும் யவனர் இந்தத் தொண்டியைத் தைண்டிஸ் (Tyndis) என்று கூறியுள்ளார். இங்கு நடந்த வாணிகத்தைப் பற்றி வேறொன்றும் தெரியவில்லை.

மாந்தை

சேர நாட்டுத் துறைமுகப்பட்டினமாகிய மாந்தை 'துறை கெழு மாந்தை', 'கடல்கெழு மாந்தை' என்று கூறப்படுகின்றது. மாந்தை, மரந்தை என்றும் கூறப்பட்டது. மாந்தைப் பட்டினத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பொன் வயிரம் மணி முதலான பெருஞ்செல்வத்தை ஆம்பல் கணக்கில் (ஆம்பல் என்பது கணிதத்தில் பெருந்தொகையைக் குறிப்பது) புதைத்து வைத்திருந் தான் என்று மாமூலனார் கூறுகிறார். இந்தப் பெருஞ்சேரலாதன் கடற்கொள்ளைக்காரக் குறும்பரை அடக்கினவன்.

வலம்படு முரசிற் சேரலாதன்
முந்நீரோட்டிக் கடம்பறுத் திமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்

பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ அன்றவண்
நிலந்தினத் துறந்த நிதியம் (அகம் 127 : 3-10)

இந்தத் துறைமுகத்தைப் பற்றி வேறொன்றும் தெரியவில்லை.

முசிறித் துறைமுகம்

முசிறித் துறைமுகப்பட்டினம் சேர நாட்டுத் துறைமுகப் பட்டினங்களில் பேர்போனது. அக்காலத்தில் அது கிழக்குக் கடற்கரையில் உலகப் புகழ் பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினம் போல மேற்குக் கரையில் உலகப் புகழ் பெற்றிருந்தது. மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உண்டான பேரியாறு மேற்குக் கடலில் விழுந்த இடத்தில் முசிறித் துறைமுகம் அமைந்திருந்தது. சேர நாட்டுத் தலைநகரமாக அக்காலத்தில் இருந்த வஞ்சி (கரூர்) நகரம், பேரியாறு கடலில் விழுந்த இடத்துக்கு அருகில் பேரியாற்றின் கரைமேல் இருந்தது. வஞ்சி நகரத்திலே சேர அரசர் வாழ்ந்திருந்தார்கள். (இந்த சேரர் வஞ்சி, கொங்கு நாட்டு வஞ்சி (கரூர்) அன்று. சேர நாட்டிலும் கொங்கு நாட்டிலும் வஞ்சி என்றும் கரூர் என்றும் பெயர் பெற்றிருந்த இரண்டு ஊர்கள் சங்க காலத்தில் இருந்தன.) சேர நாட்டுத் தலைநகரமான வஞ்சி மாநகரத்து மேற்கே கடற்கரையில் பேரியாறு கடலில் சேர்ந்த புகர் முகத்தில் முசிறித் துறைமுகப்பட்டினம் இருந்தது.

முசிறித் துறைமுகத்தில் முக்கியமாக மிளகு ஏற்றுமதி யாயிற்று. யவனக் கப்பல்கள் மிளகை வாங்குவதற்காகவே முசிறிக்கு வந்தன. யவனர் முசிறியை முசிறிஸ் என்று கூறினார்கள். *வால்மீகி இராமாயணம்* முசிறியை முரசி பதனம் என்று கூறுகின்றது. முசிறி வடமொழியில் 'முரசி' ஆயிற்று. முசிறிக் கடலில் முத்துச் சிப்பிகளும் உண்டாயின. சிப்பியிலிருந்து முத்துக் கிடைத்தது. முசிறியில் உண்டான முத்துக்களைக் கவுடல்லியரின் *அர்த்தசாத்திரம்*, *கௌர்ணெயம்* என்று கூறுகின்றது. பேரி யாற்றுக்குச் சூர்ணியாறு என்றும் பெயருண்டு. சூர்ணியாற்றின் முகத்துவாரத்தில் உண்டானபடியால் இந்த முத்து கௌர்ணெயம் என்று பெயர் பெற்றது. சௌர்ணெயம் என்னும் பெயர் திரிந்து கௌர்ணெயம் என்றாயிற்று. முசிறிக் கடலில் உண்டான முத்துக்கள் முசிறிப் பட்டினத்தின் ஒரு பகுதியான பந்தர் என்னும் இடத்தில் விற்கப்பட்டன. முசிறிப் பட்டினத்தைச் சேர்ந்த பந்தரில் முத்துக்களும் கொடுமணம் என்னும் இடத்தில் பொன் நகை களும் விற்கப்பட்டன என்று *பதிற்றுப்பத்து* கூறுகிறது.

இன்னிசைப் புணரி இரங்கும் பௌவத்து
நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்க்
கமழுந தாழைக் கானலம் பெருந்துறை (6ஆம் பத்து)

பந்தரிலும் கொடுமணத்திலும் முத்துக்களும் நன்கலங்களும் (நகைகள்) விற்கப்பட்டன என்று 7ஆம் பத்து 7ஆம் செய்யுள் கூறுகின்றது.

கொடுமணம் பட்ட வினைமாண் அருங்கலம்
பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்

என்று 8ஆம் பத்து (4 : 5-6) கூறுகின்றது. பந்தர் என்பது அரபு மொழிச் சொல். பந்தர் என்றால் ஆவணம், கடைவீதி என்பது பொருள். அக்காலத்திலேயே அரபியர் இங்கு வந்து வாணிகஞ் செய்தார்கள்.

கி.மு. முதல் நூற்றாண்டில் தென்மேற்குப் பருவக்காற்றை ஹிப்பலஸ் என்னும் யவன மாலுமி அரபு வாணிகரிடமிருந்து அறிந்துகொண்டு, அக்காற்றின் உதவியினால் நடுக்கடலினூடே கப்பலை முசிறிக்கு ஓட்டிக்கொண்டு வந்தான். தென்மேற்குப் பருவக்காற்றின் உதவியை யவனர் அறிவதற்கு முன்பு கப்பல்களைக் கரையோரமாகச் செலுத்திக்கொண்டு வந்தனர். அதனால் நெடுங்காலம் பிரயாணஞ் செய்யவேண்டியிருந்தது. பருவக் காற்றின் உதவி கண்டுபிடித்த பிறகு யவனக் கப்பல்கள் நேரே முசிறித் துறைமுகத்துக்கு விரைவாகவும் காலதாமதம் இல்லாமலும் வரத்தொடங்கின. இந்தப் பருவக்காற்றுக்கு ஹிப்பலஸ் என்ற பெயரை (அதைக் கண்டுபிடித்த ஹிப்பலஸ் என்பவன் பெயரை) யவனர் சூட்டினார்கள்.

யவனக் கப்பல்கள் பவழம், கண்ணாடி, செம்பு, தகரம், ஈயம் முதலான பொருள்களைக் கொண்டுவந்து முசிறியில் இறக்குமதி செய்து, இங்கிருந்து பல பொருள்களை ஏற்றுமதி செய்து கொண்டு போயின. ஏற்றுமதியான பொருள்களில் முக்கியமானதும் அதிகமாக இருந்ததும் மிளகுதான். யவனர் மிளகை ஏராளமாக ஏற்றுமதி செய்துகொண்டு போனார்கள். உரோம் நாட்டில் மிளகு பெரிதும் விரும்பி வாங்கப்பட்டது. யவனர் மிளகை ஆவலோடு விரும்பி வாங்கினபடியால் அதற்கு 'யவனப் பிரியா' என்று பெயர் உண்டாயிற்று. பெரிய யவனக் கப்பலில் வாணிகர் பொன்னைக் கொண்டுவந்து விலையாகக் கொடுத்து மிளகை வாங்கிக்கொண்டு போனார்கள். தாயங்கண்ணனார், யவனர் பொன்னைக் கொடுத்து மிளகை ஏற்றிக்கொண்டு போனதைக் கூறுகிறார்.

சுள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி (அகம் 149 : 8-11)

(சுள்ளியம் பேரியாறு - பெரியாறு; நன்கலம் - நல்ல மரக்கலம்; கறி - மிளகு)

முசிறித் துறைமுகம் ஆழமில்லாமல் இருந்தபடியால் யவனரின் பெரிய கப்பல்கள் கரைக்கு வரமுடியாமல் கடலில் தூரத்திலேயே நின்றன. ஆகவே, தோணிகளில் மிளகை ஏற்றிக் கொண்டுபோய் யவனக் கப்பல்களில் ஏற்றிவிட்டு அதன் விலையாகப் பொன்னை வாங்கிக்கொண்டு வந்தார்கள். பரணர் இதை இவ்வாறு கூறுகின்றார்.

மனைக்குவைஇய கறிமூடையால்
கலிச் சும்மைய கரைகலக்குறுந்து
கலந்தந்த பொற்பரிசம்
கழித் தோணியாற் கரைசேர்க்குந்து
....
முழங்குகடல் முழவின் முசிறி (புறம் 343 : 3-10)

(மனைக்குவைஇய - வீடுகளில் குவித்து வைக்கப்பட்ட; கறி மூடை - மிளகு மூட்டை; கலம்தந்த - யவன மரக்கலங்கள் கொண்டு வந்த; பொற்பரிசம் - விலையாகிய பொன்)

கிரேக்கரும் ரோமரும் மட்டும் மிளகை வாங்கவில்லை. அக்காலத்தில் உலகத்திலே எல்லா மக்களும் மிளகை வாங்கினார்கள். அக்காலத்தில் மிளகாய் கிடையாதபடியால் எல்லாரும் மிளகை உணவுக்காகப் பயன்படுத்தினார்கள். பாரத நாட்டு மக்களும் மிளகைப் பயன்படுத்தினார்கள். முசிறித் துறைமுகத்திலிருந்து மிளகு கொண்டுபோகப்பட்டபடியால் மிளகுக்கு 'மரிசி' என்று பெயர் உண்டாயிற்று. முசிறி என்னும் பட்டினத்தின் பெயர்தான் மரிசி என்று மருவிற்று. உலகப் புகழ் பெற்றிருந்த முசிறித் துறைமுகப்பட்டினம் கி.பி. 14ஆம் நூற்றாண்டின் இடையில் வெள்ளப்பெருக்கினால் அழிந்துவிட்டது. கி.பி. 1341இல் பெய்த பெருமழையின் காரணமாகப் பேரியாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு முசிறிப் பட்டினம் வெள்ளத்தில் மூழ்கி மறைந்து போயிற்று. அதனால், அதனையடுத்துப் புதிய காயல்களும் துருத்திகளும் (மணல் தீவு) ஏற்பட்டன. முசிறித் துறைமுகம் முழுகிப்போனபடியால் அதற்கு அருகில் பிற்காலத்தில் கொச்சித் துறைமுகம் ஏற்பட்டது.

குறிப்பு: முசிறிப் பட்டினத்துக்கு முயிரிக்கோடு என்றும் மகோதை என்றும் மகோதைப் பட்டினம் என்றும் சங்க காலத்துக்குப் பிறகு பெயர் கூறப்பட்டது.

வைக்கரை

இது முசிறிக்குத் தெற்கேயிருந்த துறைமுகப்பட்டினம். கோட்டயத்துக்கு அருகிலே இருந்தது. இந்தத் துறைமுகத்தைத் தாலமி என்பவர் பக்கரே (Bakarei) என்று கூறுகிறார். இந்தத் துறைமுகத்தைப் பற்றி அதிகமாக ஒன்றும் தெரியவில்லை.

மேல்கிந்த

தாலமி என்பவர் இதை மேல்கிந்த (Molkynda) என்றும், *பெரிபுளூஸ்* என்னும் நூல் நெல்கிந்த என்றும், பிளைனி என்பவர் நியாசிந்த என்றும் கூறுகின்றனர். தமிழில் இதை என்ன பெயரிட்டுக் கூறினார்கள் என்பது தெரியவில்லை. இது வைக்கரைக்குத் தெற்கே இருந்தது. இதைப் பற்றியும் ஒன்றும் தெரியவில்லை.

விழிஞம்

இலங்கொன் (Elankon) என்னும் துறைமுகப்பட்டினத்தைத் தாலமி என்னும் யவனர் கூறியுள்ளார். இது ஆயோய் (ஆய்) நாட்டில் இருந்ததென்று கூறுகின்றார். ஆய் நாடு பாண்டிய நாட்டில் இருந்தது. பொதிகை மலையைச் சூழ்ந்திருந்தது ஆய்நாடு. ஆய் மன்னர் பாண்டியருக்குக் கீழடங்கிச் சிற்றரசராக இருந்தார்கள். ஆய் நாட்டில் இருந்த துறைமுகத்தைத் தாலமி இலங்கொன் என்று குறிப்பிடுவது விழிஞம் என்னும் துறைமுகப்பட்டினமாகும். விழிஞம் மிகப் பழமையான சரித்திரப் புகழ்பெற்ற துறைமுகப்பட்டினம்.

8. இலங்கைத் துறைமுகங்கள்

மணிபல்லவம் (ஜம்புகொலபட்டினம்)

மணிபல்லவம் என்றும் ஜம்புகொலபட்டினம் என்றும் பெயர் பெற்ற மிகப் பழைய துறைமுகப்பட்டினம் இலங்கையின் வடகோடியில் இருந்தது. இது இப்போதைய யாழ்ப்பாணத்துக்கு வடக்கே இருந்த ஒரு சிறு தீவு. மணிமேகலைக் காவியம் இதை மணிபல்லவம் என்றும் இலங்கைப் பாலி மொழி நூல்கள் ஜம்புகொலபட்டினம் என்றும் கூறுகின்றன. சம்பில் துறை என்றும் இது கூறப்பட்டது. அக்காலத்தில் பேர் போன துறைமுகப்பட்டினமாக விளங்கிய இங்கு வாணிகப் பொருள்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் இடமாக இல்லை. கப்பல் போக்குவரத்துக்குரிய துறையாகவும், தமிழ் நாட்டிலிருந்து கிழக்கே நெடுந்தூரம் போகிற கப்பல்கள் வந்து தங்கி குடிநீர் எடுத்துக்கொள்ளும் இடமாகவும் இருந்தது. இத்துறைமுகத்திலிருந்து தெற்கே இலங்கையின் அக்காலத்துத் தலைநகரமான அநுராதபுரத்துக்கு (அநுரைக்கு) நெடுஞ்சாலையிருந்தது.

இலங்கையை யரசாண்ட தேவனாம்பிரிய திஸ்ஸன் (கி.மு. 247-97) என்பவர் இந்தியாவை அக்காலத்தில் அரசாண்ட அசோகச் சக்ரவர்த்தியிடம் தூதுக் குழுவை அனுப்பினபோது அத்தூதுக்குழு மணிபல்லவத் துறைமுகத்திலிருந்து கப்பலேறிப் புறப்பட்டது. புறப்பட்டு ஏழு நாள் வடக்கே கடற்பிராயணஞ் செய்து தாமலித்தி துறைமுகத்தையடைந்து அங்கிருந்து கங்கையாற்றில் புகுந்து பாடலிபுரத்துக்குச் சென்று அசோகச் சக்ரவர்த்தியை கண்டது (*மகாவம்சம்* XI : 23-24). பிறகு, மீண்டும் அதே வழியாகக் கப்பலில் பிரயாணஞ் செய்து ஜம்புகொல பட்டினத்தையடைந்தது (*மகாவம்சம்* XI : 33).

அசோகச் சக்கரவர்த்தி புத்தகயாவிலிருந்த போதிமரத்தின் கிளையை வெட்டிச் சங்கமித்திரையின் தலைமையில் இலங்கைக்கு அனுப்பினபோது சங்கமித்திரையும் அவருடைய பரிவாரமும் போதி (அரச) மரக்கிளையுடன் மரக்கலம் ஏறி ஜம்புகொலபட்டினத்துக்கு வந்து இறங்கினர் (*மகாவம்சம்* XIX : 23). தேவனாம்பிரிய திஸ்ஸன் அமைச்சர்களுடனும் பரிவாரங்களோடும் ஜம்புகொல துறைக்கு அருகில் பன்னசாலை (பர்ணசாலை - ஓலைக் கொட்டகை) அமைத்துக்கொண்டு

அங்குத் தங்கியிருந்து போதி மரக்கிளையையும் சங்க மித்திரை யையும் வரவேற்றான். அவன் தங்கியிருந்த இடம் சமுத்த பன்ன சாலை (சமுத்திர பர்ணசாலை) என்று பெயர் பெற்றது (மகாவம்சம் XIX : 26). பிறகு அந்த அரசன் அந்த இடத்தில் மண்டபம் கட்டினான். (மகாவம்சம் XIX : 27, 28). போதி மரக்கிளையுடன் அனுப்பப்பட்ட எட்டு போதிமரக் கன்றுகளில் ஒன்றை அவன் அந்த இடத்தில் நட்டான் (மகாவம்சம் XIX : 60). பிறகு இந்த போதிமரத்துக்குக் கீழே புத்தருடைய பாத பீடிகை யமைக்கப்பட்டது. இதற்கு மணிபல்லவகம் (மணிப்பலகை, மணிப்பீடம்) என்று பெயர். மணிப்பல்லவகம் என்னும் பெயர் பிற்காலத்தில் மணிபல்லவம் என்று திரிந்து வழங்கிற்று என்று தோன்றுகின்றது. இந்தப் புத்த பீடிகையை மணிமேகலைக் காவியம். மணிப் பீடிகை என்றும் தரும பீடிகை என்றும் கூறுகின்றது.

காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்திலிருந்து தெற்கே மூப்பது யோசனை தூரத்தில் மணிபல்லவத் துறை இருந்தது (மணி மேகலை 6 : 211-13). தமிழகத்திலிருந்து (சோழ நாடு, பாண்டிய நாடுகளிலிருந்து) கிழக்கே வெகுதூரத்திலிருந்த சாவக நாட்டுக்கு (கிழக்கிந்தியத் தீவுகளுக்கு) வாணிகத்தின் பொருட்டுச் சென்ற தமிழக நாவிகர்கள் மணிபல்லவத் துறையில் தங்கி அங்குப் புத்த பாத பீடிகைக்கு எதிரில் இருந்த கோமுகி என்னும் ஏரியிலிருந்து குடிநீரைக் கப்பல்களில் எடுத்துக்கொண்டு பிரயாணந் தொடங்கி னார்கள்.

பாண்டி நாட்டுக் கப்பல் வாணிகர் சாவகத் தீவுகளுக்கு வாணிகத்தின் பொருட்டுக் கடலில் சென்றபோது இடைவழியில் மணிபல்லவத் துறையில் தங்கிச் சென்றார்கள் (மணி. 14 : 79-84). கோவலன் மகள் மணிமேகலை பௌத்த மதத்தைச் சேர்ந்த பிறகு மணிபல்லவஞ் சென்று அங்கிருந்த புத்த பாத பீடிகையை வணங்கி மீண்டும் தன் ஊருக்குத் திரும்பி வந்தாள் (மணி. 25 : 120-127). இலங்கையின் வடபகுதியாகிய இப்போதைய யாழ்ப்பாண தேசம் அக்காலத்தில் நாக நாடு என்று பெயர் பெற்றிருந்தது. அந்த நாக நாட்டை அக்காலத்தில் அரசாண்ட வளைவாணன் என்னும் நாககுல மன்னன் மகள் பீலிவளை என்பவள் மணிபல்லவத் துறையிலிருந்து புறப்பட்டுக் காவிரிப்பூம்பட்டினத்துக்கு வந்து கடற்கரைச் சோலையிலே தங்கியிருந்தபோது அப்பட்டினத்தில் இருந்த வடிவேற்கிள்ளி என்னும் சோழன் அவளுடன் உறவு கொண்டான். சில காலங்கழித்து அவள் தன்னுடைய ஊருக்குத் திரும்பிப் போனாள். அங்கு அவள் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்து அக்குழந்தையை மணிபல்லவத் துறையில் வந்து தங்கின கம்பலச் செட்டி என்னும் கப்பல் வாணிகனிடம் கொடுத்து அக்குழந்தையைச் சோழனிடம் சேர்க்கும்படி அனுப்பினாள். கம்பலச் செட்டி குழந்தையுடன் கப்பலில் புறப்பட்டுக் காவிரிப்பூம்பட்டினத்துக்கு வந்தபோது இடைக்

கடலில் கப்பல் கவிழ்ந்து குழந்தை இறந்து போயிற்று (*மணி.* 25 : 178-192). சோழ நாட்டிலிருந்து சாவக நாட்டுக்குச் சென்ற மணிமேகலை சாவக நாட்டு அரசன் புண்ணியராசனைக் கண்டு அவனோடு புறப்பட்டு மணிபல்லவத்துக்கு வந்து அங்கிருந்த புத்த பாத பீடிகையை வணங்கினாள் (*மணி.* 25 : 120-127). இலங்கையிலிருந்து சோழ நாட்டுக்கும் காஞ்சிபுரத்துக்கும் வந்த பௌத்தப் பிக்குகள் ஜம்புகொலபட்டினத்திலிருந்து கப்பலேறி வந்தார்கள். இவ்வாறு எல்லாம் பழைய நூல்களில் மணிபல்லவ ஜம்புகொலபட்டினம் கூறப்படுகின்றது.

மாதிட்டை

இது இலங்கையின் மேற்குக் கரையில் மன்னார் குடாக் கடலில் பாண்டி நாட்டுக்கு எதிர்க் கரையிலிருந்த பேர்போன பழைய துறைமுகப்பட்டினம். மாதிட்டை என்பது மகாதிட்டை என்றுங் கூறப்பட்டது. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கையை யரசாண்ட முதல் சிங்கள அரசனான விசயன், பாண்டியன் மகளை மணஞ்செய்து கொண்டான். அவனுடைய எழுநூறு தோழர் களும் பாண்டி நாட்டில் பெண் கொண்டு திருமணஞ் செய்து கொண்டார்கள். மணமகளிர் பாண்டி நாட்டிலிருந்து இலங்கைக்குக் கப்பலில் சென்றபோது அவர்களும் அவர்களுடன் சென்ற பரிவாரங்களும் பதினெட்டு வகையான தொழில்களைச் செய்தவர்களின் குடும்பங்களும் மாதிட்டைத் துறைமுகத்தில் இறங்கிச் சென்றார்கள் என்று *மகாவம்சம்* கூறுகின்றது (*மகாவம்சம்* VII : 58). கி.மு. முதல் நூற்றாண்டில் இலங்கையை யரசாண்ட சோழ நாட்டுத் தமிழனாகிய ஏலேலன் (ஏலாரன்) மீது துட்டகமுனு என்னும் அரசன் இலங்கையில் போர் செய்தபோது ஏலேலனுக்கு உதவியாகச் சோழ நாட்டிலிருந்து படை திரட்டிக் கொண்டுபோன பல்லுகன் என்னும் அரசன் மாதிட்டைத் துறைமுகத்தில் இறங்கினான் (*மகாவம்சம்* XXI : 80). வட்டகாமணி அரசன் (கி.மு. 44-29) இலங்கையை யரசாண்டபோது ஏழு தமிழ் நாட்டு வீரர்கள் படையெடுத்துச் சென்று இலங்கையில் போர் செய்தார்கள். அவர்கள் (கி.மு. 29) மாதிட்டைத் துறையில் இறங்கினார்கள் என்று *மகாவம்சம்* கூறுகின்றது (*மகா.* XXXIII : 39). அந்தத் தமிழர்கள் வட்டகாமணி அரசனை வென்று சிங்கள நாட்டைப் பன்னிரண்டு ஆண்டு (கி.மு. 29-17) வரையில் அரசாண்டார்கள்.

மாதிட்டை பிற்காலத்தில் மாதோட்டம் என்று பெயர் கூறப்பட்டது. தேவாரத்தில் மாதோட்டம் என்று கூறப்படு கின்றது. மாதோட்டத்தில் பாலாவி ஆற்றின் கரைமேல் உள்ள திருக்கேதீச்சுரத்தைத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். மாதிட்டையாகிய மாதோட்டம் மிகப் பழங்காலத்திலிருந்து முக்கியமான துறைமுகப்பட்டினமாக இருந்தது.

9. விளைபொருளும் உற்பத்திப் பொருளும்

வெல்லமும் சர்க்கரையும்

சங்க காலத்திலே வெல்லமும் சர்க்கரையும் செய்யப்பட்டன. வெல்லமும் சர்க்கரையும் செய்வதற்குக் கரும்பு வேண்டும். கரும்பும் பயிர் செய்யப்பட்டது. ஆகவே, அக்காலத்தில் கரும்பும் வெல்லமும் முக்கியமான விவசாயப் பொருளும் உற்பத்திப் பொருளுமாக இருந்தன. கொங்கு நாட்டில் தகடூர் வட்டாரத்தை யரசாண்ட அதியமான் அரச பரம்பரையில் வெகு காலத்துக்கு முன்பு இருந்த ஒருவன் தேவலோகத்திலிருந்து கரும்பைக் கொண்டு வந்து தமிழ்நாட்டில் பயிர்செய்தான் என்று கூறப்படு கின்றான்.

அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்
அரும்பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும்
நீரக இருக்கை ஆழி சூட்டிய
தொன்னிலை மரபின் நின் முன்னோர் (புறம் 99 : 1-4)

என்றும்,

அரும் பெறல் அமிழ்தம் அன்ன
கரும்பு இவண் தந்தோன் பெரும் பிறங்கடையே
(புறம் 392 : 20-21)

என்றும் ஔவையார் கூறுவதிலிருந்து இதனை அறிகின்றோம். இதனால் கொங்கு நாட்டு அதியமான் அரசன் ஒருவன் ஏதோ தூர தேசத்திலிருந்து கரும்பைக் கொண்டுவந்து தமிழ்நாட்டில் முதல் முதலாகப் பயிர் செய்தான் என்று தெரிகின்றது.

தமிழ் நாடெங்கும் கரும்புப் பயிர் செய்யப்பட்ட இடம் கரும்பின் பாத்தி என்றும் கரும்பின் கழனி என்றும் கூறப்பட்டது. கரும்பைப் பழனவெதிர் என்று ஒரு புலவர் கூறியுள்ளார். (பழனம் - கழனி; வெதிர் - மூங்கில். மூங்கில் மலைகளில் தானாகவே வளர்வது. கரும்பு, கழனிகளில் பயிர் செய்யப்படுவது. மூங்கிலைப் போலவே கரும்பும் கணு உள்ளது. ஆகையால் கழனிகளில் பயிர் செய்யப்படுகிற மூங்கில் என்று கரும்பு கூறப்பட்டது.) கரும்பு தமிழ்நாடு எங்கும் பயிரிடப்பட்டது.

அகல்வயல்
கிளைவிரி கரும்பின் கணைக்கால் வான்பூ (அகம் 235 : 11-12)
அகல்வயல்
நீடுகழைக் கரும்பின் கணைக்கால் வான்பூ (அகம் 217 : 3-4)
விரிபூங் கரும்பின் கழனி (2ஆம் பத்து 3 : 13)
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பு (குறுந். 85 : 4)

கரும்பைச் சாறு பிழியும் எந்திரங்களும் கருப்பஞ்சாற்றை வெல்லங் காய்ச்சும் ஆலைகளும் ஊர்கள்தோறும் இருந்தன. பாண்டி நாட்டுத் தேனூரில் கரும்பைச் சாறு பிழியும் எந்திரமும் வெல்லங் காய்ச்சும் ஆலையும் இருந்தன.

கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும்
தேர்வண் கோமான் தேனூர்

என்று ஐங்குறுநூறு கூறுகின்றது.

வெல்லத்துக்கு விசயம் என்று பெயர் கூறப்பட்டது. வெல்லக்கட்டியைச் சுருக்கமாகக் கட்டி என்றும் கூறினார்கள். வெல்லம் 'கரும்பின் தீஞ்சேறு' என்றும் கூறப்பட்டது.

எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை
விசயம் அடூஉம் புகைசூழ் ஆலைதொறும்
கரும்பின் தீஞ்சாறு விரும்பினர் பெறுமின்
(பெரும்பாண். 260-261)

என்றும்,

ஆலைக் கலமரும் தீங்கழைக் கரும்பே!
(மலைபடுகடாம் 119)

என்றும்,

மழை கண்டன்ன ஆலைதொறும் ஞெரேரெனக்
கழைகண் உடைக்கும் கரும்பின் ஏத்தமும்
(மலைபடுகடாம் 340-341)

என்றும் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

திருவிழாக் காலத்தில் வீடுகளை அலங்கரித்தபோது வாழை மரத்தையும் கருப்பங் கழிகளையும் கட்டி அலங்காரம் செய்தார்கள்.

காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பும் நடுமின்
(மணிமேகலை 1 : 46-47)

வெல்லத்தை மக்கள் அதிகமாகப் பயன்படுத்தியமையால் வெல்லங் காய்ச்சும் தொழிலும் கரும்பு பயிரிடும் விவசாயமும் தமிழகத்தில் சிறப்பாக நடந்தன.

வெல்லம் சர்க்கரை விற்ற வாணிகருக்கு பணித வாணிகர் என்பது பெயர். மதுரைக்குப் பதின்மூன்று கல் தூரத்தில் அழகர் மலை என்னும் மலையும் கோவிலும் உள்ளன. அழகர்மலைக்கு அருகே கிடாரிப்பட்டி என்னும் ஊருக்கு அருகில் இந்த மலையின் மேல் இயற்கையாக அமைந்த ஒரு குகை இருக்கின்றது. இந்தக் குகையில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் பௌத்த, ஜைன மதத்து முனிவர்கள் இருந்து தவஞ் செய்தார்கள். அந்த முனிவர்கள் தங்குவதற்காக அந்தக் குகையைச் செப்பஞ் செய்து குகைக்குள் கற்படுக்கைகளைச் சில செல்வர்கள் அமைத்தார்கள். கற்படுக்கைகளை யமைத்தவரின் பெயர்கள் அக்குகையிலே பிராமி எழுத்தினால் எழுதப்பட்டுள்ளன. அப்பெயர்களில் ஒருவர் பெயர் பணித வாணிகன் நெடுமூலன் என்று எழுதப்பட்டிருக் கின்றது (*M.E.R.* No. 75 of 1910). பணித வாணிகன் என்றால் வெல்லக் கட்டி சர்க்கரை விற்கும் வாணிகன் என்பது பெயர். இந்தப் பிராமி எழுத்தின் அமைப்பைக் கொண்டு இது கிருத்துவுக்கு முன்பு இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதென்று ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுகிறார்கள். எனவே, அந்தப் பணித வாணிகன் நெடுமூலன் 2200 ஆண்டுகளுக்கு முன்னே கடைச்சங்க காலத்தில் இருந்தவன் என்பது தெரிகின்றது.

அந்தக் காலத்தில் ஐரோப்பாக் கண்டத்தில் வாழ்ந்தவர் களுக்குக் கரும்பும் கரும்புக்கட்டியும் தெரியாது. அவர்கள் தேனையுண்டனர். தேனும் போதிய அளவு கிடைத்திருக்காது; கி.பி. 15ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியருக்குக் கரும்பும் வெல்லமும் தெரிந்தன. ஐரோப்பாவில் விளைந்த பீட்ரூட் கிழங்கிலிருந்து சர்க்கரையைக் காய்ச்சும் விதத்தை அவர்கள் 18ஆம் நூற்றாண்டில் அறிந்தனர். பாரத நாட்டிலும் தமிழகத்திலும் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே கரும்பும் கரும்புக் கட்டியும் தெரிந்திருந்தன. தமிழகத்தில் கரும்புப் பயிர் செய்வதும் கரும்புக் கட்டி காய்ச்சுவதும் சங்க காலம் முதல் நடைபெற்று வருகின்றன.

கள்ளும் மதுவும்

ஆதிகாலம் முதல் உலகமெங்கும் மதுவும் கள்ளும் அருந்தப் பட்டன. தமிழகம் உட்பட பாரத நாடு முழுவதும் அக்காலத்தி லிருந்து மதுபானம் அருந்தப்படுகின்றது. தமிழ்நாட்டிலே எல்லாத் தரத்து மக்களும் கள்ளையும் மதுவையும் அருந்தி னார்கள் என்பதைச் சங்கச் செய்யுட்களிலிருந்து அறிகின்றோம். முடியுடை மன்னரும் குறுநில அரசரும் புலவர்களும் போர் வீரர்களும் ஆண்களும் பெண்களும் செல்வரும் வறியவரும் எல்லோரும் மது அருந்தினார்கள். பௌத்த, சமண மதத்தாரும் திருவள்ளுவர் போன்ற அறிஞர்களும் கள்ளுண்பதைக் கண்டித்த போதிலும் மக்கள் கள்ளையும் மதுவையும் அருந்தி வந்ததைச்

சங்கச் செய்யுட்கள் சான்று கூறுகின்றன. இருக்கு வேதம் கூறுகிற 'சோமயாக'த்தைத் தமிழ்நாட்டு ஆரியப் பிராமணர் தமிழ்நாட்டில் செய்ததாகச் சான்று இல்லை. ஆனால், வேள்வி (யாகம்) செய்து மது, மாமிசம் அருந்தியதைச் சங்கச் செய்யுட்கள் கூறுகின்றன. சங்க காலத்தில் தமிழகத்தில் நடக்காத சோம யாகத்தைப் பிராமணர் பிற்காலத்தில் பக்தி இயக்கக் காலத்தில் பெரு வாரியாகச் செய்தனர். சோம பானத்தைக் கொண்ட சோம யாகம் செய்து சோமயாஜி என்று பெயர் பெற்ற நூற்றுக்கணக்கான சோமயாஜிப் பிராமணரைப் பாண்டியர் செப்பேடுகளும் பல்லவர் செப்பேடுகளும் கூறுகின்றன. சோமயாஜிப் பார்ப்பனன் ஒருவன் சோம பானத்தைக் குடித்துக்குடித்துத் தம்முடைய மனத்தைச் சுத்தப்படுத்திக்கொண்டதாக (மனோ அத்தர் ஆகியதாக!) ஒரு பாண்டியச் செப்பேட்டுச் சாசனம் கூறுகின்றது (தளவாய்புரச் செப்பேடு, வரி 138). ஆனால், நம்முடைய இப்போதைய ஆய்வு சங்க காலத்தோடு மட்டும் நிற்கிறபடியால் அந்த ஆராய்ச்சிக்குப் போகவேண்டியதில்லை.

சங்க காலத்துத் தமிழகத்திலே கள்ளும் மதுவும் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால், அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி யாகவில்லை. உள் நாட்டிலேயே செலவாயின. கள், தேறல், தோப்பி, பிழி, நறவு, மகிழ், மட்டு முதலான பெயர்கள் மதுபானங் களுக்குப் பெயராகக் கூறப்பட்டுள்ளன. 'தெண் கட்டேறல்' (அகம் 336 : 6), 'பாப்புக் கடுப்பன்ன தோப்பி' (அகம் 348 : 7), 'பாம்பு வெகுண்டன்ன தேறல்' (சிறுபாண். 237), 'தண்கமழ் தேறல்' (புறம் 24), 'மணங் கமழ் தேறல்' (மதுரை. 780), 'பூக்கமழ் தேறல்' (பொருநர். 157), 'இன்களி நறவு' (அகம் 173 : 16), 'தீந்தண் நறவம்' (புறம் 292), 'மண நாறு தேறல்' (புறம் 397 : 14), 'அரவு வெகுண்டன்ன தேறல்' (புறம் 736 : 14), 'மகிழ்தரல் மரபின் மட்டு' (புறம் 390 : 16) என்று சங்கச் செய்யுட்கள் மதுபானங்களைப் புகழ்கின்றன.

தென்னை, பனை மரங்களிலிருந்து கள் இறக்கப்பட்டது. நெல், தினை முதலான தானியங்களிலிருந்து மது வகைகள் உண்டாக்கப்பட்டன. 'கொழு மடல் தெங்கின் விளைபூந்தேறல்' (மணி. 3 : 89) என்று தென்னங்கள் கூறப்படுகின்றது. 'இரும்பனம் தீம்பிழி' (குற். 38 : 3) என்றும், 'பிணர்ப்பெண்ணைப் பிழி' (பட்டினப். 89) என்றும், 'நுளை மகள் அரித்த பழம்படு தேறல்' (சிறுபாண். 58) என்றும், 'இரும்பனம் தீம்பிழியுண்போர் மகிழும்' (குற். 38 : 8) என்றும் பனங்கள் கூறப்படுகின்றது.

நெல், தினை முதலான தானியங்களிலிருந்தும் மதுபானங்கள் உண்டாக்கப்பட்டன. இவற்றிற்குத் தோப்பிக் கள் என்று பெயர் கூறப்பட்டது. இவற்றை வீடுகளில் காய்ச்சினார்கள். 'இல்லடு கல்லின் தோப்பி' (பெரும்பாண். 142). 'துகளற விளைந்த தோப்பி' (அகம் 205) சாடிகளில் தோப்பிக்கள் காய்ச்சப்பட்டன. 'வல்வாய்ச்

சாடியின் வழைச்சற விளைந்த வெந்நீரரியல் விரலை நறும்பிழி' (பெரும்பாண். 281). என்று கூறப்படுகின்றது. 'தினைக் கள் உண்ட தெளிகோல் மறவர்' (அகம் 284 : 8) என்று தினையரிசிக் கள் கூறப்படுகின்றது.

மலை நாடுகளில் இருந்த குறவர் அங்குக் கிடைத்த பொருள் களிலிருந்து மதுவை உண்டாக்கிக்கொண்டார்கள். மலையுச்சியில் மலைப்பாறைகளில் மலைத் தேன் கிடைத்தது. மலைகளிலும் மலைச் சாரல்களிலும் பலா மரங்களும் பலாப் பழங்களும் கிடைத்தன. மலைகளில் மூங்கில் புதர்கள் வளர்ந்தன. குறவர் பலாச்சுளைகளிலிருந்து ஒரு வகையான மதுபானத்தை உண்டாக்கினார்கள். 'தீம்பழப் பலவின் சுளைவிளை தேறல்' (அகம் 128 : 3, 182 : 3). மூங்கிற் குழாய்களில் மலைத் தேனைப் பெய்து வாயை யடைத்து நிலத்தில் புதைத்து வைத்து ஒரு வித மதுபானத்தை யுண்டாக்கினார்கள். 'வேய்பெயல் விளையுள் தேக்கட்டேறல், குறைவின்றிப் பருகி நறவு மகிழ்ந்து' (மலைபடுகடாம் 171-172; வேய் - மூங்கில்), 'திருந்தமை விளைந்த தேக்கட்டேறல், (அமை - மூங்கில் – மலைபடு. 523), 'நிலம் புதைப்பழுநிய மட்டின் தேறல்' (புறம் 120 : 12) 'வாங்கு அமைப்பழுநிய தேறல், (புறம் 129 : 2; அமை - மூங்கில்), 'ஆம்பணை விளைந்த தேக்கட்டேறல்' (அகம் 368 : 14; பணை - மூங்கில்); 'அமை விளை தேறல் மாந்திய கானவன்' (சிலம்பு 27 : 217). பாரியின் பரம்பு மலையில் இருந்தவர்களும் மூங்கிற் குழையில் தேனைப் பதப்படுத்தி மதுவாக்கி உண்டனர். 'நிலம் புதைப் பழுநிய மட்டின் தேறல்' (புறம் 120 : 12).

மலைவாழ் குறவர் பலாச் சுளையையும் தேனையும் கலந்து மூங்கில் குழையில் பெய்துப் பதப்படுத்திய மதுவை உண்டு மகிழ்ந்தனர்.

தேன்தேர் சுவைய திரளமை மாத்துக்
கோடைக் கூழ்த்த கமழ் நறுந் தீங்கனி
பயிர்புறப் பலவின் எதிர்சுளை யளைஇ
இறாலொடு கலந்த வண்டுமூசு அரியல்
நெடுகண் ஆடமைப் பழுநிக் கடுந்திறல்
பாப்புக்கடுப் பன்ன தோப்பிவான் கோட்டுக்
கடளோங்குவரைக் கோக்கிக் குறவர்
முறித்தழை மகளிர் மடுப்ப மாந்தி (அகம் 348 : 2-9)

ரோமாபுரியிலிருந்து வாணிகத்துக்காக வந்த யவனர் மதுபானத்தையும் கொண்டு வந்தார்கள். அது திராட்சைப் பழச் சாற்றினால் செய்யப்பட்ட கொடிமுந்திரிச் சாறு (wine). அது விலையதிகமாகையால் அரசர்கள் மட்டும் வாங்கியருந்தினார்கள். இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய பாண்டியன் நன்மாறனை நக்கீரர்

வாழ்த்தினபோது, யவனர் தந்த தேறலை உண்டு மகிழ்ந்திருப் பாயாக என்று வாழ்த்தினார்.

யவனர்
நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி ஓங்குவாள் மாற (புறம் 56 : 18-21)

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனை மாங்குடி மருதனார் வாழ்த்திய போதும், 'மணங்கமழ் தேறலை' உண்டு மகிழ்ந்திருப்பாயாக என்று வாழ்த்தினார்.

இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினிது உறைமதி பெரும (மதுரை. 779-81)

மாங்குடி மருதனார் இன்னொரு செய்யுளிலும் அப்பாண்டியனை அவ்வாறே வாழ்த்தினார்.

ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய
தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினி தொழுகுமதி பெரும (புறம் 24 : 31-33)

சேரமான் மாவெண்கோவும் பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியும் சோழன் இராசசூயம் வேட்ட பெருங்கிள்ளியும் ஒருங்கிருந்தபோது அவர்களை அவ்வையார்,

பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி தேறல் மாந்தி மகிழ்சிறந்து (புறம் 367 : 6-7)

இருப்பீர்களாக என்று வாழ்த்தினார். 'வேந்தர்க் கேந்திய தீந்தண் நறவம்' (புறம் 292:1).

அரிக்கமேடு என்னும் இடத்தை அகழ்ந்து பார்த்தபோது அங்கு கி.மு. முதல் நூற்றாண்டில் யவனர் (கிரேக்க ரோமர்) தங்கியிருந்த வாணிக நிலையம் கண்டுபிடிக்கப்பட்டது. அங்குக் கிடைத்த பல பொருள்களில் கிரேக்க நாட்டுச் சாடிகளும் கிடைத்தன. அந்தச் சாடிகள் உரோம் தேசத்தில் செய்யப் பட்டவை. அக்காலத்தில் யவனர் மதுபானங்களை வைப்பதற்காக உபயோகப்பட்டவை. 'யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்' என்று சங்கச் செய்யுள் கூறியதற்குச் சான்றாக இந்த யவனச் சாடிகள் உள்ளன. பாலாறு கடலில் கலக்கும் இடத்தில் தொல்பொருள் ஆய்வாளர் நிலத்தை அகழ்ந்து பார்த்தபோது அவ்விடத்தில் கிடைத்த பொருள்களுடன் யவனருடைய மதுச் சாடிகளும் கண்டெடுக்கப்பட்டன. மத்தியத் தரைக்கடல் நாடுகளில் செய்யப்பட்ட இந்த மதுச் சாடிகளுக்கு 'அம்பொரே' (Ambhorae) என்பது பெயர். வட இந்திய அரசர்களும் யவன

மதுவை வாங்கியுண்டனர். அசோகச் சக்கரவர்த்தியின் தந்தையான பிந்துசார மன்னன் யவன மதுவை வரவழைத்து அருந்தினான் என்று கூறப்படுகின்றது.

அரசர், வீரர், புலவர், மாலுமிகள், உழவர் முதலான எல்லா வகையான மக்களும் அக்காலத்தில் மது அருந்தினார்கள். அந்த மது வகைகள் தமிழ்நாட்டிலே உற்பத்தியாகி உள்நாட்டிலேயே விற்பனை ஆயின. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகவில்லை. கள்ளையும் மதுவையும் விற்றவர் பெண்டிர்.

மிளகு (கறி)

சங்க காலத்திலும் அதற்குப் பின்னரும் உணவுக்கு மிகவும் முக்கியமான பொருளாக இருந்தது மிளகு. ஆனால், மிளகு எல்லா நாடுகளிலும் உண்டாகவில்லை. சேர நாட்டிலே மலைச் சாரல் களில் (சையமலை என்னும் மேற்குத் தொடர்ச்சி மலைகளில்) மிளகுக் கொடிகள் வளர்ந்தன. சேர நாட்டில் வாழ்ந்த அக்காலத்துத் தமிழர், இக்காலத்து மலையாளிகளைப் போல, மிளகைப் பயிரிட்டு மிளகு உற்பத்தி செய்தார்கள். கிழக்கிந்தியத் தீவுகளாகிய சாவக நாட்டிலேயும் அக்காலத்தில் மிளகு உண்டாயிற்று. ஆனால், அந்த மிளகு சேர நாட்டு மிளகைப் போன்று சிறந்தவையல்ல. சேர நாட்டுக்கு வடக்கேயிருந்த துளு நாட்டிலும் (இப்போதைய தென் கன்னட மாவட்டம்) மிளகு உண்டாயிற்று. சங்க காலத்தில் சேர நாடும் துளு நாடும் தமிழ் பேசும் தமிழ் நாடாகவே இருந்தன. பிற்காலத்தில் சேர நாட்டில் பேசப்பட்ட தமிழ், மலையாள மொழியாகவும் துளு நாட்டில் பேசப்பட்ட தமிழ், துளு மொழியாகவும் மாறிப் போயின. துளு நாட்டிலும் சேர நாட்டிலும், மிளகு நன்றாக விளைந்தது. மிளகு, உணவைப் பக்குவப்படுத்துவதற்கு இன்றியமையாத பொருளாக இருந்தபடியால் அது உலகம் முழுவதும் தேவைப்பட்டது. (இக்காலத்தில் சமையலுக்கு உபயோகப்படுகின்ற மிளகாய் அக்காலத்தில் கிடையாது. அக்காலத்தில் அமெரிக்கா கண்டம் இருந்தது ஒருவருக்கும் தெரியாது. கி.பி. 15ஆம் நூற்றாண்டில் அமெரிக்கா கண்டம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு அங்கு தென் அமெரிக்காவிலிருந்து மிளகாய் கொண்டு வரப்பட்டது. இது நிகழ்ந்தது சமீப காலத்தில்தான்.) சேர நாட்டு மிளகு அக்காலத்தில் உலக முழுவதும் பேர் பெற்றிருந்தது. ஐரோப்பா கண்டத்திலிருந்த யவனர்கள் சேர நாட்டு மிளகை அதிகமாக வாங்கிக் கொண்டுபோனார்கள். அதனால், மிளகுக்கு 'யவனப்பிரியா' என்று பெயர் உண்டாயிற்று. மிளகுக்குக் கறி என்றும் மிரியல் என்றும் பெயர் உண்டு. சோழ நாட்டுக்குச் சாவக நாட்டிலிருந்து மிளகு இறக்குமதியாயிற்று என்பதைப் பட்டினப்பாலையிலிருந்து அறிகின்றோம்.

சங்கச் செய்யுட்களிலே சேர நாட்டு மிளகும் மிளகுக் கொடியும் கூறப்படுகின்றன. குடபுலத்தில் (சேர நாட்டில்) கறிக் கொடி (கறி-மிளகு) பலா மரங்களின் மேலே படர்ந்து வளர்ந்ததை நத்தத்தனார் கூறுகிறார். 'பைங் கறி நிவந்த பலவின் நீழல்' (*சிறுபாணாற்றுப்படை* அடி 43). மலைகளில் சந்தன மரங்களின் மேலேயும் மிளகுக் கொடிகள் படர்ந்து வளர்ந்தன. 'கறி வளர் சாந்தம்' (*அகம்* 2 : 6). மலைகளில் மிளகுக் கொடி வளர்ந்தது. 'கறிவளர் அடுக்கம்' (*குறுந்.* 288 : 1; அடுக்கம்-மலை). கருவூர் கதப்பிள்ளைச் சாத்தனாரும் 'கறிவளர் அடுக்க'த்தைக் கூறுகிறார் (*புறம்* 168 : 2). 'கறிவளர் சிலம்பை' ஆவூர் மூலங்கிழார் கூறுகின்றார் (*அகம்* 112 : 14; சிலம்பு மலை). மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் 'துறுகல் நண்ணிய கறியிவர் படப்பையைக் கூறுகிறார் (*அகம்* 272; 10; படப்பை - தோட்டம்). நக்கீரர் *திருமுருகாற்றுப்படையில்* (அடி 309) கறிக்கொடியைக் கூறுகின்றார்.

மிளகாய் இல்லாத அந்தக் காலத்திலே மிளகு உணவுக்கு மிகவும் பயன்பட்டது. உப்பு எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாத பொருளாக மிளகு இருந்தது. காய்கறிகளை உணவாகச் சமைத்தபோது அதனுடன் கறியையும் (மிளகை) கறிவேப்பிலையையும் பயன்படுத்தினார்கள்.

பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇ

என்று *பெரும்பாணாற்றுப்படை* (வரி 307, 308) கூறுகின்றது. நமது நாட்டில் மட்டுமன்று, உலகத்திலே மற்ற நாடுகளிலும் மிளகு தேவைப்பட்டது. ஆகவே, மிளகு வாணிகம் மிகச் சிறப்பாக நடந்தது. மேற்குத் தொடர்ச்சி மலைகளையடுத்த சேர நாட்டிலும் துளு நாட்டிலுமே மிளகு உண்டானபடியால் இந்த இடங்களிலிருந்தே மிளகு மற்ற எல்லா நாடுகளுக்கும் சென்றது. பாண்டிய நாடு, சோழ நாடு, கொங்கு நாடு, தொண்டை நாடு முதலான தமிழகத்து நாடுகளுக்கும் தமிழகத்துக்கு அப்பால் வடக்கேயுள்ள பாரத தேசத்து நாடுகளுக்கும், பாரசீகம், எகிப்து, உரோமபுரி, கிரேக்கம் முதலான தேசங்களுக்கும் சேர நாட்டு மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டது. தமிழகத்தின் மேற்குக் கரை யோரங்களில் விளைந்த மிளகு கிழக்குக் கரையோரத்திலிருந்த காவிரிப்பூம்பட்டினத்துக்கும் வண்டிகளிலும் பொதிமாடு, பொதி கழுதைகளிலும் கொண்டுவரப்பட்டது. 'காலின் வந்த கருங்கறி மூடை' என்று இதனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறுகிறார் (*பட்டினப்பாலை* அடி 186; கால் - வண்டி, பொதிமாடு முதலியன. கறி மூடை - மிளகு மூட்டை வணிகச் சாத்து - வணிகக் கூட்டம்). மிளகுப் பொதிகளைக் கழுதைகளின் முதுகின் மேல் ஏற்றிக் கொண்டு நெடுஞ்சாலை வழியே சென்றதையும் மிளகு

மூட்டைகள் பலாக்காய் அளவாக இருந்ததையும் வழியில் இருந்த சுங்கச் சாவடிகளில் அரசு ஊழியர் சுங்கம் வாங்கினதையும் அந்தப் புலவரே கூறுகிறார்.

தடவுநிலைப் பலவின் முழுமுதல் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழம் கடுப்ப மிரியல்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து
அணர்ச்செவி கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழி (பெரும்பாண். 77-81)

(பலவின் முழுமுதல் – பலா மரத்தின் அடிப்புறம்; பலாமரத்தின் அடிப்பக்கத்தில் பலாப் பழங்கள் காய்ப்பது இயல்பு; கடுப்ப - போல; மிரியல் - மிளகு, கறி; நோன் புறம் - வலிமையுள்ள முதுகு; சாத்து - வணிகக் கூட்டம்; உல்கு -சுங்கம், சுங்கச்சாவடி.)

காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் மிளகு மூட்டைகள் தரைவழியாக வந்தன என்று கூறப்படுவதனால், இந்த மிளகு மூட்டைகள் மற்ற பொருள்களோடு வெளிநாடுகளுக்குக் கப்பலில் ஏற்றியனுப்பப்பட்டன என்று கருதவேண்டியிருக்கின்றது.

அரபு தேசத்து அராபியர் பழங்காலத்தில் தமிழகத்தின் மேற்குக் கடற்கரைத் துறைமுகப்பட்டினங்களுக்கு வந்து மிளகை வாங்கிக் கொண்டுபோய் எகிப்து, உரோமாபுரி முதலான மத்திய தரைக்கடல் பிரதேசங்களில் விற்றனர். கி.மு. முதல் நூற்றாண்டில் யவனர் (கிரேக்கரும் உரோமரும்), அராபியரிடமிருந்து மிளகு வாணிகத்தைக் கைப்பற்றினார்கள். அவர்கள் நேரடியாகத் தாங்களே கப்பல்களைச் சேர நாட்டுத் துறைமுகப்பட்டினங்களுக்குக் கொண்டுவந்து, முக்கியமாக மிளகையும் அதனுடன் மற்ற பொருள்களையும் ஏற்றிக்கொண்டு போனார்கள். அவர்கள் முக்கியமாக முசிறித் துறைமுகப்பட்டினத்துக்கு வந்தனர். அவர்கள் முசிறியை முசிறிஸ் (Muziris) என்று கூறினார்கள். கி.மு. முதல் நூற்றாண்டில் தொடங்கின யவனரின் கப்பல் வாணிகம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையில் நடந்தது. யவனர்கள் கிரேக்க மொழியில் அக்காலத்தில் எழுதி வைத்த செங்கடல் வாணிபம் *(Periplus of Eritherian sea)* என்னும் நூலிலும் பிளைனி என்பார் எழுதிய நூலிலும் யவன – தமிழக் கடல் வாணிபச் செய்திகள் கூறப்படுகின்றன. யவனர்கள் தமிழகத்துக்கு வந்து சேர நாட்டு மிளகையும் கொங்கு நாட்டு நீலக் கல்லையும் பாண்டி நாட்டு முத்தையும் வாங்கிக்கொண்டு போனார்கள்.

யவன வாணிகர் மரக்கலங்களில் வந்து பொற்காசுகளைக் கொடுத்து மிளகை வாங்கிக்கொண்டு போனதை அக்காலத்தில் நேரில் கண்ட தாயங்கண்ணனாரும் பரணரும் கூறுகிறார்கள்:

சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க

யவனர் தந்த விளைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி (அகம் 149 : 8-11)

என்று தாயங்கண்ணனார் கூறுகிறார். சேரர்களுடைய முசிறிப் பட்டினத்துக்கு யவன வாணிகர் வந்ததையும் அவர்களுடைய 'வினைமாண் நன்கலம்' அழகாக இருந்ததையும் அவர்கள் பொற் காசுகளைக் கொடுத்து மிளகை வாங்கிக்கொண்டு போனதையும் இவர் கூறுவது காண்க.

சேர நாட்டில் விளைந்த மிளகை வீடுகளில் மூட்டைக் கட்டி வைத்தார்கள். யவனக் கப்பல்கள் வந்தபோது மிளகு மூட்டை களைப் படகுகளில் ஏற்றிக்கொண்டு கழிகளின் வழியே ஆற்றில் சென்று துறைமுகத்தில் தங்கியிருந்த யவனக் கப்பல்களில் ஏற்றுமதி செய்து அதற்கான பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டு வந்தனர் என்று பரணர் கூறுகிறார்.

மனைக்குவைஇய கறிமூடையால்
கலிச்சும்மைய கரைகலக் குறுந்து
கலந்தந்த பொற்பரிசம்
கழித்தோணியால் கரைசேர்க்குந்து (புறம் 343: 3-6)

(மனைக்குவைய – வீடுகளில் குவித்து வைத்த; கறி மூடை – மிளகு மூட்டை; கலம் – (யவனரின்) மரக்கலம்; பொற்பரிசம் – பொற் காசு)

யவனக் கப்பல்கள் சேர நாட்டுக்கு வந்து வாணிகம் செய்தபடியால் சேர மன்னருக்குப் பொருள் வருவாய் அதிகமா யிற்று. இதனைக் கண்ட துளு நாட்டு அரசனான நன்னன் இந்த வாணிகத்தைத் தன் நாட்டில் வைத்துக்கொள்ள எண்ணினான். நன்னனுடைய துளு நாட்டில் அக்காலத்தில் முக்கியமான துறைமுகப்பட்டினமாக இருந்தது மங்கலபுரம் என்னும் மங்களூர். இந்தத் துறைமுகம் நேத்திராவதி ஆறு கடலில் கலக்கிற இடத்தில் இருந்தது. பிளைனி என்னும் யவனர் அந்தத் துறைமுகத்தை நைத்ரியாஸ் (Nitrias) என்று கூறியுள்ளார். இவர் கூறுகிற நைத்ரியாஸ் என்பது நேத்திராவதி. நேத்திராவதி ஆறு கடலில் கலக்கிற இடத்தில் மங்களூர் இருந்தபடியால் இத்துறைமுகப்பட்டினத்தை அவர் நைத்ரியாஸ் என்று கூறினார் என்று தோன்றுகின்றது, சேர நாட்டுக்கு வருகிற கப்பல்கள் துளு நாட்டு மங்களூர் துறைமுகத்தைக் கடந்துதான் வரவேண்டும். ஆனால், யவனக் கப்பல்கள் மங்களூர்த் துறைமுகத்துக்கு அதிகமாக வருவதில்லை.

யவனர் தமிழ்நாட்டுக்கு வாணிகம் செய்ய வந்தது முக்கியமாக மிளகுக்காகவே. யவனர் – தமிழர் கடல் வாணிகம் கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு

வரையில் நடைபெற்றதைச் சங்கச் செய்யுள்களிலிருந்தும் யவனரின் நூல்களிலிருந்தும் அறிகின்றோம். இந்த வாணிகச் செய்தியைத் தமிழகத்தில் ஆங்காங்கே கண்டெடுக்கப்பட்ட பழங்காசுப் புதையல்களிலிருந்து கிடைத்த உரோம தேசத்துப் பழங்காசுகள் வலியுறுத்துகின்றன.

உலக முழுவதும் அக்காலத்தில் புகழ்பெற்று இருந்த மிளகை வட இந்தியரும் உபயோகித்தனர் என்பது சொல்லாமலே அமையும். வடநாட்டார் மிளகை மரிசி என்று சொன்னார்கள். வடமொழியிலும் (சமஸ்கிருதம்) மிளகுக்கு மரிசி என்பது பெயர். மரிசி என்பது முசிறி என்பதன் திரிவு. முசிறித் துறைமுகத்திலிருந்தே மிளகு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதனால் அந்தப் பட்டினத்தின் பெயர் மிளகுக்கு ஏற்பட்டது. முசிறி என்னும் சொல் முரசி என்று திரிந்து பிறகு மரிசி என்றாயிற்று.

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் தென் அமெரிக்கா கண்டத்திலிருந்து மிளகாய் கொண்டு வரப்பட்டது. இப்போது மிளகாயும் உபயோகப்படுத்தப்படுகின்றது. ஆனால், மிளகின் பெருமையும் சிறப்பும் இன்றும் குறையவில்லை.

அறுவை (துணி)

தமிழ் நாட்டில் பருத்திப் பஞ்சு விளைந்தது. பருத்தியை நூல் நூற்று ஆடை நெய்தார்கள். ஆகவே, பருத்தி பயிரிடும் தொழிலும், பருத்தியிலிருந்து நூல் நூற்கும் தொழிலும், நூற்ற நூலைத் துணியாக நெய்யும் நெசவுத் தொழிலும் அதனை விற்கும் வாணிபத் தொழிலும் நடைபெற்றன. தமிழகத்தில் துணி விற்கப்பட்டதோடு மட்டும் அல்லாமல் வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. சங்கச் செய்யுள்களிலிருந்து அக் காலத்துப் பருத்தித் தொழிலைப் பற்றி அறிகிறோம்.

'கல் சேர்பு இருந்த கதுவாய்க் குரம்பைத் தாழி முதற் கலித்த கோழிலைப் பருத்தி' (*அகம்* 129 : 6-8) என்றும், 'பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும், புன்புலந்தழீஇய அங்குடிச் சீறூர்' (*புறம்* 324 : 7-8) என்றும், 'காஞ்சியின் அகத்துக் கரும்பருத்தியாக்கும் தீம்புனல் ஊரன்' (*அகம்* 156 : 6-7) என்றும், 'பருத்தி வேலிச் சீறூர் மன்னன்' (*புறம்* 299 : 1) என்றும் பருத்தி பயிரிடப்பட்டது கூறப்படுகின்றது. பருத்திக்காய் முற்றி முதிர்ந்து வெடித்துப் பஞ்சு வெளிப்பட்ட போது அவற்றைக் கொய்து கொண்டுபோய் வீட்டில் வைத்தார்கள். 'கோடைப் பருத்தி வீடு நிறை பெய்த, மூடைப்பண்டம் இடை நிறைந்தன்ன' (*புறம்* 393 : 12-13)

வில் அடித்துப் பஞ்சியிலிருந்து கொட்டை நீக்கப்பட்டது. கொட்டை நீக்கப்பட்ட பஞ்சு வெண்மேகம் போலக் காணப்பட்டது. 'வில்லெறி பஞ்சியின் வெண்மழை தவழும்' (*அகம்* 133 : 6) கொட்டை நீக்கிய பஞ்சை நூலாக நூற்கிறார்கள். அக்காலத்தில்

கையினாலே நூல் நூற்கப்பட்டது. நூலை நூற்றவர்கள் மகளிர். ஆண்மகன் ஆதரவு இல்லாத பெண்டிர் பஞ்சை நூலாக நூற்றார்கள். அவர்கள் இரவிலும் சிறு விளக்கு வெளிச்சத்தில் நூல் நூற்றார்கள். 'ஆளில் பெண்டிர் தாளிற் செய்த நுணங்கு நுண்பனுவல்' (*நற்றிணை* 353 : 1-2); 'பருத்திப் பெண்டின் சிறு தீ விளக்கம்' (*புறம்* 326 : 5).

நூலினால் முரட்டுத் துணிகளும் மெல்லிய துணிகளும் நெய்யப்பட்டன. குளத்தில் படரும் பாசி போன்ற (ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசிவேர் போன்ற) நூலினால் முரட்டுத் துணிகள் நெய்யப்பட்டன. நுண்மையான நூல்களினால் மெல்லிய துணிகள் நெய்யப்பட்டன. பால் ஆவி போன்ற மெல்லிய துணிகளும் பாம்புத்தோல் போன்ற அழகான துணிகளும், காகிதம் போன்ற மெல்லிய துணிகளும் பல வகையாக நெய்யப்பட்டன. 'இழை மருங்கறியா நுழை நூற் கலிங்கம்' (*மலைபடு.* 156), 'பாம்புரித் தன்ன பொன் பூங் கலிங்கம்' (*புறம்* 397 : 15), 'போதுவிரி பகன்றைப் புதுமலர் அன்ன அகன்றுமடி கலிங்கம்' (*புறம்* 393 : 17-18), 'நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து, அரவுவுரி யன்ன அறுவை' (*பொருநர்* 82-83), 'காம்பு சொலித்தன்ன அறுவை' (*சிறுபாண்.* 236). இவ்வாறு பல தரமான ஆடைகள் நெய்யப்பட்டன.

அக்காலத்துத் தமிழர் சட்டை அணியவில்லை. அரையில் ஓர் ஆடையும் தோளின் மேல் ஓர் ஆடையும் ஆக இரண்டு துணிகளை மட்டும் அணிந்தார்கள். இக்காலத்தில் உடுப்பது போல அதிகமாக ஆடைகளை அணியவில்லை. 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' (*புறம்* 189 : 5). துணியைச் சட்டையாகத் தைத்து அணியும் வழக்கமும் அக்காலத்தில் இல்லை. அரச ஊழியர்களில் முக்கியமானவர் மட்டும் மெய்ப்பை (சட்டை) அணிந்தார்கள். பாண்டிய அரசனுடைய அரசாங்கத்து ஊழியர் மெய்ப்பை (சட்டை) அணிந்திருந்தனர். பாண்டியனுடைய பொற்கொல்லன் சட்டையணிந்திருந்தான். அவனைக் கோவலன் மதுரை நகரத் தெருவில் சந்தித்தான். 'மெய்ப்பைபுக்கு விலங்கு நடைச் செலவிற் கைக்கோற் கொல்லனைக் கண்டனாகி' (*சிலம்பு.* 16 : 107-108). மெய்ப்பை - சட்டை. பாண்டியனுடைய தூதர்களும் கஞ்சுகம் (சட்டை) அணிந்திருந்தார்கள் (*சிலம்பு* 26 : 166-172). சேரன் செங்குட்டுவனுடைய தூதர்களும் அவர்கள் தலைவனாகிய சஞ்சயனும் தலைப்பாகையும் கஞ்சுகமும் (சட்டையும்) அணிந் திருந்தனர். 'சஞ்சயன் முதலாத் தலைக்கீடு பெற்ற, கஞ்சுக முதல்வர் ஈரைஞ்நூற்றுவர்' (*சிலம்பு.* 26: 137-138). செங்குட்டுவனுடைய ஒற்றரும் அவர்களின் தலைவனான நீலனும் கஞ்சுகம் (சட்டை) அணிந்திருந்தனர். நீலன் முதலிய கஞ்சுக மாக்கள் (*சிலம்பு* 28 : 80),

அரசாங்கத்துக்கு முக்கிய ஊழியர் தவிர, சங்க காலத்தில் மற்ற யாவரும் சட்டையணியவில்லை.

தமிழகத்திலிருந்து வெளி நாடுகளுக்கும் துணி ஏற்றுமதி யாயிற்று. பாடலிபுரம், காசி போன்ற கங்கைக்கரைப் பிரதேசங் களுக்குத் தமிழ்நாட்டுத் துணிகள் அனுப்பப்பட்டன. கவுடல் யரின் அர்த்த சாத்திரம் மாதூரம் என்னும் துணியைக் கூறுகின்றது. பாண்டி நாட்டு மதுரையிலிருந்து சென்றபடியால் அதற்கு மாதூரம் என்று பெயர் கூறப்பட்டது. அர்த்த சாத்திரம் சந்திரகுப்த மௌரியன் காலத்தில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்று கூறப்படுகின்றபடியினால் அக்காலத்தி லேயே தமிழ்நாட்டு ஆடைகள் வட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்பது தெரிகின்றது. தமிழ்நாட்டிலிருந்து ஆடைகள் சாவக நாட்டுக்கும் கிழக்கிந்தியத் தீவுகளாகிய இந்தோனேஷியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கவேண்டும். அக்காலத்தில் அந்நாடுகளில் பஞ்சும் துணியும் உற்பத்தி செய்யப்படவில்லை. ஆனால், தமிழகத்துத் துணிகள் அங்குக் கொண்டுபோகப்பட்டதற்குச் சான்றுகள் இல்லை.

தமிழர் கலிங்க தேசத்துக்குக் கி.மு. மூன்றாம் நூற்றாண்டி லேயே சென்று வாணிபம் செய்தனர் என்று ஹத்திகும்பாக் குகைச் சாசனம் கூறுகின்றது. கலிங்க நாட்டுக்குச் சென்று வாணிகஞ் செய்த தமிழர் அங்கிருந்து பருத்தியாடைகளைத் தமிழகத்துக்குக் கொண்டு வந்தனர். கலிங்க நாட்டிலிருந்து வந்த ஆடைக்குக் கலிங்கம் என்று பெயர் கூறப்பட்டது. தமிழகத்தில் கலிங்க ஆடைகள் அதிகமாக விற்கப்பட்டன. கலிங்கம் துணிகளுக்குச் சிறப்புப் பெயராக வழங்கப்பட்டது. கலிங்கம் என்ற பெயர் பிற்காலத்தில் எல்லாத் துணிகளுக்கும் பொதுப் பெயராக வழங்கப்பட்டது. சங்கச் செய்யுட்களில் கலிங்கம் என்னும் பெயர் பொதுவாக எல்லாத் துணிகளுக்கும் வழங்கப் பட்டதைக் காண்கின்றோம்.

தமிழ்நாட்டில் அக்காலத்திலும் பட்டாடைகள் உடுத்தப் பட்டன. செல்வர் பருத்தியாடையும் பட்டாடையும் அணிந் தார்கள். 'பட்டு நீக்கி துகில் உடுத்தும்' என்று பட்டினப்பாலை (அடி 105) கூறுகின்றது. 'கொட்டைக் கரைய பட்டுடை' என்று பொருநர் ஆற்றுப்படை (அடி 155) கூறுகின்றது. 'அரத்தப் பூம்பட்டு அரைமிசை உடீஇ' என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது (சிலம்பு 4 : 86). பட்டுத்துணி தமிழகத்தில் உற்பத்தியாகவில்லை. அந்தக் காலத்திலே பட்டு சீன நாட்டில் மட்டும் உற்பத்தியாயிற்று. வேறெங்கும் அக்காலத்தில் உற்பத்தியாகவில்லை. சீனர்கள் பட்டுத்துணியைச் சாவக நாட்டுக்குக் கொண்டுவந்து விற்றார்கள். வாணிகத்துக்காகச் சாவக நாட்டுக்குச் சென்ற தமிழர் அங்கிருந்த பட்டுத்துணிகளைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தார்கள்.

தமிழர்களிடமிருந்து பட்டுத் துணிகளை யவனர் வாங்கிக் கொண்டு போனார்கள். சீன நாட்டுப் பட்டு சாவகத் தீவுக்கு வந்து, அங்கிருந்து தமிழகத்துக்குக் கொண்டுவரப்பட்டு, இங்கிருந்து யவன நாட்டுக்குக் கொண்டு போகப்பட்டது. (பாரசீகம், எகிப்து, ரோமாபுரி முதலான நாடுகளுக்குப் பட்டுத் துணி சீன நாட்டிலிருந்து மத்திய ஆசியா வழியாகவும் தரை வழியாகச் சென்றது.) பாண்டி நாட்டுத் தொண்டித் துறைமுகத்திலே கிழக்குக் கடலிலிருந்து (சாவக நாட்டிலிருந்து) வந்த பொருள் களில் பட்டுத் துணியும் கூறப்படுகின்றது.

ஓங்கிரும் பரப்பின்
வங்க வீட்டத்துத் தொண்டியோர் இட்ட
அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்
தொகு கருபூரமும் சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து (*சிலம்பு* 14 : 106-110)

இவை கிழக்குக் கடல்களிலிருந்து கொண்டல் (கிழக்குக்) காற்றின் உதவியினால் கப்பல்களில் வந்தவை. இவற்றில் துகில் என்பது பட்டுத்துணி. கிழக்கிலிருந்து வந்த பட்டைத் தமிழ்நாட்டிலிருந்து அரபியரும் யவனரும் வாங்கிக்கொண்டு போய் மேற்கு நாடுகளில் விற்றார்கள்.

தமிழ்நாட்டிலுண்டான பருத்தித் துணிகளுக்குச் சிவப்பு, நீலம், மஞ்சள் முதலான சாயம் ஊட்டினார்கள். ஆனால், வெண்மையான துணிகளையே தமிழர் பெரிதும் விரும்பி னார்கள். வெள்ளையாடை சிறப்பாகவும் உயர்வாகவும் மதிக்கப் பட்டது. பிறந்த நாளாகிய வெள்ளணி நாளிலே வெள்ளாடை யுடுத்துவது சிறப்பாக இருந்தது.

சங்க காலத்திலே பருத்திப் பயிர் செய்வதும் நூல் நூற்பதும் துணி செய்வதும் ஆடை விற்பதுமாகிய தொழில் சிறப்பாக நடந்தது. துணிகளை விற்ற வணிகருக்கு அறுவை வாணிகர் என்று பெயர் கூறப்பட்டது. மதுரையில் இருந்த இளவேட்டனார் என்னும் புலவர் அறுவை வாணிகம் செய்தார். ஆகையால் அவர், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் என்று பெயர் பெற்றார். அவர் இயற்றிய பன்னிரண்டு செய்யுட்கள் சங்க இலக்கியங்களில் தொகுக்கப்பட்டுள்ளன. (*அகம்* 56, 124, 230, 254, 272, 302; *குறுந்.* 185; *நற்றிணை* 33, 157, 221, 334; *புறம்* 329).

உப்பு

'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்பது பழமொழி. உணவுக்குச் சுவை அளிப்பது உப்பு. ஆகையால் இது 'வெண்கல் அமிழ்தம்' எனப்பட்டது. ஆதிகாலத்திலிருந்து உப்பு மனிதருக்கு உணவாகப் பயன்படுகின்றது. உணவுக்கு மட்டுமல்லாமல்,

ஊறுகாய், கருவாடு (உப்புக் கண்டம்) முதலானவைக்கும் உப்பு வேண்டப்படுகின்றது. ஆகவே, உப்பை எல்லா நாடுகளிலும் உண்டாக்கினார்கள். தமிழகத்திலும் உப்பு செய்பொருளாகவும் வாணிகப் பொருளாகவும் உணவுப் பொருளாகவும் இருந்து வருகின்றது.

நெய்தல் நிலமாகிய கடற்கரை தமிழ்நாட்டைச் சூழ்ந்திருந்த படியால் ஆங்காங்கே உப்பளங்கள் இருந்தன. ஆகையால், தமிழகத்துக்கு எக்காலத்திலும் உப்புப் பஞ்சம் ஏற்பட்டதே யில்லை. உப்பளங்களில் பாத்திகள் அமைத்துக் கடல் நீரைப் பாய்ச்சி உப்பு விளைவித்தார்கள். பாத்திகளில் பாய்ச்சப்பட்ட கடல் நீர் வெயிலில் ஆவியாகிப் போய் உப்பு பூக்கும். இதுவே 'கடுவெயில் கொதித்த கல்விளை உப்பு' (நற். 345 : 8). ஏர் உழாமல் உவர் நிலத்திலே உப்பு விளைவித்தபடியால் அவர்கள் 'உவர்விளை உப்பின் உழா உழவர்' (நற். 831 : 1) என்று கூறப்பட்டார்கள்.

உப்பளங்களில் உப்பு விளைந்த பிறகு உப்பைக் குவியல் குவியலாகக் குவித்து வைத்தார்கள். பிறகு, உப்பை வாங்குவதற்கு வருகிற உப்பு வாணிகரை எதிர்பார்த்திருந்தார்கள்.

உவர்விளை உப்பின் உழாஅ உழவர்
ஓகை உமணர் வருபதம் நோக்கி
கானல் இட்ட காவற் குப்பை (நற். 331 : 1-3)

(உவர்-உவர் நிலம், உப்பளம்; உமணர்- உப்பு வாணிகர்; கானல்-கடற்கரை; குப்பை-குவியல்)

உமணர் (உப்பு வாணிகர்) மாட்டு வண்டிகளில் நெல்லை ஏற்றிக்கொண்டு போனார்கள். அக்காலத்தில் பெரிதும் பண்ட மாற்று வாணிகம் நடந்தது. ஆகையால், காசு கொடுத்து வாங்காமல் பண்டங்களை மாற்றினார்கள். நெல்லுக்கு மாற்றிய உப்பை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போனார்கள். அவர்கள் மனைவி மக்களொடு வந்து உப்பை வாங்கிக்கொண்டு குடும்பத் தோடு ஊர்ஊராக வண்டியை ஓட்டிக்கொண்டு போய் விற்றார்கள்.

தந்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து
பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி
நெடுநெறி ஒழுகை நிலவுமணல் நீந்தி
அவண் உறை முனிந்த ஓக்கலொடு புலம்பெயர்ந்து
உமணர் போகலும் (குற்றிணை 183 : 1-5)

(தந்நாடு - உமணருடைய நாடு; பிறநாடு - (இங்கு) நெய்தல் நிலம்; கொள்ளை சாற்றி - விலைகூறி; ஒழுகை - வண்டி; அவண் - அங்கே; ஓக்கல் - சுற்றம்)

உமணர் உப்பு வண்டிகளை ஓட்டிக்கொண்டு கூட்டங் கூட்டமாகச் சென்றார்கள்.

உவர்விளை உப்பின் கொள்ளை சாற்றி
அதர்படு பூழிய சேண்புலம் படரும்
ததர்கோல் உமணர் போகும் நெடுநெறிக்
கண்நிரை வாழ்க்கை (அகம் 390 : 1-4)

கடற்கரைக்கு அப்பாலுள்ள உள்நாடுகளுக்கும் மலைநாடுகளுக்கும் எருதுகள் உப்பு வண்டியை இழுத்துக்கொண்டு போயின.

கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கும்
ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்
உரனுடை நோன்தாள் பகடு (புறம் 60 : 8-9)

(கழி-உப்பங்கழி; கல்நாடு-மலைநாடு; சாகாடு-வண்டி; ஆழ்ச்சி போக்கும்-பள்ளத்திலிருந்து மேட்டின் மேல் செல்லும்; பகடு-எருது)

உமணர் ஒரே ஊரில் தங்காமல் ஊர்கள்தோறும் சென்றனர். அவர்கள் குடும்பத்தோடு நிலையா வாழ்க்கையை நடத்தினார்கள்.

உவர்விளை உப்பின் குன்றுபோல் குப்பை
மலை உய்த்துப் பகரும் நிலையா வாழ்க்கைக்
கணங்கொள் உவணர் (நற். 138 : 1-3)

பாரமான வண்டியை இழுத்துக்கொண்டு எருதுகள் மேட்டில் ஏறியும் பள்ளத்தில் இறங்கியும் செல்லும்போது வண்டியின் அச்சு முறிந்து விடுவதும் உண்டு. அதன் பொருட்டு ஆயத்தமாக சேம அச்சு கொண்டு போனார்கள் (புறம் 102 : 1-2). உமணர் பாதிரிப் பூவையும் அலரிப் பூவையும் தொடுத்துக் கட்டின பூமாலையைத் தலையில் அணிந்து காலில் செருப்பு அணிந்து கையில் தடி ஏந்திச் சென்றார்கள்.

அத்தப் பாதிரித் துய்த்தலைப் புதுவீ
எரியிதழ் அலரியொடு இடைபட விரைஇ
வண்தோட்டுத் தொடுத்த வண்டுபடு கண்ணித்
தோல்புதைச் சிற்றடிக் கோலுடை யுமணர்
(அகம் 191 : 1-4)

உமணர் ஆங்காங்கே வழியில் தங்கி உணவு சமைத்து உண்டு ஓய்வுகொண்டு மீண்டும் பிரயாணஞ் செய்தார்கள் (அகம் 159 : 1-4). சில இடங்களில் சமைக்கவும் உண்ணவும் நீர் கிடைக்காது. அவ்விடங்களை அகழ்ந்து குழி உண்டாக்கிச் சுரக்கும் நீரை உண்டனர் (அகம் 295 : 9-14). தீக்குச்சி இல்லாத காலமாகையால் அவர்கள் தீக்கடை கோலினால் தீயுண்டாக்கிச் சோறு சமைத்தார்கள் (அகம் 169 : 5-8).

போகிற வழியில் தங்கி ஊருக்குள் சென்று உப்பு விற்றார்கள். உமண ஆடவர் ஊர்க்குள் சென்று உப்பு விற்பதில்லை. உமணப்

பெண்கள் உப்பை ஊர்க்குள் கொண்டு போய் விற்றார்கள். அவர் கள் காசுக்கு உப்பு விற்கவில்லை. உப்பை நெல்லுக்கு மாற்றி னார்கள்.

நெல்லும் உப்பும் நேரே, ஊரீர்
கொள்ளீ ரோவெனச் சேரிதொறும் நுவலும்
(அகம் 390 : 8-9)

(சேரி-தெரு; நுவலும்-சொல்லும்)

கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எவ்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரிவிலைமாறு கூறலின் (அகம் 140: 5-8)

ஆறுகளும் கால்வாய்களும் உள்ள ஊர்களில் படகுகளில் உப்பை ஏற்றிக்கொண்டு போய் விற்றார்கள். உப்பை நெல்லுக்கு மாற்றி அந்த நெல்லைப் படகில் ஏற்றிக்கொண்டு போனார்கள் என்று கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறுகின்றார்.

கொழும் பல்குடிச் செழும்பாக் கத்துத்
குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு
வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணை நிலைப் புரவியின் அணைமுதற்பிணிக்கும்
கழிசூழ் படப்பை (பட்டினப்பாலை 27-32)

மாட்டு வண்டிகள் போகமுடியாத பாறைகளும் மலைகளும் மேடுகளும் உள்ள ஊர்களுக்கு உப்பு மூட்டைகளைக் கழுதை மேல் ஏற்றிக்கொண்டு போய் விற்றார்கள். அவர்கள் கூட்டமாகச் சேர்ந்து நல்ல நிமித்தம் பார்த்து வீரர்களையும் அழைத்துக் கொண்டு மலைநாடுகளுக்குப் போனார்கள். கொள்ளைக்காரர் இடைவழியில் வந்து கொள்ளையிடுவதும் உண்டு. ஆகையினால், அவர்கள் தங்களுடன் வீரர்களை அழைத்துக் கொண்டு போனார்கள்.

அணங்குடை முந்நீர் பரந்த செருவின்
உணங்குதிறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்
குடபுல மருங்கின் உய்ம்மார் புள்ளோர்த்துப்
படையமைத் தெழுந்த பெருஞ்செய் ஆடவர்
நிரைப்பரப் பொறைய நரைப்புறக் கழுதைக்
குறைக்குளம்பு தைத்த கற்பிறழ் இயவு
(அகம் 207 : 1-6)

(புள் ஓர்த்து - நன்னிமித்தம் பார்த்து; படை அமைத்து - வீரர்களை அமைத்து; கல் பிறழ் இயவு - பாறைக் கற்கள் உள்ள வழி)

பொறைமலி கழுதை நெடுநிரை தழீஇய
திருந்துவாள் வயவர் (அகம் 89 : 12-13)

உப்பு மூட்டைகள் மட்டுமல்லாமல் மிளகு முதலான வேறு பண்டங்களைச் சுமந்துகொண்டு போகக் கழுதைகளையும் அக்காலத்தில் பயன்படுத்தினார்கள்.

இல்போல் நீழல் செல்வெயில் ஒழிமார்
நெடுஞ்செவிக் கழுதைக் குறுங்கால் ஏற்றைப்
புறநிறைப் பண்டத்துப் பொறையசாக் களைந்து
(அகம் 343 : 11-13)

உப்பு உற்பத்தியும் உப்பு வாணிகமும் செம்மையாக நடந்தன. தமிழகத்துக்கு உப்பு வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாக வில்லை. தமிழ்நாட்டுக்கு வெளியே ஏற்றுமதி செய்யவும் இல்லை. தமிழகத்திலே உண்டாக்கப்பட்டுத் தமிழகத்திலேயே செலவு செய்யப்பட்டது.

வளை (சங்கு)

சங்குக்குத் தமிழ்ப் பெயர் வளை என்பது. தமிழகத்தின் மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருந்தபடியால் வளை அதிகமாகக் கிடைத்தது. சங்குகளில் இடம்புரிச் சங்கு என்றும் வலம்புரிச் சங்கு என்றும் இருவகையுண்டு. வலம்புரிச் சங்கு கிடைப்பது அருமை. ஆகையால், வலம்புரிச் சங்குக்கு விலையதிகம். சங்குகளை வளைகளாக அறுத்து வளையல் செய்தார்கள். அக்காலத்துத் தமிழ் மகளிர் எல்லோரும் சங்கு வளைகளைக் கையில் அணிந்தார்கள். கண்ணாடி வளையல் அணிவது அக்காலத்து வழக்கம் அல்ல. சங்கு வளையணிவது மங்கலமாகக் கருதப் பட்டது. அரண்மனையில் வாழ்ந்த அரசகுமாரிகள் முதல் குடில்களில் வாழ்ந்த ஏழை மகள் வரையில் எல்லோரும் அக்காலத்தில் சங்கு வளைகளை அணிந்தார்கள். ஆகவே, வளைகளை (சங்குகளை) வளையல்களாக அறுத்து வளையல் உண்டாக்கும் தொழில் அக்காலத்தில் சிறப்பாக நடந்தது. கடல்களிலிருந்து சங்குகள் எடுக்கப்பட்டன.

கொற்கைக் கடலில் முத்து உண்டானது போலவே சங்குகளும் உற்பத்தியாயின. பரதவர் கடலில் முழுகிச் சங்குகளை எடுத்தபோது, சங்கு முழங்கி ஊருக்குத் தெரிவித்தார்கள்.

இலங்கிரும் பரப்பின் ஏறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்
ஒலிதலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக்
கலிகெழு கொற்கை (அகம் 350 : 11-13)

(வலம்புரி - வலம்புரிச் சங்கு; பரதவர் - கடற்கரையில் வசிக்கும் நெய்தல் நில மக்கள்; கடலில் கப்பல் ஓட்டுவதும் முத்து, சங்குகளைக் கடலில் முழுகி எடுப்பதும் இவர்கள் தொழில்; பணிலம் ஆர்ப்ப - சங்கு முழங்க)

கொற்கைக் கடலில் மட்டுமன்று, கடலில் பல இடங்களிலும் கடலிலிருந்து சங்கு எடுக்கப்பட்டது. சங்குகளை (வலம்புரிச் சங்குகள், இடம்புரிச் சங்குகள்) சிறு வாளினால் அறுத்து அரத்தினால் அராவி அழகான வளையல்களைச் செய்தார்கள்.

வல்லோன்
வாளரம் பொருத கோணோர் எல்வளை
(நற்றிணை 77 : 8-9)

வளையல்களில் கொடிகள், பூக்கள், வரிக்கோடுகள் முதலியவை அமைத்து அழகாகச் செய்யப்பட்டன. வளையல் அறுக்கும் தொழில் ஆங்காங்கே நடந்தது. சங்கச் செய்யுள்களில் இத் தொழில் கூறப்படுகின்றது. 'அரம்போழ் அவ்வளை' (ஐங்குறுநூறு, நெய்தல் 5); 'கடற்கோடு அறுத்த அரம்போழ் அவ்வளை' (ஐங்குறு. வளைபத்து 4); 'கோடூர் எல்வளை' (ஐங்குறு. வளைபத்து 6) 'கோடூர் இலக்குவளை' (குறுந். 31 : 5; கோடு-சங்கு).

சங்குகளை வளையாக அறுத்துத் தொழில் செய்தவர்களுக்கு வேளாப் பார்ப்பான் என்று பெயர்.

வேளாப் பார்ப்பான் வாள்அரம் தும்மித்து
வளைகளைந் தொழிந்த கொழுந்து (அகம் 24 : 1-2)

வேளாப்பார்ப்பான் என்பதன் பொருள் வேள்வி செய்யாத பார்ப்பான் என்பது. அதாவது, விசுவப் பிராமணர். சங்குகளை வளையாக அறுக்கும் தொழிலும் சங்கு வளைகளை விற்கும் தொழிலும் அக்காலத்தில் சிறப்பாக நடந்தன. முக்கியமான நகரங்களில் சங்கறுக்கும் தொழில் நடந்தது. காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு வீதியில் சங்குகளை வளையல்களாக அறுக்கும் தொழில் நடந்தது. 'அணிவளை போழுநர் அகன்பெரு வீதியும்' (சிலம்பு 5-47). சோழ நாட்டு வஞ்சிமா நகரத்தில்,

விலங்கரம், பொரூஉம் வெள்வளை போழ்நரோடு
இலங்குமணி வினைஞர் இரீஇய மறுகும்
(மணிமே. 28 : 44-45)

இருந்தன.

சங்கு வளைகளை அணிவதை அக்காலத்து மகளிர் நாகரிகமாகக் கருதினார்கள். அன்றியும், அது மங்கலமாகவும் கருதப்பட்டது. கைம்பெண்கள் தவிர ஏனைச் சுமங்கலிப் பெண்கள் எல்லோரும் சங்கு வளைகளை அணிந்தார்கள். 'அணிவளை முன்கை ஆயிழை மடந்தை' (அகம் 361: 4), 'சின்னிரை

வால்வளைக் குறுமகள்' (குறுந். 189: 6), 'வளைக்கை விறலி' (புறம் 135: 4), 'வல்லோன் வாளரம் பொருத கோணேர் எல்வளை அகன்தொடி செறித்த முன்கை' (நற். 77 : 8-10) என்றெல்லாம் சங்க நூல்களில் அக்காலத்து மகளிர் வளையணிந்திருந்தது கூறப்படுகின்றது. சொக்கப் பெருமான் வளையல் விற்றதாகத் திருவிளையாடற் புராணத்தில் (வளையல் விற்ற படலம்) கூறப்படுகின்றது. இடம்புரிச் சங்கினால் செய்த வளையல்களைச் சாதாரண நிலையில் உள்ள பெண்கள் அணிந்தார்கள். வலம்புரிச் சங்குகள் விலையதிகமானபடியால் செல்வச் சீமாட்டிகளும் இராணிகளும் அணிந்தார்கள். செல்வ மகளிர் பொற்றோடு (பொன் வளையல்) அணிந்து அதனுடன் வலம்புரிச் சங்கு வளையலையும் அணிந்தார்கள். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுடைய அரசியாகிய பாண்டிமாதேவி கைகளில் தங்க வளைகளை அணிந்திருந்ததோடு வலம்புரிச் சங்குவளையையும் அணிந்திருந்தார்.

பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து
(நெடுநல்வாடை 141-142)

என்று நெடுநல்வாடை கூறுகிறது. காவிரிப்பூம்பட்டினத்திலே பேர்போன செல்வச் சீமானாக இருந்த மாநாய்கன் மகளான கண்ணகியும் வலம்புரிச் சங்கு அணிந்திருந்தாள். மதுரையில் கோவலனை இழந்து கைம்பெண் ஆனபோது கண்ணகி தன் கைகளில் அணிந்திருந்த சங்கு வளையைக் கொற்றவை கோவிலின் முன்பு தகர்த்து உடைத்தாள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. 'கொற்றவை வாயிலில் பொற்றொடி தகர்த்து' (கட்டுரைக் காதை 181; பொற்றொடி, பொலிவினையுடைய சங்குவளை – அரும்பத உரை).

மணமகன், தான் மணக்க இருக்கும் மணமகளுக்குச் சங்குவளை கொடுப்பது அக்காலத்து வழக்கம். சங்குவளை அணியும் வழக்கம் தமிழகத்தில் மட்டுமல்லாமல், பாரத நாடு முழுவதிலும் அக்காலத்தில் இருந்தது. இன்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னே சிந்துவெளியில் இருந்த ஹரப்பா நகரத்துத் திராவிட நாகரிக மகளிரும் சங்கு வளைகளை அணிந்திருந்தனர் என்பது அங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளுடன் சங்கு வளைகளும் இருந்ததானால் அறி கிறோம் (*Ancient India*, No 3, Ja 1947, p. 86). கொற்கை, காவிரிப் பூம்பட்டினம், உறையூர் முதலான ஊர்களில் நிலத்தை அகழ்ந் தெடுத்தபோது அங்கிருந்து கிடைத்த பழம் பொருள்களுடன் உடைந்து போன சங்கு வளையல் துண்டுகளும் கிடைத்தன. இதனால், சங்கச் செய்யுட்களில் கூறப்படுகிற அக்காலத்து மகளிர்

சங்குவளைகளை அணிந்திருந்தனர். என்னும் செய்தி வலியுறுகின்றது.

சங்கு முழங்குவது மங்கலமாகக் கருதப்பட்டது. கோவில்களிலும் அரண்மனைகளிலும் சங்கு ஊதுவது வழக்கம். அரண்மனைகளிலே காலை வேளையில் முரசு கொட்டியும் சங்கு முழங்கியும் அரசரைத் துயிலெழுப்பினார்கள். அரண்மனைகளில் வலம்புரிச் சங்கு காலையில் முழங்கியதை,

> தூக்கணங் குரீஇத் தூங்கு கூடேய்ப்ப
> ஒருசிறைக் கொளீஇய திரிவாய் வலம்புரி
> ஞாலங் காவலர் கடைத்தலைக்
> காலைத்தோன் றினும் (புறம் 225 : 11-14)

என்றும்,

> மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்
> வால் வெண் சங்கொடு வகைபெற் றோங்கிய
> காலைமுரசங் கனைகுரல் இயம்ப (சிலம்பு 14 : 12-14)

என்றும் கூறுவதனால் அறிகின்றோம். (கோவில் - அரண்மனை.)

பற்பல நூற்றாண்டுகளாக மகளிர் சங்கு வளைகளை அணிந்து வந்த வழக்கம் சமீபகாலம் வரையில் இருந்தது. கிபி. 18 ஆம் நூற்றாண்டு முதல், முஸ்லீம் தொடர்பு ஏற்பட்ட பிறகு சுண்ணாடி வளையல் அணியும் வழக்கம் ஏற்பட்டது. ஆகவே, பழைய சங்கு வளை அணியும் வழக்கம் பிற்காலத்தில் மறைந்து போயிற்று.

சங்க காலத்திலே கடலினடியிலிருந்து சங்கு எடுக்கும் தொழிலும் சங்குகளை வளையல்களாக அறுக்கும் தொழிலும் வளையல் விற்கும் வாணிகமும் மகளிர் வளையல் அணிந்த வழக்கமும் இருந்தன. காதுகளில் சங்குக் குழையணிவதும் விரல்களில் சங்கு மோதிரம் அணிவதும்கூட அக்காலத்து வழக்கமாக இருந்தது.

முத்து

தமிழ்நாட்டுக் கடலிலே முத்து உண்டாயிற்று. கடலிலே உண்டாகிற முத்துச் சிப்பி என்னும் ஒருவகைக் கிளிஞ்சிலில் முத்து உண்டாயிற்று. முக்கியமாக ஆறுகள் கடலில் கலக்கிற புகர் முகங்களிலே முத்துச் சிப்பிகள் அதிகமாக உண்டாயின. பாண்டி நாட்டு முத்து பேர்போனது. 'தென் கடல் பவ்வத்து முத்து' என்று புகழப்படுகின்றது.

முத்து நவரத்தினங்களில் ஒன்றாக மதிக்கப்பட்டது. ஆகவே, அது விலைமதிப்புள்ளது. அரசர்கள் 'ஏகவடம்' என்னும் முத்து மாலைகளை அணிந்தார்கள். ஏகவடம் அரசர்களுக்குரிய அடையாள அணிகளில் ஒன்று. செல்வர் வீட்டுப் பெண்களும்

அரசகுமாரிகளும் இராணிகளும் முத்து மாலைகளை அணிந் தார்கள். உரோம் தேசத்து மகளிர் தமிழ்நாட்டு முத்துக்களைப் பெரிதும் மதித்தனர். தமிழ்நாட்டுக்கு வந்து யவன வாணிகர் இங்கிருந்து வாங்கிக்கொண்டு போன பொருள்களில் முத்தும் ஒரு பொருளாக இருந்தது.

தமிழகத்து முத்துக்களில் பாண்டி நாட்டு முத்து உலகப் புகழ் பெற்றிருந்தது. கொற்கைக் குடாக் கடலில் விளைந்த முத்து சங்கச் செய்யுள்களில் புகழப்படுகின்றது. 'முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை' (*குற்.* 23 : 6); 'கொற்கையம் பெருந்துறை முத்து' (*அகம்* 27 : 9). சங்க காலத்தில் பாண்டி நாட்டின் கிழக்குக் கரையிலிருந்த கொற்கைக் குடாக் கடல் பிற்காலத்தில் மணல் தூர்ந்து மறைந்து போயிற்று. அக்கடல் உள்நாட்டில் ஐந்து மைல் ஊடுருவிக் குடாக் கடலாக அமைந்திருந்தது. அக்காலத்தில் தாமிரபரணியாறு கொற்கைக் குடாக் கடலில் சென்று விழுந்தது. அந்தப் புகர் முகத்திலே முத்துச் சிப்பிகளும், இடம்புரி வலம்புரிச் சங்குகளும் உண்டாயின. ஆறுகள் கடலில் கலக்கிற புகர் முகங்களிலே முத்துக்களும் சங்குகளும் அதிகமாக உண்டாயின. தாமிரபரணி ஆறு அக்காலத்தில் கொற்கைக் கடலில் விழுந்த புகர் முகத்திலே உண்டான முத்தைத்தான் கவுடல்யரின் *அர்த்தசாத்திரம்*, *தாம்ரபர்ணிகம்* என்று கூறுகின்றது. கொற்கைக் கடல் ஓரத்தில் தாமிரபரணி ஆறு கடலில் கலந்த இடத்தில் கொற்கைப் பட்டினம் இருந்தது. கொற்கைக் கடலில் முத்துச் சிப்பிகளும் சங்குகளும் அதிகமாகக் கிடைத்தபடியாலும் துறைமுகப்பட்டின மாக இருந்தபடியாலும் கொற்கைப் பட்டினத்தில் பாண்டிய னுடைய இளவரசர்கள் தங்கி வாழ்ந்தார்கள்.

முத்துச் சிப்பிகளையும் சங்குகளையும் மூழ்கி எடுக்கும்போது அச்செய்தி சங்கு முழங்கித் தெரிவிக்கப்பட்டது.

சிருடைய விழுச்சிறப்பின்
விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்
இலங்கு வளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நசைப் பொருந

என்று தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் கூறப்படுகின்றான் (*மதுரை.* 134- 138).

கொற்கைக் கடலில் மீன் பிடிக்கும்போது மீனுடன் முத்துச் சிப்பியும் கிடைத்தனவாம். மீன் பிடிப்போர் அச்சிப்பிகளைக் கொண்டுப்போய்க் கள்ளுக் கடையில் கொடுத்து அதற்கு மாறாகக் கள்ளை வாங்கியுண்டனர்.

பன்மீன் கொள்பவர் முகந்த சிப்பி
நாரரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும்
பேரிசைக் கொற்கை (*அகம்* 296 : 8-10)

பழயர் மகளிர் கொற்கைக் கடலில் கடல் தெய்வத்தை வணங்கிய போது முத்தையும் வலம்புரிச் சங்கையும் கடலில் இட்டு வணங்கினராம்.

பாண்டியன்

புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்றுறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து
தழையணிப் பொலிந்த கோடேந்தல்குல்
பழயர் மகளிர் பனித்துறை பரவ (அகம் 201 : 4-7)

ஒருவன் குதிரை மேல் அமர்ந்து கடற்கரையோரமாகச் சென்ற போது குதிரையின் குளம்புகளில் முத்துக்கள் தட்டுப்பட்டனவாம்.

இவர்திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர்நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை (அகம் 130 : 9-11)

உப்பு வாணிகப் பெண்கள் கொற்கைக் கடற்கரைக்கு வந்து உப்பு வாங்கினபோது அவர்கள் வளர்த்த குரங்குகளும் அவர்களின் சிறுவர்களும் கிளிஞ்சில்களின் உள்ளே முத்துக்களையிட்டுக் கிலிகிலியாடினார்களாம்!

நோன்பகட் டுமணர் ஒழுகையொடு வந்த
மகாஅர் அன்ன மந்தி மடவோர்
நகாஅர்அன்ன நளிநீர் முத்தம்
வாள்வாய் எருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கும் நல்கூர் நுசுப்பின்
உளரியல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற
கிளர்பூம் புதல்வரொடு கிலிகிலி யாடும்
தத்துநீர் வரைப்பிற் கொற்கை (சிறுபாண். 55-62)

இதிலிருந்து கொற்கைக் குடாக் கடலில் முத்துக்கள் மலிந்திருந்தன என்பது தெரிகின்றது.

மகளிர் கால்களில் அணிகிற சிலம்பு என்னும் அணியின் உள்ளே சிறுசிறு கற்களைப் பரல் கற்களாக இடுவது வழக்கம். கொற்கைக் கடலில் முத்துக்கள் அதிகமாகக் கிடைத்தபடியால் பாண்டிய அரசருடைய அரச குமாரிகள் அணிந்த சிலம்புகளிலே முத்துக்களைப் பரலாக இட்டிருந்தனர். ஆரியப்படை கடந்த அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியனுடைய அரசியாகிய பாண்டிமா தேவியின் சிலம்பினுள்ளே முத்துக்கள் பரலாக இடப்பட்டிருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது (வழக்குரை காதை 69).

தாம்ரபர்ணிகம் என்னும் முத்தை அர்த்தசாத்திரம் கூறுவது போலவே பாண்டிய கவாடகம் என்னும் முத்தையும் கூறுகின்றது.

இந்தப் பெயரே இது பாண்டி நாட்டில் உண்டானது என்பதைத் தெரிவிக்கின்றது.

சேர நாட்டுத் துறைமுகப்பட்டினமாகிய முசிறிப்பட்டினத்திலும் முத்துக்கள் கிடைத்தன. பேர்போன பெரியாறு முசிறிக்கு அருகில் கடலில் கலக்கிற இடத்தில் முத்துக்கள் உண்டாயின. அந்த முத்துக்கள் முசிறியின் ஓர் இடமாகிய பந்தர் என்னும் இடத்தில் விற்கப்பட்டன என்று *பதிற்றுப்பத்து* கூறுகின்றது. 'பந்தர் பயந்த பலர் புகழ் முத்தம்' (*பதிற்று.* 8ஆம் பத்து 4ஆம் செய்யுள்). 7ஆம் பத்து 7ஆம் செய்யுள் 'பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்', 'தெண்கடல் முத்தம்' என்று கூறுகின்றது. *பத்தர்* என்பது அரபு மொழிச் சொல். இதன் பொருள் அங்காடி என்பது.

கவுடல்லியரின் *அர்த்தசாத்திரம்* சேர நாட்டு முத்தையுங் கூறுகின்றது. அந்த முத்தை *அர்த்தசாத்திரம்*, *கௌர்ணேயம்* என்று கூறுகின்றது. பெரியாற்றுக்குச் சூர்ணியாறு என்றும் ஒரு பெயர் உண்டு. பெரியாறாகிய சூர்ணியாறு கடலில் கலக்கும் புகர் முகத்தில் உண்டானபடியால் அந்த முத்து சௌர்ணேயம் என்று கூறப்பட்டது. சூர்ணியாற்றில் உண்டாவது சௌர்ணேயம். (தாமிரபரணியாற்றில் உண்டான முத்து *தாம்ரபர்ணிகம்* என்று கூறப்பட்டது போல.) சௌர்ணேயம் என்னும் பெயர் மருவி *கௌர்ணேயம்* என்றாயிற்று (மயிலை சீனி. வேங்கடசாமி, 'சேர நாட்டு முத்து', *தெ.பொ.மீ. மணிவிழா மலர்*, பக். 493-498).

காவிரி ஆறு கடலில் கலக்கிற இடமாகிய காவிரிப்பூம் பட்டினத்திலும் அந்தக் காலத்தில் முத்தும் சங்கும் உண்டாயிருக்கவேண்டும். ஆறுகள் கடலில் கலக்கும் இடங்களில் முத்துச் சிப்பியும் சங்கும் உண்டாவது மரபு. ஆனால், காவிரி ஆற்று முகத்துவாரத்தில் முத்தும் சங்கும் உண்டாயிற்றா என்பது பற்றி ஒன்றும் தெரியவில்லை.

யானைக் கோடு (தந்தம்)

மலைகளிலும் மலையைச் சேர்ந்த காடுகளிலும் யானைகள் இருந்தன. கொங்கு நாட்டைச் சேர்ந்த யானை மலைக் காடுகளில் யானைகள் அதிகமாக இருந்தன. கொங்கு நாட்டு யானை மலைகளும் அதனைச் சேர்ந்த காடுகளும் அக்காலத்தில் உம்பற் காடு (உம்பல்-யானை) என்று பெயர் பெற்றிருந்தன. யானைகளைப் பிடித்துப் பழக்கி அவைகளைப் போர்க்களங்களில் போர் செய்வதற்குப் பயன்படுத்தினார்கள். அக்காலத்து அரசர்கள் வைத்திருந்த நான்கு வகையான சேனைகளில் யானைப் படையும் ஒன்று. குட்டுவன் என்னும் சேர அரசன் மிகப் பெரிய யானைப் படையை வைத்திருந்தபடியால் அவன், 'பல்யானைச் செல்கெழு குட்டுவன்' என்று பெயர் பெற்றான் (யானைச் செல் - யானைக் கூட்டம்). கொங்கு நாட்டை அக்காலத்தில் அரசாண்ட

'பொறையர்' என்னும் சேர அரசர் யானைகளை அதிகமாக வைத்திருந்தார்கள். அவர்களுடைய யானைகள் பசு மந்தை களைப் போலக் காணப்பட்டனவாம்.

அக்காலத்தில் குறிஞ்சிகளில் (மலை) வாழ்ந்த குறவர்கள் யானைகளை வேட்டையாடிக் கொன்று அவற்றின் கோடுகளைச் (தந்தங்களை) சேர்த்து வைத்தார்கள். அவர்களுக்குச் சோற்றுப் பஞ்சம் வந்த காலத்தில் தந்தங்களை விற்று உணவு வாங்கி உண்டனர். யானைகளை வேட்டையாடிக் கொன்றார்கள்.

புலியோடு போர் செய்து புண்பட்டு இளைத்துப் போன யானையைக் கானவர் அம்பு எய்து கொன்று அதன் கோடுகளைக் கைக்கொண்டார்கள்.

புலியொடு பொருத புண்கூர் யானை
நற்கோடு நயந்த அன்பில் கானவர்
விற்சுழிப்பட்ட நாமப் பூசல் (நற்றிணை 65 : 5-7)

கொல்லிமலையில் இருந்த குறவர் உணவு கிடைக்காமல் பசித்திருந்தபோது தங்களிடமிருந்த யானைக்கோடுகளை விற்று உணவு அருந்தினார்கள்.

காந்தளஞ் சிலம்பில் சிறுகுடி பசித்தெனக்
கடுங்கண் வேழத்துக் கோடு நொடுத்துண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரை (குறுந். 100 : 3-5)

வேங்கடமலையில் வாழ்ந்தவர் ஒன்று சேர்ந்து யானையை வேட்டையாடிக் கொன்று அதன் கோடுகளைக் கொண்டு போய் மதுக் கடையில் கொடுத்து மது அருந்தினார்கள். மதுவை நெல்லுக்கு மாற்றுவது வழக்கம். இவர்கள் நெல்லுக்குப் பதிலாக யானைக் கோட்டைக் கொடுத்தனர்.

வரிமாண் நோன்ஞான் வன்சிலைக் கொளீஇ
அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவு நொடை நெல்லின் நாண்மகிழ் அயரும்
விழவுடை விழுச்சீர் வேங்கடம் (அகம் 61 : 7-13)

மலைவாழ் குறவர்கள் அந்தந்த நாட்டு அரசருக்குப் பண்டங் களைக் காணிக்கை செலுத்தும்போது யானைத் தந்தங்களையும் கையுறையாகக் கொடுத்தார்கள். சேரன் செங்குட்டுவன், பெரி யாறு, மலையிலிருந்து விழுகிற இடத்தில் மலையடிவாரத்தில் வழக்கமாகச் சென்று தங்கி வேனிற்காலத்தைக் கழிப்பது வழக்கம். அவன் மலையடிவாரத்துக்கு வரும்போது மலையில் வாழுங் குறவர்கள் அவனுக்குக் காணிக்கை செலுத்தினார்கள். மலைகளில் கிடைக்கும் பொருள்களாகிய சந்தனக்கட்டை, அகிற்கட்டை, தேன், பலாப்பழங்கள், மிளகு முதலிய பொருள்களையும்

யானைத் தந்தங்களையும் அவர்கள் கொண்டுபோய்க் கொடுத்தார்கள் என்று *சிலப்பதிகாரம்* (25 : 37) கூறுகின்றது.

யானைத் தந்தங்களினால் பல வகையான பொருள்கள் செய்யப்பட்டன. அயிரைமலைக் கொற்றவைக்குத் தந்தத்தினால் செய்த கட்டில் (ஆசனம்) இருந்தது (*பதிற்றுப்பத்து* 8ஆம் பத்து 9).

யானைக் கோட்டை ஈர்வாளினால் அறுத்தும் கடைந்தும் பொருள்களைச் செய்தார்கள். அந்தத் தொழில் மதுரையில் நடைபெற்றதைச் *சிலப்பதிகாரம்* கூறுகின்றது. 'வேதினத் துப்பவும் கோடுகடை தொழிலவும்' (*சிலம்பு* 14 : 176) என்று கூறுகின்றது. அரும்பதவுரையாசிரியர் இதற்கு, "வேதின துப்பவும் - ஈர்வாளால் வலியப் பெற்றனவும் என்றது ஈருங்கருவியாற் பண்ணப்பட்டன. கோடு - தந்தம்" என்று உரை எழுதுகிறார். சீப்பு, சிமிழ் முதலான பொருள்கள் தந்தத்தினால் செய்யப்பட்டன.

யானைக் கோடுகளை வெளியூர் வாணிகர் வாங்கிக்கொண்டு போனார்கள். யவனர்களும் மற்றப் பொருள்களோடு யானைக் கோடுகளையும் வாங்கிக்கொண்டு போனார்கள். சங்க காலத்தில் யானைக்கோடு வாணிகப் பொருள்களில் ஒன்றாக இருந்தது. 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' என்னும் பழமொழியுண்டு. யானை இறந்தால் அதன் தந்தங்களும் எலும்புகளும் அதிக விலைக்கு விற்கப்பட்ட படியால், இறந்தும் ஆயிரம் பொன் என்று கூறப்பட்டது.

யானைத் தந்தங்களும் அக்காலத்தில் முக்கியமான வாணிகப் பொருளாக இருந்தன.

நீலக்கல்

கொங்கு நாட்டிலே சங்க காலத்தில் விலையுயர்ந்த மணிக் கற்கள் கிடைத்தன. சங்கச் செய்யுட்களில் அந்த மணிகள் கூறப்படுகின்றன. கொங்கு நாட்டில் கதிர்மணி கிடைத்ததைக் கபிலர் கூறுகின்றார்.

இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பின் நாடு (7ஆம் பத்து 6 : 19-20)

அரிசில்கிழாரும் அங்குக் கிடைத்த திருமணியைக் கூறுகிறார். உழவர் ஏர் உழுதபொழுது அந்த மணிகள் வெளிப்பட்டனவாம்.

கருவி வானந்த தண்டளி சொரிந்தெனப்
பல்விதை யுழவர் சில்லே ராளர்
பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல்
கழுவுறு கலிங்கம் கடுப்பச் சூடி
இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பின் நாடு (8ஆம் பத்து 6 : 10-15)

கொங்கு நாடு, சங்க காலத்தில், வடக்கே மைசூர் வரையில் இருந்தது. கன்னட நாட்டில் பாய்கிற காவிரியாறு வரையில் கொங்கு நாடு அக்காலத்தில் பரவியிருந்தது. அந்த வடகொங்கு நாட்டிலே புன்னாடு என்னும் ஒரு பகுதியில் அக்காலத்தில் கோமேதகச் சுரங்கம் இருந்தது. புன்னாட்டின் தலைநகரம் கட்டூர். அது கப்பணி ஆற்றின் கரை மேல் இருந்தது. கப்பணி ஆறு, காவிரியில் கலக்கிற உபநதிகளில் ஒன்று. கப்பணி ஆற்றின் கரைமேல் இருந்த கட்டூர், பிற்காலத்தில் கிட்டூர் என்று வழங்கப்பட்டது. அது பிற்காலத்தில் கிட்டிபுரம் என்றும் பிறகு தீர்த்திபுரம் என்றும் வழங்கப்பட்டது. கட்டூர் அல்லது கிட்டூரைத் தலைநகரமாகக் கொண்ட புன்னாட்டை அக்காலத்தில் குறுநில மன்னன் ஆண்டு வந்தான்.

நவமணிகளில் கோமேதகம் என்பது ஒரு வகை. கோமேதகங் களில் பல வகையுண்டு. நீலம், பச்சை, மஞ்சள், பழுப்பு நிறம் முதலான வகைகள் கோமேதகத்தில் உண்டு. இவைகளில் நீல நிறமான கோமேதகத்தை உரோமர் *ஆக்வா மரினா* (Aqua Marine) என்று கூறினார்கள். அந்த நீலக்கல் கடல்நீர் போன்ற நிறம் உள்ளது. அது அக்காலத்தில் புன்னாட்டைத் தவிர வேறெங்கும் கிடைக்கவில்லை. ஆகவே, யவனக் கப்பல் வாணிகர் தமிழகத்துக்கு வந்து அவற்றை வாங்கிக்கொண்டு போனார்கள்.

புன்னாட்டில் நீலக்கல் சுரங்கம் ஒன்று அக்காலத்தில் இருந்தது. அந்த நீலக்கற்கள் அக்காலத்தில் உலகத்திலே வேறெங்கும் கிடைக்காத அழகான கற்கள். புன்னாட்டு நீலக்கற்களை யவன வாணிகர் வாங்கிக்கொண்டுபோய் ரோமாபுரியில் விற்றார்கள். ரோமாபுரிச் சீமாட்டிகள் இந்த நீலக்கற்களைப் பெரிதும் விரும்பினார்கள். ரோம் தேசத்தார் இந்த நீலக்கற்களை *ஆக்வா மரினா* (Aqua Marine) என்று கூறினார்கள். கடல் நீரின் நிறம் போல இருந்தபடியால் இப்பெயர் கூறப்பட்டது. யவனர் இந்த நீலக்கல் சுரங்கத்தைப் பற்றியும் நீலக்கற்களைப் பற்றியும் எழுதியுள்ளனர். புன்னாட்டில் நீலக்கல் சுரங்கம் இருந்ததைப் பிளினி என்னும் யவனர் எழுதியுள்ளார். யவனர், புன்னாட்டை பவ்னாட என்று கூறினார்கள். புன்னாடு உள்நாடு என்றும் அங்கு நீலக்கற்கள் கிடைத்தன என்றும் எழுதியுள்ளனர்.

புன்னாட்டில் நீலக்கல் சுரங்கம் இருந்தபடியால் இந் நாட்டைக் கைப்பற்றிக்கொள்ள அந்நாட்டுக்கு அருகில் இருந்த துளு நாட்டு நன்னன் விரும்பினான். அவ்வாறே அவன் சிற்றரசனாகிய புன்னாட்டு அரசன்மேல் போருக்குச் சென்றான். அதனை அறிந்த சேர நாட்டுக் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், தன்னுடைய சேனைத் தலைவனாகிய ஆய்எயினன் தலைமையில் சேனையை அனுப்பிப் புன்னாட்டை நன்னன் கைப்பற்றாதபடி தடுத்தான் இதைப் பரணர் கூறுகின்றார்.

பொலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென
யாழிசை மறுகிற் பாழி யாங்கண்
அஞ்ச லென்றோ ஆஅய் எயினன்
இகலடு கற்பிற் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் கொடுத்தனன் (அகம் 396 : 2-6)

கொங்கு நாட்டிலே படியூரிலும் (சேலம் மாவட்டம்) வாணியம்பாடியிலும் (கோயம்புத்தூர் மாவட்டம்) கதிர் மணிகள் கிடைத்தன. இவைகளை யவனர் வந்து வாங்கிக் கொண்டு போனார்கள்.

TAMIL NADU DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
MADRAS

களப்பிரர் ஆட்சியில் தமிழகம்

மயிலை சீனி வேங்கடசாமி

மக்கள் வெளியீடு

களப்பிரர் ஆட்சியில் தமிழகம்

முகவுரை

தமிழ்நாட்டின் வரலாறு முழுமையாகவும் தெளிவாகவும் சரியாகவும் இன்னும் எழுதப்படாமலிருப்பது தமிழரின் பெருங்குறையாகும். தமிழகத்தின் மிக நீண்ட வரலாற்றில் களப்பிரர் ஆட்சிக்காலம் முக்கியமானது. களப்பிரர் ஆட்சிக் காலம் தமிழ் நாட்டு வரலாற்றில் 'இருண்ட காலம்' ஆக இருந்து வந்தது. ஒரு காலத்தில் களப்பிரர் தமிழகத்தை அரசாண்டார்கள் என்னும் வரலாற்றுச் செய்தியே நெடுங்காலமாக மறைந்து கிடந்தது. வேள்விக்குடிச் செப்பேடு கிடைத்து, இது வெளியிடப் பட்ட பிறகுதான் களப்பிரர் என்னும் அரசர் இருந்தனர் என்றும் அவர்கள் தமிழகத்தை அரசாண்டனர் என்றும் தெரியவந்தது. அதற்கு முன் அப்படி ஒரு அரசர் பரம்பரை இருந்தது என்பதை அறியாமலே இருந்தோம்.

1920ஆம் ஆண்டுக்குப் பிறகு வேள்விக்குடிச் செப்பேட்டு வாசகம் வெளிவந்த பிறகு 55 ஆண்டுகளாகத்தான் களப்பிரரைப் பற்றிக் கொஞ்சங்கொஞ்சமாக அறிந்து வருகிறோம். ஐம்பத் தைந்து ஆண்டுகளாகியும் இன்னும் அவர்களைப் பற்றிய முழு வரலாறு தெரியாமலிருக்கிறது. அறிஞர்கள் களப்பிரரைப் பற்றிச் சில கட்டுரைகள் எழுதினார்கள். சில வரலாற்றுப் பேராசிரியர்கள் தங்களுடைய வரலாற்று நூல்களில் களப்பிரரின் 'இருண்ட காலத்தை' ஒரே வரியில் குறிப்பிட்டுள்ளனர். அவ்வளவுதான்.

களப்பிரர் வரலாறு எழுதப்படாததன் காரணம், அவர்கள் காலத்துக் கல்வெட்டுச் சாசனங்களோ, செப்பேட்டுச் சாசனங் களோ, அவர்கள் காலத்துக் காசுகளோ, வேறு பழம்பொருள் சான்றுகளோ கிடைக்காததுதான். இந்த நிலையில் அவர்களைப் பற்றி அறியக்கூடிய ஒரே சான்று அக்காலத்துச் சமய, இலக்கிய நூல்களேயாகும். இந்தச் சான்றுகளை இதுவரையில் யாரும் அதிகமாகக் கையாளவில்லை. *பெரிய புராணமும் யாப்பருங்கல* உரை மேற்கோள் செய்யுட்களும் ஓரளவு பயன்படுத்தப்பட்டன. இதுவரை வெளிவந்த களப்பிரரைப் பற்றிய கட்டுரைகளும் அவர்கள் வரலாற்றை ஓரளவே தெரிவிக்கின்றன.

அக்காலத்தில் இருந்த (சைவ, வைணவ, பௌத்த, சமண) சமயங்களின் வரலாறு, சமய நூல்களின் (*பதினோராம் திருமுறை*) வரலாறு, செய்யுள் இலக்கண (*யாப்பருங்கலம்*) வரலாறு

ஆகியவற்றைப் பற்றி ஆராய்ந்தபோது களப்பிரர் ஆட்சிக் காலத்தைப் பற்றிச் சில செய்திகள் புதிதாகப் புலனாயின. ஆகவே, இந்நூலை எழுதினேன். களப்பிரர் காலத்தில் நடந்த பல நிகழ்ச்சிகள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன என்பதை இந்நூலைப் படிப்பவர் அறிந்துகொள்ளலாம்.

களப்பிரரின் 'இருண்ட காலம்' இந்த நூலினால் 'விடியற் காலம்' ஆகிறது. மேலும் புதைபொருள் சான்றுகள், பழங்காலச் சான்றுகள் கிடைக்குமானால் களப்பிரர் வரலாற்றில் பகற் காலத்தைக் காணக்கூடும்.

வாழ்க்கையில் ஏற்பட்ட மனக்கவலையும் துன்பமும் நோயும் தொடர்ந்து வருத்துகிற காலத்தில் இந்நூலை எழுதினேன்.

இந்நூல் வெளிவர முழு முயற்சிகள் எடுத்துக்கொண்ட சென்னைப் பல்கலைக்கழகத் தொல்பொருள் துறை ஆய்வு மாணவர் திரு. ர. ராமசாமி அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

இந்த நூலை அச்சிட்டு வெளியிடும் மக்கள் வெளியீடு நிறுவனத்தைச் சேர்ந்த திரு மே. து. ராசுகுமார் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மயிலாப்பூர்
சென்னை – 4

மயிலை சீனி. வேங்கடசாமி
20–10–1975

பதிப்புரை

மனிதனுடைய வாழ்க்கையில் வரலாறு சிறப்பானதொரு இடம் பெற்றிருக்கிறது. மனித வரலாற்றின் வளர்ச்சிப் போக்கையும் வாழ்ந்து வந்த வழியையும் அறிந்துகொள்வது எதிர்கால வாழ்வை வடிவமைக்க இன்றியமையாததாகும்.

தமிழ் மொழியும் தமிழ் நாகரிகமும் தமிழர் பண்பாடும் நீண்ட நெடிய வரலாறு கொண்டிருப்பினும் இதனை முழுமையாக ஆராய்ந்து எழுதும் பணி இன்னும் முற்றுப் பெறவில்லை.

வரலாற்றுக்கு அடிப்படையான இலக்கியங்களும் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் புதைபொருள்களும் இன்ன பிற சான்றுகளும் தமிழகத்தில் கணக்கின்றிக் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றைத் தொகுத்துப் பகுத்து ஆயும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஆயினும், நமது உணர்வும் விரைவும் நம்பிக்கை தரக்கூடியனவாக இல்லை என்றே சொல்லவேண்டும்.

1887ஆம் ஆண்டிலிருந்து *கல்வெட்டு ஆண்டறிக்கைகள்* (*Epigraphical Reports*) வெளியிடப்படுகின்றன. அந்தந்த ஆண்டு படியெடுக்கப்படும் கல்வெட்டுகள் கூறும் செய்திகளை ஓரிரு வரிகளில் இவை தெரிவிக்கின்றன. 1905ஆம் ஆண்டு வரை படியெடுக்கப்பட்ட அனைத்துக் கல்வெட்டுக்களும், பின்னர் படியெடுக்கப்பட்டதில் அங்குமிங்குமாக ஒரு சில கல்வெட்டுக்களுமே இதுவரை *தென்னிந்தியக் கல்வெட்டுக்கள்* (*South Indian Inscriptions*) என்ற பெயரில் முழுமையாக வெளியிடப்பட்டுள்ளன. பிற கல்வெட்டுக்களின் முழு வடிவமும் முறையாக வெளியிடப்படவில்லை. இவையின்றிப் படியெடுக்கப்படாத கல்வெட்டுகளும் பல்லாயிரக் கணக்கில் மறைந்து கிடக்கின்றன.

தற்போது *கல்வெட்டு ஆண்டறிக்கைகளில்* வெளியிடப்படும் ஓரிரு வரிக் குறிப்புகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. கல்வெட்டுக்களின் முழு வடிவத்தையும் படிக்காமல், ஓரிரு வரிக் குறிப்புகளை மட்டும் வைத்துக்கொண்டு ஆய்வு செய்வது முழுமையான ஆய்வாகவோ, முறையான முடிவுகளாகவோ அமைய முடியாது. முழு வடிவமும் கிடைக்கும்போது ஓரிரு வரிக் குறிப்புகளைக் கொண்டு பெற்ற முடிவுகளும் செய்த ஆய்வுகளும் மாற வேண்டியதாகலாம். அத்துடன் இதுவரை வெளியிடப்பட்ட *கல்வெட்டு ஆண்டறிக்கைகளும் தென்னிந்தியக் கல்வெட்டுத்* தொகுதிகளும் பற்பல ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்ட நூல்களாதலால் ஆய்வாளர்களுக்கு அவை படிப்பதற்கும்கூட எளிதில் கிடைப்பதில்லை. கிடைக்கின்ற பல நூல்களும் ஏடுகளைப் புரட்டினாலே கிழிந்துவிடும் நிலையில் உள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறையினர் சென்னை, குமரி ஆகிய மாவட்டக் கல்வெட்டுகளை முழுமையாகவும் தர்மபுரி மாவட்டக் கல்வெட்டுகளைப் பகுதியாகவும் வெளியிட்டுள்ளனர்.

இதன்றி, மத்திய அரசுத் தொல்பொருள் துறைக்கும் மாநில அரசுத் தொல்பொருள் துறைக்கும் இடையே தொடர்பும் இணைப்பும் குறைவாக இருத்தலை அறிகிறோம். மத்திய அரசுத் துறையினர் பல ஆண்டுகளுக்கு முன் படியெடுத்துப் பதிப்பிக்க இயலாமல் அறைக்குள் பூட்டி வைத்திருப்பதை மாநில அரசுத் துறைக்கு வெளியிடக் கொடுத்துதவலாம். இரு வேறு அரசுத் துறைகளும் தனித்தனியே படியெடுப்பதில் ஈடுபட்டு 'இரட்டிப்பு வேலை' நடத்துவதற்கு மாற்றாகப் பணிப் பங்கீடு செய்துகொண்டு பரவலாகப் பணியினை மேற்கொள்ளலாம். ஆய்வுத் துறையில் போட்டி மட்டுமல்ல, மனம் கலந்த ஒத்துழைப்பும் அவசியமாகும்.

வரலாற்றுச் சான்றுகளோ, தொன்மையான நாகரிகப் பின்னணியோ இல்லாத பல நாடுகளில்கூட குறுகிய கால வரலாறாக இருந்தாலும் வரலாற்றுச் சின்னங்களைப் போற்றவும் பாதுகாக்கவும் வரலாற்றை விரிவாக எழுதவும் பெருமுயற்சி எடுத்துக்கொள்கிறார்கள்.

தொன்மையான வரலாற்றுச் சான்றுகளைப் பல்லாயிரக் கணக்கில் கொண்டுள்ள நமது நாட்டினர் இவற்றை வெளியிடுவதில்கூட ஊக்கமும் உற்சாகமும் காட்டாமல் இருப்பது வேடிக்கையான புதுமையாகும். மேலும் முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன் கோயிலில் இருந்த பல கல்வெட்டுக்கள் 'கோயிலைப் புதுப்பித்தல்' என்ற பெயரில் அழிக்கப்பட்டுவிட்ட செய்திகளையும் அறிகிறோம்.

ஆகவே, தமிழ் நாட்டுக் கோயில்களிலும் பிற இடங்களிலும் உள்ள கல்வெட்டுகள் அனைத்தையும் மாவட்ட வாரியாக விரைவில் படியெடுத்து, அவற்றை முழுமையாக வெளியிட வேண்டும். இவை வெளியிடப்படுவது தமிழக வரலாறு முழுமையாக – முறையாக எழுதப்பட அடிப்படையினை அமைக்கும்.

கல்வெட்டுகள்வழி வரலாற்றின் வளர்ச்சிப் போக்குகள் யாவும் தனித்தனியாக ஆராயப்பெற்று, விரிவான பல நூல்களாக வெளியிடப்பட வேண்டும் என்று விழைகின்றோம்.

தமிழக வரலாற்றை எழுதிய சில வரலாற்றாசிரியர்கள் களப்பிரர் காலத்தை இருட்டடிப்புச் செய்துவிட்டார்கள். சேர, சோழ, பாண்டியரைக் களப்பிரர் வென்று வாகை சூடிய வரலாறும் அவர்களது ஆட்சி அமைப்பும் அவர்களுக்குக் கீழே மக்கள் வாழ்க்கை நிலையும் அன்று நிலவிய பொருளாதார உறவுமுறைகளும் சமயங்களின் சமுதாய நிலைபாடுகளும் முன்னூறு ஆண்டுகளுக்கு மேல் தமிழகத்தின் பெரும் நிலப்பரப்பைத் தனித்தன்மையுடன் ஆண்ட அவர்கள் எப்படி, ஏன் வீழ்த்தப்பட்டார்கள் என்பன போன்ற வரலாற்று உண்மைகளும் இன்னும் தெளிவில்லாமல் இருக்கின்றன.

களப்பிரர் காலத்தை முழுமையாக அறியக் கல்வெட்டுகள் இல்லை. அக்காலத்தில் கல்வெட்டுகளை வடிக்கும் பழக்கம் விரிவாக ஏற்படவில்லை. களப்பிரர் வரலாற்றைக் கூறும் தனி இலக்கியங்களும் நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. அகழ் வாராய்ச்சிப் பிரிவில் நாம் பின்னணியில் இருப்பதால் அதற்கான வாய்ப்புகளும் இல்லை.

இந்நிலையில் நமக்குக் கிடைத்திருக்கின்ற ஒருசில கல்வெட்டு களையும் பிற மேற்கோள் சான்றுகளையும் ஆதாரமாகக் கொண்டு விரிவாகத் தமக்கே உரிய முறையில் ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் இந்நூலினைப் படைத்துள் ளார்கள். களப்பிரர் பற்றிய விரிவான செய்திகளைக் கொண்ட முதல் நூலாக – தனி நூலாக இது அமைகின்றது. அவர்களே குறிப்பிட்டது போலக் களப்பிரர் வரலாற்றின் பகற்காலத்தைக் காணத் தொடர்ந்து ஆய்வதற்கு இந்நூல் தூண்டுகோலாக அமையும் என நம்புகிறோம்.

பல்கலைக்கழகங்களும் இன்ன பிற ஆய்வு நிறுவனங்களும் செய்துவரும் பணிகளை நாம் குறைத்து மதிப்பிட முடியாது என்றாலும் சில தனி மனிதர்கள், பல நிறுவனங்களின் பணிகளை விட மிகுதியாக ஆய்வுக்கும் வரலாற்றுக்கும் தங்கள் பங்கைச் செலுத்தியிருக்கிறார்கள் என்பதனை நாம் மறுக்க முடியாது. இவ்வாறு குறிக்கத்தக்க சிலரில் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களும் ஒருவர். அவர் எழுதிய நூல்கள் பல அடுத்து மக்கள் வெளியீட்டின்வழி வர இருக்கின்றன.


உடல் நலக்குறைவினால் ஓய்வெடுத்துவரும் அறிஞர் மயிலை சீனி அவர்கள் உள்ளம் சோர்வடையாமல் ஆராய்ச்சியில் காட்டி வரும் ஆர்வம் ஏனையோருக்கு எடுத்துக்காட்டாக அமைவ தாகும். ஏற்கனவே நூலாக வெளியிடப்பட்டவையன்றித் தனிக் கட்டுரைகளும் நூல்கள் பல எழுதுவதற்கான குறிப்புகளும் அவரிடம் இருக்கின்றன. இவற்றைத் தொகுத்து நூல்வடிவம் கொடுக்கும் பணியில் அவர் ஈடுபட்டிருக்கிறார். அவற்றையும் விரைவில் தமிழகம் பெற்றுப் பயனடையும் என்று நம்புகின்றோம்.

மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களுக்கும் மக்கள் வெளியீட்டுக்கும் தொடர்பாக இருந்து இந்நூலினை எழுத அவருக்குத் தூண்டுகோலாகவும் வெளியிட நமக்குத் துணை யாகவும் இருந்து நல்லதொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த சென்னைப் பல்கலைக்கழகத் தொல்பொருள் துறை ஆய்வு மாணவர் திரு. ர. ராமசாமி அவர்களுக்கும் இந்நூலுக்கான பொருளடைவு தயாரித்துக் கொடுத்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை விரிவுரையாளர் புலவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் நன்றியுடையோம்.

மே. து. ராசு குமார்

களப்பிரர் காலத் தமிழகம்

(கி. பி. 3-5)



களப்பிரர் ஆட்சியின் கீழ் அடங்கியிருந்த நாடுகள் :	சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, துளு நாடு, கொங்கு நாடு, இரேணாடு, ஈழ நாடு
தலித்திருந்த நாடு :	பல்லவ நாடு

களப்பிரர் ஆட்சியில் தமிழகம்

தோற்றுவாய்

கடைச்சங்க காலத்துக்குப் பிறகு தமிழகத்தின் அரசியல் நிலைமை இன்னதென்று தெரியாமல் சரித்திரத்தில் 'இருண்ட கால'மாக இருந்தது. கடைச்சங்க காலத்தின் முடிவு ஏறத்தாழ கி.பி. 250 என்று கருதப்படுகிறது. கடைச்சங்க காலத்தின் இறுதியில் இருந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் பெயர்கள் சங்கச் செய்யுட்களிலிருந்து கிடைக்கின்றன. சங்க நூல்களில் காணப் படுகிற கடைசி சேர அரசன் பெயர் கோக்கோதைமார்பன் என்பது. இவ்னைக் கோதை என்றும் கூறுவர். கோக்கோதை மார்பன், சேரன் செங்குட்டுவனுடைய மகன். இவன் சிறுவனாக இருந்தபோது இவனுக்குக் குட்டுவன்சேரல் என்று பெயர் இருந்தது. தன் மேல் பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்துப் பாடிய பரண ருக்குச் செங்குட்டுவன் உம்பர்காடு என்னும் நாட்டின் வருவாயை யும் தன்னுடைய மகன் குட்டுவன் சேரலையும் பரிசாகக் கொடுத் தான் (பதிற்றுப்பத்து, ஐந்தாம் பத்துப் பதிகத்தின் அடிக்குறிப்பு).

புலவராகிய பரணருக்குச் செங்குட்டுவன் தன்னுடைய மகனான குட்டுவன் சேரலைப் பரிசாகக் கொடுத்தான் என்பதன் பொருள், புலவரிடத்தில் கல்வி கற்பதற்கு மாணாக்கனாகக் கொடுத்தான் என்பதாகும். இளமையில் குட்டுவன் சேரல் என்று பெயர் பெற்றிருந்த இவன் முடிசூடின பிறகு கோக்கோதை மார்பன் என்று பெயர் பெற்றான் என்று அறிகிறோம்.

கடைச்சங்க காலத்தில் கொங்கு நாட்டைச் சேர அரசர்களின் இளைய வழியினரான பொறையர் அரசாண்டார்கள். கொங்கு நாட்டையரசாண்ட கடைசிப் பொறையன் கணைக்கால் இரும் பொறை. இவன் கோக் கோதை மார்பனுடைய தாயாதி உறவினன். இருவரும் சம காலத்தில் இருந்தவர்கள். கணைக்காலிரும் பொறை, சோழன் செங்கணானோடு போர் செய்து தோற்றுப் போரில் பிடிக்கப்பட்டுச் சிறை வைக்கப்பட்டான். பிறகு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு மீண்டும் கொங்கு நாட்டை யரசாண்டான். அதாவது, சோழன் செங்கணானுக்குக் கீழடங்கிக் கணைக்காலிரும்பொறை அரசாண்டான். ஆகவே, சோழன் செங்கணானும் சேரமான் கோக்கோதை மார்பனும் கணைக்கால் இரும்பொறையும் சமகாலத்தவர் என்று தெரிகின்றனர்.

கடைச்சங்க காலத்தின் இறுதியில் பாண்டிய நாட்டையர சாண்டவன் நெடுஞ்செழியன். இந்த நெடுஞ்செழியன், கோவலன் கண்ணகி காலத்திலிருந்த நெடுஞ்செழியன் அல்லன். அவனுக்குப் பிறகு இருந்த நெடுஞ்செழியன். இவனைத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்று வரலாறு கூறுகிறது. இந்த நெடுஞ்செழியன், சேர நாட்டுக் கடற்கரையோரத்தில் பேரி யாற்றின் புகுமுகத்தில் இருந்த முசிறிப் பட்டினத்தை முற்றுகை செய்து அங்கிருந்த ஒரு தெய்வத் திருமேனியை எடுத்துக்கொண்டு மதுரைக்குப் போனான் (*அகநானூறு* 57 : 14-16; 11-14). இவனுடைய சமகாலத்திலிருந்த சேர அரசன் மேற்சொன்ன கோக்கோதை மார்பனே.

கோக்கோதை மார்பன், கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணான், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆகிய இவர்கள் கடைச்சங்க காலத்தின் இறுதியில் சமகாலத்தில் இருந்த அரசர்கள். இவர்களுக்குப் பிறகு இவர்களுடைய மக்கள் அல்லது உறவினர் சேர, கொங்கு, சோழ, பாண்டிய நாடுகளை அரசாண்டார்கள். இவர்களுடைய பெயர் தெரியவில்லை. இவர்கள் காலத்தில் அயல் நாட்டவர் வந்து இவர்களை வென்று தமிழகத்தைக் கைப்பற்றி யரசாண்டார்கள். அவர்கள் களப்பிரர் என்று கூறப்பட்டார்கள். களப்பிரர் தமிழகத்தைக் கைப்பற்றி யரசாண்ட வரலாறு மறைந்து போய் நெடுங்காலமாகப் பல நூற்றாண்டு வரையில் தெரியாமல் இருந்தது. கி.பி. 20ஆம் நூற்றாண்டு வரையில் மறைந்து போயிருந்த களப்பிர அரசரைப் பற்றின வரலாற்றுச் செய்தி, பாண்டி யருடைய செப்பேடுகள் கிடைத்த பிறகு அவைகளிலிருந்து தெரியவந்தன. திரு.கே.ஜி. சங்கரன் அவர்கள், வட்டெழுத்தில் எழுதப்பட்ட வேள்விக்குடிச் செப்பேட்டை இக்காலத் தமிழ் எழுத்தில் *செந்தமிழ்த்* திங்களிதழில் வெளியிட்டார் (*செந்தமிழ்*, 20ஆம் தொகுதி, பக்கம் 205-216). அதன் பிறகு, இந்திய சாசன இலாகா 1923ஆம் ஆண்டில் *எபிகிறாபியா இந்திகா* என்னும் ஆங்கில வெளியீட்டில் வேள்விக்குடிச் சாசனத்தை ஆங்கில (இலத்தீன்) எழுத்தில் வெளியிட்டது (*Epigraphia Indica*, Vol. XVII, 1923, pp. 291-309). சில ஆண்டுகளுக்குப் பிறகு தளவாய்புரச் சாசனம் கிடைத்ததும் இந்தச் செப்பேடுகளிலிருந்து களப்பிர அரசர் களைப் பற்றி அறிகிறோம் (*பாண்டியர் செப்பேடுகள் பத்து*, தமிழ் வரலாற்றுக் கழக வெளியீடு, 1967).

வேள்விக்குடிச் செப்பேடு வெளியான பிறகுதான் களப் பிரரைப் பற்றின செய்தி தெரியவந்தது. அதன் பிறகு களப்பிரரைப் பற்றிப் பல அறிஞர்கள் எழுதத் தொடங்கினார்கள். ஆனால், களப்பிரரைப் பற்றின முழு வரலாறு இன்றுங் கிடைக்கவில்லை.

களப்பிரர் வேறு, களம்பாளர் (களப்பாழர்) வேறு என்று சில வரலாற்று அறிஞர்கள் கருதினார்கள். சிலர் இருவரும் ஒருவரே என்று கருதினார்கள். திரு. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியும் திரு. மு. இராகவையங்காரும், களப்பிரரும் களம்பாளரும் ஒருவரே என்று கருதினார்கள். திரு. டி.வி. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் இருவரும் வெவ்வேறு இனத்தவர் என்று கருதினார். பண்டாரத்தார் இதுபற்றி இவ்வாறு எழுதினார்: "அன்றியும் தமிழ் நாட்டுக் குறுநில மன்னர் குடியினராகிய முத்தரையர் என்போர் களப்பிரரேயாவர் என்று சிலர் கூறுவது சிறிதும் ஏற்புடைத்தன்று. களப்பாள் என்ற சோணாட்டுரொன்றில், முற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த அரசியல் தலைவன் ஒருவன் களப்பாளன் என்று சிறப்பித்து வழங்கப் பெற்றமையால், அவன் வழியினர் களப்பாளர் எனவும் களப்பாளராயர் எனவும் குடிப்பெயர் பெற்றுப் பெருமையோடு வாழ்ந்து வருவாராயினர். எனவே, தமிழராகிய களப்பாளரும் ஏதிலராகிய களப்பிரரும் ஒருவரே யாவரென்னும் முடிவு எவ்வாற்றானும் ஒத்துக்கொள்ளத் தக்க தன்று" (*பாண்டியர் வரலாறு*, டி.வி. சதாசிவ பண்டாரத்தார்; 'பாண்டி நாட்டில் களப்பிரர் ஆட்சி' என்னும் தலைப்புக் காண்க).

தளவாய்புரச் செப்பேடு கிடைப்பதற்கு முன்பு திரு. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் இவ்வாறு எழுதினார். அந்தச் செப்பேடு கிடைத்த பிறகு களப்பிரரும் களப்பாளரும் ஒருவரே என்பது தெரிந்துவிட்டது. வேள்விக்குடிச் செப்பேடு களப்பிரர் என்று கூறுவதைத் தளவாய்புரச் செப்பேடு களப்பாழர் (களப்பாளர்) என்று கூறுகிறது. "கடிராறு கவனலங்கல் களப்பாழர் குலங்களைந்தும்" என்றும் (வரி 99) "களப்பாழரைக் களை கட்ட மற்றிரண்டோள் மாக்கடுங்கோன் மானம் பேர்த்தருளிய கோன்" என்றும் தளவாய்புரச் செப்பேடு (வரி 131 - 132) கூறுகிறது. எனவே, களப்பிரரும் களப்பாளரும் ஒருவரே என்பது தெளிவாகத் தெரிகிறது. இனிக் களப்பிரரைப் பற்றித் தொடர்ந்து ஆராய்வோம்.

களப்பிரர் யார்?

களப்ரர், களப்பரர், களப்பிரர், களப்பாளர், களப்பாழர் என்றெல்லாம் கூறப்படுகிற இவர்களைக் களப்பிரர் என்று கூறுவோம். களப்பிரர் தமிழர் அல்லர். ஆனால், அவர்கள் ஆரியரோ என்றால் ஆரியரும் அல்லர். அவர்கள் வட இந்தியாவில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்தவர் என்று திரு. சதாசிவ பண்டாரத்தார் கருதுகிறார். "……அன்னோர் (களப்பிரர்) பிராகிருதம். பாலி ஆகியவற்றைத் தமக்குரிய மொழிகளாகக்

கொண்டு ஆதரித்துள்ளமையால் அம்மரபினர் தமிழர் அல்லர் என்பதும் வடபுலத்தினின்றும் போந்த ஏதிலர் ஆவர் என்பதும் நன்கு தெரியப்படும்" என்று அவர் எழுதுகிறார் (*பாண்டியர் வரலாறு*, 1969, பக். 32). களப்பிரர் சைன மதத்தையும் பௌத்த மதத்தையும் ஆதரித்தனர். இந்த மதங்களின் 'தெய்வ பாஷை' பிராகிருதம் (சூரசேனியும் பாலி மொழியும்) ஆகையால், இயற்கையாகவே இந்தப் பிராகிருத மொழிகளுக்கு ஆக்கம் ஏற்பட்டது. ஆனால், அவர்களுடைய தாய்மொழி பிராகிருதம் அன்று, கன்னட மொழியே. களப்பிரர் வட இந்தியாவிலிருந்து வந்தவர் அல்லர். அவர்கள் தமிழகத்துக்கு அண்மையில் இருந்த கன்னட வடுகர். எனவே, அவர்கள் திராவிட இனத்தவரே.

களப்பிரரைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் அவர்களைப் பற்றித் தங்கள்தங்கள் கருத்துகளை எழுதியுள்ளனர். பழந் தமிழகத்தின் வடக்கில் இருந்த வேங்கட நாட்டை அரசாண்ட சிற்றரசர் புல்லி என்று கூறப்படுகின்றனர். 'கள்வர் கோமான் புல்லி' என்று அவர்கள் கூறப்படுகிறார்கள் (*அகநானூறு* 61 : 11-13). கள்வர் என்பதைக் களவர் என்றும் படிக்கலாம். பழைய ஏட்டுச் சுவடிகளில் புள்ளியிட வேண்டிய எழுத்துக்களுக்குப் புள்ளி இடாமலே எழுதும் வழக்கம் இருந்தது. ஆகவே, இந்தச் சொல் களவர் என்பதா கள்வர் என்பதா என்பதை அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. இந்தச் சொல்லைக் களவர் என்று கொண்டு திரு. மு. இராகவையங்கார் களவர் என்பது களப்பிரரைக் குறிக்கிறது என்று எழுதினார் (*Journal of Indian History*, Vol. VIII). டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்காரும் இதே கருத்தைக் கூறியுள்ளார். வேங்கட நாட்டையாண்ட களவர் அல்லது கள்வர்தான் (புல்லி அரசர்) களப்பிரர் என்று இவர் கூறுகிறார் (*The Age of Imperial Unity*, Vol. II, Bharatiya Vidya Bhavan, 1951, pp. 223-33). இந்த அறிஞர்கள் கூறுவது ஏற்கத் தக்கது அன்று. வேங்கட நாட்டிலிருந்த களவர் அல்லது கள்வர் என்பவர் தமிழர். களப்பிரரோ தமிழர் அல்லாத கன்னடர். மற்றும், சங்க காலத்து வேங்கட நாடு தொண்டை மண்டலத்தைச் சேர்ந்து தமிழகத்தின் பகுதியாக இருந்தது. ஆகவே, தமிழராகிய கள்வர் (களவர்) வேறு. கன்னடராகிய களப்பிரராக இவர்கள் இருக்க முடியாது. கள்வர் (களவர்) வேறு, களப்பிரர் வேறு.

பல்லவ அரசர் ஆண்ட தொண்டை மண்டலம் தவிர, சோழ, பாண்டிய, சேர நாடுகளைக் கைப்பற்றி யரசாண்ட களப்பிரர் கருநாட நாட்டுக் கன்னடர் என்பதில் ஐயமில்லை. பாண்டி நாட்டில் இருந்த மூர்த்திநாயனார் காலத்தில் பாண்டி நாட்டை யரசாண்ட மன்னன் கன்னட நாட்டு அரசன் என்று சேக்கிழார் கூறுகிறார். "கானக்கடி சூழ் வடுகக் கருநாடர் மன்னர்" என்று அவர் கூறுகிறார் (*திருத்தொண்டர் புராணம்*, மூர்த்திநாயனார்

புராணம் 11, 24). 'வடுகக் கருநாடர் மன்னன்' என்பதன் பொருள் வடுக நாடாகிய கன்னட நாட்டைச் சேர்ந்த அரசன் என்பது. பிற்காலத்து நூலாகிய கல்லாடம் 'மதுரை வவ்விய கருநடர் வேந்தன்' என்று கூறுகிறது (கல்லாடம், செய்யுள் 56). கன்னட நாட்டை அக்காலத்தில் ஒரே அரசன் ஆட்சி செய்யவில்லை. வெவ்வேறு பகுதிகளை வெவ்வேறு அரசர் ஆண்டனர். கருநாடர் மன்னர், கன்னட நாட்டில் எந்த ஊரை யரசாண்டவன் என்பதைப் பெரியபுராணமும் கல்லாடமும் கூறவில்லை. அவர்கள் கன்னட தேசத்தில் களபப்பு என்னும் நாட்டையாண்ட சிற்றரசர் என்பது கன்னட நாட்டுக் கல்வெட்டுகளிலிருந்தும் கன்னட நூலி லிருந்தும் தெரிகிறது. சந்திரகுப்த மௌரியன் (அசோகச் சக்கர வர்த்தியின் பாட்டன்) அரசாட்சியைத் துறந்து சைன சமயத்தைச் சார்ந்து பத்திரபாகு முனிவருடனும் அவரைச் சார்ந்த சமண சமயத் துறவிகளுடனும் தென்னாட்டுக்கு வந்து களபப்பு நாட்டில் உள்ள களபப்பு மலையில் தங்கினார்கள் என்று சமண சமய நூலாகிய வட்டாராதனை என்னும் நூல் கூறுகிறது. அவர்கள் கழ்ப்பு நாட்டுக்கு வந்தார்கள் என்று இந்நூல் கூறுகிறது (வட்டாராதனை, பத்ரபாஹு பட்டாரா கதை). கழ்பப்பு என்பதும் கள்பப்பு என்பதும் ஒன்றே. கழ்பப்பு (களபப்பு) என்பதைச் சமஸ்கிருதத்தில் கடவப்ர என்று கூறினார்கள். இப்போதைய சிரவண பெளகொள என்னும் பிரதேசமே பழங்காலத்தில் கள்பப்பு நாடு என்று பெயர் பெற்றிருந்தது (கன்னட ஸாஸனகள ஸாம்ஸ்கிருதிக அத்யயன, கி.பி. 450-1150, டாக்டர் எம். சிதானந்த மூர்த்தி, 1966, பக்கம் 70, 78). களபப்பு நாட்டில் உள்ள சத்திரகிரி மலையின் பழைய பெயர் களபப்பு பெட்ட (பெட்ட - மலை) என்று கூறப்பட்டது (கர்நாடக இதிஹாஸ தர்ஸன (கன்னட தேசத்தின் வரலாறு), டாக்டர் எம். வி. கிருஷ்னராவ், எம் கேசவபட்ட, 1970, பக். 13, 14).

ஹொஸகோட்ட தாலுகாவில் கிடைத்துள்ள பழைய வீரக்கல் சாசனம் கன்னட மொழியில் பழைய கன்னட எழுத்தில் எழுதப் பட்டிருக்கிறது. இதில் களப்பிர இராச்சியம் கூறப்படுகிறது. இதன் வாசகம் இது: ஸ்வஸ்திஸ்ரீ மதுராளக் களவர திருராஜ்யதல் மள்ளே கவுண்டரும் சாவா காவுண்டுரு துயீநாத பல்கனிளலுதுவ காமூண்ட ஸத்த எர்ரதயக் கர்ளனபூழ்திகம் (Epi. Car., Vol. IX, Hoskote, 13, p. 198). இதனால், களபப்பு நாடு களவர இராச்சியம் என்பது மைசூர் தேசத்தில் இப்போது சிரவணபெளகொள என்று கூறப்படுகிற வட்டாரத்தைச் சேர்ந்திருந்தது என்பது தெரிகிறது. களவர் நாடு, களப்பிரர் நாடு என்னும் பெயர்கள் வேறு சாசனங்களிலும் கூறப்படுகின்றன (Epi. Car., Vol. X, Chintamani, 9). திருத்தொண்டர் புராணம் கூறுகிற 'வடுகக் கருநாடர்மன்னன்' இந்தக் களபப்பு நாட்டைச் சேர்ந்தவன் என்று கருதலாம்.

கருநாட தேசத்தில் இருந்த களப்பிரரின் களபப்பு இராச்சியம் மைசூர் நாட்டைச் சேர்ந்த கோலார் (கோலாலபுரம்) வரையிலும் பரவியிருந்தது. கோலாலபுரத்திலுள்ள நந்திமலை fs ¥¾uÇ¬ k i y v¬W T w¥gL»wJ (*Epi. Car.*, Vol. X, Chickbalpur, 9). பழைய தமிழ்ச் செய்யுட்கள், தமிழகத்தை யாண்ட களப்பிரரை நந்தி என்றும் நந்திமலையையுடையவர் என்றும் கூறுகின்றன: "நந்தி மால்வரைச் சிலம்பு நந்தி," "புகழ்துறை நிறைந்த பொருவேல் நந்தி."

கன்னட நாட்டுக் களபப்பு இராச்சியத்தை யாண்ட களப்பிரர் எப்பொழுதும் சுதந்தரராக இருக்கவில்லை. அவர்கள் கடம்பர், கங்கர் போன்ற வேறு அரசர்களுக்கு வெவ்வேறு காலத்தில் அடங்கியிருந்தனர் என்பது தெரிகிறது. கடம்ப அரசனான சாகுஸ்தன் (கி.பி. 425-450) களபோரருக்குப் (களப்பிரர்) பகைவன் என்று பேலூர் தாலுகாவில் ஹல்மிடி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டு எழுத்துக் கூறுகிறது (*Mysore Archaeological Report*, 1936, No 16). களபப்பு நாட்டின் அரசனான திண்டிகன் என்பவன், மேலைக்கங்க அரசனான ஸ்ரீபுருஷனுடைய அனுமதி பெற்று ஒரு தானத்தைக் கொடுத்தான் என்று ஒரு சாசனம் கூறுகிறது (*Mysore Arch. Rep.* 1927, No. 118). இதிலிருந்து களபப்பு அரசர் சில காலம் கங்க அரசருக்குக் கீழடங்கியிருந்தனர் என்பது தெரிகிறது.

மேற்கூறிய சான்றுகளினாலே கன்னட நாட்டவராகிய களப்பிர அரசர் அங்கு ஒரு பகுதியான களப்பிர நாட்டையர சாண்டனர் என்பது தெரிகிறது. அவர்கள் ஏறத்தாழ கி.பி. 250இல் அல்லது அதற்குச் சற்றுப் பின்னர் தமிழகத்தைக் கைப்பற்றிச் சேர, சோழ, பாண்டிய நாட்டையரசாண்டனர் என்று கருதலாம்.

களப்பிரர் எப்போது வந்தனர்?

வடுகக் கருநாடராகிய களப்பிரர் தமிழகத்தைக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில், ஏழத்தாழ கி.பி.250இல் அல்லது அதற்குச் சற்றுப் பின்னர் கைப்பற்றினார்கள் என்று கூறினோம். பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி, தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சி ஏற்பட்டது கி.பி.275இல் என்று கூறுகிறார் (*A Comprehensive History of India*, Vol. II, Edited by K.A. Nilakanta Sastri, 1956, p. 550). கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் களப்பிரர் ஆட்சி ஏற்பட்டிருக்க வேண்டும் என்று திரு சதாசிவபண்டாரத்தார் கூறுகிறார் (*பாண்டியர் வரலாறு*, டி.வி. சதாசிவபண்டாரத்தார், 1966, பக். 32). திரு. எம்.எஸ். இராமசாமி அய்யங்கார், கி.பி. 6ஆம் நூற்றாண்டில் களப்பிரர் தமிழ்நாட்டைக் கைப்பற்றி அரசாண்டார்கள் என்று கூறுகிறார். "சங்கம் (வச்சிரநந்தி கி.பி. 470இல்

நிறுவின திராவிட சங்கம்) கி.பி. 5ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமைக்கப்பட்டது. கி.பி. 6ஆம் நூற்றாண்டு தொடங்கினபோது தமிழ்நாட்டின் அரசியல் விரைவாக மாறுதல் அடைந்தது. இந்தக் காலத்தில்தான் களப்பிரரின் படையெடுப்பும் அவர்கள் பாண்டி நாட்டைக் கைப்பற்றியதும் நிகழ்ந்தன" என்று அவர் எழுதுகிறார் (*Studies in South Indian Jainism*, M.S. Ramasami Ayengar, 1922, pp. 52-53). இவர் கூறுவது ஏற்கத்தக்கது அன்று. களப்பிரர் தமிழகத்தை ஆட்சி செய்யத் தொடங்கிய பிறகுதான் வச்சிரநந்தியின் திராவிட சங்கம் ஏற்பட்டதே தவிர, வச்சிரநந்தியின் திராவிட சங்கம் ஏற்பட்ட பிறகு களப்பிரர் ஆட்சி ஏற்படவில்லை. ஆகவே, கி.பி. 6ஆம் நூற்றாண்டில் களப்பிரர் ஆட்சி ஏற்பட்டது என்று இவர் கூறுவது தவறு. கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் களப்பிரர் ஆட்சி ஏற்பட்டது என்பதில் ஐயம் இல்லை. மேலும், இராமசாமி அய்யங்கார் இன்னொரு செய்தியையும் கூறுகிறார். "தமிழ் நாட்டில் ஜைன மதத்தை மேலும் உறுதியாக நிலை நாட்டுவதன் பொருட்டு ஜைனர் களப்பிரரைப் படையெடுத்து வருமாறு அழைத்தார்கள் என்று தோன்றுகிறது" என்று இவர் எழுதுகிறார் (*Ibid*, p.56). இவ்வாறு இவர் கூறுவதற்குச் சான்று இல்லை. கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும் மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்திலும் தமிழகத்தில் இருந்த அரசியல் சூழ்நிலை கன்னட நாட்டுக் களப்பிரர் தமிழகத்தின் மேல் படையெடுத்து வருவதற்கு ஏற்றதாக இருந்தது. கடைச்சங்க காலத்தில் இருந்த தமிழரசர்களும் குறுநில மன்னர்களும் ஒருவர்மேல் ஒருவர் அடிக்கடி போர் செய்து கொண்டிருந்ததைச் சங்கச் செய்யுட்களிலிருந்து அறிகிறோம். காரணம் இல்லாமலே தங்களுடைய போர் வல்லமையைக் காட்டுவதற்காகவே அரசர்கள் அக்காலத்தில் அடிக்கடி ஒருவர் மேல் ஒருவர் போர் செய்தனர். போர் செய்வது அவர்களின் வழக்கமாகவும் குறிக்கோளாகவும் இருந்தது. தமிழ் நாட்டு வேந்தர்களுக்குள்ளாகவே போர் செய்வதைப் பெருமையாகக் கருதினார்கள். போர் செய்வதை ஒரு கலையாகவே அமைத்துக் கொண்டனர். அரசர்களின் போர்ச் செயல்களைப் புலவர்கள் புகழ்ந்து பாடினார்கள். போர் முறைகளில் பல முறைகளை வகுத்துக்கொண்டு அதற்குப் புறத்திணை என்றும் புறத்துறை என்றும் போர்க்கலையை வகுத்தனர். போர்த்துறைகளைக் கலையாகவே போற்றிவந்தனர். காரணம் இருந்தாலும் இல்லை யானாலும் ஒவ்வொரு அரசனும் போர்செய்துதான் ஆக வேண்டும் என்னும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. தம்முடைய போர் வெற்றிகளைப் புலவர்கள் புகழ்ந்து பாடவேண்டும் என்னும் ஆசை அரசர்க்குள் ஏற்பட்டுவிட்டது. போர்க்களத்துக்குப் போகாமல் அரசன் இறந்துவிட்டால் அவனுடைய உடலைத்

தருப்பைப் புல்லின் மேல் கிடத்தி வாளினால் மார்பை வெட்டி 'விழுப்புண்' உண்டாக்கிய பிறகு அடக்கம் செய்த நிலையும் ஏற்பட்டுவிட்டது. இந்தப் 'போர்க்களச் சூழ்நிலை' தமிழ் நாட்டையும் தமிழரசர்களையும் பலவீனப்படுத்திவிட்டபடி யால், அயல்நாட்டரசர்கள் இதைப் பயன்படுத்திக்கொண்டு படையெடுத்து வரக் காரணமாக இருந்தது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந்த இந்தச் சூழ்நிலை களப்பிர அரசரைத் தமிழகத்தின் மேல் படையெடுத்துவரத் தூண்டியது. அன்னிய நாட்டவர் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த ஆற்றல்மிக்க பேரரசர் இல்லாத நிலை களப்பிரரின் ஆட்சி தமிழகத்தில் ஏற்படக் காரணமாக இருந்தது.

முன்பு கூறியபடி பாண்டியன் உக்கிரப்பெருவழுதி, சோழன் செங்கணான், சேரமான் கோக்கோதைமார்பன், கொங்கு நாட்டுக் கணைக்கால் இரும்பொறை ஆகியோர் கடைச்சங்க காலத்தின் இறுதியில் இருந்த தமிழரசர்கள். இவர்கள் காலத்துக்குப் பிறகு இவர்களுடைய மக்கள் அல்லது உறவினர் ஆட்சிக் காலத்தில் ஏறத்தாழக் கி.பி. 250இல் களப்பிரர் தமிழகத்தைக் கைபற்றித் தங்கள் ஆட்சியை நிறுவினார்கள் என்று அறிகிறோம்.

களப்பிரர் வென்ற சேர, சோழ, பாண்டிய மன்னரின் பெயர்கள் தெரியவில்லை. மூவேந்தர்களையும் இவர்களின் கீழடங்கியிருந்த சிற்றரசர்களையும் களப்பிரர் வென்றனர் என்று வேள்விக்குடிச் செப்பேட்டுச் சாசனம் கூறுகிறது. "அளவரிய ஆதிராஜரை அகல நீக்கி அகலிடத்தைக் களப்ரனென்னுங் கலி அரைசன் கைக்கொண்ட"னன் என்று வேள்விக்குடிச் செப் பேட்டு வாசகம் கூறுகிறது (வேள்விக்குடிச் செப்பேடு, வரி 39-40).

களப்பிரர் தமிழகத்தைக் கைப்பற்றின பிறகு 'கடைச்சங்க காலம்' முடிவடைந்தது. களப்பிரர், மேற்கூறியபடி, கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கி.பி. 250இல் தமிழகத்தைக் கைப்பற்றினார்கள் என்று கொள்வதில் தவறு இல்லை.

சில களப்பிர அரசர்கள்

களப்பிரர் முன்னூறு ஆண்டுகள் அரசாண்டார்கள். அவர்களுடைய ஆட்சிமுறை எப்படி இருந்தது, அவர்களுடைய ஆட்சி செங்கோல் ஆட்சியாக இருந்ததா, அடக்கி அரசாண் டார்களா என்பது தெரியவில்லை. அவர்கள் எத்தனை பேர் அரசாண்டார்கள், அவர்களுடைய பெயர் என்ன என்னும் வரன்முறையான சரித்திரம் கிடைக்கவில்லை. சங்க காலத்துச் சேர, சோழ, பாண்டியர் வரலாறே வரன்முறையாகக் கிடைக்காத போது அன்னியராகிய களப்பிரரைப் பற்றின வரன்முறையான வரலாறு எப்படிக் கிடைக்கும்? முன்னூறு ஆண்டு ஆட்சிக்

காலத்தில் அவர்கள் எழுதிவைத்த செப்பேடுகளோ கல்வெட்டுகளோ இதுவரையில் ஒன்றேனும் கிடைக்கவில்லை. அவர்கள் வழங்கின காசு – அவர்கள் காசுகளை வெளியிட்டிருந்தால் - ஒன்றேனும் இதுவரையில் கிடைக்கவில்லை. அக்காலத்தில் வரலாறு எழுதும் வழக்கமும் இல்லை. அவர்கள் கட்டின கோயில் கட்டடங்களோ சிற்பங்களோ எதுவும் காணப்படவில்லை. ஆகவே, அவர்களுடைய வரலாற்றையறிவதற்கு யாதொரு சான்றும் கிடைக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒன்றிரண்டு இலக்கியச் சான்றுகள் மட்டுங்கிடைக்கின்றன. அவ்வளவுதான்.

களப்பிரரின் போர்க்கள வெற்றியைப் பழைய வெண்பா ஒன்று கூறுகிறது. மிகத் தொன்மை வாய்ந்த அந்த வெண்பா கி.பி. 10ஆம் நூற்றாண்டு நூலாகிய *யாப்பருங்கலம்* என்னும் யாப்பிலக்கண நூலின் விருத்தியுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

படுபருந்தும் சூர்ப்பேயும் பல்லிலங்கும் நாயும்
கொடியும் கழுகுமிவை கூடி – வடிவுடைய
கோமான் களப்பாளன் கொல்யானை போமாறு
போமாறு போமாறு போம்

என்பது அந்தப் பாடல். களப்பாள (களப்பிர) அரசனுடைய யானை சேனைகள் போர்க்களத்துக்குப் போகும்போது, பேய்களும், நரி, ஓநாய், நாய், பருந்து, கழுகு முதலான பிணந்தின்னிப் பிராணிகளும் அந்தச் சேனையோடு போயின என்று இச்செய்யுள் கூறுகிறது. அதாவது, போர்க்களத்தில் போர்வீரர்களும் யானை, குதிரைகளும் செத்து மடியுமாகையால் இந்தப் பிணந்தின்னிப் பிராணிகளுக்கு இறைச்சி விருந்து கிடைத்தது என்பது இதன் கருத்து. களப்பாள அரசன் மற்ற அரசர்களோடு போர் செய்து வெற்றி பெற்றான் என்பது இதன் திரண்ட பொருள்.

மற்றும் நான்கு பழைய வெண்பாக்களை *யாப்பருங்கல* விருத்தியுரை மேற்கோள் காட்டுகிறது. அந்தப் பழைய வெண்பாக்கள், களப்பிர அரசன் சேர, சோழ, பாண்டியரை வென்று அவர்களைச் சிறையிலிட்டுத் தளை (விலங்கு) இட்டபோது அந்த மூவரசர்களால் பாடப்பட்டவை. *யாப்பருங்கல* விருத்தியுரை மேற்கோள் காட்டுகிற அந்தப் பழம் பாடல்கள், பிற்காலத்தில் *தனிப்பாடற்திரட்டு*, *புலவர் புராணம்* முதலான நூல்களிலும் சேர்க்கப்பட்டுள்ளன. அப்பழம் பாடல்கள் இவை:

சேர மன்னன் பாடியது:

தினை விதைத்தார் முற்றந் தினை யுணங்கும், செந்நெல்
தனை விளைத்தார் முற்ற மதுதானாம் – கனைசீர்
முரசுணங்கும் சங்குணங்கும் மூரித்தேர்த் தானை
அரசுணங்கும் அச்சுதன்தன் முற்றத்து

சோழ அரசன் பாடியது:

அரசர்குல திலகன் அச்சுதன் முற்றத்தில்
அரச ரவதரித்த வந்நாள் – முரசதிரக்
கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்றளையை
வெட்டிவிடும் ஓசை மிகும்

பாண்டிய மன்னன் பாடியது:

குறையுளார் எங்கிரார் கூர்வே லிராமன்
நிறையறு திங்கள் இருந்தான் – முறைமையால்,
ஆலிக்குத்தானை யலங்குதார் அச்சத! முன்
வாலிக் கிளையான் வரை

இதைக் கேட்ட அச்சுதக் களப்பாளன் பாண்டியனுக்கு இன்னொரு தளை இட்டான். அப்போது பாண்டியன் இன்னொரு வெண்பாவைப் பாடினான்.

குடகர் குணகடலென் றார்த்தார் குடகர்க்
கிடகர் வடகடலென் றார்த்தார் – வடகடலர்
தென்கடலென் றார்த்தார் தில்லையச் சுதானந்தன்
முன்கடை நின்றார்க்கும் முரசு

இந்தக் களப்பிர அரசனை இப்பாடல்கள் அச்சுதன் என்று கூறுகின்றன. அச்சுதன் என்பது களப்பிர அரசர்களின் பொதுப் பெயர் என்று தோன்றுகிறது. பாலி மொழியில் எழுதப்பட்ட ஒரு பௌத்தச் செய்யுள் ஒரு களப்பிர அரசரை அச்சுதன் என்று கூறுகிறது. இன்னொரு தமிழ்ச் செய்யுள் ஒன்று இன்னொரு களப்பிர அரசனை அச்சுதன் என்று கூறுகிறது. ஆகையால், களப்பிர அரசர்கள் ஒவ்வொருவரும் அச்சுதன் என்று பெயர் கொண்டிருந்தனர் என்பது தெரிகின்றது.

சேர, சோழ, பாண்டியர் களப்பாளரைத் (களப்பிரரைத்) தமிழ்ச் செய்யுளில் பாடினபடியால், களப்பிரரும் தமிழரசரே என்று பி.டி. சீனிவாச அய்யங்கார் கூறுகிறார் (*History of the Tamils*, 1929, p. 535). இவர் கூற்றுத் தவறு. களப்பிரர் தமிழரல்லர்; கன்னடர் என்பதில் ஐயமில்லை.

யாப்பருங்கலம் என்னும் செய்யுள் இலக்கண நூலின் விருத்தியுரையாசிரியர் தம்முடைய உரையில் நான்கு அழகான செய்யுட்களை மேற்கோள் காட்டியுள்ளார். அந்தச் செய்யுட்கள் களப்பிர அரசரைப் பற்றியவை (இணைப்பு 1 காண்க). அச்செய்யுட்களில் 'கெடலரு மாமுனிவர்' என்று தொடங்குகிற செய்யுள் அச்சுதன் என்னும் களப்பிர அரசனைக் காத்தருள வேண்டும் என்று திருமாலை வேண்டுகிறது ('புயலுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன், தொன்றுமுதிர் கடலுலகம் முழுதுடன் ஒன்றுபுரி திகிரி உருட்டுவோன் எனவே').

'அலைகடற் கதிர்முத்தம்' என்று தொடங்கும் இன்னொரு செய்யுள், களப்பிர அரசன் சங்கு சக்கரம் ஏந்திய திருமாலை வழிபட்டு அவன் அருளினால் பெரிய நிலத்தை ஆளும் பேறுபெற்றான் என்றும் அந்த அரசனை அருகக் கடவுள் காத்தருள வேண்டும் என்றும் வேண்டுகிறது. 'அகலிடமும் அமருலகும்' என்று தொடங்குகிற இன்னொரு செய்யுள் ஒரு களப்பிர அரசனுடைய ஆற்றல், கொற்றம், வீரம் முதலியவற்றைப் புகழ்கிறது. அதில் அந்தக் களப்பிர அரசன் 'அச்சுதர்கோ' என்று கூறப்படுகிறான். அதாவது, அச்சுத குலத்தில் பிறந்த அரசன் என்று கூறப்படுகிறான்.

'நலங்கிளர் திருமணியும்' என்று தொடங்குகிற இன்னொரு செய்யுள், செங்கோல் விண்ணவன் (விண்ணவன் - விஷ்ணு) என்றும் களப்பிர அரசனுடைய ஆட்சி ஓங்கவேண்டும் என்றும் அருகக் கடவுளை வேண்டுகிறது. விண்ணவன் (விண்ணு - விஷ்ணு) என்று பெயர் பெற்றிருப்பதனால் இவ்வரசன் வைணவ சமயத்தவன் என்று தெரிகிறான். சேர, சோழ, பாண்டியர் களப்பிர அரசனைப் பாடிய பாடல்களில் களப்பிரன் அச்சுதன் என்று கூறப்பட்டதை முன்னமே கண்டோம்.

கி.பி. 5ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் வாழ்ந்திருந்த ஆசாரிய புத்தததத்ததேரர் சோழ நாட்டுத் தமிழர். அவர் பேர் போன பௌத்தப் பெரியார். அவர் பாலி மொழியில் *புத்தவம்சாட்டகதா, அபிதம்மாவதாரம், வினயவினிச்சயம், உத்தரவினிச்சயம், ரூபாரூபவிபாகம், ஜினாலங்காரம்* முதலான நூல்களை எழுதியுள்ளார். சோழ நாட்டுப் பூதமங்கலம் என்னும் ஊரில் வேணுதாசர் கட்டின பௌத்த விகாரையில் இவர் தங்கியிருந்த போது *வினயவினிச்சயம்* என்னும் நூலை களம்ப (களப்ர) அரசன் காலத்தில் இவர் எழுதி முடித்ததாக இவர் அந்த நூலில் கூறியுள்ளார் ('Contemporary Buddha Gosha', A.P. Buddha Datta, *University of Ceylon Review*, 1945, Vol. III, No. 1, pp. 34-70).

பஸாத ஜனனே ரம்மே பாஸாதே வஸதா மயா
புத்தஸ்ஸ புத்தஸீஹேன வினயஸ்ஸ வனிச்சயோ
புத்தஸீஹம் ஸமுத்திஸ்ஸ மம ஸத்தி விஹாரிம்
கதோ யம் பன பிக்கூனம் ஹிதத்தாய ஸமாஸதோ
வியைஸ்ஸாவ பொத்தந்தம் ஸுகேனே வாசிரேன ச
அச்சுதச்சுத விக்கந்தே களப்ப குலநந்தனே
மஹிம் ஸமனு ஸாஸந்தே ஆரத்தோ ச ஸமாபிதோ

இதில் அச்சுத விக்கந்தன் களப்ப (களப்பிர) குலத்தில் பிறந்தவன் என்று கூறப்படுகிறான்.

இந்தச் சான்றுகளினாலே களப்பிர அரசர் வைணவர் என்றும் வைணவப் பெயராகிய அச்சுதன் என்னும் சிறப்புப் பெயரைக் கொண்டிருந்தார்கள் என்பதும் தெரிகின்றன.

களப்பிர அரசர் தொண்டை நாட்டைத் தவிர சேர, சோழ, பாண்டிய நாடுகளை வென்று அரசாண்டார்கள் என்பது உறுதியாகத் தெரிகிறது. இவர்கள் சேர, சோழ, பாண்டியரின் கொடிகளைத் தங்களுடைய கொடிகளாகக் கொண்டிருந்தனர் என்பதைக் 'கெடலருமா முனிவர்' என்று தொடங்கும் செய்யுளி னால் அறிகிறோம் (இணைப்பு 1 காண்க). அந்தச் செய்யுளின் இறுதிப் பகுதி இவ்வாறு கூறுகிறது:

அடுதிறல் ஒருவ! நிற் பரவுதும், எங்கோன்
தொடுகழற் கொடும்பூண் பகட்டெழில் மார்பிற்
கயலொடு கிடந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்
ஒன்றுகடல் உலகம் முழுவதும்
ஒன்றுபு திகிரி யுருட்டுவோன் எனவே

இதனால், கயல் (மீன்), சிலை (வில்), கொடுவரி (புலி) ஆகிய அடையாளங்களைக் களப்பிரர் கொண்டிருந்தனர் என்பது தெரிகின்றது. அதாவது, பாண்டியனுடைய மீன் கொடியையும் சேரனுடைய வில் கொடியையும் சோழனுடைய புலிக் கொடியையும் களப்பிரர் தங்களுடைய கொடியாகக் கொண்டிருந் தார்கள் என்பது தெரிகிறது. சேர, சோழ, பாண்டியரின் அடை யாளங்களைக் கொண்டிருந்தபடியால் இம்மூன்று நாடுகளையும் அவர்கள் கைப்பற்றி அரசாண்டார்கள் என்று ஐயமறத் தெரிகின்றது.

களப்பிரர் எத்தனை பேர் அரசாண்டார்கள் அவர்கள் நாட்டுக்கு என்னென்ன செய்தார்கள் என்பது தெரியவில்லை. பாண்டி நாட்டில் மதுரையைத் தலைநகரமாக்கிக்கொண்டு களப்பிரர் அரசாண்டதை அறிகிறோம். உறையூர், காவிரிப் பூம்பட்டினங்களிலும் இருந்து சோழ நாட்டைக் களப்பிரர் அரசாண்டனர் என்பதும் தெரிகின்றது. தில்லையில் (சிதம்பரம்) இருந்தும் அரசாண்டதையறிகிறோம். சோழ நாட்டிலே களப்பாள் என்னும் ஊரில் ஒரு களப்பாளன் இருந்ததை யறிகிறோம். சேர நாட்டில் எந்த ஊரில் இருந்து களப்பிரர் ஆட்சி செய்தனர் என்பது தெரியவில்லை. களப்பிரர் ஆட்சி, தொண்டை மண்டலத்தைத் தவிர ஏனைய தமிழ்நாடெங்கும் இருந்தது என்பது தெரிகிறது. களப்பிரர் தமிழ்நாட்டைக் கைப்பற்றிய போதே பல்லவ அரசர் தமிழகத்தின் வடபகுதியாகிய தொண்டை நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆகவே, களப்பிரர் ஆட்சி தொண்டை நாட்டில் ஏற்படவில்லை. அவர்களுடைய ஆட்சி தென்பெண்ணையாற்றுக்குத் தெற்கே சேர, சோழ, பாண்டிய நாடுகளில் இருந்தது.

களப்பிர அரசனுக்குக் கீழ், அவனுக்கு அடங்கிக் களப்பிர குலத்து அரசர் சேர, சோழ, பாண்டிய நாடுகளை யரசாண்டனர் என்பது தெரிகிறது.

மூர்த்தியார்

பாண்டிய நாட்டில் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் சில காலம் மூர்த்திநாயனார் என்னும் ஒரு வணிகர் அரசாண்டதைப் பெரிய புராணம் கூறுகிறது. மதுரையை ஆண்ட களப்பிர அரசன் பிள்ளைப்பேறு இல்லாமல் இறந்துபோனான். அவன் சைவ சமயத்துக்கு இடையூறுகளைச் செய்தவன். அவன் இறந்தபோது, அமைச்சர்கள் பட்டத்து யானையின் கண்ணைத் துணியினால் கட்டி மறைத்து நகரத்தில் போகவிட்டனர். அந்த யானை யாரைத் தன்மேல் ஏற்றிக்கொண்டு வருகிறதோ அவரை அரசனாக்கிப் பட்டம் கட்டுவது அக்காலத்து மரபு. நகர வீதிகளில் சென்ற யானை சொக்கநாதர் ஆலயத்தருகில் நின்றுகொண்டிருந்த மூர்த்தியாரைத் தன் மேல் ஏற்றிக்கொண்டு சென்றது. அமைச்சர்கள் அவருக்கு முடிசூட்டி அரசனாக்கத் தொடங்கினார்கள். மூர்த்தியார் தமக்குப் பொன்முடி வேண்டாம் என்று மறுத்துவிட்டார். சிவனடியார் ஆகையால், அவர் திருநீற்றையும் உருத்திராக்கத்தையும் சடை முடியையும் அணிந்து பட்டங் கட்டப் பெற்றார். அதனால் அவர் 'மும்மையால் உலகாண்ட மூர்த்தியார்' என்று கூறப்பட்டார். இவருடைய வரலாற்றைப் பெரிய புராணத்தில் (மூர்த்திநாயனார் புராணம்) காணலாம். மூர்த்தியார் எத்தனை யாண்டுகள் அரசாண்டார், அவருக்குப் பிறகு களப்பிரர் ஆட்சி மீண்டும் எப்படி மதுரையில் ஏற்பட்டது என்பது தெரியவில்லை. இது நிகழ்ந்த காலமும் தெரியவில்லை.

கூற்றனார்

சோழ நாட்டை யரசாண்ட களப்பிர அரசர்களில் கூற்றனாரும் ஒருவர். இவரைக் கூற்றனார் என்றும் கூற்றுவ நாயனார் என்றுங் கூறுவர். இவருடைய வரலாற்றைப் பெரிய புராணத்தில் (கூற்றுவநாயனார் புராணம்) அறிகிறோம். 'ஆர் கொண்ட வேற்கூற்றன் களந்தைகோன் அடியேன்' என்று சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத்தொகையில் இவரைக் கூறுகிறார். இவர் களப்பாளன் (களப்பிரன்) குலத்தவர் என்று திருத்தொண்டர் திருவந்தாதியில் நம்பியாண்டார் நம்பி கூறுகிறார் (திருத்தொண்டர் திருவந்தாதி 47).

நாதன் திருவடியே முடியாகக் கவித்து நல்ல
போதங் கருத்திற் பொதிந்தமை யாலதுகை கொடுப்ப
ஓதந்தரு வியஞான மெல்லாம் ஒரு கோலின் வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாள னாகிய கூற்றுவனே

களப்பிர அரசர்கள் பொதுவாகச் சைன சமயத்தவர் என்றாலும், அவர் குலத்தைச் சேர்ந்த கூற்றுவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவராக இருந்தார். சோழ நாட்டிலிருந்த இவர், சோழ அரசர்களுடைய முடியைத் தரித்து அரசாள வேண்டும் என்று

விரும்பினார். களப்பிரர் ஆட்சிக் காலத்தில் பழைய சோழ அரச பரம்பரையார் களப்பிரருக்குக் கீழடங்கியிருந்தார்கள். அவர்களுடைய முன்னோரான சோழர் அணிந்திருந்த மணிமுடி தில்லை வாழ் அந்தணர்களிடத்தில் இருந்தது. 'முடிஒன்று ஒழிய அரசர் திருவெல்லாம்' உடையராக இருந்த கூற்றுவர், சோழ அரசருடைய பழைய முடியைத் தரித்து அரசாள விரும்பினார். அவர் சோழ அரசருடைய முடியை வைத்திருந்த தில்லை வாழந்தணர்களை அணுகி அந்த முடியைக் கொண்டு தனக்கு முடிசூட்டும்படி கேட்டார். அவர்கள், 'சோழ அரசர் குடியில் பிறந்தவர்களுக்கு அல்லாமல் மற்றவர்களுக்கு முடிசூட்டமாட்டோம்' என்று சொல்லி, சோழர் முடியைத் தம்மில் ஒரு குடும்பத்தாரிடம் ஒப்படைத்துவிட்டு மற்றவர் எல்லோரும் சேர நாட்டுக்குப் போய்விட்டார்கள் (கூற்றுவ நாயனார் புராணம் 4, 5).

மல்லல் ஞாலம் புரக்கின்றார்
மணிமா மவுலி புனைவதற்கு
தில்லைவா ழந்தணர் தம்மை
வேண்ட அவரும் 'செம்பியர்தம்
தொல்லை நீடுங்குல முதலோர்க்
கன்றிக் கட்டோம்முடி' என்று
நல்கா ராகிச் சேரலன்தன்
மலைநா டனைய நண்ணுவார்

ஒருமை உரிமை தில்லைவா
ழந்தணர்கள், தம்மில் ஒரு குடியைப்
பெருமை முடியை அருமைபுரி
காவல் கொளும்படி இருத்தி
இருமை மரபுந் தூயவர்தாம்
சேரர் நாட்டில் எய்தியபின்
வரும்ஐயுற வால்மனந் தளர்ந்து
மன்றுள் ஆடும் கழல்பணிவார்

இதனால், கூற்றுவனார், முடிசூடாமலே சோழ நாட்டை யரசாண்டார் என்பது தெரிகின்றது.

ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகளாகத் தமிழகத்தை யரசாண்ட களப்பிர அரசர்களைப் பற்றி வரன்முறையான வரலாறு கிடைக்காமல், மேற்காட்டியபடி, அங்கொரு துணுக்கும் இங்கொரு துணுக்குமாகக் கிடைக்கிறது. ஆனால், தமிழ்நாட்டு அரசியலில் களப்பிர அரசருக்குப் பெரிய எதிர்ப்புகளும் அரசியல் கலகங்களும் குழப்பங்களும் நாட்டில் இருந்துகொண்டிருந்தன என்பதைச் சில குறிப்புகளைக் கொண்டு அறிகிறோம். தமிழகத்தை யரசாண்ட களப்பிர அரசர்கள் எத்தனை பேர், அவர்களுடைய பெயர் என்ன, அவர்கள் ஒவ்வொருவர் காலத்திலும் நடந்த நிகழ்ச்சிகள் எவை என்னும் வரலாறு ஒன்றும் தெரியவில்லை.

களப்பிரர் காலத்து இரேணாட்டுச் சோழர்

தமிழகத்தில் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் சோழ அரசர்கள் களப்பிரருக்குக் கீழடங்கியிருந்தனர். அக்காலத்தில் சோழர் குலத்தைச் சேர்ந்த ஒரு சோழன் தமிழகத்துக்கு வடக்கே இருந்த வடுக (தெலுங்கு) நாட்டுக்குச் சென்று அங்கு ஒரு சிறு இராச்சியத்தை அமைத்துக்கொண்டு அரசாண்டான். அவன் அமைத்துக்கொண்ட அந்த இராச்சியத்தை அவனுடைய பரம்பரையினர் சில நூற்றாண்டுகள் வரையில் அரசாண்டார்கள். இந்த வரலாற்றுச் செய்தி கல்வெட்டுச் சாசனங்களில் இருந்து புதிதாகக் கிடைத்திருக்கிறது. தெலுங்கு நாட்டில் கடப்பை மாவட்டத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுச் சாசனங்களும் செப்பேட்டுச் சாசனங்களும் இந்த வரலாற்றுச் செய்தியைக் கூறுகின்றன.

இப்போதைய கடப்பை, கர்னூல் மாவட்டங்கள் அக்காலத்தில் சோழர்களுடைய ஆட்சியில் இரேணாடு ஏழாயிரம் என்று பெயர் பெற்றிருந்தன. இரேணாடு ஏழாயிரத்தை யாண்ட சோழர், இரேணாட்டுச் சோழர் என்றும் தெலுங்குச் சோழர் என்றும் பெயர் பெற்றிருந்தனர். பிற்காலத்தில் சோழர் என்னும் பெயர் சோடர் என்று திரிந்துவிட்டது. அவர்கள் பிற்காலத்தில் ரேணாட்டுச் சோடர் என்றும் தெலுங்குச் சோடர் என்றும் கூறப்பட்டனர். தமிழராகிய அந்தச் சோழர் தெலுங்கு நாட்டை யரசாண்டபடியால், நாட்டு மொழியாகிய தெலுங்கு மொழியைத் தங்களுடைய அரசாங்க பாஷையாக அமைத்துக் கொண்டு தெலுங்கிலேயே கல்வெட்டுச் சாசனங்களையும் செப்பேட்டுச் சாசனங்களையும் எழுதினார்கள். பிற்காலத்தில் அவர்கள் தெலுங்கராகவே மாறிவிட்டார்கள்.

இரேணாட்டுச் சோழர் தங்களைத் தமிழச் சோழர் பரம்பரை யினர் என்று தங்களுடைய கல்வெட்டிலும் செப்பேட்டிலும் எழுதியுள்ளனர். காவிரியாற்றுக்குக் கரைகட்டின பேர்போன கரிகாற் சோழனுடைய குலத்தினர் என்றும் உறையூரிலிருந்து வந்தவர் என்றும் தங்களை இவர்கள் கூறியுள்ளனர். மற்றும், சோழர்களுடைய அடையாளமாகிய புலியையே இவர்களும்

தங்களின் அடையாளச் சின்னமாகக் கொண்டிருந்தார்கள். ஆகவே, இவர்கள் காவிரி பாயும் சோழ நாட்டையாண்ட சோழர்களின் பரம்பரையினர் என்பதில் சற்றும் ஐயமில்லை. இரேணாடு ஏழாயிரம் சோழர்களின் ஆட்சியில் இருந்தபடியால் அந்த நாடு சோழ நாடு என்றும் கூறப்பட்டது.

சீன தேசத்திலிருந்து பாரத தேசத்துக்கு வந்து பல நாடுகளைச் சுற்றிப் பார்த்த யுவான் சுவாங் என்னும் பௌத்தன் தன்னுடைய யாத்திரைக் குறிப்பில் இரேணாட்டை சு-லி-ய என்று எழுதியுள்ளார். சு-லி-ய என்பது சோழிய அல்லது சோழ என்னும் சொல்லின் திரிபு. பாரத நாட்டில் தல யாத்திரை செய்த யுவான் சுவாங் ஆந்திர நாட்டில் அமராவதி நகரத்தில் சில காலம் தங்கியிருந்து, பிறகு தெற்கே யாத்திரை செய்து தொண்டை மண்டலத்தில் காஞ்சிபுரத்துக்கு வந்து தங்கினார். கி.பி. 639-40ஆம் ஆண்டில் இவர் அமராவதியிலும் காஞ்சியிலும் தங்கியிருந்தார். அமராவதியிலிருந்து காஞ்சிபுரத்துக்கு வந்த போது இடை வழியில் சுலிய (சோழ) நாடு இருந்தது என்று இவர் தம்முடைய யாத்திரைக் குறிப்பில் எழுதியுள்ளார்.

தொண்டை நாட்டுக்குத் தெற்கே காவிரியாறு பாய்கிற சோழ நாடு இருக்கிறது என்பதை அறிவோம். ஆனால், சீனராகிய யுவான் சுவாங், தொண்டை நாட்டுக்கு வடக்கே சோழ நாடு இருந்தது என்று எழுதியுள்ளார். இவர் கூறுவது தவறாக இருக்குமோ என்னும் ஐயம் இருந்தது. ஆனால், அண்மைக் காலத்தில் தெலுங்கு நாட்டில் கடப்பை மாவட்டத்தில் கிடைத்த கல்வெட்டுகளும் செப்பேடுகளும் அந்தப் பகுதி நாட்டைச் சோழ குலத்து மன்னர் அரசாண்டனர் என்னும் வரலாற்றுச் செய்தியைக் கூறுகின்றன. எனவே, தொண்டை நாட்டுக்கு வடக்கே சோழ நாடு இருந்தது என்று யுவான் சுவாங் கூறியுள்ளது தவறு அன்று என்பதும் உண்மையான செய்தி என்றும் தெரிகின்றது. அவர் சு-லி-ய என்று கூறுவது இரேணாட்டையாகும். தமிழ்நாட்டின் வடஎல்லையில் இருந்த திருவேங்கடக் கோட்டத்துக்கு (வேங்கட மலைக்கு) வடமேற்கேயுள்ள இப்போதைய கடப்பை, கர்னூல் மாவட்டங்களே அக்காலத்தில் இரேணாடு என்றும் சோழியநாடு என்றும் பெயர் பெற்றிருந்தது என்பதை யறிகிறோம். இரேணாட்டைச் சோழ அரசர் பரம்பரையார் அரசாண்டனர் என்னும் வரலாறு அண்மைக் காலம் வரையில் தெரியாமல் மறைந்திருந்தது.

இரேணாட்டுச் சோழர் தங்களுடைய சாசனங்களிலே தங்களைச் சோழன் கரிகாலனுடைய பரம்பரையில் வந்தவர் என்று கூறுகிறபடியினாலே, கரிகாற் சோழன் காலத்திலிருந்து இரேணாட்டைச் சோழர் அரசாண்டு வந்தனர் என்று சில வரலாற்று ஆசிரியர் கருதுகிறார்கள். இவர்கள் கருத்து சரியன்று.

கடைச்சங்க காலத்தில் கி.பி. முதலாம் நூற்றாண்டில் இருந்த கரிகாற் சோழன் தமிழகத்துக்கு வடக்கே இருந்த நாடுகளையும் வென்றான் என்று சங்கச் செய்யுட்கள் கூறுகின்றன (*பட்டினப்பாலை* 275, 276; *சிலப்பதிகாரம்* 5ஆம் காதை). ஆகவே, கரிகாற் சோழன் காலத்திலிருந்து இரேணாட்டைச் சோழர் அரசாண்டு வந்தனர் என்று சிலர் கருதுகின்றனர். சோழன் கரிகாலன் அடைந்த வெற்றிகள் போர்க்கள வெற்றியே. அவன் வென்ற வடநாட்டு நாடுகளை அவன் தன்னுடைய ஆட்சியில் வைத்து அரசாளவில்லை. ஆகவே, இரேணாட்டைச் சோழர் கரிகாற் சோழன் காலத்திலிருந்து அரசாண்டனர் என்பது ஏற்கத்தக்கதன்று. களப்பிர அரசர் சோழ நாட்டைக் கைப்பற்றி யரசாண்ட போது அவர்களுக்குக் கீழடங்கியிருந்த சோழர் பரம்பரையைச் சேர்ந்த ஒரு சோழன் இரேணாட்டை வென்று தன்னுடைய ஆட்சியை நிறுவினான் என்பதும் அவனுடைய பரம்பரையார் சில நூற்றாண்டுகள் அந்நாட்டை யரசாண்டனர் என்பதும் வரலாற்று உண்மை என்று தோன்றுகின்றது. இரேணாட்டுச் சோழர் தங்களைக் கரிகாற் சோழனுடைய பரம்பரையைச் சேர்ந்தவர் என்று கூறுகிறார்களே தவிர, அவன் காலத்தைத் தொடர்ந்து இரேணாட்டை யரசாண்டதாகக் கூறவில்லை.

இரேணாட்டுச் சோழர்கள் எழுதியுள்ள சாசனங்களில் சிலவற்றை இங்குச் சுருக்கமாக அறிமுகப்படுத்துவது பொருத்த மாகும்.

கடப்பை மாவட்டம் ஜம்மல மடுகு தாலுகாவில் கோசினெ பள்ளி கிராமத்தில் ஒரு களத்து மேட்டில் கருங்கற்றூண் ஒன்று இருக்கிறது. இந்தத் தூணின் மூன்று பக்கங்களில் தெலுங்கு எழுத்தில் சாசனம் எழுதப்பட்டுள்ளது. இதில் சோழ மகாராசன் என்னும் அரசன் பெயர் காணப்படுகிறது. இந்த அரசன், கரிகாற் சோழனுடைய பரம்பரையில் சூரிய குலத்தில் காசிப கோத்திரத்தில் பிறந்தவன் என்று தன்னைக் கூறிக்கொள்கிறான் (408 of 1904). மேற்படி தாலுகாவில் முட்டனூருக்கு அருகில், சிலம்கூரிலிருந்து வருகிற சாலையின் ஓரத்தில் உள்ள கருங்கற் சாசனம், சோழ மகாராசன் ஆதித்தபட்டாரகருக்கு நிலத்தையும் பொன்னையும் தானஞ் செய்ததைக் கூறுகிறது (405 of 1904). இந்த ஊரிலேயே உள்ள சிவன் கோயில் முற்றத்தில் கிடக்கிற கல்லில் சோழ அரசனுடைய கல்வெட்டெழுத்துச் சாசனம் காணப்படு கிறது. இந்தச் சாசனக் கல்லின் அடிப்புறம் உடைந்து கிடக்கிறது. கல்லின் மேற்புறத்தில் சாசன எழுத்துக்கு மேலே, வாலைச் சுருட்டிக் கொண்டு நிற்கிற புலியின் உருவம் பொறிக்கப் பட்டிருக்கிறது (406 of 1904). புலியின் உருவம் சோழருடைய அடையாளக் குறி என்பதை யறிவோம். இரேணாட்டுச் சோழரும்

புலியின் அடையாளத்தைக் கொண்டிருந்தபடியால் இவர்கள் சோழர் குலத்தவர் என்பது தெளிவாகிறது.

கடப்பை மாவட்டம் ஜம்மலமடுகு தாலுக்காவில் பெத்த முடியம் என்னும் ஊரில் சிதைந்து போன கல் எழுத்துச் சாசனம் காணப்படுகிறது. இந்தச் சாசனத்தில் சோழ மகாராசன் என்னும் பெயர் காணப்படுகிறது. சாசனக் கல்லின் மேற்புறத்தில் புலியின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புலி வாயைத் திறந்து கொண்டு (உறுமிக்கொண்டு) நிற்பதுபோலக் காணப்படுகிறது (351 of 1905). இந்த மாவட்டத்தில் சமயபுரம் தாலுகாவில் சிலம்கூர் என்னும் ஊரில் ஒரு வயலில் உடைந்து கிடக்கிற கற்றூணில் தெலுங்கு எழுத்துச் சாசனங்கள் காணப்படுகின்றன. இதில் சோளமஹாதேவுலு (சோழ மகாதேவர்) என்னும் பெயர் காணப்படுகிறது (396 of 1904). இவ்வூர் அகத்தீஸ்வரர் கோவிலின் முன்புறத்தில் விழுந்து கிடக்கிற கற்றூணில் மூன்று பக்கங்களில் தெலுங்கு எழுத்துச் சாசனம் எழுதப்பட்டுள்ளது. இச்சாசனத்தில் விக்கிரமாதித்திய சோள மஹாராஜுலு எளஞ்சோள மஹாதேவி (இளஞ்சோழ மகாதேவி) என்னும் சோழ அரச அரசியரின் பெயர்கள் காணப்படுகின்றன (400 of 1904). கலமள்ள என்னும் ஊரில் உள்ள சென்னகேசவ கோவிலின் முற்றத்தில் உடைந்து கிடக்கிற கற்றூணின் இரண்டு பக்கங்களில் தெலுங்கு எழுத்துச் சாசனம் காணப்படுகிறது. இதில் இரேணாட்டு அரசன் தனஞ்சயேண்டு என்பவன் பெயர் காணப்படுகிறது (380 of 1904).

கடப்பை மாவட்டம் கமலபுரம் தாலுக்கா மலெபாடு என்னும் ஊருக்கு மேற்கேயுள்ள கிணற்றின் அருகில் கிடக்கிற கற்றூணில் இரேணாட்டுச் சோழ அரசர்கள் சாசனம் எழுதப்பட்டுள்ளது. சித்தி ஆயிரம், இரேணாடு, ஏழாயிரம் ஆகிய நாடுகளை அரசாண்ட சக்தி கோமார விக்கிரமாதித்தியனின் மகனான சோள மகாராஜாதிராஜ விக்கிரமாதித்திய சத்யாதி துன்று என்னும் அரசன் நிலங்களைத் தானங்கொடுத்ததை இந்தச் சாசனம் கூறுகிறது (399 of 1904). மலெபாடு என்னும் இந்த ஊரிலேயே 1905ஆம் ஆண்டில் இரேணாட்டுச் சோழன் புண்ணிய குமாரனுடைய செப்பேட்டுச் சாசனம் கிடைத்துள்ளது. இந்தச் செப்பேட்டுச் சாசனம் *எபிகிராபியா இந்திகா* என்னும் சஞ்சிகையின் பதினொன்றாம் தொகுதியில் திரு. கிருஷ்ணசாஸ்திரியால் வெளியிடப்பட்டுள்ளது (*Epigraphia Indica*, Vol. XI, pp. 337-46). இரணிய இராஷ்ட்ரத்தில் சுப்ரயோக ஆற்றின் தென்கரையில் உள்ள பிரிபாறு என்னும் கிராமத்தில் சில நிலங்களைப் போர்முக ராமன் புருஷசார்த்துல புண்ணிய குமாரன் என்னும் அரசன் தானங்கொடுத்ததை இந்தச் செப்பேடு கூறுகிறது. இந்தப் புண்ணிய குமாரனுக்கு மார்த்த வசித்தன், மதனவிலாசன் என்னும் சிறப்புப் பெயர்களும் இருந்தன. இவன், சூரிய குலத்தில் பிறந்த

கரிகாலச் சோழனுடைய பரம்பரையில் வந்த சோள மகாராசனுடைய மகன் என்றும் தனஞ்சயவர்மனுடைய பேரன் என்றும் நந்திவர்மனுடைய இரண்டாம் பேரன் என்றும் தன்னை இச்செப்பேட்டில் கூறிக்கொள்கிறான். இந்தச் சாசனம் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இந்தச் செப்பேட்டின் தலைப்பில் புலியின் உருவம் எழுதப்பட்டிருக்கிறது. இதைக் கிருஷ்ண சாஸ்திரி சிங்கம் என்று கூறுகிறார். திரு. வெங்கையா அவர்கள் இது புலி என்று கூறுகிறார். சோழர்களுக்குப் புலி அடையாளக் குறியாக இருந்தது. சில கல்வெட்டுச் சாசனங்களிலும் புலியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளதை முன்னமே காட்டினோம்.

நன்னிச் சோடன் (நன்னிச்சோழன்) என்னும் பெயருள்ள இரேணாட்டு அரசன் ஒருவன் தெலுங்கு மொழியில் குமார சம்பவம் என்னும் சிறந்த செய்யுள் இலக்கியத்தை எழுதியுள்ளான். அது மிகச் சிறந்த தெலுங்கு இலக்கியமாகப் புகழப்படுகிறது. இந்த நூலில் இந்த அரசன் தன்னுடைய சோழர் குலத்தைக் கூறுகிறான். தான், கரிகால் சோழனுடைய பரம்பரையைச் சேர்ந்தவன் என்றும், உறையூர் சோழ மரபைச் சேர்ந்தவன் என்றும் கூறிக் கொள்கிறான். கற்கோழி கூவிற்று என்றும் கூறுகிறான். உறையூருக்குக் கோழி என்றும் பெயருண்டு. உறையூரில் கோழிச் சேவல் ஒன்று யானையோடு போர் செய்து வென்றபடியால் உறையூருக்குக் கோழி (கோழியூர்) என்று பெயர் வந்தது என்றும் கூறுவர். ஆனால், கல்லினால் செய்யப்பட்ட கோழி கூவிற்று என்று கூறுவது வியப்பாக இருக்கிறது. இந்தக் குமாரசம்பவம் என்னும் நூலில் பல தமிழ்ச் சொற்கள் உள்ளன என்றும் அச்சொற்களின் பொருள் விளங்கவில்லை என்றும் கூறுகின்றனர். தெலுங்குச் சோழர்களின் கல்வெட்டுக்கள் எல்லாவற்றையும் இங்குக் கூறவேண்டுவதில்லை.

தமிழ்நாட்டை யரசாண்ட களப்பிர அரசர் ஆட்சிக் காலத்தில் இரேணாட்டை யாண்ட சோழர்களைப் பற்றி மட்டும் இங்குக் கூறுவோம்.

இரேணாட்டை யரசாண்ட சோழர் அங்கு நிலைத்து நெடுங்காலம் அரசாண்ட போதிலும் அவர்கள் முழுச் சுதந்தரராக இருக்கவில்லை. தங்களைவிடப் பேரரசரின் துணையை நாடி வாழ வேண்டியவராக இருந்தனர். முதலில் அவர்கள் தொண்டை நாட்டை யரசாண்ட பல்லவ மன்னர்களுக்கு அடங்கியிருந்தனர். அவர்கள் தங்களுக்கு, அக்காலத்துப் பல்லவ மன்னர்கள் பெயரைச் சூட்டிக் கொண்டதிலிருந்து இதனை அறிகிறோம். பிறகு, மேலைச் சளுக்கியர் வலிமை பெற்று ஓங்கினபோது இவர்கள் சளுக்கிய மன்னரைச் சார்ந்து வாழ்ந்தனர்.

களப்பிரரின் ஆட்சிக் காலத்தில் இரேணாட்டை யாண்ட தெலுங்குச் சோழர்களின் பெயரையும் அவர்கள் சூட்டிக்

களப்பிரர் காலத்து இரேணாட்டுச் சோழர்

1. சோழ ராசன் (கி.பி. 475-500)

(இவனுடைய பெயர் தெரியவில்லை. இவன் இரேணாட்டை வென்று தன் ஆட்சியை நிறுவிய ஆதி சோழன். இவன், முதலாம் நந்திவர்ம பல்லவன் காலத்தில் இருந்தவன். அந்த நந்திவர்மனின் பெயரைத் தன் மகனுக்குச் சூட்டினான்.)

2. சோழன் நந்திவர்மன் (கி.பி. 500-520)

3. சோழன் சிம்மவிஷ்ணு (கிபி. 520-540)

4. சோழன் சுந்தசநந்தன் (கிபி. 540-550)

5. சோழன் தஞ்சயவர்மன் (கிபி. 550-575)

6. சோழன் மகேந்திரவர்மன் (கிபி. 575-610)

7. சோழன் குணமுடி தன் (கிபி. 610-625)

8. சோழன் புண்ணியகுமாரர் (கிபி. 625-650)

சோழன் விக்கிரமாதித்தன் (கிபி. 650-680)

கொண்டிருந்த பல்லவ அரசர் பெயர்களையும் கீழே தருகிறோம் (பக்கம் 270). அவர்கள் ஆண்ட காலத்தையும் உத்தேசமாகத் தருகிறோம்.

இந்தச் சோழருடைய காலங்களைத் திரு. எம். இராமராவ் அவர்களின் *ஆந்திர தேசத்தின் பழைய வரலாற்று ஆய்வுகள்* என்னும் நூலிலிருந்து (பக்கம் 148, 149) எடுத்துள்ளோம் (*Studies in the Early History of Andhradesa*, M.Rama Rao, pp. 148, 149).

மற்ற இரேணாட்டுச் சோழர்களைப் பற்றி இங்குக் கூறவில்லை. இங்குக் கூறப்பட்ட முதல் ஆறு அரசர்கள் பல்லவ அரசர்களைச் சார்ந்து இருந்ததை அறிகிறோம். கி.பி. 5ஆம் நூற்றாண்டின் கடைசியில் இருந்த ஒரு சோழன் இரேணாட்டில் சோழ இராச்சியத்தை நிறுவினான். இவன், முதலாம் நந்திவர்மன் என்னும் பல்லவனுடைய சமகாலத்தில் இருந்தவன். இவன் தன்னுடைய மகனுக்குப் பல்லவ நந்திவர்மனுடைய பெயரைச் சூட்டினான். நந்திவர்ம சோழன், சிம்மவிஷ்ணு என்னும் பல்லவ அரசனுடைய சமகாலத்தில் இருந்தவன். இவன் தன்னுடைய மூத்த மகனுக்குச் சிம்மவிஷ்ணுப் பல்லவனுடைய பெயரைச் சூட்டினான். நந்திவர்ம சோழனுடைய முதலாம், இரண்டாம், மூன்றாம் மகன்களான சிம்ம விஷ்ணுவும் சுந்தசனந்தனும் தனஞ்சயனும் பல்லவ சிம்மவிஷ்ணு காலத்தில் இருந்தவர்கள் என்பதை அறிகிறோம். சோழன் தனஞ்சயவர்மனின் ஆட்சிக் காலத்தில் பல்லவ சிம்மவிஷ்ணு, காவிரி பாய்கிற சோழ நாட்டை யரசாண்ட களப்பிரனோடு போர் செய்து வென்று சோழ நாட்டைக் கைப்பற்றி அதனைத் தன்னுடைய பல்லவ இராச்சியத்தோடு இணைத்துக்கொண்டான். இந்தப் பல்லவ – களப்பிரப் போரில் இரேணாட்டுத் தனஞ்சயவர்மன் சிம்மவிஷ்ணுப் பல்லவனுக்கு உதவியாக இருந்திருக்கக்கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஒரு வேளை இந்தப் போரில் தனஞ்சயவர்மன் போர்க்களத்தில் இறந்திருக்கக்கூடுமோ என்றும் ஐயம் தோன்றுகிறது. இரேணாட்டுச் சோழன் தனஞ்சயவர்மன் தன்னுடைய மகனுக்கு மகேந்திர விக்ரமன் என்று, முதலாம் மகேந்திர விக்கிரமவர்மனின் பெயரைச் சூட்டினான்.

இரேணாட்டுச் சோழன் மகேந்திர விக்கிரமன் ஆட்சிக் காலத்தில் மேலைச் சளுக்கிய அரசனான புலிகேசி (இரண்டாம் புலிகேசி) மகேந்திரவர்மப் பல்லவன் மேல் படையெடுத்து வந்து அடிக்கடி தொண்டை நாட்டில் போர்செய்தான். அந்தக் காலத்தில் புலிகேசியின் கை ஓங்கியிருந்தபடியால், இரேணாட்டு மகேந்திரவிக்கிரம சோழன், பல்லவர் சார்பை விட்டுச் சளுக்கியர் சார்பைச் சேரவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே, அவன் பல்லவ அரசர் சார்பிலிருந்து நீங்கிச் சளுக்கியரைச் சார்ந்தான் என்று அறிகிறோம். இவனுடைய பேரனுக்கு இவன் விக்கிர

மாதித்தன் என்று சளுக்கிய அரசனுடைய பெயரைச் சூட்டியிருப் பதிலிருந்து இதனையறியலாம்.

இரேணாட்டை யரசாண்ட முதல் ஐந்து சோழர்கள் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தெலுங்கு நாட்டை யரசாண்டார்கள். இவர்கள் ஏறத்தாழ கி.பி. 475 முதல் 575 வரையில் அரசாண்டார்கள். பல்லவ சிம்மவிஷ்ணு களப்பிரரை வென்று சோழ நாட்டைக் கைப்பற்றிக்கொண்ட காலத்தில், பாண்டியன் கடுங்கோன் களப்பிரரை வென்று பாண்டி நாட்டைக் கைப்பற்றிப் பாண்டியர் ஆட்சியை நிலைநாட்டினான் என்பதை வேள்விக்குடிச் செப்பேட்டிலிருந்து அறிகிறோம். களப்பிரர் ஆட்சிக் காலத்தில் சோழ நாட்டுச் சோழரில் ஒரு கிளை இரேணாட்டில் அரசாட்சி செய்துகொண்டிருந்தபோது, சோழ நாட்டுச் சோழ பரம்பரையார் சோழ நாட்டிலேயே சில ஊர்களைக் களப்பிரருக்குக் கீழடங்கி அரசாண்டார்கள். பாண்டியன் கடுங்கோன் களப்பிரரை வென்று பாண்டி நாட்டை மீட்டுக்கொண்டபோது சோழர் களப்பிரரை வென்று தங்கள் சோழ நாட்டை மீட்டுக் கொள்ளவில்லை. களப்பிரருடன் போர் செய்து சோழ நாட்டைக் கைப்பற்றியவன் சிம்மவிஷ்ணுபல்லவன். ஆகவே, களப்பிரருக்குக் கீழடங்கியிருந்த சோழர், சிம்மவிஷ்ணு சோழ நாட்டை வென்ற பிறகு பல்லவருக்குக் கீழடங்கிவிட்டனர்.

களப்பிரர் காலத்து இலங்கை அரசர்

களப்பிரர் தமிழகத்தை ஆண்ட காலத்தில் பக்கத்து நாடாகிய இலங்கையின் அரசியல் நிலை எப்படி இருந்தது என்பதைப் பார்ப்போம். இலங்கையிலும் நிலைத்த ஆட்சியில் லாமல் அரசியல் குழப்பங்களும் கலகங்களும் இருந்தன.

தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் நெடுங்காலமாக அரசியல் தொடர்பும் வாணிகத் தொடர்பும் சமயத் தொடர்பும் இருந்து வந்தன. ஏறத்தாழ கி.மு. 5ஆம் நூற்றாண்டிலிருந்து, இலங்கை – தமிழ்நாடு உறவு இருந்தது. களப்பிரர் காலத்திலும் இரு நாடு களுக்கும் தொடர்பு இருந்தது. அந்தத் தொடர்பைச் சுருக்கமாகக் கூறுவோம். களப்பிர அரசர்களைப் பற்றின வரலாற்றுச் செய்திகள் வரன்முறையாகத் தெரியவில்லையானாலும் அக் காலத்து இலங்கையரசருடைய வரலாறு வரன்முறையாகவும் தொடர்ச்சியாகவும் தெரிகின்றது. சூலவம்சம் என்னும் நூலிலே இலங்கை வரலாறு தெரிகின்றது. பாண்டிய நாட்டைக் களப்பிர அரசர் ஆண்ட காலத்திலே, பாண்டிய அரச குலத்தார் இலங்கையைக் கைப்பற்றிச் சில காலம் அரசாண்ட செய்தியை இலங்கை வரலாற்றிலிருந்து அறிகிறோம். களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இலங்கையை யரசாண்ட அரசர்களைக் கூறுவோம். இந்த அரசர்கள் ஆண்ட காலத்தை *இலங்கை வரலாற்றுச் சுருக்கம்* என்னும் நூலிலிருந்து எடுத்துள்ளோம் (*A Short History of Ceylon*, H.W. Codrington, 1929).

திஸ்ஸன்

திஸ்ஸன் என்னும் இவன் ஸ்ரீதாசனுடைய மகன். இவன் விவகாரம் (சட்டம்) அறிந்தவனாகையால் ஓகாரிக திஸ்ஸன் என்று பெயர் பெற்றான். இவன் இருபத்திரண்டு ஆண்டுகள் அரசாண்டான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் இலங்கையில் மகாயான பௌத்த மதம் நுழையத் தொடங்கிற்று. இலங்கையின் பழைய தேரவாதப் பௌத்தத்துக்கு மாறானது மகாயான பௌத்த மதம். தேரவாதப் பௌத்தத்துக்கு இடையூறாக இருந்த மகாயான பௌத்தம் இலங்கையில் நுழைந்தபோது, ஓகாரிக திஸ்ஸன் தன்னுடைய அமைச்சனான கபிலன் என்பவனைக் கொண்டு மகாயானத்தை அடக்கி தேரவாதப் பௌத்தத்தை நிலைக்கச் செய்தான்.

அபயநாகன்

இவன் ஓகாரிக திஸ்ஸனுடைய தம்பி. இவனுக்கும் இராணிக்கும் கூடா ஒழுக்கம் இருந்தது. இது கண்டறியப்பட்ட போது இவன் தமிழ்நாட்டுக்கு ஓடிவிட்டான். தமிழ்நாட்டில் எங்குத் தங்கினான் என்பது தெரியவில்லை. ஆனால், களப்பிர அரசனுடைய ஆதரவில் தங்கியிருந்தான் என்று கருதலாம். தமிழ்நாட்டில் தங்கியிருந்த இவன் சில காலத்துக்குப் பிறகு பெரிய சேனையை அழைத்துக்கொண்டு இலங்கைக்குப் போய் அண்ணனாகிய அரசனோடு போர் செய்தான். ஓகாரிக திஸ்ஸன் தன்னுடைய இராணியுடன் இலங்கையின் மத்தியில் உள்ள மலைநாட்டுக்கு ஓடினான். அபயநாகன் அவனைத் தொடர்ந்து சென்று போர் செய்து ஓகாரிக திஸ்ஸனைக் கொன்று அவனுடைய இராணியைக் கைப்பற்றிக் கொண்டுவந்து அவளை இராணியாக்கி அரசாண்டான். இவன் எட்டு ஆண்டுகள் அரசாண்டான்.

ஸ்ரீநாகன் II

இவன் ஓகாரிக திஸ்ஸனுடைய மகன். இவனை இரண்டாம் ஸ்ரீநாகன் என்றும் கூறுவர். அபயநாகன் இறந்த பிறகு ஸ்ரீநாகன் இலங்கையை இரண்டு ஆண்டுகள் அரசாண்டான்.

விஜயகுமரன்

ஸ்ரீநாகனுக்குப் பிறகு அவனுடைய மகனான விஜயகுமாரன் அரசனானான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் சங்க திஸ்ஸன், கங்கபோதி, கோதாபயன் என்னும் மூன்று பேர் வந்து அரசாங்க ஊழியராக அமர்ந்தார்கள். இவர்கள் அரசகுலமல்லாத இலம்ப கன்னர்.

ஸ்ரீகங்கபோதி (கி.பி. 252–254)

இவனுடைய ஆட்சியின் இரண்டாம் ஆண்டில், இவனுக்கு அமைச்சனாகவும் பொக்கிஷதாரனுமாக இருந்த கோதாபயன் என்னும் இலம்பகன்னன், நாட்டில் இவனுக்கு எதிராகக் கலகஞ் செய்தான். நாட்டிலே கலகமும் குழப்பமும் ஏற்பட்டன. கோதாபயன் சேனையோடு வந்து இவன் மேல் போர்தொடுத்தான். அரசனான ஸ்ரீகங்கபோதி இவனோடு போர் செய்யாமல் ஓடினான். ஓடிய இவனைப் பிடித்து ஒரு சேனைத் தலைவன் இவன் தலையை வெட்டிக் கோதாபயனிடம் அனுப்பினான். கோதாபயன் அதைத் தக்க முறையில் அடக்கஞ் செய்துவிட்டு, மேகவண்ணாபயன் என்று பெயர் சூட்டிக் கொண்டு அரச னானான்.

மேகவண்ணாபயன் (கி.பி. 254–267)

கோதாபயன், மேகவண்ணாபயன் என்று பட்டப்பெயர் கொண்டு பதின்மூன்று ஆண்டுகள் அரசாண்டான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் இலங்கையில் வேதுல்லியமதம் (மகாயான பௌத்தம்) பரவத் தொடங்கிற்று. பழைய தேரவாதப் பௌத்தத்துக்கு மாறுபட்டதான வேதுல்லியமதத்தை நீக்கி இவ்வரசன் பழைய தேரவாதப் பௌத்தத்தை நிலைநிறுத்தினான். மகாயான பௌத்தத்தைச் சார்ந்த பௌத்தப் பிக்குகளை இவ்வரசன் நாடு கடத்தினான். நாடுகடத்தப்பட்ட பிக்குகள் தமிழ்நாட்டுக்கு வந்து சோழ நாட்டில் தங்கினார்கள். அக் காலத்தில் சோழ நாட்டில் மகாயானப் பௌத்தத் தலைவராக இருந்த சங்கமித்திரன் என்னும் தமிழப் பிக்கு, நாடுகடத்தப்பட்டு வந்த சிங்கள நாட்டுப் பிக்குகள் கூறியதைக் கேட்டுத் தான் இலங்கைக்குப் போய் தன்னுடைய மகாயானப் பௌத்தத்தை அங்கு நிலைநிறுத்த எண்ணினார். ஆகவே, சங்கமித்திரர் இலங்கைக்குப் போய் மேகவண்ணாபய அரசனுடைய சபையில் தேரவாதப் பௌத்தர்களோடு சமயவாதஞ்செய்து வென்றார். மேகவண்ணாபயன் வெற்றிபெற்ற சங்கமித்திரரை ஆதரித்தான். தன்னுடைய மக்களான ஜேட்டதிஸ்ஸன், மகாசேனன் என்பவர் களைச் சங்கமித்திரரிடத்தில் கல்வி கற்க விட்டான். மேகவண்ணா பயன் காலமான பிறகு அவன் மகனான ஜேட்டதிஸ்ஸன் அரசனானான்.

ஜேட்டதிஸ்ஸன் (கி.பி. 267–277)

இவன் மேகவண்ணாபயனுடைய மூத்த மகன். இவன் பத்து ஆண்டுகள் அரசாண்டான். இவன் சங்கமித்திரரிடம் கல்வி பயின்ற மாணவன். ஆனால், அவரிடத்தில் இவன் பகை கொண்டிருந்தான். ஆகையால், சங்கமித்திரர் இவன் காலத்தில் இலங்கையிலிருந்து சோழ நாட்டுக்கு வந்துவிட்டார்.

மகாசேனன் (கி.பி. 277–304)

ஜேட்டதிஸ்ஸனுக்குப் பிறகு அவனுடைய தம்பியான மகாசேனன் அரசனானான். இவன் அரசனாவதையறிந்த இவனுடைய குருவாகிய சங்கமித்திரர் சோழ நாட்டிலிருந்து இங்கு வந்து தம்முடைய கையினாலே இவனுக்கு முடி சூட்டினார். இவ்வரசனுடைய ஆதரவைப் பெற்ற இவர், மகாயான பௌத்த மதத்தை இலங்கையில் பரவச் செய்தார். இலங்கையில் தேரவாத (ஈனயான), மகாயானச் சமயப் பூசல்கள் ஏற்பட்டன. மகாசேனன் இலங்கையில் அக்காலத்தில் இருந்த பேர் போன சிவன் கோயில்களை இடித்து அழித்தான்.

ஸ்ரீமேகவண்ணன் (கி.பி. 304–332)

இவன் இலங்கையின் பழைய தேரவாதப் பௌத்தத்தை ஆதரித்தான். பல பரிவேணைகளையும் விகாரைகளையும் கட்டினான். இவனுடைய ஒன்பதாம் ஆட்சியாண்டில் கலிங்க நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட புத்தருடைய பல் தாதுவை அநுராதபுரத்தில் வைத்துச் சிறப்புச் செய்தான். வட இந்தியாவை இவன் காலத்தில் ஆட்சி செய்தவன் சந்திரகுப்தன் (கி.பி. 345-380). ஸ்ரீமேகவண்ணன், சந்திரகுப்த அரசனிடத்தில் இரண்டு பௌத்தப் பிக்குகளைத் தூது அனுப்பி, புத்தகயாவுக்கு யாத்திரை போகிற இலங்கைப் பௌத்தப் பிக்குகளுக்குப் பாதுகாப்புக் கொடுத்து ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டான். இவன் இருபத்தெட்டு ஆண்டு ஆட்சி செய்தான் (சூலவம்சம் 37ஆம் பரிச்சேதம் 51-99, *Culavamsa*, Part I Translated by Wilhelm Geiger, 1929). இவனுடைய கல்வெட்டுச் சாசனங்கள் இலங்கையில் கிடைத்துள்ளன. அந்தச் சாசனங்களில் இவ்வரசன் கிரி மேகவண்ண என்றும் கிரி மேகவன என்றும் கூறப்படுகிறான்.

ஜேட்டதிஸ்ஸன் II (கி.பி. 332–341)

ஜேட்டதிஸ்ஸன், ஸ்ரீமேகவண்ணனுடைய தம்பி. இவன் யானைத் தந்தத்தில் அழகான உருவங்களையும் கலைப் பொருள்களையும் செய்வதில் வல்லவன். அந்தத் தொழிலைப் பலருக்கும் கற்பித்தான். இவன் இலங்கையை ஒன்பது ஆண்டுகள் அரசாண்டான் (சூலவம்சம் 37ஆம் பரிச்சேதம் 100-104).

புத்ததாசன் (கி.பி. 341–370)

இவன் ஜேட்டதிஸ்ஸனுடைய மகன். மருத்துவக் கலையில் வல்லவனான இவன் மனிதரின் நோயைத் தீர்த்ததுமல்லாமல் ஒரு பாம்பின் நோயையும் தீர்த்தானாம். நாட்டில் ஆங்காங்கே மருத்துவர்களை நியமித்து நோயாளிகளுக்கு மருத்துவம் செய்ய ஏற்பாடு செய்தான். மருத்துவருக்கு மருத்துவ விருத்தி நிலங்களைக் கொடுத்தான். யானை, குதிரைகளின் நோய்களையும் போரில் புண்பட்ட வீரர்களின் நோயையும் போக்க வைத்தியர்களை நியமித்தான்.

இவ்வரசன் காலத்தில் மகாதம்ம கீர்த்தி என்னும் பிக்கு பௌத்த சூத்திரங்களைச் சிங்கள மொழியில் பெயர்த்தெழுதினார். இவ்வரசனுக்கு எண்பது மக்கள் இருந்தார்களாம். ப-ஹியன் (Fa-Hain) என்னும் சீன யாத்திரிகர் இவ்வரசன் காலத்தில் இலங்கைக்கு வந்து தங்கினார். ப-ஹியன் இலங்கையில் கி.பி. 411-12ஆம் ஆண்டு தங்கினார் என்று அறியப்படுகிறது. புத்ததாச அரசன் இருபத்தொன்பது ஆண்டுகள் அரசாண்டான் (சூலவம்சம் 37ஆம் பரிச்சேதம் 105-178).

உபதிஸ்ஸன் (கி.பி. 370–412)

புத்ததாசன் காலமான பிறகு அவனுடைய மூத்த மகனான உபதிஸ்ஸன் இலங்கையை யரசாண்டான். இவனை இரண்டாம் உபதிஸ்ஸன் என்பர். பௌத்தப் பள்ளிகளுக்கும் பௌத்தப் பிக்குகளுக்கும் இவன் தான தருமங்களைச் செய்தான். அங்கு ஊனம் உள்ளவர்க்கும் குருடர் நோயாளிகளுக்கும் மருத்துவ மனைகளை அமைத்தான். இவன் 42 ஆண்டுகள் அரசாண்டான். இவனுடைய இராணி, இவனுடைய தம்பியான மகாநாமன் என்பவனோடு கூடாவொழுக்கங் கொண்டிருந்தாள். மகாநாமன் பௌத்தப் பள்ளியில் சேர்ந்து பௌத்தப் பிக்குவாகத் துறவு கொள்ள இருந்தான். அவன் புத்தப் பள்ளியில் பப்பஜா என்னும் நிலையில் இருந்தான். பப்பஜா என்பது துறவு பூணுவதற்கு முந்திய புகுநிலை. (முழுத்துறவு கொள்வதற்கு உபசம்பதா என்பது பெயர்.) மகாநாமனோடு கூடாவொழுக்கங் கொண்டிருந்த இராணி அரசனைக் (உபதிஸ்ஸனை) குத்திக் கொன்றுவிட்டாள். இதை யறிந்த பௌத்தப் பள்ளியில் இருந்த மகாநாமன் அரண்மனைக்கு வந்து அரசாட்சியைக் கைக்கொண்டான் (*குலவம்சம்* 37ஆம் பரிச்சேதம் 179-210).

மகாநாமன் (கி.பி. 412–434)

உபதிஸ்ஸனுக்குப் பிறகு அவனுடைய தம்பியான மகாநாமன் அரசனானான். இவன் தன்னுடைய அண்ணனுடைய இராணியைத் தன்னுடைய பட்ட மகிஷியாக்கிக் கொண்டான். இவர்களுக்கு ஆண் மக்கள் இல்லை. ஒரே ஒரு பெண்மகள் சங்கா என்பவள் இருந்தாள். மகாநாமனுக்கு இன்னொரு மனைவி இருந்தாள். அவள் தமிழ் குலத்தைச் சேர்ந்தவள். ஆகவே, அவள் தமிழமகிஷி என்று கூறப்பட்டாள். அந்தத் தமிழ் இராணிக்கு சொத்திசேனன் என்னும் ஒரு மகன் இருந்தான்.

மகாநாமனுடைய ஆட்சிக் காலத்தில் புத்த கோஷர் என்னும் பெயருள்ள பேர் போன பௌத்தப் பிக்கு இலங்கைக்கு வந்தார். அவர் இலங்கைக்கு வருவதற்கு முன்பு ஆந்திர நாட்டிலும் பிறகு தமிழ்நாட்டிலும் இருந்தார். தமிழ்நாட்டுப் பௌத்த விகாரை களில் தங்கியிருந்தபோது அவர் சில பௌத்த நூல்களைப் பாலி மொழியில் எழுதினார். காஞ்சிபுரத்துப் பௌத்தப் பள்ளியில் தங்கியிருந்தபோது, அப்பள்ளியில் இருந்த சுமதி, ஜோதிபாலர் என்னும் தமிழப் பிக்குகள் புத்தகோஷரை இலங்கைக்குப் போய் அங்குச் சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்த பௌத்த மத உரை நூல்களைக் கற்கும்படித் தூண்டினார்கள். புத்தகோஷர், மகாநாமன் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வந்து தங்கி பௌத்த விகாரைகளில் இருந்த சிங்கள உரை நூல்களைக் கற்றார். இலங்கையில் மகாவிகாரையில் இருந்த பௌத்த சங்கத்

தலைவரான சங்கபாலர் என்னும் மகாதேரர் புத்தகோஷருக்குச் சிங்கள மொழியில் இருந்த திரிபிடக உரைகளைக் கூறினார். அவற்றையறிந்த பிறகு புத்தகோஷர் விசுத்திமக்கம் முதலான நூல்களைப் பாலி மொழியில் எழுதினார். புத்தகோஷர் சோழ நாட்டில் இருந்த பேர்போன ஆசாரிய புத்ததத்ததேரர் என்னும் தமிழ்ப் பிக்குவின் சமகாலத்தவர். புத்தகோஷர் தம்முடைய நூலில், சோழ நாட்டை யரசாண்ட அச்சுதவிக்கந்தன் என்னும் களப்பிர அரசரைக் குறிப்பிடுகிறார்.

மகாநாமன் இருபத்திரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்த பிறகு காலமானான் (சூலவம்சம் 37ஆம் பரிச்சேதம் 210-247).

சொத்திசேனன் (கி.பி. 434)

மகாநாமன் இறந்த பிறகு அவனுடைய ஒரே மகனான சொத்திசேனன் இலங்கையின் அரசனானான். இவன் மகா சேனனுக்கும் அவனுடைய தமிழ மகிஷிக்கும் பிறந்த மகன். சொத்திசேனன் முடிசூடின அதே நாளில் அவனுடைய மாற்றாந்தாயின் மகளான சங்கா என்பவளால் கொலை செய்யப் பட்டிறந்தான். சங்காவின் தாய் சிங்களவள். அவள் தன்னுடைய முதல் கணவனான உபதிஸ்ஸனைக் கொன்று அரசாட்சியைத் தன்னுடைய காதலனான மகாநாகனுக்குக் கொடுத்ததையறிந் தோம். அவளுடைய மகளான சங்காவும் தன் தாயைப் போலவே, கொலைக்கு அஞ்சாதவளாய்த் தன்னுடைய தம்பியான தமிழ சொத்திசேனனைக் கொன்றுவிட்டாள். தாயைப் போல சேய் என்னும் பழமொழிக்கு ஏற்பத் தாயினுடைய கொலையுள்ளம் சங்காவுக்கும் இருந்தது.

சத்தக்காகசன் (கி.பி. 434)

இவனுடைய இயற்பெயர் தெரியவில்லை. சத்தக்காகசன் என்பது சத்திரக்காகசன் என்பதன் சிதைவு. சத்திரம் என்றால் அரசனுடைய கொற்றக்குடை என்பது பொருள். இவன் மகாநாமனின் கொற்றக்குடை ஏந்தும் அலுவலனாக இருந்தான். மகாநாமன் தன்னுடைய சிங்கள மனைவியின் மகளான சங்கா என்பவளை இவனுக்கு மணஞ் செய்வித்தான். மகாநாமன் இறந்த பிறகு அவனுடைய மகனான சொத்திசேனன் அரசனானான். சொத்திசேனன், மகாநாமனுடைய தமிழ மகிஷியின் மகன் என்பதையறிந்தோம். இவன் முடிசூடின அன்றைய தினமே இவனுடைய சிங்களச் சகோதரியினால் கொல்லப்பட்டிறந் ததையும் அறிந்தோம். சொத்திசேனனுக்குப் பிறகு சத்தக்காகச னாகிய இவன் சிங்கள அரசின் சிம்மாசனம் ஏறினான். இவன் ஓராண்டு காலம் அரசாண்டான். இவன் இறந்த பிறகு இவனுடைய உடம்பை அமைச்சன் அரண்மனையிலேயே கொளுத்தி விட்டு, மித்தசேனன் என்பவனை அரசனாக்கினான் (சூலவம்சம் 38ஆம் பரிச்சேதம் 3-4).

மித்தசேனன் (கி.பி. 435–436)

சத்தக்காகசன் இறந்த பிறகு, அமைச்சன் (அவன் பெயர் தெரியவில்லை) மித்தசேனன் என்பவனைச் சிங்கள நாட்டுச் சிம்மாசனத்தில் அமர்த்தினான். அக்காலத்தில் சிங்கள அரச குலத்தைச் சேர்ந்தவர் ஒருவருமிலர் என்று தோன்றுகிறது. அரசனாக அமர்ந்த மித்தசேனன் யார், இவன் எந்த முறையில் அரசாட்சிக்கு உரியவன் என்பது தெரியவில்லை. நிச்சயமாக இவன் அரசுக்கு உரியவனல்லன். ஏனென்றால், இந்த மித்தசேனன் பேர்போன அரிசிக் கொள்ளைக்காரனாக இருந்தவன். இவனை அரசனாக்கிய அமைச்சன் இவனை வெளியில் காட்டாமலே மறைத்து வைத்திருந்தான். அரசன் நோயாக இருக்கிறபடியால் அரண்மனையை விட்டு வெளியே வர இயலாமல் இருக்கிறான் என்று அமைச்சன் நாட்டு மக்களிடம் கூறினான்.

எத்தனை நாள் ஒளிந்திருக்க முடியும்? நாட்டு மக்கள் வற்புறுத்தலின்மேல், மித்தசேனன் திருவிழாக் காலத்தில் யானை ஏறி உலா வந்தான். இவன் ஆட்சிக் காலத்தில், ஓராண்டுக்குப் பிறகு தமிழ்நாட்டிலிருந்து பாண்டிய அரச குலத்துப் பாண்டியன் ஒருவன் படையெடுத்து வந்து மித்தசேனனைப் போரில் கொன்று சிங்கள ஆட்சியைக் கைப்பற்றி யரசாளத் தொடங்கினான் (சூலவம்சம் 38ஆம் பரிச்சேதம் 4-11).

இலங்கையில் பாண்டியர் ஆட்சி (கி.பி. 436–463)

தமிழகத்தைக் (சேர, சோழ, பாண்டிய நாடுகளை) களப்பிர அரசர் ஆட்சி செய்தபோது பழைய சேர, சோழ, பாண்டிய அரச பரம்பரையார் களப்பிரருக்குக் கீழடங்கிச் சிற்றரசர்களாக இருந்தார்கள். அவர்களைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. பாண்டி நாட்டில், களப்பிரருக்குக் கீழடங்கியிருந்த பாண்டிய பரம்பரையில் ஒரு பாண்டியன், தன்னுடைய இரண்டு மகன்களையும் ஒரு தமிழச் சேனையையும் அழைத்துக்கொண்டு, இலங்கைக்கு வந்தான். அங்கு அரசாண்டுகொண்டிருந்த மித்த சேனனோடு போர் செய்தான். மித்தசேனன் போரில் இறந்து போனான். பாண்டியன் இலங்கையாட்சியைக் கைப்பற்றி அனுராதபுரத்திலிருந்து இலங்கையை யரசாண்டான். இந்தப் பாண்டியனுடைய பெயர் தெரியவில்லை. இவனைப் பாண்டு (பாண்டியன்) என்று இலங்கை வரலாறு கூறுகிறது.

பாண்டு (பாண்டியன், கி.பி. 436–441)

பாண்டியன் இலங்கையை யரசாண்டபோது தலைநகரமான அநுராதபுரத்திலிருந்த சிங்கள அரச குடும்பத்தவரும் பெருங்குடி மக்களும் தெற்கே உரோகண நாட்டுக்குப் போய்விட்டார்கள்.

இலங்கையின் தென்கிழக்கிலிருந்த உரோகண நாடு அந்தக் காலத்தில் கலகக்காரர்களுக்குப் புகலிடமாக இருந்தது. உரோகண நாட்டுக்குச் சென்றவர்கள் தனக்கு எதிராகக் கலகஞ் செய்வார்கள் என்பதையறிந்த பாண்டியன் தன்னுடைய சிங்கள இராச்சியத்தின் தெற்கெல்லைகளில் பல கோட்டைகளை அமைத்துப் பாதுகாப்புகளைச் செய்தான். அவன் தெற்கு எல்லையில் இருபத்தொரு கோட்டைகளை அமைத்துப் பாதுகாத்தான்.

பாண்டியனுடைய இலங்கை இராச்சியம் வழக்கம் போல இராஜரட்டம் (இராஜ ராட்டிரம்) என்று கூறப்பட்டது. அதன் எல்லை கிழக்கு மேற்கு வடக்குப் புறங்களில் கடல்களும் தெற்கே மாவலிகங்கையாறும் ஆக அமைந்திருந்தன. மாவலிகங்கை என்பது இலங்கையின் பெரிய ஆறு. இதன் சரியான பெயர் மாவாலுக கங்கை என்பது. மா-பெரிய, வாலுகம்-மணல், கங்கை-ஆறு. மாவாலுக கங்கை என்றால் பெருமணல் ஆறு என்பது பொருள். மாவாலுக கங்கை என்பது மாவலிகங்கை என்று வழங்கப்படுகிறது.

அநுராதபுரத்தில் மகாவிகாரை என்னும் பௌத்தப் பள்ளியில் மோரிய குலத்தைச் சேர்ந்த ஒரு பௌத்தப் பிக்கு இருந்தான். அவனுடைய தங்கை மகனான தாதுசேனன் என்பவன், மகாவிகாரையைச் சேர்ந்த திக சந்தனப் பரிவேணையில் (பரிவேணை - பௌத்த மதக் கல்லூரி) பௌத்த மத நூல்களைப் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு அரசாளும் ஊழ் இருக்கிறது என்று நம்பிய அந்தப் பிக்கு அவனுக்கு மதக்கல்வியைப் போதிக்காமல் அரசியல் நூல்களைக் கற்பித்துக்கொண்டிருந்தான்.

தனக்கு எதிராகப் பௌத்த விகாரையில் தாதுசேனன் மறைவாக இருக்கிறான் என்பதையறிந்த பாண்டியன் அவனைப் பிடித்துக் கொண்டுவரும்படி தன்னுடைய வீரர்களை அனுப்பினான். பிடிக்க வருகிறார்கள் என்பதை முன்னமேயறிந்த தாதுசேனனும் அவனுடைய மாமனான பிக்குவும் நகரத்தை விட்டுப் புறப்பட்டுத் தெற்கு எல்லையான மாவலிகங்கையைக் கடந்து தெற்கே போய்விட்டார்கள். அவர்கள் தெற்கு சென்று கோண ஓயாவைக் (இப்போதைய காளஓயா) கடந்து உரோகண நாட்டுக்குப் போய்விட்டார்கள். அவர்கள் உரோகண நாட்டில் கலகக்காரர்களோடு சேர்ந்துகொண்டு அரசனுக்கு எதிராகக் கலகஞ் செய்யும் வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பாண்டியன் இலங்கை இராச்சியத்தை ஐந்து ஆண்டுகள் அரசாண்ட பிறகு காலமானான் (சூலவம்சம் 38ஆம் பரிச்சேதம் 11-29).

பரிந்தன் (கி.பி. 441–444)

பாண்டியன் காலமான பிறகு அவனுடைய மூத்த மகனான பரிந்தன் இலங்கையை யரசாண்டான். இவனுடைய ஆட்சிக்

காலத்து வரலாறு தெரியவில்லை. இவனுடைய ஆட்சிக் காலத்தில் உரோகண நாட்டிலிருந்த தாதுசேனன் கலகக்காரர் களைச் சேர்த்துக்கொண்டு படை திரட்டிக் கொண்டிருந்தான் என்று தோன்றுகிறது. பாண்டியன் பரிந்தன் மூன்று ஆண்டுகள் அரசாண்டான் (சூலவம்சம் 38ஆம் பரிச்சேதம் 29).

இளம்பரிந்தன் (குட்டபரிந்தன், கி.பி. 444–460)

பாண்டியன் பரிந்தன் காலமான பிறகு அவனுடைய தம்பியான இளம்பரிந்தன் அரசாண்டான். இவனைக் குட்ட பரிந்தன் என்று இலங்கை நூல்கள் கூறுகின்றன. குட்டபரிந்தன் என்றால் இளம்பரிந்தன் என்பது பொருள். அதாவது, பரிந்தனுடைய தம்பி என்பது பொருள். இவன் பதினாறு ஆண்டுகள் அரசாண்டான். இவனுடைய ஆட்சிக் காலத்தில், கலகக்காரனான தாதுசேனன் படை திரட்டிக்கொண்டு வந்து இவனோடு போர் செய்தான். குட்டபரிந்தன் அவனோடு போர் செய்து வென்றான். தோற்றுப் போன தாதுசேனன் போர்க் களத்தைவிட்டு ஓடினான். போரின்போது தாதுசேனனை ஆதரித்துக் கலகஞ் செய்தவர்களை அடக்கினான். குட்டபரிந்தன் பல நன்மையான காரியங்களையும் தீமையான காரியங்களையும் செய்தான் என்று சூலவம்சம் கூறுகிறது (சூலவம்சம் 38ஆம் பரிச் சேதம் 30-31). என்ன நன்மைகளைச் செய்தான், என்ன தீமைகளைச் செய்தான் என்று கூறவில்லை. கலகக்காரர்களை அடக்கியது தீமையாகாது.

பாண்டியன் குட்டபரிந்தன் இலங்கை நாட்டின் மதமான பௌத்த மதத்தைச் சேர்ந்தவன் என்று தெரிகிறான். இவனுடைய கல்வெட்டுச் சாசனம் கிடைத்திருக்கிறது. இந்தச் சாசன எழுத்து இலங்கையின் பழைய தலைநகரமான அநுராதபுரத்தில் கண்டு பிடிக்கப்பட்டு இப்போது அநுராதபுரத்து ஆர்க்கியாலஜி இலாகாவின் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சாசனத்தில் இவன், பரிதேவன் என்றும் பரிததேவன் என்றும் புததாசன் (புத்ததாசன்) என்றும் கூறப்படுகிறான். இவனுடைய இராணி பௌத்த விகாரைக்குத் தானஞ் செய்ததை இந்தக் கல்வெட்டுக் கூறுகிறது ('Anuradhabura Slab Inscription of Kuddha Parinda' by S. Paranavitana, *Epigraphia Zeylonica*, Vol. IV, 1934-41, pp. 111-115).

திரிதரன் (ஸ்ரீதரன், கி.பி. 460)

இவன் குட்டபரிந்தனுக்குப் பிறகு அரசாண்டான். இவன் இளம்பரிந்தனுக்கு எந்த வகையில் உறவினர் என்பது தெரியவில்லை. இவன் அரசனான இரண்டாம் மாதத்தில், கலகக்காரனான தாதுசேனன் இவன் மேல் படையெடுத்து வந்து போர் செய்தான். அந்தப் போரில் இவன் இறந்து போனான்.

போர்க்களத்தில் இறந்துபோனாலும் வெற்றி இவனுக்குக் கிடைத்தது. தாதுசேனன் தோற்று ஓடினான் (சூலவம்சம் 38ஆம் பரிச்சேதம் 32).

தாட்டியன் (கி.பி. 460–463)

திரிதரன் போர்க்களத்தில் இறந்த பிறகு பாண்டியன் தாட்டியன் அரசனானான். இவனுக்கும் முந்திய அரசனுக்கும் உள்ள உறவு தெரியவில்லை. இவன் தாட்டியன் என்றும் தாட்டிகன் என்றும் மகாதாட்டிக மகாநாகன் என்றும் மகாதானிக மகாநாகன் என்றும் கூறப்படுகிறான். இவன் மேல் போர் செய்ய வந்த தாதுசேனனை இவன் வென்று துரத்தினான். உரோகண நாட்டில் உள்ள பேர் போன கதரகாம (கதிர்காமம்) நகரத்தில் தாட்டிகனுடைய கல்வெட்டுச் சாசனம் சிதைந்து காணப்படுகிறது. இந்தச் சாசனம் இவன் கிரிவிகாரை என்னும் பௌத்தப் பள்ளிக்குத் தானஞ்செய்ததைக் கூறுகிறது. எனவே, இவனும் பௌத்த மதத்தைச் சேர்ந்தவன் என்று தெரிகிறான். இலங்கையின் தென்கிழக்குக் கோடியில் இவனுடைய கல் வெட்டுச் சாசனம் கிடைத்திருக்கிறபடியால், இவன் தாதுசேனன் இருந்த உரோகண நாட்டின் மேல் படையெடுத்துச் சென்று அவனோடு போர் செய்து வென்றான் என்பது தெரிகிறது. அங்கு வெற்றியடைந்தபோது இந்தத் தானத்தைச் செய்து இக்கல் வெட்டெழுத்தை எழுதினான். உரோகண நாட்டில் இவன் சில காலந் தங்கியிருந்தான் என்று தெரிகிறது (*Epigraphia Zeylonica*, Vol. III, pp. 216-219).

இந்தப் பாண்டியனுக்கும் கலகக்காரனான தாதுசேனனுக்கும் பல போர்கள் நடந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. அந்தப் போர்களைப் பற்றிச் சூலவம்சம் ஒன்றும் கூறவில்லை. கூறாத படியினால் தாதுசேனன் பல தடவை தோற்றுப் போனான் என்று ஊகிக்கலாம். கடைசியாக நடந்த போரிலே பாண்டியன் மகாதாட்டிக மகாநாகன் இறந்து போனான். இறந்து போனாலும் வெற்றி இவனுக்கே கிடைத்தது (சூலவம்சம் 38ஆம் பரிச்சேதம் 33).

பிட்டியன் (கி.பி. 463)

தாட்டிகனுக்குப் பிறகு பிட்டியன் அரசனானான். களப்பிரர் காலத்தில் இலங்கையை யரசாண்ட பாண்டியர்களில் இவன் கடைசிப் பாண்டியன். இவன் ஆட்சிக் காலத்தில் ஏழாம் மாதத்தில் தாதுசேனன் இவன் மேல் படையெடுத்து வந்து போர் செய்தான். அந்தப் போரில் பிட்டியன் இறந்து போனான். ஆகவே, தாதுசேனன் இலங்கையாட்சியைக் கைப்பற்றினான்.

களப்பிரர் ஆட்சிக் காலத்தில் பாண்டிய மரபைச் சேர்ந்த ஆறு பாண்டியர்கள் இலங்கையை இருபத்தேழு ஆண்டுகள்

அரசாண்டார்கள் (சூலவம்சம் 38ஆம் பரிச்சேதம் 3-4). களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இலங்கையை யரசாண்ட வேறு சிங்கள அரசர்களைப் பற்றிக் கூறுவோம்.

தாதுசேனன் (கி.பி. 463–479)

பாண்டியருக்கு எதிராக இருபத்தேழு ஆண்டுகளாகக் கலகஞ் செய்துகொண்டிருந்த தாதுசேனன் கடைசியில் இலங்கையின் அரசனானான். ஆனால், தாதுசேனனுடைய வாழ்க்கை துன்பகரமாகவும் இரங்கத்தக்கதாகவும் இருந்தது. இவனுக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். இவர்களில் ஒருத்தி இவனுக்குச் சமமான குலத்தைச் சேர்ந்தவள். இவளுக்கு ஒரு அழகான பெண்மகளும் மொக்கல்லானன் என்னும் ஒரு மகனும் பிறந்தனர். தாதுசேனனுடைய இன்னொரு மனைவி இவனை விடச் சற்றுத் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவள். இவளுக்குக் கஸ்ஸபன் என்னும் ஒரு மகன் பிறந்தான். தாழ்ந்த குலத்தில் பிறந்தவனாகையினால் கஸ்ஸபனுக்கு அரசாளும் உரிமை இல்லை.

தாதுசேனன் தன்னுடைய அருமை மகளைத் தன்னுடைய மருமகனுக்குத் (தங்கையின் மகனுக்கு) திருமணஞ் செய்து கொடுத்தான். கொடுத்து அவனைத் தன்னுடைய சேனாபதி யாக்கிக் கொண்டான். இவனுடைய பெயர் உபதிஸ்ஸன். இவ்வாறு இருந்தபோது, தன்னுடைய மருகனும் சேனாபதியு மான உபதிஸ்ஸன் தன்னுடைய மனைவியைச் (அரசனுடைய மகளை) சவுக்கினால் துடைகளிலே அடித்துவிட்டான். இரத்தம் பீறிட்டு வெளிப்பட்டது. இதனைக் கண்ட அரசன், தன் மகளைக் கண்போல நேசித்தவனாகையினால், பெருஞ்சினங்கொண்டான். அடித்த காரணத்தை விசாரித்தான். காரணம் இல்லாமலே தன்னுடைய மகள் அடிக்கப்பட்டாள் என்று அறிந்தபோது, இதற்குக் காரணமான தன்னுடைய தங்கையை (சேனாதிபதியின் தாயை) உயிரோடு நெருப்பில் இட்டுக் கொளுத்திக் கொன்றுவிட்டான். தன்னுடைய தாய் பதைபதைத்துத் தீயில் வெந்து இறந்த கொடுமையைக் கண்ட மருகனாகிய சேனாதிபதி அரசன் மேல் பெருஞ்சினங்கொண்டான். தன்னுடைய தாயைச் சுட்டுக் கொன்ற அரசனைப் பழிக்குப்பழி வாங்கத் தீர்மானஞ் செய்துகொண்டான். அரசனை ஆட்சியிலிருந்து விலக்கி அவனைத் துன்புறுத்திக் கொல்லத் திட்டம் இட்டான். தன்னுடைய திட்டத்துக்கு உதவியாக, கருவியாக அரசனுடைய மகனான கஸ்ஸபனைப் பயன்படுத்திக்கொண்டான். அரசு உரிமை இல்லாத கஸ்ஸபனுக்கு அரசாட்சி ஆசையை உண்டாக்கி அரசனுக்கு எதிராகக் கலகஞ் செய்து ஆட்சியைக் கைப்பற்றும் படித் தூண்டிவிட்டான்.

உபதிஸ்ஸனுடைய பேச்சைக் கேட்டு அரசாட்சிப் பதவியைப் பெறுவதற்கு ஆசை கொண்ட கஸ்ஸபன் நகர மக்களைத் தன் பக்கம் சேர்த்துக்கொண்டு தன்னுடைய தந்தையான தாதுசேன அரசனைப் பிடித்துச் சிறைச்சாலையின் இருட்டறையில் அடைத்துவிட்டுத் தான் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டான். அரசனைச் சார்ந்தவர்களையெல்லாம் துன்புறுத்தி அடக்கினான். அரசாட்சிக்கு உரிமை யுள்ளவனான மொக்கல்லானனை விஷம் இட்டுக் கொல்ல முயன்றான். மொக்கல்லானன் உயிர் தப்பித் தமிழ்நாட்டுக்கு ஓடி அடைக்கலம் புகுந்தான். அவன் தமிழ்நாட்டிலிருந்து சேனையைச் சேர்த்துக்கொண்டு வந்து கஸ்ஸபன் மேல் போர் செய்து ஆட்சியைப் பெறுவதற்காகத் தமிழ் நாட்டுக்குப் போனான். போனவன் களப்பிர அரசரின் ஆதரவைப் பெற அவர்களிடம் சென்றான் போலும். சிறைச்சாலையில் தாதுசேன அரசனுக்குச் சரியாக உணவும் கிடைக்கவில்லை. தன்னுடைய மகனான மொக்கல்லானன் தமிழ்நாட்டுக்குப் போய் விட்டதையறிந்து அவன் மனக்கவலையும் துன்பமும் அடைந் தான். பழிக்குப்பழி வாங்கத் திட்டமிட்ட சேனாபதியான உபதிஸ்ஸன் தன்னுடைய திட்டத்தில் வெற்றியடைந்தான். ஆனால், சேனாபதி இதோடு நிற்கவில்லை. அரசனைச் சித்திர வதை செய்து கொல்லத் திட்டமிட்டான்.

அவன் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள கஸ்ஸபனிடஞ் சென்று, 'உம்முடைய தந்தை தாதுசேன மன்னன் அரண்மனையில் இரகசியமாகப் பெருஞ்செல்வத்தை வைத்திருக்கிறாரே, அது பற்றி அவர் உம்மிடம் ஒன்றும் சொல்லவில்லையா?' என்று கேட்டான். கஸ்ஸபன் 'ஒன்றுஞ் சொல்லவில்லை' என்று கூறினான். அதற்குச் சேனாபதி 'அவருடைய உள்நோக்கம் உமக்குத் தெரியவில்லையா? அவர் தம்முடைய செல்வமகனான மொக்கல்லானனுக்குக் கொடுக்க அதை வைத்திருக்கிறார்' என்று கூறினான். சேனாபதி கூறியதை உண்மை என்று நம்பிய கஸ்ஸபன், பொருளாசை கொண்டவனாகித் தன்னுடைய ஆட்களைச் சிறைச்சாலையிலுள்ள தாதுசேனனிடம் அனுப்பி அவர் பொருள் வைத்திருக்கும் இடத்தையறிந்து வரும்படி சொன்னான். அவர்கள் சென்று கேட்டபோது அரசன் 'இந்தக் கொடியவன் என்னைக் கொன்றுவிடுவதற்குச் செய்யும் சூழ்ச்சி இது' என்று எண்ணி, பதில் கூறாமல் வாளா இருந்தான். ஆட்கள் திரும்பி வந்து அரசன் ஒன்றும் பேசாமலிருந்ததைக் கூறினார்கள். கஸ்ஸபன் பலமுறை தன்னுடைய ஆட்களை அனுப்பிக் கேட்டான். கடைசியாக வந்து கேட்டபோது, காலவாபிவரியில் என்னை நீராட அழைத்துக் கொண்டு போனால் அங்குச் சென்று அந்த இடத்தைக் காட்டுவேன் என்று கூறினான். ஆட்கள் வந்து அரசன் கூறியதைச் சொன்னார்கள். கஸ்ஸபன், தாதுசேனனை காலவாபியில் நீராட

அனுமதி கொடுத்தான். தாதுசேனன் காலவாபியில் நீராடின பிறகு, அரசனுடைய ஆட்களிடம் ஏரியைக் காட்டி, 'இதுதான் நான் பொருள் வைத்துள்ள இடம்' என்று கூறினான். தாதுசேனன் பொருள் உள்ள இடத்தைத் தெரிவிக்காமல் இருப்பதை அறிந்த கஸ்ஸபன் அரசனைக் கொன்றுவிடும்படி சேனாபதிக்குக் கட்டளையிட்டான்.

இதை எதிர்பார்த்துக்கொண்டிருந்த சேனாபதி, தன்னுடைய பழிவாங்கும் எண்ணம் நிறைவேறிற்று என்று மகிழ்ச்சியடைந்து அரண்மனைக் கட்டடத்தின் ஓரிடத்தில் சுவரில் உயரமாக அமைந்திருந்த மாடத்தில், தாதுசேன அரசனைக் கொண்டு போய், அவனுடைய ஆடைகளைக் களைந்து அவனை அம்மண மாக மாடத்தில் சுவரோடுசுவராக நிறுத்திச் செங்கல்லினால் மாடத்தை மூடிக் கட்டிவிட்டான். இவ்வாறு சேனாபதி, தன்னுடைய தாயைத் தீயிட்டுக் கொன்ற தாதுசேனனை உயிரோடு சுவரில் வைத்துக் கட்டிப் பழி தீர்த்துக்கொண்டான் (சூலவம்சம் 38ஆம் பரிச்சேதம் 37-110).

கஸ்ஸபன் I (கி.பி. 479–497)

தன் தந்தையான தாதுசேன அரசனிடமிருந்து அரசாட்சியைக் கைப்பற்றிக்கொண்டு அவனைச் சிறையில் அடைத்துப் பிறகு கொன்றுவிட்டுக் கஸ்ஸபன் இலங்கையின் அரசனானான். இவனை முதலாம் கஸ்ஸபன் என்று கூறுவர். இவனுடைய தம்பியான மொக்கல்லானன் தமிழ்நாட்டுக்குச் சென்றிருப்பதையறிந்த இவன், எப்படியும் மொக்கல்லானன் தமிழச் சேனையோடு வந்து தன்னைக் கொன்றுவிடுவான் என்று அஞ்சித் தன்னுடைய பாதுகாப்புக்காகச் சீககிரி மலைமேல் கோட்டையமைத்து அதனுள் அரண்மனை கட்டிக்கொண்டு அங்கிருந்து அரசாண்டான். (சீககிரி என்பது இப்போது சிகிரிம் என்று கூறப்படுகிறது. இந்த மலை அநுராதபுரத்திலிருந்து தென்கிழக்கே 38 கல் தூரத்திலும் தம்புல்லா என்னும் ஊரிலிருந்து வடகிழக்கே பத்துக் கல் தூரத்திலும் இருக்கிறது. கஸ்ஸபன் இந்த மலை மேல் கட்டின கோட்டைக் கொத்தளங்களும் அரண் மனைக் கட்டடமும் இன்றும் சிதைந்த நிலையில் உள்ளன.)

கஸ்ஸபன் பதினெட்டு ஆண்டுகள் அரசாண்டான். உதவியை நாடித் தமிழகத்துக்குச் சென்ற மொக்கல்லானன் தமிழகத்தில் களப்பிரருடைய உதவியை நாடியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனால், உடனே அவனுக்கு உதவி கிடைக்க வில்லை. பதினெட்டு ஆண்டு அவன் தமிழ்நாட்டிலே தங்கி விட்டான். பன்னிரண்டு தமிழ நண்பர்கள் அவனுக்கு உதவியாக வந்தனர். அவர்கள் போர் செய்வதில் தேர்ந்த சேனைத் தலைவர்கள் என்று தோன்றுகிறது. மொக்கல்லானன் சேனை

யோடு வந்து கஸ்ஸபனோடு போர் செய்தான். போரில் கஸ்ஸபன் தோல்வியடையும் நிலை ஏற்பட்டபோது அவன் தன்னுடைய யானை மேல் இருந்தபடியே வாளால் குத்திக்கொண்டு தற்கொலை செய்துகொண்டான். மொக்கல்லானன் ஆட்சியைக் கைப்பற்றினான் (சூலவம்சம் 39ஆம் பரிச்சேதம் 1-28).

கஸ்ஸபனுடைய காலத்தை ஒருவாறு நிச்சயிக்கலாம். இவன் சீன நாட்டு அரசனுக்கு எழுதின திருமுகம் கி.பி. 527இல் போய்ச் சேர்ந்தது என்று தெரிகிறபடியால் இவன் அந்த ஆண்டில் வாழ்ந்திருக்கிறான் என்பது தெரிகிறது (*J.R.A.S.* Ceylon Branch, XXIV, p. 85).

மொக்கல்லானன் I (கி.பி. 497–515)

கஸ்ஸபனுக்குப் பிறகு மொக்கல்லானன் அரசாண்டான். இவன், கஸ்ஸபனால் துரத்தப்பட்டுத் தமிழ்நாட்டுக்குப் போய் அடைக்கலம் புகுந்தான் என்பதை அறிந்தோம். "கஸ்ஸபனுடைய பதினெட்டாம் ஆட்சியாண்டில் மொக்கல்லானன் என்னும் வீர மன்னன் நிகந்தர்களின் செய்தியறிந்து பன்னிரண்டு வீரர்களான நண்பர்களோடு ஜம்புத்தீவிலிருந்து (தமிழ்நாட்டிலிருந்து) இங்கே (இலங்கைக்கு) வந்தான் என்று சூலவம்சம் கூறுகிறது (சூலவம்சம் 39ஆம் பரிச்சேதம் 20). நிகந்தர் என்பது இங்குக் களப்பிரரைக் குறிக்கிறது. நிகந்தர் என்றால் சமணர் அல்லது ஜைனர் என்று சூலவம்சம் கூறுகிறது. எனவே, மொக்கல்லானன் தமிழ்நாட்டிலிருந்தும் களப்பிர அரசரின் உதவி பெற்று இலங்கைக்குப் போனான் என்பது தெரிகிறது.

மொக்கல்லானன் அரசனானவுடனே தன்னுடைய தந்தையான தாதுசேனனைக் கொல்வதற்குக் கஸ்ஸபனோடு உதவியாக இருந்த ஆயிரம் பேரைக் கொன்றுவிட்டான். மற்றும் அவனுக்கு உதவியாக இருந்த பலரைப் பிடித்து அவர்களுடைய காதையும் மூக்கையும் அரிந்து அவர்களை நாடுகடத்திவிட்டான். தமிழ் நாட்டிலிருந்து இலங்கை மேல் போர் செய்யப் படையெடுத்து வருவார்கள் என்று அஞ்சி இவ்வரசன் இலங்கையின் மேற்குக் கடற்கரையோரங்களில் ஆங்காங்கே பாதுகாப்புகளை அமைத்தான். மொக்கல்லானன் பதினெட்டு யாண்டு அரசாண்டான் (சூலவம்சம் 39ஆம் பரிச்சேதம் 29-58).

குமார தாதுசேனன் (கி.பி. 515–524)

மொக்கல்லானன் இறந்த பிறகு அவனுடைய மகனான குமார தாதுசேனன் அரசாண்டான். இவனும் காளிதாசன் என்பவனும் நெருங்கிய நண்பர்கள். காளிதாசன் மொக்கல்லானனுடைய அமைச்சனுடைய மகன். குமார தாதுசேனன் ஒன்பது ஆண்டு அரசாண்டான் (சூலவம்சம் 41ஆம் பரிச்சேதம்

1-3). இவன் தன்னுடைய நண்பனான காளிதாசன் இறந்தபோது அந்தத் துயரம் பொறுக்க முடியாமல் அவனுடைய ஈமத்தியில் விழுந்து உயிர்விட்டான் என்பர்.

கீத்திசேனன் (கி.பி. 524)

பிறகு, குமார தாதுசேனனுடைய மகனான கீத்திசேனன் அரசனானான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் 9ஆம் மாதம் இவனுடைய தாய்மாமனான சிவன் என்பவன் இவனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றி யரசாண்டான் (சூலவம்சம் 41ஆம் பரிச்சேதம் 4).

சிவன் (கி.பி.524)

தன்னுடைய மருகனான கீத்திசேனனைக் கொன்று அரசனான சிவன் இருபத்தைந்தாம் நாளில் உபதிஸ்ஸன் என்பவனால் கொல்லப்பட்டு இறந்தான் (சூலவம்சம் 41ஆம் பரிச்சேதம் 5-6).

உபதிஸ்ஸன் III (கி.பி.525–526)

சிவனைக் கொன்று இலங்கையாட்சியைக் கைப்பற்றின உபதிஸ்ஸன், மொக்கல்லானனுடைய தங்கையை மணந்தவன். கஸ்ஸபனுக்கு அரசாட்சி ஆசையை யுண்டாக்கித் தாதுசேன அரசனைச் சிறையில் அடைக்கச் செய்து, பிறகு அவ்வரசனைச் சுவரில் வைத்துக்கட்டிக் கொன்றவன். இவன் ஆட்சியைக் கைப் பற்றியவுடன் முக்கியமானவர்களுக்கு அரசாங்க அலுவல்களைக் கொடுத்து அவர்களைத் தன்வசப்படுத்திக் கொண்டான். இவன் தன்னுடைய மகளைச் சிலாகாலன் என்பவனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். இவனுக்குக் கஸ்ஸபன் என்று ஒரு மகன் இருந்தான்.

உபதிஸ்ஸனுடைய மகளை மணஞ்செய்த சிலாகாலன் ஆட்சியில் அமர்ந்து அரசனாக இருக்க ஆசைப்பட்டுத் தன்னுடைய மாமனாரான உபதிஸ்ஸனோடு போர் செய்தான். உபதிஸ்ஸன் வயதானவனாகையால் அவனுடைய மகனான கஸ்ஸபன் சிலாகாலனோடு போர் செய்தான். சில போர்களில் கஸ்ஸபன் வெற்றி பெற்றுச் சிலாகாலனைத்துரத்திவிட்டான். கடைசியில் சிலாகாலன் போரில் வெற்றியடைந்தான். தோல்வி யடைந்த கஸ்ஸபன் (சிலாகாலனுடைய மைத்துனன்) போர்க் களத்தில் தற்கொலை செய்துகொண்டிறந்தான். இச்செய்தியை யறிந்த வயது தளர்ந்தவனான உபதிஸ்ஸன் மனம் உடைந்து இறந்து போனான். உபதிஸ்ஸன் ஒன்றரை யாண்டு அரசாண்டான் (சூலவம்சம் 41ஆம் பரிச்சேதம் 7-26).

சிலாகாலன் (கி. பி. 526–539)

தன்னுடைய மாமனாரான உபதிஸ்ஸனை வென்று ஆட்சியைக் கைப்பற்றி அரசனான சிலாகாலன் பதின்மூன்று

ஆண்டு இலங்கையை அரசாண்டான். இவனை அம்பா சாமணேர சிலாகாலன் என்றும் கூறுவர். இவ்வரசனுக்கு மூன்று மக்கள் இருந்தனர். அவர்களின் பெயர் மொக்கல்லானன், தாட்டாபபூதி, உபதிஸ்ஸன் என்பது. மூத்த மகனான மொக்கல்லானனுக்கு ஆதிபத என்று சிறப்புப் பெயர் சூட்டி அவனைக் கிழக்கு நாடுகளின் அதிபதியாக்கினான். இரண்டாவது மகனான தாட்டாபபூதிக்கு மலையராஜன் என்று சிறப்புப் பெயர் கொடுத்து அவனை மலைய நாட்டுக்கும் தக்ஷிண தேசத்துக்கும் அதிபதியாக்கினான். கடைசி மகனான உபதிஸ்ஸனைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டான்.

இவன் அரசாண்ட காலத்தில், மகாநாகன் என்னும் வழிப் பறிக் கொள்ளைக்காரன் இருந்தான். அவன் சிலாகாலனிடம் வந்து அரசாங்க அலுவலில் அமர்ந்தான். அலுவலில் அமர்ந்த மகாநாகனைச் சிலாகாலன், தென்கிழக்கேயுள்ள உரோகண நாட்டுக்கு அனுப்பி இறை (வரி) தண்டிவரும்படி நியமித்தான். அவன் சென்று இறை தண்டிவந்து கொடுத்தான். அவனுக்கு அரசன் அண்ட சேனாபதி என்னும் பெயர் கொடுத்து உரோகண நாட்டின் வரி தண்டும் அலுவலனாக அமைத்தான். உரோகண நாட்டுக்குச் சென்ற அண்டசேனாபதி மகாநாகன் அங்கேயே தங்கியிருந்து வரிப்பணத்தைத் தானே வைத்துக்கொண்டு சுதந்தர னாக இருந்தான் (சூலவம்சம் 41ஆம் பரிச்சேதம் 69-89, 26-41).

தாட்டாபபூதி (கி. பி.539–540)

சிலாகாலன் காலமான பிறகு அவனுடைய இரண்டாவது மகனான தாட்டாபபூதி தக்கண நாட்டிலிருந்து வந்து ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டான். மூத்த மகனான மொக்கல்லானன் முறைப்படி அரசுக்கு உரியவன். அவனுக்குரிய ஆட்சியை அவனுடைய தம்பியான தாட்டாபபூதி கைப்பற்றிக் கொண்டதைக் கடைசித் தம்பியான உபதிஸ்ஸன் கண்டித்தான். கண்டித்தவனைத் தாட்டாபபூதி கொன்றுவிட்டான். கிழக்கு நாட்டிலிருந்த மொக்கல்லானன், தனக்குரியதான ஆட்சியைத் தன்னுடைய தம்பியான தாட்டாபபூதி கைப்பற்றிக்கொண்டதை யறிந்து படையெடுத்து வந்து போர் செய்யத் தொடங்கினான். இருவர் சேனையும் போர்க்களத்தில் சந்தித்தன. அப்போது மொக்கல்லானன், தாட்டாபபூதிக்கு இவ்வாறு செய்தி யனுப்பினான்: "நமக்காகப் போர் வீரர்கள் வீணாக மடிய வேண்டாம். நாம் இருவர் மட்டும் போர் செய்வோம். போரில் வென்றவருக்கே அரசாட்சியுரியதாகும்" என்று சொல்லியதற்குத் தாட்டாபபூதியும் இசைந்தான். இருவரும் தங்கள்தங்கள் யானை மேல் அமர்ந்து போர் செய்யத் தொடங்கினார்கள். மொக்கல் லானனுடைய யானை தாட்டாபபூதியின் யானையைத்

தன்னுடைய தந்தங்களினால் குத்திற்று. குத்துண்ட யானை அஞ்சிப் புறங்கொடுத்து ஓடிற்று. அப்போது தனக்குத் தோல்வி நேரிடப் போவதையறிந்த தாட்டாபபூதி தன்னுடைய போர் வாளை எடுத்துத் தன்னையே குத்திக்கொண்டு இறந்து போனான். தாட்டாபபூதி ஆறு நிங்கள் ஆறு நாட்கள் அரசாண்டான் (சூலவம்சம் 41ஆம் பரிச்சேதம் 42-53).

மொக்கல்லானன் II (கி.பி. 540–560)

தாட்டாபபூதி இறந்த பிறகு அவனுடைய அண்ணனான மொக்கல்லானன் இலங்கையை அரசாண்டான். இரண்டாம் மொக்கல்லானனாகிய இவனைச் சுல்ல மொக்கல்லானன் (சிறிய மொக்கல்லானன்) என்று கூறுவர். இவன் இருபது ஆண்டு அரசாண்டான் (சூலவம்சம் 54-63).

கீர்த்தி ஸ்ரீமேகன் (கி.பி. 560–561)

மொக்கல்லானன் இறந்த பிறகு அவனுடைய இராணி, உறவினர்களை நஞ்சு இட்டுக் கொன்றுவிட்டு அரசாட்சியைத் தன்னுடைய மகனான கீர்த்தி ஸ்ரீமேகனுக்குக் கொடுத்தாள். அவள் அரசாட்சியைத் தானே நடத்தினாள். கீர்த்தி ஸ்ரீமேகவண்ணனுக்கு முன்பு ஒரு கீர்த்தி ஸ்ரீமேகவண்ணன் இருந்தபடியால் இவனைக் குட்டகீர்த்தி ஸ்ரீமேகவண்ணன் என்று கூறுவர். இவனுடைய தாய் அரச காரியங்களில் அடிக்கடி தலையிட்டபடியால் அரசாட்சி முறையாகவும் ஒழுங்காகவும் நடைபெறவில்லை. ஆட்சி முறையில் குழப்பங்கள் நேர்ந்தன. அரசாங்கத்து அலுவலர்கள் கைக்கூலி வாங்கியபடியால் ஆட்சி ஒழுங்கீனமாக இருந்தது. வலியோர் எளியோரை அச்சுறுத்தி வருத்தினார்கள். ஆட்சியில் குழப்பமும் கலகமும் ஏற்பட்டன.

கீர்த்தி ஸ்ரீமேகனுடைய பாட்டனான சிலாகால அரசனால் உரோகண நாட்டில் இறை தண்டும் அலுவலில் நியமிக்கப் பட்டிருந்த மகாநாகன் என்பவன், இராஜராட்டிரத்தில் குழப்ப மான ஆட்சி நடப்பதையறிந்து இதுவே தக்க சமயம் என்று கண்டு உரோகண நாட்டிலிருந்து படையெடுத்து வந்து கீர்த்தி ஸ்ரீமேகனோடு போர் செய்து வென்று அரசாட்சியைக் கைப்பற்றினான். கீர்த்தி ஸ்ரீமேகன் இலங்கையைப் பத்தொன்பது நாட்கள் அரசாண்டான் (சூலவம்சம் 91-92).

களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் இருந்த அரசியல் நிலையை இதனோடு நிறுத்துகிறோம். அரசனை ஊழியர் கொன்று ஆட்சியைக் கைப்பற்றுவதும் தந்தையை மகன் கொன்றும் அரசனை இராணி கொன்றும் தமயனைத் தங்கை கொன்றும் மருகனை மாமன் கொன்றும் இவ்வாறெல்லாம் இலங்கை அரசியலில் கொலைகள் மலிந்து இருந்த காலம் அது.

களப்பிரர் காலத்து இருக்குவேள் அரசர்

பாண்டி நாட்டின் வடக்கு எல்லைக்கும் சோழ நாட்டுத் தெற்கு எல்லைக்கும் இடைநடுவே கொடும்பாளூர் இருந்தது. கொடும்பாளூரைக் கொடும்பை என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இப்போதைய புதுக்கோட்டை மாவட்டத்தில் அடங்கியுள்ள கொடும்பாளூர் புதுக்கோட்டை நகரத்துக்கு இருபத்தைந்து கல் தொலையில் இருக்கிறது. சங்க நூல்களில் கொடும்பாளூரைப் பற்றியும் அதனை யரசாண்ட அரசர்களைப் பற்றியும் கூறப்படவில்லை. அக்காலத்தில் கொடும்பாளூர் வட்டாரம் மிழலைக் கூற்றம் என்று பெயர் பெற்றிருந்ததாகத் தோன்றுகிறது.

தமிழ்நாட்டைக் களப்பிரர் அரசாண்ட காலத்தில் கொடும் பாளூர் வட்டாரத்தை இருக்குவேள் அரசர் அரசாண்டனர். இருக்குவேளிர், களப்பிரருக்குக் கீழடங்கி அரசாண்டனர் என்று தெரிகின்றனர். கொடும்பாளூர் மூவர் கோவில் கல்வெட்டு இருக்குவேள் பரம்பரையில் வந்த அரசர்களின் பெயர்களைக் கூறுகிறது. மூவர் கோவில் கல்வெட்டுச் சாசனம் கி.பி. 1907ஆம் ஆண்டில் பழம்பொருள் ஆய்வுத் துறையினரால் கண்டுபிடிக்கப் பட்டது. 1907-08ஆம் ஆண்டு அறிக்கையில் இந்தச் சாசனத்தைப் பற்றிய செய்தி வெளியிடப்பட்டது (*Annual Report on Epigraphy*, Madras, 1907-08).

இந்தச் சாசனத்தின் தொடக்கமும் இறுதியும் உடைந்து போனபடியால் இது எழுதப்பட்ட காலத்தை யறிய இயலவில்லை. இது சோழக் கிரந்த எழுத்தினால் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது. இந்தச் சாசனத்தை ஆராய்ந்து திரு. நீலகண்ட சாஸ்திரி 1933ஆம் ஆண்டில் ஒரு கட்டுரை எழுதினார் (*Journal of Oriental Research*, Madras, 1933, pp. 1-10). பிறகு இதை இவர் தாம் எழுதிய *சோழர்* என்ற வரலாற்று நூலிலும் எழுதினார் (K.A. Nilakanta Sastri, *The Colas*, Vol. I, 1935). மூவர் கோவில் சாசனத்தின் எழுத்து அமைப்பைக் கொண்டு, இது கி.பி. 10ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்று சாஸ்திரி கருதினார்.

மூவர் கோவில் கல்வெட்டுச் சாசனத்தை ஆராய்ந்த ஹீராஸ் அடிகள், இச்சாசனத்தில் காணப்படுகிற வரலாற்றுச் செய்தி களைக் கொண்டு இது கி.பி. 7ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்று கூறி ஒரு கட்டுரை எழுதினார் (Rev. H. Heras, *Journal of the*

Royal Asiatic Society, January 1934). ஹீராஸ் அடிகள் கூறியதே சரி என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. அடிகளுடைய மாணவரான டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்கள் தாம் எழுதிய *வெள்ளாறு வட்டாரத்தின் பழைய வரலாறு* என்னும் நூலில், மூவர் கோவில் சாசனம் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்று கொண்டார். இந்தச் சாசனத்தில் கூறப்படுகிற இருக்குவேள் அரசர்களில் பரதுர்க்க மர்தனன் என்பவன் வாதாபிஜி (வாதாபி நகரத்தை வென்றவன்) என்று கூறப்படுகிறான். சளுக்கிய அரசனான இரண்டாம் புலிகேசியோடு போர் செய்து வென்று அவனுடைய வாதாபி நகரத்தைக் கைப்பற்றின முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் (மாமல்லன் காலத்தில்) இந்தப் பரதுர்க்கமர்தனன் இருந்தான் என்பதும், இவன் நரசிம்மவர்மன் சார்பாகப் புலிகேசியோடு போர் செய்து வாதாபியை வென்று 'வாதாபிஜித்' என்று பெயர் பெற்றான் என்பதும் தெரிகின்றன. வாதாபி நகரம் கி.பி. 642ஆம் ஆண்டில் வெல்லப்பட்டது என்பதை வரலாற்றாசிரியர் யாவரும் ஒப்புக்கொண்டுள்ளனர். ஆகவே, இருக்குவேளாகிய பரதுர்க்கமர்த்தனன் கி.பி. 642இல் இருந்தவன் என்பதில் சற்றும் ஐயமில்லை. இவனுடைய காலத்தை அடிப்படையாகக் கொண்டு இவனுக்கு முன்னும் பின்னும் இருந்த இருக்குவேள் அரசர் காலங்களை ஒருவாறு அறியலாம். தலைமுறை யொன்றுக்கு 30 ஆண்டு என்று கணக்கிட்டால் கீழ்வருமாறு இவர்களின் காலம் தெரிகிறது:

	இருக்குவேள் அரசர்	உத்தேசமான காலம் கி.பி.
1.	இருக்குவேள் (பாண்டியனுடைய யானைப்படையை முறியடித்தவன்; இவனுடைய பெயர் கல்வெட்டில் மறைந்துவிட்டது)	435–465
2.	பரவீரஜித்து	465–495
3.	வீரதுங்கன்	495–525
4.	அதிவீரன்	525–555
5.	அநுபமன் (சங்ககிருத்து)	555–585
6.	நிருப கேசரி	585–615
7.	பரதுர்க்கமர்த்தனன்	615–645
8.	சமராபிராமன்	645–675
9.	பூதிவிக்கிரம கேசரி	675–705
10.	பராந்தகன்	705–735
11.	ஆதித்திய வர்மன்*	735–765

* M.Arokiaswamy, *The Early History of the Vellar Basin*, 1954, p. 61.

இதில் கூறப்படும் ஆட்சி ஆண்டுகளில் ஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் கூடுதல் குறைதலாக இருக்கக்கூடும்.

இதில் கூறப்பட்ட இருக்குவேள்களில் முதல் ஐந்து பேர் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்குக் கீழடங்கியிருந்தவர் என்று தெரிகின்றனர். 6, 7, 8 எண்ணுள்ள அரசர் பல்லவ அரசர்களைச் சார்ந்து அவர்களுக்கு அடங்கியிருந்தனர். 9, 10, 11 எண்ணுள்ள அரசர், அக்காலத்தில் சிற்றரசர் நிலையில் இருந்த சோழர் குலத்தோடு உறவுகொண்டு பல்லவ அரசருக்கு எதிரிகளாக இருந்தனர்.

இங்கு, நம்முடைய ஆராய்ச்சிக்கு உரிய களப்பிரர் காலத்தில் கொடும்பாளூரை யாண்ட இருக்குவேள் அரசரைப் பற்றிக் கூறுவோம். முதலாமவனாகிய இருக்குவேளின் பெயர் சாசனக் கல்லில் மறைந்து போய்விட்டபடியால், அவனுடைய பெயர் தெரியவில்லை. இவன் களப்பிர அரசனுக்கு அடங்கிக் கொடும்பாளூரை அரசாண்டான். களப்பிரருக்கு அடங்கியிருந்த பாண்டியர், அடிக்கடி மேலெழுந்து களப்பிர அரசனுடன் போர் செய்து சுதந்தரம் பெற முயன்றனர் என்று தெரிகிறது. அவ்வாறு பாண்டியர், களப்பிரரோடு செய்த போர் ஒன்றில், களப்பிரர் சார்பாக இந்த இருக்குவேள் அரசன் பாண்டியனோடு போர் செய்து பாண்டியரின் யானைப்படையை வென்றான் என்று தெரிகிறது. இவனைப் பற்றி வேறு ஒன்றும் தெரியவில்லை.

இவனுக்குப் பிறகு ஆண்ட பரவீரஜித்து என்பவன் பகைவரான வீரர்களைப் போரில் வென்றவன் என்று அவனுடைய பெயரில் தெரிகிறது. அவனுக்குப் பிறகு ஆண்ட வீரதுங்கனும் அவனுக்குப் பிறகு ஆண்ட அதிவீரனும் போரில் வல்லவர்கள் என்பதை அவர்களுடைய பெயரிலிருந்து அறிகிறோம். இவர்களுக்குப் பிறகு அரசாண்டவன் இருக்குவேள் அநுபமன் என்பவன். இவனுக்குச் சங்கசிருத்து (சங்கத்தைச் செய்தவன்) என்று சிறப்புப் பெயர் இருந்தது. இதனால், இவன் சைன சங்கத்தை ஆதரித்தவன் என்று தோன்றுகிறான். மலையத் துவஜன் என்னும் ஜைன முனிவர் தேனிமலைக் குகையில் (தேனூர் மலைக் குகையில்) தவஞ் செய்துகொண்டிருந்தார். கொடும் பாளூர் இருக்குவேள் அரசன் இந்த முனிவரைக் கண்டு வணங்கி இவருக்கு நிலத்தைத் தானஞ்செய்தான் என்று இங்குள்ள சாசனம் கூறுகிறது (*புதுக்கோட்டைச் சாசனங்கள்* எண் 9). இந்தக் கல்வெட்டெழுத்து இந்தக் குகைக்கு எதிரில் உள்ள பாறையில் எழுதப்பட்டுள்ளது. அதன் வாசகம் இது:

> ஸ்வஸ்தி ஸ்ரீ மலையத் துவஜன் தேனூர் மலையில் தவஞ் செய்யக் கண்டு இருக்குவேள் வந்தித்து அவிப்புறஞ் செய்த பள்ளிச் சந்தந் நாலே கால். இவ்வறங் காத்தான் அடி நித்தஞ் சென்னி. அன.

இந்தக் கல்வெட்டில் தானஞ்செய்த அரசன் பெயர் இருக்கு வேள் என்று எழுதப்பட்டிருக்கிறது. அரசனின் சொந்தப் பெயர் எழுதப்படவில்லை. ஆனால், இந்த இருக்குவேள் அநுபமன் என்பவன் என்று கருதப்படுகிறான். இவனுடைய சங்ககிருத்து (ஜைன சங்கத்தைச் செய்தவன், ஆதரித்தவன்) என்ற சிறப்புப் பெயர் இதை உறுதி செய்கிறது. இவனுடைய ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் (இறுதியில்) சிம்மவிஷ்ணு என்னும் பல்லவ அரசன் காஞ்சியிலிருந்து படையெடுத்து வந்து களப்பிர அரசனோடு போர் செய்து வென்று சோழ நாட்டைக் கைப்பற்றினான். அப்போது இந்த இருக்குவேள் (முன்பு களப்பிரரைச் சார்ந்திருந்தவன், பிறகு சிம்மவிஷ்ணுவுக்குக் கீழடங்கிப்) பல்லவரைச் சார்ந்து இருந்தான் என்று தோன்றுகிறான். இவனுடைய பின் சந்ததியர் பல்லவ அரசர்களைச் சார்ந்து இருந்தனர்.

இருக்குவேள் அரசரும் இருங்கோவேள் அரசரும் ஒருவரே என்று ஆரோக்கியசாமி தம்முடைய நூலில் கூறுகிறார் (M. Arokiaswamy, *The Early History of the Vellar Basin*). சங்க காலத்தில் இருந்த இருங்கோவேள் அரசருக்கும் பிற்காலத்தில் இருந்த இருக்குவேள் அரசருக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. அவர்கள் வேறு; இவர்கள் வேறு. பெயர்களில் காணப்படுகிற ஒற்றுமை பற்றி இருவரையும் ஒருவராக ஊகிப்பது கூடாது.

களப்பிரருக்குக் கீழடங்கியிருந்த வேறு சிற்றரசர்களைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

களப்பிரரின் வீழ்ச்சி

களப்பிரர் தமிழகத்தை ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகள் அரசாண்டார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சைன மதமும் பௌத்த மதமும் நெடுகப் பரவி வளர்ந்து செல்வாக் கடைந்து பெரும்பான்மையோர் மதங்களாக இருந்தபடியாலும் களப்பிரரும் சைன சமயத்தவரானபடியாலும் அவர்களுக்கு நாட்டில் ஆதரவு இருந்தது. களப்பிரர் முக்கியமாகச் சைன சமயத்தை ஆதரித்தார்கள். சைன சமயத்துக்கு அடுத்தபடியாகப் பௌத்த மதத்துக்குச் செல்வாக்கிருந்தது. களப்பிரரை சூலவம்சம் என்னும் சிங்கள நாட்டு நூல் நிகந்தர் (ஜைனர்) என்று கூறுகிறது. மொக்கல்லானன் என்னும் சிங்கள அரசகுமரன் தமிழ்நாட்டுக்கு வந்து களப்பிர அரசரை உதவி கேட்டபோது அவர்கள் அவனுக்குச் சேனைத் தலைவரைக் கொடுத்து உதவினார்கள். இதைக் கூறுகிற சூலவம்சம் களப்பிரர் பெயரைக் கூறாமல் நிகந்தர் (ஜைனர்) என்று கூறுவதை முன்னமே காட்டினோம். ஆகவே, களப்பிரர் நிகந்தர் என்று அழைக்கப்பட்டனர் என்பது தெரிகிறது. களப்பிரருக்குப் பெரும்பான்மை மதமான ஜைன மதத்தின் ஆதரவு இருந்தபோதிலும், நாட்டில் அரசியல் ஆதரவு இல்லையென்றே தோன்றுகிறது. சேர, சோழ, பாண்டியர் களப்பிரரை வீழ்த்துவதற்குச் சமயம் பார்த்திருந்தார்கள். தொண்டை நாட்டிலிருந்த பல்லவ அரசர் களப்பிரரை வென்று அவர்களுடைய ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு நேரத்தைப் பார்த்திருந்தனர். களப்பிரருக்குக் கீழடங்கியிருந்த பாண்டியர் தாங்கள் சுதந்திரம் பெறுவதற்குப் பெருமுயற்சி செய்ததாகத் தெரிகிறது. களப்பிரர் ஆட்சிக் காலத்திலேயே, பாண்டிய அரசர் குலத்தைச் சேர்ந்த ஒரு பாண்டியன் இலங்கைக்குப் படை யெடுத்துப் போய் சிங்கள அரசனை வென்று இலங்கையை அரசாண்டான். அவனுடைய பிள்ளைகளும் பேரர்களும் அவனுக்குப் பிறகு அரசாண்டதை முன்னமே அறிந்தோம்.

கி.பி. 6ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டியர் களப்பிரரை வென்று தங்களுடைய பாண்டிய இராச்சியத்தை மீட்டுக்கொண்டார்கள். பாண்டியன் கடுங்கோன் பாண்டி நாட்டு ஆட்சியைக் களப்பிரரிடமிருந்து மீட்டுக்கொண்டான் என்று பாண்டியர் செப்பேடுகள் கூறுகின்றன.

"அளவரிய ஆதிராஜரை அகல நீக்கி அகலிடத்தைக் களப்ர னென்னுங் கலி அரைசன் கைக்கொண்டதனை இறக்கிய பின் படுகடன் முளைத்த பரிதி போல பாண்ட்யாதி ராஜன் வெளிற்பட்டு விடுகதி ரவிரொளி விலக வீற்றிருந்து வேலை சூழ்ந்த வியலிடத்துக் கோவும் குறும்பும் பாவுடன் முருக்கிச் செங்கோலோச்சி வெண்குடை நீழற் றங்கொளி நிறைந்த தரணி மங்கையைப் பிறர்பாலுரிமை திறவிதி நீக்கித் தன்பாலுரிமை நன்கனமமைத்த மானம் பேர்த்த தானைவேந்தன் னொடுங்கா மன்னரொளி நகரழித்த கடுங்கோ னென்னுங் கதிர்வேற்றென் னான்" என்று வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது (வேள்விக்குடிச் செப்பேடு, வரி 39-46).

"கற்றறிந்தோர் திறல் பரவக் களப்பாழரைக் களைகட்ட மற்றிரண்டோள் மாக்கடுங்கோன் மானம் பேர்த்தருளிய கோன்" என்று தளவாய்ப்புரச் செப்பேடு கூறுகிறது (தளவாய்புரச் செப்பேடு, வரி 131-132).

பாண்டியன் சுடுங்கோன், 'மானம் பேர்த்த தானை வேந்தன்' என்றும் 'மானம் பேர்த்தருளிய கோன்' என்றும் செப்பேடுகளின் தமிழ் வாசகம் கூறுவதைப் போலவே, சமஸ்கிருதச் சுலோகமும் அவனை மானம் பேர்த்த கடுங்கோன் என்று கூறுகிறது (தளவாய்புரச் செப்பேடு, சுலோகம் 23, வரி 39-40). எனவே 'மானம் பேர்த்த கடுங்கோன்' என்பது அவனுடைய சிறப்புப் பெயர் என்று தோன்றுகிறது.

பாண்டியன் கடுங்கோன் பாண்டிய நாட்டைக் களப்பிரரிட மிருந்து மீட்டுக்கொண்டபோது, ஏறக்குறைய அதே காலத்தில் தொண்டை நாட்டு அரசனான பல்லவ சிம்மவிஷ்ணு சோழ நாட்டைக் களப்பிரரிடமிருந்து கைப்பற்றிக்கொண்டான். இந்த வரலாற்றைப் பள்ளன்கோவில் செப்பேடும் வேலூர்ப்பாளையம் செப்பேடும் கூறுகின்றன.

"சிம்மவர்மனுடைய மகன் சிம்மவிஷ்ணு. அந்தச் சிம்ம விஷ்ணு, மற்றொரு சிம்மவிஷ்ணு என்னும் அரசனை வென்றான். அவன், பலத்தில் வெற்றி வீரனாகிய அர்ச்சுனனைப் போன்றவன். வில் வித்தையிலும் வீரன். போரிலே வெற்றி கொள்வதில் சமர்த்தன்" என்றும்,

"உண்மை 'தியாகம்' வணக்கம் போன்ற பரிசுத்தமான நற்குணங்கள் யாரிடத்தில் உள்ளனவோ, வீர குணங்கள் யாரை அடைக்கலமாகக் கொண்டுள்ளனவோ (அந்தச் சிம்மவிஷ்ணு) கவேரன் மகளான காவிரி ஆற்றை மாலையாகவும் செழுமையான நெல் வயல், கரும்பு வயல்களை ஆடையாகவும் கமுகத் தோட்டம், வாழைத் தோட்டங்களை ஒட்டியாணமாகவும் அணிந்த சோழ நாட்டைக் கைப்பற்றினான்" என்றும் பள்ளன்கோயில் செப்பேடு கூறுகிறது (பள்ளன்கோயில் செப்பேடு, சுலோகம் 4, 5.).

"புகழ்வாய்ந்த திறலையுடையவனும் பகைவர்களின் ஆற்றலையடக்கும் பலமுள்ளவனுமான சிம்மவர்மனுக்கு வெற்றி வீரனான சிம்மவிஷ்ணு மகனாகப் பிறந்தான். அவன், கமுகத் தோட்டங்களும் நெல் வயல்களும் நிறைந்துள்ள கவேரன் மகளான காவிரி ஆற்றினால் அலங்கரிக்கப்பட்ட சோழ நாட்டைக் கைப்பற்றினான்" என்று வேலூர்ப்பாளையச் செப்பேடு கூறுகிறது (வேலூர்பாளையச் செப்பேடு, சுலோகம் 10).

இவ்வாறு பல்லவ அரசருடைய செப்பேடுகள் கூறுகின்றன. இவற்றிலிருந்து சிம்மவிஷ்ணு என்னும் பல்லவ அரசனுடைய மகனான சிம்மவிஷ்ணு, சோழ நாட்டையாண்ட சிம்மவிஷ்ணு என்னும் அரசனை வென்று சோழ நாட்டைக் கைப்பற்றினான் என்றும் அறிகிறோம். சிம்மவிஷ்ணு பல்லவன் சோழ நாட்டைச் சோழரிடமிருந்து வென்றுகொண்டானா, களப்பிரரிடமிருந்து வென்றுகொண்டானா என்று செப்பேடுகள் கூறவில்லை. களப்பிரரிடமிருந்து சோழ நாட்டைக் கைப்பற்றினான் என்று வரலாற்று அறிஞர்கள் கருதுவது முற்றிலும் உண்மை. அக்காலத்தில் சோழ நாட்டைச் சோழ மன்னர் ஆளவில்லை. சங்க காலத்தின் இறுதியில் களப்பிரர் தமிழகத்தைக் கைப்பற்றி ஆண்டபோது சோழர் அவருக்குக் கீழடங்கியிருந்தார்கள். ஆகவே, சிம்மவிஷ்ணு களப்பிரரிடமிருந்துதான் சோழ நாட்டை வென்றான் என்பது வெளிப்படை. களப்பிரருக்குக் கீழடங்கியிருந்த சோழர், பல்லவர் சோழ நாட்டை வென்ற பிறகு பல்லவருக்குக் கீழடங்கினார்கள்.

பாண்டியன் கடுங்கோனும் பல்லவச் சிம்மவிஷ்ணுவும் களப்பிரரை வென்று வீழ்த்தியது ஏறத்தாழ கி.பி. 575 என்று கருதப்படுகிறது. கி.பி. 575இல் அல்லது அதற்குச் சற்று முன் பாண்டியன் கடுங்கோன் களப்பிரரை வென்றிருக்கவேண்டும் என்று திரு. சதாசிவ பண்டாரத்தார் கூறுகிறார் (சதாசிவ பண்டாரத்தார், *பாண்டியர் வரலாறு*, பக்கம் 34). கி.பி. 590இல் களப்பிரர் வெல்லப்பட்டனர் என்று திரு. நீலகண்ட சாஸ்திரி கருதுகிறார் (K.A.N. Sastry, *The Pandyan Kingdom*). கி.பி. 575இல் களப்பிரர் வீழ்ச்சியடைந்தனர் என்று கொள்வதே சரி என்று தோன்றுகிறது.

கி.பி. 450க்கும் 550க்கும் இடையில் களப்பிரர் ஆட்சி தமிழகத்தில் இருந்தது என்று திரு.பி.தி. சீனிவாச அய்யங்கார் கூறுகிறார். பிறகு கி.பி. 6ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர் களப்பிரரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினார்கள் என்று கூறுகிறார் (P.T. Srinivasa Iyengar, *History of the Tamils*, 1929, p. 534). அதாவது, கி.பி. 450 முதல் 600 வரையில் 150 ஆண்டு களப்பிரர் ஆட்சி இருந்ததென்று கூறுகிறார். இவர் கூற்று தவறு என்று தோன்றுகிறது. ஏறத்தாழ கி.பி. 250 முதல் 575 வரையில்

தமிழ்நாட்டைக் களப்பிரர் ஆண்டனர் என்று கருதுவது தவறாகாது.

பாண்டி நாட்டைக் கடுங்கோனும் சோழ நாட்டைச் சிம்ம விஷ்ணுவும் வென்றுகொண்டபோது சேர நாட்டைச் சேர அரசன் களப்பிரரிடமிருந்து வென்றுகொண்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனால், அந்தச் சேரனது பெயர் தெரியவில்லை. களப்பிரர் தங்கள் இராச்சியத்தைச் சேர, பல்லவ, பாண்டியர் களுக்கு இழந்துவிட்ட பிறகு அவர்கள் பேரரசர் நிலையிலிருந்து வீழ்ச்சியடைந்து சிற்றரசர் நிலையை அடைந்தனர். அவர்கள் சோழ நாட்டிலே தஞ்சாவூர், செந்தலை முதலான ஊர்களில் தங்கிச் சிற்றரசர்களாகப் பல்லவ அரசருக்கு அடங்கிவிட்டனர்.

மாமல்லன் (முதலாம் நரசிம்மவர்மன்), இரண்டாம் நந்திவர்மன் ஆகிய பல்லவ அரசர் களப்பிரரை வென்றதாகக் கூறிக்கொள்கின்றனர் (கூரம் செப்பேடு, வரி 15; புல்லூர்ச் செப்பேடு; பட்டத்தால் மங்கலம் செப்பேடு, சுலோகம் 9). சளுக்கிய அரசர்களான முதலாம் விக்கிரமாதித்தன், விசயாதித்தன் முதலான அரசர்கள் களப்பிரரை வென்றதாகக் கூறிக்கொள் கின்றனர். இவர்கள் வென்ற களப்பிரர் பேரரசராகத் தமிழ் நாட்டையாண்ட களப்பிரர் அல்லர்; அரசை இழந்து சிற்றரசர் நிலையையடைந்த பிற்காலத்துக் களப்பிரர் ஆவார்.

பிற்காலத்தில் களப்பிரர் முத்தரையர் என்று பெயர் பெற்றிருந்தனர் என்று அறிகிறோம். முத்தரையர் என்னும் பெயர் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூன்று தரைகளை அரசாண்டவர் என்னும் பொருளுள்ள சொல்லாக இருக்கலாம். முத்தரையர், செந்தலை, தஞ்சாவூர் நாடுகளை யரசாண்டார்கள். முத்தரையர் களப்பிரர் அல்லர் என்று திரு. சதாசிவ பண்டாரத்தார் கருதுகிறார். "அன்றியும் தமிழ்நாட்டுக் குறுநில மன்னர் குடியினராகிய முத்தரையர் என்போர் களப்பிரரே யாவர் என்று சிலர் கூறுவது சிறிதும் ஏற்புடைத்தன்று" (பண்டாரத்தார், *பாண்டியர் வரலாறு*, பக்கம் 32)

செந்தலைத் தூண் சாசனங்களிலிருந்து முத்தரையரும் களப்பிரரும் ஒருவரே என்று அறிகிறோம். திருக்காட்டுப் பள்ளிக்கு (தஞ்சை மாவட்டம்) இரண்டு கல் தொலைவில் செந்தலைக் கிராமத்தில் மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் மண்டபத் தூண்களில் வட்டெழுத்துக் கல்வெட்டுகள் காணப்படு கின்றன. இவை செந்தலைத் தூண் கல்வெட்டுகள் என்று கூறப்படுகின்றன. இந்தச் சாசனங்களைத் திரு. டி.ஏ. கோபிநாத ராவ் *செந்தமிழ்* ஆறாம் தொகுதியில் வெளியிட்டுள்ளார். திரு. கே.வி. சுப்பிரமணிய அய்யர் இந்தத் தமிழ்ச் சாசனங்களை ஆங்கில எழுத்தில் *எபிகிராபியா இந்திகா* என்னும் இதழில் வெளியிட்டுள்ளார் (*Epigraphia Indica*, Vol. XIII, 'Sendalai Pillar Inscriptions', pp. 134-149). இந்தச் சாசனத்தில்,

பெரும்பிடுகு முத்தரைய னாயின குவாவன் மாறன் அவன் மானிளங் கோவதியரைய னாயின மாறன்பரமேஸ்வரன் அவன் மகன் பெரும்பிடுகு முத்தரைய னாயின சுவரன் மாறன் அவன் எடுப்பித்த படாரிகோயில் அவன் எறிந்த ஊர்களும் அவன் பேர்களும் அவனைப் பாடினார் பேர் களுமித் தூண்கண்மே லெழுதின இவை

என்று காணப்படுகிறது.

நான்கு தூண்களிலும் பெரும்பிடுகு முத்தரையனுடைய சிறப்புப் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. அப்பெயர்களில் 'ஸ்ரீகள்வர கள்வன்' என்று நான்கு தூண்களிலும் எழுதப் பட்டுள்ளது. கள்வர கள்வன் என்பதைக் களவர கள்வன் என்றும் படிக்கலாம். இதிலிருந்து முத்தரையரும் களவர கள்வரும் (களப்பிரரும்) ஒருவரே என்பது தெரிகிறது. முத்தரையரை *நாலடியார்* கூறுகிறது (*நாலடியார்*, தாளாண்மை 10, மானம் 6).

விடேல் விடுகு முத்தரையன், சத்துருபயங்கர முத்தரையன் என்னும் முத்தரையர் பெயர்கள் சாசனங்களில் காணப்படு கின்றன.

களப்பிரரின் பின் சந்ததியார் களப்பாளர் என்னும் பெயர் பெற்றிருந்தனர். *சிவஞானபோதத்தை* எழுதிய மெய்கண்ட தேவருடைய தந்தையாரின் பெயர் அச்சுத களப்பாளர் என்ப தாகும். நெற்குன்றம் கிழான் என்னும் ஒரு களப்பாளச் சிற்றரசன் ஒரு சாசனத்தில் கூறப்படுகிறான் (*செந்தமிழ்*, தொகுதி 12, பக்கம், 268).

களப்பிரர் ஆட்சியில் சமயங்கள்

தமிழ் நாட்டிலே இருந்த பழமையான மதங்கள் சைவமும் வைணவமும் ஆகும். கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலே சந்திர குப்த மௌரியன் காலத்திலும் அவனுடைய பேரனான அசோகச் சக்கரவர்த்தி காலத்திலும் ஜைன மதமும் பௌத்த மதமும் தமிழ் நாட்டுக்கு வந்தன. வந்த மதங்கள் பையப்பையத் தமிழகத்தில் பரவிக்கொண்டிருந்தன. களப்பிரர் ஆட்சிக் காலத்தில் ஜைனமும் பௌத்தமும் மேன்மேலும் சிறப்புப் பெற்றுப் பெருகி வளர்ந்தன. பொதுவாகக் களப்பிர அரசர்கள் ஜைன, பௌத்த மதங்களுக்குச் சார்பாக இருந்தார்கள். களப்பிர அரசர் அச்சுதப் பரம்பரையினர் என்று கூறப்படுகிறபடியால் அவர்கள் வைணவ சமயத்தார் என்று கருத வேண்டியிருக்கிறது. கூற்றுவ நாயனார் போன்ற ஒன்றிரண்டு களப்பிர அரசர் சைவ சமயத்தவராக இருந்தனர் என்பதும் உண்மையே. ஆனால், பொதுவாகக் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் ஜைன, பௌத்த மதங்கள் சிறப்படைந்திருந்தன. இந்த மதங்கள் சிறப்படைந்ததற்குக் காரணம் இந்த மதங்களின் பிரச்சாரம் என்று தோன்றுகிறது. சைவ சமயம் சிறப்படையாமல் மங்கிக் கிடந்தது. வைதிக மதமும் மங்கியிருந்தது.

களப்பிரரும் பிராமணரும்

களப்பிரர் பிராமணருக்குப் பகைவர் என்று சிலர் எழுதியுள்ளனர். பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி, கொற்கைகிழான் நற்கொற்றன் என்னும் பிராமணனுக்கு முற்காலத்தில் வேள்விக்குடி என்னும் ஊரைத் தானங்கொடுத்ததை அவனுடைய குடும்பத்தார் பரம்பரையாக அனுபவித்து வந்ததைக் களப்பிரர் தங்கள் ஆட்சிக் காலத்தில் அந்த ஊரைப் பிடுங்கிக்கொண்டனர் என்னும் சாசனச் சான்றை ஆதாரமாகக் காட்டுகின்றனர். வேள்விக்குடிச் செப்பேடு இந்தச் செய்தியைக் கூறுகிறது. "கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குழாந் தவிர்த்த பல்யானை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்ட்யாதிராசன் நாகமா மலர்ச் சோலை நளிர்சினை மிசை வண்டலம்பும் பாகனூர்க் கூற்றமென்னும் பழனக்கிடக்கை நீர்நாட்டுச் சொற் கண்ணாளர் சொலப்பட்ட ச்ருதி மார்க்கம் பிழையாத கொற்கை கிழானற் கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்க கேள்வி

அந்தணாளர் முன்பு கேட்க என்றெடுத்துரைத்து வேள்விசாலை முன்பு நின்று வேள்விகுடி என்றப் பதியைச் சீரோடு திருவளரச் செய்தார். வேந்தனப் பொழுதேய் நீரோடட்டிக் கொடுத்தமை யால் நீடுபுக்தி துய்த்த பின் னளவரிய ஆதிராஜரை அகல நீக்கி அகலிடத்தைக் களப்ர னென்னும் கலியரைசன் கைக்கொண்ட தனை இறக்கிய பின்.....” (*பாண்டியர் செப்பேடுகள் பத்து*, வேள்விக்குடிச் செப்பேடு 31-40).

“அங்கொருநாண் மாடமாமதிற் கூடற்பாடு நின்றவர் ஆக்ரோதிக்கக் கொற்றனேய் மற்றவரைத் தெற்றென நன்கு கூவி ‘என்னேய் நுங்குறை’ என்று முன்னாகப் பணித்தருள ‘மேனாணின் குரவராற் பான்முறையின் வழுவாமை மாகந்தோய் மலர்ச் சோலைப் பாகனூர்க் கூற்றத்துப் படுவது, ஆள்வ தானை அடல் வேந்தேய்! வேள்விக்குடி என்னும் பியர் உடையது ஒல்காத வேற்றானை ஓடோதவேலி உடன் காத்த பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பரமேச்வரனால் வேள்விக்குடி என்னப் பட்டது. கேள்வியாற் றரப்பட்டதனை துளக்கமில்லாக் கடற்றானை யாய் களப்ர ராலிறக்கப்பட்டது என்று நின்றவன் விஞ்ஞாப்யஞ் செய்ய...” (வேள்விக்குடிச் செப்பேடு, வரி 104-112).

களப்பிரர், வேள்விக்குடி தானத்தை இறக்கினார்கள் என்று செப்பேடு கூறுவது உண்மைதான். ஆனால், அதன் காரணம் பார்ப்பனர் மாட்டுப் பகையன்று. அதற்கு வேறு ஏதோ காரணம் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. களப்பிரர் பிராமணருக்குப் பகைவர் அல்லர். களப்பிரர் பிராமணருக்குத் தானங்கொடுத்து ஆதரித்ததை ‘அகலிடமும் அமருலகும்’ எனத் தொடங்குகிற செய்யுள் (இணைப்பு 1 காண்க) கூறுகிறது.

பொருகடல் வளாகம் ஒரு குடை நிழற்றி
இருபிறப் பாளர்க் கிருநிதி ஈந்து
மனமகிழ்ந்து
அருள்புரி பெரும் அச்சுதர் கோவே

என்று அந்தச் செய்யுள் கூறுவது காண்க. இதனால் களப்பிரர் பார்ப்பனரை வெறுத்தவர் அல்லர் என்பது தெரிகிறது.

ஜைன சமய வளர்ச்சி

ஜைன, பௌத்த மதங்கள் செழித்து வளர்ந்ததையும் சைவ வைதிக மதங்கள் ஒடுங்கிப் போவதையும் சேக்கிழார் *பெரிய புராணத்தில்* தெளிவாகக் கூறுகிறார்.

மேதினிமேல் சமண்சையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே
ஆதி அரு மறைவழக்கம் அருகி அரன் அடியார் பால்
பூதிசாதன விளக்கம் போற்றல் பெறாதொழியக் கண்டு
ஏதமில் சீர் சிவபாத விருதயர்தாம் இடருழந்தார்
(திருஞான சம்பந்த நாயனார் புராணம் 18)

(சமண் - சமணர்; சாக்கியர் - பௌத்தர்; அருவறை வழக்கம் - வேத வேள்வி செய்யும் வைதிக மதம்; அரன் - சிவன்; பூதிசாதனம் - திருநீற்றுச் சாதனம்)

களப்பிரர் காலத்தில் வளர்ந்து சிறப்படைந்திருந்த ஜைன, பௌத்த மதங்கள் அவர்களின் ஆட்சிக் காலத்துக்குப் பிறகும் சிறப்படைந்திருந்ததைச் சேக்கிழார் கூறுகிறார்.

மெய்வகை நெறியில் நில்லா வினை அமண் சமயம் மிக்குக்
கைவகை முறைமைத் தன்மை கழியமுன் கலங்குங்காலை
(திருஞானசம்பந்த நாயனார் புராணம் 599)

என்றும்

பூழியர் தமிழ்நாட்டுள்ள பொருவில் சீர்ப்பதிகள் எல்லாம்
பாழியும் அருகர்மேவும் பள்ளிகள் பலவும் ஆகிச்
சூழிருட் குழுக்கள் போலத் தொடை மயிற்பீலி யோடு
மூழிநீர் கையிற்பற்றி அமணரே யாகி மொய்ப்ப
(திருஞான சம்பந்த நாயனார் புராணம் 601)

(பூழியர் தமிழ்நாடு - பாண்டிநாடு; பாழி - குகை; அருகா - ஜைனர்)

என்றும்

பறிமயிர்த் தலையும் பாயும் பீலியும் தடுக்கும் மேனிச்
செறியு முக்குடையுமாகித் திரிபவர் எங்கும் ஆகி
அறியுமச் சமயநூலின் அளவினில் அடங்கிச் சைவ
நெறியினில் சித்தஞ் செல்லா நிலைமையில் நிகழுங்காலை
(திருஞானசம்பந்த நாயனார் புராணம் 602)

என்றும் சேக்கிழார் கூறுகிறார். இது களப்பிரர் வீழ்ச்சிக் காலத்துக்குப் பின் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் சமயங்கள் இருந்த நிலை. இந்த நிலை களப்பிரர் காலத்திலிருந்து தொடர்ந்து இருந்தது.

மதுரையை யாண்ட களப்பிரர் அரசன் ஒருவன் சிவன் கோவில்களில் வழிபாடு செம்மையாக நடக்காதபடி தடை செய்தான். சிவன் கோவிலில் சந்தனக் காப்பு வழிபாடு நடக்காத படி தடைசெய்தான் (மூர்த்தி நாயனார் புராணம் 17). அவன் சடையன் (சிவன்) அடியாரை வன்மை செய்தான்.

மலைக்குகைகளிலே சமண (ஜைன) சமயத்து முனிவர்கள் தங்கித் தவஞ்செய்தார்கள். அவர்கள் பாண்டி நாட்டிலே எட்டுக் குன்றுகளில் இருந்தனர். அந்த மலைகளை 'எண்பெருங் குன்றம்' என்றும், அங்கிருந்து தவஞ்செய்தவர்களை 'எண்பெருங் குன்றத்து எண்ணாயிரவர்' என்றும் சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறுகிறார் (திருஞானசம்பந்த நாயனார் புராணம் 631, 855). 'ஆனைமாமலை ஆதியாய இடங்களில்' ஜைன முனிவர் இருந்ததைத் திருஞானசம்பந்தர் கூறுகிறார் (திருவாலவாயப்

பதிகம்). 'எண்பெருங் குன்றத்து எண்ணாயிரம் சமணர்' என்று கூறுவதன் பொருள் மலை யொன்றுக்கு ஆயிரம் பேராக எட்டு மலைகளில் எட்டாயிரம் சமணர் என்று கருதக்கூடாது. ஆயிரம் என்பது இங்குப் பெருந்தொகையைக் குறிக்கிறது.

ஆனைமலை, அழகர்மலை, திருப்பரங்குன்றம், சமணர் மலை, கழுகுமலை, சித்தன்னவாசல், கொங்கர் புளியங்குளம், கீழைவளவு, முத்துப்பட்டி, நாகமலை (விக்கிரம மங்கலம்), சித்தர்மலை, விருச்சியூர், மருகால்தலை முதலான மலைக்குன்று களில் ஜைனத் துறவிகள் தங்கித் தவஞ்செய்ததற்கு அடையாள மாக இன்றும் அங்கெல்லாம் ஜைனத் தீர்த்தங்கரர்களின் திருமேனிகளும் வட்டெழுத்துச் சாசனங்களும் காணப்படு கின்றன. களப்பிரர் வருவதற்கு முன்னேயே இந்தக் குகைகளில் ஜைன முனிவர் இருந்து தவஞ்செய்தனர். சில குகைகளில் பௌத்தப் பிக்குகளும் தங்கித் தவஞ்செய்தார்கள்.

களப்பிரர் ஆட்சிக் காலத்திலே, பல்லவ அரசர் ஆட்சி செய்த தொண்டை நாட்டிலும் ஜைன மதம் சிறப்பாக இருந்தது. குணபரன் என்றும் குணதரன் என்றும் சிறப்புப் பெயர் படைத்த மகேந்திரவர்மனும் ஜைன சமயத்தவனாக இருந்தான் என்று அறிகிறோம். தொண்டை நாட்டிலே பாடலிநகரத்தில் (திருப்பாதிரிப்புலியூரில்) அந்தக் காலத்தில் பேர் போன திகம்பர ஜைன மடம் இருந்தது. அந்த ஜைன மடத்தில் சிம்ம சூரி என்னும் ஜைனப் பெரியார் இருந்து *லோகவிபாகம்* என்னும் பெயருள்ள ஜைன மத நூலைச் சமஸ்கிருத பாஷையில் மொழிபெயர்த்தார் என்று அறிகிறோம். பாணராஷ்டிரத்தில் (தொண்டை நாட்டில்) பாடலி நகரத்தில் இருந்தபோது அவர் சகர ஆண்டு 380இல் (கி.பி. 458இல்) சிம்மவர்மன் என்னும் அரசனுடைய 22ஆம் ஆட்சி யாண்டில் இந்த நூலை அவர் பெயர்த்தெழுதினார் (*Mysore Archaeological Report* for the year 1909-10). இந்த ஜைன மடத்திலே கி.பி. 7ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மருள்நீக்கியார் என்பவர் (பிற்காலத்தில் திருநாவுக்கரசர்) தருமசேனர் என்னும் பெயர்பெற்று மடத்தலைவராக இருந்தார் (திருநாவுக்கரசு நாயனார் புராணம் 38, 39, 40).

தேவசேனர் என்னும் ஜைன சமய ஆசாரியர், விக்கிரம சம்வத்சரம் 909இல் (கி.பி. 853இல்) *தர்சனசம்பரதர்சனம்* என்னும் நூலை எழுதினார். அந்த நூலில் அவர், பாண்டி நாட்டில் வச்சிரநந்தி ஆசாரியர் திரமிள (திராவிட - தமிழ்) சங்கத்தை நிறுவினதாக எழுதியுள்ளார். பூஜ்ஜிய பாதர் என்னும் தேவநந்தி ஆசாரியரின் மாணாக்கர்களில் வச்சிரநந்தி ஆசாரியாரும் ஒருவர். வச்சிரநந்தி விக்கிரம ஆண்டு 525இல் (கி.பி. 470இல்) தக்கிண மதுரையில் (பாண்டி நாட்டு மதுரையில்) திரமிள சங்கத்தை நிறுவினார். இந்தக் காலம் மதுரையில் களப்பிர அரசர்

ஆட்சிசெய்த காலம். களப்பிரர் ஜைன மதத்தை ஆதரித்தவராகையால் அவர்கள் காலத்தில் வச்சிரநந்தி திராவிட சங்கத்தை (ஜைன முனிவர்களின் திராவிட சங்கத்தை) நிறுவினார். ஏற்கனவே பாண்டி நாட்டில் வேர் ஊன்றி நிலைத்திருந்த சமண சமயம், ஜைனத் துறவிகளைக் கொண்ட திராவிட சங்கத்தை வச்சிரநந்தி மதுரையில் நிறுவினபோது, மேன்மேலும் தழைத்து வளர்வதற்குக் காரணமாக இருந்தது. சமண சமயத்தை வளர்ப்பதற்காக வச்சிரநந்தி அமைத்த நிரமிள சங்கத்தையும் சங்க காலத்தில் பாண்டியர் தமிழ் மொழியை வளர்க்க அமைத்த தமிழ்ச் சங்கத்தையும் ஒன்று என்று கருதுவது தவறு. இந்த இரண்டு சங்கங்களும் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு காரணத்துக்காக அமைக்கப்பட்ட சங்கங்கள். இரண்டையும் ஒன்றாக இணைத்துக் கூறுவது வரலாறு அறியாதவரின் தவறான கூற்றாகும் (இணைப்பு 2 காண்க).

பௌத்த சமய வளர்ச்சி

பௌத்த மதம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகச் சக்கரவர்த்தியின் ஆட்சிக் காலத்தில் தமிழகத்துக்கு வந்தது என்று கூறினோம் (மயிலை சீனிவேங்கடசாமி, *பௌத்தமும் தமிழும்*). பௌத்தப் பிக்குகள் நாடெங்கும் பிரசாரஞ் செய்து பௌத்த மதத்தை வளர்த்தார்கள். ஆகவே, பௌத்த மதம் பையப்பைய வளர்ந்து தமிழ்நாட்டில் சிறப்படைந்தது. களப்பிரர் ஆட்சிக் காலத்தில் பௌத்தம் தமிழ்நாட்டில் மேலும் பரவி வளர்ந்தது. தமிழகத்துக்குப் பக்கத்தில் உள்ள இலங்கையிலும் பௌத்த மதம் பரவியிருந்தபடியால் அதன் காரணமாகவும் பௌத்தம் வலிவு பெற்றிருந்தது.

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் தங்களுடைய தேவாரப் பாடல்களில் பிண்டியர் போதியரையும் சாக்கியர் சமணரையும் கூறுகிறார்கள் (பிண்டியர் - சமணர், போதியர் - பௌத்தர், சாக்கியர் - பௌத்தர், சமணர் - ஜைனர்). தேவார காலத்துக்கு முன் (கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முன்பு) களப்பிரர் காலத்தில் சமண சமயத்தைப் போலவே பௌத்த மதமும் செழித்திருந்தது. களப்பிரர் காலத்தில் இருந்த பௌத்தர்களின் ஊர்கள் சில தெரிகின்றன. காவிரிப்பூம்பட்டினம், உறையூர் (உரகபுரம்), பூதமங்கலம், சங்கமங்கை, நாகைப்பட்டினம், மயூர பட்டணம், மதுரை, பாண்டி நாட்டுத் தஞ்சை, காஞ்சிபுரம் முதலான ஊர்கள் பௌத்த மதம் வேரூன்றியிருந்த ஊர்களாகும்.

சாக்கிய நாயனார்

திருத்தொண்டர் புராணத்தில் (*பெரியபுராணத்தில்*) சாக்கிய நாயனார் புராணமும் ஒன்று. சாக்கிய நாயனார் பௌத்த

மதத்தவர் (சாக்கியம் - பௌத்தம்). இவர் பழைய சிவனடியார் களில் ஒருவர். பௌத்தராக இருந்துகொண்டே சிவனை வழி பட்டவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த திருநாவுக் கரசருக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் இருந்தவர். சாக்கிய நாயனார், தொண்டை நாட்டில் சங்கமங்கை என்னும் ஊரில் பிறந்தார். பிறகு காஞ்சிபுரத்துக்குப் போய் அங்கு அக்காலத்தில் பேர்போன பௌத்த ஆசிரியர்களிடம் சென்று சமயக்கல்வி பயின்றார். வயது வந்த பிறகு துறவு பூண்ட இவர் ஆடையணிந்து பௌத்தப் பிக்கு ஆனார் (சாக்கியநாயனார் புராணம் 2, 3, 4). சில காலஞ்சென்ற பிறகு சைவ சமயத்தை மேற்கொண்டார். சிவலிங்க வழிபாடலைச் செய்ய எண்ணினார். ஆனால், அக்காலத்தில் பௌத்த மதம் பலமாக இருந்தபடியால், வெளிப்படையாகப் பௌத்த மதத்தை விட்டுச் சைவ சமயத்திற்கு வர இயலாமற்போயிற்று. சிவலிங்கப் பூசை செய்த பிறகு உணவு கொள்ளவேண்டும் என்று அவர் உறுதிகொண்டார். இவர் அணிந்த பௌத்தத் தோற்றத்தை மாற்றாமலே ஒரு பொட்டலில் இருந்த சிவலிங்கத்தைச் சிறு கல்லால் எறிந்து, அக்கல்லை மலர் போலப் பாவித்துப் பூசை செய்தார். இவ்வாறு நாள்தோறும் தவறாமல் செய்து வந்தார். இச்செயலைக் கண்ட பௌத்தர் சிவலிங்கத்தைக் கல்லால் எறிகிறார் என்று எண்ணி மகிழ்ந்தனர். இதனால், அக்காலத்தில் பௌத்த மதம் ஆதிக்கம் பெற்றிருந்தது என்பதும், சைவ சமயம் எளிய நிலையில் இருந்ததென்பதும் தெரிகின்றன.

களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் பேர்போன பௌத்தர்கள் இருந்தார்கள். அவர்களுடைய முழுவரலாறு தெரியவில்லை. அங்குமிங்குமாகச் சில பௌத்தப் பெரியார் களுடைய வரலாறுகள் தெரிகின்றன.

சங்கமித்திரர்

இவர் சோழ நாட்டில் இருந்த தமிழ்ப் பௌத்தர். கி.பி. 4ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் இருந்தவர். மகாயான பௌத்த மதத்தைச் சேர்ந்த இவர் இலங்கைக்குச் சென்று தம்முடைய மகாயான பௌத்தக் கொள்கையை அங்குப் பிரசாரஞ்செய்தார். இவர் காலத்தில் இலங்கையில் கோதாபயன் (மேகவண்ணாபயன்) என்னும் அரசன் (கி.பி. 302-315) அரசாண்டிருந்தான். அக் காலத்தில் இலங்கையில் தேரவாதப் பௌத்தம் (ஈனயானம்) நெடுங்காலமாக இருந்து வந்தது. அப்போது அநுராதபுரத்தில் அபயகிரி விகாரையில் இருந்த அறுபது பௌத்தப் பிக்குகள் வைதுல்ய மதத்தை (மகாயான பௌத்தத்தை) மேற்கொண்டனர். அது கண்ட மகாவிகாரையில் இருந்த தேரவாத பௌத்தப் பிக்குகள் அரசனிடஞ்சென்று அபயகிரி விகாரைப் பிக்குகள்

மகாயான பௌத்தத்தை மேற்கொண்டதையும் பழைய தேரவாதப் பௌத்தத்தைக் கைவிட்டுவிட்டதையும் கூறினார்கள். கோதாபய அரசன், மகாயான பௌத்தத்தைக் கைக்கொண்ட அறுபது பிக்குகளையும் நாடுகடத்திவிட்டான்.

நாடு கடத்தப்பட்ட பிக்குகள் சோழ நாட்டுக்கு வந்து சங்கமித்திரரைக் கண்டனர். சங்கமித்திரர், இலங்கைக்குப் போய்த் தம்முடைய மகாயான பௌத்தக் கொள்கையை நிலைநாட்ட உறுதிகொண்டார். அவர் இலங்கைக்குப் போய் தலைநகரமான அநுராதபுரத்தில் மகாயான பௌத்தத்தைப் போதித்தார். அப்போது தேரவாதப் பௌத்தப் பிக்குகள் இவரைப் பற்றி அரசனிடம் கூறினார்கள். அரசன் சங்கமித்திரரை அழைத்துத் தேரவாத பௌத்தரின் தலைவரான சங்கபாலருடன் சமயவாதம் செய்யும்படிக் கூறினான். சங்கபாலரும் சங்கமித்திரரும் அரச சபையில் வாதம் செய்தார்கள். வாதத்தில் மகாயான பௌத்தரான சங்கமித்திரர் வெற்றியடைந்தார். அரசன் இவருடைய ஆழ்ந்த புலமையையும் கல்வியையும் பாராட்டினான். தன்னுடைய பிள்ளைகளான ஜேட்டதிஸ்ஸன், மகாசேனன் என்பவர்களை இவரிடம் கல்விகற்க மாணாக்கராகவிட்டான். இதனால், சங்கமித்திரரின் மகாயான பௌத்தம் இலங்கையில் பரவத் தொடங்கிற்று.

கோதாபயன் இறந்த பிறகு அவனுடைய மகனான ஜேட்டதிஸ்ஸன் முடி சூடி அரசாண்டான் (கி.பி. 323–333). அவன் காலத்தில் சங்கமித்திரர் சோழ நாட்டுக்கு வந்துவிட்டார். ஜேட்டதிஸ்ஸனுக்குப் பிறகு அவனுடைய தம்பியான மகாசேனன் அரசனானான் (கி.பி. 334–361). இந்த அரசன் காலத்தில் சங்கமித்திரர் சோழ நாட்டிலிருந்து இலங்கைக்குப் போய் மீண்டும் தம்முடைய மகாயான பௌத்த மதத்தைப் பிரசாரஞ்செய்து பரப்பினார். அரசனுடைய அமைச்சனான சோணன் என்பவன் இவருக்கு உதவியாக இருந்தான். தேரவாத (ஈனயான) பௌத்தருக்கும் மகாயான பௌத்தருக்கும் சமயச் சார்பாகப் பகைமை மூற்றிற்று. அதன் காரணமாக சங்கமித்திரர் கொல்லப்பட்டு இறந்தார் (*மகாவம்சம்* 37ஆம் பரிச்சேதம் 36).

புத்ததத்த மகாதேரர்

புத்ததத்த மகாதேரர் சோழ நாட்டுத் தமிழர். பௌத்த மதத் துறவியாக வாழ்ந்தவர். பாலி மொழியில் எழுதப்பட்ட பௌத்த மத நூல்களையும் *திரிபிடகங்களையும்* நன்றாகக் கற்றவர். பாலி மொழியில் இனிமையாகக் கவி இயற்றும் ஆற்றல் பெற்றவர். கி.பி. 5ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் வாழ்ந்திருந்தார். தேரர் என்பது பௌத்தப் பிக்குகளில் சிறந்தவருக்கு வழங்கும் பெயர். ஆசாரியர் என்றும் தேரர் என்றும் இவர் சிறப்புப் பெயர் பெற்று ஆசாரிய

புத்ததத்த தேரர் என்று பெயர் கொண்டிருந்ததிலேயே இவருடைய சிறப்பும் உயர்வும் நன்கு தெரிகிறது. இலங்கையை யாண்ட சிறிகுட்டன் (கி.பி. 409–430) காலத்தில் இவர் இலங்கைக்குச் சென்று அநுராதபுரத்திலிருந்த மகாவிகாரை என்னும் பௌத்த விகாரையில் தங்கியிருந்தார். சிறிகுட்ட அரசனுக்கு மகாநாமன், ஸ்ரீநிவாகன் என்னும் பெயர்களும் இருந்தன.

புத்ததத்த மகாதேரர் கவீரபட்டினம் (காவிரிப்பூம் பட்டினம்), உரகபுரம் (உறையூர்), பூதமங்கலம், காஞ்சிபுரம் முதலான ஊர்களில் இருந்த பௌத்த விகாரைகளில் தங்கி யிருந்தார். அநுராதபுரத்து மகாவிகாரையில் இருந்தபோது அந்த விகாரையின் தலைவரான சங்கபால மகாதேரரின் வேண்டு கோளின்படி இவர் *உத்தரவினிச்சயம்* என்னும் நூலை எழுதினார். காவிரிப்பூம்பட்டினத்தில் களப்பிர அரசனுடைய அமைச்சனாக இருந்த கண்ணதாசன் கட்டின பௌத்த விகாரையில் இவர் தங்கியிருந்தபோது தம்முடைய மாணவரான புத்தசிகா என்பவரின் வேண்டுகோளின்படி இவர் *மதுராத்த விலாசினி* என்னும் நூலை எழுதினார். இது *திரிபிடகத்தில்* ஒன்றான சூத்திரபிடகத்தில் குட்டக நிகாயம் என்னும் பிரிவில் புத்தவம்சம் என்னும் உட்பிரிவுக்கு உரையாகும். ஆகையால் இந்த நூலுக்கு *புத்தவம்சாட்டகதா* (புத்த வம்சத்தின் அர்த்த கதை) என்றும் பெயர் உண்டு. இவர் தம்முடைய சீடரான புத்தசிகா என்பவரின் வேண்டுகோளின்படி *வினயவினிச்சயம்* என்னும் நூலை எழுதினார். சோழ நாட்டில் பூதமங்கலம் என்னும் ஊரில் வேணு தாசர் என்பவர் கட்டிய பௌத்த விகாரையில் தங்கியிருந்தபோது இவர் இந்த நூலை எழுதினார். இந்த நூல், களப்பிர அரசன் அச்சுத விக்கந்தன் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்டது (*பௌத்தமும் தமிழும்* என்னும் நூலைக் காண்க).

புத்ததத்த மகாதேரர் தம்முடைய இன்னொரு மாணவரான சுமதி என்பவரின் வேண்டுகோளுக்கு இணங்கி *அபிதம்மாவதாரம்* என்னும் நூலையும் எழுதினார். இது *திரிபிடகங்களில்* ஒன்றான *அபிதம்ம பிடகத்துக்குப்* பாயிரம் போன்றது. *ரூபா ரூப விபாகம்* என்னும் நூலையும் இவர் எழுதியுள்ளார். புத்த பெருமானைப் பற்றி *ஜினாலங்காரம்* என்னும் நூலையும் இவர் எழுதியதாகக் கூறுவர். இவர் எழுதிய இந்த நூல்கள் எல்லாம் பாலி மொழியில் எழுதப்பட்டவை. புத்ததத்த மகாதேரரும் புகழ்பெற்ற புத்தகோஷ மகாசாரியரும் சம காலத்தவர். இவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் சந்தித்துள்ளனர் (*பௌத்தமும் தமிழும்*).

சுமதி, ஜோதிபாலர்

இவர்கள் இருவரும் தமிழப் பௌத்தப் பெரியார்கள். புத்ததத்த மகாதேரர் வாழ்ந்த கி.பி. 5ஆம் நூற்றாண்டில்

இருந்தவர்கள். காஞ்சிபுரத்தில் ஒரு பௌத்த விகாரையில் இவர்கள் இருந்தனர். புத்தகோஷ ஆசாரியர் காஞ்சிபுரத்துக்கு வந்து இவர்கள் இருந்த விகாரையில் தங்கியிருந்தார். இவர்களின் விருப்பப்படி புத்த கோஷாசாரியர் *ஸாரத்த பகாசினீ, மனோரத பூரணீ* என்னும் இரண்டு பௌத்த மத நூல்களைப் பாலி மொழியில் எழுதினார். சுமதியும் ஜோதிபாலரும் புத்தகோஷரை இலங்கைக்குப் போய் அநுராதபுரத்து மகாவிகாரையில் இருந்த பௌத்த மத நூல்களை ஆராயும்படி தூண்டினார்கள். அப்படியே அவர் அங்குப் போய்ப் பௌத்த மத நூல்களை எழுதினார். இந்தச் செய்தியை அவர் எழுதிய *மனோரத பூரணீ* என்னும் நூலில்,

> *ஆயாசிதோ ஸு மதினாதேரேன பத்தந்த ஜோதிபாலேன*
> *காஞ்சீபுரா திஸுமயா புப்பே ஸத்திம் வஸம்தேன*

என்று கூறியுள்ளார் (*பௌத்தமும் தமிழும்*).

புத்தமித்திரர்

புத்தமித்திரர் என்று பெயர் பெற்ற பௌத்த தேரர்கள் சிலர் இருந்தனர். அவர்களில் *வீரசோழியம்* என்னும் இலக்கண நூலை எழுதிய புத்தமித்திரர் களப்பிரர் காலத்தவர் அல்லர்; பிற் காலத்தில் இருந்தவர். இங்குக் கூறப்படுகிற புத்தமித்திரர் மயூரப் பட்டணத்தில் ஒரு பௌத்த விகாரையில் இருந்தவர். மயூரப் பட்டணம் என்பது இப்போது 'மாயவரம்' என்று கூறப்படுகிற மாயூரமாக இருக்கலாம். புத்தகோஷாசாரியர் மயூரபட்டணத்துப் பௌத்த விகாரைக்கு வந்து தங்கியிருந்தபோது இந்தப் புத்தமித்தரரின் விருப்பப்படி *பஞ்ச சூடானீ* என்னும் நூலைப் பாலி மொழியில் எழுதினார். இந்த நூல் *திரிபிடகத்தின்* ஒரு பகுதியாகிய *மஜ்ஜிம நிகாயத்துக்கு* உரைநூல் ஆகும்.

ஆசாரிய திக்நாகர்

இவரைத் தின்னாகர் என்றுங் கூறுவர். காஞ்சிபுரத்துக்குத் தெற்கே இருந்த சிம்மவக்தரம் என்னும் ஊரில் இவர் பிறந்தார். சிம்மவக்தரம் என்பது சீயமங்கலம் என்னும் ஊராக இருக்கலாம் என்று தோன்றுகிறது (சிம்மம் - சிங்கம்- சீயம்). சீயமங்கலம் செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் தாலுகாவில் உள்ளது. இவ்வூரில் பிராமண குலத்தில் பிறந்தவராகிய இவர் வைதிக நூல்களைக் கற்றுப் பிறகு காஞ்சிபுரத்தில் பௌத்த நூல்களைக் கற்றுப் பௌத்தப் பிக்கு ஆனார். பிறகு, வடஇந்தியாவுக்குப் போய் அங்குப் பேர் போன வசுபந்து என்னும் பௌத்த ஆசிரியரிடத்தில் மகாயான பௌத்த நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். பின்னர், நளாந்தா பல்கலைக்கழகத்துக்குச் சென்று பல நாள் தங்கி அங்குப்

பல நூல்களைக் கற்றார். இவருடைய மாணவர்களில் காஞ்சிபுரத்திலிருந்த தருமபால ஆசாரியரும் ஒருவர்.

ஆசாரிய திக்நாகர் தர்க்க நூல்களை நன்கு கற்றவர். *நியாயப் பிரவேசம்*, *நியாயத்துவாரம்* என்னும் இரண்டு தர்க்க நூல்களை இவர் வடமொழியில் எழுதினார். இவர், பௌத்த மதத்தில் விஞ்ஞானவாதப் பிரிவை உண்டாக்கினார் என்பர். வசுபந்து கி.பி. 420 முதல் 500 வரையில் வாழ்ந்திருந்தார் என்று கூறப்படுகிற படியால் அவரிடம் பயின்ற இவரும் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராதல் வேண்டும். இவர், பற்பல நாடுகளுக்குச் சென்று பலரோடு தர்க்கவாதம் செய்து மீண்டும் காஞ்சிபுரத்துக்கு வந்தார் என்பர். காஞ்சிபுரத்துக்கு வருவதற்கு முன்பே ஒருயா நாட்டில் காலமானார் என்று சிலர் கூறுவர். (*பௌத்தமும் தமிழும்* என்னும் நூலில் 'தமிழ் நாட்டுப் பௌத்தப் பெரியார்' என்னும் தலைப்புக் காண்க.)

போதிதருமர்

இவர் காஞ்சிபுரத்தை யரசாண்ட ஓர் அரசனுடைய மகன். இவர் பௌத்த மதத்தைச் சேர்ந்து பௌத்தப் பிக்கு ஆனார்; பௌத்த மதத்தில் தியானமார்க்கம் என்னும் பிரிவைச் சேர்ந்தவர். கி.பி. 520இல் இவர் சீன நாட்டுக் கான்டன் பட்டினம் போய்ச் சேர்ந்தார். கி.பி. 525இல் சீன தேசத்துக்குப் போனார் என்று சிலர் கூறுவர். சீன நாட்டிலும் ஜப்பான் தேசத்திலும் இவர் தம்முடைய பௌத்தக் கொள்கையைப் பரப்பினார். இவர் போதித்த பௌத்தக் கொள்கையைச் சீனர் சா'ன் மதம் என்பர். ஜப்பானியர் ஜென்மதம் என்பர். போதிதருமரைச் சீனர் தமக்குரிய இருபத் தெட்டுச் சமயக் குரவர்களில் ஒருவராகப் போற்றுகிறார்கள். ஜப்பான் தேசத்திலும் சீன தேசத்திலும் இவருடைய நினைவாகக் கோவில்கள் உண்டு (*பௌத்தமும் தமிழும்*).

காஞ்சி தருமபால ஆசாரியர்

இவர் காஞ்சிபுரத்தில் பிறந்து வாழ்ந்தவர். காஞ்சிபுரத்து அரசனுடைய அமைச்சராக இருந்த ஒருவரின் மகன். பெற்றோர் இவருக்குத் திருமணஞ்செய்யத் தொட்ங்கினபோது இவர் திருமணத்துக்கு உடன்படாமல் பௌத்த மதத்தைச் சேர்ந்து பௌத்தத் துறவியானார். பல நாடுகளுக்குச் சென்று தம்முடைய கல்வியை வளர்த்துக்கொண்டார். திக்நாகரிடத்திலும் இவர் சமயக் கல்வி பயின்றார் வடநாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது கௌசாம்பி நகரத்தில் பௌத்தருக்கும் வேறு மதத்தாருக்கும் சமயவாதம் நடந்தபோது பௌத்தர் எதிர்வாதம் செய்ய முடியாத நிலையில் இருந்ததைக் கண்டு இவர் தனித்து நின்று எதிர்வாதம் செய்து வெற்றி பெற்றார். எதிர்வாதம்

செய்தவர்களையும் தலைமை தாங்கிய அரசனையும் பௌத்த மதத்தை மேற்கொள்ளச் செய்தார். இவர் மகாயான பௌத்த மதத்தைச் சேர்ந்தவர். ஈனயான பௌத்தரோடு ஏழு நாட்கள் சமயவாதஞ் செய்து அவர்களை வென்று தம்முடைய மகாயான பௌத்தக் கொள்கையை நிலைநாட்டினார்.

தருமபால ஆசாரியர் பல நூல்களைக் கற்றுத் தேர்ந்து பேராசிரியராக விளங்கினபடியால், அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த நளாந்தாப் பல்கலைக்கழகத்தின் தலைமைப் பேராசிரியராக இவர் நியமிக்கப்பட்டார். இந்தப் பதவி எளிதில் வாய்ப்பது அன்று. துறைபோகக் கற்ற பேரறிஞர்கட்கே இந்தப் பதவி கிடைக்கும். இவர் இளமையிலேயே காலமானார் என்பர். கி.பி. 528 முதல் 560 வரையில் இவர் உயிர்வாழ்ந்திருந்தார் என்று தெரிகிறது. இவருக்குப் பிறகு இவருடைய மாணாக்கரான சீல பத்திரர் நளாந்தாப் பல்கலைக்கழகத்தின் தலைவரானார் (*பௌத்தமும் தமிழும்*).

தஞ்சை தருமபால ஆசாரியர்

இவர் பாண்டி நாட்டுத் தஞ்சாவூரில் இருந்தவர். '*தம்பரட்டே வசந்தேன நகரே தஞ்சா நாமகே* என்று கூறப்படுகிறபடியால், தம்பராட்டிரமான தாம்பிரபரணி பாய்கிற திருநெல்வேலியில் இருந்த தஞ்சை நகரத்தைச் சேர்ந்தவர் என்று தெரிகிறார். சோழ நாட்டுத் தஞ்சாவூரில் இவர் இருந்தார் என்று திரு. பி.ஸி. லா அவர்கள் கருதுவது தவறு (B.C. Law, *Geography of Early Buddhism.*). தருமபால ஆசாரியர் பாலி மொழியிலுள்ள பௌத்த மத நூல்களை நன்குக் கற்றவர். தமிழ், சிங்களம், பாலி மொழிகளை நன்றாகக் கற்றவர். பௌத்த உரையாசிரியர்களில் சிறந்தவர். இலங்கையின் அநுராதபுரத்தில் இருந்த மகாவிகாரை என்னும் பௌத்தப் பள்ளிக்குப் போய் அங்குத் *திரிபிடகங்களுக்குச்* சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்த உரைநூல்களைப் பயின்றார். பிறகு, தமிழ்நாட்டுப் பௌத்தப் பள்ளிகளில் இருந்த *பிடக* நூல்களின் திராவிட (தமிழ்) உரைநூல்களைப் பயின்றார்.

சூத்திரபிடகத்தின் ஐந்தாவது பிரிவாகிய குட்டக நிகாயத்தைச் சேர்ந்த உதான, இதிவுக்தக, விமானவத்து, பேதவத்து, தேரகாதா, தேரிகாதா, சரியாபிடகம் என்னும் பகுதிகளுக்கு தரும பால ஆசாரியர் பாலி மொழியில் சிறந்த உரை எழுதினார். இவர் எழுதின உரைக்குப் *பரமார்த்த தீபனி* என்று பெயர். மற்றும் *பரமார்த்த மஞ்சுஸா, நெட்டிப கரணாட்டகதா* என்னும் நூல்களையும் இவர் எழுதினார். '*இதிவுத்தோதான சரியாபிடக தேர தேரீ விமானவத்து பேதவத்து நெட்டியட்டகதாயோ ஆசாரிய தம்மபால தேரோ அகாஸீ ஸோ ச ஆசாரிய தம்ம பால தேரோ ஸீஹள தீபஸ்ஸ ஸமீபே தமிள நாட்டே படராதித்தமிஸி*

நிவாஸித்தா ஸீஹளதீபே ஏவ ஸங்கஹேத்வா வத்தபோ' என்று சாசன வம்சம் என்னும் நூல் இவரைப் பற்றிக் கூறுகிறது. இதன் கருத்து: 'ஆசாரிய தம்ம பாலதேரர் சிங்களத் (இலங்கை) தீவுக்கு அருகில் உள்ள தமிழ்நாட்டில் படராதித்த விகாரையில் இருந்தபோது *இதிவுத்தகம், உதானம், சரியாபிடகம், தேரகதா, தேரிகதா, விமானவத்து, பேதவத்து, நெட்டியட்டகதா* என்னும் உரை நூல்களை எழுதினார். இந்த ஆசாரியதம்ம பாலிதேரர் சிங்களத்தீவுக்கு அருகில் உள்ள தமிழ் தேசத்தில் படராதித்த விகாரையில் இருந்தபோது இவற்றை எழுதினார்' என்பது. இவர் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இருந்தவர் எனத் தெரிகிறது.

களப்பிரர் ஆட்சிக் காலத்தில், பௌத்த மதம் சமண சமயத்தைப் போலவே நாட்டில் பரவி வளர்ந்திருந்தது. பௌத்த மத நூல்கள் பிற்காலத்தில் அழிந்துபோனபடியால் பௌத்த மதத்தின் முழு வரலாற்றையறிய முடியவில்லை.

முரண்பட்ட மூன்று மதங்கள்

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே சமண சமயமும் பௌத்த மதமும் வட நாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வந்தன என்பதை யறிவோம். அந்தக் காலத்திலேயே இன்னொரு மதமும் தமிழ் நாட்டுக்கு வந்தது. அது வடமொழி வேதத்தை முதன்மையாகக் கொண்ட மதம். *இருக்கு, யஜுர், சாமம், அதர்வனம்* என்னும் நான்கு வேதங்களை அடிப்படையாகக் கொண்ட வைதிக மதம் அக்காலத்தில் தமிழ்நாட்டுக்கு வந்தது. வைதிக மதத்தைப் பிராமணர் போற்றினார்கள். வேள்வி (யாகம்) செய்வதையே முதன்மையாகக் கொண்டது வைதிக மதம். பிராமணர் மிகச் சிறு தொகையினர். அன்றியும் சாதி வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்ட குறுகிய நோக்கமுடையது. பிராமணரைத் தவிர வேறு சாதியார் வேதம் ஓதுவது கூடாது, பிராமணர்தான் உயர்ந்த சாதி, இவ்வாறு குறுகிய சிறிய கொள்கையுடைய வைதிக பிராமணர் மதம் நாட்டில் செல்வாக்கடையாமல் – மக்களிடையே பரவாமல் மூலையில் முடங்கிக் கிடந்தது.

ஜைன மதமும் பௌத்த மதமும் தத்தம் மதக் கொள்கையை நாடெங்கும் பிரசாரஞ் செய்து மக்களைத் தங்கள் மதத்தில் சேரும்படி அழைத்தன. தங்கள் மதக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பின. எந்தச் சாதியரானாலும் இந்த மதங்களைச் சேர்ந்து ஒழுகினால் அவர்களைச் சிறப்புச் செய்து போற்றின. சமய நூல்களை நன்கு கற்று அதன்படி ஒழுகுகிறவர்களைச் சமய காரியரர்களாக உயர்த்தி வைத்தன. ஆகவே, பௌத்த மதமும் சமண சமயமும் நாட்டில் செல்வாக்குப் பெற்றுப் பரவி வளர்ந்தன. வைதிக மதமாகிய பிராமண மதமோ வேதத்தைப் பிறருக்குப்

போதிக்கவில்லை. பிறர் வேதத்தைப் படிக்கவும் விடவில்லை. பிராமணப் பதவி என்னும் பதவியை அமைக்காமல் பிராமணப் பிறப்பு என்று ஜாதிக்கு ஏற்றம் தந்தது. ஆகவே, வைதிகப் பிராமண மதம் தாழ்ந்து மங்கி மூலையில் கிடந்தது.

பௌத்தம், சமணம், வைதிகம் என்னும் இந்த மூன்று மதங்கள் ஆதிகாலம் முதல் பிறவிப் பகைமையுடைய மதங்கள். பிராமணர், பௌத்த சமண சமயங்களைப் பகைத்து வெறுத்து விஷம் போலக் கருதினார்கள். பிராமணர், பௌத்த சமண சமயங்களைத் தாக்கிப் பிரசாரஞ் செய்தார்கள். அது போலவே, பௌத்த மதம் வைதிக மதத்தையும் சமண மதத்தையும் கண்டித்து ஒதுக்கியது. வைதிகம், சமண சமயக் கொள்கைகளைத் தாக்கிக் கண்டித்தது. சமண சமயமும் வைதிக மதத்தையும் பௌத்த மதத்தையும் பகைத்து அந்த மதக் கொள்கைகளை வெறுத்துப் பிரசாரஞ்செய்தது. இவ்வாறு வைதிக மதம், சமண சமயம், பௌத்த மதம் ஆகிய மூன்று மதங்களும் ஒன்றையொன்று பகைத்துக் கண்டித்து முரண்பட்டு இருந்தன. வடநாட்டிலும் சரி தென்னாட்டிலும் சரி இந்த மூன்று மதங்களும் ஒன்றையொன்று வெறுத்துப் பகைத்துவந்தன. களப்பிரர் ஆட்சிக் காலத்திலும் இந்த நிலைமைதான் இருந்தது. பௌத்தமும் சமணமும் விரிந்து பரந்த கருத்துள்ள மதங்களாகையால் நாட்டில் செழித்து வளர்ந்தன. வைதி மதமான பிராமண மதம் குறுகிய கொள்கையும் சுருங்கிய கருத்தும் கொண்டிருந்தபடியால் நாட்டில் செல்வாக்குப் பெறாமலும் வளர்ச்சியடையாமலும் முடங்கிக் கிடந்தது.

வைணவ சமயம்

சைவ சமயத்தைப் போலவே வைணவ சமயமும் மிகப் பழமையானது. களப்பிர அரசர் வைணவ சமயத்தவர் என்பதை முன்னமே கூறினோம். திருமாலுக்கு அச்சுதன் என்னும் பெயரும் உண்டு. களப்பிர அரசர் தங்களை அச்சுத குலத்தவர் என்று கூறிக்கொண்டனர். அதாவது, திருமாலின் வழிவந்தவர் என்பது பொருள். அவர்கள் திருமாலை (விஷ்ணுவை) வழிபட்டு திருமாலின் அருளினால் பெரிய இராச்சியத்தைப் பெற்றார்கள் என்பதை முன்னமே கூறினோம்.

இருளறு திகிரியொடு வலம்புரித் தடக்கை
ஒருவனை வேண்ட இருநிலம் கொடுத்த
நந்திமால்வரை சிலம்பு நத்தி

என்று களப்பிர அரசர் கூறப்பட்டதைக் கூறினோம். திகிரியையும் (சக்கரம்) வலம்புரியையும் (வலம்புரிச்சங்கு) கையில் ஏந்தியுள்ள திருமாலை வேண்ட அவர் இவனுக்குப் பெரிய நிலத்தைக் (இராச்சியத்தை) கொடுத்தார் என்பதை அறிந்தோம்.

இதனால் களப்பிரர், அச்சுதனை (திருமாலை) வழிபட்டவர் என்பது தெரிகிறது.

களப்பிரர் சமண சமயச் சார்புடையவர் என்று வரலாற்றாசிரியர் பலரும் எழுதியுள்ளனர். அது தவறான கருத்து என்று தோன்றுகிறது. கன்னட நாட்டில் களபப்பு (சிரவணபெள கொள) என்னும் நாட்டைக் களப்பிரர் ஆதிகாலம் முதல் அரசாண்டவர் ஆனபடியாலும், களபப்பு நாட்டைச் சேர்ந்த சிரவணபெளகொளத்தில் பத்திரபாகு முனிவரும் சந்திர குப்த மௌரிய அரசரும் ஜைன முனிவர்களோடு வந்து தங்கின இடமாகையால் ஜைன மதச் சூழலில் நெடுங்காலம் இருந்தபடி யாலும் களப்பிரர் சமண சமயச் சார்பு கொண்டிருந்தனர் என்று கருதுவது தவறாகாது. ஆனால், அவர்களின் சொந்தச் சமயம் வைணவம் என்பது ஐயமில்லாமல் தெரிகிறது.

ஆனால், வைணவ மதம், பௌத்த சமண சமயங்களின் வளர்ச்சியினால் சிறப்புப் பெறாமல் தாழ்ந்த நிலையை யடைந்திருந்தது என்பதை அறிகிறோம்.

சைவ சமயம்

களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் சைவ சமயம் குன்றிக் குறைந்திருந்தது என்பதை அறிகிறோம். களப்பிர அரசர்கள் சைவ சமயத்துக்கு மாறுபட்டவர் என்றும் சமண சமயத்துச் சார்புடையவர் என்றும் பொதுவாகக் கருதப்படு கின்றனர். ஒரு களப்பிர அரசன், பாண்டி நாட்டில் சிவன் கோவிலில் வழிபாடு நடைபெறாதபடிச் செய்தான் என்பதைப் *பெரிய புராணம்*, மூர்த்தி நாயனார் புராணத்தில் அறிகிறோம். என்றாலும், சைவ சமயத்தைச் சார்ந்த கூற்றுவன் என்னும் களப்பிர அரசன் சிவன் கோவில்களுக்குச் சிறப்புச் செய்து வழிபட்டதைக் கூற்றுவ நாயனார் புராணத்தில் அறிகிறோம். ஏதோ ஒரு களப்பிர அரசன் சைவ சமயத்துக்கு மாறுபாடாக இருந்தான் என்பது பற்றி எல்லாக் களப்பிர அரசர்களும் சைவ சமயத்துக்கு மாறுபட்டவர் என்று கருதுவது கூடாது. களப்பிரர் ஆட்சிக் காலத்தில் சைவ சமயம் பொதுவாக மங்கி மறையும் நிலையில் இருந்ததற்குக் காரணம் பௌத்த, சமண சமயங்களின் பிரசாரமே என்று கருதலாம். தத்தம் மதங்களைப் பிரசாரஞ் செய்து வளர்த்த சமண, பௌத்தப் பிரசாரகர் தங்கள் மதங்களை உயர்த்திப் பேசி, அதே சமயத்தில் சைவத்தைத் தாழ்த்திக் குறைத்துப் பேசிப் பிரசாரம் செய்தார்கள். இதனால் சைவ சமயம் செல்வாக்குப் பெறாமலும் உயர்வு அடையாமலும் குன்றிக் குறைவதாயிற்று. பௌத்த, சமண சமயத்தாரைப் போலச் சைவ சமயத்தார் சைவ சமயத்தைப் பற்றிப் பிரசாரஞ் செய்யாததும் சைவ சமய வீழ்ச்சிக்கு இன்னொரு காரணமாகும்.

கி.மு. நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து சைவ சமயத்தைப் பௌத்தரும் சமணரும் தாக்கினார்கள் என்பது தெரிகிறது. அக்காலத்தில் இலங்கையை யரசாண்ட மகாசேனன் என்னும் சிங்கள அரசன், இலங்கையில் அக்காலத்தில் பேர்போன சிவன் கோயில்களை இடித்து அழித்து அந்த இடங்களில் பௌத்த விகாரைகளைக் கட்டினான். கோகன்ன (கோகர்ண) விகாரை, எரகாவில்ல விகாரை, கலந்த விகாரை, மிக்காம விகாரைகளைக் கட்டினான் என்று மகாவம்சம் கூறுகிறது (மகாவம்சம் 37ஆம் பரிச்சேதம் 40-41). கோகர்ண விகாரை இலங்கையின் கிழக்குக் கரையோரமாக இருந்தது என்றும் மற்ற இரண்டு விகாரைகள் இலங்கையின் தென்கிழக்கே உரோகண நாட்டில் இருந்தன என்றும் இதனுடைய டீகை (உரை) கூறுகிறது. மற்றும் இந்த உரை இதனைக் கீழ் வருமாறு விளக்குகிறது: 'ஏவம் ஸப்பத்த லங்க தீபமிஹி குதிட்டகானம் ஆலயம் வித்தம்ஸேத்வர ஸிவலிங்காயதோ நாஸேத்வர புத்த ஸாஸனம் ஏவ பதிட்டபேஸி' இதன் பொருள், 'இலங்கைத் தீவெங்கும் ஆலயங்களை அழித்துச் சிவலிங்கம் முதலானவைகளை நாசஞ் செய்து புத்த சாசனத்தை நிறுவினான்' என்பது.

இதனால், அக்காலத்தில் மதப் பூசல்கள் இருந்தது தெரிகிறது.

பக்தி இயக்கம்

சைவ சமயம் நாளுக்கு நாள் நலிவடைந்து குன்றிக் குறைந்து மங்கிவருவதைக் கண்ட சைவ சமயத்தார் விழிப்படைந்தனர். சைவ சமயத்தை வளர்த்து ஓங்கச் செய்வதற்கு முயன்றார்கள். நாட்டில் பொதுமக்களின் ஆதரவு பெற வழிவகைகளைத் தேடினார்கள். தேடி நல்லதோர் கொள்கையைக் கண்டார்கள். அதுதான் பக்தி இயக்கம். செல்வாக்குப் பெற்று வளர்ந்து கொண்டிருந்த பௌத்த, சமண சமயங்களை வீழ்த்தவும் சைவ சமயத்தை ஓங்கச் செய்யவும் பக்தி இயக்கம் அரியதோர் சாதனமாக அமைந்தது. பக்தி இயக்கம் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (வச்சிர நந்தியின் திராவிட ஜைன சங்கம் ஏற்பட்ட பிறகு) தோன்றியது. பக்தி இயக்கத்தில் வைணவரும் சேர்ந்து தங்கள் வைணவ மதத்தை வளர்க்க முயன்றார்கள். பக்தியால் முக்தி எளிதாகும், பக்தியினால் இம்மை மறுமைப் பயன்களை எளிதில் பெறலாம் என்பதே பக்தி இயக்கத்தின் அறைகூவலாக இருந்தது. பக்தி இயக்கம் நாட்டு மக்களின் மனத்தைக் கவர்ந்தது. இந்த இயக்கம் நாளடைவில் பௌத்த சமண சமயங்களை வீழ்த்துவதற்கும் சைவ வைணவ மதங்களை வளர்ப்பதற்கும் ஏற்றதோர் கருவியாக அமைந்தது. அடுத்த நூற்றாண்டில் சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்

களும் தோன்றிப் பௌத்த, சமண சமயங்களை அழிக்கவும் சைவ, வைணவ மதங்களை வளர்க்கவும் பக்தி இயக்கம் காரணமாக இருந்தது. பக்தி இயக்கம் நாட்டில் மக்களிடையில் செல்வாக்குப் பெற்று சைவ, வைணவ மதங்களின் வளர்ச்சிக்கும் பௌத்த, சமண சமயங்களின் வீழ்ச்சிக்கும் காரணமாக இருந்தது. தெய்வ வழிபாட்டில் நாயக – நாயகி பாவக் கொள்கை ஏற்படுவதற்கும் பக்தி இயக்கம் காரணமாக இருந்தது. அதாவது, சிவனை நாயகனாகவும் (தலைவனாகவும்) அவனை வழிபடும் அடியார் களை நாயகிகளாகவும் (தலைவிகளாகவும்) பாவிக்கும் வழிபாட்டு முறை ஏற்பட்டது. வைணவர்களும் நாயக – நாயகி பாவத்தை ஏற்றுக்கொண்டனர்.

ஆனால், சைன சமயத்தவரும் பௌத்த மதத்தவரும் நாயக – நாயகி பாவத்தை (பேரின்பக் காதலை) ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் இந்தக் கொள்கைக்கு மாறுபட்டிருந்தனர். சைவ, வைணவ பக்தர்கள் தங்கள் கடவுளை நாயகனாகவும் தங்களை நாயகியாகவும் பாவித்து அகத்துறையமைந்த பாடல்களைப் பாடியது போல சைன, பௌத்த மதத்தினர் நாயக – நாயகி பாவம் அமைந்த பாடல்களைப் பாடவே இல்லை. ஆகையால்தான், சைவ, வைணவ சமய இலக்கியங்களில் காணப்படுகிற அகத் துறைப் பாடல்களைப் போன்ற பாடல்கள் சைன, பௌத்தச் சமய இலக்கியங்களில் காணப்படவில்லை.

பக்தி இயக்கம் தோன்றுவதற்கு முன்புள்ள அகப்பொருள் இலக்கண இலக்கிய நூல்கள் மனிதக் காதலைக் கூறுகின்றனவே யல்லாமல் தெய்வ – மனிதக் காதலைக் கூறவில்லை. சைன பௌத்த மதத்தவர் நாயக–நாயகி பக்திக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாதது போலவே, சைன, பௌத்தரல்லாத ஏனைய தமிழர்களும் இந்தப் புதிய நாயக–நாயகிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளத் தயங்கினார்கள். ஆகையால், இந்தக் கொள்கைக்கு ஆதாரமான நூல் வேண்டியிருந்தது. அந்த ஆதார நூல்தான் *இறையனார் அகப்பொருள்* என்னும் களவியல் நூல். (இந்த *இறையனார் அகப்பொருள்* என்னும் களவியல் நூலைப் பற்றி இந்நூலில் இணைப்பு 3இல் காண்க.)

பக்தி இயக்கமும் பேரின்பக் காதல் (நாயக–நாயகி பாவம்) கொள்கையும் சைவ, வைணவ மதத்துக்குப் பேருதவியாக இருந்தன. இந்தக் கொள்கைகள் சைன, பௌத்த மதங்களை வீழ்த்திச் சைவ, வைணவ மதங்களை வளர்ப்பதற்குப் பேருதவியாக இருந்தன. சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் சைவ, வைணவ மதங்களை ஓங்கி வளரச் செய்யவும் சைன, பௌத்த மதங்களைத் தாழ்த்தவும் செய்ததற்கு முதற்காரணமாக இருந்தது பக்தி இயக்கந்தான் என்பதில் சற்றும் ஐயமில்லை.

களப்பிரர் காலத்தில் தமிழ் மொழி

கன்னட மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழிக்கு அவர்கள் ஆக்கம் அளித்ததாகத் தெரியவில்லை. ஆனால், களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தமிழர், தமிழ் மொழியைப் புதிய முறையில் வளர்த்தார்கள். இந்த முயற்சியில் அக்காலத்துத் தமிழர் மதபேதம் பாராட்டாமல் ஒன்றாக இணைந்து தாய்மொழியை வளர்த்தனர். பௌத்த, சமண, சைவ, வைணவ சமயத்துத் தமிழ்ப் புலவர் அனைவரும் தமிழை வளர்த்தார்கள். புது வகையான பாக்களும் புது வகையான இலக்கியங்களும் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் உண்டாக்கப்பட்டன. அந்த வளர்ச்சி புதுமையான வளர்ச்சி யாகவே இருந்தது.

வட்டெழுத்து

சங்க காலத்தில் வழங்கி வந்த பிராமி எழுத்து சங்க காலத்தின் இறுதியில் மாற்றம் அடையத் தொடங்கியது. இந்த மாற்றம் எழுதுகருவிகளின் மூலமாக ஏற்பட்ட மாற்றம். பனையோலையும் எழுத்தாணியுமே அக்காலத்து எழுதுகருவிகளாக இருந்த படியால் இந்த மாற்றம் ஏற்பட்டது. களப்பிரர் ஆட்சிக் காலத்தில் பிராமி எழுத்தின் மாற்றம் முழுமாற்றமாகிப் பையப்பையப் புது வகையான எழுத்தாயிற்று. இப்புது வகையான எழுத்து வட்டெழுத்து என்று பெயர் பெற்றது. வட்டெழுத்து தமிழ் நாடெங்கும் பரவி வழங்கிற்று. சேர, சோழ, பாண்டிய நாடு களிலும் தொண்டை நாட்டிலும் வட்டெழுத்து நெடுங்காலம் வழங்கிவந்தது. வட்டெழுத்து கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரையில் வழக்கத்தில் இருந்தது. களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு முழுவதும் வட்டெழுத்து வழங்கியது என்பதில் ஐயம் இல்லை.

பிராகிருத மொழியையும் சமஸ்கிருத மொழியையும் எழுதுவதற்காகப் புது வகையான கிரந்த எழுத்துக்களைப் பௌத்தரும் சைனரும் உண்டாக்கினார்கள். அந்தக் கிரந்த எழுத்து தென்னிந்தியாவில் குமரி முதல் விந்தியம் வரையில் வழங்கிவந்தது. களப்பிரர் ஆட்சிக் காலத்தில் பிராகிருத, சமஸ்கிருத மொழிச் சொற்கள் பௌத்த, சமண சமயங்களின் வழியாகத் தமிழில் கலந்துவிட்டன.

புது வகைப் பாக்கள்

களப்பிரர் காலத்துக்கு முன்பு கடைச்சங்க காலத்தின் இறுதி வரையில் தமிழில் நான்கு வகைப் பாக்களே இருந்தன. அவை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பவை.

ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே

என்று தொல்காப்பியம் கூறுகிறது (தொல்காப்பியம், செய்யுளியல் 101).

கடைச்சங்க இறுதிக் காலம் ஏறத்தாழ கி.பி. 250 என்று கொள்ளலாம். அதற்குப் பிறகு களப்பிரர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சைன சமயமும் பௌத்த மதமும் தமிழகத்தில் பரவலாகவும் விரைவாகவும் வளர்ந்தன. அவர்களுடைய 'தெய்வ பாஷை' பிராகிருத மொழி. சைன சமயத்தாரின் 'தெய்வ பாஷை' சூரசேனி என்னும் பிராகிருதம். பௌத்த மதத்தாரின் 'தெய்வ பாஷை' பாலி என்னும் பிராகிருதம். பிராகிருத மொழிகள், சமஸ்கிருதம் தோன்றுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்னமே இந்தியாவில் வழங்கிவந்தன. சமண சமய நூல்களும் பௌத்த மத நூல்களும் முறையே சூரசேனி, பாலி என்னும் பிராகிருத மொழிகளில் எழுதப்பட்டிருந்தன. ஆகவே, அந்த மதத்தவர் தங்கள் மத நூல்களைச் சூரசேனியிலும் பாலியிலும் ஓதினார்கள். அந்த மதங்கள் தமிழ்நாட்டில் பெருவாரியாகப் பரவின. களப்பிரர் ஆட்சிக் காலத்தில், பிராகிருத மொழிகளின் தொடர்பு காரணமாகத் தமிழ்ப் பா வகையில் புதிய செய்யுட்கள் தோன்றத் தொடங்கின. பிராகிருத மொழிகளோடு சமஸ்கிருத மொழியும் அக்காலத்தில் அந்த மதத்தவரால் பயிலப்பட்டது. இந்த மொழிகளின் தொடர்பு காரணமாகத் தமிழ்ச் செய்யுள் வகையில் புதிய பாவினங்களை உண்டாக்கினார்கள். புதியனவாகத் தோன்றிய பாவினங்கள் தாழிசை, துறை, விருத்தம் எனப் பெயர் பெற்றன.

பழமையான நான்கு வகைப் பாக்களோடு புது வகையான மூன்று பாவினங்களை அமைத்துப் பன்னிருவகையான செய்யுட்களை உண்டாக்கினார்கள். பழைய ஆசிரியப்பாவோடு ஆசிரியத் தாழிசை, ஆசிரியத் துறை, ஆசிரிய விருத்தம் என்றும், வெண்பாவோடு வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் என்றும், கலிப்பாவோடு கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் என்றும் வஞ்சிப்பாவோடு வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் என்றும் பாவகைகளை வளர்த்தார்கள். பாவினங்களின் அமைப்பு திடீரென்று அமைந்துவிடவில்லை. அவை சரியானபடி முழு உருவை அடைவதற்குப் பல ஆண்டுகள், சில தலைமுறைகள் சென்றிருக்க வேண்டும். புத்தம் புதிய முயற்சியில் தொடக்கக்

காலத்தில் சில பல குறைகள் இருக்கும். அக்குறைபாடுகள் நீங்கி நிறைவான வடிவம் அமைவதற்குப் பல ஆண்டுகள் சென்றிருக்க வேண்டும். புதிய பாவினங்களைப் புலவர் உலகம் சம்மதித்து ஏற்றுக்கொள்வதற்குப் பல ஆண்டுகள் சென்றிருக்க வேண்டும். இந்தப் புதிய ஆக்கம், தமிழர் சமஸ்கிருத, பிராகிருத மொழிகளைப் பயில வாய்ப்பு ஏற்பட்ட காலத்தில் உண்டான வளர்ச்சியாகும். இந்தப் புதிய முயற்சியில் அக்காலத் தமிழர் தமிழ் மொழியின் தனித்தன்மையும் இயல்பும் கெடாதபடி பார்த்துக் கொண்டார்கள். கன்னடர், தெலுங்கர், மலையாளிகள் பிராகிருத – சமஸ்கிருத எழுத்துக்களையும் சொற்களையும் அப்படி-அப்படியே சேர்த்துக்கொண்டு கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளின் தூய்மையையும் தனித்தன்மையையும் கெடுத்துக்கொண்டதுபோல, பாவினங்களை அமைத்த காலத்தில் தமிழர் பிராகிருத – சமஸ்கிருத மொழிச் சொற்களையும் எழுத்துக் களையும் அப்படி-அப்படியே எடுத்துக் கொண்டு தமிழின் தூய்மையையும் தனித்தன்மையையும் கெடுத்துவிடவில்லை. பிராகிருத – சமஸ்கிருத மொழிச் சொற்கள் ஓரளவு தமிழில் கலந்தபோதிலும், அச்சொற்கள் தமிழ் மரபுக்கேற்பக் கிருதம் பெற்றபடியால் தமிழ், திராவிட இயல்பை இழக்காமல் இருக்கிறது.

புறப்பொருளும் அகப்பொருளும் – புதிய கருத்துக்கள்

பழமையான நான்கு வகைப் பாக்களோடு புது வகையான பாவினங்கள் உண்டாக்கப்பட்டதைக் கூறினோம். இது தமிழ் மொழியில் ஏற்பட்ட நல்லதோர் ஆக்கமாகும். களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இன்னொரு மாற்றமும் தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்டது. அது அகப்பொருள் புறப்பொருள்களில் உண்டான புதிய கருத்துக்கள் ஆகும். சங்க காலத்தில் அகப்பொருளையும் புறப்பொருளையும் மக்களின் வாழ்க்கையோடு அமைத்துச் செய்யுட்களைப் பாடினார்கள். போர் வீரர் தங்களுடைய வீரத்தினால் பகைவரை வென்றதைப் பாராட்டிச் சங்கப் புலவர் செய்யுட்களைப் பாடினார்கள். அவ்வாறே, மக்களின் காதல் வாழ்க்கையைச் சிறப்பித்துச் செய்யுட்களை இயற்றினார்கள். இந்தப் பழைய புறப்பொருள் அகப்பொருள்களுக்குப் புதிய கருத்துக்கள் தோன்றின. புறப்பகைவரைப் போரிலே கொன்று வெற்றி பெறுகிற உலகியல் வெற்றியைவிட அகப்பகையை வென்று வெற்றி கொள்வது சிறந்த உயர்ந்த வெற்றி என்னும் புதிய கருத்தைச் சைனரும் பௌத்தரும் உண்டாக்கினர். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களையும் அடக்கிக் காமம், வெகுளி, மயக்கம் என்னும் அகப்பகைகளை வெல்கிற வெற்றி போர்க்களத்தில் பகைவரைக் கொல்கிற வெற்றியைவிட மேலான வெற்றி என்று புறப்பொருளுக்குப் புதிய கருத்துத் தோன்றிற்று.

அகப் பகையை வென்ற அருகரும் (தீர்த்தங்கரரும்) புத்தர் பெருமானும் *ஜினர்* (வெற்றி பெற்றவர்) என்றும் அந்த வெற்றியே மனிதன் உயர்கதிக்குச் செல்லக்கூடிய சிறந்த வெற்றி என்றும் சைனரும் பௌத்தரும் தங்கள் மதச் சார்பாகப் புறப் பொருளுக்குப் புதுப் பொருள் கூறினார்கள். அதாவது, மாந்தனின் போர்க்கள வெற்றியைப் புகழ்ந்து பாடுவதைவிட ஜினர்களின் ஐம்புல வெற்றியைப் பாடுவது சிறந்தது என்னும் கருத்தைத் தோற்றுவித்தனர்.

பௌத்தரும் சைனரும் புறப்பொருளுக்குப் புதிய கருத்தை உண்டாக்கியதைப் போல, சைவ, வைணவர் அகப்பொருளுக்குப் புதியதோர் கருத்தைக் கூறினார்கள். மனித வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் காதலித்துப் பெறுகிற சிற்றின்பத்தைவிட உயிர்கள் கடவுளைக் காதலித்துப் பெறுகிற பேரின்பம் சிறந்தது என்னும் புதிய கருத்தை அகப்பொருளுக்குக் கற்பித்தார்கள். உயிர்கள் (அதாவது ஆணும் பெண்ணும் ஆகிய உயிர்கள்) தலைவிகள் (காதலிகள்) என்றும் கடவுள் (சிவனும் திருமாலும்) தலைவன் (காதலன்) என்றும் இந்த முறையில் காதலி–காதலன் பாவத்தில் கடவுளிடம் பக்தி செய்தால் பேரின்பமாகிய மோட்சம் (வீடு பேறு) பெறலாம் என்றும் சைவ, வைணவர் அகப்பொருளுக்குப் புதிய கருத்துக் கூறினார்கள். அதாவது, நாயகி – நாயகன் பாவத்தில் அகப்பொருள் கருத்து அமையக் கடவுளின்மேல் பக்திப்பாடல் பாடுவது சிறந்தது என்று கூறினார்கள். ஆனால், அகப் பொருளைப் பற்றிய இந்தப் புதிய கருத்தைச் சைனரும் பௌத்தரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் நாயகி – நாயகன் பாவத்தில் தங்களுடைய கடவுளின் மேல் அகப்பொருட்டுறை யமைந்த செய்யுட்களை இயற்றவில்லை. சைவ, வைணவ சமயத்தார் மட்டும் அகப்பொருட்டுறை யமைந்த பாடல்களைத் தங்கள் கடவுளின் மேல் பாடினார்கள். இந்த மாற்றங்கள் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் உண்டாயின என்று தோன்றுகின்றது.

பக்தி இயக்கம் தோன்றின காலத்திலிருந்து அகப்பொருள் துறைகள் அமைந்த தோத்திரப் பாடல்களைச் சைவ, வைணவர்கள் இயற்றத் தொடங்கினார்கள். இவ்விதப் பாடல்களைச் சங்க காலத்தில் சங்கப் புலவர்கள் பாடவில்லை. பிற்காலத்து நாயன் மார்களும் ஆழ்வார்களும் அகப்பொருட்டுறை யமைந்த பாடல் களைத் தங்கள் கடவுள்மேல் பாடினார்கள். இந்த மரபு தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. சைன, பௌத்தர்களுக்கு இந்தக் கருத்து உடன்பாடில்லை யாகையால் அவர்கள் தங்கள் கடவுளின்மேல் அகப்பொருட்டுறைப் பாடல்களைப் பாட வில்லை.

யாப்பிலக்கண நூல்கள்

பழைமையான நால்வகைப் பாக்களுக்குப் புதிதாகப் பாவினங்கள் உண்டாக்கப்பட்டன என்று கூறினோம். புதிய பாவினங்களுக்கு இலக்கணம் தேவைப்பட்டது. ஆகவே, யாப்பிலக்கணம் (செய்யுள் இலக்கணம்) எழுதப்பட்டது. அந்தக் காலத்தில் பல புலவர்கள் புதிதான செய்யுள் இலக்கண நூல்களை எழுதினார்கள். பல செய்யுள் இலக்கண நூல்கள் எழுதப்பட்டன. அந்தச் செய்யுள் இலக்கண நூல்கள் பிற்காலத்தில் வழக்கிழந்து மறைந்து போயின. மறைந்துபோன அந்நூல்களைப் பற்றிச் சிறிதளவு, பிற்காலத்து நூலாகிய *யாப்பருங்கல விருத்தியுரையில்* மேற்கோள் காட்டப்பட்டிருப்பதிலிருந்து அறிகிறோம். மறைந்து போன அந்த நூல்களைப்பற்றி நாம் அறிந்தவரையில் கூறுகிறோம்.

அவிநயம்

அவிநயம் என்னும் இந்த நூலை எழுதியவர் அவிநயனார். இவர் சைன சமயத்தவர் என்று தெரிகிறார். *அவிநயனார்யாப்பு* என்னும் பெயரும் இதற்கு உண்டு. இராசப்பவுத்திரப் பல்லவ தரையன் என்னும் புலவர் இந்நூலுக்கு உரை எழுதினார். கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரையில் இந்த நூல் வழங்கிவந்து பிறகு மறைந்து போயிற்று. இந்த நூலிலிருந்து உரையாசிரியர் சிலர் சில சூத்திரங்களை மேற்கோள் காட்டியுள்ளனர்.

அவிநயப் புறனடை என்றும் *நாலடி நாற்பது* என்றும் பெயருள்ள இன்னொரு நூலை அவிநயனாரே எழுதியுள்ளார். இந்நூலும் பிற்காலத்தில் மறைந்து போயிற்று. இந்நூற் செய்யுட்கள் சில உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப் பட்டுள்ளன (இந்த நூல்களைப் பற்றின விவரங்களை *மறைந்து போன தமிழ் நூல்கள்* என்னும் புத்தகத்தில் காண்க).

காக்கைபாடினியம்

இந்த யாப்பிலக்கண நூலை எழுதியவர் காக்கைபாடினியார். காக்கைபாடினியார் என்னும் பெயருள்ளவர் இருவர் இருந்தனர். *குறுந்தொகை* 210ஆம் செய்யுளையும், *புறநானூறு* 278ஆம் செய்யுளையும், *பதிற்றுப்பத்து* ஆறாம் பத்தையும் பாடினவர் சங்க காலத்துக் காக்கைபாடினியார். *காக்கைபாடினியம்* என்னும் செய்யுளிலக்கண நூலை எழுதிய இவர் பிற்காலத்திலிருந்த காக்கைபாடினியார். *சிறுகாக்கைபாடினியம்* என்று இன்னொரு யாப்பிலக்கண நூலும் உண்டு. இந்த நூலை எழுதியவர் சிறுகாக்கைபாடினியார். இந்த இரண்டு செய்யுளிலக்கண நூல்களிலிருந்து சூத்திரங்களைப் பிற்காலத்து உரையாசிரியர்

தங்களுடைய உரையில் மேற்கொள் காட்டியுள்ளனர் (*மறைந்து போன தமிழ் நூல்கள்*).

நக்கீரர் அடிநூல், நக்கீரர் நாலடி நானூறு என்னும் செய்யுள் இலக்கண நூலை *யாப்பருங்கல* விருத்தியுரைகாரர் தம்முடைய உரையில் குறிப்பிடுகிறார். இவ்விரண்டும் ஒரே நூலாக இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இந்த நக்கீரர் சங்க காலத்து நக்கீரர் அல்லர். பிற்காலத்தில் (பக்தி இயக்கம் தோன்றின காலத்தில்) இருந்த நக்கீரர் என்று தோன்றுகிறார்.

நத்தத்தம்

இப்பெயருள்ள செய்யுள் இலக்கண நூலை இயற்றியவர் நத்தத்தனார். (இவர் பெயர் நற்றத்தனார் என்றும் இவருடைய நூல் *நற்றத்தம்* என்றும் கூறப்படுகிறது.) தத்தனார் என்பது இவருடைய பெயர் என்பதும் ந என்னும் சொல் சிறப்புப் பெயரை உணர்த்துகிறது என்றும் தோன்றுகிறது. இந்த நூலும் மறைந்து போயிற்று. இந்நூலிலிருந்து சில சூத்திரங்கள் *யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை* உரைகளில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன (*மறைந்து போன தமிழ் நூல்கள்*).

பல்காப்பியம், பல்காப்பியப் புறனடை

இந்த இரண்டு யாப்பிலக்கண நூல்களை எழுதியவர் பல்காப்பியனார். இந்த நூல்கள் பிற்காலத்தில் மறைந்துபோயின. இந்நூல்களிலிருந்து சில சூத்திரங்கள் உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன (*மறைந்து போன தமிழ் நூல்கள்*).

பல்காயம்

பல்காயனார் என்னும் புலவர் இந்நூலை இயற்றினார். இந்நூல் பிற்காலத்தில் மறைந்து போயிற்று. இந்நூலிலிருந்து சில நூற்பாக்கள் உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப் பட்டுள்ளன (*மறைந்து போன தமிழ் நூல்கள்*).

இலக்கிய நூல்கள் (சமணர் இயற்றியவை)

களப்பிரர் ஆட்சிக் காலத்தில், கி.பி. 250 முதல் 575 வரையில் என்னென்ன தமிழ் இலக்கிய நூல்கள் உண்டாயின என்பதற்கு முழு விவரங்கள் கிடைக்கவில்லை. அந்தக் காலத்தில் புது வகையான பாவினங்கள் தோன்றின என்பதை அறிந்தோம். புதிய பாக்களினாலே புதிய தமிழ் நூல்கள் பல தோன்றியிருக்க வேண்டும் என்பது உறுதி. நமக்குத் தெரிகிற வரையில் அக் காலத்தில் தோன்றின தமிழ் இலக்கிய நூல்களைக் கூறுவோம்.

நரிவிருத்தம்

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் திருநாவுக்கரசு சுவாமிகள் தம்முடைய தேவாரப் பதிகத்தில் *நரிவிருத்தம்* என்னும் நூலைக் கூறுகிறார்.

எரிபெருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவருக்க மாவது உணர்கிலர்
அரி அயற்கு அரியானை அயர்த்துபோய்
நரிவிருத்தம தாகுவர் நாடரே
(நாவுக்கரசர் தேவாரம், ஆதிபுராணத் திருக்குறுந்தொகை 7)

நரி விருத்தம் என்பதன் பொருள் நரியின் வரலாறு என்பது (விருத்தம் - விருத்தாந்தம், வரலாறு). விருத்தம் என்பதற்கு விருத்தப் பாவாலான நூல் என்றும் கூறலாம். இந்நூலாசிரியர் திருத்தக்க தேவர் என்று பெயர் பெற்ற புலவர். சோழ அரசர் குலத்தில் பிறந்தவரான திருத்தக்கதேவர் சமண சமயத்துத் துறவியாகிச் சமண சமயத்துத் தேவகணத்தைச் சேர்ந்திருந்தார். இவர் சீவகன் என்னும் அரசனுடைய வரலாற்றைச் *சீவகசிந்தாமணி* என்னும் பெயரினால் பாட எண்ணித் தம்முடைய சமய குருவின் அனுமதியைக் கோரினார். சீவகன் சரிதையில் சிற்றின்பச் செய்திகளும் உலகியல் செய்திகளும் அதிகமாக இருப்பதால் அதை எழுத முன்வந்த திருத்தக்க தேவர் தம்முடைய துறவு நிலையில் உறுதியுள்ளவராக இருக்கிறாரா என்பதை அறிய விரும்பின குரு, இவரை முதலில் நிலையாமையைப் பற்றி ஒரு நூல் எழுதிக்காட்டும்படி கட்டளையிட்டார். அவர் கட்டளையை மேற்கொண்டு எழுதப்பட்டதுதான் *நரி விருத்தம்*. *நரிவிருத்* தத்தைப் படித்த ஆசிரியர் திருத்தக்கதேவரின் உறுதியான துறவு நிலையை யறிந்து, *சீவகசிந்தாமணிக்* காவியத்தை இயற்றுவதற்கு அனுமதி கொடுத்தார். ஆகவே *நரிவிருத்தம்*, *சீவகசிந்தாமணிக்கு* முன்னோடியாகச் செய்யப்பட்ட நூல் என்பது தெரிகிறது. நூறு செய்யுட்களைக் கொண்ட *நரிவிருத்தம்* இப்போதும் இருக்கிறது.

சீவகசிந்தாமணி

நரிவிருத்தத்தைப் பாடிய திருத்தக்கதேவர் தம்முடைய ஆசிரியரின் அனுமதிப்படி *சிந்தாமணிக்* காவியத்தை இயற்றினார். இது *சீவகசிந்தாமணி* என்றும் மணநூல் என்றும் பெயர் பெற்று விளங்குகிறது. *சீவகசிந்தாமணி*, *சிலப்பதிகாரக்* காவியத்துக்கு அடுத்தபடி, சிறந்த காவியமாகப் போற்றப்படுகிறது. புதிய விருத்த யாப்பினால் இயற்றப்பட்ட முதல் காவியம் இது. *சீவக சிந்தாமணியின்* தலைவனான சீவக குமாரன் வர்த்தமான மகாவீரரின் காலத்தில் இருந்தவன். மகாவீரர் நிர்வாண மோட்சம் அடைந்து இப்போது 2500 ஆண்டுகள் ஆகின்றன. எனவே, சீவகனும் அந்தக் காலத்தில் இருந்தவன் ஆவன்.

இவ்விடத்தில் ஒரு செய்தியை விளக்கிக் கூறவேண்டும். சீவக குமாரன், பல்லவ தேசத்தின் அரசன் மகளை மணஞ்செய்தான் என்று கூறப்படுகிறான். பல்லவ தேசம் என்பது எது என்பதை அறியவேண்டும். பல்லவ அரசர் தமிழ்நாட்டுத் தொண்டை மண்டலத்தைக் கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் சிறப்பாக அரசாண்டதை வரலாற்றினால் அறிகிறோம். கி.மு. 6ஆம் நூற்றாண்டிலிருந்த சீவகன் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இருந்த பல்லவ அரசன் மகளை மணஞ்செய்ய இயலுமா? "படுமழை பருவம் பொய்யா பல்லவ தேயம் என்னும், தடமலர்க் குவளை பட்டந்தழுவிய யாணர் நன்னாடு" (1185) என்றும், "கோங்குபூத் துதிர்ந்த குன்றிற் பொன்னணி புனகம் வேய்ந்த, பாங்கமை பருமயானைப் பல்லவ தேசமன்னன்" (2253) என்றும், "பாகத்தைப் படாத நெஞ்சிற் பல்லவ தேயமன்னன், சேவகன் சிங்கநாதன் செருக்களம் குறுகினானே" (2278) என்றும் பல்லவ தேசமும் பல்லவ தேய மன்னனும் *சீவகசிந்தாமணி*யில் கூறப்படுகின்றனர். இங்குக் கூறப்பட்ட பல்லவ தேசம் தமிழ்நாட்டில் இருந்த பல்லவ தேயம் அன்று. சீவகன் வாழ்ந்த காலத்தில் தமிழ்நாட்டில் பல்லவ தேசமும் பல்லவ அரசரும் இருந்திலர். இதில் கூறப்படுகிற பல்லவ தேசம் இப்போது ஈரான் என்று பெயர் கூறப்படுகிற பழைய பாரசீக தேசமாகும். பழைய பாரசீக தேசத்தை யாண்டவர் பஹ்லவர் என்றும் அந்த நாடு பஹ்லவ நாடு என்றும் கூறப்பட்டது. பஹ்லவ தேசம் என்றது தமிழில் பல்லவதேசம் என்றாயிற்று. *சீவகசிந்தாமணி* கூறுகிற பல்லவ தேசம் பழைய பாரசீக நாடாகிய பஹ்லவ தேசம் ஆகும்.

சீவகசிந்தாமணி களப்பிரர் ஆட்சிக் காலத்தில், சமண சமயம் ஓங்கி வளர்ந்திருந்த காலத்தில், கி.பி. 5 அல்லது 6ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூலாகும்.*

எலிவிருத்தம், கிளிவிருத்தம்

கி. பி. 7ஆம் நூற்றாண்டில் இருந்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தம்முடைய தேவாரப் பதிகத்தில் *எலிவிருத்தம்*, *கிளிவிருத்தம்* என்னும் இரண்டு நூல்களைக் கூறுகிறார். "கூட்டினார் கிளியின் விருத்தம் உரைத்ததோர் எலியின்தொழில், பாட்டு மெய்கொலிப் பக்கமே செலுத்தும்" (திருவாசகம் 5).

---

* *சீவக சிந்தாமணி சொற்பொழிவு நினைவு மலர்*, 1952, பக்கம் 217. *சீவக சிந்தாமணி* கி.பி. 8ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல் என்று இந்நூலாசிரியர் முன்பு எழுதியது தவறு. 'செந்தமிழ்ச் சிந்தாமணி - கால ஆராய்ச்சி' என்னும் கட்டுரையில் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் *சிந்தாமணி* எழுதப்பட்டதென்று இந்நூலாசிரியர் எழுதியுள்ளார். அது தவறு என்பதும் கி.பி. 5 அல்லது 6ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்கவேண்டும் என்பதும் இப்போது தெரிகிறது.

நரிவிருத்தம் போன்று இந்த நூல்களும் சமண சமய நூல்களே. இந்த நூல்கள் பிற்காலத்தில் மறைந்துபோயின. இந்நூல் செய்யுட்களில் கலித்துறைச் செய்யுட்களும் பயின்றுள்ளன என்பது தெரிகின்றது. "குண்டலகேசி விருத்தம் கிளிவிருத்தம் எலிவிருத்தம் நரிவிருத்தம் முதலாயுள்ளவற்றுள் கலித்துறைகளும் உளவாம்" என்று வீரசோழிய உரையாசிரியர் எழுதியுள்ளார்.

விளக்கத்தார் கூத்து

இது கூத்து நூல். இதைச் செய்தவர் விளக்கத்தார் (விளக்கத்தனார்) என்னும் புலவர். இந்த நூல் பிற்காலத்தில் மறைந்துவிட்டது. இந்த நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுளை யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் தம்முடைய உரையில் மேற்கோள் காட்டியுள்ளார் (இணைப்பு 1இல் முதல் செய்யுள் காண்க). இந்தக் கடவுள் வாழ்த்துச் செய்யுளில் இவர் அச்சுதன் என்னும் களப்பிர அரசனை வாழ்த்துகிறார்.

அடுதிறல் ஒருவ நிற் பரவுதும், எங்கோன்
தொடுகழற் கொடும்பூண் பகட்டெழு மார்பிற்
கயலொடு கிடந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் பேர்வேல் அச்சுதன்
ஒன்றுகடல் உலகம் முழுவதும்
ஒன்றுபு திகிரி யுருட்டுவே னெனவே

இதனால், இந்த நூல் களப்பிர அரசன் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்டது என்பது தெரிகிறது. இந்த நூலின் வரலாற்றை மறைந்து போன தமிழ் நூல்கள் என்னும் புத்தகத்தில் காண்க.

பெருங்கதை

பெருங்கதை என்னும் இந்த நூலுக்கு மாக்கதை என்றும் உதயணன் கதை என்றும் சுருக்கமாகக் கதை என்றும் பெயர் உண்டு. இதனை இயற்றியவர் கொங்கு நாட்டில் வாழ்ந்திருந்த கொங்குவேள். இதனால் இதனைக் கொங்குவேள் மாக்கதை என்றும் கூறுவர். கொங்குவேள் கொங்கு நாட்டு விசயமங்கலம் என்னும் ஊரில் இருந்தவர். பெருங்கதையின் தொடக்கமும் அதன் முதற்காண்டமும் இறுதிக்காண்டமும் இப்போது கிடைக்கவில்லை. இவற்றைத் தவிர மற்ற பகுதிகள் எல்லாம் கிடைத்துள்ளன. இந்த நூலில் திரி சொற்கள் அதிகம். சற்றுக் கடினமான நடைதான். மணிமேகலை காவியம் போலவே பெருங்கதையின் செய்யுட்கள் ஆசிரியப் பாவாலானவை. இப்பாக்களின் இறுதியில் மணிமேகலை காவியம் போன்றே 'என்' என்று முடிகின்றன. இந்த நூலைக் கொங்குவேள் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இயற்றியிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இருந்த திருமங்கையாழ்வார் பெருங்கதையைப் படித்திருக்கிறார் என்பது அவருடைய சிறிய திருமடல் என்னும் செய்யுளில் பெருங்கதையின் தலைவியாகிய வாசவதத்தையைப் பற்றிக் கூறுவதிலிருந்து அறிகிறோம்.

ஆரானும் ஆதானும் அல்லன் அவள்காணீர்
வாரார் வனமுலை வாசவ தத்தை என்று
ஆராலும் சொல்லப் படுவாள் – அவளுந்தன்
பேராயம் எல்லாம் ஒழியப் பெருந்தெருவே
தாரார் தடந்தோள் தனைக்காலன் பின்போனாள்
ஊரார் இகழ்ந்திடப் பட்டாளே
(திருமங்கையாழ்வார், சிறுத்திருமடல்)

கி.பி. 2ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்ட மணி மேகலை காவியத்தில் பெருங்கதையின் குறிப்புக் காணப்படுகிறது (மணிமேகலை 15 : 58-66). அக்காலத்திலேயே பெருங்கதையைத் தமிழர் அறிந்திருந்தனர் என்பது தெரிகிறது. ஆனால், அவர்கள் காலத்தில் கொங்குவேளின் பெருங்கதை எழுதப்படவில்லை. வேறு யாரோ எழுதிய பெருங்கதையை அவர்கள் அறிந்திருந்தனர்.

பெருங்கதையின் மூல நூல் பிருஹத்கதை என்பது (பிருஹத் கதை – பெருங்கதை). பிருஹத்கதையை குணாட்டியர் என்னும் புலவர் பைசாச பாஷையில் எழுதினார். குணாட்டியர், தக்கண தேசத்தை அரசாண்ட சாதவாகன அரசனுடைய அமைச்சராக இருந்தவர். சாதவாகன அரசர்களுக்குச் சதகர்ணி என்றும் பெயர் உண்டு. சாதவாகன அரசர்களாகிய சதகர்ணியாரைத் தமிழர் நூற்றுவர்கன்னர் என்று கூறினார்கள். ஏறத்தாழக் கி.பி. முதல் நூற்றாண்டில் குணாட்டியர் என்னும் அமைச்சர் பிருஹத் கதையைப் பைசாச பாஷையில் எழுதினார். இது விந்தியமலைப் பிரதேசத்தில் பேசப்பட்ட மொழி ஆகும். பைசாச பாஷை திராவிட இனத்தைச் சேர்ந்த மொழி என்பர். பைசாச பாஷை என்பது பிராகிருத பாஷையைச் சேர்ந்தது. பிருஹத்கதையின் பெரும் பாகம் அழிந்து போயிற்று. எஞ்சி இருக்கும் பகுதியே இப்போதுள்ள பெருங்கதை.

பிருகத்கதையைத் தமிழில் எழுதியவர் கொங்குவேள் என்னும் சைனர். சைனர்கள் பிராகிருத பாஷைகளைக் கற்ற வர்கள். எப்படி என்றால் சைன சமய நூல்கள் பிராகிருத பாஷையில் எழுதப்பட்டுள்ளபடியால் அக்காலத்து சைனர் பிராகிருத பாஷையையும் நன்கு கற்றிருந்தார்கள். அந்த முறையில் சைன ராகிய கொங்குவேள் நேரே, பைசாச பாஷையில் எழுதப்பட்ட குணாட்டியரின் பெருங்கதையைப் படித்து அதைத் தமிழில் பெயர்த்தெழுதினார் என்பதில் தவறு இல்லை. துர்வினிதன் என்னும் கன்னட நாட்டு அரசன் குணாட்டியருடைய பிருகத்

கதையை வடமொழியில் பெயர்த்து எழுதினான் என்றும் அந்த வடமொழியிலிருந்து கொங்குவேள் பெருங்கதையைத் தமிழில் எழுதினார் என்றும் சிலர் கூறுவர். இவர்கள் கூற்று ஏற்கத்தக்க தன்று. பிராகிருத பாஷையை அறிந்தவரான சைனராகிய கொங்குவேள், நேரே பைசாச பாஷையிலிருந்து பெருங்கதையைப் பெயர்த்தெழுதினார்.

நூல்களும் கருத்துக்களும் (சொற்களும்கூட) சமஸ்கிருதத்தில் வந்த பிறகுதான் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது என்னும் முட்டாள்தனமான மூடக்கொள்கை, ஆராய்ச்சி இல்லாத சமஸ்கிருதப் பண்டிதர்களிடம் இருந்து வருகிறது. இந்த மூடத்தனத்தைத் தமிழ்ப் பண்டிதர் சிலர் உண்மை எனக் கருதிக் கொண்டுள்ளனர். பௌத்த, சைனர் காலத்தில் பிராகிருத மொழியிலிருந்து தமிழில் நூல்களும் கருத்துக்களும் வெளி வந்தன. சமஸ்கிருதம் போலக் காணப்படுகிற பல சொற்கள் உண்மையில் பிராகிருத மொழியிலிருந்து தமிழில் வந்தவை. சைனப் புலவர்களில் தமிழ், பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை நன்கு கற்றவர்கள் பலர் அக்காலத்தில் இருந்தார்கள். சைன சமயத்துத் தமிழராகிய கொங்குவேள் பிராகிருதப் பாஷையைக் கற்றவராகையினால் அவர் பைசாச மொழியிலிருந்த பிருகத்கதையை நேராகத் தமிழில் எழுதினார்.

களப்பிரர் காலத்தில் பௌத்த மதமும் சிறப்புற்றிருந்தது. அக்காலத்தில் பௌத்தர்களும் நூல் எழுதினார்கள். அவர் களுடைய நூல்கள் முழுவதும் மறைந்து போயின.

இலக்கிய நூல்கள் (சைவ சமய நூல்கள்)

சமண சமய நூல்களைப் பற்றி மேலே கூறினோம். இனி, களப்பிரர் காலத்தில் தோன்றிய சைவ இலக்கியங்களைப் பற்றிக் கூறுவோம். தமிழ்நாட்டில், முக்கியமாகப் பாண்டி நாட்டில் சமண சமயமும் பௌத்த மதமும் பரவி ஆதிக்கம் செலுத்தியதைக் கண்ட சைவ சமயத்தார் தங்கள் சமயம் ஓங்கி வளர வழிவகை களைத் தேடிக் கடைசியில் பக்தி என்னும் புதிய இயக்கத்தை உண்டாக்கினார்கள் என்று கூறினோம். அகப்பொருளுக்குப் பேரின்பத் தொடர்பான கருத்தைக் கற்பித்து மாந்தருக்கும் (உயிர்களுக்கு) கடவுளுக்கும் தெய்வீகக் காதலைப் பொருத்தி அதைப் பக்தியுடன் இணைத்தார்கள். இந்தப் புதிய கொள்கைக்கு ஆதாரமாக ஒரு நூல் வேண்டுமல்லவா? அதற்காக இறையனார் அகப்பொருள் என்றும் களவியல் என்றும் பெயருள்ள ஒரு நூலை எழுதினார்கள். அது தெய்வீகக் களவியலுக்கு ஆதார நூல் என்று கூறினார்கள். அந்த நூலைச் சிவபெருமானே (இறையனார்) இயற்றினார் என்று கூறினார்கள் (இது பற்றி இணைப்பு 3 காண்க). இனி அக்காலத்தில் உண்டான சைவ சமய நூல்களைப் பார்ப்போம்.

மூத்த திருப்பதிகங்கள்

திருவாலங்காட்டுச் சிவபெருமான் மேல் பாடப்பட்ட படியால் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்று கூறப்படும் இந்தப் பதிகங்களைப் பாடியவர் காரைக்கால் அம்மையார் என்னும் அடியார். இவர் அறுபத்து மூன்று சைவ அடியார்களில் ஒருவர். இவருடைய வரலாற்றைத் திருத் தொண்டர் புராணத்தில், காரைக்கால் அம்மையார் புராணத்தில் காண்க. திருப்பதிகங்களைப் பாடியவர் திருநாவுக்கரசு நாயனார். அவர் காலத்திலே திருப்பதிகங்களைப் பாடியவர் அவருக்கு வயதில் இளையவராகிய திருஞான சம்பந்த மூர்த்திநாயனார். இவர்கள் பாடிய பதிகங்களுக்குத் தேவாரத் திருப்பதிகங்கள் என்பது பெயர். இவர்களுக்கு முன்பு முதன்முதலாகத் திருப்பதிகம் பாடியவர் காரைக்கால் அம்மையாரே. ஆகையினால், அம்மை யார் பாடிய திருப்பதிகங்களுக்கு மூத்த திருப்பதிகங்கள் என்று பெரியோர் பெயரிட்டுள்ளனர். அம்மையார் பாடிய மூத்த திருப்பதிகங்கள் இரண்டே. இவற்றில் முதலாம் மூத்ததிருப்பதிகம் 'கொங்கை திரங்கி நரம்பெழுந்து' என்று தொடங்கும் பதிகம். இதன் பண் நட்டபாடை. இந்தப் பதிகம் பதினொரு செய்யுட் களைக் கொண்டது. இரண்டாவது மூத்ததிருப்பதிகம் 'எட்டி இலவம் ஈகை சூரை' என்று தொடங்குவது. இதன் பண் இந்தளம். இதுவும் பதினொரு பதிகங்களைக் கொண்டது. காரைக்கால் அம்மையார் 7ஆம் நூற்றாண்டிலிருந்த திருநாவுக்கரசருக்கு முந்தியவர் ஆகையால் இவர் கி.பி. 5 அல்லது 6ஆவது நூற்றாண்டில் இருந்தவராதல்வேண்டும். பழைய தேவாரப் பதிப்பு களில் காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகங்களை முதலில் அச்சிட்டுப் பிறகு மற்ற தேவாரப் பதிகங்களை அச்சிடுவது வழக்கமாக இருந்தது.

திருவிரட்டை மணிமாலை

இதனையியற்றியவரும் காரைக்கால் அம்மையாரே. இது கட்டளைக் கலித்துறையும் வெண்பாவும் ஆக இரண்டு செய்யுட்களால் ஆனது. அந்தாதியாகப் பாடப்பட்டது. இருபது செய்யுட்களைக் கொண்டது.

அற்புதத் திருவந்தாதி

இதை இயற்றியவரும் காரைக்கால் அம்மையாரே. நேரிசை வெண்பாவினால் அந்தாதியாக நூற்று ஒன்று செய்யுட்களைக் கொண்ட நூல். சிவபெருமான் மேல் பாடப்பட்டது.

காரைக்கால் அம்மையார் இயற்றிய இந்தத் தோத்திரப் பாடல்கள் பதினோராந் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன.

கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி

இது நேரிசை வெண்பாவினால் அந்தாதித் தொடையாகச் செய்யப்பட்ட நூறு செய்யுட்களையுடையது. கயிலை மலையிலும் காளத்திமலையிலும் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மேல் பாடப்பட்டது. இதனைப் பாடியவர் நக்கீரதேவநாயனார். இவர் கடைச்சங்க காலத்திலிருந்த நக்கீரர் அல்லர்; களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இருந்த மற்றொரு நக்கீரர்.

திரு ஈங்கோய்மலை எழுபது

ஈங்கோய்மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மேல் பாடப்பட்ட எழுபது வெண்பாக்களால் ஆன நூல். இதில் 49 முதல் 61 வரையில் உள்ள பதின்மூன்று பாடல்கள் மறைந்து போயின. இந்த நூலைப் பாடியவரும் நக்கீரதேவ நாயனாரே.

திருவலஞ்சுழி மும்மணிக்கோவை

இது திருவலஞ்சுழியில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான் மேல் பாடப்பட்ட தோத்திர நூல். அகவல், வெண்பா, கலித்துறை என்னும் மூன்று வகைச் செய்யுட்களினால் அந்தாதித் தொடையமையப் பாடப்பட்ட பதினைந்து செய்யுட்களையுடையது. இதுவும் நக்கீரதேவநாயனாரால் இயற்றப்பட்டது.

திருவெழுகூற்றிருக்கை

இது அகவற்பாவினால் இயற்றப்பட்ட 56 அடிகளைக் கொண்டது. கடைசியில் ஒரு வெண்பாவையும் உடையது. இச்செய்யுளை *யாப்பருங்கல* விருத்தியுரையாசிரியர் ஒழிபு இயல் உரையில் மேற்கோள் காட்டியுள்ளார். அதில் இதனை, இணைக்குறள் ஆசிரியப்பா என்று கூறுகிறார். *பதினோராந்* திருமுறையில் அச்சிடப்பட்டுள்ள இந்தச் செய்யுளுக்கும் *யாப்பருங்கல* விருத்தியுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள இச்செய்யுளுக்கும் பாடபேதங்கள் உள்ளன. இதனை இயற்றியவர் நக்கீரதேவநாயனார்.

பெருந்தேவபாணி

இது அறுபத்தேழு அடிகளைக் கொண்ட ஆசிரியப் பாவாலானது. இதன் இறுதியில் ஒரு வெண்பாவும் உண்டு. இதனை இயற்றியவரும் நக்கீரதேவநாயனாரே.

கோபப்பிரசாதம்

இது தொண்ணூற்றொன்பது அடிகளைக் கொண்ட அகவற் பாவாலான நூல். சிவபெருமான் மேல் பாடப்பட்டது. நக்கீர தேவநாயனாரால் இயற்றப்பட்டது.

காரெட்டு

இது எட்டு வெண்பாக்களால் ஆன சிறு நூல். காருக்கும் (மழைக்கும்) சிவபெருமானுக்கும் உவமை கூறுமுகத்தான் சிவனை வாழ்த்துகிறது இந்நூல். இதுவும் நக்கீரதேவ நாயனாரால் இயற்றப்பட்டது.

போற்றிக் கலிவெண்பா

கலிவெண்பாவினால் சிவபெருமானைப் போற்றிக் கூறுகிறது இந்நூல். இதுவும் நக்கீரதேவநாயனாரால் இயற்றப்பட்டது.

திருக்கண்ணப்பதேவர் திருமறம்

நூற்று ஐம்பத்தெட்டு அடிகளைக் கொண்ட அகவற் பாவினாலானது. இந்நூல் கண்ணப்ப நாயனார் சிவபெருமானிடம் பக்தி (அன்பு) செய்து முக்தி பெற்ற வரலாற்றைக் கூறுகிறது. இறுதியில் ஒரு வெண்பாவையும் உடையது. நக்கீரதேவநாயனாரால் பாடப்பட்டது.

இந்தச் செய்யுட்களைப் பாடிய நக்கீரதேவநாயனார், சங்க காலத்தில் இருந்த நக்கீரர் அல்லர். ஆனால், அவரும் இவரும் ஒருவரே என்று கூறுகின்றனர். இது தவறான கருத்து. நக்கீரதேவநாயனார் பாடிய மேற்காட்டிய செய்யுட்கள் எல்லாம் *பதினோராந் திருமுறையில்* தொகுக்கப்பட்டுள்ளன. *பதினோராந் திருமுறையை* முதன்முதலாக அச்சிற்பதிப்பித்த திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்புராய செட்டியார் அவர்கள், "மதுரைக் கடைச்சங்கத்துத் தெய்வப் புலவர்களு ளொருவராகிய நக்கீரதேவ நாயனார் அருளிச் செய்த கயிலை பாதி காளத்தி பாதித் திருவந்தாதி" என்று ஏட்டுச் சுவடியில் இருந்தபடியே எழுதியுள்ளார். கடைச்சங்க காலத்தில் இருந்த சங்கப் புலவரான நக்கீரரைப் பிற்காலத்தில் (களப்பிரர் காலத்தில்) இருந்த நக்கீரதேவநாயனார் என்பவருடன் இணைத்து இருவரும் ஒருவரே என்று கூறுவது பொருந்தாது. சங்க காலத்து நக்கீரருக்குத் தேவர் என்றும் நாயனார் என்றும் சிறப்புப் பெயர்கள் இருந்ததில்லை.

கடைச்சங்க காலத்துப் புலவரான நக்கீரர் இயற்றிய *திருமுருகாற்றுப்படை*, *பதினோராந்திருமுறையில்* தொகுக்கப் பட்டுள்ளது. அதில் "நக்கீரதேவ நாயனார் அருளிச்செய்த திருமுருகாற்றுப்படை" என்று குறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சங்க காலத்து நக்கீரரையும் பிற்காலத்திலிருந்த நக்கீரதேவ நாயனாரையும் சைவ சமயத்தவர் பிற்காலத்தில் ஒருவரே என்று தவறாகக் கருதினார்கள். (*திருமுருகாற்றுப்படை* கடைச்சங்க காலத்திலிருந்த நக்கீரரால் இயற்றப்பட்டது. *திருமுருகாற்றுப் படை* பிற்காலத்து நூல் என்று சிலர் கருதுவர். இவர்கள் கருத்துத்

தவறானது (இணைப்பு 4 'நக்கீரர் காலம்' காண்க). (திருமுரு காற்றுப்படை கடைச்சங்க காலத்தில் இருந்த நக்கீரரால் இயற்றப்பட்டது. அது பற்றிய ஆராய்ச்சி இங்கு வேண்டா.)

நக்கீரர் அடிநூல், நக்கீரர் நாலடி நானூறு என்னும் இரண்டு செய்யுள் இலக்கண நூல்களைப் பற்றி முன்பு கூறினோம். அந்நூற்களின் ஆசிரியராகிய நக்கீரரே, இங்கு கூறப்பட்ட நக்கீர தேவநாயனார் என்று தோன்றுகிறது. நக்கீரதேவநாயனார் வேறு, நக்கீரர் வேறு என்பதையறிய வேண்டும்.

திருக்கண்ணப்பதேவர் திருமறம்

நக்கீரதேவநாயனார் இயற்றிய திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்னும் நூலை மேலே கூறினோம். இந்தத் திருக் கண்ணப்ப தேவர் திருமறத்தைப் பாடியவர் கல்லாட தேவ நாயனார். இது முப்பத்தெட்டு அடிகளைக்கொண்ட அகவற் பாவாலானது. கண்ணப்ப நாயனாருடைய பக்தியைப் புகழ்ந்து பேசுகிறது இந்நூல். இந்தச் செய்யுள், சைவத் திருமுறைகளில் ஒன்றான பதினோராந் திருமுறையில் தொகுக்கப்பட்டிருக்கிறது. கடைச்சங்க காலத்தில் இருந்த கல்லாடர் என்னும் புலவர் வேறு, பிற்காலத்தவரான கல்லாடதேவநாயனார் வேறு. அகநானூற்றில் ஏழு செய்யுட்களையும் குறுந்தொகையில் ஒரு செய்யுளையும் புற நானூற்றில் ஐந்து செய்யுட்களையும் பாடிய கல்லாடனார் என்னும் சங்கப் புலவர், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் இருந்தவர். அந்தப் பாண்டியனை நேரில் பாடியவர். கண்ணப்பதேவர் திருமறம் பாடிய கல்லாடதேவநாயனார் பிற்காலத்தில் (களப்பிரர் அரசர் காலத்தில்) இருந்தவர். இருவரும் வெவ்வேறு காலத்திலிருந்த வெவ்வேறு புலவர்கள். இருவரையும் ஒருவராகக் கருதுவது தவறு.

மூத்த நாயனார் இரட்டை மணிமாலை

இது, மூத்தநாயனார் (ஆனைமுகன்) மேல் பாடப்பட்ட வெண்பாவும் கலித்துறையும் ஆகிய செய்யுட்களினால் செய்யப் பட்ட இருபது செய்யுட்களையுடைய அந்தாதி நூல். இதனைச் செய்தவர் கபிலதேவநாயனார். இது பதினோராந்திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளது.

சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை

வெண்பாவும் கலித்துறையும் ஆகிய இரண்டு வகைச் செய்யுட்களினால் சிவபெருமான் மேல் பாடப்பட்ட தோத்திர நூல். முப்பத்தேழு செய்யுட்களைக் கொண்டது. கபிலதேவ நாயனாரால் பாடப்பட்டது. பதினோராந்திருமுறையில் தொகுக்கப் பட்டுள்ளது.

சிவபெருமான் திருவந்தாதி

வெண்பாக்களினால் அந்தாதித் தொடையாகச் செய்யப் பட்ட நூறு செய்யுட்களைக் கொண்ட தோத்திரநூல். கபில தேவநாயனார் செய்தது. இதுவும் பதினோராந் திருமுறையில் தொகுக்கப்பட்டிருக்கிறது.

இந்த மூன்று செய்யுட்களையும் (*மூத்த நாயனார் இரட்டை மணிமாலை, சிவபெருமான் இரட்டைமணிமாலை, சிவபெரு மான் திருவந்தாதி*) பாடியவர் கபிலதேவநாயனார். இவர் கடைச்சங்க காலத்தில் இருந்த கபிலர் அல்லர். பிற்காலத்தில் இருந்த கபிலதேவநாயனார். சங்க காலத்தில் இருந்த கபிலர் *ஐங்குறுநூற்றில்* குறிஞ்சித்திணையையும் *கலித்தொகையில்* குறிஞ்சிக்கலியையும் பாடியவர். *அகநானூற்றில்* பதினெட்டுச் செய்யுட்களையும், *குறுந்தொகையில்* இருபத்தேழு செய்யுட் களையும், *புறநானூற்றில்* இருபத்தெட்டுப் பாடல்களையும், *பத்துப்பாட்டில்* குறிஞ்சிப் பாட்டையும் பாடினார். மற்றும் *பதிற்றுப்பத்து* ஏழாம் பத்தைச் செல்வக்கடுங்கோ வாழியாதன் மேல் பாடியுள்ளார். அவர் வேறு, களப்பிரர் காலத்தில் பக்தி இயக்கம் தோன்றிய காலத்தில் இருந்த கபிலதேவநாயனார் வேறு. *பதினெண் கீழ்க்கணக்கு* நூல்களில் ஒன்றான *இன்னா நாற்பது* என்னும் நூலைச் செய்தவர் கபிலதேவநாயனாரே. சங்க காலத்தில் மூத்தநாயனார் (கணபதி, பிள்ளையார்) வணக்கம் ஏற்படவில்லை. *மூத்த நாயனார் இரட்டை மணிமாலையை* ஆனைமுகன் மேல் பாடிய கபிலதேவ நாயனார் பிற்காலத்தவர் என்பது வெளிப்படை. இவர் இயற்றிய *இன்னா நாற்பது* என்னும் நூலைப்பற்றிப் *பதினெண் கீழ்க்கணக்கு* என்னும் தலைப்பில் இந்நூலில் வேறு இடத்தில் காண்க.

வித்துவான் திரு. வேங்கடராஜுலு ரெட்டியாரும் இக் கருத்தையே கூறுகிறார். "பிற்காலத்து நூல்களிலேயே முதலில் விநாயக வணக்கம் காணப்படுகின்றது. இவற்றால், கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரையில் தமிழ்நாட்டில் விநாயக வழிபாடு நடை பெற்றிலது என்பது அறியலாகும். 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்னும் நூலிலும் இவ்வாறே கூறப்பட்டுள்ளது. இவற்றால், பண்டைத் தமிழ்ப் புலவராய் விளங்கிய கபிலர், தமது காலத்தில் வழக்காற்றிலில்லாத கடவுளை வழிபட்டுப் பாடி யுள்ளார் என்று கூறுதல் பொருத்தமுடையதாகாது. அன்றியும் இரட்டை மணிமாலை போன்ற பிரபந்தங்களும் அவர் காலத்தில் தோன்றியிருக்கவில்லை. கட்டளைக் கலித்துறைப் பாட்டுக்களும் கபிலர் காலத்தில் வழங்கவில்லை. அவ்வாறே பிரபந்தங்கள் பலவும், கபிலர் வாழ்ந்த காலத்தில் வழங்கின என்றல் பொருந்தாதே. அவை, அவர் காலத்துக்குப் பல நூற்றாண்டுகளின் பின்னர்த் தோன்றியனவே. ஆசிரியர் நச்சினார்க்கினியர் கருத்தும்

இதுவேயாதலறிக. இவையெல்லாவற்றையும் ஆராயாது பெய ரொற்றுமை யொன்று மட்டும் கருதி, கபிலதேவநாயனாரைக் கபிலர் என்றும் பழம் புலவர் என்றும் கோடல் மயக்க உணர்வேயாகும்" (வித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார், *கபிலர்*, 1936, பக்கம் 45).

"பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான இன்னா நாற்பது என்னும் நூலைச் செய்தவரும் கபிலதேவநாயனாரே. இவர் இந்நூலில் கபிலர் என்று கூறப்படுகின்றார். இவர் சங்க காலத்துக் கபிலர் அல்லர். மூத்த நாயனார் இரட்டைமணிமாலை, சிவபெருமான் இரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி இவற்றைச் செய்தவரே இந்தக் கபிலர் என்று தோன்றுகிறது" (*மேற்படி நூல்*, கபிலரகவல் என்னும் தலைப்பில்).

சிவபெருமான் திருவந்தாதி

பரணதேவநாயனார் இயற்றியது *சிவபெருமான் திருவந்தாதி*. இது நூறு வெண்பாக்களினால் அந்தாதித் தொடையாகப் பாடப்பட்டுள்ளது. *பதினோராந்திருமுறையில்* தொகுக்கப் பட்டுள்ளது. இவ்வந்தாதியின் கடைசியில் இதன் சிறப்பைக் கூறுகிற வெண்பா ஒன்று காணப்படுகிறது. இவர் சங்க காலத்தில் இருந்த பரணர் அல்லர். பக்தி இயக்கக் காலத்தில் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இருந்த நக்கீரதேவநாயனார், கல்லாட தேவநாயனார், கபிலதேவநாயனாரைப் போலவே இந்தப் பரண தேவநாயனாரும் பிற்காலத்தில் இருந்தவர்.

சங்க காலத்துப் பரணர் *அகநானூற்றில்* 34 செய்யுட்களையும் *குறுந்தொகையில்* 16 பாடல்களையும் *நற்றிணையில்* 12 செய்யுட் களையும் *புறநானூற்றில்* 13 செய்யுட்களையும் பாடியுள்ளார். மற்றும் சேரன் செங்குட்டுவன் மேல் *பதிற்றுப்பத்து* ஐந்தாம் பத்தைப் பாடினார். சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னியையும் வையாவிக் கோப்பெரும் பேகனையும் பாடியுள்ளார். அவர் கி.பி. 2ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கடைச்சங்க காலத்தில் இருந்தவர். *சிவபெருமான் திருவந்தாதி* பாடிய இந்தப் பரணதேவநாயனார் பிற்காலத்தில் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இருந்தவர். இவர் வேறு, அவர் வேறு.

கீழ்க்கணக்கு நூல்கள்

இதுவரையில் களப்பிரர் காலத்தில் சைவ, சமண சமயத்தவர் எழுதிய தமிழ் நூல்களைக் கூறினோம். களப்பிரர் காலத்தில் எழுதப்பட்ட வேறு நூல்களும் உள்ளன. அவை *கீழ்க்கணக்கு நூல்கள்*. *கீழ்க்கணக்கு* நூல்களைப் பதினெட்டாகப் பிற்காலத்தில் தொகுத்துள்ளனர். பதினெட்டு *கீழ்க்கணக்கு* நூல்களில்

காலத்தால் முற்பட்டவையும் பிற்பட்டவையும் உள்ளன. ஆனால், அவைகளில் பெரும்பான்மையானவை களப்பிரர் ஆட்சிக்காலத்துக்குள்ளாக எழுதப்பட்டவை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாவன:- 1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இன்னாநாற்பது, 4. இனியவை நாற்பது, 5. கார்நாற்பது, 6. களவழிநாற்பது, 7. ஐந்திணை ஐம்பது, 8. திணைமாலை நூற்றைம்பது, 9. திணை மாலை ஐம்பது, 10. திணை மொழி ஐம்பது, 11. ஐந்திணை எழுபது, 12. முப்பால் (திருக்குறள்), 13. திரிகடுகம், 14. ஆசாரக்கோவை, 15. சிறுபஞ்ச மூலம், 16. முதுமொழிக் காஞ்சி, 17. ஏலாதி, 18. கைந்நிலை.

இந்தக் கீழ்க்கணக்குப் பதினெட்டு நூல்களில் திருக்குறள், களவழிநாற்பது, முதுமொழிக்காஞ்சி ஆகிய மூன்றும் கடைச்சங்க காலத்தில் கி.பி. 250க்கு முன்பு எழுதப்பட்ட நூல்கள். நாலடியார் என்னும் நூல் கி.பி. 7ஆம் நூற்றாண்டில், களப்பிரர் ஆட்சிக்குச் சற்றுப் பின்பு எழுதப்பட்டது. பிற பதினான்கு நூல்களும் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்கும் 6ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டவை. திரு. பி.தி. சீனிவாச அய்யங்கார் போன்ற சிலர் பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் எல்லாம் கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 8ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டன என்று கூறுவர் (P. T. Srinivasa Aiyangar, *History of the Tamils*). இவர் கூறுவது தவறு. இதுபற்றிய ஆய்வுரையை இணைப்பு 5இல் காண்க.

கீழ்க்கணக்கு என்பதன் பொருள் என்ன என்பதைப் பார்ப்போம். மாந்தர் தம்முடைய உலக வாழ்க்கையில் அடைய வேண்டியவை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பயன்களாகும். இந்த நான்கு பயன்களில் வீடு (மோட்சம்) என்பது மறுமையில் பெறப்படுவது. மற்ற அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் இம்மையில் (இவ்வுலக வாழ்க்கையில்) அடையப் படுவன. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் கூறுகிற நூல்களுக்குக் கீழ்க்கணக்கு என்று பெயர் கூறினார்கள். இதைப் பழைய உரையாசிரியர்களும் திருநாவுக்கரசரும் கூறியுள்ளனர். அவற்றைக் காட்டுவோம். பேராசிரியர் என்னும் உரையாசிரியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல் 547ஆம் சூத்திரத்துக்கு உரையில் இவ்வாறு கூறுகிறார்:

> வனப்பியல் தானே வகுக்குங் காலை
> சின்மென் மொழியாற் றாய பனுவலொடு
> அம்மை தானே அடிநிமிர் பின்றே

"தாய பனுவலொ"டென்பது அறம் பொருள் இன்ப மென்னும் மூன்றிற்கும் இலக்கணஞ் சொல்லும்; வேறிடையிடை அவையன்றியும்தாய்ச் செல்வ தென்றவாறு. அஃதாவது பதினெண்

கீழ்க்கணக்கென உணர்க. அதனுள் இரண்டடியானும் ஐந்தடியானும் ஒரே செய்யுள் வந்தவானும், அவை சிலவாய மெல்லிய சொற்களான் வந்தவானும், அறம் பொருள் இன்பமென அவற்றுக்கு இலக்கணங் கூறிய பாட்டுப் பயின்று வருமாறும் கார்நாற்பது களவழிநாற்பது முதலாயின வந்தவாறுங் கண்டு கொள்க."

திருநாவுக்கரசு சுவாமிகள் கீழ்க்கணக்கைப் பற்றிக் கூறுவதைப் பார்ப்போம். திருக்குறுந்தொகை இன்னம்பர் பதிகத்தில் அடிகள் இவ்வாறு கூறுகிறார்:

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அலற்று கின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே

இம்மை வாழ்க்கையில் அறம், பொருள், இன்பங்களைப் பெற்று மறுமைக்கு அடையவேண்டிய கடவுள் வழிபாட்டைச் செய்யாதவர்களைக் கடவுள் கணக்கு எழுதிவைக்கிறார் என்று கூறுகிறார். அறம், பொருள், இன்பம் என்னும் இம்மைப் பயன்களைக் கீழ்க்கணக்கு என்று கூறுவது காண்க.

அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி
அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்

என்பது பன்னிருபாட்டியல்.

உலக வாழ்க்கையில் பெறவேண்டிய அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் கீழ்க்கணக்கு என்று கூறப்பட்டதைக் கண்டோம். இனி, களப்பிரர் காலத்தில் எழுதப்பட்ட கீழ்க்கணக்கு நூல்களைக் கூறுவோம்.

நான்மணிக்கடிகை

இது 104 செய்யுட்களையுடையது. விளம்பிநாகனார் என்பவரால் செய்யப்பட்டது. இப்பெயரைக் கொண்டு இவர் விளம்பி என்னும் ஊரில் இருந்தவர் என்பது தெரிகிறது. ஒவ்வொரு வெண்பாவிலும் நான்கு நான்கு நீதிகளைக் கூறுகிறபடியால் நான்மணிக்கடிகை என்று பெயர் பெற்றது. இவர் வைணவ சமயத்தவர் என்பது இந்நூல் கடவுள் வாழ்த்தினால் அறிகிறோம்.

மதிமன்னு மாயவன் வாண்முகம் ஒக்கும்
கதிர் சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமலர் ஒக்கும் நிறம்

என்பது இந்நூலின் கடவுள் வாழ்த்து.

இன்னா நாற்பது

இன்னாதவைகளைத் (துன்பந்தருகிற செயல்களை) தொகுத்துக் கூறுகிறபடியால் இந்நூல் *இன்னாநாற்பது* என்று பெயர் பெற்றது. நாற்பது வெண்பாக்களையுடையது. தனியாகக் கடவுள் வாழ்த்து ஒன்றைப் பெற்றுள்ளது. சிவபெருமான், பலராமன், மாயவன் (திருமால்), சத்தியான் (வேலாயுதனாகிய முருகன்) ஆகியோரைக் கடவுள் வாழ்த்தில் இதன் ஆசிரியர் கூறுகிறார்.

முக்கட் பகவன் அடிதொழாதார்க் கின்னா
பொற்பனை வெள்ளையை யுள்ளாது ஒழுகின்னா
சக்கரத் தானை மறப்பின்னா ஆங்கின்னா
சத்தியான் தாள்தொழா தார்க்கு

என்பது இந்நூல் கடவுள் வாழ்த்து.

இதன் ஆசிரியர் பெயர் கபிலர். இந்த ஆசிரியரும் முன்பு கூறப்பட்ட கபிலதேவநாயனார் என்பவரும் ஒருவரே. இந்தக் கபிலர் (கபிலதேவநாயனார்) சங்க காலத்தில் பாரிவள்ளலின் நண்பரும் அவ்வள்ளல் இறந்த பிறகு செல்வக்கடுங்கோ வாழியாதனைப் *பதிற்றுப்பத்து* 7ஆம் பத்தில் பாடியவருமான சங்க காலத்துக் கபிலர் அல்லர். இந்தக் கபிலர் களப்பிரர் காலத்தில் இருந்த கபிலர். இந்தக் கபிலரும் *மூத்தநாயனார் இரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி* முதலான செய்யுட்களை இயற்றிய கபிலதேவநாயனாரும் ஒருவரே.

இன்னாநாற்பது பாடிய கபிலரும் *மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி* என்ற நூல்களைப் பாடிய (*பதினோராந் திருமுறையில்* தொகுக்கப்பட்டவை) கபிலதேவநாயனாரும் வெவ்வேறு கபிலர்கள் என்று திரு. சதாசிவபண்டாரத்தார் கருதுகிறார். இவர் மூன்று கபிலர்களைக் கூறுகிறார். சங்க காலத்தில் இருந்த கபிலர், அவருக்குப் பிறகு *இன்னாநாற்பது* பாடிய கபிலர், *மூத்தநாயனார் இரட்டை மணிமாலை* முதலான நூல்களை இயற்றிய கபிலதேவநாயனார் ஆகிய மூன்று கபிலர்கள் என்று கூறுகிறார். இதற்கு இவர் கூறும் காரணம், கபிலதேவநாயனார் மூத்த பிள்ளையார் மீது *இரட்டை மணிமாலை* பாடியிருப்பதும் *சிவபெருமான் திருவந்தாதியில்* திருச்சிராப்பள்ளி மலையில் சிவபெருமான் எழுந்தருளியிருப்ப தாகக் கூறியிருப்பதும் ஆகும். அதாவது, மூத்தபிள்ளையார் (கணபதி) கி.பி. 7ஆம் நூற்றாண்டில் நரசிம்மவர்மன் மாமல்லன் காலத்தில், சிறுத்தொண்ட நாயனார் (பரஞ்சோதியார்) வாதாபியி லிருந்து கணபதி உருவங்களைக் கொண்டுவந்து தமிழ்நாட்டில் முதல்முதலாகக் கணபதி வணக்கத்தை உண்டாக்கினார் என்று

பொதுவாகக் கூறப்படும் கருத்தை உடன்பட்டு, *மூத்த பிள்ளையார் இரட்டைமணிமாலை* பாடியிருப்பதனாலும் *அந்தாதியில்* திருச்சிராப்பள்ளிமலையில் சிவனுக்குக் கோயில் இருந்ததைக் கூறியிருப்பதனாலும், (திருச்சி மலையில் முதலாம் மகேந்திரவர்மன் ஒரு குகைக்கோவிலை அமைத்தான் என்பது கொண்டும்) சதாசிவ பண்டாரத்தார் கபிலதேவநாயனார் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்று கருதுகிறார் (பண்டாரத்தார், *தமிழ் இலக்கிய வரலாறு கி.பி. 250-600*, 1965).

மாமல்லன் முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் சேனாதி பதியான பரஞ்சோதியார் (சிறுத்தொண்டநாயனார்) இரண்டாம் புலிகேசியின் நகரமான வாதாபியை வென்று அங்கிருந்து கணபதி உருவங்களைக் (வாதாபி கணபதி) கொண்டுவந்து கணபதிச்சரம் என்னும் ஊரில் கணபதிக்குக் கோவில் கட்டினார் என்பது வரலாற்றறிஞரின் பொதுவான கருத்து. ஆனால், சிறுத்தொண்ட நாயனாருக்கு முன்பே களப்பிரர் ஆட்சிக் காலத்தில் கணபதி வழிபாடு தமிழகத்தில் இருந்தது என்று இப்போது ஆராய்ச்சி யினால் அறியப்படுகிறது. மற்றும், கபிலதேவநாயனாரின் *சிவபெருமான் திருவந்தாதியில்* சிவபெருமான் திருச்சிராப்பள்ளி மலையில் எழுந்தருளியிருப்பதாகக் கூறியிருப்பது கொண்டு, அந்த மலையில் மகேந்திரவர்மன் (கி.பி. 600–630) குகைக் கோவிலைச் சிவபெருமானுக்கு அமைத்தபடியால் அந்த மலையைக் கூறுகிற கபிலதேவநாயனார் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்று திரு. சதாசிவபண்டாரத்தார் கருதுகிறார். *சிவபெருமான் திருவந்தாதியில்* 'காவிரி வந்தேறு மறுகிற் சிராமலையெங் கோமான்' என்று சிராமலையில் இருந்த சிவபெருமானைக் கபிலதேவநாயனார் கூறினார் (*சிவபெருமான் திருவந்தாதி*, செய்யுள் 42). இதில், மகேந்திரவர்மன் அமைத்த குகைக்கோவிலைத்தான் இவர் கூறுகிறார் என்று கருதவேண்டிய தில்லை. அதற்கு முன்பு அம்மலைமேல் இருந்த சிவன் கோவிலைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆகவே, கபிலதேவநாயனாரும், *இன்னா நாற்பது* கபிலரும் வெவ்வேறு கபிலர்கள் என்று கருதுவது வேண்டா. இருவரும் ஒருவரே என்பது எம்முடைய கருத்து.

இனியவை நாற்பது

இந்த நூலை இயற்றியவர் பெயர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனர். இது நாற்பது வெண்பாக்களையும் ஒரு கடவுள் வாழ்த்தையும் உடையது. மாந்தர் செய்யவேண்டிய இனிய (நல்ல) செயல்களைக் கூறுகிறது இந்நூல். இதன் கடவுள் வாழ்த்து இது:

கண்மூன் றுடையான் தாள்சேர்தல் கடிதினிதே
தொன்மாண் துழாய்மாலை யானைத் தொழலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்தல் இனிது.

திரிகடுகம்

இது நூறு வெண்பாக்களையும் ஒரு கடவுள் வாழ்த்தையும் உடைய நூல். சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று மருந்துச் சரக்குகளைத் தனித்தனியே பொடி செய்து, இப்பொடிகளைச் சம அளவாகச் சேர்த்து, அமைக்கப்பட்ட மருந்து திரிகடுகம் என்பது. இதைத் திரிகடுகு சூரணம் என்றும் கூறுவர். இது காரமாக இருக்கும். இதனால் இது *திரிகடுகம்* (மூன்று காரமான பொருள்) என்று பெயர் பெற்றது. இதை நாள்தோறும் காலையில் சிறு அளவாக உட்கொண்டால் உடல் நோயை நீக்கி நலம் உண்டாக்கும். திரிகடுகமாகிய சுக்கு, மிளகு, திப்பிலியைச் சமனளவாகச் சிதைந்து நீர்விட்டுக் காய்ச்சிய கியாழத்தையும் உட்கொள்ளலாம். திரிகடுகக் கியாழமும் சூரணமும் உடல் நோயைப் போக்குவதுபோல, *திரிகடுகம்* என்னும் இந்நூலைப் படிப்பவரின் உள்ள நோய் (மனநோய்) நீங்கும் என்னும் கருத்தினால் இந்நூல் *திரிகடுகம்* என்று பெயர் பெற்றது. ஒவ்வொரு செய்யுளிலும் மும்மூன்று கருத்துகள் கூறப்படுகின்றன. இதன் கடவுள் வாழ்த்துச் செய்யுள் இது:

கண்ணகன் ஞாலம் அளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருத்தம் சாய்த்ததூஉம் – நண்ணிய
மாயச் சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப் பூவண்ணன் அடி.

ஆசாரக் கோவை

இந்நூல் நூறு செய்யுட்களையும் ஒரு சிறப்புப் பாயிரத்தையும் உடையது. இந்நூல் வெண்பாவின் வகைகளான குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய வெண்பாக்களால் அமைந்த நூல். மனிதர் ஒழுகவேண்டிய ஒழுக்கங்களைத் தொகுத்து இதில் இதன் ஆசிரியர் கூறுகிறார். இதன் ஆசிரியர் பெருவாயில் முள்ளி என்பவர். கயத்தூர்ப் பெருவாயில் முள்ளி என்று கூறப்படுவதால், இவர் கயத்தூரைச் சேர்ந்த பெருவாயில் என்னும் ஊரில் இருந்தவர் என்று கருதலாம். புதுக்கோட்டையில் அன்னவாயில், சித்தன்னவாயில், பெருவாயில் என்னும் ஊர்கள் உள்ளன. ஆகவே, இவர் புதுக்கோட்டைப் பகுதியில் வாழ்ந்த வராதல் வேண்டும். இதன் சிறப்புப்பாயிரம் இது:

ஆரெயில் மூன்றும் அழித்தான் அடியேத்தி
ஆரிடத்துத் தானறிந்த மாத்திரையான், ஆசாரம்
யாரும் அறிய, அறனாய மற்றவற்றை
ஆசாரக் கோவைஎனத் தொகுத்தான்; தீராத்
திருவாயிலாய திறல்வண் சயத்தூர்ப்
பெருவாயில் முள்ளி என்பான்

பழமொழி நானூறு

முன்றுறையரையர் என்பவர் இந்நூலின் ஆசிரியர். இந்நூல் கடவுள் வாழ்த்து உட்பட நானூறு வெண்பாக்களையுடையது. ஒவ்வொரு வெண்பாவின் இறுதியிலும் ஒவ்வொரு பழமொழி கூறப்படுகிறது. எனவே, இதில் நானூறு பழமொழிகள் கூறப்படுகின்றன. இந்தப் பழமொழிகள் எல்லாம் இந்நூலாசிரியர் காலத்துக்கு முன்பு (களப்பிரர் ஆட்சிக் காலத்துக்கு முன்பு) வழங்கிவந்தவை. இந்நூலாசிரியர் ஆருகத மதத்தைச் சேர்ந்தவர்.

பிண்டியின் நீழற் பெருமான் அடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறும் – கொண்டினிதா
முன்றுறை மன்னவன் நான்கடியும் செய்தமைத்தான்
இன்றுவை வெண்பா இவை!

என்பது இந்நூல் தற்சிறப்புப் பாயிரம்.

சிறுபஞ்சமூலம்

இந்நூல் நூற்றிரண்டு செய்யுட்களையும் இரண்டு சிறப்புப் பாயிரச் செய்யுட்களையும் உடையது. பஞ்சமூலம் என்பது ஐந்து வகையான வேர்கள். அவை கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர் என்பவை. இந்த ஐந்து வேர்களைக் கொண்டு சிறுபஞ்சமூலம் என்னும் மருந்து செய்யப்பட்டு நோயாளிகளுக்குத் தரப்பட்டது. இந்தச் சிறுபஞ்சமூலம் என்னும் நூலில் ஒவ்வொரு செய்யுளிலும் ஐந்துஐந்து பொருள்கள் கூறப்படுகின்றன. இவை உடல் நோயைத் தீர்க்கிற சிறுபஞ்சமூலம் போன்று மன நோயைத் தீர்ப்பன ஆகையால் சிறுபஞ்சமூலம் என்று பெயர் பெற்றது. இந் நூலாசிரியரின் பெயர் காரியாசான். இந்நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுள் இது:

முழுதுணர்ந்து மூன்றொழித்து மூவாதான் பாதம்
பழுதின்றி யாற்றப் பணிந்து – முழுதேத்தி
மண்பாய ஞாலத்து மாந்தர்க் குறுதியா
வெண்பா உரைப்பன் சில

ஏலாதி

எண்பத்தேழு பாடல்களையுடைய இந்த நூலை எழுதியவர் பெயர் கணிமேதாவியார். கணி என்னும் சிறப்புப் பெயர், இவர் வானநூலைக் கற்றவர் என்பதைத் தெரிவிக்கிறது. வானநூலைப் பயின்றவர்கட்குக் கணி, கணியன் என்று பழங்காலத்தில் பெயர் இருந்தது. அரசருடைய கணிவருக்குப் பெருங்கணி என்னும் பெயர் இருந்தது. கணிமேதாவியார் தமிழ்ப் புலமை பெற்றிருந்ததோடு வானநூலையும் கற்றிருந்தார் என்பது தெரிகிறது. ஏலாதி என்பது, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் என்பவை போன்று ஒரு மருந்தின் பெயர். ஏலம், இலவங்கப்பட்டை, நாகேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு என்று ஆறு வகையான சரக்குகளை மருத்துவ நூல் கூறும் அளவுப்படி ஒன்றாகச் சேர்த்துச் செய்யப்பட்ட சூரணத்துக்கு ஏலாதி என்பது பெயர். ஏலாதி என்னும் பெயருடைய இந்த நூலில் ஒவ்வொரு செய்யுளிலும் ஆறு பொருள்கள் கூறப்படுகின்றன. இவர் சமண சமயத்தவர்.

இல்லறநூல் ஏற்ற துறவறநூல் ஏயுங்கால்
சொல்லறநூல் சோர்வின்றித் தொக்குரைத்து – நல்ல
அணிமேதை யாய்நல்ல வீட்டு நெறியுங்
கணிமேதை செய்தான் கலந்து

என்பது இந்நூலின் பாயிரச் செய்யுள்.

கார் நாற்பது

இது நாற்பது வெண்பாக்களையுடைய நூல். இது, அகப்பொருளில் முல்லைத்திணையைக் கூறுகிறது. அலுவல் காரணமாக வெளியூருக்குச் சென்ற தலைவன் தான் கார் காலத்தில் திரும்பி வருவதாகத் தன் தலைவிக்குக் (காதலிக்கு) கூறிச் சென்றான். அவன் சொன்ன கார் காலம் வந்ததும் அவன் திரும்பி வராதபடியால் தலைவி கவலைப்பட்டாள். தோழி அவளுக்கு ஆறுதல் கூறினாள். கடைசியில் காதலன் திரும்பி வந்தான். இவற்றைக் கூறுகிறது இந்தச் செய்யுள். இதனை இயற்றிய ஆசிரியர் பெயர் மதுரைக் கண்ணன் கூத்தனார்.

பொருகடல் வண்ணன் புளைமார்பில் தார்போல்
திருவில் விலங்கூன்றித் தீம்பெயல் தாழ
வருதும் எனமொழிந்தார் வாரார்கொல் வானம்
கருவிருந் தாலிக்கும் போழ்து

என்பது இந்நூலின் பாயிரச் செய்யுள்.

ஐந்திணை ஐம்பது

அகப்பொருளைப் பற்றிய ஐந்திணைகளும் பத்துப்பத்துப் பாக்களினால் இயற்றப்பட்டதாதலின் இந்நூல் ஐந்திணை ஐம்பது

என்று பெயர் பெற்றது. இதைப் பாடியவர் மாறன் பொறையனார் என்னும் புலவர். இதன் பாயிரச் செய்யுள்,

> பண்புள்ளி நின்ற பெரியார் பயன்தெரிய
> வன்புள்ளி மாறன் பொறையன் புணர்த்தியார்த்த
> ஐந்திணை யைம்பதும் ஆர்வத்தின் ஓதாதார்
> செந்தமிழ் சேராதவர்

என்று கூறுகிறது. இதில் செந்தமிழ் என்பது அகப்பொருளைக் குறிக்கிறது. தமிழ் என்பதற்கு அகப்பொருள் என்னும் பொருளும் உண்டு. அகப்பொருளைத்தான் இச்செய்யுள் செந்தமிழ் என்று கூறுகிறது.

திணைமொழி ஐம்பது

அகத்திணை ஐந்துக்கும் திணையொன்றுக்குப் பத்துச் செய்யுளாக அமைத்து ஐம்பது பாக்களினால் இயற்றப்பட்டது இந்நூல். இந்நூலை இயற்றியவர் கண்ணன் சேந்தனார். இவருடைய தந்தையாரின் பெயர் சாத்தந்தையார். ஆகவே, இவர் சாத்தந்தை யார் மகனார் கண்ணஞ் சேந்தனார் என்று கூறப்பட்டார்.

ஐந்திணை எழுபது

இந்நூலும் அகப்பொருள் ஐந்திணைகளைப் பற்றிக் கூறுகிறது. ஒவ்வொரு திணைக்கும் பதினான்கு பாக்களாக ஐந்து திணைகளுக்கு எழுபது பாடல்களைக் கொண்டது. இதன் ஆசிரியர் பெயர் மூலாதியார். இதன் கடவுள் வாழ்த்துக் கணபதியாகிய பிள்ளையாருக்குரியது.

> எண்ணும் பொருளினிதே யெல்லா முடித்தெமக்கு
> நண்ணுங் கலையனைத்து நல்குமால் – கண்ணுதலின்
> முண்டத்தான் அண்டத்தான் மூலத்தான் ஆலஞ்சேர்
> கண்டத்தான் ஈன்ற களிறு

என்பது இதன் கடவுள் வாழ்த்து.

இந்தப் பிள்ளையார் கடவுள் வாழ்த்து இந்நூலாசிரியர் செய்ததன்று என்றும் பிற்காலத்தவர் யாரோ செய்தமைத்தது என்றும் திரு. சதாசிவ பண்டாரத்தார் கருதுகிறார். இதற்கு இவர் கூறும் காரணம் இது: "பிள்ளையாரென்று வழங்கப்பெற்று வரும் விநாயகக் கடவுளின் வழிபாடு கி.பி. ஏழாம் நூற்றாண்டில்தான் நம் தமிழ்நாட்டில் தொடங்கியது என்பது ஆராய்ச்சியால் அறிந்த தோர் உண்மையாகும். எனவே, அக்கடவுளுக்கு வாழ்த்துக் கூறப்பட்டுள்ள பாடல் இந்நூலாசிரியரால் இயற்றப்பட்டதன்று என்பது தேற்றம். அக்கடவுள் வாழ்த்துச் செய்யுள் நூலின் புறத்தேயுள்ளமையும் அதற்குப் பழைய உரை காணப்படா மையும் இவ்வுண்மையை நன்கு வலியுறுத்துதல் அறியற்பாலதாம்"

(சதாசிவபண்டாரத்தார், *தமிழ் இலக்கிய வரலாறு கி.பி. 250-600*, பக்கம் 65).

விநாயகர் வழிபாடு தமிழகத்தில் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் மாமல்லன் நரசிம்மவர்மன் காலத்தில் அவ்வரசனுடைய சேனாதிபதியான பரஞ்சோதியார் (சிறுத்தொண்டநாயனார்) காலத்தில் முதன்முதலாக உண்டாயிற்று என்னும் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு பண்டாரத்தார் அவர்கள் இவ்வாறு கூறுகிறார். விநாயகர் வணக்கம் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் உண்டாயிற்று என்னும் கருத்து அண்மைக் காலத்தில் இருந்தது. ஆனால், கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முன்பே களப்பிரர் ஆட்சிக் காலத்திலேயே ஏற்பட்டிருந்தது என்பது இப்போது ஆராய்ச்சி யினால் தெரிகிறபடியால் இக்கடவுள் வாழ்த்து இந்நூலுக்கு உரியதே எனக் கொள்ளலாம் (இது பற்றி *இன்னா நாற்பது* என்னும் தலைப்பில் விளக்கிக் கூறியிருப்பது காண்க). பண்டாரத்தார் அவர்களே இந்நூலாசிரியராகிய மூலாதியார் "கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் இருந்தவர் ஆவார்" என்று கூறுகிறபடியால், இந்நூல் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்டது என்பது தெளிவாகிறது.

திணைமாலை நூற்றைம்பது

இதுவும் அகப்பொருள் ஐந்திணைகளைக் கூறுகிற நூல். குறிஞ்சிக்கு 31 செய்யுளும் நெய்தலுக்கு 31 செய்யுளும் பாலைக்கு 30 செய்யுளும் முல்லைக்கு 31 செய்யுளும் மருதத்துக்கு 30 செய்யுளும் ஆக 153 செய்யுட்களைக் கொண்டிருக்கிறது. ஆனால், நூலின் பெயரிலிருந்து 150 செய்யுட்கள்தாம் இதற்குரியவை என்று தோன்றுகிறது. எஞ்சியுள்ள மூன்று செய்யுட்கள் பிற்காலத்து இடைச்செருகலாக இருக்குமோ, அல்லது, நூலாசிரியரே இச்செய்யுட்களையும் இயற்றியிருக்கலாமோ என்று ஐயம் ஏற்படுகிறது.

இந்நூலாசிரியரின் பெயர் கணிமேதாவியார். இவரே *ஏலாதி* என்னும் நூலின் ஆசிரியர் என்பதை முன்பு அறிந்தோம். இந்நூலின் பாயிரம் இது:

> முனிந்தார் முனிவொழியச் செய்யுட்கண் முத்துக்
> கனிந்தார் களவியற் கொள்கைக் – கணிந்தார்
> இணைமாலை யீடிலா வின்றமிழால் யாத்த
> திணைமாலை கைவரத் தேர்ந்து

இந்தப் பாயிரத்தைப் பற்றித் திரு. சதாசிவ பண்டாரத்தார் தம்முடைய கருத்தைக் கூறியுள்ளார்கள். "அதனை (பாயிரத்தை) நோக்குமிடத்து, இவ்வாசிரியர் காலத்தில் அகப்பொருளாகிய களவியலை வெறுத்துக்கொண்டிருந்த ஒரு குழுவினர் நம் தமிழ்

நாட்டில் இருந்திருத்தல் வேண்டும் என்பதும் அவர்கட்கு அதன் சிறப்பினை விளக்கி அவர்கள் கொண்டிருந்த வெறுப்பினைப் போக்க வேண்டியே இவ்வினிய நூலை இவர் இயற்றியிருத்தல் வேண்டும் என்பதும் நன்கு வெளியாகின்றன."

சைவ வைணவருக்கும் பௌத்த சமணருக்கும் அகப்பொருள் பற்றிக் கருத்து வேற்றுமை அக்காலத்தில் இருந்தது. பக்தி இயக்கம் தோன்றிய அக்காலத்தில் அகப்பொருளுக்குப் பேரின்பக் (தெய்வ) காதல் கொள்கையைச் சைவ, வைணவ சமயத்தார் புதியதாகக் கற்பித்துத் தங்கள் சமயத்தில் செய்யுட்களை இயற்றினார்கள். ஆனால், இந்தக் கொள்கையைப் பௌத்த சமயத்தாரும் சமண சமயத்தாரும் ஏற்றுக்கொள்ளாமல் இக்கொள்கைக்கு மாறு பட்டிருந்தார்கள்.

இந்தப் பாயிரச் செய்யுளில் 'ஈடிலா இன்தமிழால் யாத்த திணைமாலை' என்று கூறப்படுகிறது. இதில் 'இன்தமிழ்' என்பது அகப்பொருளைச் சுட்டுகிறது. என்பது தெரிகிறது. ஐந்திணை ஐம்பது என்னும் நூலின் பாயிரச்செய்யுளில் செந்தமிழ் என்பது அகப்பொருளைச் சுட்டுகிறது என்பதைக் கண்டோம்.*

கைந்நிலை

இதுவும் அகத்திணை பற்றிய நூல். ஒவ்வொரு திணைக்கும் பன்னிரண்டு பாடல்களையுடைய அறுபது வெண்பாக்களைக் கொண்ட சிறு நூல். இதன் ஆசிரியர் மாறோக்கத்து முள்ளி நாட்டு நல்லூர்க் காவிதியார் மகனார் புல்லங்காடனார். இச்சிறு நூலிலுள்ள சில வெண்பாக்கள் அழிந்து மறைந்துபோயின. இந்த நூலை 1931ஆம் ஆண்டு திரு. அநந்தராமையர் அவர்கள் அச்சிட்டு வெளியிட்டார்கள். இதுவும் பதினெண்கீழ்க் கணக்கைச் சேர்ந்த நூல் (மயிலை சீனி. வேங்கடசாமி, *19-ம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்*, 1962; பதினெண் கீழ்க்கணக்கு வரலாற்றைக் காண்க).



* அகப்பொருளுக்குத் தமிழ் என்னும் பெயர் இருந்தது என்பதை மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய 'தமிழ் அகம்' என்னும் கட்டுரையில் காண்க: *Journal of Tamil Studies*, No 3, Sep. 1973.

களப்பிரர் காலத்தில் நுண்கலைகள்

களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் நுண்கலைகள் நன்றாக வளர்ந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனால், அந்தக் கலைகளைப் பற்றிய விவரமான செய்திகள் கிடைக்க வில்லை. சங்க காலத்திலே வளர்ந்திருந்த நுண்கலைகளைப் பற்றிச் சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் நூல்களிலிருந்து அறிகிறோம். அதன் பிறகு களப்பிரர் ஆட்சிக் காலத்தில் அந்தக் கலைகள் மேலும் வளர்ந்திருக்க வேண்டும் என்று நம்பலாம். ஆனால், அந்தக் காலத்துக் கலைகளைப் பற்றி அறிவதற்கு ஆதாரமான சான்றுகள் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள சான்றுகளும் குறைவாகவே கிடைத்துள்ளன. நுண்கலை என்னும் அழகுக்கலைகளை ஐந்தாகக் கூறுவர். அவை கட்டடக் கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்பவை. நமது நாட்டுச் சிற்பக்கலை நூல்கள் கட்டடக்கலையையும் சிற்பக்கலையையும் ஒன்று சேர்த்துச் சிற்பக்கலை என்றே கூறுகின்றன. இசைக்கலை என்பதில் கூத்தும் நாடகமும் அடங்கும். களப்பிரர் காலத்தில் இருந்த இந்த நுண்கலைகளைப் பற்றிப் பார்ப்போம்.

கட்டடக்கலை

சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகிய நான்கு மதங்களும் இருந்த களப்பிரர் காலத்துத் தமிழகத்தில் கட்டடக்கலை வளர்ந்திருக்க வேண்டும். இந்த மதங்களின் கோயிற் கட்டடங்கள் கட்டாயம் இருந்திருக்க வேண்டும். அந்தக் கட்டடங்கள் செங்கல், சுண்ணாம்பு, மரம், இரும்பு ஆகிய பொருள்களைக் கொண்டு கட்டப்பட்டவையாகையால் அவை இக்காலத்தில் நிலைபெற்றிருக்கவில்லை. கருங்கற்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படுகிற கற்றளிக் கோயில் கட்டடங்களும் பாறைகளைக் குடைந்து அமைக்கப்படும் குகைக் கோவில்களும் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் உண்டாக வில்லை. அவை பிற்காலத்தில் முதல் மகேந்திரவர்மன் காலத்தில் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் உண்டாக்கப்பட்டவை. (பிள்ளையார் பட்டி குகைக்கோவில் களப்பிரர் காலத்தில் உண்டாக்கப்பட்ட குகைக்கோயிலாக இருக்கலாமோ என்னும் ஐயம் தோன்றுகிறது. இதுபற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும்.)

களப்பிரர் ஆட்சிக் காலத்துக்குப் பிறகு கி.பி. 7ஆம் நூற்றாண்டில் இருந்த திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் தங்களுடைய தேவாரப் பதிகங்களில் கூறுகிற கோவிற் கட்டட வகைகளான கரக்கோவில், நாழற்கோவில், கோகுடிக்கோவில், பெருங்கோவில், இளங்கோவில், மாடக்கோவில், தூங்கானை மாடம், மணிக்கோவில் முதலான கட்டட வகைகள் களப்பிரர் காலத்திலேயே தோன்றி இருக்கவேண்டும். ஏனென்றால், இந்தக் கட்டட வகையெல்லாம் திடீரென்று 7ஆம் நூற்றாண்டிலே தோன்றியிருக்க முடியாது. அக்காலத்தில் அவை செங்கற் கட்டடங்களாக இருந்தன. கி.பி. 7ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் முதல் மாமல்லன் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ அரசன் காலத்தில் மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்ட பஞ்ச பாண்டவ ரதங்கள் முதலான கோவில் அமைப்புகள் அவன் காலத்துக்கு முன்பு களப்பிரர் ஆட்சிக் காலத்தில் அல்லது அதற்கு முன்பு இருந்த செங்கற்கட்டடங்களின் மாதிரியைக் காட்டுகிற பாறைக்கல் அமைப்புகள். இந்தப் பாறைக் கற்கோவில்களில் பல அகநாழிகை (கர்ப்பக்கிருகம்) இல்லாமலே கட்டடத்தின் மேற்புறத் தோற்றம் மட்டும் பாறைக் கல்லில் அமைத்துக் கட்டப்பட்டுள்ளன. ஆகையால், மாமல்லபுரத்து இரதக் கோவில்கள், செங்கற்கட்டடங்களாக இருந்த பழைய கோவில் களின் தத்ரூப உருவ அமைப்புகள் என்பதில் ஐயமில்லை.

களப்பிரர் ஆட்சிக் காலத்தில் பௌத்தரும் சமணரும் பள்ளி களையும் விகாரைகளையும் கட்டியிருந்தனர். அந்தக் கட்டடங் களின் உருவ அமைப்பும் இந்தக் கட்டடங்களின் அமைப்புப் போலவே இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. சமண சமயக் கோவில்களுக்குச் சினகரம் என்று பெயர் இருந்தது (ஜினன் + நகரம் = ஜினகரம், சினகரம்). விஷ்ணுவின் கோயிலுக்கு விண்ணகரம் என்று பெயர் இருந்தது. சமண, பௌத்தக் கோவிலுக்குச் சேதியம் என்னும் பெயரும் உண்டு. பௌத்தப் பிக்குகள் இருந்த ஆசிரமம் அல்லது விகாரைகள் பெரிய கட்டடங்கள். அவை காஞ்சி, நாகை, உறையூர், காவிரிப்பூம் பட்டினம் முதலான நகரங்களில் இருந்தன. காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்த பௌத்த விகாரை, நெடுஞ்சுவர்களும் பெரிய வாயில்களும் உடையதாக வெண்சுதை பூசப்பெற்றுக் கயிலாயம் போன்று இருந்ததென்றும் அது சுண (கண்ண) தாசன் என்னும் அமைச்சனால் (களப்பிர அரசனுடைய அமைச்சன்) கட்டப்பட்டதென்றும் *அபிதம்மாவதாரம்* என்னும் பௌத்த மத நூல் கூறுகிறது. சோழ நாட்டில் பூதமங்கலம் என்னும் ஊரில் இருந்த பௌத்த விகாரையைக் கட்டியவர் வேணுதாசர் (விஷ்ணுதாசர்) என்று *வினயவினிச்சயம்* என்னும் நூல் கூறுகிறது. இவையெல்லாம் செங்கற்கட்டடங்களே.

சிற்பக்கலை

சிற்பக்கலை என்பது தெய்வங்கள், மனிதர், மிருகம், பறவை, மரம், செடி, கொடி முதலியவைகளின் உருவங்களைச் சுதை, மரம், கல் முதலியவற்றில் அமைப்பது. சிற்பக்கலையையும் கட்டடக் கலையையும் சிற்பம் என்றே நமது நாட்டுக் கலை நூல்கள் கூறுகின்றன. களப்பிரர் காலத்துச் சிற்பங்களும் கிடைக்கவில்லை. சுதை, மரங்களினால் செய்யப்பட்டபடியால் அவை அழிந்து போயின. கருங்கல்லில் சிற்பவடிவங்கள் புடைப்புச் சிற்பமாக (புடைப்புச் சிற்றம் - Basrelief) அமைக்கப்பட்டன.

ஓவியக்கலை

ஓவியம் என்பது சித்திரம். ஓவியம் பலவித நிறங்களினால் எழுதப்பட்டது. அந்தக் காலத்து ஓவியங்கள் பெரும்பாலும் சுவர்களில் எழுதப்பட்ட சுவர் ஓவியங்களே. பௌத்த, சைன விகாரைகளிலும் பள்ளிகளிலும் கோவில்களிலும் சுவர் ஓவியங்கள் எழுதப்பட்டன. கடைச்சங்க காலத்தில் திருப்பரங் குன்றத்தின் மேல் இருந்த முருகக் கடவுளின் ஆலயத்தின் மண்டபச் சுவர்களில் வண்ண ஓவியங்கள் எழுதப்பட்டிருந் ததைப் *பரிபாடல்* கூறுகிறது. 'சுவரை வைத்தல்லவோ சித்திரம் எழுத வேண்டும்' என்னும் பழமொழி, கட்டடச் சுவர்களில் சித்திரங்கள் எழுதப்பட்டதைத் தெரிவிக்கிறது. படத்தில் (படம் - துணி) சித்திரம் எழுதும் பழக்கமும் இருந்தது. படம் என்னும் சொல் துணியில் எழுதப்பட்ட ஓவியத்துக்குப் பெயராம். இக் காலத்தில் பலகை, காகிதம் ஆகிய பொருள்களில் எழுதப்பட்ட ஓவியங்களுக்குப் படம் என்று கூறப்படுகிறது. ஓவியக்கலை எளிதில் மறைந்துவிடக்கூடிய இயல்புடையது. களப்பிரர் காலத்துக் கட்டடங்கள் அழிந்து போனபடியால் அக்காலத்துச் சுவர் ஓவியங்களும் மறைந்து போயின. துணியில் எழுதப்பட்ட படங்களும் மறைந்து போயின.

இசைக்கலை

நுண்கலைகளில் ஓவியக்கலைக்கு அடுத்தபடியாகக் கூறப் படுவது இசைக்கலை. இசையில் யாழ், குழல், முழவு முதலான இசைக் கருவிகளும் அடங்கும். இசைக்கலையோடு கூத்துக் (நாடகம்) கலையும் அடங்கும். கூத்துக்கலையைப் பரத நாட்டியம் என்று இக்காலத்தில் வழங்குகிறோம். இசையும் கூத்தும் சங்க காலத்திலே பெரிதும் வளர்ந்திருந்ததைச் *சிலப்பதிகாரத்தினால்* அறிகிறோம். களப்பிரர் காலத்தில் இந்தக் கலைகள் மேலும் வளர்ந்திருந்தன என்பதை அறிகிறோம். களப்பிரர் காலத்தில் இருந்த காரைக்கால் அம்மையார் பதிகம் என்னும் இசைப்

பாடலைப் பாடியுள்ளார். தேவாரப் பதிகங்கள் இசைப்பாடல்களே. தேவாரப் பதிகங்களைப் பாடிய அப்பர், சம்பந்தர் காலத்துக்கு முன்னே களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இருந்த காரைக்கால் அம்மையார் முதல்முதல் பதிகம் (இசைப்பாடல்) பாடினார். அவர் பாடியவை இரண்டு பதிகங்கள். அவை திருவாலங்காட்டுச் சிவபெருமான் மேல் பாடப்பட்டவை. அப்பதிகங்களுக்கு *திருவாலங்காடு மூத்த திருப்பதிகங்கள்* என்று பெயர். திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் ஆகிய சைவ சமயக் குரவர்கள் பதிகம் பாடுவதற்கு முன்பு பாடியதால் இப்பதிகங்களுக்கு *மூத்த திருப்பதிகங்கள்* என்று பெயர் உண்டாயிற்று. முதல் பதிகத்தின் பண் நட்டபாடை. இரண்டாம் பதிகத்தின் பண் இந்தளம். காரைக்கால் அம்மையார் பாடிய முதலாம் *மூத்த திருப்பதிகத்தில்* 9ஆம் பாடலில் பண்களின் பெயர்களையும் இசைக்கருவிகளின் பெயர்களையும் கூறுகிறார். அப்பாடல் வருமாறு:

துத்தம் கைக்கிளை விளரி தாரம் உழை இளி
ஓசை பண்கெழுமப் பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு தகுணிச்சற்
துந்துமி தாளம் வீணை
மத்தளங் காடிகை முன்கை மென்தோல் தமருகம்
குடமுழா மொந்தை வாசித்
தத்தனமை வினோ டாடு மெங்கள்
அப்பனிடம் திருவாலங்காடே

களப்பிரர் காலத்தில் இசைக்கலை முன்பிருந்ததைவிட அதிக வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அவற்றின் விவரம் தெரியவில்லை.

கூத்துக்கலையும் களப்பிரர் காலத்தில் வளர்ந்திருந்தது. இசையும் கூத்தும் தமிழரின் பழமையான செல்வங்கள். சங்க காலத்தில் இசையும் கூத்தும் வளர்ந்திருந்ததைச் *சிலப்பதிகாரம்*, *மணிமேகலை* என்னும் இரண்டு காவியங்களினால் அறிகிறோம். களப்பிரர் காலத்தில் கூத்துக்கலையும் இசைக்கலையைப் போலவே வளர்ந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. களப்பிரர் காலத்தில் கூத்துக்கலையைப் பற்றி ஒரு நூல் எழுதப்பட்டிருந்தது. அந்நூலை எழுதியவர் விளக்கத்தார் (விளக்கத்தனார்) என்பவர். அந்நூலின் பெயர் *விளக்கத்தனார் கூத்து* என்பது. அது அச்சுதன் என்னும் களப்பிர அரசன் காலத்தில் எழுதப்பட்டது. அந்நூலின் கடவுள் வாழ்த்துக் கிடைத்திருக்கிறது (இணைப்பு 1இல் காண்க). ~~அந்நூலின் கடவுள்~~ வாழ்த்தைத் தவிர பிற பகுதிகள் முழுதும் கிடைக்கவில்லை (மயிலை சினி. வேங்கடசாமி, *மறைந்து போன தமிழ் நூல்கள்*, 1967, பக்கம் 221; *விளக்கத்தனார் கூத்து* காண்க).

காவியக்கலை

ஐந்து நுண்கலைகளில் மிகவும் சிறந்தது காவியக்கலை. கட்டடக்கலையும் சிற்பக்கலையும் ஓவியக்கலையும் கண்ணால் கண்டு இன்புறத்தக்கவை. இசைக்கலை காதால் கேட்டு இன்புறுவது. காவியக்கலை அறிவினால் உணர்ந்து இன்புறத்தக்கது. ஆகவே, காவியக்கலை அழகுக் கலைகளில் சிறந்தது என்பர்.

காவியத்தில் ஒன்பது வகையான சுவைகளைக் (நவரசங்களை) காணலாம். களப்பிரர் காலத்துக் காவியங்களில் தலைசிறந்தது சீவகசிந்தாமணி. அதற்கு அடுத்ததாக உள்ளது பெருங்கதை எனப்படும் உதயணன்கதை. கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பன் சிந்தாமணிக் காவியத்திலிருந்து பல கருத்துக்களை முகந்து கொண்டான் என்பர். பெருங்கதையில் அதிகமாகத் திரிசொற்கள் இருப்பதனால் அதனைப் படித்து விளங்கிக்கொள்வது சற்றுக் கடினந்தான். பலாப்பழத்தை அறுப்பது கடினம். பிசுபிசுப்பையும் அதனுள்ளிருக்கும் நார்களையும் அப்புறப்படுத்துவதும் கடினம். பிறகு பலாச்சுளைகளை உண்பது இன்பம். அதுபோலத்தான் பெருங்கதையைப் படித்து இன்புறுவதும். களப்பிரர் காலத்தில் உண்டான இந்தச் சிந்தாமணியும் பெருங்கதையும் சமணர் செய்த காவிய நூல்களாகும்.

இணைப்பு – 1

களப்பிரர் பற்றிய வாழ்த்துப் பாக்கள்

1

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

(தரவு)

கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைஇ
அழலவிர் சுழல்செங்கண் அரிமாவாய் மலைந்தானைத்
தாரோடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
ஆர்புனல் இழிகுருதி அகலிடம் உடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்!

(தாழிசை)

முரைசதிர் வியன்மதுரை முழுவதூஉம் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியோடு முடியிறுப்புண் டயர்ந்தவன் நிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்துநின் புகழாமோ?

கவியொலி வியனுலகம் கலந்துட னனிநடுங்க
வலியியல் அவிராழி மாறெதிர்ந்த மருட்கோவும்
மாணாதார் உடம்போடு மறம்பிதிர வெதிர்கலங்கச்
சேணுயர் இருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ?

படுமணி இனநிரைகள் பரந்துடன் இரிந்தோடக்
கடுமுரண் எதிர்மலைந்த காரொலி எழிலேறு
வெரிநொடு மருப்பொசிய வீழ்த்துதிறல் வேறாக
எருமலி பெருந்தொழுவின் இறுத்ததுநின் இல்லாமோ?

(அம்போதரங்கம்)

(பேரெண்)

இலங்கொளி மரகதம் எழில்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅல் நின்னிறம்
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய்! புரையும் நின்னுடை

(சிற்றெண்)

கண்கவர் கதிர்மணி கனலும் சென்னியை
தன் சுடர் உறுபகை தவிர்த்த ஆழியை

ஒலியியல் உவணம் ஒங்கிய கொடியினை
வலிமிகு சகடம் மாற்றிய அடியினை

(இடையெண்)

போரவுணர்க் கடந்தோய் நீ
புணர் மருதம் பிளந்தோய் நீ
நீரகிலம் அளந்தோய் நீ
நிழல்திகழும் படையோய் நீ

(அளவெண்)

ஊழி நீ உலகு நீ உருவு நீ அருவு நீ
ஆழி நீ அருளு நீ அறமு நீ மறமு நீ

(தனிச்சொல்)

எனவாங்கு

(சுரிதகம்)

அடுதிறல் ஒருவநிற் பரவுதும் எங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழில் மார்பிற்
கயலொடு கிடந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்
தொன்று முதிர்கட லுலகம் முழுதுடள்
ஒன்றுபுரி திகிரி உருட்டுவோன் எனவே.

2

தலையளவு அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா பெருதேவபாணி

(தரவு)

அலைகடற் கதிர்முத்தம் அணிவயிரம் அவையணிந்து
மலையுறைமா சுமந்தேந்தும் மணியணைமேல் மகிழ்வெய்தி
ஓசனைசூழ் திருநகருள் உலகொருமூன் றுடனேத்த
ஈசனையாய் இனிதமர்ந்தங் கிருடிகட்கும் இறையவர்க்கும்
அருளறமே அறமாக அயலார்கண் மயலாக
இருளறநன் கெடுத்தியம்பி இருவினை கடிந்திசினோய்!

(தாழிசை)

துன்னாத வினைப்பகையைத் துணிசெய்யும்
துணிவினையாய்
இன்னாத பகைமுனைபோல் எரித்தடக்கும்
நினைப்பினால்
இருளில்லா உணர்வென்னும் இலங்கொளியால்
எரித்தனையாய்
அருளெல்லாம் அடைந்தெங்கண் அருளுவதுன்
அருளாமோ?

மதிபுரைமுக் குடைநீழல் மகிழ்வெய்தி அடைந்தோரைக்
கதிபொருதக் கருவரைமேல் கதிர்பொருத முகம்வைத்துக்
கொன்முனைபோல் வினைநீங்கக் குளிர்நிழற்கண்
மகிழ்ந்தனிர்போல்
நின்மினீர் எனவுணர்த்தல் நிருமல நின் பெருமையோ?

மனைதுறந்து வனம்புகுமின் மலமறுக்கல் உறுவீரேல்
வினையறுக்கல் உறுவார்க்கு விழுச்செல்வம் பழுதென் றீங்
கலகில்லாப் பெருஞ்செல்வத் தமரரசர் புடைசூழ
உலகெல்லாம் உடன்றுறவா உடைமையுநின் உயர்வாமோ

(அராகம்)

அரசரும் அமரரும் அடிநிழல் அமர்தர
முரசதிர் இமிழிசை முரணிய மொழியினை

(அம்போதரங்கம்)

(பேரெண்)

அணிகிளர் அவிர்மதி அழகெழில் அவிர்சுடர்
மணியொளி மலமறு கனலி நின்னிறம்
மழையது மலியொலி மலிகடல் அலையொலி
முழையுறை அரியது முழக்கம் நின்மொழி

(இடையெண்)

வெலற்கரும் வினைப்பகை வேரொடும் வென்றனை
சொலற்கரு மெய்ப்பொருள் முழுவதும் சொல்லினை
அருவினை வெல்பவர்க் கரும்புணை ஆயினை
ஒருவினை ஆகி உலகுடன் உணர்ந்தனை

(சிற்றெண்)

உலகுடன் உணர்ந்தனை
உயிர்முழு தோம்பினை
நிலவுறழ் நிலத்தனை
நிழலியல் ஆக்கையை
மாதவர் தாதையை
மலர்மிசை மகிழ்ந்தனை
போதிவர் பிண்டியை
புலவருட் புலவனை

(தனிச்சொல்)

எனவாங்கு

(சுரிதகம்)

அருளுடை ஒருவர் நிற் பரவுதும் எங்கோ
இருளறு திகிரியொடு வலம்புரித் தடக்கை
ஒருவனை வேண்ட இருநிலம் கொடுத்த

நந்தி மால்வரைச் சிலம்பு நந்தி
ஒற்றைச் செங்கோல் ஓச்சிக்
கொற்ற வெண்குடை நிழற்றுக எனவே.

3
அம்போதரங்க ஒரு போகு

(தாழிசை)

கரைபொருநீர்க் கடல்கலங்கக் கருவரைமத் ததுவாகத்
திரைபொருது புடைபெயரத் திண்டோளாற்
கடைந்தனையே
முகில்பொரு துடல்கலங்க முழவுத்தோள் புடைபெயர
அகல்விசும்பின் அமரர்க்கும் ஆரமுதல் படைத்தனையே
வரைபெரிய மத்தாக வாளரவம் கயிறாகத்
திரையிரியக் கடல்கடைந்து திருமகளைப்
படைத்தனையே

(அராகம்)
(பேரெண்)

அமரரை அமரிடை அமருல கதுவிட
நுமரது புகழ்மிக மிகவிகல் அடுத்தனை
அலைகடல் உலகமும் அந்தணர்க் கீந்தனை
உலகொடு நிலவிய ஒருபுகழ் சுமந்தனை

(இடையெண்)

ஆதிக்கண் அரசெய்தினை
நீதிக்கண் மதிநிரம்பினை
விளங்கெரி முதல்வேட்டனை
துளங்கெரியவர் புகழ்துளக்கினை

(அளவெண்)

அலகு நீ உலகு நீ அருளு நீ பொருளு நீ
நிலவு நீ வெயிலு நீ நிழலு நீ நீரு நீ
(தனிச் சொல்)
எனவாங்கு
(சுரிதகம்)

பவழம் எறிதிரைப் பரதைக் கோவே!
புகழ்துறை நிறைந்த பொருவேல் நந்தி!
உலகுடன் அளந்தனை நீயே,
உலகொடு நிலவுமதி உதயவரை ஒத்தே.

4
வண்ணக ஒரு போகு

(அராகம்)

அகலிடமும் அமருலகும் அமர்பொருதும் அறந்தோற்றுப்
புகலிடநின் குடைநிழலாப் புகுமரணம் பிறிதின்றி
மறந்தோற்று நிறங்கருகி மாற்புகழும் நிறைதளரப்
புறந்தோற்றுக் கழலார்ப்பப் பொருதகளம் வெறிதாக
மண்ணுலகும் மறிகடலும் மாமலையும் நிலைகலங்க
விண்ணுலகம் வியப்பெய்த வெஞ்சமத்துள்
அலைத்தனையே

அதனால்,
கனைகடல் உடைதிரை கரைபொரக் கடைந்தன
முனைவரும் அமரரும் முறைமுறை வந்துநின்
இணைமலர் பலர்புகழ் பயில்வருதார் பண்பினை
மருளுறு துதைகதிர் மணியது
மணிநிற மருளும் நின்குடை
குடையது குளிர்நிழல் அடைகுன
உயிர்களை அளிக்கும் நின்கோல்
கோலது செம்மையிற் குரைகடல் வளாகம்
மாலையும் காலையும் மகிழ்தூங் கின்று.

(பேரெண்)

ஆருயிர்க் கெல்லாம் அமிழ்தின் றமையா
நீரினும் இனிதுநின் அருள்
அருளும் அலைகடலும் ஆயிரண்டும் ஒக்கும்
இருள்கொடிமேற் கொண்டாய் நினக்கு

(சிற்றெண்)

நீரகலம் காத்தோய் நீ
போரமர் கடந்தோய் நீ
ஒற்றைவெண் குடைபோய் நீ
பாகையந் துறைவனீ
நீலவுலகம் ஈந்தோய் நீ
புனையெரிமுன் வேட்டோய் நீ
கொற்றச்செங் கோலாய் நீ
பரியவர் இறைவனீ.

(தனிச்சொல்)

எனவாங்கு

(சுரிதகம்)

பொருகடல் வளாகம் ஒருகுடை நிழற்றி
இருபிறப் பாளர்க் கிருநிதி ஈந்து
மனமகிழ்ந்து
அருள்புரி பெரும்புகழ் அச்சுதர் கோவே!
இனையை ஆதலின் பனிமதி தவழும்
நந்தி மாமலைச் சிலம்ப
நந்திநிற் பரவுதல் நாவலர்க் கரிதே!

5
அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

(தரவு)

நலங்கிளர் திருமணியும் நன்பொன்னும் குயின்றழகார்
இலங்கெயிற் றழலரிமான் எருத்தஞ்சேர் அணையின்மேல்
இருபுடையும் இயக்கரசர் இணைக்கவரி எடுத்தெறிய
விரிதாமம் துயரருஉம் வெண்குடைமூன் றுடனிழற்ற
வண்டாற்ற நாற்காதம் வகைமாண உயர்ந்தோங்கும்
தண்டளிர்ப்பூம் பிண்டிக்கீழ்த் தகைபெறவீற்
றிருந்தனையே

(தாழிசை)

ஒல்லாத பிறப்புணர்த்தும் ஒளிவட்டம் புடைசூழ
எல்லார்க்கும் எதிர்முகமாய் இன்பஞ்சேர் திருமுகமோ
ஏர்மலர மணிப்பொய்கை எழிலாம்பற் பொதியவிழ
ஊர்கோளோ டுடன்முளைத்த ஒளிர்வட்டம்
உடைத்தன்றே!

கனல்வயிரம் குறடாகக் கனற்பைம்பொன் சூட்டாக
இனமணி ஆரமா இயன்றிருள் இரிந்தோட
அந்தரத் துருளுநின் அலர்கதிர் அறவாழி
இந்திரர்கள் இனிதேத்த இருவிசும்பிற் றிகழ்ந்தன்றே!

வாடாத மணமாலை வானவர்கள் உள்ளிட்டார்
நீடாது தொழுதேத்த நிற்சேர்ந்த பெருங்கண்ணு
முகிழ்பருதி முகநோக்கி முறுவலித் துண்ணெகிழ்ந்து
திகழ்தகைய கோட்டைசூழ் திருநதிகள் திளைத்தன்றே!

(அம்போதரங்கம்)

(பேரெண்)

மல்லல் வையம் அடிதொழு தேத்த
அல்லல் நீக்கற் கறப்புனை ஆயினை
ஒருதுணி வழிய உயிர்க்காண் ஆகி
இருதுணி ஒருபொருட் கியல்வகை கூறினை

(இடையெண்)

ஏடலர் தாமரை ஏந்தும் நின்னடி
வீடொடு கட்டினை விளக்கும் நின்மொழி
விருப்புறு தமனிய விளக்கு நின்னிறம்
ஒருக்குல கூடுற உளுற்றும் நின்புகழ்

(சிற்றெண்)

இந்திரர்க்கும் இந்திரன் நீ இணையில்லா இருக்கையை நீ
மந்திர மொழியினை நீ மாதவர்க்கு முதல்வனும் நீ

அருமை சால் அறத்தினை நீ ஆருயிரும் அளித்தனை நீ
பெருமைசால் குணத்தினை நீ பிறர்க்கறியாத் திறத்தினை நீ

(தனிச்சொல்)
எனவாங்கு

(சுரிதகம்)
அருள்நெறி ஒருவ! நிற் பரவுதல் எங்கோத்
திருமிகு சிறப்பிற் பெருவரை அகலத்
தென்மிகு தானைப் பண்ணமை நெடுந்தேர்
அண்ணல் யானைச் செங்கோல் விண்ணவன்
செபிமனை செறுக்கறத் தொலைச்சி
ஒருதனி வெண்குடை ஓங்குக எனவே.*

---

* இந்தப் பழைய செய்யுட்கள் யாப்பருங்கலம் பழைய விருத்தி யுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

வச்சிரநந்தியின் திரமிள சங்கம்

மூன்று வகையான சங்கங்கள்

களப்பிரர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் (கி.பி. 470ஆம் ஆண்டில்) மதுரை நகரத்தில் திரமிள (திராவிட- தமிழ) சங்கத்தை வச்சிரநந்தி அமைத்தார் என்று அறிந்தோம். வச்சிரநந்தி ஏற்படுத்திய சங்கம் சைன மதத்தை வளர்ப்பதற்கான சங்கமாகும் (சங்கம் - கூட்டம்). பௌத்தப் பிக்குகளின் கூட்டத்துக்குப் பௌத்த சங்கம் என்பது பெயர். பௌத்தப் பிக்குகளின் சங்கத் தலைவர் சங்கபாலர் என்று பெயர் கூறப்பெற்றார். பௌத்தர் களுடைய மும்மணிகளில் பௌத்தப் பிக்குகளின் சங்கமும் ஒன்று. *சங்கம் சரணம் கச்சாமி* என்பது காண்க. இதன் பொருள் பௌத்த சங்கத்தைச் சரணம் அடைகிறேன் என்பது. சைனத் துறவிகளின் கூட்டத்துக்கும் சங்கம் என்பது பெயர். சங்கத்தைச் (கூட்டத்தை) சைனர் கணம் என்றும் கூறுவர். கணம் என்றாலும் சங்கம் என்றாலும் ஒன்றே. களப்பிரர் ஆட்சிக்கு முன்னே பாண்டியர் தமிழ் மொழியை ஆராய்வதற்குப் புலவர்களின் கூட்டத்தை ஏற்படுத்தினார்கள். அந்தக் கூட்டத்துக்குத் தமிழ்ச் சங்கம் என்பது பிற்காலத்துப் பெயர். அதன் பழைய பெயர் தமிழ்க் கழகம் என்பது. பிற்காலத்துப் பாண்டியர் அமைத்திருந்த சங்கம் மதச் சார்பான சங்கம் அன்று. அது தமிழ் மொழியை ஆராய்வதற்கு ஏற்பட்ட சங்கம். அந்தச் சங்கத்தில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் ஆராயப்பட்டது. சங்கப் புலவர்கள் முக்கிய மாக அகத்தையும் (காதலையும்) புறத்தையும் (போர் அல்லது வீரத்தையும்) ஆராய்ந்து செய்யுட்களை இயற்றினார்கள்.

சைன சங்கம்

சைன சமயத்திலே பழங்காலத்தில் சைனத் துறவிகளின் கூட்டம் பெரிதாக இருந்தது. சைனத் துறவிகளின் சங்கத்தை அக்காலத்தில் நான்கு பிரிவாகப் பிரித்திருந்தார்கள். அந்தப் பிரிவுகளுக்கு நந்திகணம், சேனகணம், சிம்மகணம், தேவகணம் என்று பெயர். ஒவ்வொரு கணத்திலும் கச்சை என்றும் அன்வயம் என்றும் உட்பிரிவுகள் இருந்தன. இந்த நான்கு கணங்களிலே நந்திகணம் பேர் போனது. வச்சிரநந்தி ஆசாரியர் நந்திகணத்தை

இரண்டாகப் பிரித்தார். புதிய பிரிவுக்குத் திராவிடகணம் (தமிழ சங்கம்) என்று பெயர் இட்டு அதனை மதுரையில் அமைத்து நிறுவினார். இது கி.பி. 470இல் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் நடந்தது. இதுதான் வச்சிரநந்தி அமைத்த திரமிள சங்கம். இந்தத் திரமிள சங்கத்தில் சைன சமயத் துறவிகள் மட்டுமே இருந்தார்கள். இவர்களுடைய வேலை, முன்னமே சொல்லியது போல சைன சமயத்தைப் பரப்பியதாகும்.

வச்சிரநந்தியின் தமிழ்ச் சங்கம் கி.பி. 470இல் நிறுவப்பட்டது என்று வரலாற்று ஆசிரியர் எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால், *பழங்கால இந்திய வரலாற்றுக்குச் சைன மூலங்கள்* என்னும் நூலை எழுதிய ஜியோதி பிரசாத் ஜெயின், வச்சிரநந்தி திராவிட சங்கத்தை அமைத்தது கி.பி. 604ஆம் ஆண்டு என்று கூறுகிறார் (Jyoti Prasad Jain, *The Jaina Sources of the History of Ancient India (100 B.C. - 900 A.D.)*, 1964, pp. 160, 167). இவர் கூறுவது தவறு. விக்கிரம ஆண்டு 526 என்பதை சாலிவாகன ஆண்டு 526 என்று கணக்கிடுவதால் இவர் தவறுபடுகிறார். விக்கிரம ஆண்டு 526 என்பது கி.பி. 470 அல்லது 469 ஆகும். சாலிவாகன சகம் 526 என்று கணக்கிட்டால் அது கி.பி. 604 ஆகிறது. வச்சிரநந்தி விக்கிரம ஆண்டு 526இல் (கி.பி. 470) மதுரையில் தமிழச் சங்கத்தை நிறுவினார் என்பதே சரியாகும். களப்பிரர் ஆட்சி ஏறத்தாழ கி.பி. 575இல் முடிந்துவிட்டது. களப்பிரர் ஆட்சிக்குப் பிறகு கி.பி. 604இல் வச்சிரநந்தி மதுரையில் தமிழச் சங்கம் நிறுவியிருக்க முடியாது. எனவே, வச்சிரநந்தி கி.பி. 470இல் திராவிட சங்கத்தை நிறுவினார் என்பதே சரி எனத் தோன்றுகிறது.

முற்காலத்தில் பாண்டியர் மதுரையில் மொழி வளர்ச்சிக்காக அமைத்த சங்கம் வேறு, பிற்காலத்தில் சைன சமய வளர்ச்சிக்காக வச்சிரநந்தி ஆசாரியர் ஏற்படுத்திய சங்கம் வேறு. வெவ்வேறான இரண்டு சங்கங்களையும் ஒன்று எனக் கருதுவது தவறு. திரு. பி.தி. சீனிவாச அய்யங்கார் *தமிழர் வரலாறு* என்னும் நூலில் இது பற்றித் தெளிவாகவும் சரியாகவும் எழுதியுள்ளார். "இது (வச்சிரநந்தியின் திரமிள சங்கம்) நாம் அறிந்துள்ள தமிழ்ச் சங்கம் (பாண்டியரின் தமிழ்ச் சங்கம்) அன்று; சாதாரண மக்களுக்கு சைன மதத்தைப் போதிப்பதற்காகத் தமிழ்நாட்டில் சைன சமயத்தாரால் அமைக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்" என்று அவர் எழுதியுள்ளார் (P.T. Srinivasa Iyangar, *History of the Tamils*, 1929, p. 247).

திரு. எம்.எஸ். இராமசாமி அய்யங்கார் இது சம்பந்தமாக வரலாற்றுக்கு மாறுபட்ட கருத்தைக் கூறுகிறார். களப்பிரர் ஆட்சிக்கு முன்பே, பாண்டியர் ஆட்சிக் காலத்திலேயே வச்சிரநந்தி மதுரையில் திராவிட சங்கத்தை அமைத்தார் என்று இவர் கூறுகிறார். இவர் கூறுவது வருமாறு:

"திகம்பர தர்சனம் என்னும் சைன சமய நூல் ஒரு பெரிய செய்தியைக் கூறுகிறது. விக்கிரம ஆண்டு 526இல் (கி.பி. 470) பூச்சிய பாதரின் மாணாக்கரான வச்சிரநந்தி என்பவர் தென் மதுரையிலே ஒரு திராவிட சங்கத்தை நிறுவினார் என்று அந்த நூல் கூறுகிறது. சைன சமயத்தைப் பரப்புவதற்காகத் தெற்கே வந்த திகம்பர சைனரின் கூட்டந்தான் அந்தச் சங்கம் என்று அந்த நூலிலிருந்து அறிகிறோம். பாண்டிய நாட்டை அரசாண்ட அரசர்களின் ஆதரவு இல்லாமற் போனால், சைன சமயத்தார் கொடுந் தண்டனை கொடுக்கப்பட்ட அந்த நாட்களிலே, ஒரு சங்கத்தை நிறுவியிருக்கமாட்டார்கள். இந்தச் சங்கம் அமைக்கப்பட்டதில் (பாண்டிய) அரசருடைய ஆதரவு சைனருக்கு இருந்தது என்பதையறிகிறோம். இந்த ஆதரவு பிராமணியத்தின் தலைவர்களுக்குப் பொறாமையை உண்டாக்கியிருக்கவேண்டும். அதனால் சமயச் சண்டை உண்டாகித்தான் இருக்கவேண்டும். ஆனால், தற்காலிகமாகச் சமயப் பூசல் தள்ளிவைக்கப்பட்டது. இந்த வச்சிரநந்தியின் சங்கம் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது என்பதை யறிந்தோம். கி.பி. 6ஆம் நூற்றாண்டு தொடங்கியபோது, தமிழகத்தின் அரசியலில் விரைவான மாறுதல்கள் ஏற்பட்டன. களப்பிரரின் படையெடுப்பும் அவர்கள் பாண்டி நாட்டைக் கைப்பற்றியதும் இந்தக் காலத்தில்தான் நேரிட்டன" (M.S. Ramaswami Ayyangar, *Studies in South Indian Jainism*, 1922, pp. 52-53).

பாண்டியருடைய ஆட்சிக் காலத்திலே வச்சிரநந்தி திராவிட சங்கத்தை அமைத்தார் என்றும் அதைப் பாண்டியரின் ஆதரவு பெற்று அமைத்தார் என்றும் வச்சிரநந்தி இந்தச் சங்கத்தை அமைத்த பிறகுதான் களப்பிரர் தமிழகத்தில் வந்து தங்களுடைய ஆட்சியை நிலைநிறுத்தினார்கள் என்றும் ஐயங்கார் கூறுகிறார். இவர் கூற்று வரலாற்றுக்கு முற்றிலும் மாறுபடுகிறது. கி.பி. 470இல் வச்சிரநந்தி திராவிட சங்கத்தை ஏற்படுத்தினார். அந்தக் காலத்தில் பாண்டி நாட்டில் பாண்டியர் ஆட்சி இல்லை, களப்பிரர் ஆட்சி தான் இருந்தது. பாண்டிய, சேர, சோழர்களின் ஆட்சி கடைச்சங்க காலத்தின் இறுதியிலே, ஏறத்தாழக் கி.பி 250இல் முடிவடைந்து விட்டது. ஆகவே, பாண்டியர் ஆட்சிக் காலத்திலேயே வச்சிரநந்தி திராவிட சைன சங்கத்தை அமைத்தார் என்று இவர் கூறுவது தவறு.

இனி, திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் வச்சிர நந்தியின் திராவிட சங்கத்தைப்பற்றிக் கூறுவதைப் பார்ப்போம். இவர் கூறுகிற சில கருத்துக்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம். *தொல்காப்பியம்* வச்சிரநந்தியின் திராவிட சங்கத்தில் எழுதி வெளியிடப்பட்ட நூல் என்று வையாபுரியார் எழுதுகிறார். இதற்குச் சான்று, *தொல்காப்பியத்தில்* ஓரை என்னுஞ்சொல் காணப்படுகிறதாம்! இவர் இதுபற்றி எழுதுவது வருமாறு:

"வச்சிரநந்தியின் பேர்போன சங்கம் கி.பி. 470இல் நிறுவப் பட்டது. தொல்காப்பியம் அந்தச் சங்கத்திலிருந்து வெளிவந்த முதல் இலக்கியமாக இருக்கக்கூடும். இதன் ஆசிரியர் ஓரை என்னும் சொல்லை (பொருள் 135) ஆள்கிறார். ஓரை (சமஸ்கிருத ஹோரா) என்னும் சொல்லைக் கிரேக்க மொழியிலிருந்து கி.பி. 3ஆவது அல்லது 4ஆவது நூற்றாண்டில் சமஸ்கிருத வானநூற் புலவர்கள் கடனாகக் கொண்டார்கள். சமஸ்கிருத மொழிக்காரர் கிரேக்க மொழியிலிருந்து எடுத்துக்கொண்ட ஹோராவைத் தொல்காப்பியம் கூறுகிறபடியால் இந்நூல் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டும்" (S. Vaiyapuri Pillai, *History of Tamil Language and Literature*, 1956, p. 14).

வையாபுரியார் கூறுகிற இந்தக் கருத்து இவருடைய சொந்தக் கருத்து அன்று. திரு. கே.என். சிவராசபிள்ளை இந்தத் தவறான கருத்தை முன்னமே வெளியிட்டுள்ளார். அவரிடமிருந்து எடுத்துக்கொண்ட இந்தத் தவறான கருத்தை வையாபுரியார், தான் எங்கிருந்து இக்கருத்தைப் பெற்றுக்கொண்டார் என்பதைக் கூறாமல் தன்னுடைய சொந்தக் கருத்தாகக் கூறுகிறார். சிவராசபிள்ளை கூறியுள்ளது இது: *ஹோரா* என்னும் கிரேக்க மொழிச் சொல் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் சமஸ்கிருத மொழியில் சென்று பிறகு அந்தச் சொல் *தொல்காப்பியத்தில்* ஓரை என்று வழங்கப்பட்டது. ஆகவே, அந்தச் சொல்லை வழங்குகிற தொல் காப்பியர் கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்தவர் என்று அவர் 1932ஆம் ஆண்டில் எழுதிவைத்தார் (K.N. Sivaraja Pillai, *The Chronology of the Early Tamils*, 1932, pp. 263-264). சிவராசபிள்ளை கூறிய இந்தக் கருத்தை வையாபுரிப்பிள்ளை எடுத்துக்கொண்டு, ஓரையைக் கையாளும் தொல்காப்பியர் வச்சிரநந்தியின் திராவிடச் சங்கத்தில் இருந்தவர் என்று எழுதி விட்டார்.

ஓரையும் *ஹோரா*வும் ஒன்றா? ஒலி வடிவில் ஒன்றுபோலத் தோன்றுகிற இரண்டு சொற்களும் ஒன்றுதானா? கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்பு இருந்த தொல்காப்பியர், கி.பி. 5ஆம் நூற்றாண்டில் சமஸ்கிருதத்தில் வழங்கிய *ஹோரா*வை எப்படி எடுத்திருக்க முடியும்? *ஹோரா*தான் ஓரை ஆயிற்றா? ஓரை என்பது வேறு, *ஹோரா* என்பது வேறு அல்லவா? 'குதிரைக்குக் குர்ரம் என்றால் ஆனைக்கு அர்ரம்' என்று கூறினானாமே ஒரு மேதை, அது போன்றல்லவா இருக்கிறது இது!

ஓரை என்னும் தமிழ்ச் சொல் வேறு, *ஹோரா* என்னும் கிரேக்க – சமஸ்கிருதச் சொல் வேறு. ஒலி வடிவில் இரண்டும் ஒரே சொல்லைப் போலக் காணப்பட்டாலும் இரண்டுக்கும் பொருள் வெவ்வேறு. *ஹோரா* என்னும் கிரேக்கச் சொல்லுக்கு இராசி அல்லது முகுத்தம் என்று வானநூலில் பொருள் கூறப்படுகிறது.

ஓரை என்னும் தமிழ்ச் சொல்லுக்கு மகளிர் கூட்டம் (ஆயம்) என்பது பொருள். பழைய சொற்கள் சிலவற்றின் பொருள் மறைந்து போய்விட்டதுபோல ஓரையின் பொருளும் பிற் காலத்தில் மறைந்து போயிற்று. மிகப் பிற்காலத்தவரான உரையாசிரியர்கள் இச்சொல்லின் பழைய பொருளை (கருத்தை) அறியாமல், இதை ஹோராவின் திரிபு என்று கருதித் தவறான உரையை எழுதிவிட்டனர்.

மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோர்க் கில்லை
(தொல். பொருள் 135)

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தில் வருகிற ஓரை என்பதற்குப் பிற்காலத்தவரான உரையாசிரியர்கள் எழுதிய பிழையான உரை களைக் காண்க. உரையாசிரியர்கள் காட்டிய தவறான வழியில் சென்ற சிவராசரும் வையாபுரியாரும் இவ்வாறு தவறான கருத்துக் கொண்டதில் வியப்பொன்றும் இல்லை. இதற்குப் பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் எழுதியுள்ள நேரான உரை காண்க (சோமசுந்தர பாரதியார், 'தொல்காப்பிய ஆராய்ச்சி', அண்ணாமலைப் பல்கலைக்கழக இதழ், ஆறாம் தொகுதி, பக். 142-143. இதே கருத்தை அவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள கட்டுரையிலும் காணலாம்: *Journal of the Annamalai University*, Vol. VI, p. 138). ஓரை என்னும் சொல்லுக்குப் பேராசிரியர் பாரதியார் அவர்கள் கூறும் விளக்கம் வருமாறு:

"ஓரை-விளையாட்டென்பது, சங்க இலக்கியம் முழுவதும் அச்சொல்லுக்கு அப்பொருளாட்சியுண்மையால் விளங்கும். ஓரைக்கு இராசி அல்லது முகூர்த்தம் எனும் பொருளுண்மைக்குத் தொல்காப்பியத்திலேனும் சங்க இலக்கியம் எதிலேனும் சான்று காணுதலரிது. மிகவகன்ற பிற்காலப் புலவர் சிலர் முகூர்த்தம் (அதாவது ஒரு நாளினுள் நன்மை தீமைகளுக்குரியதாகப் பிரித்துக் கொள்ளப்படும் உட்பிரிவு) என்ற பொருளில் இச்சொல்லைப் பிரயோகிக்கலானார். அக்கொள்கைக்கே சான்றில்லாத சங்க இலக்கியத்தில், 'ஓரை' என்னுந் தனித் தமிழ்ச் சொல்லுக்கு, அக்காலத்திலக்கியங்களால் அதற்குரிய பொருளாகக் காணப் பெறும் விளையாட்டையே அச்சொல் குறிப்பதாகக் கொள்ளு வதே முறையாகும். அதை விட்டுப் பிற்கால ஆசிரியர் கொள்கை யான இராசி அல்லது முகூர்த்தம் எனும் பொருளை இத்தமிழ்ச் சொல்லுக்கு ஏற்றுவதே தவறாகும். அதற்கு மேல் அச்சொல்லைக் கொண்டு தொல்காப்பியம் அடையப் பிற்காலத்து நூலென்று வாதிப்பது அறிவுக்கும் ஆராய்ச்சியறத்திற்கும் பொருந்தாது."

ஓரை என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பேராசிரியர் சோம சுந்தர பாரதியாரவர்கள் விளையாட்டு என்று பொருள்

கூறியுள்ளார். இது அச்சொல்லுக்கு மிக அண்மையான பொருளே. இதற்குச் சரியான பொருள் சிறுவர் சிறுமியர் வாழும் இடம் என்று தோன்றுகிறது. பழங்காலத்துத் திராவிட இனத்தார் தாங்கள் வாழ்ந்த கிராமத்திலுள்ள சிறுவர் கூட்டத்தையும் சிறுமியர் கூட்டத்தையும் வெவ்வேறாகப் பிரித்து அவர்களைத் தனித்தனியே வெவ்வேறு இடங்களில் வைத்து வளர்த்தார்கள். வடஇந்தியாவில் வாழ்ந்த திராவிடர்களும் இவ்வாறு சிறுவர் சிறுமியரை வெவ்வேறு இடங்களில் பிரித்து வைத்து வளர்த்தார்கள். சிறுவர் சிறுமியரை வெவ்வேறாகப் பிரித்து வைத்துள்ள இடத்துக்கு ஓரை என்று பெயர் கூறினார்கள் என்று தெரிகிறது.

வடஇந்தியாவிலும் ஆதிகாலத்தில் திராவிட இனமக்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தார்கள். அந்தத் திராவிடர் இக்காலத்தில் ஆரியரோடு கலந்து மொழி, கலை, பண்பாடுகளில் மாறிப் போனார்கள். அவர்களில் சில இனத்தார் இன்றும் உள்ளனர். அவர்கள் தங்கள் பழைய இடங்களிலிருந்து துரத்தப் பட்டு வேறு இடங்களில் போய் வாழ்கிறார்கள். அவர்களில் முண்டா என்னும் திராவிட இனத்தார் சோட்டா நாகப்பூரில் இருக்கிறார்கள். அவர்களுடைய திராவிட மொழியில் இக்காலத்தில் மைதிலி, வங்காளி, இந்தி முதலான மொழிகளின் சொற்களும் கலந்துவிட்டன. ஆனாலும், பழைய திராவிட இனத்தவரின் முண்டாரி மொழியில் ஓரை என்னும் சொல் இன்றும் வழங்குகிறது. இது *ஹோரா* என்னும் சொல்லின் திரிபு அன்று; பழைய திராவிடச் சொல்லாகும். முண்டா இனத்து மணமாகாத இளைஞர்களும் மணமாகாத இளம் பெண்களும் தங்கள் வீடுகளில் படுத்து உறங்குவதில்லை. அவர்களுக்கென்று தனித்தனியே பெரிய கொட்டகை அமைக்கப்பட்டு அந்தக் கொட்டகையில் போய்ப் படுத்து உறங்குகிறார்கள். இந்தக் கொட்டகைகளுக்கு *கிதிஓரா* என்று அவர்கள் பெயர் கூறுகிறார்கள். ஆண் மக்களுக்குத் தனியாகக் *கிதிஓரா*வும் பெண் மகளிர்க்குத் தனியாகக் *கிதிஓரா*வும் இருக்கின்றன. முண்டாரி மொழியின் *கிதிஓரா*வுடன் தமிழ் மொழியின் ஓரையை ஒப்பிட்டு நோக்குக. *கிதிஓரா* என்பதில் *கிதி* என்பதன் பொருள் தெரியவில்லை. *ஓரா* என்பது ஓரை என்பதில் சற்றும் ஐயமில்லை. எனவே, ஓரை என்பது திராவிட இனமொழிச் சொல் என்பது தெளிவாகத் தெரிகிறது. தொல்காப்பியர் இந்த ஓரையைத்தான் கூறியுள்ளார். இந்த ஓரை *கிரேக்க–சமஸ்கிருத ஓரை* அன்று.

மிகப் பழங்காலத்திலேயே திராவிட இனமக்கள் வாழ்ந்த ஊர்களில் சிறுவர்களுக்குத் தனியாகவும் சிறுமிகளுக்குத் தனியாகவும் ஓரா (ஓரை) என்னும் பெரிய கொட்டகைகளை அமைத்திருந்தனர் என்பது தெரிகிறது. இக்காலத்தில் பழங்குடி மக்களைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறவர்கள் இதுபற்றியும்

ஆராய்ந்தால் உண்மை கிடைக்கும். தொல்காப்பியர் காலத்திலும் தமிழ்த் திராவிடர்கள் தங்கள் இளைஞர்களுக்கும் மகளிர்க்கும் தனித்தனி ஓரைகளைக் கட்டி வைத்திருந்தனர் என்பதைத் தொல்காப்பியர் கூறுகிற ஓரை என்னுஞ் சொல்லிலிருந்து ஊகிக்கலாம். சங்கச் செய்யுட்களில் ஓரை (ஓரா) என்னுஞ் சொல் காணப்படுகிறது. சங்கப் புலவரான உலோச்சனாரும் ஓரை என்னுஞ் சொல்லை ஆள்கிறார். "ஓரை மகளிரும் ஊரெய் தினரே" (*நற்றிணை* 398 : 5) என்று அவர் கூறுவது காண்க. ஆகவே, சிவராசபிள்ளையும் வையாபுரிப்பிள்ளையும் மற்றவர்களும் தவறாகக் கருதுகிறபடி ஓரை என்னுஞ் சொல் கிரேக்க–சமஸ்கிருதச் சொல் அன்று. அது தூய திராவிட மொழிச் சொல் என்பதை அறிகிறோம். ஓரை என்னும் திராவிடச் சொல்லின் பழமையை அறியாத சிவராசர்களும் வையாபுரியார்களும் ஓரையைக் கூறுகிற தொல்காப்பியரை மிகமிகப் பிற்காலத்து வச்சிரநந்தி சங்கத்தில் இருந்தவர் என்று கூறுவது வரலாறு அறியாத போலிவாதம் ஆகும். திராவிட இனத்து மக்கள் பழங் காலத்தில் வழங்கிவந்த ஓரா–ஓரையைக் கூறுகிற தொல்காப்பியர் மிகமிகப் பழங்காலத்தில் இருந்தவர் என்பது இதிலிருந்து நன்றாகத் தெரிகிறது.

வையாபுரியார், தொல்காப்பியரைப் பிற்காலத்து வச்சிரநந்தி சங்கத்தில் இருந்தவர் என்று அறியாமல் கூறியது போலவே வேறு சில சங்கப் புலவர்களையும் பிற்காலத்து வச்சிரநந்தி சங்கத்தில் இருந்தவர்கள் என்று போலிக் காரணங்காட்டிக் கூறுகிறார். ஆழ்ந்து பாராமல் மேற்போக்காகக் கூறுகிற இவருடைய கருத்து இதிலும் போலிவாதமாகக் காணப்படுகிறது. கடைச்சங்க காலத்துப் புலவர்களான உலோச்சனார், மாதீர்த்தனார் முதலானவர்களைப் பிற்காலத்து வச்சிரநந்தியின் திராவிடச் சங்கத்தோடு இவர் இணைக்கிறார். "தமிழ் மொழி தமிழ் இலக்கிய வரலாற்றிலே முதல் தரமான முக்கிய நிகழ்ச்சியொன்று கி.பி. 470இல் நிகழ்ந்தது. அதுதான் மதுரையிலே வச்சிரநந்தியின் மேற்பார்வையில் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கம். பழைய புலவர் களிலே உலோச்சனார், மாதீர்த்தனார் முதலான ஜைனப் புலவர்களைப் பார்க்கிறோம். புறநானூறு 175ஆம் பாடலிலும் அகநானூறு 59ஆம் பாடலிலும் மறுபிறப்பும் புராணக்கதையும் கூறப்படுகின்றன. அகம் 193இல் மதக்கொள்கையைப் பற்றின குறிப்பைக் காண்கிறோம். ஆனால், தமிழ் மொழி தமிழ் இலக்கியங்களை ஆராயும் பழைய ஜைன நிறுவனத்தைப்பற்றி இதற்கு முன்பு கேள்விப்படவில்லை" (S. Vaiyapuri Pillai, *History of Tamil Language and Literature*, pp. 58-59). (வச்சிரநந்தியின் ஜைன நிறுவனத்தைத்தான் முதல்முதலாகக் கேள்விப்படுகிறோம்.) இவருடைய இந்தக் கூற்றையும் அலசி ஆராய்வோம்.

உலோச்சனாரும் மாதீர்த்தனாரும் சைன சமயப் புலவராகையால் அவர்கள் வச்சிரநந்தியின் சைன சங்கத்தில் இருந்திருக்க வேண்டும் என்பது இவர் கூறும் காரணமாகும். உலோச்சனாரும் மாதீர்த்தனாரும் சைனரா அல்லரா என்னும் ஆராய்ச்சியில் நுழையவேண்டியதில்லை. அவர்கள் சைன சமயத்தவர் என்றே வைத்துக்கொள்வோம். அவர்கள் சைனர் என்ற காரணத்தினாலே அவர்கள் வச்சிரநந்தியின் சைனத் திராவிட சங்கத்தில்தான் இருந்தார்கள் என்று கூறுவது உண்மை இல்லாத போலிக் காரணமாகும். பாண்டியரின் தமிழ்ச் சங்கத்தில் சைன, பௌத்த மதத்தவர் உட்பட எல்லாச் சமயத்துப் புலவர்களும் தமிழ் ஆராய்ந்தார்கள். வச்சிரநந்தியின் தமிழ்ச் சங்க காலத்திலேதான் சைன மதம் தமிழ்நாட்டுக்கு வரவில்லை. கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே சந்திரகுப்த மௌரியன், அசோகச் சக்கரவர்த்தி காலத்திலேயே சைன மதமும் பௌத்த சமயமும் தமிழகத்துக்கு வந்துவிட்டதை வரலாறு கூறுகிறது. ஆகவே, பாண்டியரின் கடைச்சங்கத்திலே சைனப் புலவரும் இருந்தனர் என்பதில் ஐயமில்லை. இந்த வரலாற்று உண்மையை அறியாமல் வையாபுரியார் வச்சிரநந்தியின் தமிழ்ச் சங்கத்தில்தான் உலோச்சனார், மாதீர்த்தனார் போன்ற சைன சமயப் புலவர்கள் இருந்திருக்க வேண்டும் என்று கூறுவது ஆதாரமற்ற போலிக் கூற்றாகும்.

வச்சிரநந்தியின் தமிழ சைனச் சங்கம் சைன சமயத்தாருக்கே உரியது. அதில் சைனத் துறவிகள் மட்டுமே இருந்தார்கள். வேறு சமயத்தவர்க்கு அதில் இடம் இல்லை. வச்சிரநந்தியின் சங்கத்துச் சைனத் துறவிகள் சிற்றின்பத்தில் (அகப்பொருளில்) ஈடுபடக் கூடாது; கள், இறைச்சி உண்ணக்கூடாது; கொலை செய்வது கூடாது. இவையெல்லாம் சைன சமயத்தின் அடிப்படையான, கண்டிப்பான கொள்கைகள். ஆனால், வையாபுரியார், வச்சிரநந்தி சைனத் தமிழச் சங்கத்தில் இருந்தவர் என்று கூறுகிற உலோச்சனார் எதையெதைப் பாடினார் என்பதைப் பார்ப்போம்.

அகநானூற்றில் எட்டுப் பாடல்களும் குறுந்தொகையில் நான்கு செய்யுட்களும் நற்றிணையில் இருபது பாடல்களும் ஆக முப்பத்திரண்டு செய்யுட்களை உலோச்சனார் பாடியுள்ளார். இந்தப் பாடல்கள் எல்லாம் அகப்பொருள் துறையமைந்த காதற்பாட்டுகள். சைன முனிவர் எதைப் பாடக்கூடாதோ அந்த அகப்பொருள் காதற்பாட்டுகளை இவர் பாடியுள்ளார்! இந்தப் புலவர் சைனராக இருக்க முடியுமா? அதிலும் துறவிகள் மட்டும் உள்ள வச்சிரநந்தியின் திரமிளச் சைன சங்கத்தில் இவர் இருந்திருக்க முடியுமா? மேலும், இந்தக் காதற்பாட்டுகளிலே கொலையையும் இறைச்சியையும் சிறப்பித்துப் பாடுகிறார் இந்தச் சைனத் துறவி!

மீன்களை மணலில் பரப்பி வெயிலில் உலர்த்துவதைக் கூறுகிறார் (*அகம்* 20, *நற்றிணை* 63, 331). மீன்பிடிக்கும் வலையைப் பாடுகிறார் (*அகம்* 300). மீனைச் சுடுகிற நெருப்பிலிருந்து வருகிற புகையைப் பாடுகிறார் (*நற்றிணை* 311). பனங்கள்ளைப் பாடுகிறார் (*நற்றிணை* 38). மதுபானம் செய்து மகிழ்ந்திருக்கும் பெரியன் என்பவனைப் பாடுகிறார் (*நற்றிணை* 131). ஊனைத் தின்ற எச்சிற்கையில் உள்ள இறைச்சியின் கொழுப்பை வீட்டுச் சுவரில் தேய்த்துவிட்டுப் போர்க்கூத்துக்குச் சென்ற வீரனையும், அவன் திரும்பிவந்து குடிப்பதற்காக வைத்துள்ள கட்சாடியையும் பாடுகிறார் (*புறம்* 258). மற்றும் இவர் பாடியுள்ள காதற் செய்திப் பாட்டுக்கள் பல உள்ளன. சைனத் துறவிக்கு விலக்கப்பட்டவை களையெல்லாம் பாடுகிற உலோச்சனாரை வையாபுரிப்பிள்ளை, வச்சிரநந்தியின் சைனத் துறவிகளின் சங்கத்தில் இருந்தவர் என்று கூறுகிறார். இவர் கூற்று நம்பத்தக்கதா? இதை ஒப்புக்கொள்ள முடியுமா? களப்பிரர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வச்சிரநந்தியின் சைன முனிவர் சங்கத்தில் இருந் தவர் என்று வையாபுரிப்பிள்ளை கூறுகிற உலோச்சனார், களப்பிரர் காலத்துக்குச் சில நூற்றாண்டுக்கு முன்பு வாழ்ந்திருந்த சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப் பாடுகிறார் (*புறம்* 377). கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வச்சிரநந்தியின் சங்கத்தில் உலோச்சனார் இருந்தவர் என்றால், அவருடைய செய்யுட்கள் கடைச்சங்க காலத்துத் தொகை நூல்களில் எப்படி இடம் பெற்றிருக்கக்கூடும்?

மாதீர்த்தன் என்னும் கடைச்சங்கப் புலவரையும் வையாபுரி யார் வச்சிரநந்தியின் தமிழச் சைன சங்கத்தவர் என்று கூறுகிறார். மாதீர்த்தனார் *குறுந்தொகை* 113ஆம் செய்யுளைப் பாடியவர். இந்தப் பாட்டு அகப்பொருளைப் பற்றிய காதற்பாட்டு. இந்தக் காதற்பாட்டைப் பாடிய மாதீர்த்தனார் வச்சிரநந்தி சங்கத்தைச் சேர்ந்த சைன முனிவராக இருக்க முடியுமா? இவற்றையெல்லாம் கருதாமல், பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை இவர்களைச் சைன முனிவர்களின் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறுகிறார்! பகுத்தறிவு உள்ளவர் இவர் கூற்றை ஏற்றுக்கொள்ள முடியுமா?

புறம் 175ஆம் செய்யுளிலும் *அகம்* 59ஆம் செய்யுளிலும் *அகம்* 193ஆம் செய்யுளிலும் சைனரின் மதக் கொள்கைகள் கூறப்படுகின்றன என்றும் ஆகவே அந்தச் செய்யுட்களைப் பாடிய புலவர்கள் வச்சிரநந்தியின் சைனத் தமிழச் சங்கத்தைச் சார்ந் தவர்கள் என்றும் வையாபுரியார் குறிப்பாகக் கூறுகிறார். "புறம் 175ஆம் பாட்டிலும் அகம் 59ஆம் பாட்டிலும் மறுபிறப்புப் பற்றியும் ஒரு புராணக்கதையைப் பற்றியும் அகம் 193இல் சைனருடைய சமயக் கொள்கை பற்றியும் குறிப்புகள் காணப்படு கின்றன. தமிழ் மொழி தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றின

பழைய சைன நிறுவனத்தைப் பற்றி நாம் கேள்விப்படவில்லை" (வச்சிரநந்தியின் சங்கத்தைத்தான் கேள்விப்படுகிறோம்) என்று வையாபுரியார் எழுதுகிறார் (S. Vaiyapuri Pillai, *History of Tamil Language and Literature*, p. 5). அதாவது, *புறம்* 175, *அகம்* 59, 193 ஆகிய செய்யுட்களைப் பாடியவர்களும் சைன சமயத்தார் என்றும் அவர்கள் வச்சிரநந்தியின் தமிழச் சைன சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் வையாபுரியார் கூறுகிறார். இவர் கூறுவதை ஆராய்ந்து உண்மை காண்போம்.

புறம் 175ஆம் செய்யுளைப் பாடியவர் கள்ளில் ஆத்திரை யனார். இவருடைய பெயரே இவர் பிராமணர் என்பதைத் தெரிவிக்கிறது. இவருக்கு உதவி செய்த ஆதனுங்கன் என்பவனை இவர் இச்செய்யுளில் பாடுகிறார். என் உயிர் போமளவும் என் மனம் உன்னை மறக்காது என்று இவர் கூறுகிறார். இதில் சைன சமயக் கொள்கை என்ன இருக்கிறது? இது எல்லாச் சமயத் தாருக்கும் உரிய கருத்துத்தானே! வையாபுரியார் சுட்டிக்காட்டு கிற இன்னொரு செய்யுள் (*அகம்* 59) மருதன் இளநாகனார் பாடியது. யமுனையாற்றில் நீராடிய மகளிரின் ஆடைகளைக் கண்ணன் ஒளித்து வைத்ததை இச்செய்யுள் குறிப்பிடுகிறது.

வண்புனல் தொழுநை வார்மணல் அகன்றுறை
அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல் போல (*அகம்* 59 : 4-6)

இது சைன சமயக் கருத்து என்று வையாபுரியார் கூறுகிறார். இது தமிழ்நாட்டில் அக்காலத்தில் வழங்கிவந்த எல்லாச் சமயத் தாருக்கும் உரிய பொதுக் கருத்து. இதை வையாபுரியார் சைனரின் புராணக் கதை என்று கூறுகிறார். இதைப் பாடியவர் மருதனிள நாகனார். இவர் சைனர் அல்லர். கடைச் சங்கப் புலவரான இவர் எப்படி வச்சிரநந்தியின் சைன சங்கத்தில் (கி.பி. 5ஆம் நூற்றாண்டில்) இருக்க முடியும்? வையாபுரியார் சுட்டிக் காட்டுகிற இன்னொரு *அகம்* 193ஆம் செய்யுளும் மருதன் இளநாகனார் பாடியதே. பருந்து ஒன்று இறைச்சித் துண்டைக் கொண்டுபோய் மலையுச்சியில் மரத்தின்மேல் இருந்த தன்னுடைய குஞ்சுக்கு ஊட்ட, அவ்விறைச்சி நழுவிக் கீழே விழுந்ததை அங்கிருந்த நரி கவ்விக்கொண்டு ஓடியது என்னும் இயற்கை நிகழ்ச்சியை இப்புலவர் இப்பாடலில் கூறுகிறார்.

செஞ்செவி எருவை
குறும்பொறை எழுந்த நெடுந்தாள் மராஅத்து
அருட்கவட் டுயர்சினை பிள்ளை யூட்ட
விரைந்துவாய் வழுக்கிய கொழுங்கண் ஊன்றடி
கொல்பசி முதுநரி வல்சி யாகும் (*அகம்* 193 : 6-10)

இது எப்படிச் சைனருக்கு மட்டும் சிறப்பானது? எல்லாச் சமயத்தாருக்கும் இந்த நிகழ்ச்சி பொதுவன்றோ? இந்தச்

செய்யுட்களைப் பாடிய மருதனிளநாகனார் சைனரல்லர், அவர் சைவ சமயத்தவர். அன்றியும் கடைச்சங்கப் புலவர். இவரைச் சைனர் என்றும் வச்சிரநந்தி அமைத்த பிற்காலத்துச் சைன சமயச் சங்கத்தைச் சேர்ந்தவர் என்றும் வையாபுரியார் எழுதுகிறார். களப்பிரர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வச்சிரநந்தியின் சைனத் தமிழச் சங்கத்தில் இவர் இருந்தார் என்று, ஆராயாமல் வையாபுரியார் கூறுகிறார். ஆனால், மருதனிள நாகனார், வச்சிரநந்தி சங்கம் ஏற்படுவதற்குப் பல நூற்றாண்டுக்கு முன்பு கடைச்சங்க காலத்தில் இருந்தவர் என்பதை அவர் பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியையும் (*புறம்* 52), பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனையும் (*புறம்* 55) நாஞ்சில் வள்ளுவனையும் (*புறம்* 138, 139) பாடிய செய்யுட்கள் வெள்ளிடைமலை போலவும் உள்ளங்கை நெல்லிக் கனி போலவும் தெரிவிக்கின்றன. ஆனால், இவற்றையெல்லாம் பாராமல் வையாபுரியார், கடைச்சங்க காலத்தில் இருந்த புலவர்களை இழுத்துக்கொண்டுவந்து, பல நூற்றாண்டுகளுக்குப் பின் இருந்த வச்சிரநந்திச் சங்கத்தில் விடுகிறார்.

வையாபுரிப்பிள்ளை தாம் எழுதிய *தமிழ் மொழி தமிழ் இலக்கிய வரலாற்றில்* கூறுகிற இவை போன்ற வேறு பல போலிச் செய்திகளை இங்கு ஆராயாமல் இதனோடு நிறுத்துகிறோம்.

> எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு:

இணைப்பு – 3

இறையனார் அகப்பொருள் – வரலாற்று ஆய்வு

களப்பிரர் ஆட்சிக் காலத்தில், பக்தி இயக்கம் தோன்றிய போது *இறையனார் அகப்பொருள்* என்னும் களவியல் நூல் எழுதப்பட்டது என்று கூறினோம். *தொல்காப்பியப்* பொருளதி காரம் இருக்கும்போது இந்தப் புதிய அகப்பொருள் நூலை எழுதிய நோக்கம் என்ன? யாது காரணம் பற்றி இந்தப் புதிய நூல் எழுதப்பட்டது என்பதை ஆராய்வோம். *களவியல்* உரைப் பாயிரம் இந்த ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. மூன்று தமிழ்ச் சங்கங்களின் வரலாற்றைக் கூறிய பிறகு கடைச் சங்கத்தின் இறுதியில் நிகழ்ந்ததைக் *களவியல்* உரைப்பாயிரம் கூறுகிறது. "அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமுமென்க. அவர் களைச் சங்கம் இரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெரு வழுதியீறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்திர மதுரை (இப்போதைய மதுரை) என்ப" என்று உரைப்பாயிரங் கூறுகிறபடியால் கடைச்சங்க காலம் முடிந்த பிறகு *இறையனார் அகப்பொருள்* என்னும் நூல் இயற்றப்பட்டது என்பது தெரிகிறது. *இறையனார் அகப்பொருள்* எழுதப்பட்ட வரலாற்றை இந்நூல் உரைப்பாயிரம் கூறுகிறது. அதன் வாசகம் இது:

> அக்காலத்துப் பாண்டிய நாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லப் பசி கடுகுதலும், அரசன் சிட்டரை யெல்லாங் கூவி வம்மின் யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் போய் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை யுள்ளி வம்மின் என்றான் என, அரசனை விடுத்து எல்லாரும் போயினபின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றை அரசன் இனி நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்க வென்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க,

எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப் பட்டுக் கொணர்ந்து பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவைபெற்றும் பெற்றிலேம் எனச் சொல்லா நிற்ப, மதுரை ஆலவாயில் அழனிறக்கடவுள் சிந்திப்பான்; என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையதாகலான் என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத்தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

இங்குப் பொருளதிகாரம் என்பது அகப்பொருளைச் சுட்டுகிறது. அகப்பொருள் கற்க, அது ஞானத்தைத் தரும் என்றும் கூறப்படுவது காண்க. மேலும் உரை கூறுகிறது:

இட்ட பிற்றை ஞான்று, தேவர் குலம் வழிபடுவான் தேவர் கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர் தெளித்துப், பூவிட்டுப் பீடத்தின் கீழ்ப் பண்டென்றும் அலகிடாதான் அன்று தெய்வத் தவக் குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங் குளிர அலகிட்டான். இட்டாற்கு அவ்வலகினோடும் இதழ் போந்தன. போதரக் கொண்டுபோந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத் தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப் பார்ப்பான் சிந்திப்பான்: அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றானென்பது பட்டுச் செல்லா நின்றதுணர்ந்து நம்பெருமான் அருளிச் செய்தானாகும் என்று தன் அகம்புகாதே கோயிற் றலைக்கடைச் சென்று நின்று கடைக் காப்பார்க்குணர்த்தக் கடைக்காப்பார் அரசர்க்குணர்த்த, அரசன் புகுதருகவென்று பார்ப்பானைக் கூவச் சென்று புக்குக் காட்டக் கொண்டு நோக்கி, இது பொருளதிகாரம்! நம்பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்தானாகற்பாலது என்று, அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து நம்பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம்! இதனைக் கொண்டுபோய்ப் பொருள் காண்மின் என அவர்கள் அதனைக் கொண்டு போந்து கன்மாப்பலகை ஏறியிருந்தாராய்வுழி, எல்லாரும் தாந்தாம் உரைத்த உரையே நன்றென்று சில நாளெல்லாஞ் சென்றன. செல்ல நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப் படாது. நாம் அரசனுழைச் சென்று நமக்கோர் காரணி களைத் தரல் வேண்டும் என்று கொண்டு போந்து, அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய் அன்றெனப்பட்டது

அன்றாயொழியக் காண்டுமென, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றார். செல்ல அரசனும் எதிர் எழுந்து சென்று, 'என்னை? நூற்குப் பொருள் கண்டீரோ?' என, 'அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்' எனப், 'போமின். நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று. நுமக்கு நிகராவார் ஒருவர் இம்மையினின்றே' என்று அரசன் சொல்லப் போந்து பின்னையும் கன்மாப்பலகை ஏறியிருந்து அரசனும் இது சொல்லினான் 'யாங் காரணிகனைப் பெறுமாறு என்னைகொ' வென்று சிந்தித் திருப்புழிச், சூத்திரஞ் செய்தான் ஆலவாயிலவிர்சடைக் கடவுளன்றே! அவனையே காரணிகனையுந் தரல் வேண்டுமென்று சென்று வரங்கிடத்தும்' என்று சென்று வரங்கிடப்ப, இடையாமத்து, 'இவ்வூர் உப்பூரிகுடி கிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பான், பைங்கண்ணன் புன்மயிரான் ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப் பிள்ளை உளன்; அவனை அன்னனென் றிகழாது கொண்டு போந்து ஆசனமேலிரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரைகேட்டவிடத்து வாளாஇருக்கும். அவன் குமார தெய்வம், அங்கோர் சாபத்தினாற் றோன்றினான் என முக்காலிசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரிகுடிகிழாருழைச் சங்கமெல்லாஞ் சென்று, இவ்வார்த்தை யெல்லாஞ் சொல்லி ஐயனாவான் உருத்திர சன்மனைத் தரல் வேண்டுமென்று வேண்டிக் கொடுபோந்து, வெளியதுடீஇ, வெண்பூச்சூட்டி, வெண்சாந்தணிந்து, கன்மாப்பலகையேற்றி இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப, எல்லாரும் முறையே உரைப்பக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்த விடத்து ஒரோ வழிக் கண்ணீர் வார்த்து மெய்ம்மயிர் நிறுத்திப் பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த விடத்துப் பதந்தோறுங் கண்ணீர் வார்த்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து மெய்யுரை பெற்றாம் இந்நூற்கென்றார்.

அதனால் உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன் மனாவான் செய்தது இந்நூற்குரை யென்பாருமுளர்; அவர் செய்திலர், மெய்யுரை கேட்டாரென்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரைகண்டு, குமாரசுவாமியாற் கேட்கப்பட்ட தென்க."

(இறையனாரகப் பொருள், முதற் சூத்திர உரைப்பாயிரம்)

இறையனார் அகப்பொருளும் அதன் உரையும் எழுதப்பட்ட வரலாற்றை அறிந்தோம். இனி இவைபற்றி ஆராய்வோம்.

முரண்பட்ட செய்திகள்

கடைச்சங்கத்தார்க்கு இலக்கண நூலாகத் தொல்காப்பியம் இருந்தது என்று உரைப்பாயிரம் கூறுகிறது. இன்னொரு இடத்தில் பொருளிலக்கணம் கிடைக்காமல் இடர்ப்பட்டனர் என்று கூறுகிறது. இது முன்னுக்குப்பின் முரணாக உள்ளது. தொல்காப்பியப் பொருளதிகாரம் அக்காலத்தில் மறைந்து போயிற்றா? அப்படிக் கருதுவதற்கு இடமில்லை. ஏனென்றால், தொல்காப்பியம் பொருளதிகாரம் உட்பட முழுவதும் இப்போதும் இருக்கிறது. தொல்காப்பியப் பொருளதிகாரம் கிடைத்திருக்க ஆலவாயிற் கடவுள் அறுபது சூத்திரங்கள் அடங்கிய புதியதோர் அகப்பொருள் நூலை உண்டாக்கிக் கொடுத்த காரணம் என்ன?

ஒரு விளக்கம்

இந்த முரண்பாட்டுக்கு விளக்கங் கூறுவதுபோல உரைப் பாயிரம் இன்னொரு இடத்தில் இவ்வாறு கூறுகிறது: "அரசன் இனி நாடு நாடாயிற்றாகலின் நூல்வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதி காரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து பொருளதி காரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலே மென்று வந்தார்" என்று உரைப் பாயிரம் கூறுவதிலிருந்து தொல்காப்பியப் பொருளதிகாரம் கிடைத்திருந்தும் அதற்குப் பொருள் கூற வல்லார் கிடைக்கவில்லை என்பது தெரிகிறது.

மீண்டும் ஓர் ஐயம்

தொல்காப்பியம் பொருளதிகாரத்துக்குப் பொருள் கூறவல்லார் கிடைக்காமற்போனார்கள் என்று உரைப்பாயிரம் கூறுவது வியப்பாக இருக்கிறது. இருக்கட்டும். பொருளதி காரத்துக்கு உரை காணவல்லார் கிடைக்காமற்போனபோது ஆலவாயிற்கடவுள், பொருள் கூற வல்லவரை அளித்திருக்க வேண்டும் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கு உரை எழுதிக் கொடுத்திருக்க வேண்டும். இரண்டும் செய்யாமல் அறுபது சூத்திரங்களைக் கொண்ட ஒரு புதிய நூலைக் களவியல் என்னும் பெயர் கொடுத்து ஆக்கித் தந்தார். இப்படிச் செய்ததேன்? தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரங்கள் இருக்கும்போது, புதிய அகப்பொருள் சூத்திரங்களை எழுதித் தந்ததேன்?

இந்தப் புதிய அகப்பொருள் நூலுக்குச் சங்கப் புலவர் பொருள் கண்டார்களா என்றால் காணவில்லை. தங்களுக்கோர்

காரணிகனைத் தரவேண்டும் என்று தவங்கிடந்து சிவபெரு மானை வேண்டினார்கள். அவரும் ஒரு காரணிகனைக் காட்டி னார். அந்தக் காரணிகனும் ஊமைப்பிள்ளை! இந்தக் காரணிகன், இந்தப் புதிய அகப்பொருளுக்கு நக்கீரர் உரைத்த உரைதான் உண்மையான உரை என்று மெய்ம்மயிர் சிலிர்த்துக் கண்ணீர் வடித்ததன் மூலம் மெய்யுரைக்குச் சான்று தந்தார்.

களவியல் சூத்திரங்களும் அகப்பொருள் சூத்திரங்களும்

மேற்கொண்டு ஆராய்ச்சியைச் செலுத்துவதற்கு முன்பு இறையனார் அகப்பொருள் (களவியல்) சூத்திரங்களைப் பற்றிக் காண்போம். இறையனார் புதிதாகச் செய்து கொடுத்த களவியல் அறுபது சூத்திரங்கள் முழுவதும் புதியவை அல்ல. அவர் தொல்காப்பியத்திலிருந்தும் சில சூத்திரங்களை எடுத்துத் தம்முடைய புதிய களவியலில் சேர்த்துக்கொண்டார். அவை: (1) தொல். வேற்றுமை. 114 – இறையனார் அகம் 59; (2) தொல். வேற்றுமை 174 – இறைய்னார் அகம் 54; (3) தொல். கற்பியல் 187 – இறையனார் அகம் 43; (4) தொல். களவியல் 130 – இறையனார் அகம் 18; (5) தொல். களவியல் 133 – இறையனார் அகம் 17; (6) தொல். களவியல் 27– இறையனார் அகம் 7.

தொல்காப்பிய அகப்பொருள் இருக்கும்போதே இறை யனார் அகப்பொருளைப் புதிதாகச் செய்தார். ஏன்? தொல் காப்பிய அகப்பொருளுக்கும் இறையனார் அகப்பொருளுக்கும் வேறு பொருள்கள் உண்டா? பழைய கருத்துக்களுக்குப் பதிலாகப் புதிய கருத்துகள் கூறப்பட்டுள்ளனவா? ஒன்றும் இல்லை.

இறையனார் அகப்பொருளின் காலம்

இறையனார் அகப்பொருளின் உரையாசிரியர் அதனுடைய உரைப்பாயிரத்தில் இந்நூல் இயற்றப்பட்ட காலம் கடைச்சங்கக் காலம் என்று கூறுகிறார். "இனிக் காலமென்பது கடைச் சங்கத்தார் காலத்துச் செய்யப்பட்டது. இனிக் களமென்பது உக்கிரப் பெருவழுதியார் அவைக்களமென்பது. காரணமென்பது அக்காலத்துப் பாண்டியனாருஞ் சங்கத்தாரும் பொருளிலக் கணம் பெறாது இடர்ப்படுவாரைக் கண்டு ஆலவாயிற் பெருமா னடிகளால் வெளியிடப்பட்டது" என்று பாயிரம் கூறுகிறது.

இங்கும் முரண்பாடு காணப்படுகிறது. கடைச்சங்கத் தார்க்குத் தொல்காப்பியம் இலக்கண நூலாக இருந்தது என்பதைக் கூறி, அத்தொல்காப்பியத்தில் பொருளதிகாரமும் இருந்தது என்று கூறிய பிறகு 'காரணம் என்பது அக்காலத்துப் பாண்டியனாரும் சங்கத்தாரும் பொருளிலக்கணம் பெறாது இடர்ப்படுவாரைக் கண்டு வெளியிடப்பட்டது' என்று கூறுவது

முன்னுக்குப் பின் முரண்படுகிறது. பாண்டியன் உக்கிரப் பெருவழுதி கடைச்சங்க காலத்தின் இறுதியில் இருந்த பாண்டியன். அவன் ஏறத்தாழக் கி.பி. 200இல் இருந்தவன். *தொல்காப்பியம்* முழுவதும் அகப்பொருள் இலக்கணம் உட்பட இன்றளவும் நின்று நிலவுகிறது. ஆனால், உரைப்பாயிர ஆசிரியர் முன்னுக்குப் பின் முரணாக, உக்கிரப்பெருவழுதியும் சங்கத்தாரும் பொருளிலக்கணம் பெறாது இடர்ப்பட்டனர் என்றும் அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்கு *இறையனார் களவியலை* உண்டாக்கினார் என்றும் எழுதுகிறார். *தொல்காப்பியப்* பொருளதிகாரத்துக்குப் பொருள் காண வல்லார் கிடைத்திலர் என்று முன்பு கூறிய இவர், பிறகு 'பொருளதிகாரம் பெறாது இடர்ப்பட்டனர்' என்று கூறுகிறார். இங்கும் முன்னுக்குப் பின் முரண்படுகிறார்.

முதல் நூல்

இறையனார் அகப்பொருள் முதல் நூலா வழி நூலா என்னும் கேள்வி எழுகிறது. *தொல்காப்பியம்* பொருளதிகாரம் இருக்கும் போதே இறையனார் இந்தக் *களவியல்* நூலைப் (*அகப் பொருளை*) புதியதாகப் பிற்காலத்தில் எழுதினார். இதனால் இது வழிநூல் எனப்படும் என்று கூறுவார்க்கு விடையாக உரைப் பாயிரம் எழுதியவர் இது முதல் நூல் என்று கூறுகிறார். "வழியென்பது இந்நூல் இன்னதன் வழித்து என்பது. இது வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவனாற் செய்யப்பட்டமையால் வழிநூலென்று சொல்லப்படாது, முதனூல் எனப்படுமென்பது."

இறைவனே செய்த நூலாகையினால், பிற்காலத்து வழி நூலானாலும், இது முதல் நூல் என்று கூறுகிறார். முதல் நூல் இருக்கும்போது வழிநூல் (அல்லது இன்னொரு முதல் நூல்) செய்யப்பட்ட காரணம் என்ன? *தொல்காப்பியம்* பொருளதி காரத்துக்கு உரை கூறுவோர் இல்லாமற் போனார்கள் என்று ஓரிடத்திலும் அது (பொருளிலக்கணம்) கிடைக்காமற் போயிற்று என்று இன்னொரு இடத்திலும் எழுதுகிற உரைப்பாயிரம் இந்த இடத்தில் குழப்புகிறது.

தொல்காப்பிய அகப்பொருளும் *இறையனார் அகப்பொருளும்*

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் அகத்திணை இயல், களவியல், கற்பியல் ஆகிய மூன்று இயல்களும் உலகில் வாழ்கிற மாந்தரின் காதல் வாழ்க்கையைக் கூறுகின்றன; மாந்தருக்கும் கடவுளுக்கும் உள்ள தெய்வீகக் காதலைக் கூறவில்லை. *இறையனார் அகப்பொருளும்* மாந்தரின் உலகக் காதலைத்தான் கூறுகிறது. மாந்தருக்கும் தெய்வத்துக்கும் காதல் உண்டென்று *இறையனார் அகப்பொருள்* கூறவே இல்லை. ஆனால்,

அதனுடைய உரை மட்டும், மாந்தருக்கும் தேவருக்கும் உள்ள காதலைக் (பக்தியை) கூறுகிறது. உரை கூறுகிறதேயல்லாமல் நூல் கூறவில்லை. பழைய தொல்காப்பியம் மனிதக் காதலை மட்டும் கூறுகிறபடியால் அது பக்தி இயக்கத்தைச் சேர்ந்த பேரின்பக் காதலுக்கு ஓர் ஆதார நூலாகக் கொள்ளப்படவில்லை. பேரின்பக் காதலுக்கு ஆதார நூல் ஒன்று தேவைப்பட்டபடியால் இறையனார் அகப்பொருள் நூல் புதிதாக உண்டாக்கப்பட்டது. இந்த நூலை மக்கள் நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்வதற்காக இறைவனே இந்த நூலை இயற்றினார் என்று கதை கற்பிக்கப்பட்டது.

தமிழ் – அகப்பொருள்

தமிழ் என்னுஞ் சொல்லுக்குத் தமிழ் மொழி, இனிமை, அழகு என்னும் பொருள்கள் உண்டு. இச்சொல்லுக்கு அகப்பொருள் என்னும் இன்னொரு பொருளும் உண்டு. ஆனால், இக்காலத்தில் இந்தச் சொல்லும் பொருளும் மறைந்து போயின. பழங்காலத்தில் இந்தப் பொருளில் தமிழ் என்னும் சொல்லாட்சி இருந்தது. கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த கபிலர், ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் (அகப்பொருள்) கற்பிக்கக் குறிஞ்சிப் பாட்டைப் (பெருங்குறிஞ்சி) பாடினார். இச்செய்யுளின் அடிக்குறிப்பு 'ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குப் பாடியது' என்று கூறுகிறது. இங்குத் தமிழ் என்பதன் பொருள் அகப்பொருள் என்பது.

பரிபாடல் 9ஆம் பாடலைப் பாடிய குன்றம்பூதனார் இச்செய்யுளில் அகப்பொருளைத் தண்தமிழ் என்று கூறுகிறார் (பரிபாடல் 9 : 25-26). இதற்கு உரை எழுதிய பரிமேலழகர் 'தமிழ்' என்பதற்கு அகப்பொருள் என்று உரை எழுதியுள்ளார்.

சிவகசிந்தாமணி பதுமையார் இலம்பகம் 163ஆம் செய்யுளில் அகப்பொருள் தென்தமிழ் என்று கூறப்படுகிறது. இதற்கு நச்சினார்க்கினியார் எழுதிய உரை காண்க.

ஐந்திணை ஐம்பது என்னும் நூல் அகப்பொருளைச் செந்தமிழ் என்று கூறுகிறது. திணைமாலை நூற்றைம்பதின் பாயிரம் அகப்பொருளை இன்தமிழ் என்று கூறுகிறது. பாண்டிக் கோவை 25ஆம் செய்யுள் அகப்பொருளைக் கொழுந்தமிழின் ஒன்துறை என்று கூறுகிறது. திருக்கோவையார் 20ஆம் செய்யுள் அகப்பொருளைத் தீந்தமிழின்துறை என்று கூறுகிறது (மயிலை சீனி. வேங்கடசாமி, 'தமிழ் - அகம்', *Journal of Tamil Studies*, No.3, September 1973, pp. 1-3).

இறையனார் அகப்பொருள் உரையும் அகப்பொருளைத் தமிழ் என்று கூறுகிறது. "இனி நுதலிய பொருள் என்பது நூற் பொருளைச் சொல்லுதலென்பது. இந்நூல் என்னுதலிற்றோ

வெனின் தமிழ் நுதலியதென்பது" என்றும், "இனி நூனுதவிய தூஉம் உரைக்கற்பாற்று. அது பாயிரத்துள்ளே உரைத்தாம்; தமிழ் நுதலியதென்பது" என்றும் *அகப்பொருள்* உரை கூறுகிறது.

அகப்பொருளின் பயன்

இறையனார் அகப்பொருளைக் கற்பதனால் உண்டாகும் பயன் என்ன என்பதை இந்நூலின் உரை கூறுகிறது. "இனிப் பயன் என்பது இது கற்க இன்னது பயக்கும் என்பது... என்பயக்குமோ இது கற்கவெனின் வீடுபேறு (மோட்சம்) பயக்கும் என்பது" என்றும், "இங்குப் பிறவுங் களவுண்மை சொல்லி அக்களவுகட் கெல்லாம் இக்களவு சிறப்புடைமை சொல்லும், துறக்கம் வீடு பேறுகளை முடிக்குமாகலான்" என்றும் உரை கூறுகிறது. அதாவது, பக்திக் காதல் மறுமையில் வீடுபேற்றை அளிக்கிறது என்று உரை கூறுகிறது. *இறையனார் அகப்பொருள்* ஞான நூல் என்றும் கூறப்படுகிறது. "மதுரை ஆலவாயில் அழனிறக் கடவுள் சிந்திப்பான்; என்னை பாவம் அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று அதுதானும் ஞானத்திடையாகலான், யாம் அதனைத் தீர்க்கற் பாலம்" என்று கூறியது காண்க. இந்த உரையின் கருத்துப்படி, *இறையனார் அகப்பொருள்* நூலைக் கற்றால் ஞானமும் அதன் பயனாகிய வீடுபேறும் பெறலாம் என்பது தெரிகிறது.

இறையனார் களவியல் தோன்றியதேன்?

தொல்காப்பிய அகப்பொருள் இலக்கணம் இருக்கும்போது *இறையனார் அகப்பொருள்* (*களவியல்*) என்னும் பேரால் ஒரு புதிய அகப்பொருள் இலக்கணம் எழுதப்பட்டதேன்? பிற்காலத்தில், களப்பிரர் ஆட்சிக் காலத்தில் பக்தி இயக்கம் தோன்றியபோது அகப்பொருளுக்குப் பக்திக் காதல் என்ற புதிய பொருள் கற்பிக்கப்பட்டது. *தொல்காப்பிய* அகப்பொருள் உலகியல் காதலை மட்டும் கூறுகிறபடியால், அது புதிய பக்திக் காதல் கருத்துக்கு உரிய ஆதார நூலாகப் பயன்படவில்லை. ஆகவே, பக்திக் காதலாகிய பேரின்பக் காதலுக்கு ஆதாரமான ஓர் இலக்கண நூல் தேவைப்பட்டது. இந்தத் தேவையை நிறைவு செய்ய *இறையனார் அகப்பொருள்* என்னும் களவியல் புதிதாக உண்டாக்கப்பட்டது. ஆனால், *இறையனார் அகப்பொருள்* சூத்திரங்கள் பக்திக் காதலைப்பற்றி ஒன்றுமே கூறவில்லை. ஆனால், அதனுடைய உரை மட்டும் பக்திக் காதலைப் பற்றி எழுதிக்கொண்டு போகிறது. இந்த உரையைக் கேட்டுத்தான் உப்பூரிகுடிகிழான் மகன் உருத்திரசன்மன் மெய்ம்மயிர் சிலிர்த்துக் கண்ணீர் வடித்தார் என்று கூறப்படுகிறது. *களவியல்* உரை கூறுவதைப் பார்ப்போம்:

"அஃதேயெனின் ..அவ்வெட்டும் (எண்வகை மணமும்) உலகினுள்ளன; இஃது (இறையனார் அகப்பொருள்) அன்னதன்று. இல்லது இனியது நல்லதென்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாகலின், இதனை (இறையனார் அகப்பொருளை) உலகவழக்கினோடு இயையானென்பது" (களவியல் முதலாம் சூத்திர உரை).

15ஆம் சூத்திர உரையில் "எனவே, இவ்வாற்றானும் உலகக் களவு (களவியல்) அன்று என்பதும் பெற்றாம்" என்றும், 31ஆவது சூத்திர உரையில் "இல்லதனையே இல்லை என்றார்; இவன் உலகத்துத் தலைமகன் அல்லன்– புலவரால் நாட்டப்பட்ட தலை மகன் என்பதனை யாப்புறுத்தற்கு" என்றும் உரை கூறிச் செல்கிறது.

32ஆவது சூத்திர உரையில் "இவ்வாற்றானும் இஃது (இறையனார் களவியல்) உலகத்து இயல்பன்றென்பது பெற்றாம்... மூப்புப்பிணி உள்வழிச் சாக்காடும் உண்மையாம் என்பது கடா. அதற்கு விடை எங்ஙனமோவெனின், இருதிங்கட் புக இவளும் பன்னீராட்டைப் பிராயத்தளாய் இவனும் பதினாறாட்டைப் பிராயத்தனாய்ச் செல்வதல்லது, மற்றைய நிகழா; உலகத்தினொடு இத்துணை மாத்திரையே ஒத்து மற்றை விகற்பமெல்லாம் ஒவ்வாவெனக் கொள்க" என்றும், 39ஆவது சூத்திர உரையில், "இந்நூல் (களவியல்) உலகினோடு ஒத்தும் ஒவ்வாதும் நடக்கின்ற தாகலின், உலகியல் நோக்கிச் சாதிவரையான் இழிந்தாரெனப் பட்டது" என்றும், 60ஆவது சூத்திர உரையில், "அஃது இவ்வுலகினும் இயற்கையான் நிலைபெறாது புலவரான் இல்லது இனியது நல்லதென நாட்டப்பட்டதோர் ஒழுக்கமென்பார் 'கண்ணிய' என்றார்" என்றும் களவியல் உரை கூறுகிறது.

இதனால், புதியதாக உண்டாக்கப்பட்ட களவியல், உலகியல் அல்லாத இல்லது இனியது நல்லது என்று புலவரால் புனைந்துரைக்கப்பட்ட காதலைக் கூறுகிறதென்பது தெரிகிறது.

சமண சமயமும் பௌத்த சமயமும் தமிழகத்தில் பெருகி வளர்ந்து சைவ, வைணவச் சமயங்கள் தாழ்ந்து குன்றியிருந்த களப்பிரர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 5ஆம் 6ஆம் நூற்றாண்டு களில்) சைவரும் வைணவரும் தங்கள் சமயங்களை வளர்ப்பதற் காகப் புதிய பக்தி இயக்கத்தை உண்டாக்கினார்கள். அதன் காரணமாக அகப்பொருளுக்குப் புதிய கருத்துக்களைக் கற்பித் தார்கள். கடவுளுக்கும் உயிர்களுக்கும் தலைவன் – தலைவி முறையைக் கற்பித்தார்கள். சிவபெருமானை அல்லது திருமாலைத் தலைவனாகவும் பக்தனாகிய உயிரைத் தலைவியாகவும் கற்பித்து நாயகன்–நாயகி பாவத்தை யமைத்தார்கள். இந்த முறையில் செய்யுள் பாடுவதற்கு இலக்கணச் சான்று உண்டா என்ற கேள்வி எழுந்திருக்க வேண்டும். இக்கேள்விக்கு விடையாக இறையனார்

அகப்பொருள் என்னும் நூலைப் புதிதாக உண்டாக்கி அதற்குத் தெய்வத்தன்மை கற்பித்தார்கள் போலும். இந்த நூலில் பேரின்பக் காதலைப் பற்றி வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ சான்றுகள் இல்லையானாலும் உரையாசிரியர்கள் உரையில் சான்று காட்டினார்கள். ஆனால்† அந்த உரை ஏட்டில் எழுதப் படாமல் பத்துத் தலைமுறை வரையில் மந்திரம் போல மறை பொருளாகவே வைக்கப்பட்டு ஆசிரிய–மாணவர் பரம்பரையாகச் செவிவழியாக வந்தது. இதற்குள்ளாகப் புலவர்கள் களவியல் துறையமைத்துப் பாடல்களை இயற்றினார்கள். களவியல் துறையமைந்த பக்தித் தோத்திரப் பாடல்கள் வெளிவந்து வழக்கத்தில் ஒன்றினபிறகு களவியல் நூலையும் அதன் உரையையும் எழுதினார்கள். அதாவது, கி.பி. 8ஆம் நூற்றாண்டில், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோரின் தேவாரப் பாடல்கள் தோன்றிய பிறகுதான் இந்நூலையும் உரையையும் ஏட்டில் எழுதினார்கள்.

பத்தாவது தலைமுறையில் வந்த முசிறியாசிரியர் நீலகண்டனார் இறையனார் களவியலையும் அதன் உரையையும் ஏட்டில் எழுதி வெளியிட்டார். அந்த உரையில் இடையிடையே மாறவர்மன் பராங்குசன் என்னும் பாண்டியன்மேல் பாடப்பட்ட பாண்டிக்கோவை செய்யுட்கள் (ஏறத்தாழ 350 செய்யுட்கள்) மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. மாறவர்மன் பராங்குசன் கி.பி. 770இல் பாண்டி நாட்டை யரசாண்டான். எனவே, கி.பி. 8ஆம் நூற்றாண்டில் இவன் இருந்தான் என்பது தெரிகிறது. இவனுக்கு முன் பத்துத் தலைமுறைக்கு முன்பு இறையனார் களவியல் உண்டாயிற்று என்று கூறப்படுவதால், தலைமுறை யொன்றுக்கு 30 ஆண்டுகள் என்று கணக்கிட்டால் 30 × 10 = 300 ஆண்டுகள் ஆகின்றன. எனவே, கி.பி. 8ஆம் நூற்றாண்டுக்கு 300 ஆண்டுகளுக்கு முன், அதாவது கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இறையனார் அகப் பொருளும் அதன் உரையும் எழுதப்பட்டன என்பது தெரிகிறது. கி.பி. 5ஆம் நூற்றாண்டில் தமிழகத்தைக் களப்பிர ஆரசர்கள் அரசாண்டார்கள். களப்பிரர் ஆட்சிக் காலத்துக்கு முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு கி.பி. 2ஆம் நூற்றாண்டில் கடைச்சங்க காலத்தில் நக்கீரர் வாழ்ந்திருந்தார். அந்த நக்கீரர் இறையனார் களவியலுக்கு உரை கண்டிருக்க முடியாது. கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இருந்தவர் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் எப்படி இருக்கமுடியும்? ஆனால், இறையனார் அகப்பொருள் உரைப் பாயிரம் சங்க காலத்து நக்கீரர் இந்நூலுக்கு உரை கண்டார் என்றும் அவ்வுரையைக் கேட்டவர் காரணிகன் உருத்திரசன்மர் என்றும் கூறுகிறது!

நக்கீரர், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் காலத்தில் இருந்தவர். இந்த நெடுஞ்செழியன்

காலத்துக்குப் பிறகு பாண்டியன் உக்கிரப் பெருவழுதி இருந்தான். இந்தப் பாண்டியன் அகநானூற்றைத் (நெடுந்தொகையை) தொகுப்பித்தான். தொகுத்தவர் உருத்திரசன்மன். இவர்கள் எல்லாரும் கி.பி. 250க்கு முன்பு இருந்தவர்கள். நக்கீரர், உருத்திரசன்மனுக்கு முன்பு இருந்தவர். உருத்திரசன்மன், இறையனார் அகப்பொருளுக்கு உரை கேட்டார் என்றும் நக்கீரர் உரை கூறினார் என்றும் களவியல் உரைப்பாயிரம் கூறுவது வரலாற்றுக்குப் பொருந்தாது. உருத்திரசன்மருக்கு முன்பே நக்கீரர் காலமாய்விட்டார். நக்கீரர், உருத்திரசன்மர், உக்கிரப் பெருவழுதி ஆகியோர் ஒரே காலத்தில் இருந்தவர்கள் என்று கொண்டாலும், கடைச்சங்க காலத்தில் இருந்த இவர்கள், களப்பிரர் காலத்தில், கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வெளிவந்த இறையனார் அகப் பொருளுக்கு எப்படி உரை கண்டிருக்க முடியும்? ஆகவே, உரைப்பாயிரம் கூறுகிற செய்திகள் நம்பத்தக்கனவல்ல. பக்தி இயக்கக் காலத்தில் இருந்த நக்கீரதேவநாயனாரைக் கடைச்சங்க காலத்தில் இருந்த நக்கீரரோடு தவறாக இணைத்துக் கூறுகிறது உரைப்பாயிரம் (இணைப்பு 4 காண்க).

பக்தி இயக்கக் காலத்தில் கீரன் என்றும் நக்கீரதேவ நாயனார் என்றும் பெயர் கூறப்பட்ட ஒரு சிவபக்தர் இருந்தார். அவருடைய பாடல்கள் பதினோராம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த நக்கீரனாரையும் இவருக்கு முன்பு சங்க காலத்தில் இருந்த நக்கீரனாரையும் பொருத்திக் கூறுகிறது இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரம். ஆனால், இது வரலாற்றுக்குப் பொருந்தாத கற்பனையாகும்.

முடிவுரை

இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரம் கூறுகிற முரண் பட்ட செய்திகள், விழிப்புடன் படிக்கிறவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றன என்பதைக் கண்டோம். இதன் காரணத்தை விளக்குவோம்.

களப்பிரர் காலத்துக்கு முன்பு, சங்க காலத்தில் அகப்பொருள், புறப்பொருள் என்று இரண்டு கொள்கைகள் நாட்டிலும் ஏட்டிலும் இருந்தன. இவைபற்றிப் புலவர்கள் பாடிய செய்யுட்கள் நற்காலமாக இப்போதும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இவற்றிற்கு இலக்கணமாக இருந்தது தொல்காப்பியம் (தொல். பொருளதிகாரம் – புறப்பொருளியல், அகப்பொருளியல்).

சங்க காலத்துக்குப் பிறகு களப்பிரர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் முத்தமிழை ஆராய்வதற்காகப் பாண்டியர் அமைத்த தமிழ்ச் சங்கம் கலைந்துவிட்டது. பௌத்த, சைன சமயங்கள் களப்பிரர் காலத்தில், முன்னைவிடச் செல்வாக்கும் சிறப்பும் பெற்று

வளர்ந்தன. அப்போது புறப்பொருளைப் பற்றிய புதிய கருத்துச் செல்வாக்கடைந்தது. அதாவது, போரில் புறப்பகைவரை வென்று வெற்றி பெறுவதைவிட, அகப்பகையான மனமாசுகளையும் ஐம்புலன்களையும் அடக்கிப் பெறுகின்ற வெற்றியே சிறந்த வெற்றியென்னும் சைன-பௌத்த மதக் கொள்கை பரவிற்று. (அகப்பகையை வென்று வீரராக விளங்கிய புத்தர்பெருமானுக்கும் அருகக்கடவுளுக்கும் ஜீனன் – வெற்றி கொண்டவன் என்று பெயர் உண்டு.) புலன்களையும் மனத்தையும் அடக்கி அகப்பகையை வெல்லும் கொள்கை சைனருக்கும் பௌத்தருக்கும் புதியவை யன்று. இக்கொள்கை அவர்களுக்குப் பழமையானது. ஆனால், அந்தக் கொள்கை சங்க காலத்தில் தமிழகத்தில் சிறப்புப் பெறவில்லை. புற வெற்றியே – போர்க்கள வெற்றியே பெரிதும் போற்றப்பட்டது.

களப்பிரர் ஆட்சிக் காலத்தில், சைன, பௌத்த சமயங்கள் சிறப்பும் செல்வாக்கும் பெற்ற காலத்தில், அகப்பகையை வென்று வீரனாகும் சமயக் கொள்கை வலுப்பெற்றுப் பரவிற்று. இது புறப்பொருளுக்குப் புதிதாக ஏற்பட்ட புது மாற்றம் ஆகும். அந்தக் காலத்திலே சைவ, வைணவ சமயங்கள் சமயப் பிரசாரத்துக்காகப் பக்திக் கொள்கையைப் புத்தம்புதிதாக உண்டாக்கின. இக் கொள்கைக்கு ஆதரவாக அகப்பொருளில் புதிய கொள்கையைப் புகுத்தினார்கள். புறப்பகையை வென்று வெற்றி வீரனாகத் திகழ்வதைவிட அகப்பகையை வென்று வீரனாவதே சிறந்தது என்று சைனரும் பௌத்தரும் புறப்பொருளுக்குப் புதிய கருத்துக் கூறியது போல, சைவரும் வைணவரும் உலகியல் அகப்பொருள் பற்றிச் சிற்றின்பக் காதலைப் பாடுவதைவிடக் கடவுளுக்கும் பக்தருக்கும் உள்ள தெய்வீகக் காதலைப் (பேரின்பக் காதலை) பாடுவது சிறந்தது என்று அகப்பொருளுக்குப் புதிய பொருள் கற்பித்தார்கள். அதாவது, கடவுளைக் காதலனாகவும் (தலை மகனாகவும்) பக்தர்களைக் காதலியாகவும் (தலைவிகளாகவும்) கற்பித்துப் பாடுகிற பேரின்பப் பக்திப் பாடல்களைப் புதிதாகத் தோற்றுவித்தார்கள். இந்தப் பக்திக் காதலைச் சைனரும் பௌத்தரும் ஏற்றுக்கொள்ளவில்லை. தெய்வத்துக்கும் மனிதருக்கும் காதல் உறவு கற்பிப்பது சரியன்று என்பது அவர் களது கொள்கை.

ஆனால், சைவ–வைணவர், சமணருக்கும் பௌத்தருக்கும் மாறுபாடான பக்திக் காதலை வற்புறுத்தி அகப்பொருள் துறையமைந்த பக்திப் பாடல்களைப் பரப்பினார்கள். தொடக்கக் காலத்தில் இந்தக் கொள்கை தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. என்று தோன்றுகிறது. பொதுமக்கள், முக்கியமாகப் புலவர்கள், *தொல்காப்பிய* இலக்கணம் கூறுகிற உலகியல் அகப் பொருளையே பின்பற்றினார்கள். ஆகவே, தெய்வீகக் காதலுக்கு

இலக்கணச் சான்று பக்தி இயக்கத்தாருக்குத் தேவைப்பட்டது. ஆகவே, *இறையனார் அகப்பொருள்* அல்லது *களவியல்* என்னும் புதிய நூலை எழுதி அதை இலக்கணச் சான்றாகக் காட்டினார்கள். இதற்குத் தெய்வீகமும் பழமையும் கற்பிப்பதற்காகக் கதைகளைக் கற்பித்துக் கூறினார்கள்.

இது இறைவனால் (சிவபெருமானால்) உண்டாக்கப்பட்ட நூல் என்றும், *தொல்காப்பியத்துக்குப்* பின்னர் இயற்றப்பட்ட நூலானாலும் இது முதல்வனால் செய்யப்பட்டபடியால் 'முதல் நூல்' என்றும் இது பேரின்பக் காதலைக் கூறுகிறபடியால் 'ஞான நூல்' என்றும் கூறினார்கள். இதற்குப் பழமை கற்பிப்பதற்காக இந்த நூலுக்கு உரை கேட்ட காரணிகன், கடைச்சங்க காலத்தில் இருந்தவரும் *அகநானூறு* என்னும் அகப்பொருள் செய்யுட்களைத் தொகுத்தவரும் ஆன உருத்திரசன்மன் என்றும், இதற்கு 'மெய்யுரை' கண்டவர் சங்கப் புலவர் என்றும், ஆனால் சங்கப்புலவரான நக்கீரர் கூறிய உரையே இதற்கு 'மெய்யான உரை' என்றும் கற்பித்தார்கள். ஆனால், இந்த உரை உடனே ஏட்டில் எழுதப்படாமல், மந்திர உபதேசம் செய்வதுபோல, பரம்பரை பரம்பரையாகப் பத்துத் தலைமுறை வரையில் ஆசிரியர்–மாணவர் வழியில் ஓதப்பெற்றது என்றும் பத்தாவது தலைமுறையில் முசிறியாசிரியர் நீலகண்டனாரால் இவ்வுரை ஏட்டில் எழுதப்பட்டது என்றும் கதைகள் கற்பிக்கப்பட்டன. இவ்வாறு, புதிய கருத்துக்குப் பழமையும் சிறப்பும் கற்பிப்பதற்காகவும் புதிய கொள்கைக்கு இலக்கணச் சான்று காட்டுவதற்காகவும் *இறையனார் அகப்பொருளும்* அது பற்றிய கதைகளும் கற்பிக்கப்பட்டன என்று தோன்றுகிறது. இவர்கள் புதிதாக உண்டாக்கிய பேரின்ப அகப்பொருள் கொள்கை நாட்டில் ஊன்றிப் பரவுவதற்கு ஒரு நூற்றாண்டு சென்றிருக்க வேண்டும். ஏனென்றால், கி.பி. 7ஆம் நூற்றாண்டில்தான் அப்பர், சம்பந்தர் ஆகிய சைவ நாயன்மார்களும் ஆழ்வார்களும் அகப்பொருள் துறையமைந்த பக்திப் பாடல்களைப் பாடினார்கள் என்பதை அறிகிறோம். பக்தி இயக்கமும் பேரின்பமான அகப்பொருள் கொள்கையும் தோன்றிய பிறகே இத்தகைய பாடல்களைக் காண்கிறோம். இதற்கு முன்பு, கடவுளுக்கும் பக்தனுக்கும் உண்டான பேரின்பக் காதல் பற்றிய செய்யுள் ஒன்றேனும் கிடையாது. இது தமிழிலக்கிய வரலாற்றில் முக்கியமான செய்தியாகும்.

நக்கீரர் காலம்

சங்க காலத்தில் கி.பி. 200க்கு முன்பு இருந்த நக்கீரர் வேறு, களப்பிரர் காலத்தில் இருந்த நக்கீரதேவநாயனார் வேறு என்பதைத் கண்டோம். ஆனால், சில அறிஞர்கள் இரண்டு நக்கீரரும் ஒருவரே என்று கருதிக்கொண்டு இவர்கள் இருவரும் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் களப்பிரர் காலத்தில் இருந்தவர்கள் என்று எழுதியுள்ளனர். இவர்கள் இவ்வாறு எழுதுவதற்குக் காரணம் என்னவென்றால், *இறையனார் அகப்பொருள்* என்னும் களவியலுக்கு உரை எழுதியவர், அந்நூலின் உரைப்பாயிரத்தில், சங்க காலத்து நக்கீரரும் களவியலுக்கு முதன்முதல் உரை கண்ட நக்கீரரும் ஒருவரே என்று கருதும்படி எழுதியுள்ளதுதான். *களவியல்* உரைப்பாயிரம் கூறுவதை முழு உண்மை என்று இவர்கள் கருதிக்கொண்டு ஆராய்கிறபடியால் இரண்டு வேறு நக்கீரர்களும் ஒருவரே என்று எழுதியுள்ளனர். திரு. எம்.எஸ். இராமசாமி அய்யங்கார் தாம் எழுதிய *தென்னிந்திய சைன ஆய்வுகள்* என்னும் ஆங்கில நூலில் (M.S. Ramaswami Ayyangar, *Studies in South Indian Jainism*, 'Date of Nakkirar', 1922) இவ்வாறு எழுதுகிறார்:

"நக்கீரரும் செங்குட்டுவனும் சாத்தனாரும் ஆகிய இவர்கள் சமகாலத்தில், சங்க காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ளனர். இந்த நக்கீரர் இறையனாரின் களவியலுக்கு உரை எழுதிய நக்கீரர் ஆவார்; இந்த உரையை அவர் எழுதாமல் வாய்மொழியாகவே கூறினார். ஆசிரியர்–மாணவர் என்னும் வழிமுறையில் பத்துத் தலைமுறை வரையில் இந்த உரை வாய்மொழியாகவே கூறப்பட்டு வந்தது. இந்தச் செய்தியை, பின்னர் உரையை ஏட்டில் எழுதிவைத்த ஆசிரியர் கூறுகிறார். உரையை ஏட்டில் எழுதிய உரையாசிரியர் எந்தக் காலத்தில் இருந்தவர் என்பதை, அவர் தம்முடைய உரையில் அடிக்கடி கூறுகிற நெல்வேலியிலும் சங்கமங்கையிலும் போரில் வென்றவனும் அரிகேசரி பராங்குசன் நெடுமாறன் என்னும் பெயர்களைக் கொண்டவனும் ஆகிய பாண்டியன் இருந்த காலத்தைக் கொண்டு தீர்மானிக்கலாம். வேள்விக்குடிச் செப்பேட்டிலிருந்து இந்தப் பாண்டியன் கி.பி. 770இல் வாழ்ந்திருந்த ஜடிலவர்மன் பராந்தகனுடைய தந்தை என்பதை அறிகிறோம். ஆகையினாலே களவியல் உரையை ஏட்டில் எழுதிய

ஆசிரியர் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராதல் வேண்டும். இவர் காலத்திலிருந்து பத்துத் தலைமுறைகளைக் கணக்கிட்டால், தலைமுறை ஒன்றுக்குச் சராசரி 30 ஆண்டு என்று கணக்கிடு வோமானால், முதல்முதல் உரை கூறிய நக்கீரர் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு என்றாகிறது. கி.பி. 770இல் இருந்து 10 × 30ஐக் கழிக்க வேண்டும். ஆகவே, இந்த நூற்றாண்டே சங்கம் (கடைச்சங்கம்) இருந்த காலமாகும்."

இவர் ஆராய்ந்து கண்ட முடிவு சரியே. *இறையனார் அகப் பொருள்* உரைப்பாயிரத்தின்படி ஆராய்ந்து, *களவியலுக்கு* உரை கண்ட நக்கீரர் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்று கூறியது முற்றிலும் சரியே. இதையே நாமும் கூறியுள்ளோம். *நக்கீரர் அடிநூல், நக்கீரர் நாலடி நானூறு, கயிலைபாதி காளத்தி பாதித் திருவந்தாதி, திரு ஈங்கோய்மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக் கோவை, திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றிக்கலிவெண்பா, கண்ணப்ப தேவர் திருமறம்* ஆகிய நூல்களைப் பாடிய (இந்நூல்கள் சைவ சமயத் திருமுறைகளில் ஒன்றான *பதினோராம் திருமுறையில்* தொகுக்கப்பட்டுள்ளன) நக்கீரதேவநாயனார் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இருந்தவர் என்று கூறினோம். ஆனால், இந்த நக்கீரர், கடைச்சங்க காலத்தில் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனையும் *நெடுநல்வாடை* முதலான சங்கச் செய்யுட்களையும் பாடிய சங்க காலத்து நக்கீரர் அல்லர் என்றும் கூறினோம். *களவியல்* உரைப்பாயிரக் கருத்துப்படி இரண்டு வேறு நக்கீரர்களும் ஒருவரே என்று தெரிகின்றனர். இது வரலாற்றுக்குப் பெரிதும் மாறுபாடாக இருக்கிறது. ஆகவே, *இறையனார் அகப்பொருள்* உரை இரண்டு வேறு நக்கீரர்களை ஒருவரே என்று இணைத்துக் கூறுவது தவறு என்பது நன்றாகத் தெரிகிறது. சங்க காலத்தில் இருந்த *திருமுருகாற்றுப்படை* பாடிய நக்கீரரை நக்கீரதேவ நாயனாருடன் பிணைத்துக் கூறினால் *இறையனார் அகப்பொருள்* உரைக்குப் பெருமதிப்பு ஏற்படும் என்னும் காரணம்பற்றி இரு நக்கீரர்களையும் ஒருவராகப் பிணைத்துக் கூறினார்கள் போலும். ஆனால், இரண்டு நக்கீரர்களும் வெவ்வேறு காலத்தில் இருந்தவர்கள் என்பதும் இருவரும் சில நூற்றாண்டுகளுக்கு முன்பும் பின்பும் இருந்த வெவ்வேறு நக்கீரர்கள் என்பதும் தெரிகின்றன.

திரு. பி.தி. சீனிவாச அய்யங்கார், தாம் எழுதிய *தமிழர் வரலாறு* என்ற ஆங்கில நூலில் நான்கு நக்கீரர்கள் இருந்தனர் என்று கூறுகிறார். அவர்களில் முதல் நக்கீரர் *திருமுருகாற்றுப் படை*யையும் *பத்துப்பாட்டில்* நெடுநல்வாடையையும் சங்கத் தொகைகளில் பல செய்யுட்களையும் பாடியவர். இரண்டாம் நக்கீரர், *நாலடி நாற்பது* என்னும் செய்யுள் இலக்கணம் எழுதியவர். மூன்றாம் நக்கீரனார், *அகப்பொருளுக்கு* (இறை

யனார் அகப்பொருளுக்கு) முதன்முதல் உரை கண்டவர். நான்காம் நக்கீரர், பிற்காலத்தில் (*பதினோராந் திருமுறையில்*) சைவப் பாடல்களைப் பாடியவர். இந்த நால்வரையும் தமிழ்ப் புலவர்கள் ஒருவர் என்று இணைத்துக் கூறுகிறார்கள் என்று எழுதுகிறார் (P. T. Srinivasa Aiyangar, *History of the Tamils*, 1929, p. 409).

இவர் கூறுகின்ற நான்கு நக்கீரர்களை இரண்டு நக்கீரர்களாக அடக்கலாம். ஒருவர் சங்கச் செய்யுட்களையும் *நெடுநல்வாடை* யையும் *திருமுருகாற்றுப்படை*யையும் பாடிய கடைச்சங்க காலத்து நக்கீரர். இவர் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இருந்தவர். இரண்டாம் நக்கீரர் *நாலடிநாற்பது* என்னும் யாப்பிலக்கண நூலை எழுதியவர் என்று *யாப்பருங்கல* உரைகாரர் கூறுகிறவரும் *இறையனார் அகப்பொருள்* உரைக்கு முதன்முதல் உரை கண்டவரும் *பதினோராம் திருமுறை*யில் தொகுக்கப்பட்டுள்ள தோத்திரப் பாடல்களைப் பாடியவரும் ஆவர்.

திரு. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, *இறையனார் அகப்பொருள்* உரை கூறுகிற நக்கீரர் காலத்தையறிய முடியாமலிருப்பது பற்றித் தம்முடைய *பாண்டிய இராச்சியம்* என்னும் நூலில் இவ்வாறு எழுதுகிறார்: "இறையனார் அகப்பொருளுக்குத் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வந்த நக்கீரனாருடைய உரை, இப்போதுள்ளபடி சங்கச் செய்யுள்களிலிருந்து மேற்கோள் காட்டுவதோடு, கி.பி. 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கு முன்பு நடக்காத நிகழ்ச்சிகளையும் மேற்கோள் காட்டுகிறது. இந்த மேற்கோள்களிலிருந்து (இவர் காலத்தைப்பற்றி) ஒன்றும் அறிய முடியவில்லை" என்று எழுதுகிறார். மேலும் அவர் எழுதுவது வருமாறு: "தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் சமகாலத்தில் இருந்தவரும் அவனுக்கு வயதில் இளையவருமான நக்கீரரின் காலத்தையறிய *இறையனார் அகப்பொருள்* உரையில் கூறப்படுகிற பாண்டிய அரசர் காலத்திலிருந்து பத்துத் தலைமுறையைப் பின்னால் கொண்டு கணிக்கும் முயற்சியும் அவர் காலத்தைத் திருப்திகரமாகக் கூறமுடியவில்லை" (K.A. Nilakanta Sastri, *The Pandian Kingdom*).

இவர், நக்கீரனாரின் காலத்தை அறியமுடியாத காரணம் என்ன? *இறையனார் அகப்பொருளின்* உரைப்பாயிரம் பழைய காலத்து நக்கீரரையும் பிற்காலத்து நக்கீரரையும் ஒருவராக இணைத்துப் பொருத்திக் கூறுகிற தவறு காரணமாகக் காலத்தை அறிய முடியவில்லை. இரண்டு நக்கீரர்களையும் தனித்தனிப் பிரித்துவிட்டுக் கவனித்துப்பார்த்தால் காலம் தெளிவாகத் தெரிகிறது. *இறையனார் அகப்பொருளுக்கு* உரை கண்ட நக்கீரர் கி.பி. 5ஆம் நூற்றாண்டிலிருந்தவர் என்பதும் சங்க காலத்து நக்கீரர் அவருக்கு முன்பு பல நூற்றாண்டுக்கு முன்னர் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இருந்தவர் என்பதும் தெளிவாகத் தெரிகின்றன.

நூலடைவு

இலக்கியம்

1. அகநானூறு
2. குறுந்தொகை
3. சிலப்பதிகாரம்
4. சீவகசிந்தாமணி
5. நற்றிணை
6. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்
7. பதிற்றுப்பத்து
8. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
9. பட்டினப்பாலை
10. பரிபாடல்
11. பன்னிரு திருமுறைகள்
12. பாண்டிக்கோவை
13. புறநானூறு
14. பெரியபுராணம்
15. பெருங்கதை
16. மணிமேகலை

இலக்கணம்

17. இறையனார் களவியல் உரை
18. கல்லாடம்
19. தொல்காப்பியம்
20. யாப்பருங்கலம் - பழைய விருத்தி உரை

கல்வெட்டுகள்

21. பல்லவர் செப்பேடுகள் முப்பது
22. பாண்டியர் செப்பேடுகள் பத்து
23. Annual Reports on South Indian Epigraphy (from 1887)
24. Epigraphia Carnatica
25. Epigraphia Indica
26. Epigraphia Zeylonica
27. Inscriptions of Pudukkottai State
28. Mysore Archaeological Report

29. Rangacharya, V., *A Topographical List of the Inscriptions of the Madras Presidency* (Three Volumes)
30. *South Indian Inscriptions*

தமிழ் நூல்கள்

31. சதாசிவ பண்டாரத்தார், டி.வி., *தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி. 250-600)*, 1965.
32. *பாண்டியர் வரலாறு*, 1969
33. பன்னீர் செல்வம், இரா., *தமிழ்நாடும் களப்பிரரும்*, 1973
34. மயிலை சீனி. வேங்கடசாமி, *சமணமும் தமிழும்*
35. *பௌத்தமும் தமிழும்*
36. *மறைந்துபோன தமிழ் நூல்கள்*
37. *19ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்*
38. வேங்கடராஜுலு ரெட்டியார், வே., *கபிலர்*, 1936

ஆங்கில நூல்கள்

39. Arokiaswamy, M., *The Early History of the Vellar Basin*, 1954
40. Codrington, H.W., *A Short History of Ceylon*
41. Jyoti Prasad Jain, 'The Jaina Sources of History of Ancient India,' *Ancient India (100 BC - 900 AD)*, 1964
42. Krishna Rao, N., *A History of the Early Dynasties of Andhra Desa*
43. Krishnaswamy Ayyangar, *The Age of Imperial Unity*, Vol II
44. Law, B.C., *Geography of Early Buddhism*
45. Nilakanta Sastri, K.A., *The Colas*
46. *A Comprehensive History of India*, Vol II
47. *Foreign Notices of South India*
48. *Pandyan Kingdom*
49. Rama Rao, M., *Studies in the Early History of Andradesa*
50. Ramaswamy Ayengar, M.S., *Studies in South Indian Jainism*
51. Sivaraja Pillai, K.N., *The Chronology of the Early Tamils*
52. Srinivasa Iyanger, P.T., *History of the Tamils*, 1929
53. Subramaniam, N., *History of Tamilnadu (to AD 1336)*
54. Vaiyapuri Pillai, S., *History of Tamil Language and Literature*, 1956
55. Wilhelm Geiger (Translation), *Sulavamsa*, 1929

மலர்கள்

56. *அண்ணாமலைப் பல்கலைக்கழக இதழ்*, தொகுதி 6
57. *சிவகசிந்தாமணி சொற்பொழிவு மலர்*, 1952

58. *செந்தமிழ்*, தொகுதி 12, 20
59. *Journal of Indian History*, VIII, XXXIV
60. *Journal of Oriental Research*, Madras, 1993
61. *Journal of Royal Asiatic Society*, 1934
62. *Journal of Royal Asiatic Society*, Ceylon Branch, XXIV
63. *Journal of Tamil Studies*, III
64. *Madras Christian College Magazine*, January 1929
65. *University of Ceylon Review*, Vol. III, Pt. I

கன்னட நூல்கள்

66. கிருஷ்ண ராவ், டாக்டர் எம்.வி., கேசவபட்ட, எம்., *கர்நாடக இதிஹாஸ தர்ஸன* (கன்னட தேசத்தின் வரலாறு), 1970
67. சிதானந்த மூர்த்தி, டாக்டர் எம்., *கன்னட ஸாஸனகள ஸாம்ஸ்கிருதிக அத்யயன (கி.பி. 450-1150)*, 1966

பாலி மொழி நூல்கள்

68. ஆசாரிய புத்ததத்ததேரர், *வினய வினிச்சயம்*
69. வட்டாரதனெ; *பத்ரபாஹு பட்டாரா கதெ*

மயிலையாரின் பிற ஆய்வுகளையும் முடிவுகளையும்
போன்றே இந்த நூல்களில் உள்ள பல கருத்துரைகள்
தமிழ் இலக்கியத்தைப் புரிந்துகொள்வதற்கும்
தமிழக வரலாற்றினைக் கட்டமைப்பதற்கும்
ஆழமான, அடிப்படையான சான்றுகளைத் தருகின்றன.



மக்கள் வெளியீடு